தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஏழு

ஆங்கில மூலம்

எட்கர் தர்ஸ்டன்

தமிழாக்கம்

முனைவர் க. ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஏழு

(தாபேலு முதல் சொன்னல வரை)

Castes and Tribes of South India

Vol.VII

(Tabelue to Zonnaia)

ஆங்கில மூலம்

அறிஞர் எட்கர் தர்ஸ்டன்

தமிழாக்கம்

முனைவர் க.ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-344-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 283

திருவள்ளுவராண்டு 2036 - புரட்டாசி - செப்டம்பர் 2005

நூல்	:	தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி ஏழு
ஆசிரியர்	:	ஆங்கில மூலம்: எட்கர் தர்ஸ்டன் தமிழாக்கம்: முனைவர் க.ரத்னம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மானிடவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	460
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ.150/-
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்

துணைவேந்தர்

அணிந்துரை

சென்னை அருங்காட்சியகத்தின் பொறுப்பாளராக நூறாண்டுகளுக்கு முன் பணியேற்றிருந்தவர் எட்கர் தர்ஸ்டன் என்ற அறிஞராவர். தென்னிந்திய மக்கள் வாழ்க்கையின் பலகூறுகளையும் அன்றைய சென்னை மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்ததோடு அரிய பல நூல்கள், அரசு ஆணைகள், வழக்கு மன்றத் தீர்ப்புகள், மக்கள் கணக்கெடுப்பு விவரங்கள் ஆகியவற்றின் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு 1909இல் ஆங்கிலத்தில் ஏழு தொகுதிகளாக அவர் வெளியிட்டுள்ளார். தோடர்களுடைய வாழ்வியலில் மிகுந்த ஆர்வங்காட்டியுள்ளார் என்பது உதகமண்டலத்துக்கு நேரில் சென்று ஒரு சாவுச் சடங்குகளைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் விரிவாகத் திரட்டி, இப்பொழுது இறுதியாக வெளிவரும் இந்த ஏழாவது தொகுதியில் தோடக் என்ற கட்டுரை வழி தந்திருப்பதன்மூலம் தெரியவருகிறது.

தமிழ் நாட்டு மாணவர்களும் மக்களும் எளிதில் பெற்றுப் பயன்படுத்திக்கொள்ள உதவும் வகையில் தர்ஸ்டனின் இந்த ஏழு தொகுதிகளையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட முடிவு செய்து பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் அவர்களால் இப்பணி முனைவர் க. ரத்னம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மொழி பெயர்ப்புப் பணியை அவர் 1989இல் முடித்துப் பதிப்புத்துறையில் ஒப்படைத்தார். 1986, 1987 ஆகிய இரண்டாண்டுகளில் முதல் மூன்று

தொகுதிகள் அடுத்தடுத்து வெளியாயின. பின்னர் சில காரணங்களால் ஒருசில ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் 1991 இல் நான்காம் தொகுதி வெளியாயிற்று. அதன் பின் பன்னிரண்டு ஆண்டுகள் சென்றே 5, 6 தொகுதிகள் வெளியாயின. இறுதித் தொகுதியான ஏழாம் தொகுதி இப்போது நூல் வடிவம் பெற்றுள்ளது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முந்தைய தென்னிந்திய மக்களின் வாழ்வியல் கூறுகளை அறிந்துகொள்ள இத்தொகுதிகள் பெரிதும் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் அனைத்துத் தரப்பினரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன. தர்ஸ்டனின் ஏழு தொகுதிகள் அதற்கு அணிசேர்ப்பது போல் அமைந்துள்ளன.

முந்தைய ஆறு தொகுதிகளும் தமிழ் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இத்தொகுதியும் மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று நம்புகிறேன்.

இத்தொகுதிகளைத் தமிழில் அளிக்க இடையறாமல் உழைத்த பேராசிரியர் முனைவர் க.ரத்னம் அவர்கள் மிகுந்த பாராட்டுதலுக்குரியவர்.

இந்த நூலினைச் சிறப்புற அச்சிட்டு வெளியிட்ட பதிப்புத்துறையினருக்கு நெஞ்சார்ந்த பாராட்டுதல்கள்.

(சி. சுப்பிரமணியம்)

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி - ஏழு

தாபேலு - Tabelu (tortoise)

அய்யரகுலர் சாதியின் ஒரு குலப் பிரிவு. காசுல காபுகள், கொப்பல வெலமர் சாதிகளின் உட்பிரிவுக்குரிய பெயராகவும் உள்ளது.

தச்ச குருப்பு - Tacchá Kurup

மலபார் கம்மாளருக்கு மழித்தலைச் செய்யும் அம்பட்டர்.

தச்சன் - Tacchan

கம்மாளருள் தச்சுத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உட்பிரிவினருக்கான பெயர். *1891* கணக்கெடுப்பில் பறையர் சிலருக்கான தொழில் தொடர்பான பெயராகவும் பதியப்பட்டுள்ளது. தச்ச கரையான் என்பது மீனவர்களான கரையான்களுள் ஒரு சிலருக்கான பேராகப் பதியப்பட்டுள்ளது. தச்ச சாஸ்திரம் கட்டிடக்கலை பற்றிய நுட்பமான விதிகளைக் கூறும் நூல்.

தச்ச நாடன் மூப்பன் - Tacchanadan Muppan

1891 மற்றும் *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் குரிச்சான்கள் மற்றும் நீலகிரியினைச் சேர்ந்த குறும்பன்கள் சாதிகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

தாதன் - Tadan

பார்க்க: தாசரி. (See: Dasari)

தகரர் - Tagara

பொரசர்களின் ஒரு பிரிவினர்.

தக்ரு - Takru

இலக்கத் தீவுகளைச் சேர்ந்த முகமதியர்களான மாலுமிகளும் படகு வலிப்போருமான வகுப்பார். *(பார்க்க: மாப்பிள்ளா.)*

தலைவன் - Talaivan (chief)

மறவருக்கான பட்டப்பெயர். சாதி அல்லது சாதித் தலைவன் என்பது திருநெல்வேலியினைச் சேர்ந்த பரவரின் பரம்பரைச் சாதித் தலைவனுக்கான பெயர். முத்துக் குளித்தலின்போது இவன் தனக்குரிய பங்காக ஒரு குறிப்பிட்ட அளவு சிப்பிக்களைப் பெறும் உரிமை உடையவன்.

தலமலை - Talamala

காணிக்காரரின் ஓர் உட்பிரிவு.

தலையாரி - Talayari

தலைமைக் காவலன் எனப்படும் உத்தாரி *(ஊர்க் காவலன்)* அரசுப் பணி சாராத ஊர்க் காவலனாவான். இவனைப் பொதுவாகத் தலையாரி என அழைப்பர். பிற பணிகளோடு திருடிச் செல்லப்பட்ட கால்நடைகளைத் தேடிச் செல்வதும் ஊர்ச் சாவடியில் அடைக்கப்பட்டவர்களைக் காவல் காப்பதும் ஊர்த் தலைவன் சிறு குற்றச்செயல்களைப் பற்றி விசாரணை செய்யும்போது அவனுக்கு உதவுவதும் வழக்கு மன்ற அழைப்புகளை உரியவரிடம் சேர்ப்பதும், கடன்பாக்கிக்காக உடைமைகளை அகப்படுத்துவதும் தலையாரிக்குரிய பிற பணிகளாம். பெரிய ஊர்களில் இரண்டு மூன்று தலையாரிகள் இருப்பர். அவ்வாறான இடங்களில் அவர்களுள் ஒருவன் பறையனாக இருப்பான். இவன் பறைச்சேரிக்கான பணிகளை மேற்கொள்வான். தெலுங்கு நாட்டில் ஊர்க்காவலர்களான முத்ராசர்கள் தலாரிவாலு எனப்படுகின்றனர். இது போலவே கர்நூல், பெல்லாரி மாவட்டங்களில் பேடர்கள் தலாரிவாண்டுலு எனப் படுகின்றனர்.

தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் *(1906)* குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- பிரிட்டிசாரின் ஆட்சியின் தொடக்கம் முதலே தலையாரிகளுக்குச் சம்பளம் தரப்பட்டு வருகின்றது. இவன் காவல்காரர்கள் இல்லாத ஒரு சமூகத்தின் எஞ்சியுள்ள ஓர் ஊழியனாதல் கூடும். தன் ஊரைச் சேர்ந்த வயல்களையும் களத்துமேடுகளையும் காவல் காப்பதே இவன் கடமையெனத் தெரிகின்றது. எது எப்படியாயினும் காவல் முறை *(பார்க்க:*

மறவர்.) ஒழிக்கப்பட்ட பின், *1816*-ஆம் ஆண்டின் முறைபடுத்தப்பட்ட அரசின் விதிகளின்படி தலையாரி காவல்துறையினைச் சேர்ந்தவனாவான் என அறிவிக்கப்பட்டுள்ளது. காவல்துறை தொடர்பான எந்தப் பணியினையும் நடைமுறையில் இவன் மேற்கொள்வதில்லை. *1860*-இல் காவல்துறை திருத்தியமைக்கப்பட்டபின் தலையாரி அரசுப் பணியாளன் என்ற உரிமையை இழந்தான். காவல்துறை மேலாளர் தலைவர் தலையாரிகளைப் பணியில் பயன்படுத்திக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சி பயன்விளைவிக்காததோடு கூடத் துறைக்குக் கெட்ட பெயரையும் வாங்கித் தரும் என அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார். அண்மையில் மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ளதைப்போல இம் மாவட்டத்திலும் தலையாரிகள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு எனத் தனியே உரிய காவல் பொறுப்பும் தரப்பட்டுள்ளது. இவர்களுக்கு உரியதாகத் தடியும் சின்னமும் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் காவலர்களுக்கு உதவும் துணைப் பிரிவாக இருந்து வருகின்றனர்.

தாலி - Tali

ஐரோப்பாவில் கிறித்தவர்களிடையே மோதிரம் மணமானதற்கான அடையாளமாகக் கொள்வதனை ஒப்ப இந்துக்களிடையே தாலி ஒருத்தி மணம்மானவள் என்பதற்கு அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. தாலி அணிவிப்பதாக இருந்தால் அத்திருமணச் சடங்கைத் தான் நடத்தி வைக்க முடியாதென்றும், மோதிரத்தைத் தான் பயன்படுத்த வேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்த திருச்சபைக் குழுவினைப் பற்றி எனக்கு தெரியும். கண்டிப்புடன் மனச்சான்றின் கட்டளைப்படி நடந்துகொண்ட அவர் மேலும் கொஞ்சம் சிந்தனையோடு எண்ணிப் பார்ப்பாரானால் மோதிரம் அணிவிப்பது கூட அவருக்கு உடன்பாடில்லாததாக ஆகிவிடக் கூடும். மோதிரம் தாலியைவிடக் கிறித்தவ நெறிப்பட்டது என அவர் எண்ணக் காரணம் அது நெடுங்காலமாகக் கிறித்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுதான். மோதிரமும் புறச்சமயச் சாதிகளின் வழக்கின்பால் பட்டது என்பதனை அனைவரும் அறிவர். இதனாலேயே அரைகுறையாகச் சமயம் பற்றிக் கற்றவர்கள் மோதிரம் அணிவதைக் கூட உடன்படுவதில்லை என மேற்றிராணியால் கால்டுவெல்* கூறியுள்ளார். வாங்கெர், தாலி பற்றித் தெரிவிப்பதாவது:** - "இடக்கையில்

* இந்தியத் தொல்லியல், IV, 1817. (Ind.Ant.IV,1875).

** பழக்க வழக்கங்களும் கடைப் பிடிகளும். (Manners,Customs and Observances.)

நான்காவது விரலில் திருமண உறவு தொடர்பான மோதிரம் அணியும் வழக்கம் புறச்சமயத்தாரிடமிருந்து மேற்கொள்ளப்பட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை. கிரேக்கரும் ரோமானியரும் இடக்கையில் நான்காம் விரலை மருத்துவ இயல்பு வாய்ந்தது எனக் கருதியதோடு இருதயத்தோடு நேரடித் தொடர்பு கொண்டது எனவும் நம்பியவர்களாக அந்த விரலைக் கஷாயம், மருந்து ஆகியனவற்றைக் கலக்கப் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறு அதனைப் பயன்படுத்தும்போது உட்கொள்ள உள்ள கலவை நீரில் ஏதேனும் நஞ்சுப் பொருள் இருக்க நேர்ந்தால் அதனை இருதயம் உய்த்துணர வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையே இதன் அடிப்படையாகும்.

தென்னிந்தியாவில் இரண்டு வகைத் தாலிகள் பயன்பாட்டில் உள்ளன எனப் பொதுவாகப் பிரித்துணரலாம். அவற்றுள் ஒரு வகை தமிழ்ச் சாதியார் பயன்படுத்துகின்ற நீள்வட்ட வடிவமாகக் கீழ்ப்பக்கம் ஒன்று அல்லது இரண்டு வெட்டுவாய் முனைகளைக் கொண்டு வளைவோடு கூடிய மேற்பாகத்தைக் கொண்டது. தெலுங்கர், கன்னடியார் ஆகியோருக்குரிய சத்தமானம் எனப்படும் பொட்டு, தடையாக்க் கோப்பை உருவிலான வட்டாகும் தாலிகட்டுச் சடங்கில் மலையாளத்தைச் சேர்ந்த பல்வேறு சாதியினரும் பயன்படுத்தும் தாலி நீண்ட குழல் வடிவினதாக இருக்கும்.

தாலிகட்டுக் கலியாணம் - Tali kettu Kalyanam

இது நாயர் சிறுமிகளுக்கும் வேறு சில மலையாளம் சாதிச் சிறுமியருக்கும் குழந்தைப் பருவத்தில் நடத்தி வைக்கப்படும் சடங்காகும். மலபாரில் திருமண முறைப்பற்றிய ஆய்வுக் குழுவின் முன் சாட்சியம் அளித்தவர்களுள் சிலர் இதனைத் திருமணம் என்றனர்; சிலர் இது திருமணம் அன்று என்றனர். இதனைப் போலிக் கல்யாணம், பேருக்குக் கலியாணம், கற்பனைக் கலியாணம், புனிதக் கலியாணம், கலியாணத்திற்கான அடிப்படைச் சடங்கு, அர்த்தமற்ற சடங்கு, வெற்றுச் சடங்கு, வீண்செலவைத் தருவது, ஒருவனைக் கட்னாளி ஆக்குவது என்பது போலவும் சிலர் சாட்சியம் அளித்துள்ளனர். மிகச் சிறுபான்மையோரான பழைய மரபினைப் பேணுபவர்கள் இதனை உண்மையான கலியாணம் எனவும், மணமகன் மணமகளோடு உடலுறவு கொள்ள இது உரிமை வழங்குகின்றது எனவும் கூறினார்கள். எனினும் "மிகப் பெரும்பான்மையோர் இது ஒரு கற்பனைக் கலியாணம் எனக் கூறியதோடு இந்த வழக்கம் எப்பொழுது எப்படி ஏற்பட்டது எனத் தங்களுக்குத் தெரியாது எனவும் கூறிவிட்டனர். மற்றும் பலர் இக்குழுவின் தலைவரின்

(சர்டி. முத்துசாமி ஐயர்) விளக்கத்தை ஏற்றுக் கொண்டு இது ஆண், பெண் ஆகியோரிடையேயான உடலுறவுக்கு முன் நிகழ்த்தப்பட வேண்டிய இன்றியமையாததான சாதிக்குரிய நடைமுறை இது என்றனர்" என ஆய்வுக்குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது. தான் கேட்டறிந்த சாட்சியங்களைத் தொகுத்துக் கூறும்* திரு லீவிஸ் மூர், "பதினாறாம் நூற்றாண்டு தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையான காலக்கட்டத்தில் மருமக்கள் தாய உரிமை முறையினை மேற்கொண்டிருந்த குடும்பங்களில் ஆண், பெண்களிடையேயான உறவுகள் கற்பனை செய்துபார்க்க இயலாத அளவுக்கு எத்தகைய நெறிமுறைகளுக்கும் உட்படாதனவாக இருந்தன. பிராமணர்கள் புகுத்திய தாலிகட்டுக் கலியாணம் இதில் எத்தகைய முன்னேற்றத்திற்கும் உதவாததோடு போலியான இந்தச் சடங்கிற்கு ஒரு சமயச் சார்பான உடன்பாட்டினையும் பெற்றுத் தந்தது. வேறு சில சாதியார் பரத்தையர் தொழிலை மேற்கொள்ள இதுபோன்ற சமயச் சடங்குகளை ஒரு போர்வையாகப் பயன்படுத்துவதைப்போல இது விரும்பத்தகாத அத்தகையதொரு போலிக் கலி யாணம் போலவும் அமைந்துவிடுகின்றது. *(பார்க்க: தேவதாசி.)* ஆண்டுகள் செல்லச் செல்லப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரள மகாத்மியம், கேரளோற்பத்தி என்ற இரு நூல்கள் இட்டுக்கட்டப்பட்டன. நம்பூத்ரிகளால் இவை எழுதி வைக்கப்பட்டவையாதல் வேண்டும். இவற்றுள் நம்பூத்ரிகளின் காம இச்சைகளைத் தனித்துக் கொள்ள உதவும்படியாகவும் நாயர் சமூகத்திற்கு பெருங்கேட்டினை உண்டுபண்ணுகின்ற விதத்திலும் பொய்யான தெய்வீகக் கட்டளைகளை நம்பூத்ரிகள் புகுத்தியுள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வாறு நாயர்களுக்கு இழிவினை உண்டாக்கும் இந்த விதிகளுக்கு எதிராக வடக்கு மலபாரைச் சேர்ந்த தகுதிவாய்ந்த நாயர் குடும்பங்கள் கிளிர்ந்தெழுந்ததன் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்டதே சம்பந்தம் என்ற ஆண், பெண் இடையேயான முறைப்படுத்தப்பட்ட உறவாகும். ஒருத்தியின் தர்வாடைச்** சேர்ந்த காரனவனின் ஒப்புதலையும் உடன்பாட்டையும் பெற்றுப் புடமுறிச் சடங்கினை நடத்திக் கொள்வதே சம்பந்தம் சடங்காகும். கி.பி. *1500* முதல் *1800* வரையான காலக்கட்டத்தில் புடமுறி மணச் சடங்கினை ஒத்ததான வழக்கு ஏதும் இல்லை என்பதனைப் பல்வேறு ஐரோப்பிய எழுத்தாளர்களின் குறிப்புகளில் அதனை ஒத்ததான எத்தகைய சடங்கும் கூறப்படவில்லை என்பது உறுதி செய்கின்றது"

* மலபார் சட்டமும் வழக்கும், *1905.* (Malabar Law and Custom, 1905)

** மருமக்கள் தாயமுறை பேணும் குடும்பங்களில் ஒரு பெண் மூதாதையின் வழித் தோன்றலாக வந்துள்ள எல்லோரையும் உட்கொண்டதான குடும்ப அமைப்பு.

என ஐயத்திற்கு இடமில்லாதவாறு துணியலாம் எனக் கூறியுள்ளார். *1896*-ஆம் ஆண்டு சென்னை மாநிலத்து நான்காவது சட்டம், சம்பந்தம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் தங்களுள் ஒருவர் சாதி வழக்கப்படி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு கணவன் மனைவியரைப் போல உடலுறவு கொண்டவர்களாக இருப்பது எனக் கூறுகின்றது.

தம்பலர் - Tambala

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தம்பலர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது: "தெலுங்கு பேசும் கோயில் பூசாரிகளான இவர்களின் சமூகத் தகுதி இடத்திற்கு இடம் வேறுபட்டதாக உள்ளது. கோதாவரி, கிருட்டிணா, நெல்லூர் மாவட்டங்களில் பிராமணர்களாகக் கருதப்படும் இவர்கள் பிற தெலுங்கு மாவட்டங்களில் சூத்திரர்களாக கருதப்படுகின்றனர். கணக்கெடுப்பு அறிக்கையில் திரு சி.பி. பிரௌன் தம்பலர் சிவனை உடுக்கை அடித்துப் போற்றி வணங்கியவர்களாக இரந்து வாழும் பிரிவினர் எனவும் சூத்திரர்களான இவர்கள் பூணூல் அணிகின்றனர் எனவும் கூறியுள்ளார். "சங்கராச்சாரியார் வடநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது சிவன் கோயில்களில் பூசை செய்யத் தமிழ்ப் பிராமணர்களை அமர்த்தினார். இவ்வாறு அமர்த்தப்பட்டவர்கள் இவர்கள் பொறுப்பு ஏற்றுள்ள பகுதிகளில் வாழ்ந்த தெலுங்கர்களால் தம்பலன்கள் என அழைக்கப்பட்டனர். இன்று இவர்கள் தகுதி எத்தகையதாயினும் இவர்கள் பிராமணர்களாக மதிக்கப்படுவதில்லை. இவர்கள் பிராமணர்கள் இல்லங்களில் மட்டும் உணவு கொள்வர். சைவர்களான இவர்களுள் ஒரு சிலர் லிங்காயத நெறி சார்ந்தவர்கள். இவர்களுடைய பிறப்பு, திருமணம், இறப்பு முதலியன தொடர்பான சடங்குகளை ஸ்மார்த்தர் பிரிவுப் பிராமணர்கள் நடத்தி வைக்கின்றனர். இறைச்சியினை உண்ணாத இவர்களுடைய சமயச் சடங்குகள் பிராமணர்கள் சடங்குகளை ஒத்தன. அய்யா, அப்பா என்பன இவர்களுக்குரிய வழக்கமான பட்டப்பெயர்கள்."

தம்பான் - Tamban

திருவாங்கூரைச் சேர்ந்த சத்திரியர்களுள் ஒரு பிரிவினர் *(பார்க்க: திருமல்பாடு.)*

தம்பி - Thambi

தன்னைக் காட்டிலும் வயதில் இளையவர்களை அன்புகாட்டி அழைப்பதற்கான தமிழ்நாட்டில் வழக்கில் உள்ள சொல். திருவாங்கூரைச்

சேர்ந்த நாயர்களின் சிறப்புப் பட்டப்பெயராகவும் திருவாங்கூர் அரசர்களின் நாயர் சாதிப் பிள்ளைகளுக்கான பெயரின் பின்னிணைப்பாகவும் வழங்கும் சொல்.

தம்பிரான் - Thambiran

கோயிலதிகாரிகளான பண்டாரங்களுக்கான பெயர். தஞ்சாவூரில் உள்ள திருவாவடுதுறை, தென் ஆர்க்காட்டில் உள்ள மைலம் ஆகியவற்றின் கோயிலதிகாரிகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.

தம்புரான் - Tamburan

தம்புரான்கள் எனப்படும் ராஜாக்கள் பற்றிய பின்வரும் குறிப்புக்களுக்கு நான் *1901* திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கைக்குக் கடப்பாடுடையேன். "திருவாங்கூரைச் சேர்ந்த அகமணக்கட்டுப்பாடுடைய ஏழு குடும்பத்தினராகச் சத்திரியரான தம்புரான்கள் உள்ளனர். மாவேலிக்கரை, எண்ணெய்க்காடு, கார்த்திகப்பள்ளி, மரியப்பள்ளி, திருவல்ல, பிராக்கரை, அரண்முலா என இவர்கள் வாழும் இடத்தின் அடிப்படையில் இவர்கள் குலப்பிரிவுகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் தங்களுக்குள் குருதி உறவு உடையவர்கள். சில குடும்பங்களிடையேயான உறவு மிக நெருக்கமானது. கோயில் தம்புரான்களிடையே உள்ளதைப் போலவே இக் குடும்பங்களுள் யாருக்குத் தீட்டு நேர்ந்தாலும் அதனை எல்லாக் குடும்பத்தினரும் தங்களுக்குரியதாக மேற்கொள்கின்றனர். வடமலபாரில் உள்ள கொல்லத்து நாட்டினைச் சேர்ந்த இவர்கள் மலபாரின் மீது திப்புசுல்தான் நிகழ்த்திய தாக்குதலின் காரணமாகத் திருவாங்கூருக்கு வந்து சேர்ந்தவர்களாவர். கொல்லத்து நாட்டிலிருந்து முதன்முதல் ஐந்தாம் நூற்றாண்டில் *(மலையாளம் ஆண்டுப்படி)* திருவாங்கூருக்கு வந்து சேர்ந்தவர்கள் புதுப்பள்ளிக் கோவிலகத்தைச் சேர்ந்தவர்களே. அச்சமயம் திருவாங்கூர் அரச குடும்பத்தினர் வாரிசு உரிமையில்லாதவர்களாகத் தத்து எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். அப்போது திருவாங்கூரை ஆண்ட மன்னர் தட்டாரிக் கோவிலகத்தைச் சேர்ந்த கோவில் தம்புரான்களின் வாயிலாகக் கொல்லத்து நாட்டிலிருந்து இரண்டு இளவரசர்களை அழைத்து வர ஏற்பாடு செய்தார். கோலத்திரியோடு தட்டாரிக் கோவிலகத்தார் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளால் பயனேதும் விளையவில்லை. புதுப்பள்ளிக் கோவிலகத்தைச்

சேர்ந்த குடும்பத்தினர் கார்த்திகைப்பள்ளியில் இவ்வாறு வந்து குடியமர்ந்தனர். இந்தக் குடும்பத்தின் இறுதி வாரிசு *1030*-இல் (ம.ஆ.) இறந்தார். அடுத்துச் செரிய கோவிலகத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் *920*-க்கும் *930*-க்கும் (ம.ஆ.) இடையே திருவாங்கூருக்கு வந்து சேர்ந்தனர். இவர்களும் தத்துப் பிள்ளைகளாக வந்தவர்களே. இவர்களுக்கு இத்தகைய தத்து உரிமை இல்லையென பள்ளிகோவிலகத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் மறுத்தனர். பின்னர் இவர்கள் அரண்முலாவில் தங்கினர். *964*-இல் (ம.ஆ.) திப்புவின் படையெடுப்பின் போது மூன்றாம் முறையாக மீண்டும் தம்புரான் குடும்பத்தினர் குடிபெயர்ந்து வந்தனர். அப்பொழுது வாழ்ந்து வந்த எல்லா அரசர்களும் திருவாங்கூருக்கு வந்து சேர்ந்தனர் எனினும் சிறிது காலத்திற்குப் பின் அவர்கள் தங்கள் இல்லம் திரும்பினர்.

இந்த அரசர்கள் கோயில்தம்புரான்களைப் போலத் திவிஜாக்களின் யசுர்வேதப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் போதாயனருடைய சூத்திரத்தையே மேற்கொண்டு வந்தனர். பார்கவ அதாவது பரசுராமனது கோத்திரத்தைச் சேர்ந்த இவர்கள் இந்துப் புராணங்களில் சிறப்பிக்கப்பட்டவனான பரசுராமனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சத்திரியர்கள். பிராமணர்களுடைய சடங்குகள் அனைத்தையும் இவர்கள் மேற்கொள்கின்றார்களெனினும் அவற்றைப் பிராமணர்களே இவர்கள் சார்பில் நிகழ்த்துகின்றனர். சௌளம், உபநயனச் சடங்கோடு கூட ஒன்றாக நடத்தப்படுகின்றது. சமாவர்த்தனம் எனப்படும் மாணவப் பருவத்தை முடித்து வைக்கும் சடங்கைப் பூணூல் அணிவிக்கும் சடங்கிற்கு நான்காம் நாள் நடத்துகின்றனர். அதன்பின் சத்திரியச் சிறுவன் படைக்கலப் பயிற்சி மேற்கொண்டவனாக அதில் தேவையான அளவு திறமை பெறும்வரை அப் பயிற்சியினைத் தொடர்ந்து மேற்கொள்கின்றான். அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுமிக்கான பள்ளிகட்டு எனப்படும் தாலிகட்டுச் சடங்கினைக் கோயில் தம்புரான் ஒருவனே நிகழ்த்துகின்றான். அதன்பின் அவனும் அவளும் கணவன் மனைவியர்போல வாழ்ந்து வருவர். மணமகளைத் தருதலாகிய கன்னியகாதானச் சடங்கைப் பிற சாத்திரச் சடங்குகளை நடத்தி வைக்கும் புரோகிதரே நடத்தி வைக்கின்றார். ஆண்கள் சூத்திர சாதியினைச் சேர்ந்தவர்களைத் துணைவியராகக் கொள்கின்றனர். பெண்கள் முதல் கணவன் இறந்தாலோ அவர்களை விட்டுப் பிரிந்தாலோ வேறொரு கோயில் தம்புரானைக் கணவனாக ஏற்றுக் கொள்ளலாம். இதனைத் திருமணம் எனக் கூறாமல் கூடியிருக்குக என்பர்.

சிரார்த்தத்தின்போது கர்மாவினைச் செய்யும் கர்த்தா இறந்தவரின் ஆவியின் சார்பாளராக வந்திருக்கும் பிராமணர்களின் பாதத்தில் மலரிட்டு அர்ச்சிப்பதோடு அவர்கள் காலில் விழுந்தும் வணங்குவான். புரோகிதனே பிற சடங்குகளை நிகழ்த்துகின்றான். இச் சடங்கிற்கு அழைக்கப்பட்ட பிராமணர்களை முறைப்படி உபசரித்தபின், கர்த்தா சமைத்த சோற்றினை இறந்தவர்களின் ஆவிக்குப் படைப்பான்.

சந்தியாவந்தனத்தின்போது இவர்கள் காயத்ரியைப் பத்துமுறை சொல்லக் கடமைப்பட்டவர்கள். அத்தோடு பஞ்சாட்சரம், அட்டாச்சரம் ஆகியவற்றையும் கூறுவர்.

இவர்கள் சாதி நடைமுறைகளை நம்பூத்ரி வைதிகர்களே மேற்பார்க்கின்றனர். இவர்களுக்கு மலையாளப் போத்திகளே குடும்பப் புரோகிதர்களாக இருந்து வருகின்றனர். இவர்கள் திருவேலி போத்திகள் எனப்படுவர்.

கோயில் தம்புரான்களிடையே வழக்கில் உள்ளதான சாதாரணப் பெயர்களுடன் மார்த்தாண்ட வர்மா, ஆதித்ய வர்மா, உதய வர்மா போன்ற பெயர்களும் வழக்கில் உள்ளன. குங்காரு, குங்கப்பன், குங்கோமன், குங்குண்ணி, உண்ணி, அம்பு போன்ற செல்லப் பெயர்களும் இவர்களிடையே வழக்கில் உள்ளன. திருவாங்கூர் அரண்மனையில் தலைமை உரிமைக்குரியவர் லட்சுமி என்ற பெயரையும் அவளுக்கு அடுத்த தகுதியில் இருப்பவள் பார்வதி என்ற பெயரையும் உடையவர்களாயிருத்தல் மரபாக இருந்து வருகின்றன.

தாமொலி - Tamoli

வடஇந்தியாவினைச் சேர்ந்த வெற்றிலை விற்போரான இச் சாதியருள் ஒரு சிலர் கணக்கெடுப்பின்போது தங்களைத் தாமொலியர் எனப் பதிந்து கொண்டுள்ளனர். இவர்கள் எந்த மாவட்டத்தில் உள்ளனர் என்பதனை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. தாபுலி அல்ல தாமுலி என்பது வங்காளத்தில் வெற்றிலை விற்போராவர். தாம்பொலி என்ற சாதியார் பம்பாய் மாநிலத்தில் வெற்றிலை விற்போராக உள்ளனர்.

தானமநாடு - Tanamanadu

வலையரின் ஓர் உட்பிரிவு.

தண்ட - Tanda

லம்பாடியரின் குடியிருப்பு அல்லது தற்காலிகத் தங்குமிடத்தைக் குறிக்கும் சொல். சிலர் இதனைக் கணக்கெடுப்பின் போது தங்கள் சாதிக்குரிய பெயராகப் பதிந்துகொண்டுள்ளனர்.

தண்டர் - Tandan

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இச் சாதியார் பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: "மலபாரிலுள்ள பாலக்காட்டிலும் வள்ளுவநாட்டிலும் தண்டன் தனிச் சாதியாராகக் கருதப்படுகின்றனர். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் பொதுவாகத் தெற்கத்திய தீயர் பழக்க வழக்கங்களை ஒத்தனவே. எனினும் இவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லை. மேலும் இவ்விரு பிரிவினருமே ஒருவரைவிட மற்றவர் சாதியில் உயர்ந்தவர் எனப் பெருமை பாராட்டிக் கொள்வர். வள்ளுவநாட்டுத் தண்டன் சாதிப் பெண்கள் மாங்கர வட்டத்தைப் பாலக்காட்டு வட்டத்திலிருந்து பிரிக்கும் வாய்க்காலைக் கடந்து செல்லுதல் கூடாது என்ற வழக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது." திரு எப். பாவ்செட் மலபாரைச் சேர்ந்த தண்டன்களை ஈழவர்களோடு உறவுடைய சாதியார் எனக் கூறுவதோடு இவர்கள், ஈழவர்கள் வெறுக்கும் பழக்கமான உடன்பிறந்தவர்கள் பலரும் ஒருத்தியை மணக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளவர்கள் எனக் கூறுகின்றார்.

திருவாங்கூரைச் சேர்ந்த தண்டன்களைப் பற்றிய பின்வரும் குறிப்புக்கு நான் திரு என். சுப்ரமணி அய்யருக்குக் கடப்பாடுடையேன்.

"வர்கலைக்குத் தெற்கே இச் சாதியார் ஊராளி எனவும் வடக்கே தண்டன் எனவும் அழைக்கப்படுகின்றனர். கொட்டாரக்கரைக்குக் கிழக்கேயுள்ள சில பகுதிகளில் இவர்கள் முதல்பட்டுக்காரர் என அழைக்கப்படுகின்றனர். தச்சர்களுக்குச் செய்த உதவிக்கு ஈடாக முதலில் பட்டுப் பெறும் உரிமையுடையவர் என்பது இதன் பொருளாகும். மரம் அறுக்கும் ரம்பம் வழக்கில் இல்லாத பழங்காலத்தில் தண்டன்களுடைய முரட்டுக் கருவிகளையே தச்சன்கள் மரம் அறுக்கப் பயன்படுத்தி வந்தனர். இதனாலேயே இச் சாதியினைச் சேர்ந்த சிலர் தச்சன் என அழைக்கப்பட்டு வந்தனர். தண்டன் என்ற சொல் தண்டனம் என்ற வடசொல்லிருந்து வந்ததாகும். முன்னாளில் இந்தச் சாதியினைச் சேர்ந்தவர்கள், ஆட்சியில் உள்ளவர்கள் குற்றம் புரிந்தவர்களுக்குத் தரும்

தண்டனையினை, நிறைவேற்றும் பணியினை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய தண்டனையினை நிறைவேற்றி வைக்க இவர்களுக்கு வாள், வெட்டு வாள், கத்தி ஆகியன வழங்கப்பட்டன. இவர்கள் தங்கி வாழும் ஊர்களைக் காவல் காக்கும் பொறுப்பும் இவர்களிடம் விடப்பட்டதால் இவர்களுக்கு ஊராளி என்ற பட்டப்பெயரும் உரியதாயிற்று. சில பகுதிகளில் தண்டன்கள் வேலன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். ஆண்கள் மூப்பன் என்ற பட்டத்தையும் பெண்கள் மூப்பத்தி என்ற பட்டத்தையும் தரிக்கின்றனர். இது மூத்தோர் என்று பொருள் தருவதாகும். உயர்சாதியாரிடம் பேசும்போது தண்டன்கள் தங்களைக் குழியன்கள்- குழிகளில் வாழ்வோர்- எனக் கூறிக் கொள்வர்.

ஒரு காலத்தில் தண்டன்கள் ஈழவர் சாதியினைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர் எனக் கூறப்படுகிறது. பின்னர் இவர்கள் தங்கள் தகுதியில் தாழ்ந்தனர். முன்னாளில் இவர்கள் மலபாரிலிருந்த பல நாடுகளிலும் படைப்பிரிவில் பணியில் இருந்து வந்தவர்களாதல் வேண்டும். சில பகுதிகளில், இவர்கள் பணிக்கு ஈடாக, இவர்களுக்கு ஊராளிப் பறம்பு எனப்படும் வரியிலி நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. குழப்பமான காலம் முடிவடைந்து நாட்டில் அமைதி நிலவத் தொடங்கியவுடன் தென்னை வகை மரங்களில் ஏறிப் பதநீர் இறக்குதல் இவர்களுடைய முக்கிய தொழிலாகி விட்டது. இவர்களுள் பலர் கயிறு திரிக்கும் தொழிலையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். பல குடும்பங்கள் இன்றும் தச்சர்களிடமிருந்து முதல் பட்டுப்பெறும் உரிமையினை உடையனவாக உள்ளன.

இலஞ்சி, பூவர், இருநெல்லி, பிலக்குடி என்ற நான்கு அகமணக்கட்டுப்பாடு உடைய குலங்களாகத் தண்டர் பிரிவுபட்டுள்ளனர்.

பெண்கள் மின்னுவோடு கூடத் தனிச் சிவப்பு, கறுப்பும் சிவப்பும் கலந்ததான பாசிமணி மாலைகளை அணிகின்றனர். இன்று நாயர் சாதிப் பெண்களுக்கு உரியதான குட்டுவியினையும் அணியத் தொடங்கியுள்ளனர். பச்சை குத்திக் கொள்ளுதல் பரவலான வழக்காக உள்ளது. ஆண்கள் கூடத் தங்கள் நெற்றியில் ஒரு பிறைக்கோடும் புள்ளியும் பச்சை குத்திக் கொள்கின்றனர். பெண்கள் தங்கள் நெற்றிப் பொட்டிலிருந்து மேல் நோக்கியபடி செல்லும் ஒரு கீற்றினைப் பச்சை குத்திக் கொள்கின்றனர். கைகளில் சங்கு, தாமரை, பாம்பு, வட்டு முதலிய உருவங்களைப் பச்சை குத்திக் கொள்கின்றனர். தண்டன் தங்கள் உணவுப் பழக்க வழக்கங்களில் ஈழவர்களை ஒத்தவர்களாக உள்ளனர்.

தண்டன் சாதிக்குரிய பூசாரிகள் தண்ட குருப்புகள் எனப்படுகின்றனர். இவர்களே சாதிக்குரிய அம்பட்டர்களாகவும் உள்ளனர். தண்டன்கள் பத்ரகாளியினைத் தங்களுக்குரிய சிறப்புத் தெய்வமாக வழிபடுகின்றனர். மண்டைக்காடு, கொடுங்கோளூர், சர்க்கரை ஆகிய இடங்களில் உள்ள பத்ரகாளி கோயில்களில் இவர்கள் முறையாக வழிபாடு நடத்துகின்றனர். சர்க்கரையில் உள்ள கோயிலில் ஒரு தண்டனே பூசாரியாக உள்ளான். மார்ச் மாதத்தில் வரும் பரணி நாளிலும் ஃபரல் மாதத்தில் வரும் பத்தாமுதயத்திலும் இத் தேவிக்குச் சிறப்பான வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. நவம்பர் மாதத்தினைச் சமய வழிபாட்டுக்குரிய மாதமாகக் கருதும் இவர்கள் அம் மாதத்தில் வரும் கார்த்திகை நாளன்று சிறப்பான வழிபாடு நிகழ்த்துகின்றனர். ஜனவரி மாதத்து முதல் ஞாயிறு சமய வழிபாட்டுக்கான மற்றொரு சிறப்பான நாளாகும். அன்று காலையில் சூரியனைப் பொங்கலிட்டு வழிபடுவர். இந்த வழிபாடு பொகல எனப்படுகின்றது. பெரியம்மைக்கு உரிய தெய்வமான மருதி தனிச் சிறப்பொடு வழிபடப்படுகின்றாள். இச் சாதியினைச் சேர்ந்த ஒருவன் இந்த நோயால் இறப்பானாகில் அவன் நினைவாக அவன் வீட்டில் அல்லது பத்ரகாளி கோயில் அருகில் சிறு கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுத் தை மாதம் இருபத்தெட்டாம் நாளன்று அங்கு இனிப்புப் பணியாரங்களும் கள்ளும் படைப்பர். எமனின் கணக்கனான சித்ரகுப்தனைச் சித்திரை மாதத்துப் பௌர்ணமி நாளன்று வழிபடுகின்றனர். ஆடி அமாவாசையின்போது மூதாதையருக்குப் படையலிட்டு வழிபாடு நடத்துகின்றனர்.

கழுத்துக்கட்டு எனப்படும் ஒரு சிறுமிக்குரிய தாலிகட்டுச் சடங்கினை அவளுக்கு ஏழு முதல் பன்னிரண்டு வயதாக இருக்கும்போது நடத்துகின்றனர். இச் சடங்கின்போது மணமகனாக இருப்பவன் மச்சம்பி எனப்படும் நெருங்கிய உறவினன் ஆவான். இவன் தன் முன்னிலையில் நடத்தப்படும் ஒவ்வொரு தாலிகட்டுச் சடங்கிற்கும் இரண்டரைப் பணத்தினை அன்பளிப்பாகப் பெறுகின்றான். ஒரே பந்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறுமிகளுக்குத் தாலி கட்டு நிகழ்த்தலாம் எனினும் ஒவ்வொருக்கும் தனித்தனியே ஒரு மணமகன் இருத்தல் வேண்டும். தாலிகட்டுக்கு உள்ளாகும் சிறுமியின் தந்தை தாலி கட்டும் மணமகன் தந்தைக்குப் பதினாறு ராசிப் பணங்களைக் கொடுத்து மணமக்களுக்கிடையேயான உறவினைச் சடங்கிற்குப் பின் துண்டித்துக் கொள்ளலாம். ஒருவன் தன் அத்தைமகளையும் மாமன்மகளையும் தனக்குரிய முறைப்பெண்ணாக உரிமை கொண்டாடலாம். சம்பந்தம் எனப்படும் முறையான திருமணம் சிறுமியர் பூப்படைந்த பின்னரே நடத்தப்படுகின்றது. அதற்கு

முன்னாக அவள் தாலிகட்டுச் சடங்கு நிகழ்த்தப்படாதவளாக இருப்பின் அவள் குடும்பத்தினர் சாதிவிலக்கத்திற்கு உள்ளாவர்.

குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவள் இறந்தால் மட்டுமே பிணத்தை எரிக்கின்றனர். மற்றவர்கள் புதைக்கப்படுகின்றனர். பத்து நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்ளும் இவர்கள் ஆண்டு சிரார்த்தத்தைக் கடற்கரையில் சமைத்த சோற்றினை எள்ளோடு கலந்து இறந்தவருக்குப் படைத்து வழிபட்ட பின் அதனைக் கடலில் எறிவர்.

தண்டான் - Tandan

தீயர் சாதியாருக்குரிய பரம்பரை ஊர்த் தலைவன் தண்டான் எனப்படுவான். சாமோரின் குடும்பத்தைச் சேர்ந்த பட்டத்து அரசியே இவர்களைப் பதவியில் அமர்த்துவாள். சாமோரினின் ஆளுகைக்குப் புறத்தே உள்ள பகுதிகளில் அப்பகுதியின் ஆட்சியாளர்கள் இவர்களைப் பட்டத்தில் அமர்த்துவர். சாதியாரிடையேயான சச்சரவுகளைத் தீர்த்து வைப்பதில் தாண்டன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சாதியினைச் சேர்ந்தவர்களுடைய குடும்பங்களில் நடக்கும் தாலிக்கட்டு, பூப்புநீராட்டு, திருமணம், சீமந்தம் ஆகிய சடங்குகளை நடத்தி வைக்க உதவுவது இவனது கடமையாகக் கருதப்படுகின்றது. தாலிகட்டுச் சடங்கு நிகழவுள்ள பந்தலை அமைக்கக் கமுக மரத்தை வெட்டும்முன் தச்சன் தண்டானுடைய முறையான அனுமதியினைப் பெற்ற பின்னரே அப்பணியினைத் தொடங்க வேண்டும். மணமுறிவுகளின்போது தண்டான் முக்கிய பங்கு வகிக்கின்றான். புதிதாக வீடு கட்டப்படும்போது அதற்கான தொடக்கவிழாச் சடங்குகளை நடத்தி வைப்பவனும் தண்டானே. அப்போது பலியிடப்படும் கோழிகளின் வலது கால்களின் உரிமை தாண்டனுக்குரியதாகும். தன்னுடைய சாதியாரிடையே மட்டுமின்றிப் பிற சாதியார்கள் சமூக வாழ்க்கையிலும் இவன் பங்கு பெறுகின்றான். ஒரு நாயர் இறக்கும்போது அவன் உடலை எரிக்கும் பொறுப்பு தண்டானுடையதே. தரை (ஊர்)யினைச் சேர்ந்த வண்ணாரும் அம்பட்டரும் இவன் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளனர். ஒருவனுக்கு அவர்களுடைய பணி இன்றியமையாது தேவைப்படும்போது அவர்களை அவனுக்குப் பணிசெய்யச் சொல்லாமல் தடுத்து நிறுத்தும் அதிகாரம் பெற்றவன் இவன். கைவினைஞரான கம்மாளர் சாதியாரின் திருமணங்களையும் இவன் நடத்தி வைக்கின்றான்.

தங்கலான் - Tangalan

பறையரின் ஓர் உட்பிரிவு. இது அருகே நிற்கத் தகுதியற்றவன் எனப்

பொருள்படுவதாகும். தீட்டுப் படுத்தும் சாதியாராகையால் இவர்கள் இப் பெயருக்கு உரியவராகின்றனர்.

தங்கயேடு - Tangedu

தங்கயேடு அல்லது தங்கயெட்ல (*Cassia auriculata*) காபு மற்றும் பத்ம சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயராகும். பொன் காசு போன்ற இதழ்களையுடைய ஆவாரம் செடி இது. இதனுடைய பட்டை இந்தியாவில் தோல் பதனிடும் தொழிலில் கடுக்காயினைப் போலவே மிகவும் பயனுடையதாக உள்ளது.

தண்டுவாயன் - Tantuvayan (thread-wearer)

நெசவுத் தொழிலை மேற்கொண்டுள்ள பல சாதியாருக்குமான பெயர். நூலணிபவர் என்பது இதன் பொருள்.

தபொதனலு - Tapodhanlu

தெலுங்கு இரவலர் பிரிவினர் சிலர் மேற்கொண்டிருப்பதான வழக்கம். தங்களை தாங்களே கடுநோன்புகளால் வருத்திக் கொள்வதே பெரும்செல்வம் என இவர்கள் கருதுகின்றனர்.

தாரகன் - Tarakan

பார்க்க: மூட்டன். (See: Muttan)

தர்தரொன் - Tartharol

இதனைத் தோடரின் ஒரு பிரிவுக்கான பெயராக முனைவர் டபிள்யூ. எச்.ஆர். ரிவர்ஸ்* பதிந்துள்ளார். சிலர் இப்பிரிவினருக்கான பெயரைத் தர்டால் எனக் குறிப்பிட்டுள்ளனர். (*தேர்த்தாள் எனவும் படுகின்றது.*)

தர்வாடு - Tarwad

மருமக்கள் தாயத்தை மேற்கொண்டுள்ள குடும்பத்திற்கான பெயராகத் திரு விக்ரம் இதனைக் குறித்துள்ளார்.

தாசான் - Tassan

தெலுங்குத் தாசரிகளுக்கான மலையாளப் பெயர்.

* தோடர், *1906.* (The Todas, 1906).

தட்டான் - Tattan

தமிழ் மற்றும் மலையாளக் கம்மாளரான பொற்கொல்லருக்கு உரிய பெயர்.

தெய்வளியோள் - Teivaliyol

இதனைத் தோடரின் ஒரு பிரிவுக்கு உரிய பெயராக முனைவர் டபிள்யூ. எச். ஆர். ரிவர்ஸ் பதிந்துள்ளார். (இப்பிரிவு தேவளி எனவும் படும்.)

தெலகர் - Telaga

தெலகர் பற்றித் திரு எச்.எ. ஸ்டுவர்ட் *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறியுள்ளதாவது: "தெலுங்கானாவினை ஆண்ட இந்து அரசர்களின் படையில் முன்பு போர் வீரர்களாக இருந்த தெலுகர் இன்று பயிர்தொழிலில் ஈடுபட்டுள்ள சாதியாராக உள்ளனர். இவர்களுக்கான இப்பெயரே இவர்கள் தெலுங்குச் சாதியினைச் சேர்ந்த தெலுங்கு நாட்டுப் படைவீரர் என்பதனைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. இச் சாதிக்கு உரியதாகப் பதியப்பட்டுள்ள உட்பிரிவுகள் சிலவற்றின் பெயர்கள் தெலுகர் சாதியினைச் சேர்ந்த இவர்களுக்கும் தெலுங்குச் சாதியாரான வேறு சில சாதியாருக்குமிடையே குழப்பத்தை விளைவிப்பதாக உள்ளன. வைணவர்களான இவர்கள் பிராமணர்களைத் தங்கள் புரோகிதராக அமர்த்திக் கொள்கின்றனர். இவர்கள் பழக்க வழக்கங்கள் காபுகளின் பழக்க வழக்கங்களையே பெரிதும் ஒத்தனவாக உள்ளன. இறைச்சி உண்ணும் பழக்கமுடையவர்களாயினும் இவர்கள் மதுவகைகளைப் பருகுவதில்லை. இன்று பெரும்பாலானவர்கள் பயிரிடுதலை மேற்கொண்டிருந்தாலும் பலர் இன்றும் படைப் பணியில் சேர்ந்து பணியாற்றுகின்றனர். அண்மையில் இவர்களைப் படையில் சேர்ப்பது நிறுத்தப்பட்டுள்ளது. நாயுடு, தொரை என்ப இவர்களுக்கான பட்டப்பெயர்கள்."

தெலகர் மற்றும் வந்தரியர் (வல்லவர்) ஆகிய சாதியாரைப் பற்றிய ஒரு குறிப்பில் இவர்கள் காவுகள் சாதியோடு சேர்த்துப் பட்டியல் படுத்தப்பட வேண்டியவர்கள் எனவும் அச் சாதியின் ஒரு கிளையினரே இவர்கள் எனவும் கூறப்பட்டிருப்பதோடு அதற்கான காரணங்களாகப் பின்வருபவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன:

1. தெலுங்கர், வந்தரியர், காபுகள் ஆகிய மூன்று சாதியினரும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

---

* மலபார் சட்டமும் வழக்கும். (Malabar Law and Custom.)

2. இண்டிபேரு எனப்படும் குலப்பெயர்கள் இம்மூன்று வகுப்பாரிடையேயும் ஒன்றாகவே காணப்படுகின்றன.

3. இம்மூன்று பிரிவினரும் ஒருவர் இல்லத்தில் மற்றவர் உண்பதோடு அவ்வப்போது மண உறவும் மேற்கொள்கின்றனர். ஏழையாக உள்ள தெலுகன் அல்லது வந்தரி தன் மகளைப் பணக்காரனான காபுவுக்கு மணம் புரிவிக்கின்றான். தெலுகர், வந்தரியர் ஆகிய பிரிவினர் பிராமணீயச் செல்வாக்கிற்கு மிகுதியும் ஆட்பட்டவர்களாக உள்ளனர். பிராமணர்களைத் தங்கள் குருவாகக் கொள்ளும் இவர்கள் அவர்களிடம் முத்திரை பொறித்துக் கொள்வர். காபுகள் சாதானி அல்லது ஜங்கமத்தையே தங்கள் குருவாகக் கொள்வர். முன்னவர் திருமணம், சாவு முதலான சடங்குகளில் காபுகளைப் பின்பற்றினாலும் தங்கள் பெண்களுக்கு அவர்கள் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைக்கின்றனர். கைம்பெண்கள் மறுமணம், மணமுறிவு ஆகியவற்றையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. காபுகள் பெரும்பாலும் பயிரிடுதலையே தொழிலாகக் கொண்டுள்ளனர். வந்தரி பிரிவினர் முன்னாளில் போர் வீரராக இருந்தவர்கள். இதன் காரணமாக இவர்கள் இனாம் நிலங்களுக்கு உரிமையுடையோராக உள்ளனர். இன்றுங்கூட இவர்கள் நிலவரி செலுத்தப்பட வேண்டிய நிலத்தை உழுது பயிரிட உடன்படுவதில்லை. ஆனால் காபு எத்தகைய தடையும் கூறாது அதற்கு உடன்படுவான். இதேபோன்று தெலகர் சமீன்தாரின் கீழ் பணிபுரிவதில் மிகுந்த நாட்டம் உடையவர்களெனினும் எல்லாவகை நிலங்களையும் உழுது பயிரிடுவர். காபு சாதிப் பெண்கள் தாங்களே குடும்பத்துக்கு வேண்டிய தண்ணீர் எடுத்து வருவதோடு தங்கள் பெற்றோருக்கும் கணவர்களுக்கும் வயலுக்குச் சோறும் கொண்டு சென்று கொடுப்பர். மற்ற இருபிரிவினையும் சேர்ந்த பெண்கள் கோஷா முறையினைப் பின்பற்றுகின்றனர். ஆண்கள் வயலுக்குத் தங்கள் உணவைத் தாங்களே கையோடு எடுத்துச் செல்வதோடு குடும்பத்துக்குத் தேவையாக தண்ணீரையும் எடுத்துவரவேண்டும். வசதியுள்ளவர்கள் இப் பணிகளைச் செய்யக் காபுகளை அமர்த்துகின்றனர். செல்வ வளம் படைத்த காபுகள் தாங்கள் தெலகர் பிரிவுனர் என்பது போலப் பாவனை செய்துகொள்கின்ற பழக்கம் மிகுந்து வருகின்றது என்பதனையும் இங்குக் கூறியாக வேண்டும்.

தேளிகுலம் - Telikula

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தேளிகுலத்தவர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதாவது: "தெலுங்கு பேசும் எண்ணெய்ச் செக்கு ஆட்டுவோரான இவர்களைத் தசாகலரான தெள்ள குலத்தவர்களோடும் ஒரிய எண்ணெய் ஆட்டும் சாதியாரான தெள்ளிகளோடும் குழப்பிக்கொள்ளுதல் கூடாது." தேளிகுல என்பது எண்ணெய் ஆட்டுவோரான காணீகர் எனப்படும் காண்டலருக்கான மற்றுமொரு பெயர். காண்டல என்பது எண்ணெய்ச் செக்கினைக் குறிக்கும். வடசர்க்கார் பகுதிகளில் தேளிகுலம் என்பதனையே காணீகர் அல்லது காண்டலர் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்துகின்றனர். அப் பகுதியில் எண்ணெய்ச் செக்கு ஆட்டுவோர் தேளிகுலவாண்டுலு என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் செக்கில் ஓர் எருத்தினை மட்டுமே பூட்டி ஓட்டுகின்றனர். காணீகரிடையே ஓர் எருதும் இரண்டு எருதும் பூட்டி ஓட்டும் ஒண்டெத்து, ரெண்டெத்து என்ற இருவகையினரும் உள்ளனர்.

தெள்ளகுலம் - Tellakula (white clan)

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் தசாகலருக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. மறைத்திரு ஜெ. கெயின்* அவர்கள் கருத்துப்படி தெள்ளகுலத்தவர்கள் தசாகலரான தெலுங்கு வண்ணாராவர். அரசு அலுவலகங்களில் குற்றேவலர்களாப் பணியில் அமர்ந்துள்ள இச் சாதியார் தங்கள் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களைவிடத் தங்களை உயர்வாகக் கருதுகின்றனர்.

தெள்ளி - Telli

ஒரிய நாட்டைச் சேர்ந்த எண்ணெய்ச் செக்கு ஆட்டுவோர் தெள்ளி சாதியார். எண்ணெய் எனப் பொருள்படும் தெளொ என்ற சொல்லிலிருந்து இவர்கள் சாதிப்பெயர் வந்துள்ளது. ஹறாலொடிய, பொலொடிய, காதி என்ற மூன்று அகமணக் கட்டப்பாடு உடைய பிரிவினராக இவர்கள் பிரிந்துள்ளதாகத் தெரிகின்றது. ஹொலொடியர் முதுலில் மஞ்சள் பயிரிட்டு விற்று வந்தவர்களாதல் வேண்டும். இவர்கள் விற்பனைக்காக மஞ்சளை எருதுகளின் மேல் பொதியாக ஏற்றிச் செல்லாமல் வண்டிகளிலேயே கொண்டு சென்று விற்றுவந்தனர். பொதி எருதுகளின் மீது பாரம் ஏற்றவோ இறக்கவோ உதவுவது கூட இவர்கள் சாதி

---

* இந்தியத் தொல்லியல், VIII, 1879. (Ind.Ant., VIII, 1879).

வழக்கத்திற்கு முரணானதாகும். பொலொடு என்ற ஒரியச் சொல் எருத்தினைக் குறிக்கும். பொலொடியர் விற்பனைக்காக எண்ணெய் வித்துக்களைப் பொதி எருதுகளின்மேல் ஏற்றிச் செல்லும் வழக்கம் உடையவர்களாதலால் அதனை முக்கிய தொழிலாக மேற்கொண்டுள்ளனர். இதனை மற்ற இரு பிரிவினருள் ஒரு சிலரும் செய்து வருகின்றனர். தெள்ளிகள் அனைவரும் காபர்த்திகேஸ்வர என்ற ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிகின்றது. சாகு என்பது இச் சாதிக்குரிய பட்டப்பெயர். சமூகப் படிநிலையில் தெள்ளிகள் வாணியன்களைப் போலன்றிப் பயிரிடுதலை மேற்கொண்டுள்ள பிற சாதியாரோடு சமமாக வைத்து எண்ணப்படுகின்றனர். பதோயிகளிடையே ஏற்படும் சிக்கல் மிகுந்த சச்சரவுகளைத் தீர்த்துவைக்க நடுவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் பஞ்சபாடகொ எனப்படும் ஐந்து சாதியாருள் இவர்கள் சாதியும் ஒன்று. தெள்ளிகளின் சாதித் தலைவன் பேரகன் எனப்படுவான். அவனுக்குப் பொல்லொபய என்ற உதவியாளன் உளன். சில இடங்களில் பெண்டொ என்ற அலுவலனும் உளன்.

படகிலோ கலத்திலோ ஏறிப் பயணம் மேற்கொள்வது சாதி விதிகளுக்கு முரணானது என்பது தெள்ளிகளிடையே நிலவும் நம்பிக்கையாகும். பசு ஒன்று கழுத்தில் கட்டிய கயிற்றோடுகூட அல்லது அதனைக் கட்டியிருக்கும் தொழுவத்தில் இறக்குமானால் அதன் உரிமையாளர்களான குடும்பத்தவர் ஒரு புண்ணிய நதிக்குப் பயணம் மேற்கொண்டு நீராடித் தீட்டுப் போக்கும்வரை தீட்டுக்கு உரியவர்களாகக் கருதப்படுவர். ஹொலொடியர் காளைக் கன்றுகளை வீட்டில் வளர்க்க வைத்துக் கொள்ளாமல் இயன்ற அளவு விரைவில் அதனை விற்றுவிடுவர். காளைகளை இவர்கள் விரையடிப்பதும் இல்லை. எழுதப்படிக்கத் தெரியாத ஹொலொடியர் ஆவணங்களில் தங்கள் கையொப்பத்திற்குப் பதிலாக மஞ்சள் உருண்டையால் அடையாளமிடுவர். இது நிசானி எனப்படும். இதே போன்று பொலொடியர் பிரிவினர் தங்கள் எருத்தின் தோல் வாராமலும், காதி பிரிவினர் செக்கின் வளைந்த கம்பத்தாலும் ஆவணங்களில் அடையாளமிடும் பழக்கத்தை மேற்கொண்டவர்களாக உள்ளனர். பிற ஒரியச் சாதியார் பயன்படுத்தும் 'நிசானி' அடையாளங்கள் வருமாறு:

கொரொணொ *(எழுத்தர் சாதி)*	-	எழுத்தாணி
ராவுலொ *(கோயிற்பணியாளர்)*	-	திரிசூலம்
பாவுரி *(கூடைகட்டுவோர், மண்வெட்டுவோர்)*	-	அரிவாள்

தோபர் (வண்ணார்)	-	சுள்ளி சேகரிக்கும் கவை.
பிராமணன்	-	சடங்கின்போது அணியும் தர்ப்பை மோதிரம்.

தெள்ளிகள் மணச் சடங்குகள் ஒரியர் மணச் சடங்குகளை ஒத்தவை. மிகச் சில மாற்றங்களே இவற்றிடையே காணப்படுகின்றன. மணநாளுக்கு முந்தைய நாளன்று மணமான சுமங்கலிகள் இருவர் வெள்ளை வண்ணம் பூசப்பட்ட பானைகளை ஒரே சேலையின் இரண்டு முனைகளையும் சுருட்டிச் சும்மாடு ஆக்கித் தலையில் வைத்து அதன்மேல் அப்பானைகளை வைத்துச் சுமந்து செல்வர். இவர்கள் இருவரும் இன்னிசை முழக்கமும் புதுமுறம், முக்கூடு ஆகியவற்றை ஏந்திவரும் மற்றொருத்தியும் உடன்வரக் கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தி வருவர். கோயிலிருந்து திரும்பும் வழியில் இவர்கள் இருவரும் ஒரியரிடையே உள்ள வழக்கினைப் பின்பற்றி ஏழு வீடுகளுக்குச் சென்று தண்ணீர் பெற்றுத் தங்கள் பானைகளில் ஊற்றி வருவர். மணச் சடங்கின்போது மணமக்களின் உடைகளின் முனைகள் முடியப்பட்டபின் மணமக்கள் தங்களுக்கிடையே கடுக்காயினையும் பாக்கினையும் மாற்றிக் கொள்வர். மணச் சடங்குகள் அனைத்தும் முடியும்வரை மணமக்கள் ஆற்றிலோ குளத்திலோ இறங்காததோடு தலைக்கும் தண்ணீர் விட்டுக் கொள்ளமாட்டார்கள்.

தெள்ளிகளுள் பெரும்பாலோர் சைதன்யரின் வைணவ நெறியினைப் பின்பற்றும் பரமாத்திகள். சிலர் ஸ்மார்த்தர்களாக இருப்பதோடு தாகுராணிகளான கிராம தேவதைகளையும் வழிபடுகின்றனர்.

தெலுகு - Telugu

தெலுகு அல்லது தெலக என்பது தெலுங்கு மொழி பேசுவோரைக் குறிக்கும் பெயராகும். அகசர், பலிசர், பாணசிகர், பேடர், பெஸ்தர், தேவாங்கர், ஹொலையர், கும்பாரர், ராச்செவார், தசாகலர், உப்பரர் ஆகிய சாதிகளின் உட்பிரிவுகளின் பெயராகவும் தெலுகு என்பது அண்மைக் காலக் கணக்கெடுப்புகளில் பதியப்பட்டுள்ளது. தெலுகு வேளாளர், தெலுகு செட்டி என்பன முறையே வெலமர், சலுப்பன் சாதிகளுக்குரிய வேறு பெயர்களாகப் பதியப்பட்டுள்ளன.

தேன் - Ten (honey)

தேன் அல்லது ஜேன் என்பது காட்டுக் குறும்பர் மற்றும் ஹொலையர் சாதிகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. சில இருளர் தங்களைத் தேன்

படையாச்சி அல்லது தேன் வன்னியன் எனச் சிறப்பித்துக் கூறிக் கொள்வர். படையாச்சி, வன்னியன் என்பன பள்ளி சாதியாருக்குரிய பட்டப்பெயராகும்.

தென்திசை - Tendisai (southern country)

மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களில் வேளாளரின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

தினை - Tene (Setaria itlica)

ஹொலையரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

தெங்கின - Tengina (coconut plam)

கள்ளுக்காகத் தென்னையிலிருந்து பதநீர் இறக்கும் ஹலேபைக்குகளின் ஒரு பிரிவினருக்கான பெயர்.

தென்னம் - Tennam (coconut)

தென்னம், தென்னஞ்சாணார் என்பன தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்கும் சாணாருக்கான தொழில் தொடர்பான பெயர். தேங்காயல என்பது ஏறாதியரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். இதற்குச் சமமான தென்னம் என்பது கொண்டையங்கோட்டை மறவரின் ஒரு கொது - குலம் - ஆகும்.

தென்னிலை நாடு - Tennilainadu

வ்ட்டார அடிப்படையிலான கள்ளரின் ஓர் உட்பிரிவு

தெற்கத்தியார் -- Terkatiyar (southerner)

கள்ளன், மறவன், அகமுடையான் ஆகிய சாதியாருக்கும் தஞ்சாவூரில் வந்து குடியேறியுள்ள பிறருக்குமான பெயர். மாயவரத்தில் இது கள்ளர், அகமுடையார், வலையர் ஆகிய சாதியாருக்குரிய பெயராக வழங்குகின்றது.

தெர்டன் - Tertal

தோடரின் ஒரு பிரிவு.

தெருவான் - Teruvan

மலபார் சாலியன்களுக்கான மற்றுமொரு பெயர். மேற்குக் கடற்கரைப்

பகுதியினைச் சேர்ந்த பிற சாதியார் தனித்தமைந்த இல்லங்களில் வாழ்வதுபோல வாழாமல் தெரு அமைப்புடைய இல்லங்களில் வாழ்வதால்இவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.

தேவடியாள்- Tevadiyal

தேவதாசிகளுக்கான தமிழ்ப் பெயர். தேவன் என்பது மறவர்களுக்கான பட்டப்பெயர்களுள் ஒன்று.

தேய்யம்பாடி - Teyyambadi

மலபாரைச் சேர்ந்த கோயில் பணியாளர்களான அம்பலவாசிகளின் ஒரு பிரிவினர். இப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் பகவதி கோயிலில் பாடி ஆடுவர். தனியார் இல்லங்களில் நாகபாட்டு எனப்படும் பாட்டினையும் பாடுவர். இந்தப் பாட்டு மகப்பேறு வாய்க்கத் துணை செய்வது என மலபார் கையேடு கூறுகிறது.

தாட்ல - Thadla

தாட்ல, தால்ல என்பன கயிறு எனப் பொருள்படும். தேவாங்கர், கர்ண சாலே ஆகிய சாதிகளுக்கான புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

தாகுர் - Thakur

1901 சென்னை மாநிலக்கணக்கெடுப்பு அறிக்கையில் பம்பாயைச் சேர்ந்த சுமார் நூறு பேர் தங்களைக் குடிவழி மரபு பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுவோராகவும் பயிரிடுவோராகவும் பதிந்து கொண்டுள்ளனர். "இவர்கள் மராட்டியரைவிட தகுதியில் தாழ்ந்தவர்கள். சோம்பேறித் தனமும் தூய்மையற்ற பழக்க வழக்கங்களும் கொண்டவர்கள். இவர்களுள் சிலர் கம்பளிக்காக ஆட்டு ரோமம் கொண்டு நூல் நூற்கின்றனர். பெரும்பாலானவர்கள் பிச்சையெடுத்தும் கதைப் பாடல்கள் பாடியுமே பிழைக்கின்றனர். சில சமயங்களில் இவர்கள் புராணங்கள், இராமாயணம் ஆகியவற்றிலிருந்து சில நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டுவதோடு அவற்றை மரப்பாவைக் கூத்தாகவும் கயிறு கொண்டு ஆட்டுவிப்பர்" எனப் பம்பாய் மாநில விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

தலகோக்கல - Thalakokala (female cloths)

தேவாங்கருக்கான புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். 'சேலை எனப் பொருள்படுவது.

தாலம் - Thalam (Palmyra palm)

காணிகாரரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். *(இல்லம்)*

தாம்பல்ல - Thamballa (sword bean)

வாள் அவரை எனப் பொருள்படும் இது தசாகலர் சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இக்குலத்தவர் இந்த அவரையை உண்ணார்.

தம்பூரி - Thamburi

மைசூரைச் சேர்ந்த முகமதியர்களுள் ஒரு வகுப்பாருக்கான பெயர். இவர்கள் லம்பாடிகளைப் போல உடை அணிந்து கொண்டாலும் அவர்களோடு மணஉறவு கொள்வதில்லை. *(பார்க்க: லம்பாடி.)*

தண்டப் புலையர் - Thanda Pulayan

பின்வரும் குறிப்புக்கு நான் திரு எல். கெ. அனந்தகிருட்டிண அய்யருக்குக் கடப்பாடுடையேன்.* தென் மலபாரிலும் கொச்சியிலும் வாழும் புலையரின் சிறிய உட்பிரிவினர் தண்டப் புலையர். இவர்களுக்கான இப் பெயர் இச் சாதிப் பெண்கள் அணியும் ஆடையின் காரணமாக ஏற்பட்டது. இவர்கள் தண்டங்கோரைப் புல்லினை நீளவாக்கில் கிழித்து அதன் ஒரு முனையினை இணைத்து முடிந்து முழங்கால்வரை தொங்கும்படி இடுப்பில்கட்டிக் கொள்வர். இவ்வாறு இவர்கள் ஆடையணிய நேரிட்டதற்கான காரணம் பற்றிய கதை வருமாறு. இப் பகுதியினைச் சேர்ந்த நிலம் படைத்த உயர் சாதியினைச் சேர்ந்த ஒருவன் தன் நிலத்தில் விதைகளை விதைத்ததோடு காய்கறிச் செடிகளையும் நட்டான். மறுநாள் அவன் தன் நிலத்தில் விதைத்ததையும் நட்டதையும் காணாதவனாக வியப்புற்றான். இதற்கான காரணத்தைக் கண்டறிய அவன் அன்றிரவு தன் நிலத்திற்கு அருகிலேயே காவல் காத்தவனாக இருந்தான். அப்பொழுது அவன், ஆடையேதுமற்ற மக்கள் ஒரு பொந்திலிருந்து வெளிப்படக் கண்டான். அவர்களைத் துரத்திச் சென்ற அவன் ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் பிடித்தான். அவர்களுடைய வெட்கத்திற்குரிய நிலையைக் கண்ட அவன் தன் மேலாடையினை அந்த ஆணுக்கு உடுத்துக் கொள்ளத் தந்தான். அந்தப் பெண்ணுக்கு உடுக்கத் தர ஏதும் அற்ற அவன் தண்டங்கோரைப்

---

* கொச்சி இன இயல் கணக்கீடு தொடர்பான தனிக்கட்டுரை, *எண்.1,1905.* (Monograph Eth.Survey.Cochin No.1., 1905).

புல்லின் இலைகள் சிலவற்றை அவள் மீது வீசினான். தண்டப் புலையன்கள் குழிப் புலையன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரு குழியிலி ருந்து வெளிப்பட்டு வரக் காணப்பட்டமையே இதற்குக் காரணம். தண்டன் புலையர்களை அடிமைகளாகப் பெற்றுள்ள மாப்பிள்ளாக்களும் பிறரும் இவர்களைப் பருத்தி நூலாலான ஆடையணியும்படி வற்புறுத்தி வருவதால் தண்டாங் கோரைப் புல்லாடை வழக்கிழந்து வருகின்றது. மறைத்திரு டபிள்யூ. ஜெ. ரிச்சார்ட்ஸ் ஆலப்புழை அருகே கண்ணாப் புலையர் என்றழைக்கப்படும் புலையர் காணப்படுவதாகவும் அவர்கள் இவர்களைவிட நாகரிகமாக உடுப்பதாகவும் கூறியுள்ளார்.*

தண்டப் புலையன்கள் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை வழங்கி வருகிறது. தெற்கில் புலையர் மேற்கத்தியார், கிழக்கத்தியார் என இரு பிரிவினராக உள்ளனர். இவர்களுள் முன்னவர் துரியோதனன் அடிமைகள். பின்னவர் பாண்டவர்கள் அடிமைகள். மகாபாரதப் போரில் இவ்விரு பிரிவினரும் எதிரெதிர் அணியிலிருந்து போரிட்டனர். துரியோதனன் போரில்தோற்றதால் அவனது அடிமைகளும் தகுதியில் தாழ வேண்டியதாயிற்று.

1854-இல் விடுவிக்கப்படும்வரை இவர்கள் நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாக இருந்து வந்துள்ளதாகத் தெரிகின்றது. இன்றுங்கூட இவர்கள் வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரியவில்லை. இப்பொழுது இவர்கள் உரிமை பெற்றவர்களாக இருப்பினும் தொடர்ந்து பண்ணையார்களிடம் நாள் கூலியாக நெல்லினைப் பெற்றுக் கூலி யாக வேலை செய்து வருகின்றனர். ஒரு பண்ணையாரிடமிருந்து ஓடிப் போவார்களாயின் திரும்பவும் பிடித்து வரப்பட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஒரு பண்ணையாருக்கோ குடியானவனுக்கோ வயலில் வேலை செய்யச் சில புலையன்கள் தேவைப்பட்டால் அவர் பதினைந்து முதல் இருபது ரூபாய் வரை புலையன்களுக்கு அல்லது அவர்களை வழக்கமாகக் கூலிக்கு அமர்த்திக் கொண்டிருக்கும் பண்ணையாருக்குத் தந்து அவர்களுடைய பணியினைப் பெறுவார். இவ்வாறு கூலிக்கு அமர்த்திக் கொள்ளப்படும் புலையன் தன் புதிய எசமானனிடமிருந்து கூலியாக நாள் ஒன்றுக்கு இரண்டு இடங்கழி நெல் பெறுவான். அவனுக்கு முதலில் தரப்பட்ட ரூபாயினைத் திரும்பச் செலுத்தும்போதே அவன் அவரிடமிருந்து தன்னை மீட்டுக் கொள்ள முடியும். அத் தொகையினை அவனால் ஒருபோதும் செலுத்த

* இந்தியத் தொல்லியல், IX, 1880. (Ind.Ant.IX, 1880).

இயலாதாகையால் அவன் தொடர்ந்து அவருக்கு நிரந்தர அடிமையாகி விடுகின்றான். தனக்கென உடமைகள் ஏதுமில்லை என்பதனையும் எங்குச் சென்றாலும் தன்னுடைய கதி இத்தகையதாகவே இருக்கும் என்பதனையும் புரிந்துகொண்டுள்ள அவன் நாள்களை எண்ணியவனாகத் தனக்கு அதிகமான கூலியினை எதிர்பார்த்து வேறு இடங்களுக்கு செல்லும் எண்ணத்தைப் பற்றிய சிந்தனையற்று ஒரே பண்ணையாரின் கீழ் நிரந்தர அடிமையாகி விடுகின்றான். இதற்கு மாறாகப் பாலக்காட்டினைச் சேர்ந்த செறுமான்கள் சற்று அதிகமான உரிமை பெற்றவர்களாக உள்ளனர். பலர் வயநாட்டிற்கும் சிலர் கோலார் தங்கவயலுக்கும் சென்று நல்ல தொகையினை ஊதியமாகப் பெற்றுவருகின்றனர்.

தனக்குச் சிறு துண்டு நிலங்களைப் பயிரிடத் தரும் பண்ணையாருக்குக் கூலியாளாக தண்டப்புலையன் உழைக்கின்றான். அந்த நிலத்தில் உள்ள மரங்கள் பண்ணையாருக்கு உரிமை உடையனவேனும் அவன் அதில் தங்கி அவருக்காகக் கூலிவேலை செய்யும் காலம்வரை அதன் பயன்களை அனுபவித்துக் கொள்ளலாம். பண்ணையாரிடம் வேலையில்லாத சமயங்களில் அவர்கள் தங்கள் விருப்பம்போல் வேறொருவரிடம் சென்று வேலை பார்க்கலாம். தான் தொகை கடன்பெற்றுள்ள பண்ணையாருக்கு ஓராண்டில் ஆறு மாதங்கள் வரை அவன் வேலை பார்த்தாக வேண்டும். இவர்கள் சில சமயங்களில் தொடர்ந்து ஆண்டு முழுவதும் வேலை பார்க்க வேண்டி ஏற்படலாம். நெல்லை அறுத்துக் குதிரிலிட்ட பின் அதிகம் வேலை இராது. நெல் வயலை உழுதல், நீர் இறைத்தல், கரை கட்டல், களை பிடுங்குதல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் ஆகியனவே இவன் செய்வதற்குரியன. ஆண், பெண் சிறுவர், சிறுமியர் ஆகிய அனைவரும் கூடி வயலில் உழைக்கக் காணலாம். மழையிலும், வெயிலிலும் நாள் முழுதும் உழைத்த பின் இவன் தான் கூலியாகப் பெறும் நெல்லினை மாற்றுப்பிட்டிக எனப்படும் அருகிலுள்ள பண்டமாற்றுக் கடைக்கு எடுத்துச் சென்று ஒரு பகுதி நெல்லினைத் தந்து உப்பு, மிளகாய் முதலிய பொருள்களைப் பெற்று வந்தபின் எஞ்சிய நெல்லினைக் குற்றிச் சமைப்பான். தங்கள் பண்ணையாருடைய வயலில் பிறருடைய கால்நடைகள், கள்வர், காட்டு விலங்குகள் ஆகியன புகுந்து பாழ்படுத்தாதபடி இரவில் காவல்காக்க வேண்டிய பொறுப்பும் இவனுடையதே. இரவில் இவ்வாறு காவல் காக்கும்போது தூக்கம் வராதிருக்க உரக்கக் கத்தியபடியும், ஒரே சீரான குரலில் பாடியபடியும், முரசினை முழக்கியபடியும் இருப்பர். கள்ளினை வாங்கிக் கொடுத்தால் ஒரு புலையன் தொடர்ந்து நெடுநேரம் வேலை பார்ப்பான். சிறு குற்றங்களுக்காகக் கூட இவர்கள் அடிக்கடி சாட்டை அடிக்கு உள்ளாகின்றனர்.

ஒருவன் இவ்வாறு தண்டிக்கப்படுவானாயின் அவன், அவனைச் சேர்ந்தவர்களால் இழிவாக நடத்தப்படுவதோடு சமூகத்திலிருந்தும் விலக்கி வைக்கப்படுகிறான். சிலர் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்களாகத் தங்கள் தகுதியினை உயர்த்திக் கொண்டுள்ளனர். மற்றவர்கள் தாங்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவினால் தங்கள் மூதாதையரின் ஆவி சினமுறும் என அஞ்சுகின்றனர்.

தண்டப் புலையன்கள் சாதி புறமணக்கட்டுப்பாடு உடைய பல இல்லங்களாகப் பிரிவு பட்டுள்ளது. ஒரே இல்லத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மண உறவு வைத்துக் கொள்வதில்லை. இவர்கள் தங்கி வாழும் வீடுகள் மடம் என அழைக்கப்படும் நெல்வயல்களுக்கிடையே கழிகளை நட்டு அமைக்கப்பட்ட வசதிகள் ஏதுமற்ற குடிசைகளே. நாணல், மூங்கில் தட்டி, சேறு ஆகியனவற்றைக் கொண்டு சுவர் அமைக்கப்பட்ட இந்தக் குடிசைகள் தென்னோலைகளால் வேயப்பட்டிருக்கும். சில மண்பாண்டங்கள், மூங்கிலாலான தட்டுமுட்டுச் சாமான்கள், தேங்காய்ச் சிரட்டைகள் ஆகியனவே இவர்களின் உடமைகள். இவர்கள் கடைவீதியினுள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை யாகையால் தூர நின்றே பொருள்களை வாங்கவோ விற்கவோ செய்வர்.

புலையர் சிறுமியர் பூப்படைந்த பின்னர் அல்லது அதற்கு முன்னர் மணம் செய்விக்கப்படுகின்றனர். எனினும் ஏழு அல்லது எட்டு வயதாகும்போது ஒவ்வொரு சிறுமிக்கும் தண்டக் கலியாணம் என்ற சடங்கினை நடத்துகின்றனர். அப்போது நல்ல நேரத்தில் ஒருத்தி அச்சிறுமிக்கு தண்டங்கோரையாலான உடையினை உடுத்தி விடுவாள். அந்த சிறுமியின் உறவினருள் ஒருத்தி அல்லது இதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டவள் இச் சடங்கினைச் செய்வாள். அப்போது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மீன், கள் முதலியவற்றோடு கூட விருந்திடுவர். இச் சடங்கிற்கு முன் அச் சிறுமி ஒரு கமுகின் பட்டையினைத் தவிர வேறு உடையேதும் அணியாதவளாகவே இருந்து வருவாள்.

திருமணச் சடங்கின்போது அணிவிக்கப்படும் தாலிக்காக இவர்கள் சங்கினையே பயன்படுத்துகின்றனர். நல்ல நேரத்தில் மணமகள் கழுத்தில் இது அணிவிக்கப்படும். அவளை அவளுடைய பண்ணையாரிடம் அழைத்துச் செல்வர். அவர் அவளுக்காகக் கொஞ்சம் நெல்லும் அவள் தன்னை எந்தத் தென்னை மரத்தினடியில் விழுந்து வணங்கினாளோ அந்தத் தென்னை மரத்திலுள்ள காய்களையும் வழங்குவார். அவளை மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வதற்கான நேரம் நெருங்கியவுடன் அவளுடைய தாய்மாமன்களுள் ஒருவன்

அவள் கரத்தைப் பற்றி அவளை மணமகனுடைய தாய்மாமன்களுள் ஒருவன் கரத்தில் தருவான். மணம் முடித்த மூன்றாம் நாள் அவளும் தந்தையுடன் பிறந்தவர்களும் தாய்மாமன்மாரும் மணமகன் இல்லம் செல்வர். அங்கு அவர்கள் உபசரிக்கப்படுவர். அங்கிருந்து மணமக்களை அழைத்துக் கொண்டு மணமகள் இல்லம் திரும்புவர். மணமகள் இல்லத்தில் மணமக்கள் மூன்று நாள்கள் தங்கியிருப்பர். ஒரு திருமண உறவு மகிழ்ச்சியுடையதாக இருக்குமா என அறிந்துகொள்ள ஒரு சங்கினைச் சுழற்றிவிடுவர். அது வடக்கே சென்று விழுமானால் அதனை மிக நல்ல சகுனமாகக் கொள்வர். கிழக்கிலும் மேற்கிலும் விழின் ஏற்ற சகுனமாகவே கருதுவர். தெற்கே சென்று விழுந்தால் கெட்ட சகுனமாகவே கருதுவர்.

தண்டப் புலையர் மக்கள்தாய உடமை உரிமை முறையினையே பேணுகின்றனர். இவர்களுக்கெனச் சாதிச் சபைகள் உள்ளன. ஒருத்தி தவறான நடத்தையில் ஈடுபட்டாள் எனத் தெரியவரும்போதும், திருட்டு ஒன்று நடந்துள்ளது என்பது அறியப்படும் போதும் சாதிச் சபையினர் கூடி அக் குற்றம் பற்றி விசாரிப்பர். சபையில் அனைவரும் சமமாகவே மதிக்கப்படுகின்றனர். யாரையும் தகுதியில் உயர்ந்தவராகக் கருதி அங்கு மதிப்பதில்லை. குற்றம் புரிந்தவர்கள் கதிரவனை நோக்கிக் கைகளை உயர்த்திச், "சூரியபகவான் சாட்சியாக நான் இதனைச் செய்யவில்லை" என்பர். "என் கண் அவிந்து போகட்டும்," "என் தலையில் இடி விழட்டும்" என்ப போலவும் சத்தியம் செய்வர்.

எல்லா நோய்களும் தீய தேவதைகளின் சினத்தாலேயே வருகின்றன என இவர்கள் நம்புகின்றனர். ஒரு மந்திரவாதியின் உதவியினை நாடி நோயினைத் தந்த சிறு தெய்வத்தோடு தொடர்பு கொண்டு நோயிலிருந்து விடுபடப் பார்ப்பர். இதற்காக அழைக்கப்படும் மந்திரவாதி நெருப்பை மூட்டி அதன்முன் அமர்வான். பாடியவனாகவும் மந்திரங்களைக்கூறியவனாகவும் அவன் தன்னிடம் உள்ள கொக்கரவினைத் தட்டி ஒலியெழுப்புவான். அப்போது தீய ஆவியின் தாக்குதலுக்குள்ளானோர் தங்களை அறியாது ஆடத் தொடங்குவார். கோழி, ஆடு முதலியவற்றைப் பலியாகப் பெற்ற பின் அவர்கள் மீது ஏறியுள்ள துர்தேவதை அவர்களை விட்டு நீங்கும். சில சமயங்களில் உரசிக் கொட்டுக என்ற சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. குடிசைக்குத் தொலைவில் ஓரிடத்தில் கோழி ஒன்றின் குருதி கொட்டப்பட்ட

வாழையிலையினை விரித்துப் போடுவர். மற்றொரு சிறிய இலையில் சுண்ணாம்பும் மஞ்சளும் அதனருகே வைக்கப்படும். இவ்வாறு இட்டுவைக்கப்பட்டிருப்பது யாருடைய கண்ணில் முதலில் படுகிறதோ அவர்கள் மீது அந்தத் தீய ஆவி எறிக் கொள்ள முதுலில் தீய ஆவிக்கு ஆட்பட்டிருந்தவர் நோயிலிருந்தும் விடுதலை பெறுவார். ஒருவன் நோயுற்றால் மந்திரவாதியினைக் குடிசைக்கு அழைப்பர், மாலையில் குடிசைக்கு வரும் அவனுக்கு உணவு, கள், வெற்றிலை முதலியன வழங்குவர். இளநீர், கமுகம் பாளை, அரிசி மாவு ஆகியன அவனிடம் கொடுக்கப்படும். அரிசி மாவினை அவன் தென்னோலையால் மூடுவான். அவற்றின் முன் நோயுற்றவனை அமரச் செய்வர். அவனைச் சுற்றி ஒரு வட்டம் வரையப்படும். வட்டத்திற்கு வெளியே இரும்பாலான எழுத்தாணிகளைத் தரையில் குத்தி வைப்பர். தீய ஆவி இப்பொழுது அந்த வட்டத்திற்குள் சிறைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. நோயுற்றவன் "நான் பேய், என்னை அவன் அடிக்கின்றான்" என்பன போன்றவற்றைக் கூறிக் கத்துவான். ஒரு கோழி அல்லது ஆட்டைப் பலியாகப் பெற்றுக் கொண்டு போய்விடுமாறு அந்தப் பேயிடம் கூறுவர். சில சமயங்களில் மந்திரவாதி நோயுற்றவன் இல்லத்திற்கு வரும்போது வீட்டு வாசலில் அரிசித் தட்டில் மூன்று வெற்றிலை, பாக்கு, நெல், துளசி, விபூதி, சங்கு, சோழி ஆகியனவற்றை இட்டு வைத்திருப்பர். மந்திரவாதி அந்தத் தட்டின் முன் அமர்ந்து தீய ஆவியின்ன வழி பட்டவனாகச் சங்கினைக் கையிலேந்தி நான்கு திசைகளையும் நோக்கி நிற்பான். பின்னர் நல்ல சகுனம் நிகழ்கின்றதா எனப் பார்த்துத் தன் இரும்புச் சேகண்டியினைக் கையில் எடுத்து அதனை அடித்தபடி முல்லுவன், கரிங்காளி, அய்யினான், வில்லி ஆகிய தேவதைகளின் பெயர்களைக் கூறுவான். பின் தன் கொட்டுக்கு ஏற்பச் சுற்றி ஆடுவான். இவ்வாறு தேவதைகளின் பெயரைக் கூறி அழைப்பதும் ஆடுவதும் மாலை முதல் மறுநாள் நடுப்பகல் நேரம்வரை கூட மாறிமாறித் தொடர்ந்து நிகழ்த்தப்படுவதுண்டு. இச் சமயத்தில் நோயுற்றவன் தான் ஏதோ பாவத்தைப் புரிந்தவனாகக் கருதித் தான் செய்த குற்றங்கள் சிலவற்றைப் பற்றிய உண்மையினைக் கூறுவான். அதற்காக அவனுக்குச் சிறுதொகையினைத் தண்டமாக விதிப்பர். அவன் அதனைச் செலுத்தியவுடன் அத் தொகை அங்குக் கூடியுள்ளவர்களுக்குக் கள்ளுக்காகச் செலவிடப்படும். தங்கள் பகைவர்கள் அல்லது மற்றவர்களுக்கு மரணத்தை உண்டு பண்ணத் தண்டப் புலையர் மரணகிரியைகள் என்ற சடங்கினைச் சில தேவதைகளுக்கு நிகழ்த்துகின்றனர். தங்களோடு பகைகொண்டவர்களைத் தீங்குறச் செய்வதற்கான மந்திரங்களைப் பனையோலையில் எழுதி அதனை அவர்கள் வீட்டருகிலோ கிணற்றருகிலோ புதைத்துத் தீங்கினை உண்டாக்கும் வழிமுறைகளையும் சிலபோது மேற்கொள்கின்றனர். இத்தகைய ஏவலினைக்

கண்டு களைய வேறொரு மந்திரவாதி அழைக்கப்படுவான். அவன் மேற்கூறிய புதைக்கப்பட்ட ஓலையினைத் தோண்டி எடுத்து அழிப்பான்.

சாதியினைச் சேர்ந்த ஒருவன் விபத்தில் உயிரிழப்பானாகில் ஒருவன் கோழி ஒன்றினையும் வாளினையும் கையில் ஏந்தியவனாக, மற்றொருவனைத் தோண்டப்பட்டுள்ள குழியினுள் இறங்கி நிற்கச் செய்து, தீப்பந்தம் ஒன்றினை எந்தியவனாக மும்முறை அவனைச் சுற்றி வருவான். ஓரிரு மணிநேரங்களுக்குப் பின் குழியில் நிற்பவனை வெளியேற்றுவர். அவனைத் தொலைவில் ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று சில சடங்குகளை நிகழ்த்துவர்.

பிராமணர்களுக்குரிய கோயில்களில் உள்ள தெய்வங்களைக் கால் மைல் தூரம் தூர இருந்தே தண்டப் புலையர் வழிபடுகின்றனர். தலையில் ஒரு கல்லினை நட்டு அதன்மீது இளநீரையும் சில புத்தன் காசுகளையும் வைப்பர். கோயிலைச் சேர்ந்த ஊழியன் ஒருவன் இவற்றைக் கோயில் புரோகிதரிடம் கொண்டு சேர்ப்பான். அவன் அவற்றைப் பெற்று கொண்டு, சந்தனம், தீர்த்தம், மலர்கள் ஆகியனவற்றை அந்தப் பணியாளன் வாயிலாகக் கொடுத்து அனுப்புவான். முன்பே கூறியபடி இவர்கள் தீய தேவதைகள், மூதாதையரின் ஆவிகள் ஆகியவற்றையும் வழிபடுவர். தாங்கள் வழிபடும் பித்தளைத் தகட்டில் உள்ள ஆண், பெண் உருவங்களில் பேய்கள் ஏறியுள்ளன என நம்புகின்றனர். கண்டகர்ணன், கொடுங்காளி, பைரவன், அருகோல ஆகிய தீய ஆவிகளை மற்ற ஆவிகளோடும் சிறிய குடிசைகளினுள் கற்களில் எழுந்தருளச் செய்து இவர்கள் வழிபடுகின்றனர். மே மாதத்தில் பல நாள்கள் நீட்டிற்கும் ஒரு திருவிழாக் கொண்டாடப்படுகின்றது. சாமந்தி, தும்பை ஆகிய மலர்கள் இந்த வழிபாட்டின் போது பயன்படுத்தப்படுவதோடு நெல், அவல், இளநீர், கள் முதலியவற்றையும் படைப்பர். ஆண்களும் பெண்களும் முழவினை முழக்கிப் பாடி ஆடுவதோடு கள்ளில் மயங்கியவர்களாக இருப்பர். இவர்களால் அஞ்சு தம்புராக்கள் என அழைக்கப்படும் பாண்டவர்கள் இவர்களுடைய சிறப்பான வழிபாட்டுக்குரிய தெய்வங்கள். தீயதேவதைகளை ஒட்ட இவர்கள் பல வழிமுறைகளைக் கையாளுகின்றனர். மந்திரங்கள் எழுதப்பட்ட பனையோலைகளைச் சுருட்டிச் சிலர் கழுத்தில் அணிகின்றனர். சிலர் சிறு தேவதைகளுக்கான படையலோடு கூடிய கூடைகளை வயலில் தொங்கவிட்டு அத் தேவதைகளிடம் தங்கள் பயிரைக் காக்கும்படி வேண்டுவர். அடர்ந்த

காடுகளில் மாடனும் காளியும் உறைவதாக நம்பும் இவர்கள் அங்கு அத் தேவதைகளை வழிபடுவர். பணிப் பளு குறைவாக உள்ள நவம்பர் முதல் எப்ரல் வரையான மாதங்களில் தண்டப் புலையர், குடிசைகள் தோறும் ஆடிப்பாடிச் சென்று படையலுக்கான கோழி முதலியன வாங்கத் தேவையான வற்றை இரந்து பெறுவர். கூடி ஆடுதல் இவர்களுக்கு விருப்பமான ஒன்று. இரவில் நெருப்பினை எரிய விட்டு அதனைச் சுற்றிக் கூடியாடுவர். கையில் கழிகளைத் தாங்கியவர்களாக ஆட்டக்காரர்கள் தங்கள் பாட்டுக்கு இயைய அடியிட்டு வேகமாக ஆடியபடி நெருப்பினைச் சுற்றி வருவர். அப்போது அவர்கள் குனிந்தும் நிமிர்ந்தும் கால்களிலும் தலையிலும் அடிபடாதபடி ஒருவருடைய கழியினை மற்றவர்களுடைய கழியோடு மோதுவர்.

இறந்தவர்களைப் புதைக்கும் இவர்கள் புதைகுழியினைச் சுற்றித் தீப்பந்தங்களை நட்டு வைப்பர். இறந்தவர்களின் உறவினர்கள் மூன்று பிடி அரிசியினைப் புதைகுழி மீது வீசுவர். புதைகுழி அருகே அரிசி மாவாலும் நெல்லாலும் சிறு மேடைகள் அமைத்து அவற்றின்மீது எரியும் பந்தங்கள் அல்லது திரிகளை வைப்பர். துக்கம் கொண்டாடும் இறந்தவனுடைய மகன் ஒரு பானையில் தண்ணீரைச் சுமந்தபடி புதைகுழியினைப் பலமுறை சுற்றி வருவான். பின் அதனைப் புதைகுழியின் தலைமாட்டிலிட்டு உடைப்பான். புதைகுழியின் நான்கு மூலைகளிலும் சில அரிசி மணிகள் இடப்படும். நரிகள் நெருங்காதிருக்க மந்திரிக்கப்பட்ட கிளிஞ்சல் ஒன்று புதைகுழி மீது வைக்கப்படும். இதனால் இறந்தருடைய ஆவியும் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காது காக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் காலையில் துக்கம் கொண்டாடுபவன் புதைகுழிக்குச் சென்று அங்குப் பொங்கல், எள், தர்ப்பை ஆகியனவற்றை வைத்து வருவான். பதினான்காம் நாளன்று அவன் எண்ணெய் தேய்த்துக் குளிப்பான். அதற்கும் மறுநாள் கரை (ஊர்)யைச் சேர்ந்த புலையன்கள் விருந்துண்டு முரசினை முழக்கிப் பாடுவர். பதினாறாம் நாளன்று தீட்டு நீக்குவர். அப்போது இறந்தவருடைய மகன் சோற்றுண்ருண்டைகளை இறந்தருக்குப் படைப்பான். விருந்தினருக்கு உணவளிக்கப்படும். விருந்தினர் பாட்டுப் பாடித் தங்களை மகிழ்வித்தவனுக்குச் சிறுதொகையினை அன்பளிப்பாக வழங்குவர். இறந்துபோனவருடைய ஆவிக்கு இதேபோன்று மீண்டும் ஆடி மாதம் அமாவாசையன்று சோற்றுருண்டைகளைப் பலியாகத் தருவர். தீட்டு காலத்தில் துக்கம் மேற்கொண்டவன்- இறந்தவன் மகன்- தன்னுடைய உணவினைத் தானே சமைத்துக் கொள்ள வேண்டும். இறந்துபோனவருடைய ஆவிகள் சாவர் என அழைக்கப்படுகின்றன. இவை நெருங்கிய உறவினர்களுடைய கனவில் வரும். அவர்கள் இரவில் கனவில்

கண்டவைகளை மறுநாள் காலையில் அனைவரிடமும் கூறுவர். இறந்தவர்களோடு கனவில் உரையாடியதாகக் கூட அவர்கள் கூறுவர். மறைத்திரு டபிள்யூ.ஜெ. ரிச்சார்ட்ஸ் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:* "முயல்களை அடைக்கும் சிறிய அறையினை ஒத்த ஒரு கோயிலினை நான் கண்டேன். அதனுள் இறந்து போனவர்களுடைய ஆவிகள் வந்து தங்கி ஓய்வுகொள்ள ஒரு பலகை போடப்பட்டிருந்தது. ஆவிகள் உப்பங்கழிகளில் மீன்பிடிப்பதாக நம்பப்படுகின்றது. நீர்ப் பரப்பின்மேல் சிலசமயங்களில் காணப்படும் ஒளிமினுக்கலைக் கொண்டு அத்தகைய ஆவிகள் நீர்ப் பரம்பின்மேல் உள்ளன என்பதனைக் கண்டுகொள்ளலாம்."

உள்ளாடர், பறையர் ஆகியோருடைய இல்லங்களில் தண்டப் புலையர் உண்பதில்லை இவர்கள் பிராமணர்களிடமிருந்தும் பிற உயர்சாதியாரிடமிருந்தும் தொண்ணூறு அடி தூரத்தில் விலகி நிற்கக்கடமைப்பட்டவர்கள். உயர்ந்து வளர்ந்திராத இவர்கள் கறுத்த தோலுடையவர்கள். செறுமான் சாதிப் பெண்களைப் போலவே இவர்களும் காது, கழுத்து, கை, விரல் ஆகியவற்றில் நிறைய மலிவான அணிகளை அணிந்து கொள்வர்.

தப்பட்டை - Thappatta (drum)

ஒட்டேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

தாதன் - Thathan (a Vaishanavite medicant)

தெலுங்குத் தாசரிக்கான பெயரோடு ஒத்த பெயர்.

தாடிச் செட்டு - Thatichetty (palmgra palm)

கர்ண சாலே, ஒட்டேகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய பெயர்.

தாவடதாரி - Thavadadari

பறையர்களின் பூசாரிகளான வள்ளுவரின் ஒரு பிரிவினருக்கான பெயர். இவர்கள் துளசிமணிகளாலான மாலைகளை அணிகின்றனர். (தாவடம் - கழுத்து மணிமாலை;தாரி - அணிபவர்.) துளசி இந்துக்களுக்குப் புனிதமான ஒன்று. இதன் கட்டையால் பாசிகள் செய்து அதனை மாலையாக்கிக் கழுத்தில் அணிந்து கொள்வர்.

---

* இந்தியத் தொல்லியல், IX, 1800, (Ind.Ant.,IX, 1800.)

தேளு - Thelu (scorption)

தேளு, தேள் என்பன பத்ம சாலே, மாதிகர் ஆகிய சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலப் பெயராகப் பதியப்பட்டுள்ளன. கன்னடத்தில் இதற்குச் சமமான சேளு குருபர்களின் குலம் ஒன்றின் பெயராக உள்ளது.

தெனிகெ பூவ்வ - Thenige Buvva

திருமணத்தின்போது தெய்வத்திற்கு தட்டில் உணவு (பூவ்வ) படைக்கும் மாதிகர் சாதியின் உட்பிரிவினருக்கான பெயர்.

திக்க - Thikka (simpleton)

எளியன் எனப் பொருள்படும் இது குருபரின் ஓர் உட்பிரிவு.

திப்ப - Thippa

கர்ண சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். குப்பைக் குவியல் எனப் பொருள்படுவது.

தோகைமலைக் குறவர் - Thogamalai Korava

சென்னை மாநிலத்தின் தென் மாவட்டங்களில் திருடர்களின் சாதி ஒன்றுக்கான மற்றொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.*

குறவர்களைப் பற்றி அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஒரு குறிப்பில் திரு எப். பாவ்செட் கூறியுள்ளது வருமாறு: "காவல் துறையினரால் பொதுவாகக் குறவர் என அழைக்கப்படுகின்றன எல்லோராலும் நன்கு அறியப்பட்ட திருட்டுக் கூட்டத்தாரான தோகைமலைக் குழுவினர் குறவர்களல்லர். இது வெளியார் யாரை வேண்டுமாயினும் தங்களோடு சேர்த்துக் கொள்ளும் ஒரு திருடர் குழுவேயாகும். இவர்கள் தங்கள் பெண்களைச் சாதிக்கு வெளியே மணம் செய்து கொடுப்பதோடு வேறு சாதிகளைச் சேர்ந்த குழந்தைகளையும் தத்து எடுத்துக் கொள்கின்றனர்."

தொகரு - Thogaru (litter)

மூசு கம்மர் சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

---

* எப்.எஸ். முல்லலெ - சென்னை மாநிலத்தைச் சேர்ந்த குற்றம்புரி வகுப்பார்.
(F.S.Mullaly - Criminal classes of the Madras Presidency)

தோக - Thoka (tail)

வாலிறகு எனப் பொருள்படும் இது யெருகலர் சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

தொண்ட - Thonda (cephalendra indica)

தொண்டைக்கொடி எனப் பொருள்படும் இது மூசுகம்மர் சாதியின் புறமணக் கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயராகும். சணப்பர் சாதியின் கோத்திரம் ஒன்றின் பெயராகவும் உள்ளது. இப் பிரிவுகளைச் சேர்ந்தவர் கோவைக்கொடியின் இலைகளையோ பழங்களையோ பயன்படுத்துவதில்லை.

தும்ம- Thumma (babul: Acacia arabica)

கருவேல மரம் எனப் பொருள்படும் இது மாலர், பத்ம சாலே சாதியினரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயராக உள்ளது. இம் மரத்தின் பட்டை, காய் இலை ஆகியன தோல் பதனிடுவோரால் தோலைப் பதப்படுத்தப் பயன்படுகின்றன.

தூமு - Thumu (iron measure for measuring grain)

இரும்பாலான படிக்குப் பெயர். முத்ராசர் சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின் பெயர்.

துப - Thupa (ghi)

நெய் எனப் பொருள்படும். இது குருபர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

தூர்பு - Thurpu (eastern)

இது எருகலர், ஏனாதியர் சாதிகளின் உட்பிரிவு. கிழக்கத்திய எனப் பொருள்படும்.

தூட - Thuta (hole)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

தீகலர் - Tigala

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தீகலர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளவை வருமாறு: தமிழ்ப் பேசும் பள்ளி சாதியாருக்கு

உரிய கன்னடப் பெயர். கன்னடம் பேசுவோர் இதனைத் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த தமிழ்ச் சூத்திரர்களுக்கும் உரிய பெயராகப் பயன்படுத்துகின்றனர். "மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த சில பகுதிகளில் தமிழ்மொழி தீகலு என வழங்கப்படுகின்றது. கன்னடியர்களான மாத்வ பிராமணர்கள் தமிழ்நாட்டு ஸ்மார்த்த பிராமணர்களைத் தீகலரு எனக் கூறுவர்.

மைசூரில் சென்று குடியேறியுள்ள தீகலர் சிலர் தங்கள் தாய்மொழியினை மறந்தவர்களாகக் கன்னடமே பேசிவந்தாலும் மற்றவர்கள் - பெங்களூரைச் சுற்றி வாழ்பவர்கள் - தமிழையே இன்னமும் பேசி வருகின்றனர். தலையின் அமைப்பில் இவர்கள் நீண்ட தலையினையுடைய பள்ளியருக்கும் குறுகிய தலைக்குச் சற்றே நீண்ட தலையை உடைய கன்னட வகுப்பாருக்கும் இடைப்பட்டவர்களாக உள்ளனர்.

தீகலருக்கும் தமிழ்ப் பள்ளிகளுக்கும் தலையமைப்பின் இடையேயான வேறுபாடுகளை அவர்களுடைய தலையின் நீள அகல எண்களைக் கொண்ட பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்தும்.

அ. தீகலர்	ஆ. பள்ளியர்
68 &	64 &
69	65
70	66
71 &	67 &&
72 &&&&&	68 &
73 &&&&	69 &
74 &	70 &
75 &	71 &&&&
76 &&&&&	72 &&&&&
77 &&&&	73 &&&&&&&
78 &&&&&	74 &&&&
79 &&&	75 &&&&&&&&
80 &&&	76 &
81 &&&&	77 &
82 &	78 &
83	79 &&
84 &&	80 &

காய்கறித் தோட்டங்கள் போட்டுச் சந்தைகளில் காய்கறிகளைக் கொண்டுவந்து விற்கும் இவர்கள் வெற்றிலைக் கொடிக்காலும் பயிரிடுகின்றனர். உள்ளி (பூண்டு) இலை, அரவ (தமிழ்) என்ற மூன்று பிரிவுகள் இவர்களிடையே இருப்பதாகத் தெரிகிறது. உள்ளி தீகலரிடையே பூதங்கள் அல்லது புகழ்பெற்ற மூதாதையர்களின் பெயரில் அமைந்த பல குலப் பிரிவுகள் உள்ளதாகத் தெரிகின்றது. அவற்றுள் சில வருமாறு:-

1. லக்கம்மா*:*

தோட்டத் தேவரு
தொட்ட தேவரு *(*பெரிய தெய்வம்*)*
தொட்ட நரசய்யா
தொட்ட நஞ்சப்பா

2. எல்லம்மா*:*

நரசய்யா
முத்தண்ண

3. சித்தெ தேவரு

தீகலருக்கு சாதித் தலைவன் ஒருவன் உள்ளான். இப் பதவி பரம்பரை உரிமையுடையது. முத்ரே என்ற சாதியினைச் சேர்ந்த ஒருவன் இவனுக்கு உதவியாளனாக உள்ளான். கோணி மரக்கட்டை அல்லது முத்ரே கோணி மரக்கட்டை என்று அழைக்கப்படும் இடத்தில் சாதியாரின் சபைக் கூட்டங்கள் நடப்பது வழக்கம். கோணி (*Ficus mysorensis*) கல்லால மரமாகும். இதன்கீழ் வட்டவடிவமாக அமைக்கப்பட்ட மேடையில் வந்து கூடும்படி முத்ரேயினால் சாதியினைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்படுவர். இந்த மரமும் மேடையும் புனிதமானவையாகக் கருதப்படுகின்றன. சாதிச் சபையின் உறுப்பினர்கள் மரத்தின் முன் விரிக்கப்பட்ட கம்பளியில் வந்து அமர்வர்.

வன்னியரான பள்ளியரைப் போல தீகலரும் தங்களை அக்னி வன்னி என அழைத்துக் கொள்வதோடு அக்னியிலிருந்து தோன்றிய வீரனான அக்னி பன்னிராய என்பவன் வழியில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். பம்பாய் மாநிலத்தில் சென்று தங்கி வாழும் தீகலர் பற்றிய ஒரு குறிப்பில்*

* இன இயல் கணக்கீடு தொடர்பான தனிக் கட்டுரைகள், பம்பாய், எண்*.93* தீகலர்*, 1907*
(Monograph, Eth.SUrvey, Bombay, No.93, Tigala, 1907).

கூறப்பட்டுள்ளதாவது: ''இவர்கள் சென்னை மாநிலத்திலிருந்து வந்து மைசூரில் குடியேறிய தமிழ்ப் பள்ளிகளின் ஒரு பிரிவினர் ஆவர். பள்ளிகளைப் போலவே இவர்களும் தங்களைச் சத்திரிய குலத்தவர் எனக் கூறிக் கொள்கின்றனர்.'' தீகலர் தங்கள் வசம் வைத்திருக்கும் கையெழுத்துச் சுவடியொன்றினைக் காஞ்சிவரத்திலுள்ள சாசனம் ஒன்றின் நகல் எனக் கூறுவர். அதிலிருந்து எடுக்கப்பட்டதே பின்வரும் சுருக்கம்: இது காஞ்சியில் குடிகொண்டுள்ள தெய்வமான வரதராசரின் கட்டளையின்படி அஸ்வத்த நாராயணசுவாமி வெளியிடும் காஞ்சி சாசனமாகும். மகாபுருஷனான அக்னி பன்னிராயரின் வழித் தோன்றல்கள் தங்கள் குலத்தின் மூதாதையான பன்னிராயனின் தோற்றம், செய்கை, கோத்திரம் முதலியவற்றை அறிந்து கொள்வதற்காக இந்தச் சாசனம் வெளியிடப்படுகிறது. இந்தப் பன்னிராயன் அக்னியிலிருந்து தோன்றியவனாவான். இதனால் இவன் வேதங்களையும் வேதாந்தங்களையும் படைத்தவரும், பெரியதும் சிறியதுமான எல்லா உலகங்களுக்கும் தலைவரும், சங்கு சக்கரம் தாங்கியவரும் பல கண்களையும் பல கைகளையும் உடைய விட்டுணுவுக்கு மிகவும் பிரியமுடையவனாவான் . . . . . திருமூர்த்திகளிடமிருந்தும் தேவர், முனிவர் ஆகியோரிடமிருந்தும் வரங்களைப் பெற்றவனான அக்னி பன்னிராயனுடைய இச் சாசனத்தைத் தரிசிப்பவர்களும் வழிபடுபவர்களும் பல நற்பேறுகளும் தனதானியங்களும் மக்கட்பேறும் வாய்க்கப் பெறுவர்.

இந்தச் சாதியினைப் பற்றி இழிவாகப் பேசுபவர்கள் பன்னிராயன் திருமூர்த்திகள், ரிஷிகள், தேவர்கள் ஆகியோருடைய சாபத்திற்கு ஆளாவர். இந்தச் சாசனத்தில் பெருமை வருமாறு: கருநாடகத்தைச் சேர்ந்த தீகலர் இந்தப் புராணத்தை வைத்திருப்பதோடு வழிபடவும் செய்வார்களாயின் தேவர் (சுரபடவி) நிலையினை அடைவர். இந்த வழிபாடு ஆயிரம் லிங்கங்களை வழிபட்டதற்கும், இலட்சம் பசுக்களைத் தானமாகத் தந்ததற்கும் நூறு கன்னிகாதனம் செய்ததற்கும் சமமானதாகும். தீகலர் திருமணம் ஒன்றின்போது பள்ளியருக்கும் தீகலருக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவின் காரணமாகக் கன்னட நாட்டிற்கு இச் சாசனம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது. தீகலர் தங்களுக்குரிய பல விருதுகளைக் கொண்டு வந்து யாவரும் காண வைக்கக்கூடாது எனத் தடைசெய்யப்பட்டனர். இந்தச் சாசனத்தை ரூ.215 செலவு செய்து தங்கள் உரிமையினை நிலைநாட்டத் தீகலர் கொண்டு வந்தனர். பின்னர் இத்தொகை பள்ளியரிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

ஹொலையர் சாதியின் ஒர் உட்பிரிவாகவும் தீகலர் என்பது உள்ளது.

திக்கே - Tikke (gem)

மணி எனப் பொருள்படும் இது குர்ணிகளின் ஒரு கோத்திரம்

தீக் கொல்லன் - Ti (Fire) (Kollan)

கொல்லரின் ஓர் உட்பிரிவு

தீண்டா - Tinda (polluting)

கணிசன்களின் ஓர் உட்பிரிவு. தீண்டாக் குருப்பு என்பது தொடாத ஆசிரியன் எனப் பொருள்படும். இது காவுதியரான அம்பட்டன் சாதியாருக்குரிய மற்றுமொரு பெயராகும்.

தீப்புரம் - Tiperam (ti, fire)

இரும்படிக்கும் கொல்லரின் ஓர் உட்பிரிவு.

திரகதி கண்டலவாலு - Tiragati Gantlavallu

விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டில் சிறு ஆலைகளைச் சரிபார்த்துக் குறைகளைவோர் எனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் கலைமான்களை வேட்டையாடி அதன் தோலினை விற்பர். இந்த வேட்டைக்கு விளக்குகளையும் மணிகளையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

திர்ல செட்டி - Tirlasetti (the name of the Balaja Chetti)

ஏனாதியரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

திருமல்பாடு - Tirumalpad

"திருவாங்கூரில் உள்ள நான்கு சத்திரியர் பிரிவினுள் திருமல்பாடுகளும் ஒரு பிரிவினராவர். இதனுடைய நேர்பொருள் அரசரின் முன் அவர் ஆணைக்குக் காத்திருப்போர் என்பதாகும். இடைக்காலத்தில் திருமல்பாடுகள் படைத்தலைவர்களாக இருந்துள்ளனர்" எனத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. திரு விக்ரம் மலபார் சட்டமும் வழக்கும் என்ற தன் நூலுள் திருமல்பாடுகளை அரச குடும்பத்தினர் எனக் கூறியுள்ளார். *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திருமல்பாடுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "சாமந்தர், சத்திரியர் என்று இரண்டு பிரிவினராகத் திருமல்பாடுகள் பிரிவுபட்டுள்ளனர். முன்னவருடைய பழக்கவழக்கங்கள் ஏராடியரையும் நெடுங்காடியரையும் அப்படியே பின்பற்றுவனவாக உள்ளன. இவை

அனைத்துமே ஒன்றுக்கொன்று மாற்றாக வழங்குவதற்குரிய பெயர்களே. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களை ஏராடிய எனவும் திருமல்பாடு எனவும் அழைத்துக் கொள்வர். சத்திரியரான திருமல்பாடுகள் பூணூல் அணிகின்றனர். இவர்கள் மேற்கொள்ளும் சடங்குகள் பிராமணர்கள் நிகழ்த்தும் சடங்குகளை ஒத்தவை. பிராமணர்களைப் போலவே இவர்கள் உடையணிகின்றனர், எனினும் இவர்கள் நாயர்களைப்போல தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரு சடங்குகளையும் தனித்தனியே நடத்துகின்றனர். இவர்கள் சாதிப் பெண்கள் நம்பூத்ரி சாதியினரோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதை விரும்புகின்றனர். திருமணம் செய்துகொள்வதாயின் கணவர்களைத் தங்கள் சாதியிலிருந்தே தேடிக் கொள்கின்றனர். நாயர்களிடையேயும் சாமந்தரிடையேயும் இருப்பதைப்போலவே இவர்களிடையேயும் மருமக்கள் தாய உடைமை உரிமை முறை பேணப்படுகின்றது. இச் சாதியினைச் சேர்ந்த பெண்களே பொதுவாக நம்பூத்ரிகளுக்கு மனைவியராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இச் சாதிப் பெண்கள்நாயர் சாதிப் பெண்களைப் போலவும் சாமந்தர் சாதிப் பெண்களைப் போலவும் நம்பூத்ரிகளைத் தீட்டுக்கு உள்ளாக்குவதில்லை. இத்துடன் நம்பூத்ரிகள் இவர்கள் சமைக்கும் உணவினையும் உண்கின்றனர். இச் சாதிப் பெண்கள் நம்பஸ்டாத்ரிகள் எனப்படுகின்றனர்.''

தம்பான்கள் மற்றும் திருமல்பாடுகள் ஆகியோர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் *1901* திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கைக்குக் கடப்பாடுடையேன். ''தம்பான்கள் மற்றம் திருமல்பாடுகள் மலபார் சத்திரியர் என்ற பிரிவில் அடங்குவர். தம்பான் என்பது தம்புரான் என்பதன் சுருங்கிய வடிவமாகும். ஒரு காலத்தில் இச்சொல் ஆட்சி செய்பவர்களைக் குறிக்கவும் வழங்கியுள்ளது. இளையேடட்டு சுவரூபம் இவர்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கியபின் இவர்கள் தம்புரான் என்ற பொறுப்பிலிருந்து தம்பான் என்ற நிலைக்குத் தாழ்ந்தனர். இவர்கள் தலைமையிடம் வைக்கம் வட்டமாகும். திருமல்பாடுகள் ஒரு காலத்திலும் ஆட்சியிலிருந்ததாகத் தெரியவில்லை. திருமல்பாடு என்ற சொல் அரசரின் கட்டளைக்காகக் காத்திருப்போர் எனப் பொருள்படும். தொடக்க காலத்திலிருந்து கேரளத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் எட்டு வகுப்பாரைப் பற்றி ஒரு வடமொழிச் சுலோகம் தெரிவிக்கின்றது. அவையாவன: *1.* பூபாலர் அல்லது மகாராசர், இவர்கள் கொச்சி, திருவாங்கூர் அரசர்களை ஒத்தவர்கள். *2.* ராசாக்க அல்லது ராசா. மாவேலிக்கரை, கொடுங்களூர் அரசர்களை ஒத்தவர்கள். *3.* கோசி அல்லது கேயில்தம்புரான். *4.* புறவான் அல்லது தம்பன் *5.* ஶ்ரீ புரோகம அல்லது

திருமல்பாடு. 6. பண்டாரி அல்லது பண்டாரத்தில். 7. அபுத்வாகிக அல்லது திருமல்பாடு. 8. கேட்ட அல்லது சாமந்த. இந்தப் பட்டியலில் திருமல்பாடுகள் என இரு பிரிவினர் இடம் பெற்றுள்ளனர். இவர்களுள் ஸ்ரீபுரோகதப் பிரிவினர் அரசர்கள் கட்டளைக்காகக் காத்து நிற்பவர்கள். அபுத்வாசிகள் சில சாதியாருக்குரிய உத்வாகச் (திருமணம்) சடங்கை நிகழ்த்தி வைப்பவர்கள். பரம்பரைத் தொழிலால் வேறுபட்டவர்களாயினும் இவ்விரு பிரிவினரும் ஒரே வகுப்பாரே. திருமல்பாடுகளின் முக்கிய தலைமையிடம் சேர்த்தலையும் திருவல்லாவும் ஆகும்.''

தம்பான்களும் திருமல்பாடுகளும் எல்லாவகை உறவுகளுக்கும் ஒரே சாதியினராகவே கருதப்படுகின்றனர். திருவாங்கூரைச் சேர்ந்த ஒவ்வொருதம்பானும் மற்ற எல்லாத் தம்பான்களுக்கும் ஏதேனும் ஒருவகையில் உறவுடையவன். சாவு பிறப்பு ஆகியன யார் வீட்டில் நிகழ்ந்தாலும் அந்தத் தீட்டு அனைவருக்கும் உரியதாகும். இவர்கள் பழக்கவழக்கங்களும் பிற சத்ரிய சாதியாருடைய பழக்க வழக்கங்களை ஒத்தனவே. வயது பதினாறு ஆகும்போது இவர்கள் பூணூல் தரிக்கின்றனர். நாளும் மும்முறை காயத்ரியைப் பத்துத் தடவை ஓதுவர். நம்பூத்ரிகளே இவர்களுடைய புரோகிதர்கள். இவர்கள் சாவுத் தீட்டினைப் பதினொரு நாள்களுக்கு உரியதாக மேற்கொள்கின்றனர். கட்டுக் கலியாணம் எனப்படும் தாலிகட்டுக் கலியாணம் ஏழு வயது முதல் பனினான்கு வயதுக்குள்ளாக நிகழ்த்தப்படுகின்றது. ஆரியப்பட்டரே தாலியினை அணிவிக்கின்றார். அப்போது நம்பூத்ரி வேத மந்திரங்களைச் சொல்வார். நம்பூத்ரிகளையும் கீழ்க்கடற்கரை சார்ந்த பிராமணர்களையும் இச் சாதிப் பெண்கள் துணைவர்களாகக் கூட்டிக் கொள்கின்றனர். மலபாரைச் சேர்ந்த பிற சத்திரிய சாதியாரைப் போலவே இவர்களும் மருமக்கள் தாய உடைமை உரிமை முறையினையே பேணுகின்றனர். தம்பான்களும் திருமல்பாடுகளும் பெரும்பாலும் திருவாங்கூர் மகாராசாவின் தனி உதவியாளர்களாகவே பணியில் அமர்ந்துள்ளனர். இவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும் நன்றியுணர்ச்சியுடனும் பணியாற்றியுள்ளனர். நாயர் சாதியினைச் சேர்ந்த உயர்குடியினருக்குத் தாலி கட்டுச் சடங்கினைச் செய்பவர்களாகவும் திருமல்பாடுகள் விளங்கியுள்ளனர்.

திருமல்பாடுகள், தம்பன்கள் ஆகியோருக்குரிய பெயர்கள் பிற சத்திரிய சாதியாருக்கு உரிய பெயர்களை ஒத்தனவே. வர்மா என்ற பட்டப்பெயரை இவர்கள் வழக்கமாகத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்வர். முன்பு ஆட்சிப் பொறுப்பினை வகித்த சில குடும்பத்தவர் பண்டாரத்தில் என்பதனைத்

தங்கள் பட்டப் பெயராகப் வைத்துக் கொள்கின்றர். இது இன்று பண்டாரத்தில் எனத் திரிந்து வழங்குகின்றது. ஆவணங்களில் தம்பான்கள் தங்களைக் கோவிலதிகாரிகள் எனப் பதிந்துகொண்டுள்ளனர். அரண்மனைகளுக்கு உரிய அதிகாரிகளாக ஒரு காலத்தில் இவர்கள் விளங்கி வந்தமையே இவ்வாறு இவர்கள் தங்களை அழைத்துக் கொள்ளக் காரணமாகும்.

திருமான் - Tiruman (holy deer)

கள்ளர் சாதியின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். தெய்வத் தன்மையுடைய மான் என்பது இதன்பொருள்.

திருமுடி - Tirumudi (holy knot)

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "செங்கல் சுவர் வைப்போரான இவர்கள் இல்லப் பெண்கள் பரத்தையராகத் தொழில் செய்வது வழக்கம். இவர்கள் சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர். இவர்கள் வேட்டுவன்களாகவோ கைகோளர்களாகவோ இருத்தல் வேண்டும். கைகோளர் சாதிப் பெண்களைக் கோயிலுக்கு நேர்ந்து விடும்போது அவர்கள் தெய்வத்துக்குத் திருமணம் செய்விக்கப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.

திருவள்ளுவன் - Tiruvalluvan

வள்ளுவன் சாதியின் ஓர் உட்பிரிவு. குறளை இயற்றிய திருவள்ளுவரை வள்ளுவன் சாதியினைச் சேர்ந்தவர் எனக் கூறுவர்.

திருவிளக்கு நகரத்தார் - Tiru - Vilakku-Nagarathar

எண்ணெய்ச் செக்காரான வாணியர் தங்களை இவ்வாறு அழைத்துக் கொள்வர்.

தீயடி - Tiyadi

அம்பலவாசிகளின் ஒரு பிரிவினரான தீயாட்டுண்ணிகளுக்கான மற்றுமொரு பெயர். *(பார்க்க: உண்ணி)*

தீயர் - Tiyan

மலபார், கொச்சி, திருவாங்கூரைச் சேர்ந்த கள் இறக்கும் சாதியார்

தீயரும் ஈழவருமாவர். பின்வரும் கட்டுரை தனித்துச் சுட்டிக்காட்டப் பட்டிருக்கும் இடங்களிலன்றிப் பொதுவாகத் திரு எப். பாவ்செட் அவர்களின் மலபாரைச் சேர்ந்த தீயர்களைப் பற்றிய கட்டுரையினைத் தழுவி அமைந்ததாகும்.

கணக்கெடுப்பு அறிக்கையின்படி மலபாரில் உள்ள தீயரின் எண்ணிக்கை *512,063* ஆகும். இது அம் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் *19.3* விழுக்காடாகும். தீயர்கள் மேற்குக் கடற்கரையைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினர் எனவும் பயிரிடுதல், குடும்பங்களில் பணிபுரிதல், வணிகம் முதலிய தொழிலில் ஈடுபடுபவர்கள் என்றும் படைப்பணியில் பணியாற்றுவதில் இவர்களுக்கு ஆர்வமில்லையென்றும் கூறப்பட்டுள்ளது.*

வடக்கு மலபாரில் வழக்கில் இருந்ததான மருமக்கள் தாய உடைமை உரிமை முறை, ஐரோப்பியரான ஆண்களும் தீயர் சாதிப் பெண்களும் தற்காலிக உறவு வைத்துச் கொள்ளவும், இந்த உறவின் வழிப் பிறந்த குழந்தைகள் தாயினுடைய தர்வாடைச் சேர்ந்தனவாகக் கருதவும் வழி வகுத்தது. இத்தகைய உறவின் வழிப் பிறந்து வளர்ந்த குழந்தைகள் பெரிதும் ஐரோப்பியரைப் போலவே அழகுடையவராக இருந்தனர். *1894* ஆம் ஆண்டு மலபார் திருமண முறைகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது: ஆங்கிலேயரின் ஆட்சியின் தொடக்க காலத்தில் ஐரோப்பியரோடு உறவுவைத்துக் கொண்ட தீயர் சாதிப் பெண்கள் எத்தகைய இழிவிற்கும் உள்ளாகவில்லை. சென்ற தலைமுறைவரை சூத்திர சாதியினைச் சேர்ந்த ஒருத்தி தன்னை வைப்பாக வைத்துக் கொண்டுள்ள பிராமணனைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பவளாக இருந்ததைப் போலவே தீயர் சாதியினைச் சேர்ந்தவள் வெள்ளையனோடான தனது உறவின் வழி பல நன்மைகளைப் பெற்று வந்தாள். கல்வி வளர்ச்சியும் பொதுமக்களின் ஒருமித்த எதிர்ப்பும் ஐரோப்பியருக்கு வைப்பாட்டிகளாக இருப்பது வெட்கக் கேடானது என்ற விழிப்புணர்ச்சியினை இப்பொழுது ஏற்படுத்தியிருப்பது அனைவருக்கும் ஆறுதல் தருவதாக உள்ளது. இந்த இரண்டு இனத்தவருமே ஒருவருக்கொருவர் இழைத்துக் கொண்டிருந்த அழிவினின்றும் காக்கப்பட்டு விட்டனர். இதுபற்றித் திரு எல். கே. அனந்தகிருட்டிண அய்யர் எழுதுவது வருமாறு:** ஐரோப்பிய

* படைத்துறைத் தலைவர் ஈ.எப்.பர்டன் - ஒரு இந்திய ஒலியோ.
(Lieutenant General E.F.Burton - An Indian Olio.)

** கொச்சி மாநில இன இயல் கணக்கீடு, ஈழவர் பற்றிய தனிக்கட்டுரை, எண்.*10,1905.*
(Monograph Ethnog.Suvey of the Cochin State, No.10, Izhuvas, 1905).

தந்தைக்குப் பிறந்த பிள்ளை எனக் கூறிக் கொள்வதில் உடல், மனம் ஆகியவற்றைப் பொருத்தவரை ஒருவன் தகுதியயில் உயர்ந்தவனாக மதிக்கப்பட்டாலும் உண்மையில் அது அவர்களுக்கு அத்தகைய தகுதியினைத் தருவதாகத் தெரியவில்லை. இது பற்றிக் கேட்டறிய முற்பட்டதில் மரபு வழிபட்ட குடும்பத்தவர்களும் தகுதி வாய்ந்த கல்வியறிவு பெற்ற தீயர் சாதிப் பெருமக்களும் இத்தகைய உறவினை இழிந்ததாகவே கருதுவதாகத் தெரியவருகின்றது. இத்தகைய உறவினை வைத்துக் கொள்ளும் பெண்களும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அவர்கள் சேர்ந்துள்ள குடும்பமும் சமூக விலக்கிற்கு உள்ளானவர்களாக உள்ளனர். ஐரோப்பியரின் உறவு வழிப் பிறந்த தீயர் குடும்பப் பெண்களை மணந்து கொண்டுள்ள பெரிய தீயர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் அச் சாதிக்குரிய தனி உரிமைகளை அனுபவிக்க உரிமையற்றவர்கள் என விலக்கப்பட்டுள்ளனர். கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, கண்ணனூர் ஆகிய இடங்களில் இத்தகைய புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளதாக நான் கேள்விப்பட்டடேன். மதிப்பிற்குரிய குடும்பங்களைச் சேர்ந்த தீயர் சாதிப் பெண்கள் ஐரோப்பியர்களோடு இத்தகைய உறவினை ஏற்படுத்திக் கொள்ளும் வழக்கம் இல்லை.

தீயரும் ஈழவரும் ஈழத்திலிருந்து வந்தவர்கள் என்ற பொதுப்படையான நம்பிக்கை நிலவுகின்றது. தென் கன்னட மாவட்டக் கையேட்டில் இது தொடர்பாகப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: கிறித்தவ ஊழிக்கு முன்னும் பின்னும் தென்னிந்தியாவை சேர்ந்த இனத்தவர்கள் ஈழத்தின் மீது படையெடுத்துச் சென்று அங்குத் தங்கலாயினர் என்பது அனைவரும் அறிந்ததே. மலபாரில் வழங்கும் வழக்கு வரலாறு இவ்வாறு சென்று குடியேறிய திராவிடர்களுள் சிலர் மீண்டும் ஈழத்திலிருந்து குடிபெயர்ந்து திருவாங்கூருக்கும் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளுக்கும் வந்து தங்கினர் எனத் தெரிகிறது. அவ்வாறு வந்தவர்கள் தங்களோடு தெங்கின மரத்தை (தெற்குக்குரிய மரம்) கொண்டு வந்தனர். தீவிலிருந்து வந்ததால் இவர்கள் தீவார் எனவும் ஈருவர் எனவும் வழங்கப்பட்டனர். இப் பெயர்களே பின்னர் தீயர் எனவும் ஈழவர் எனவும் திரிந்தன. பாலி மொழிச் சொல்லான சிகள என்பதன் வடமொழி வடிவமான ஸிம்உறள என்பதன் தலையெழுத்தான ஸ் கெட்டு ஈரம் என்ற சொல் அமைந்ததாகக் கால்டுவெல் கருதுகின்றனர். ஈழவர், சாணார் ஆகிய இரு சாதியாரின் தோற்றங்களும் தங்களுக்குள் தொடர்புடையனவாகத் தோன்றுகின்றன என மேற்றிராணியார் முனைவர்

கால்டுவெல் குறித்துள்ளார்.* அவர் கருத்துப்படி சாணார் (அல்லது சேணீர்) திருவாங்கூரைச் சேர்ந்த ஈழவருக்கும் உரிய தகுதி பாராட்டுவதான பட்டப்பெயராகும். மேலும் சாணார் ஈழத்திலிருந்து வந்தவர்கள் என்ற வழக்கும் நிலவுகின்றது.** ஈழவருக்கான பெயர் ஈழத் தீவு என்பதிலிருந்தும் அல்லது சிங்களத் தீவு என்பதிலிருந்தும் வந்ததாகலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது. திரு அனந்தகிருட்டிண அய்யர் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ள தமிழ்ப் புராணம் ஒன்றில் இலங்கையிலிருந்து தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரத்திற்கு வந்து சேர்ந்த ஈழ அரசனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அங்குப் புத்தசமயத்தைச் சேர்ந்த பிட்சுக்களுக்கும் சைவ சமயக் குரவரான மாணிக்கவாசகருக்கும் சமயப் போர் நடைபெற்றதாகவும் அந்த ஈழ அரசன் அதன்பின் சைவ சமயத்திற்கு மதம் மாறினான் எனவும்அவனுடைய சந்ததியினரே ஈழவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

சாமோரின், பிராமணர், நாயர் சாதிப் பெரிய மனிதர் ஆகியோரோடு செய்து கொள்ளும் நில உடமை தொடர்பான ஒப்பந்தங்கள் பற்றிய ஆவணங்களில் தீயர் தங்களை ஈழவர் என்றே பதிந்துகொண்டுள்ளனர். தீயர் ஈழவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதுவதோடு அவர்களோடு தங்களுக்கு உறவு ஏதுமில்லை எனவும் கூறுவர். எனினும் ஆவணங்களில் இவர்கள் தங்களை ஈழவன் எனக் கூறிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானவர்களாக உள்ளனர். இவ்வாறு இவர்கள் கூறிக் கொள்ளவில்லையாயின் நில உரிமையாளர்களான நாயர்களும் பிராமணர்களும் தங்கள் நிலத்தைப் பயிரிட இவர்களுக்குக் குத்தகைக்குவிடமாட்டார்கள். உயர்சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்களைவிடத் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களின் சாதிகள் பற்றி ஏதும் தெரியாதவர்கள் போலக் காட்டிக் கொள்ளுதல் நாட்டு வழக்கமாக உள்ளது., காடுவாழ் பழங்குடிகள் பலரைக் கொண்ட வயநாட்டில் உயர்ந்த சாதியினைச் சேர்ந்த ஒருவன், தனக்கு ஒரு பணியனுக்கும், ஒரு குறும்பனுக்கும் இடையேயான வேறுபாடு ஏதும் தெரியாதவன்போல நடிப்பான். ஒருவன் பணியன் என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தாலும் அவனைப் பற்றிக் குறிப்பிடும்போது இந்தக் குறும்பன் எனக் குறிப்பிடுவான். எனவே ஆவணங்களில் தீயர்களை ஈழவன்கள் எனப் பதிந்தாலும் இந்த இரு சாதியினரும் ஒருவரே எனக் கொள்ள முடியாது. நாட்டுச் சட்ட விதிகள் கொச்சி, திருவாங்கூர் மாநிலங்களில்

* திருநெல்வேலி சாணார், *1849.* (The Tinnevelly Shanars, 1849)

** *1871* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை (Madras Census Report, 1871).

ஈழவர்களைச் சமூகப் படிநிலையில் மிகத் தாழ்ந்தவராக வைத்துள்ளது. மலபாரில் இவர்கள் ஒரு சிறிதும் படிப்பறிவற்றவர்களாகவும் நாகரிகம் தெரியாதவர்களாகவும் உள்ளனர். இதற்கு மாறாக மலபாரைச் சேர்ந்த தீயருள் பலர் அரசுப் பணியில் குற்றவியல் நடுவர்களாகவும் துணை மாவட்ட நடுவர்களாகவும் பிறதுறை அலுவலர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். *1907* ஆம் ஆண்டில், மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்ற ஒருத்தி தலைச்சேரி அஞ்சலகத்தில் எழுத்தராக அமர்த்தப்பட்டுள்ளாள்.

வாசகர்களுக்கு 'மாத்து' என்ற ஒரு வழக்கினைப் பற்றிய முழு விளக்கத்தையும் தெரிவிக்க வேண்டிச் சற்றே தலைப்பை விட்டுச் சென்றாக வேண்டியுள்ளது. மாத்து என்பது மாற்றுத் துணி எனப் பொருள்படும். ஆணோ, பெண்ணோ சாதிவிலக்கம் பெறுவார்களாயின் வண்ணாத்தியும் அந்தச் சாதிக்குரிய அம்பட்டனும் அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு வீட்டுவிலக்கு முதலானவற்றோடு தொடர்புடைய சடங்குகள் நடத்த உதவக் கூடாது எனத் தடை விதிக்கப்படுவது. தீட்டுக்குள்ளானவர் தீட்டு நீங்கப் பெறும்வரை சாதிவிலக்கம் செய்யப்பட்டவரே. இது நம்பூத்ரிகள், நாயர்கள், தீயர்கள் ஆகிய அனைவருக்கும் உரிய பொதுவான சமூக விதியாகும். வண்ணாத்திகள் பொதுவாகத் தீயர் சாதியினைச் சேர்ந்தவர்களாக இருப்பர். மண்ணான்கள் நம்பூத்ரிகளுக்கும் நாயர்களுக்கும் பரம்பரையாக வண்ணாராக இருந்து வருகின்றனர். என்றாலும் நாயர் சாதிப் பெண்களுக்குத் துணி துவைப்பவர்கள் தீயர் சாதியினைச் சேர்ந்த வண்ணாத்திகளே. ஒருத்தி குழந்தை பெற்ற பின்னும், தர்வாடைச் சேர்ந்த ஒருவர் இறக்கும் போதும், மாதவிலக்காகும்போதும் தீட்டுக்கு உள்ளானவளாகின்றாள். இந்தத் தீட்டுக்கள் உரிய காலக்கெடு முடிந்தபின் நீக்கப்பட வேண்டும். அவ்வாறு தீட்டு நீக்கப்படாவிடில் அவள் தொடர்ந்து சாதி விலக்கம் பெற்றவளாகவே இருக்க வேண்டிய இன்னலுக்கு உள்ளாவாள். வண்ணாத்தியிடமிருந்து துவைக்கப்பட்ட சேலை ஒன்றினைப் பெற்று உடுத்திக் கொண்டு தான் உடுத்திருக்கும் சேலையினைத் துவைக்க வண்ணாத்திக்குக் கொடுக்கும் போதே அவள் தீட்டு நீக்கம் பெறுகின்றாள். இவ்வாறு வண்ணாத்தியிடமிருந்து சேலையினைப் பெறுவதே மாத்து எனப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் மாத்து வண்ணாத்திக்கு உரியதேயன்றிப் பெற்று உடுத்துபவளுக்கு உரியதன்று. வண்ணாத்தி, ஒருத்தியின் தீட்டுப் போக்கத் தன் சொந்தச் சேலையினையே கொடுத்து உதவுகின்றாள். ஒருத்திக்கு மாற்று கொடுக்கவும், மாற்று கொடுக்காமல் இருக்கவும் தீயன் கொள்கையளவில் முழு உரிமை உடையவனே. இந்த உரிமையினைப் பயன்படுத்தித் தீயன் ஒருத்தியினைச்

சாதியிலிருந்து தீட்டுடையவளாக விலக்கி வைக்க உரிமை பெற்றவன். எனினும் அவன் தன்னுடைய இந்த உரிமையினை ஒருபோதும் பயன்படுத்துவதில்லை. என்றாலும் நம்பூத்ரி மற்றும் நாயர் சாதியார் மீது ஒரளவுக்கு இந்தக் கட்டுப்பாட்டினை விதிக்கும் உரிமையுடையவனாவான். ஒருவனுடைய அழுக்கடைந்த ஆடையினைத் துவைத்துத் தருவது மாற்றாகாது. அது வண்ணாத்திக்கு உரிய வேலைகளாகும். எனவே மாத்து என்பதில் அழுக்கடைந்த ஆடையினை துவைக்கத் தாழ்ந்த சாதியானுக்குத் தந்து அவனிடமிருந்து வேறு உடையினைப் பெற்று மாற்றுதல் என்பதனைவிட மேலும் வேறு ஆழ்ந்த பொருளுடைய சடங்காதல் வேண்டும். வேறு எந்த வழக்கத்தைவிடவும் இந்த மாற்றினைப் பெறும் வழக்கம் முக்கியத்துவத்தில் குறைந்தது அன்று. பிறப்பு, சாவு, மாதவிலக்கு ஆகியனவற்றுக்குரியனவாக விதிக்கப்பட்டுள்ள தீட்டு நாள்களின் இறுதி நாளன்று இந்த மாத்தினைப் பெறத் தவறுபவர் தொடர்ந்து சாதிவிலக்கம் பெற்றவராகவே இருப்பார். ஈழவர்கள் மாத்துத் தொடர்பான இந்த வழக்குகள் பற்றி ஏதும் அறியாதவர்கள் என்பதனை இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும்.

தீயன் ஒருவன் சமைத்த சோற்றினை ஈழவன் உண்பான். ஆனால் ஈழவன் சமைத்த சோற்றினைத் தீயன் உண்பதில்லை. இது ஈழவர் தீயரைவிடத் தகுதியில் தாழ்ந்தவர் என்பதனைக் குறிப்பினால் உணர்த்துவதாகும். நாயர், தீயர் ஆகியோர் ஒரு மாப்பிள்ளா அவர்களைக் காட்டிலும் சாதியில் தாழ்ந்தவனாயினும் அவனோடு தடையேதுமின்றி உண்பர். எனினும் சோறு என்று வரும்போது அதனை மட்டும் சாதியில் தங்களோடு ஒத்தவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் சமைத்தால் மட்டுமே உண்பர். தீயன் ஒருவன் வீட்டில் சோறு உண்ணும்போது ஈழவன் தீயன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தே உண்பான். அதனை அவன் தீயன் வீட்டினுள் வைத்து உண்பானாயின் அது தீயன் வீட்டினைத் தீட்டுக்கு உள்ளாக்கியதாக ஆகும்., ஈழவன். தீயன் வீட்டுத் திண்ணையில் வைத்துச் சோற்றினை உண்ணவேண்டும் என்பது மட்டுமன்றி அவன் தான் உண்ட தட்டுக்களைக் கழுவி வைப்பதோடு உண்ட இடத்தையும் எச்சிலிட வேண்டும். ஈழவன் தீயனுடைய உரிய கிணற்றில் நீர் எடுத்துக் குடிக்கத் தடையேதுமில்லை. மேலும், தீயரும் ஈழவரும் ஒரே இடத்தில் கலந்து கூடி வாழ்வதையும் காண முடியாது. தீயர் வாழும் இடங்களில் ஈழவரைக் காண முடியாது. இதேபோன்று ஈழவர் வாழும் இடங்களில் தீயரைக் காண முடியாது. (பாலக்காட்டைச் சேர்ந்த ஈழவப் பெண்கள் குழு ஒன்று தங்கள் உணவை உண்ணும் ஒளிப்படம் ஒன்று எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில்

அவர்கள் அனைவரும் முழங்கால்களை மடக்கி மண்டியிட்டு அமர்ந்துள்ளனர். அரைக்கும்போதும் புடைக்கும்போதும் மற்றப் பணிகளில் ஈடுபடும்போதுங்கூட இவர்கள் இதே நிலையில்தான் உட்கார்ந்தவர்களாகத் தொழில்புரிவர் எனக் கூறப்படுகிறது. இதனால் இவர்களுடைய முழங்கால் மூட்டின் மேல் உள்ள தோல் காய்ப்புக் காய்த்துள்ளது).

தீயருக்கும் ஈழவருக்கும் இடையேயான வேறுபாடுகளை இவ்விரு சாதியாரின் மணச் சடங்குகள் பற்றியான நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்துக் காணலாம். திருமண ஏற்பாட்டின் முதல் கட்டமாக மணமகன், மணமகள் ஆகியோர் சார்பிலான குடும்ப உறுப்பினர்களின் முன்னிலையில் மணத்திற்கு உரிய நாளினை உறுதி செய்தபின் மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த தண்டான் (சாதித்தலைவன்) பின்வரும் மணஉறுதி வாசகங்களைக் கூறுவான். கிட்டத்தட்ட அதனை அதே அமைப்பில் பின்வருமாறு மொழிபெயர்த்துத் தரப்படுகிறது: “இரு வீட்டாரையும் சேர்ந்த தரை மற்றும் சங்கதிகளும் கூடி இந்த மண உறவு பற்றிப் பேசினர். பொருத்தத்தையும் நல்ல நாளினையும் ஆராய்ந்து பார்த்த சோதிடன் மணநாளைக் குறித்துத் தந்துள்ளான். தரை, உறவினர்கள், இல்லத்தார், குலத்தார், தந்தை, மாமன், உடன்பிறந்தார், பன்னிரண்டு இல்லத்தார், பத்துக் கிரியம்கள் ஆகியோருடைய உடன்பாட்டினைப் பெற்றபின் கஞ்சி மற்றும் அடையாளம் சடங்குகளும் நான்கு தழுவு சடங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. இப்பொழுது . . . . மகனான. . . . . இவனுக்கும் . . . . மகளான . . . . இவளுக்கும் இடையே நடைபெற உள்ள திருமணத்திற்காகக் கஞ்சிகுடிச் சடங்கினை நான் மும்பெரியும் முன்னிலையில் நடத்தி வைக்கப்போகின்றேன்.” தென் மலபாரில் தீயர் திருமணங்களின்போது மேற்கண்ட சூத்திர அமைப்பிலான வாசகம் சிற்சில சிறு மாற்றங்களுடன் கூறப்படும். மண உறவினை உடன்பட்டு உறுதிசெய்யும் புனிதச் சடங்காக இது கருதப்படுகிறது. சடங்குகளும் பழக்க வழக்கங்களும் எந்த அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டனவோ அந்தஅடிப்படைகள் காலப்போக்கில் மறக்கப்பட்டுவிட்டாலும்கூட அவை பின்பற்றப்பட்டு வருகின்றன. மேற்கண்ட வாசகத்தில் பல சொல் வழக்குகள் இன்று புரியாதனவாக இருப்பினும். அவற்றை அவ்வாறே தொடர்ந்து கூறப்படுதல் வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது. முபெரியும் என்ற சொல்லின் பொருள் என்ன என்பதனை இன்று யாரும் கூற இயலாதவர்களாக உள்ளனர். எனினும் சில சொல்வழக்குகள் விளங்கிக் கொள்ளக் கூடியனவாகவே உள்ளன.

தர: பண்டைய அரசியல் அமைப்பில் இதுவே மிகச் சிறிய கூட்டுக் குழுவாகும். இதனை ஒரு கிராமம் எனக் கூறமுடியாது. ஒரு தரையினைச் சேர்ந்தவர்கள் பல பகுதிகளில் சிதறுண்டவர்களாக வாழலாம்., ஒவ்வொரு தரைக்கும் நாயர் சாதியினைச் சேர்ந்த ஆள்வோனும், தீயர் சாதியினைச் சேர்ந்த தலைவனும், சோதிடனும், வண்ணானும், கொல்லனும், அத்தரையினைச் சேர்ந்த சமூகத்தவர்களுக்குத் தொழில்புரியும் பிறரும் தனித்தனியே உரிமையுடையவர்களாக உள்ளனர். ஒவ்வொரு தரையும் இவ்வாறு அமைந்த தனி உலகமாக உள்ளது.

சங்கதி: மணஉறவு கொள்ளும் இரு வீட்டாரின் நண்பர்கள். மண உறவு குறித்துப் பேச்சு வார்த்தையைத் தொடங்கி முடித்து வைப்பவர்கள் இவர்களே.

பொருத்தம்: மணமக்களுடைய சாதகங்களை ஆராய்ந்து அவை பொருத்தம் உடையனவாக அமைகின்றனவா என்பதனையும் இந்த உறவின் வழி இவர்கள் வாழ்வு வளம் பெறுமா என்பதனையும் சோதிடன் ஆராய்ந்து கூறுதல்.

இல்லம்: இங்கே இது மணமக்களுடைய தந்தையர் குடும்பங்களைக் குறிக்கும்

குலம்: இங்கே இது மணமக்களின் தாயார்களுடைய குடும்பங்களைக் குறிக்கும்.

பன்னிரண்டு இல்லங்களும் பத்துக் கிரியங்களும்: இல்லம் என்ற சொல் இன்று நம்பூத்ரிகள் தங்கி வாழும் வீட்டைக் குறிக்கும் சொல்லாகத் தனி வழக்குடையதாக ஆகிவிட்டது. முன்னர் இது எல்லாச் சாதியாருடைய வீடுகளையும் குறிக்கப் பயன்பட்ட சொல்லாக இருந்திருக்க வேண்டும். இதனைத் தெற்கே (மலபார்) இருந்து தென் கன்னடத்திற்கு வரும் ஒரு தீயனை அப் பகுதியில் உள்ளவர்கள் வரவேற்கும் முறை உறுதிப்படுத்துவதாகும். தென் கன்னடத்தைச் சேர்ந்த கோகர்ணத்தில் உள்ள புகழ்பெற்ற கோயிலுக்கு மலபாரைச் சேர்ந்த ஒரு தீயன் செல்வனாகில் அங்கு அவனிடம் "உன் இல்லமும் கிரியமும் எது?" என்பதனையே முதல் கேள்வியாகக் கேட்பர். இவ்வாறு பயணம் மேற்கொண்ட தீயன் இல்லம், கிரியம் என்ற சொற்களைத் தன்னுடைய திருமணத்தின்போது அல்லது மற்றொருவருடைய திருமணத்தின்போது மேலே எடுத்துக்காட்டிய வாசகங்களில் பயன்படுத்தப்பட்டதை மட்டும் கேட்டிருப்பான். ஆனால் அவற்றின் பொருளின் அடிப்படையினை அவன் அறியாதவனாகவே இருப்பான். தென் கன்னடத்தைச் சேர்ந்தவனுக்கோ இச் சொற்கள் உண்மையில் பொருளொடு பட்டவை. அவன் கேட்கும் இந்தக் கேள்விக்கு மலபாரிலிருந்து

வரும் ஒருவன் சரியான பதில் கூறும்போதுதான் அவன் உண்மையில் மலபாரைச் சேர்ந்த தீயன் என ஏற்றுக் கொள்ளப்படுவான். இந்தக் கேள்விக்கு இவன் விடைசொல்ல அறியாது விழித்தால் தென் கன்னடத்தைச் சேர்ந்த தீயனிடமிருந்து புனிதப் பயணம் மேற்கொண்ட இவன் உணவும் நீரும் பெற இயலாது. தென் மலபாரைச் சேர்ந்த தீயன் மலபாரின் வட பகுதியில் உள்ள செரக்கல் வட்டத்திற்குச் செல்லும்போதும் அங்கும் இவ்வாறு கேட்கப்படும் கேள்விக்கு விடை கூறிய பின்பே உரிய உதவிகளைப் பெற முடியும்.

தென் மலபாரைச் சேர்ந்தவர்களின் பத்து இல்லங்களின் பெயர்கள் வருமாறு:

தலகொடன்	பரக்காய் அல்லது வரக்காய்
நெல்லிக்காய்	தென்குடி அல்லது தென்னன்குடி
வரகட்	படையன்குடி
அலை	கிப்டட்] தாழ்ந்தவை
கண்ணன்	புழம்பயி அல்லது பாவு] தாழ்ந்தவை

வட மலபாரைச் சேர்ந்தவர்களின் இல்லங்களின் பெயர்கள் வருமாறு:

நெல்லிக்காய்	படையம் குடி
புல்லாணிகி	தென்னன் குடி
வங்கெரி	மணன் குடி
கொயிக்களன்	விளக்கன் குடி

ஒரே இல்லத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் தங்களுக்குள் மண உறவுகள் கொள்ள இயலாது. மணமகனும் மணமகளும் வேறு வேறு இல்லத்தவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமான விதியாகும். உண்மையில் இல்லங்கள் புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்களே. சில இல்லங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒரு சில தனிச் சலுகைகளும் மரியாதைகளும் வழங்கப்பட்டுள்ளன. வரகட் இல்லத்தைச் சேர்ந்த (வரகதீயன்) ஒருவன் முன்பு மஞ்சில்களில் (ஒரு கழியில் தொங்கும் தூரி) பயணம் செய்யும் தனி உரிமை பெற்றிருந்தான். உயர்சாதியாருக்கு உரிய இந்த உரிமையினை வேறு இல்லங்களைச் சேர்ந்த தீயர் பயன்படுத்துதல் இயலாது. இவ்வாறு பயணம் செய்யும் வரகதீயன் ஒரு ராசாவையோ நாயரையோ எதிர்ப்படின் அவன் தன் கால்களுள் ஒன்றினை மஞ்சிலிருந்து கீழே தொங்கவிட்டு அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கக் கடமைப்பட்டவனாவான். வரகட் தீயர்

இந்த உரிமையோடுகூட கழுத்தில் பொன்னாலான அணிகளை அணியவும் பட்டினை உடுக்கவும் இடையில் வாளினைத் தொங்கவிட்டுக் கொள்ளவும் கேடயம் ஏந்திச் செல்லவுமான உரிமைகளையும் பெற்றிருந்தனர். வாள் மெல்லிய உருக்குத்தகட்டால் வடிக்கப்பட்டிருக்கும். இடையினைச் சுற்றிக் கச்சைபோல் வளைத்து வாளின் முனையினைப் பிடியின் முனையில் உள்ள துளையில் பொருந்தும்படியாகச் சொருகிக் கொண்டு செல்வர். மற்றொருவனுக்குத் தீங்கு இழைக்க நினைக்கும் ஒருவன் இதுபோலத் தன் வாளினை இடையில் கட்டிக் கொண்டு அதனை உடையால் போர்த்தவனாகத் தன்னிடம் படைக்கலம் ஏதும் இல்லாதவனைப் போல அவனை நெருங்கிக் கண்ணிமைக்கும் நேரத்தில் இடுப்பில் உள்ள வாளினைக் கழற்றி அதனால் அவனை வெட்டி வீழ்த்துவான். புகழ்பெற்ற வீரரான மன்னனார் வர்கட் இல்லத்தைச் சேர்ந்தவரே. மலபாரைப் பற்றி அறிந்தவர்கள், அவர் தொடங்கி நடத்தி வந்த வியப்புக்கு உரியதும் நன்மை தருவதுமான அமைப்பைப் பற்றி அறிவர். சாதியிலிருந்து விலக்கப்பட்ட வேறு கதியற்ற நம்பூத்ரிப் பெண்கள் தங்கி வாழ வசதியான வாழ்க்கையினை அமைத்துத் தந்தவர் இவரே. சாதியிலிருந்து விலக்கப்பட்ட ஒருத்திக்கு அவளுடைய உறவினர்கள் சாவுச் சடங்குகளைக் கூட நடத்தி விடுவர். அவர்களைப் பொருத்தவரை அவள் இறந்து போனவளே. அவள் மன்னனாரைச் சென்று சேர்ந்தவுடன் அவள் மீண்டும் புனிதமுடையவளாகப் புதிதாகப் பிறந்தவளாகக் கருதப்பட்டுப் பிறப்புச் சடங்குகள் நிகழ்த்தப்படும். மன்னனார் வீட்டை வந்து சேர்ந்தவுடன் அவள் அவர் வீட்டின் இடதுபுறமுள்ள கதவு வழியாக உள்ளே நுழைந்தால் அவள் அவருடைய மனைவியாவாள். முன் வாசல்வழியாக வீட்டினுள் நுழைந்தால் அவருடைய உடன் பிறந்தவளாக நடத்தப்படுவாள். அரண்மனையைச் சேர்ந்த தங்கள் தலைவரான மன்னனாருக்குச் சந்ததியில்லாது போனபோது குளத்துநாட்டினைச் சேர்ந்த தீயன்கள் குருமட்டூர் நம்பூத்ரி (பெருங்கல்லூர் பிராமணர்களின் தலைவன்)யிடம் ஊர்வலமாகச் சென்று பிராமணக் கன்னி ஒருத்தியை அவர் தன் சகோதரியாக தத்து எடுத்துக் கொள்ள அனுமதி தருமாறு வேண்டினர். தீயர் மருமக்கள் வழி உடமை உரிமை பேணுவர்களாகையால் குலம் தழைக்க உடன்பிறந்தவள் வழி சந்ததி உண்டானால் போதுமானது. இவர்களுடைய இந்த வேண்டுகோளினை நம்பூத்ரிகள் கூடி ஆலோசித்து ஒரு கன்னியினைத் தேர்ந்தெடுத்து அவளை அவர் தத்து எடுத்துக்கொள்ள அனுமதித்தனர்.

கிரியம் என்பது கிரஉறம் என்ற வடசொல்லின் திரிந்த வடிவம் எனக் கருதப்படுகிறது. எனினும் இது கற்பனைபொடுபட்ட கருதுகோளாகவே தோன்றுகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு கிரியங்கள் இருக்கின்றன.

மூன்று கிரியங்களுடைய பெயர்கள் எனக்குத் தெரிய வந்துள்ளன. கருமனை, கைட, கம்பதி என்பனவே அவை. தென் கன்னடத்தில் லட்சுமிபுரம் கோயிலுக்கு அருகே கருமன் என்ற ஊர் உள்ளது. கோயில்களில் நல்வாக்குச் சொல்வதற்காகப் பூத ஆட்டங்கள் ஆடும் தீயனைக் குறிக்கவும் கருமன என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. தீயன் மீது ஏறி நல்வாக்குச் சொல்லும் தெய்வம் அத தீயனை என் தீயன் எனக் கூறாது "என் கருமன" எனச் சுட்டியே உரைக்கும். தீயன்களின வழக்கங்களில் ஒன்று கருமன ஆசாரம் எனப்படுகிறது. இந்த இடங்களில் தவிர வேறு எங்கும் கருமன என்ற சொல்வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தீயர், ஈழுவர் திருமணங்களிடையே புலப்படத் தோன்றும் வேறு சில வேறுபாடுகள் வருமாறு. தென் மலபாரைச் சேர்ந்த தீயன் மணமகன் மல்யுத்ததிற்குச் செல்பவனைப் போலத் தன் வேட்டியினை இடையில் வரிந்து கட்டியவனானக் கையில் வாளும் கேடயமும் ஏந்தி இதே போன்று படைக்கலங்கள் ஏந்திய இரு துணைவர்கள் உடன்வர வழி நெடுக ஆடியபடி செல்வான். ஈழுவர் எக்காரணம் கொண்டும் வாளேந்திச் செல்வதில்லை. தீயர் திருமணத்தில் போட்டியிட்டுப் பாட்டுப் பாடுவது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். வடில் திறப்புப் பாட்டு (கதவினைத் திறக்கும்படி கூறும் பாட்டு) எனப்படும் இதனை மணமகன், மணமகள் ஆகிய இருவர் வீட்டைச் சேர்ந்தவர்களும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு பாடுவர். இந்தப் பாடல்கள் கண்ணன், ருக்மணி ஆகியோருடைய கதையினைக் குறிப்பாகச் சுட்டிப் பாடப்படுவனவாகும். இதே பாட்டுச் சிறிது மாற்றத்துடன் காஞ்சிவரத்தில் பாடப்பட்டதை நாங்கள் கேட்டுள்ளோம். கண்ணன் தன் காதலி ருக்மணியிடம் கதவைத் திறந்து தன்னை உள்ளே அனுமதிக்கும்படி வேண்டுவான். அவன் மற்றொருத்தியோடு காதல் லீலையில் ஈடுபட்டுத் திரும்பி வந்துள்ளதாக நினைத்து ஊடல் கொண்டுள்ள அவள் கதவினைத் திறக்க மறுப்பாள். கண்ணன் அவளிடம் குறையுரைப்பான். அவளோ குறை மறுப்பாள். அவள் நீண்ட விளக்கம் தந்த பின்னரே அவள் கதவினைத் திறப்பாள். இச் சமயத்தில் பாடப்படும் 'கடைத் திறப்பு'ப் பாட்டு அப்போதைக்கு இட்டுக்கட்டிப் பாடப்பட்ட பாட்டாகும். ஒரு கட்சியார் பாட்டாகத் தொடுக்கும் வினாவிற்கும் மற்றொரு கட்சியார் சரியான விடையினை உடனுக்குடன் பாட்டாகத் தெரிவிக்க வேண்டும். எந்தக் கட்சி விடை சொல்லத் தெரியாது விழிக்க நேரிடுகின்றதோ அந்தக் கட்சியினையே தோல்வியுற்ற கட்சியாக் கருதுவர்.

அடுத்து நான் தீயன்கள் எவ்வாறு உடுத்தும் அணிமணிகள் அணிந்தும் வருகின்றனர் என்பதனைத் தெரிவிக்கின்றேன்.

அ. வட மலபாரைச் சேர்ந்த ஆண்களுக்கானவை:

1. விபூதியினைக் கொண்டு நெற்றி, மார்பு, மேல் தோள் ஆகியவற்றில் நீள வாக்கில் கோடு இழுத்துக் கொள்வர்.
2. காதுகள் ஒவ்வொன்றிலும் இரண்டு பொன்னாலான கடுக்கன்கள்; வாளின் உறையிலிருந்து தொங்கும் வெள்ளிச் சங்கிலி ஒரு குழிஷோடு இணைக்கப்பட்டிருக்கும். இடக் கையில் மோதிர விரலில் செம்பு, பித்தளை, வெள்ளியாகியனவற்றை உருக்கிச் செய்த தம்புக் என்ற இரு மோதிரங்கள்.
3. ஒவ்வொரு காதிலும் ஒரு கடுக்கன். இடக்கை மோதிர விரலில் இரும்பு மோதிரம்.
4. ஒவ்வொரு காதிலும் ஒரு முள்ளைச் சொருகிக் கொண்டிருந்த இவன் மணம் ஆகாதவன்.
5. ஒவ்வொரு காதிலும் ஒரு தங்கக் கடுக்கன்; இடக்கையின் சிறு விரலில் இரும்பு மோதிரம். வலக்கையின் சிறுவிரலில் யானையின் வாலிலிருந்து எடுக்கப்பட்ட மயிர் சுற்றப்பட்ட இரண்டு வெள்ளி மோதிரங்கள்.

சிலர் பித்தளை மோதிரங்களை அணிந்தவர்களாக உள்ளனர். சிலர் சிவப்புக் கல் பதித்த காதுக் கடுக்கன்களை அணிந்துள்ளனர். கயிற்றோடு பிணைக்கப்பட்ட குழல்களினுள்ளே இடப்பட்ட தாயத்துக்களை சிலர் அணிந்துள்ளனர். இவை இவற்றை அணிந்திருப்பவர்களைப் பகைவர், கண்ணேறு, பேய்கள் ஆகியவற்றின் தீங்குகளிலிருந்தும் காக்கும். ஒருவன் தன் வெள்ளி அரைஞாணில் ஒரு தாயத்தினைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு அது புறத்தே தெரியாதபடி அதன்மீது வேட்டியினை உடுத்திருந்தான். ஒரே ஒருவன் மட்டுமே நெற்றிப் பொட்டின் மேல் நெற்றியில் சிறு வட்ட வடிவில் பச்சை குத்திக் கொண்டிருந்தான். பலருடைய கைகளிலும் வயிற்றிலும் நெருப்பினால் சூடிட்ட புண்ணின் தழும்புகள் காணப்பட்டன. இவ்வாறு சூடிடுவது பலம் உடையவர்களாகவும் நோயின் தொல்லையிலிருந்து விடுபடவும் இடப்படுவதாகும்.

ஆ. தென் மலபாரைச் சேர்ந்த ஆண்கள்:

கிராமப்புரங்களில் ஆண்கள் முழங்காலுக்கு மேல் இருக்கும்படியாகவே வேட்டி உடுக்கின்றனர். நான் நேரில் கண்டவர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் காதுகளில் கடுக்கன் அணிந்திருந்தனர். அனைவரும் காது குத்திக்

கொண்டிருந்தனர். கடுக்கன் அணியாதவர்கள் அவ்வாறு அதனை அணியாததற்குக் கடுக்கன் வாங்க அவர்கள் வசதியற்றவர்களாக இருந்ததே காரணமாகுமேயன்றி அதுபற்றிய தடையேதும் பெற்றிருக்கவில்லை.

1. நெற்றிப் பொட்டின்மீது நீல நிறத்தில் பச்சை குத்தியுள்ள புள்ளி.
2. பதினைந்து தங்கக் காசுகள் கொண்ட வெள்ளியாலான தாயத்துக் குழல் அவன் தன் தங்கப் காசுகளின் பாதுகாப்புக்காக வேண்டி வெள்ளித் தாயத்துக் குழலினுள் போட்டு வைத்திருப்பதாகக் கூறினான். நான் நல்ல அதிர்ஷ்டத்திற்காக அவன் அவ்வாறு போட்டு வைத்திருப்பதாக நினைத்தேன்.
3. ஒவ்வொரு காதிலும் கடுக்கன், இடையில் தீய ஆவிகள் நெருங்காதிருக்க யந்திரம் பொறிக்கப்பட்ட தாயத்து அடங்கிய செம்புக் குழல்.
4. இடையில் தன் நோய் ஒன்று நீங்குவதற்காக வெள்ளிக் குழல்கள் நான்கனுள் போடப்பட்ட தயாத்துக்கள் பொருத்தப்பட்ட யந்திரம் எழுதப்பட்ட செப்புத் தகடு.
5. ஒவ்வொரு காதிலும் இரண்டு கடுக்கன்கள். நெற்றிப்பொட்டில் ஒரு வெள்ளைப்புள்ளி.

இ. வட மலபாரைச் சேர்ந்த பெண்கள்

பண்டை நாள்களில் பெண்கள் வண்ணம் தோய்யக்கப்பட்ட கரைகளோடு கூடிய சேலையினை இடையினைச் சுற்றி முழங்கால்வரை தொங்கும்படியாக அணிந்து வந்தனர். இவர்கள் மார்பகங்களை மறைக்கும் வழக்கம் இல்லை. முன்பு இடைக்கு மேலேயுள்ள உடற்பகுதியினைச் சாவுத் தீட்டுப் பேணும் நாள்களில் அன்றி மற்ற சமயங்களில் இவர்கள் மறைப்பதில்லை. இன்று பெரும்பாலும் பெண்கள் வண்ணம் தோய்க்காத வெள்ளையாடைகளையே உடுத்துகின்றனர். நகர்ப்புறங்களிலன்றி மற்றப் பகுதிகளில் பெண்கள்இன்று இடைக்கு மேலேயுள்ள உடற்பகுதியினை மறைத்தலில்லை. மலபாரைச் சேர்ந்த ஈழவர் பெண்கள் நீல வண்ணம் தோய்த்த சேலைகளை அணிவதனையே வழக்கமாக கொண்டுள்ளனர். ஒரே துணியினை முழங்கால் வரை தொங்கும்படியாக இறுக்கமாக இடையினைச் சுற்றி அணிவர். அண்மைக் காலமாக இவர்கள் மார்பகங்களை மறைக்கும்படியாக நீல நிறத் துணியொன்றினை இறுக்கமாகக் கட்டிக்கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

அணிகள்: இன்று சில சமயங்களில் தீயர் பெண்கள் அணியும் தோடு தீயருக்குரிய அணியன்று. காதில எனப்படும் காது வளையமும் அனந்தோடுமே தீயருக்குரிய காதணிகள். அனந்தோடு தங்கப் பாசிமணிகளைக் கோத்துக் கீழே பதக்கம் தொங்கவிடப்பட்டு அமைக்கப்பட்டவையாகும். காது மடல்களின் துளைகளைப் பெரிதுபட்டனவாக ஆக்க காதுத் துளைகளில் ஈயவட்டுகளை அணிந்து கொண்டிருப்பர். தேவைப்படும் போதும் வசதியும் வாய்ப்பும் ஏற்படும்போதும் இந்த வட்டுக்களை நீக்கிப் பொன்னாலான அணிகளை அணிவர். வெனீசு செகியுன்களும் அவற்றைப் பார்த்துப் போலியாகச் செய்யப்பட்டவையும் மலபாரில் அமாட என வழங்கப்படுகின்றன. இவற்றைக் கழுத்தணியாகப் [illegible] அணிகின்றனர். அமாடவில் கரையான் புற்றுள்ளதா என நோண்டிப் பார்க்காதே என்ற மலையாளப் பழமொழியும் உள்ளது. தகுதிவாய்ந்த சான்றோரிடத்தில் குறைகாண முற்படாதே என்பது இதன் கருத்தாகும்.

அடுத்துத் திருமணங்கள் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன எனப் பார்ப்போம். தென் மலபாரைச் சேர்ந்த தீயன் சிறுமி ஒருத்தியினை வட மலபாரைச் சேர்ந்த தீயன் ஒருவனுக்கு மணம் செய்து தருகின்ற வழக்கம் மிக அரிதாகவே நிகழ்கின்றது. இதற்குக் காரணம் இத்தகைய மண உறவின் வழிப் பிறக்கும் குழந்தைகள் தாய், தந்தை ஆகிய இருவரிடமிருந்தும் எத்தகைய உடைமைகளையும் பரம்பரை உரிமையாகப் பெற இயலாது என்பதேயாகும். மருமக்கள் வழி உடைமை பேணும் வடமலபாரைச் சேர்ந்த அந்தக் குழந்தைகள் எத்தகைய உடைமைகளுக்கும் உரிமையற்றவராவர். மக்கள் வழி உடைமை உரிமை பேணும் தென் மலபாரைச் சேர்ந்த தாயும் எத்தகைய உடைமைகளுக்கும் உரிமையற்றவளாவாள். எனவே இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஏதும் அற்றவர்களாகின்றனர். இதற்கு மாறாக வடமலபாரைச் சேர்ந்த சிறுமியும் தென் மலபாரைச் சேர்ந்த ஒருவனும் மணந்து கொள்வார்களாயின் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை தாய் தந்தை ஆகிய இருவருடைய உடைமைகளுக்கும் உரிமை உடையவர்களாகின்றனர். வட மலபாரைச் சேர்ந்த தீயர் வட மலபாரிலும் தென் மலபாரைச் சேர்ந்தவர்கள் தென் மலபாரிலுமே மண உறவு கொள்ளுதலே தீயரிடையே பெரும்பாலான வழக்கமாக இருந்து வருகின்றது.

முன்பு தென் மலபாரைச் சேர்ந்த தீயரிடையே உடன்பிறந்த சகோதரர்கள் பலர் - உண்மையில் அனைவருமே - ஒருத்தியைப் பொதுவாக

மனைவியாகக் கொள்ளும் வழக்கம் இருந்து வந்துள்ளது என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. தற்போது இந்த வழக்கப்படி வாழ்க்கை நடத்தும் இரு குடும்பங்கள் உள்ளதாகப் பதியப்பட்டுள்ளது.

அடுத்துத் திருமணத்திற்கான ஏற்பாடுகளையும் திருமணச் சடங்குகளையும் பற்றிப் பார்ப்போம். தென் மலபாரில் உள்ள கள்ளிக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த தீயர் மணம் பற்றிய பின்வரும் விளக்கங்கள் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த தீயர் மணம் பற்றிய பொதுவான சடங்குகள் எனக் கருதத் தக்கவை. எனினும் மருமக்கள் தாய வழி உடைமை உரிமை பேணும் வட மலபாரில் மனைவி தன் பிறந்த வீட்டைச் சேர்ந்த தர்வாடோடேயே தங்கிவிடுகின்றாள். மேலும் இவர்களிடையே பெண்ணுக்கு வரதட்சணை தந்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. மக்கள் வழி உடைமை உரிமை பேணும் தென் மலபாரில் மனைவி கணவனோடு அவன் வீட்டில் வந்து வாழ்வதோடு திருமணத்திற்கு முன்பே வரதட்சணைத் தொகை, நகைகள், சீதனப் பொருட்கள் பற்றியும் பேசி முடிவு செய்து கொள்கின்றனர். இவற்றைப் பெண்வீட்டார் மணநாளன்று பேசி முடித்தபடி செலுத்த வேண்டும். கள்ளிக்கோட்டை வட்டத்தில் மட்டும் தென் மலபாரில் வழக்கில் உள்ள வரதட்சணை பற்றி முன்பே பேசி முடிவு செய்யும் பழக்கம் வழக்கில் இல்லை. வடமலபாரில் மணமகள் வீட்டாரின் செல்வ வளத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப மணமகளுக்கு நகைகள் அணிவிக்கப்படுகின்றன. இவ்வாறு அன்பளிப்பாகத் தரப்படும் பொருள்களுக்கும் மணம் பற்றிய உடன்பாட்டிற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

மண உறவில் முதலாவதாக மேற்கொள்ளும் நடவடிக்கை ஆண், பெண், ஆகியோருடைய சாதகங்களின் பொருத்தம் பார்த்தலாகும், மண உறவு மேற்கொள்ளப்படுமானால் மணமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவார்களா அல்லது அல்லலுக்கு உள்ளாவார்களா எனக் கண்டறிதலே பொருத்தம் பார்த்தல். மலபாரைச் சேர்ந்த சோதிடரான பணிக்கர் இவ்வாறு பொருத்தம் பார்க்கும்போது பின் வருவோர் அங்குக் குழுமியிருப்பர்.

அ. மணமகன் வீட்டைச் சேர்ந்தோர்:

1. தண்டான், தரையைச் சேர்ந்த தலைவன்.
2. மணமகன் தந்தை அல்லது குடும்பத்திற்குப் பெரியவன்.
3. மணமகன் தாய்மாமன்.

4. மணமகன் சகோதரிகளின் கணவன்மார்.
5. நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட நண்பர்கள்.
6. விரும்பி வந்திருக்கும் நண்பர்களும் உறவினர்களும்.

ஆ. மணமகள் வீட்டைச் சேர்ந்தோர்:

1. அவள் தரையினைச் சேர்ந்த தண்டான்.
2. மணமகள் தந்தை அல்லது பாதுகாவலன்.
3. மணமகள் தாய்மாமன்.
4. நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட நண்பர்கள்.
5. மணமகள் தரையைச் சேர்ந்த சோதிடர்.
6. விரும்பி வந்திருக்கும் நண்பர்களும் உறவினர்களும்.

இந்தச் சடங்கு மணமகள் குடும்பத்தில் - வீட்டில் - நடைபெற வேண்டும் என்பதே பொதுவான விதி. இதற்கு மணமகளின் தந்தையின் அனுமதி பெற்றாக வேண்டும். எனினும் இச் சடங்கிற்கும் இதனை அடுத்து நடக்கும் இரண்டு சடங்குகளுக்கும் அவன் நேரில் வந்து இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தண்டானே சாதியினைச் சேர்ந்த தலைவனாகையால் சாதியினைப் பாதிக்கும் எல்லாவற்றையும் பற்றியும் சாதியினைச் சேர்ந்த கைவினைஞர் பற்றியும் இவன் மேற்கொள்ளும் முடிவுகளே இறுதியானவை. தீயன் தண்டானை வட்டாரத்தைச் சேர்ந்த அரசரோ அவர் மூத்த ராணியோ பொறுப்பில் அமர்த்துவர். இப் பதவி பரம்பரை உரிமை உடையது. சில சமயங்களில் ராணி இந்தப் பரம்பரை உரிமையினை வேறொருவருக்கு மாற்றியும் தரலாம். தரையினைச் சேர்ந்த தண்டான் ஒவ்வொரு திருமணச் சடங்கின்போதும் தாலிகட்டுச் சடங்கின்போதும் ஒருத்தி கருவுற்ற ஐந்தாம் மற்றும் ஏழாம் மாதம் நடத்தப்படும் சடங்கின்போதும் எல்லா உதவிகளையும் செய்யக் கடமைப்பட்டவன். தாலிகட்டுவதற்கான சிறு கொட்டகையினை அமைக்கத் தேவைப்படும் கமுக மரத்தை வெட்டும் முன் தச்சன் தண்டானிடம் அதற்கான அனுமதியினைப் பெற்றாக வேண்டும். மணமுறிவு தொடர்பான நிகழ்ச்சிகளில் இவன் மிக முக்கியமான பொறுப்பு வகிக்கின்றான். புதுவீடு கட்டுவதற்காகக் கடைகால் இடும் சடங்கிலும் தண்டான் முக்கிய பங்கு வகிக்கின்றான். அப்பொழுது கோழிகள் பலியிடப்படும். அவற்றின் வலக்கால்கள் தண்டானுக்கு உரிமையுடையனவாகும். இவன் தன்னுடைய சாதியில் மட்டுமன்றி மற்றச் சாதியாரினுடைய சமூக நடைமுறைகளில் கூட முக்கிய பங்கு வகிக்கின்றான். ஒரு நாயர் இறப்பானாகில் அவனுடைய உடலை எரிக்கும்

பொறுப்புத் தண்டானுடையதே. தரையினைச் சேர்ந்த வண்ணானும் அம்பட்டனும் இவனுடைய கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளனர். இவன் விரும்பினால் அவர்கள் ஒரு குடும்பத்திற்குப் பணி செய்யக் கூடாது எனத் தடுத்து நிறுத்திவிடலாம். தச்சன். தட்டான், பொற்கொல்லன், கருங்கொல்லன் ஆகிய கைவினைஞர்களின் மணச் சடங்குகளை முன்னின்று நடத்தி வைப்பவனும் இவனே.

ஒரு சில தரைகள் சேர்ந்தது தேசம் எனப்படும். அதன் கொய்ம (ஆட்சி அதிகாரம்) ஒரு நாயர் தர்வாடின் பொறுப்பில் இருக்கும். இந்தத் தர்வாடைச் சேர்ந்த காரனவன் வாயிலாகவே தண்டான் ராசாவிடம் மேல்முறையீடுகளைச் செய்து கொள்ள வேண்டும். தண்டான்இந்த தர்வாடின் காரனவன் வழிகாட்டு நெறிப்படி ஓரளவு அவனுக்கு அடங்கி நடக்கக் கடமைப்பட்டவன். இவன் திருமணங்கள் நடைபெறும் சமயங்களில் தண்டானுக்கு இரண்டு மெய்க்காவலர்களை அமர்த்தக் கடமைப்பட்டவன். முன்பெல்லாம் சாமோரின் ஆட்சியில் உள்ள தரைகளில் தண்டான்களை அமர்த்தும் பொறுப்பு மூத்த ராணிக்கே உரியதாயிருந்தது. தண்டான் என்ற இச்சொல்லைப் பாலக்காடு வட்டத்தைச்சேர்ந்த தண்டர் என்ற சாதியாரோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. தண்டர் ஈழவர்களோடு தொடர்புடையவர்கள் எனத் தெரிகின்றது. இந்தத் தண்டர், சகோதரர்கள் பலர் ஒருத்தியை மனைவியாகக் கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றுபவர்கள். ஈழவர் இப்பழக்கத்தை இழிந்த வழக்காகக் கொள்வர்.

சாதகப் பொருத்தம் பார்த்து முடிவெடுக்கும் நிகழ்ச்சி பின்வருமாறு நிகழும். மணமகள் தரையினைச் சேர்ந்த தண்டான் பனையோலைப் பாயொன்றினைச் சோதிடருக்கு இடுவதோடு கூட மணமகன் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கும் அமரப் பாய்கள் அல்லது இருக்கைகளைத் தருவான். சோதிடர் அமரப் பொதுவாகத் தூங்கப் பயன்படுத்தும் தாழம்பாயினையோ மர நாற்காலியினையோ தருதல் கூடாது. பகல் அல்லது இரவு எந்த நேரத்தில் வேண்டுமாயினும் இச் சடங்கு நிகழ்த்தப்படலாம். எந்த நேரத்தில் இச் சடங்கு நடந்தாலும் சடங்கு நிகழும் இடத்தில் ஐந்து, ஏழு, ஒன்பது அல்லது பதினொரு திரியிட்ட குத்துவிளக்கினைச் சோதிடர் முன் ஏற்றி வைக்க வேண்டும். இந்த விளக்கினை உரிய இடத்தில் கொண்டு வந்து வைக்கும் பொறுப்பு தண்டான் மனைவியினுடையதாகும். அதன் பின் சிறுவனின் தாய்மாமன் சிறுவன் சாதகத்தை தன் தரையைச் சேர்ந்த தண்டானிடம் தருவான். அவன் அதனைச் சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம் தருவான். அவன் இருவருடைய

சாதகங்களையும் பெற்ற பின்பு அவற்றைச் சோதிடரிடம் தருவான். இரண்டு சாதகங்களும் இருபத்தொரு வகைப் பொருத்தங்கள் உடையனவாக இருக்க வேண்டும். இது அர்த்தமற்ற ஒரு வாதமாகலாம். இவ்வாறு இருப்பத்தொரு பொருத்தங்களும் அமையவில்லையாயினும் அவற்றுள் பெரும்பாலன பொருத்தமுடையனவாக இருந்தால் பொதுவாக அந்த மணத்தை நடத்துவர். சாதகங்கள் பொருத்தமுடையனவாக அமைந்தால் சிறுவனின் தாய்மாமன் தண்டான் வழியாக இரண்டு பணங்களைச் (எட்டணா) சோதிடனுக்குத் தருவான். சாதகங்கள் பொருந்தவில்லையாயின்இத் தொகையினைச் சிறுமியின் தாய்மாமன் கொடுப்பான். சாதகங்கள் (இவற்றை இச் சடங்குக்கு முன்பாகவே பொருத்தமுடையனவா எனப் பார்த்து அவை பொருத்தம் உடையனவாக இருக்கக் கண்டாலேயே இச் சடங்கினை நடத்துவர்). பின்னர் அதற்கு உரியவர்களிடம் சேர்ப்பிக்கப்படும். சாதகப் பொருத்தம் பார்த்தபின்னர் நிறைய இனிப்பு வகைகளோடு விருந்து நடத்துவர். அடுத்துக் கஞ்சிச் சடங்கு நிகழும். அதில் பின்வருபவர்கள் பங்கு பெறுவர்:

அ. மணமகன் வீட்டார் சார்பில்:

1. சிறுவனின் தந்தை, அண்ணன், அல்லது இவர்கள் சார்பில் ஒருவன்.
2. மணமான சகோதரிகளின் கணவன்மார்.
3. தாய்மாமன்.
4. தரையைச் சேர்ந்த தண்டான்.
5. நண்பர்களும் அண்டை அயலாரும்.

ஆ. மணமகள் வீட்டார் சார்பில்:

1. தாய்மாமன்.
2. மணமான சகோதரிகளின் உறவினர்கள்.
3. மணமான சகோதரர்களின் உறவினர்கள்.
4. மணமகள் தரையைச் சேர்ந்த சோதிடன்.
5. நண்பர்களும் உறவினர்களும்.

சோதிடர் மீண்டும் மணமக்கள் சாதகங்களை ஆராய்வார். அதன்படி அவர்களுக்கு நல்ல மகிழ்ச்சியான மணவாழ்க்கை அமையும் எனக் கூறுவார். சிறுவனின் தாய்மாமன் சோதிடனுக்கு இரண்டு பணங்கள் தருவான். ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்ட மணமக்களின் சாதகங்களைச் சிறுமியின் தாய்மாமன் சோதிடனிடமிருந்து பெற்றுச் சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம்

தர, அவன் அதனைச் சிறுவனின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம் சேர்ப்பிப்பான். அவன் அவற்றைச் சிறுவனின் தாய்மாமனிடம் கொடுப்பான். அதன்பின் சோதிடர் இருவீட்டாருக்கும் மணம் நடத்துவதற்கான நல்ல நாள், முகூர்த்த நேரம், மணமகள் தன் வீட்டை விட்டுப் புறப்படும் நேரம், மணமகன் வீட்டில் வந்து சேர்வதற்குரிய நேரம் ஆகிய விவரங்களோடு கூடிய ஓலையினை எழுதித் தருவான். பின்வரும் சடங்கினை அடுத்து நடத்துவர். வீட்டு முற்றத்தில் வெளிவாசலின் முன் கிழக்குப் பார்த்தபடி தூங்கப் பயன்படுத்தும் சாதாரணப் பாய் ஒன்றினை விரித்து, அதன் மீது புல்லாலான ஒரு பாயினையிட்டு அதன்மீது துவைத்துத் தூய்மையாக்கிய வெள்ளைத் துணி ஒன்றினை இடுவர். இதனருகே தரையில் பின்வரும் பொருள்கள் வைக்கப்படும்.

ஒற்றைப்படையில் திரியிடப்பட்ட ஒரு குத்து விளக்கில் அது எந்த நேரமாயினும் அதனைப் பொருட்படுத்தாது ஏற்றி வைப்பர்.

பலாமரத்தின் கட்டையால் செய்யப்பட்ட நாழி ஒன்றில் அரிசியினையிட்டு நிறைத்து வெண்கலத்தட்டின் மீது வைப்பர்.

தூய்மையானதாகத் துவைக்கப்பட்ட ஒரு வெள்ளைத் துணியினை ஒழுங்காக மடித்து வெண்கலத் தட்டில் உள்ள அரிசி அருகில் வைப்பர்.

கைப்பிடி இல்லாத கிண்டி ஒன்றில் நீர் நிறைத்து வைப்பர்.

விளக்கு விரிக்கப்பட்டுள்ள பாயினுக்குத் தெற்குப் பக்கமாக வைக்கப்படும். தட்டினை அதன் வடபுறமும் கிண்டியினை அதற்குச் சற்று வடக்கேயும் வைப்பர். பாயில்அமர்ந்திருப்பவர் எப்பொழுதும் கிழக்குப் பார்த்தவராக இருப்பார். முன்பே பாய் விரிக்கப்பட்டிருப்பதால் மேலே கூறப்பட்ட பொருட்களை வீட்டின் நடுக்கூடத்திலிருந்து மூன்று பெண்கள் எடுத்து வந்து அவற்றை உரிய இடத்தில் வைப்பர். தண்டான் மனைவி விளக்கை எடுத்து வருவாள். வீட்டினைச்சேர்ந்த மூத்தவள் வெண்கலத்தட்டினைக் கொண்டு வருவாள். வேறொருத்தி கிண்டியினை எடுத்து வருவாள். சிறுவனின் தரையினைச் சேர்ந்த தண்டானும் சிறுவனின் சகோதரியின் கணவனும் குடும்பத்து நண்பர் ஒருவரும் வெள்ளைத் துணி விரிக்கப்பட்டுள்ள பாயின் மீது அமர்வர். சிறுவனுக்கு இரண்டு மைத்துனர்கள் இருப்பார்களாயின் நண்பனுக்குப் பதிலாக **அவர்கள்** இருவரும் பாயில் அமர்வர். வீட்டைச் சேர்ந்த முதியவள் மூன்று **தட்டுக்களில்** அரிசிக் கஞ்சியினை ஊற்றி அதனைச்

சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம் தருவாள். அவன் அத்தட்டுக்களைப் பாயில் அமர்ந்துள்ளவர்களின் முன் வைப்பான். ஒவ்வொரு தட்டின் வலப்பக்கத்திலும் சிறிய வாழையிலையில் வெல்ல அச்சு ஒன்று வைக்கப்படும்., அமர்ந்திருப்பவர்கள் தங்கள் வலது கையில் ஒரு கரண்டி அளவு கஞ்சியினை ஊற்றிக் கொள்வர். பின் தண்டான் முன்பு கூறிய திருமண உறவு பற்றிய வாசகங்களை மீண்டும் கூறியவனாக "இந்தக் கஞ்சியினைக் குடிக்கலாமா?" எனக் கேட்பான். அவன் அந்தக் கஞ்சியில் கொஞ்சத்தைக் குடித்து வெல்லத்திலும் சிறிதளவு தின்று தண்டான் கேள்விக்கான உடன்பாட்டினைத் தெரிவிப்பான். பின் அங்குப் பாயில் அமர்ந்துள்ள மூவரும் கஞ்சியினைக் குடித்து வெல்லத்தினைத் தின்று முடித்துப் பாயிலிருந்து எழுவர். பின் அத்தட்டுக்களும் பாயும் அகற்றப்படும். அந்த இடத்தைத் தூய்மை செய்த பின் மீண்டும் அங்குப் பாயினை இடுவர். இதற்கிடையே வெற்றிலை வழங்கப்படும். பின் இரு தரையினைச் சேர்ந்த தண்டான்களும் பாயில் அமர்வர். சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டான் பாதியினைச் சிறுவனின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம் தருவான். ஆளுக்கு நான்கு வெற்றிலையினைக் கொடுத்து அவர்கள் வெற்றிலை மாற்றிக் கொள்வர். சிறுவன் வீட்டினைச் சேர்ந்த தண்டான் பின் நான்கு வெற்றிலைகளில் நான்கு பணத்தை வைத்து மடித்து அவற்றைச் சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டானிடம், "கஞ்சிச் சடங்கினை நாம் தொடங்குவோம்" எனக் கூறிக் கொடுப்பான். அதன்பின் தண்டான்கள் மீண்டும் முன்போல் வெற்றிலை மாற்றிக் கொள்வதோடு கூடியுள்ள சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றிலை வழங்குவர். சிறுவன், சிறுமி ஆகியோரின் தாய்மாமன்மார் முதலில் வெற்றிலை பெறுவர். வீட்டு முற்றத்தில் தொடங்கப் பெற்ற சடங்கு இத்துடன் முடிவுறும். சடங்கின் அடுத்த கட்டம் வீட்டின் நடுக் கூடத்தில் நிகழும். அங்கும் முன்பு போலவே பாய், விளக்கு முதலிய பொருள்களை ஏற்பாடு செய்து வைப்பர். சிறுவனை வலப்பக்கத்திலும் சிறுமியினை இடப்பக்கத்திலும் அமர்த்தியவர்களாக இரண்டு தரைகளையும் சேர்ந்த தண்டான்கள் பாயில் கிழக்குப் பார்த்தப்படி அமர்வர் சிறுவனின் தந்தை சிறுவனின் தாய்மாமனிடம் இரண்டு புதிய வெள்ளை வேட்டிகளை அவற்றின் மீது *21* பணங்களை *(ரூ.5-4-0)* வைத்துத் தருவான். அவற்றைக் கொடுக்கும்போது அவன், "அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளலாம்" என மும்முறை கூறுவான். சிறுமியின் தாய்மாமன் மும்முறை, "நான் அடையாளத்தைப் பெற்றுக் கொள்கின்றேன்" எனக் கூறி அவற்றை வாங்கிக் கொள்வான். தண்டான்கள் மீண்டும் வெற்றிலை மாற்றிக் கொள்வர். பின் அது கூடியுள்ள சாதியாரிடையே வழங்கப்படும். பின் விருந்து நடைபெறும்.

அதன்பின் மீண்டும் வெற்றிலை வழங்குவர். மணத்திற்குரிய நாளினை இச்சமயத்திலேயே முடிவு செய்வர், மீண்டும் அனைவரும் நடுக்கூடத்தில் கூடுவர். தண்டான்கள் பாயில் அமர்வர். சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டான் சிறுவனின் தரையினைச் சேர்ந்த தண்டானோடு ஒரு கட்டு வெற்றிலையைப் பங்கிட்டுக் கொள்வான். அவன் அதில் நான்கு வெற்றிலையை எடுத்து அதன் மீது இரண்டு ரூபாய்களை வைத்து அதனைச் சிறுமியின் வீட்டைச் சேர்ந்த தண்டானிடம் தருவான். சிறுவன் வீட்டைச் சேர்ந்தவர்கள் இத்தொகையினைத் தர வேண்டும். இது சிறுமியின் வீட்டைச் சேர்ந்த தண்டானுக்குச் சேர வேண்டிய தொகை ஆகும். இந்தத் தொகையினை வெற்றிலையில் வைத்துத் தரும்போது சிறுவன் தரையினைச் சேர்ந்த தண்டான், "வரும் . . . . (ஒரு நாளினைக் குறிப்பிடுவான்) . . . . இவனும் . . . . இவளும் (மணமக்கள் பெயரைக் குறிப்பிடுவான்) நான்கு நண்பர்களும் நான்கு பெண்களும் வருவோம். அப்போது நீ இந்தச் சிறுமியைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும்" எனக் கூறுவான். அதற்குச் சிறுமியின் தரையினைச் சேர்ந்த தண்டான், "நீ ஆறு சேலைகளையும் நாற்பத்திரண்டு பணங்களையும் (ரூ.10-8-0) காணமாகவும் இரண்டு பணங்களை மச்சனுக்கும் கொண்டு வருவாயானால் சிறுமியை உன்னோடு அனுப்பி வைப்போம்" எனக் கூறுவான். இச் சமயத்தில் கொண்டு வரப்படும் சேலைகள் நான்கு முழ நீளமுடைய எண்ணெய்க் கச்சா என்ற வகையினைச் சேர்ந்தனவாகும். அத்தகைய சேலைகள் இப்பொழுது வழக்கிழந்து விட்டதால் விலைக்குப் பெறுதல் இயலாது. காணம் என்பது நிலத்திற்கான குத்தகைத் தொகையினைக் குறிக்கும் சொல்லாகும். இதற்குச் சரியான ஆங்கிலச் சொல் ஏதுமில்லை. இது நிலத்தைக் குத்தகைக்குச் சாகுபடி செய்யும் ஒருவன் நில உடமையாளருக்குச் செலுத்தும் அடகுத் தொகையாகும். மற்றொரு குத்தகைகாரன் நில உடமையாளன் முதல் அடகுகாரனை வெளியேற்றிவிட்டு இரண்டாமவனைக் குத்தகைக்கு வைப்பான். இதனால் மக்களிடையே மிகுதியான மனக் கசப்பும் சச்சரவுகளும் நிகழ்கின்றன. ஒரு குத்தகைகாரனை நிலத்தைவிட்டு வெளியேற்றும்போது அவன் நிலத்தின் முன்னேற்றங்கருதிச் செய்துள்ள சில செயல்களுக்கு ஏற்ப ஒரு தொகையினைப் பெற உரிமையுடையவன். அவன் நட்டு வளர்த்துள்ள மரங்கள் ஒவ்வொன்றுக்கும் சட்டணாக்கள் வீதமும் அவன் பெறுவான். காணத் தொகையினைச் சிறுவனின் சகோதரி அல்லது சகோதரிகள் சேர்ந்து செலுத்துவர். சிறுவன் தரையினைச் சேர்ந்த தண்டான் அச்சிறுவனின் மச்சானை அல்லது மச்சான்மார்களை நோக்கிப் பின்வருமாறு கூறுவான். "வரும் . . . . (ஒரு நாளினைக் குறிப்பிடுவான்) அன்று நீ அதிகாலையில் காணத் தொகையான ரூ.10-8-0

உடன் வந்து சேரவேண்டும்.'' இவ்வாறு கூறி அவனுக்கோ அவர்களுக்கோ நான்கு வெற்றிலையைத் தருவான். பின்னர் அனைவரும் கலைந்து செல்வர். சிறுவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட மணநாளுக்கு முன் சிறுமியின் வீட்டுக்குச் செல்லமாட்டார்கள்.

திருமணம் தொடர்பான அடுத்த நிகழ்ச்சி அழைப்பிதழ் அனுப்புதலாகும். சிறுவனின் வீட்டைச் சேர்ந்த மூத்தோரான பெண்களும் தண்டானும் நண்பர்கள் சிலரை மணமகன் இல்லத்தில் வந்து கூடுமாறு அழைப்பர். வீட்டின் நடுக்கூடத்தில் பாய், குத்துவிளக்கு முதலியன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். மணவாளன் தன் இருபுறமும் இரு நண்பர்களை அமர்த்தியபடி பாயில் அமர்வான். அவன் குளித்து முடித்துப் புத்தாடை புனைந்து நெற்றி, மார்பு, தோள் ஆகியவற்றில் சந்தனக் கீற்றுக்களைத் தீட்டிக் கொண்டிருப்பான். அவன் வலது கையில் தங்கக் கடகத்தையும் இடையில் தங்கம் அல்லது வெள்ளியால் பிடியிட்ட கத்தியினையும் வேட்டியின்மேல் தங்கம் அல்லது வெள்ளியாலான இடைக்கச்சையினையும் அவனுக்குத் தண்டான் அணிவிப்பான். கடகம் வேலைப்பாடுகள் கொண்டதாக இருக்கும். வெறும் வளையலைக் கடகமாக ஆண்கள் அணியும் வழக்கம் இல்லை. இடைக் கச்சை சங்கிலியமைப்பு உடையதாக இருக்கும். இவற்றோடு கூட இவன் காதில் வளையங்களையும் கைவிரல்களில் மோதிரங்களையும் அணிந்து கொள்ளவேண்டும். அவனுக்கான காணம் தொகையினைத் தரும் அவனுடன் பிறந்தவளும் இதே போன்று தன்னை அலங்கரித்துக் கொள்வாள். கரையில்லாத பட்டுச் சேலையினை அணிந்திருக்கும் அவள் இரண்டு கைகளிலும் வளையல் அணிந்திருப்பாள். அனைவரும் நல்ல விருந்து உண்டபின் அழைப்பு விடுக்கப் புறப்படுவர். முதலில் தண்டான் வீட்டுக்குச் செல்வர். தண்டானும் அவன் மனைவியும் மணவாளனின் மூத்த சகோதரி பின்னே வர அழைப்பு ஊர்வலத்தில் முன் செல்வர்,. அவர்களை அடுத்து ஒரு நண்பன் முன்னேயும் ஒரு நண்பன் பின்னேயும் வர மணவாளன் செல்வான். தண்டான் வீட்டில் அவர்கள் மீண்டும் உணவு கொள்வர். அதன்பின் மூன்று, ஐந்து அல்லது ஏழு வீடுகளுக்குச் சென்று அழைப்பு விடுப்பர். திருமணத்திற்கான அழைப்பினை நேரிலேயே தருதல் வேண்டும். அழைப்பு விடுப்பதற்கான அன்றையச் சடங்குகள் இத்துடன் முடிவுறும். மூன்று நாள்கள் சென்றபின் மணமகனின் மைத்துனர்கள், மாமன், மற்ற உறவினர்கள் அழைக்கப்படுவர்.

மணச் சடங்கின்போது முதலில் அம்பட்டன் மணவாளனுக்குத் தலையை மழிப்பான். வழக்கம் போல் முன்தலையில் உள்ள மயிர்மட்டும்

நீக்கப்படாது விடப்படும். வீட்டிற்குக் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள சிறிய கொட்டகையில் தலை மழித்தல் நடக்கும். தலைமுடி கீழே விழாதபடி மணமகன்ஒரு வாழையிலையை விரித்து அதன்மீது அமர்ந்திருப்பான். வழக்கமாகத் தலைமழிக்கும்போது அம்பட்டன் தலை மழிப்பவனுக்கு முன்னால் அமர்ந்திருக்கக் தலை மழித்துக் கொள்பவன் சம்மணமிட்டு அமர்ந்து தலையைக் குனிந்து கொள்வான். ஆனால் இச் சமயத்தில் மணமகன் ஒரு மணையில் அமர்ந்திருப்பான். அவனருகே ஒரு விளக்கும் ஒரு வாழையிலையில் ஒரு படி அரிசியும் வைக்கப்பட்டிருக்கும். அம்பட்டன் மணமகனின் மாப்பிள்ளைத் தோழர்களான இரு நண்பர்களுக்கும் தலைமழிப்பான். இதற்காக அவன் ஒரு பணமும் அரிசியும் கட்டணமாகப் பெறுவான். பின்னர் தலை மழித்துக் கொண்ட மூவரும் குளித்துச் சந்தன கீற்றுத் தீட்டிக் கொண்டு புத்தாடை புனைவர். மணமகன் இடையில் வெள்ளை வேட்டி உடுத்தி அதன்மீது *14* முதல் *21* முழம் வரையான நீளமுள்ள குறுகலான பட்டுக் கச்சையினை அணிவான். அதன் இருமுனைகளும் முன்னும் பின்னும் தொங்கியபடி இருக்கும். தோளில் சரிகையோடு கூடிய பட்டாலான சிறு துண்டினைப் போட்டுக் கொள்வான். காதில் வளையங்களும் கழுத்தில் சக்கர மாலை* என்ற அணியினையும் புனைவான். வலது மணிக்கட்டில் பொன்னாலான வளை பூண்பான். விரல்களில் மோதிரங்கள் அணிந்து, இடையில் வெள்ளி அல்லது தங்கத்தாலான சங்கலியினைப் புனைந்து கொள்வான். பொன் அல்லது வெள்ளியால் பிடியிடப்பட்ட கத்தியினைப் பொன் அல்லது வெள்ளியாலான உறையிலிட்டு இடையில் கட்டிக் கொள்வான். அவனுடைய இரண்டு தோழர்களும் கிட்டத்தட்ட அவனைப் போலவே ஆடை அணிகள் புனைவர். எனினும் அவர்கள் கழுத்துச் சங்கிலியும் வளையும் புனையார். பெண்கள் விருப்பம் போல் வேண்டிய அளவு அணிகளை அணிந்து கொள்வர். மணமகள் உடன்பிறந்த பெண்கள் இரண்டு கைகளிலும் கடகம் அணிவதோடு கழுத்துச் சங்கலியும் புனைந்து விராளி என்னும் பட்டுத் துண்டினைப் போட்டுக் கொள்வர். ஆண்கள் அணியும் வளையல் வளை எனப்படும். இது ஒரே பொன் கம்பியாலானது. பெண்கள் அணியும் வளையல் கடகம் எனப்படும். இது இரண்டு கம்பிகளாலானது. ஒப்பனைகள் முடிந்தபின் வீட்டின் நடுக்கூடத்தில் பாய்களை விரித்து முன்பு போலவே பிறபொருள்களையும் கொண்டுவந்து வைப்பர். மணமகனும் அவன் தோழர்களும் பாயில் அமர்வர். பின் அவர்கள் உடனே எழுந்து வீட்டு வாசலில்

---

* முல்லைப் பூ மாலை, அவல் மாலை, மணிமாலை, பவள மாலை என்பன கழுத்தில் அணியும் பிற சங்கிலிகளாகும். இவை அனைத்தும் பெண்களுக்குரியன.

அமைக்கப்பட்டுள்ள கொட்டகையினை நோக்கிச் செல்வர். பாய்கள் முதலிய பிற பொருள்களும் வீட்டுக் கூடத்திலிருந்து அந்தக் கொட்டகைக்கு எடுத்து வரப்படும். அங்கு அவர்கள் மீண்டும் பாயில் அமர்வர். அதன்பின் தண்டான் மணமகனுக்கும் அவன் தோழர்களுக்கும் வெற்றிலை வழங்குவான். அவர்கள் அதனை வாயிலிட்டு மென்று தின்பர். தண்டான் மனைவியும் மணமகன் இல்லத்தைச் சேர்ந்த முதியவளும், மணமகன் சகோதரியும் அவர்கள் தலைமீது அரிசி தூவுவர். தண்டான் மணமகனுக்கும் அவன் தோழர்களுக்கும் ஒவ்வொரு வாளினைத் தருவான். பின்னர் ஊர்வலம் புறப்படும். ஊர்வலத்தின் முன்னே 'தேசத்தின்' கொய்மாவால் எற்பாடு செய்து அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு நாயர்கள் செல்வர். அவர்களைத் தொடர்ந்து தண்டான்களும் சில முதியவர்களும் செல்வர். அவர்களுக்குப் பின் தண்டானின் மனைவியும் சில முதிய மகளிரும் செல்ல, அவர்களுக்குப் பின்னே மணமகனும் அவன் தோழர்களும் அவன் உடன்பிறந்த சகோதரிகளும் செல்வர். ஊர்வலத்தின் இறுதியில் கூட்டத்தினர் செல்வர். மெல்ல ஊர்ந்து செல்லும் ஊர்வலத்தில் பலர் ஆடுவர். சிலர் போலியாக வாட்போர் புரிந்தவர்களாகச் செல்வர். மணமகள் வீட்டின் முன் மணமகள் தரையினைச் சேர்ந்த தண்டான் மனைவி, ஏற்றிய ஒரு விளக்கினை ஏந்தியவளாக இவர்களை வரவேற்பாள். வீட்டைச் சேர்ந்த முதியவள் அரிசியோடு கூடிய ஒருதட்டில் மடித்து வைத்த துணியினை ஏந்தி நிற்க, மற்றொருத்தி கிண்டியில் நீரினை ஏந்தி நிற்பாள். ஊர்வலத்தினர் வீட்டு வாசலில் நுழையும்போது அவர்கள் மீது இப்பெண்கள் சிறிது அரிசியினைத் தூவுவர். மணமகன் ஒரு பாயில் அமர அவன் அருகே விளக்கு முதலியனவைகளை வைப்பர். மணமகள் வீட்டைச் சேர்ந்த தண்டான் மணமகன் முதலியவர்கள் தாங்கி வந்த வாள்களைத் தன் பொறுப்பில் பெற்றுக் கொள்வான். வெற்றிலை வழங்கியபின் அனைவரும் விருந்துன்பர். மணமகன் தன்னோடு கொண்டுவர வேண்டிய ஆறு முண்டுகள் மூன்று இரட்டை முண்டுகளாகும். அவற்றுள் ஒன்று மணமகளுக்கான சேலையாகும். மணமகளுக்கு அச் சேலையினை உடுத்துவிடும் உரிமை மணமகன் வீட்டைச் சேர்ந்த தண்டான் மனைவிக்கும் மணமகன் உடன்பிறந்தவளுக்கும் உரியனவாகும். மணநிகழ்ச்சிக்காக மணமகளுக்கு தனிப்பட்ட முறையில் சேலை அணிவிக்கப்படும். தலை முதல் பாதம் வரை பட்டாடையால் போர்த்தப்பட்டிருக்கும் மணமகள் கண்கள் மட்டுமே வெளியே புலனாகும். மணமகள் வீட்டுக்கு வந்து சேர்ந்துள்ள மணமகன் கூர்ங்கோபுர வடிவிலான தலைப்பாகை ஒன்றினை அணிந்து கொள்ள வேண்டும். இது கெட்டித் துண்டினால் கைக்குட்டை ஒன்றினையிட்டு இறுக்கிக் கட்டப்பட்டிருக்கும். மணமகன் உடன்பிறந்தவள் மணமகனை வீட்டு முற்றத்தில்

அமைக்கப்பட்டுள்ள சிறிய பந்தலுக்கு அழைத்துச் செல்வாள். கணம் தொகையும் மணமகள் உடுத்தியதுபோக எஞ்சியுள்ள நான்கு சேலைகளும் மணமகள் உடன்பிறந்தவளால் மணமகள் அன்னையிடம் ஒப்படைக்கப்படும். அவர்களும் இருவரும் பட்டுக் குட்டையினைத் தோளில் பிராமணர்கள் பூணூல் அணிவதைப் போல்க் குறுக்காக அணிந்தவர்களாக மணமகன் பின்னால் வலப்புறத்தில் மணமகள் அன்னையும் இடப்புறத்தில் மணமகன் உடன்பிறந்தவளுமாக நிற்பர். மணமகன் உடன்பிறந்தவள் மும்முறை காணத்தைக் கொடுக்கலாம் இல்லையா எனக் கேட்டபடி அதனை மணமகள் அன்னையிடம் தருவாள். அவள் மும்முறை சரி, காணத்தைக் கொடு எனக் கூறியவளாக அதனைப் பெற்றுக் கொள்வாள். பெண்ணின் அன்னை உடனே அதனைத் தன் கணவனிடம் அல்லது குடும்பத்தைச் சேர்ந்த பெரியவரிடம் சேர்ப்பிப்பாள். அதன்பின் தண்டான் மணமகன் முன்னும் அவன் தோழர்கள் முன்னும் வாழையிலைகளை இடுவான். பின் சோறுள்ள ஒரு தட்டினைத் தாங்கியவனாக மணமகனை நோக்கி நிற்பான். மணமகள் அன்னை அவனுக்குப் பின்னால் நின்றபடி மும்முறை மணமகன் இலையிலும் அவன் தோழர்கள் இலையிலும் சோறிடுவாள். மணமகள் அன்னை பின் சில வாழைப் பழங்கள், பப்படங்கள், சர்க்கரை, நெய் ஆகியனவற்றை மணமகன் இலையில் உள்ள சோற்றில் இட்டுப் பிசைந்து அதனை மணமகனுக்கு மும்முறை ஊட்டிவிடுவாள். எனினும் அவன் அதனை உண்ண அனுமதியாள். அவன் உதட்டிலிருந்து அவற்றை அவள் எடுத்துத் தர வண்ணாத்தி அவற்றைப் பெற்று அப்புறப்படுத்துவாள். மணமகன் உடன்பிறந்தவளும் இதே போன்று மணமகளுக்குச் சோறூட்டும் சடங்கினை நிகழ்த்துவாள். இந்தச் சடங்கில் பயன்படுத்தப்படும் சோறு அயினி எனப்படும். திருமணத்திற்குச் சில நாள்கள் முன்பு இரண்டு கவுளி வெற்றிலை, கொஞ்சம் பாக்கு, ஆறு புகையிலை, இரண்டு பணம் ஆகியன மணமகனால் தேசத்தைச் சேர்ந்த வட்டாரத் தலைவனான நாயருக்கு அவன் இரண்டு மெய்க் காவலர்களைத் தந்துதவுவதற்கான கட்டணமாகச் செலுத்த வேண்டும். இவற்றுக்கு ஈடாக அவன் மணமகனுக்கு ஒரு வேட்டியை வழங்குவான். மெய்க்காவலர்களாக வரும் இரண்டு நாயர்களுக்கும் மணமகன் மணநிகழ்ச்சிகள் தொடங்கும் முன் மூன்றுபடி அரிசி, பத்துப் பன்னிரண்டு பப்படங்கள், வாழைப்பழம், தேங்காய், கொஞ்சம் காய்கறிகள் ஆகியன தர வேண்டும். இந்த மெய்க்காவலர்கள் மணநாளன்று மணம் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு அவல், புட்டு, தேங்காய், பழம், சாராயம் ஆகியனவும் வழங்கப்படும், மணமகள் பெற்றோரும் உறவினரும் ஊர்வலத்தில் சடங்கிற்கு வரும்போது இதே நாயர்கள் மெய்க்காவலர்களாக

இருப்பர். அப்போதும் இவர்களுக்கு மேற்கண்ட பொருள்கள் வழங்கப்படும். மணமகனும் மற்றவர்களும் மணமகள் வீட்டிலிருந்து புறப்படும் சமயம் மணமகளுடைய தந்தையாடு உடன்பிறந்தவளுடைய மகனான மச்சனன் எனப்படுவோன் மணமகன் வீட்டார் முன்னால் வந்து மணமகளை அழைத்துச் செல்லத் தரப்படும் அனுமதிக்கு ஈடாக இரண்டு பணம் தரும்படி கேட்பான். அவனுக்கு அத்தொகை தரப்படும். அதன்பின் மணமக்கள் தலைமீது அரிசி தூவியபின் மணமகன் உடன்பிறந்தவள் மணமகளை நடத்திச் செல்ல அனைவரும் மணமகன் இல்லம் நோக்கிப் புறப்படுவர். தண்டானிடம் வந்தவுடன் ஒப்படைக்கப்பட்ட வாள்களை ஊர்வலத்தினர் பெற்றுத் திரும்பும்போதும் வாள்போர் வித்தைகளை நிகழ்த்திச் செல்வர்.

ஒரு சிறுமியின் தந்தையோடு உடன்பிறந்தவள் மகன் அவளைக் கரம்பிடிக்க உரிமைகொண்டாடும் வழக்கம் தென்னிந்தியா முழுவதும் பரவலாகப் பெரும் அளவில் காணப்படுகின்றது. இந்த வழக்கம் திராவிடர்களிடையே மட்டுமன்றிப் பிராமணர்களிடையேயும் காணப்படுகிறது. மருமகன் என்பதற்கான மலையாளச் சொல் 'அக்காமகன்' என்பதாகும். இத்தகைய உறவினனல்லாத ஒருவன் ஒருத்தியை மணந்தாலும் அவன் மருமகன் என அழைக்கப்படாமல் அக்கா மகன் என்றே அழைக்கப்படுகின்றான். அவ்வாறு மணக்கும் ஒருவன் மணக்கும் உரிமையுடையவனுக்கு அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் முன் எட்டணாச் செலுத்த வேண்டும். இதற்கான விளக்கம் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது. ஒருத்தி தன்னோடு உடன்பிறந்தவனுக்கு மனைவியாக வருபவளுக்கு விலையாக நாற்பத்திரண்டு பணங்களைக் காணமாகச் செலுத்துகின்றாள். இவ்வாறு தன் தாய் தொகை செலுத்தி மனைவியாகப் பெறப்படும் ஒருத்தி பெற்றெடுக்கும் பெண்ணைத் தனக்குக் கட்டித் தராது வேறொரு குடும்பத்தைச் சேர்ந்தவனுக்குக் கட்டித் தந்தால் தன்னுடைய தாய் செய்த முதலீட்டுக்கு ஈடாக ஒரு தென்னை மரத்தை வேறொருவனுக்கு மாற்றித் தரும்போது பெறப்படும் தொகையான எட்டணாவினைப் பெற உரிமையுடையவனாகின்றான். எப்படியாயினும் ஒருவனுடைய மகளை மணக்க அவனோடு உடன்பிறந்தவளுடைய மகனுக்கே முன்னுரிமை உண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. இந்த உரிமைக்கு மாறாக அவளை மணந்து செல்லும் அயலான் எட்டணாவினை அதற்கு ஈடாகச் செலுத்த வேண்டும்.

மணமகன் இல்லத்தில் மணமக்களைத் தண்டானின் மனைவியும் இல்லத்தவளும் வரவேற்பர். மணமகளுக்குப் பின்னால் அவள் பெற்றோரும் பிற

உறவினர்களும் நாயர் மெய்க்காவலர்களும் தரையினைச் சேர்ந்த தண்டானும் வருவர். முன்பு போலவே பாயில் அமர்ந்து அரிசி முதலியன தூவும் சடங்கினை நடத்துவர். தண்டான் வாள்களைப் பெற்று வைத்துக் கொள்வான். அனைவரும் கொட்டகையில் அமர்வர். மணமகன் அன்னையும் உடன்பிறந்தவளும் மணமகளுக்கு அயினி ஊட்டும் சடங்கு இங்கு நிகழ்த்தப்படும். அதன்பின் மணமக்கள் வீட்டின் உட்கூடத்தில் சென்று மகிழ்ந்தவர்களாக இருப்பர். அங்கு அவர்களுக்கு உண்ண இனிப்புகள் தருவர். அதன்பின் அச்சாரம் எனப்படும் அன்பளிப்புச் சடங்கு நிகழ்த்துவர். உறவினர்கள் ரூ. *25-4-0(101* பணம்*)* செலுத்தக் கடமைப்பட்டவர்கள். என்றாலும் இவர்களுள் வசதியற்றவர்கள் ரூ.*5-4-0 (51* பணம்*)* தந்தாலும் போதுமானது. மற்றவர்கள் தங்கள் வசதிக்கேற்ப அன்பளிப்பினை வழங்குவர். இந்த அன்பளிப்புகள் வட்டியோடு கூடத் திரும்பச் செலுத்தப்படும் தொகையினைப் பற்றிய கணக்குகளை எழுதுவதைத் தண்டான் மேற்பார்ப்பான். பின்னர் தொகையினைக் கணக்கிட்டு மணமகனிடம் செலுத்தி விட்டுத் தன்னுடைய இந்தப் பணிக்குக் கூலியாக எட்டணாப் பெற்றுக் கொள்வான். கணக்கு எழுதுபவனும் செலுத்தப்படும் பணம் செல்லக்கூடியதா எனச் சோதித்துப் பார்ப்பவனும் ஒரு கவளி வெற்றிலையும் நான்கு பாக்கும் இரண்டு புகையிலையும் பெறுவர். அன்பளிப்புச் செலுத்துபவர்களுக்கு மேற்கண்டவை வழங்கப்பெறும். இதன்பின் வடில் எனப்படும் வீட்டுச் சடங்கு நிகழ்த்துவர். வெற்றிலையினை இரண்டு பெரிய கட்டுக்களாகக் கட்டுவர். ஒவ்வொரு கட்டிலும் ஆயிரம் அல்லது ஆயிரத்தைநூறு வெற்றிலைகள் இருக்கும். ஒவ்வொரு கட்டோடும் நாற்பது அல்லது ஐம்பது புகையிலையும் எழுபது முதல் நூறு வரையான பாக்கும் இணைக்கப்படும். மணமகளுடைய தரையினைச் சேர்ந்த தண்டான் மணமகன் தரையினைச் சேர்ந்த தண்டானுக்கு இரண்டு ரூபாயினை வடில் காணமாக செலுத்துவான். அவன் அத்தொகையினை மணமகன் தந்தையிடம் சேர்ப்பிப்பான். பின்னர் மணமகன் ஒரு கட்டு வெற்றிலையையும் பாக்கில் பாதியினையும் புகையிலையினையும் மணமகள் தந்தையின் முன் வைப்பான். எஞ்சியவை மணமகள் அன்னையின் முன் வைக்கப்படும். அவற்றை மணமகள் தரையினைச் சேர்ந்த தண்டானும் அவன் மனைவியும் கூடியுள்ள விருந்தினரிடையே வழங்குவர். பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்படுவதோடு மணச் சடங்குகள் முடிவுறும். அடுத்து மணமகள் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் மணமகன் இல்லத்திற்கு வழக்கப்படி சென்று மணமகனையும் மணமகளையும் தங்களுடன் அழைத்து வருவர். இக் குழுவில் மணமகளின் அன்னை, தாய்மாமன், உடன்பிறந்தோர் மனைவியர், தண்டான் மனைவி ஆகியோரும் பிற உறவினர்களும் இருப்பர். இவர்கள் தங்களோடு

பெருமளவு இனிப்புப் பணியாரங்களையும் ரொட்டியினையும் கொண்டு செல்ல வேண்டும். மீண்டும் மணமக்களை மணமகன் இல்லம் அழைத்துவர மணமகன் உடன்பிறந்தவளும் பிற உறவினர்களும் செல்லும்போது அவர்கள் நிறைய வெற்றிலை பாக்கு, புகையிலை இனிப்புப் பலகாரங்கள் ஆகியனவற்றை உடன்கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு மாறி மாறி மணமக்களை அழைத்துச் செல்லும் சடங்கு இத்துடன் முடிந்துவிடுவதில்லை. அடுத்துவரும் ஓணம், விசு பண்டிகைகளுக்கு மணமக்கள் மணமகள் இல்லத்திற்கு அழைக்கப்படுவர். ஓணம் முதல் அறுவடையைக் குறிக்கும் திருநாள். விசு பயிர்த்தொழில் தொடங்கப்படுவதைக் குறிக்கும் திருநாள். இச் சமயங்களின் மணமகள் இல்லம் செல்லும் மணமகன் தன்னோடு வழக்கம் போல் நிறைய வெற்றிலையை எடுத்துச் செல்வதோடு மணமகள் பெற்றோருக்கும் அவள் வீட்டில் உள்ளோருக்கும் புதிய உடைகளையும் கொண்டு சென்று தர வேண்டும். மணம் நிச்சயமானதற்கும் மணச் சடங்கு நிகழ்தற்கும் இடைப்பட்ட காலத்தில் திருவாதிரை விழா வருமானால் அப்போது மணமகன் தன் தரையைச் சேர்ந்த தண்டானிடமும் உறவினர்களிடமும் கோயிலுக்கு வாழைப் பழங்களையும் வாழைக்காய்களையும் கொடுத்து அனுப்பக் கடமைப்பட்டவன்.

மேலே கூறப்பட்ட சடங்குகள், மருமக்கள் தாய உடைமை உரிமை முறை வழக்கில் இருக்கும் வட திருவாங்கூர் பகுதியில் பல மாற்றங்களைக் கொண்டனவாக அமையும். அங்கு மணச் சடங்குகள் எளிமையானவை.

கள்ளிக்கோட்டை வட்டத்தில் ஒருவன் ஒரு சமயத்தில் ஒருத்தியுடன் மட்டுமே வாழ வேண்டும் என்ற விதி உள்ளது. தன் மனைவி மலடியாகவோ தொழுநோயாளியாகவோ தீராத நோயுடையவளாகவோ இருந்தால் அவன் மற்றொருத்தியை முதல் மனைவியின் உடன்பாடு பெற்று மணக்கலாம். மணமகள் வயது எவ்வளவாக வேண்டுமானாலும் இருக்கலாம். வரதட்சணை இவ்வளவு தரவேண்டும் என்ற கட்டாயமான விதியில்லாததால் மணமகளுக்கு இயன்ற அளவு நகைகள் போடுவது அவளுடைய பெற்றோரின் கடமையாகக் கருதப்படுகிறது. கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் அனுமதிக்கின்றனர்.

போதுமான காரணங்கள் காட்டப்படுமானால் மணமுறிவினையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். மணமக்களிடையே ஒத்துப்போகும் இயல்பு

இல்லையானால் அவர்கள் மணமுறிவு பெற்றுக் கொள்வதில் தொல்லையேதும் இராது. குறிப்பிட்டுச் சில காரணங்களை அதற்காகக் காட்ட வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒருவன் தன் மனைவியினை மணமுறிவு செய்துகொள்ள முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவன் அவள் திருமணத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகையினைத் திரும்பச் செலுத்த வேண்டும். முதலில் மண உறவுக்கான பேச்சு வார்த்தைகளை முன்னின்று நடத்தியவர் சாதியினைச் சேர்நதவர்கள் இந்தத் தொகை இவ்வளவு என முடிவு செய்வர். தன் மனைவியின் குடும்பத்தாரிடமிருந்து பெற்ற அணிகளையும் அவன் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். அத்தோடு அவளைக் கன்னி கழிந்தவளாக ஆக்கி அவள் எளிதில் வேறொரு கணவனைப் பெறமுடியாது செய்தமைக்காக மேலும் கொஞ்சம் தொகையினையும் தர வேண்டும். ஒருத்தி தன் கணவனை மணமுறிவு செய்து கொள்ள முதலில் நடவடிக்கை மேற்கொள்வாளாகில் அவள் தன் கணவன் மணத்திற்காகச் செலவு செய்த தொகையினைத் திரும்பச் செலுத்த வேண்டும். கணவன் மனைவியருள் குற்றத்திற்கு உள்ளானவர்கள் என முடிவு செய்யப்படுபவர் ஐந்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை தண்டானுக்கும் கூடியுள்ளவர்களுக்கும் தர வேண்டும். அந்தத் தொகை உறவினர்களைத் தவிர எஞ்சியுள்ள சபை உறுப்பினர்களிடையே அங்கேயே பிரித்துத் தரப்பட்டுவிடும். மணமுறிவினை நடைமுறைப் படுத்துவதற்கான நெறிமுறைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்படும். இரு தரையினையும் சேர்ந்த தண்டான்கள், மாமன்மார்கள், பிற உறவினர்கள், சில போது மணமக்களின் பெற்றோர்கள் உட்பட அனைவரும் மனைவியின் வீட்டிலோ ஒரு தண்டான் வீட்டிலோ ஒரு உறவினர் வீட்டிலோ கூடுவர். எரியும் குத்துவிளக்கிற்கு இடப்புறம் இரண்டு சிறு மர நாற்காலிகள் போடப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்றின் மீது ஒரு சிறு துண்டின் முனையில் ஒரு ரூபாய் (நான்கு பணம்) முடிந்து வைக்கப்பட்டிருக்கும். மற்றொரு துண்டின் முனையில் சிறிது அரிசியும் நான்கு பணமும் முடிந்து வைக்கப்பட்டிருக்கும். அதன் அருகே உள்ள மற்றொரு நாற்காலி யின் மீது மனைவியின் தாய்மாமன் தன் வேட்டியிலிருந்து பிரித்து எடுத்த ஒற்றை நூலினை நீளவாக்கில் போட்டிருப்பான். கணவன் அந்த நாற்காலியின் அந்த வீட்டின் வாசலுக்குத் தூக்கிச் சென்று தன் மனைவியின் உடன்பிறந்தவனிடமோ தந்தையிடமோ, "உன் உடன்பிறந்தவள் (மகள் அல்லது அக்கா மகளின்) என்னோடு கொண்ட மண உறவு அறுந்துவிட்டது எனக் கூறுவான்." அவ்வாறு கூறியபின் அவன் அந்த நாற்காலியின் மீதுள்ள நூலினை வாயால் ஊதிப் பறக்கவிட்டு அந்த இடத்திலேயே நாற்காலியினைக் கீழே வைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறி விடுவான். இந்தச் சிறு சடங்கினைக் கணவன் வீட்டில்

நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தினரல் அது அவனை அவனுடைய வீட்டிலிருந்து எப்போதுமே வெளியேற்றியதாக ஆகிவிடும், துண்டில் முடியப்பட்டுள்ள தொகை தண்டான்களைச் சேரும். அந்தத் துண்டுகளைத் தருபவன் மணமகன் மாமனாவான். கஞ்சிக்குடிச் சடங்கின்போது இரண்டு வேட்டிகளை இவன் பெற்றுக் கொள்வதால் இச் சடங்கின்போது அவன் அவற்றைத் திருப்பித் தர வேண்டியவனாகின்றான். கணவன் மனைவி ஆகிய இருவரின் உடன்பாட்டினையும் பெற்ற பின்னரே ஒரு மணமுறிவினை நிகழ்த்த முடியும்.

முதன்முதலில் பூப்படைந்த ஒருத்தி நான்கு நாள்களுக்குத் தீட்டுக்கு உள்ளானவளாக இருப்பாள் இச் சமயத்தில் அவள் வீட்டின் வடக்குப் பகுதியில் உள்ள அறையில் இது போன்ற சமயத்திற்கென்று வைக்கப்பட்டுள்ள பாயில் படுத்து உறங்குவாள். இந்த அறை தென்னங் குருத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அவள் படுத்து உறங்கும் பாயினைச் சுற்றி நெல்லாலும் தென்னம் கமுகம் பாளைகளாலும் கரை கட்டியிருப்பர். அப்பாயருகே ஒரு விளக்கு எரிந்தபடி இருக்கும், அதன் அருகே முன்பு திருமணச் சடங்கிற்கு உரியனவாகக் கூறப்பட்ட பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். மற்றொரு சிறுமி அவளுக்குத் துணையாக இருப்பதோடு அவளோடு கூடவே படுத்து உறங்குவாள். பூப்படைந்தவள் மற்றவர்களையும் மரஞ்செடிகொடிகளையும் தொட அனுமதிக்கப்படுவதில்லை. அவள் வானத்தை அண்ணாந்து பார்த்தல் கூடாது. ஒரு பூனையினையோ காகத்தையோ அவள் பார்க்க நேர்ந்தால்அது அவளுக்குத் தீங்கினைக் கொண்டுவரும். இச் சமயத்தில் அவள் மரக்கறி மட்டுமே உண்டு வர வேண்டும். உப்பு, புளி, மிளகாய் ஆகியன உணவிலிருந்து விலக்கப்பட்டனவாகும். தீய ஆவிகளிடமிருந்து தன்னைக் காத்துக கொள்ள அவள் தன்னோடு எப்போதும் ஒரு இரும்புக் கத்தியினை வைத்திருப்பாள். அல்லது அவளுடைய பாயிலே அது இடம் பெற்றிருக்கும். பூப்படைந்த முதல் நாள் அவளை வீட்டின் கிழக்குப் பகுதியில் ஒரு மர நாற்காலியில் அமர்த்துவர். அவள் முன் ஒரு பச்சைத் தென்னம்பாளையினை வெட்டிப் பிளப்பர். அந்த தென்னப் பாளையினை மேலும் கீழுமாக குறுக்கே சுண்ணாம்பால் கோடிழுக்கப்பட்ட செம்புப் பானை ஒன்றில் வைப்பர். இதே போன்று கமுகம் பாளை ஒன்றினையும் சீவி மற்றொருபானையில் வைப்பர். இவ்வாறு பிளந்து வைக்கப்படும் பாளைகளில் நிறைய பிஞ்சுகள் இருக்குமானால் அது அச்சிறுமி பல குழந்தைகளைப் பெற்றெடுப்பாள் என்பதற்கான அறிகுறியாகக் கொள்ளப்படும். அந்தச் சிறுமியினுடைய மாமன் மகளும் சிறுமி முன்பே மணமானவளாயின் அவளுடைய கணவன் உடன்பிறந்தவளும் அவள் தலையில் கொஞ்சம் நல்லெண்ணையினை

ஊற்றி அதன்மீது ஒரு தங்க நாணயத்தை வைப்பர். அவளுக்கு இத்தகைய உறவு முறையினர் இல்லையாயின் தண்டான் மனைவி இச்சடங்கினை நிகழ்த்துவாள். இதே சடங்கினை உறவினர்களான வேறு இரு பெண்களும் மீண்டும் நிகழ்த்துவர். இவ்வாறு ஊற்றப்படும் நல்லெண்ணையினைப் பலா (*Artocarpus tegrifolia*) இலையாலான சிறு தொன்னையிலிருந்து நெற்றியின் மீது அதனுள்ளிடப்பட்ட பொற்காசுடன் ஊற்றுவர். அந்தப் பொற்காசு அடிப்புறம் மேற்புறமாக இருக்கும்படியாக நெற்றியில் விழுமானால் அதனை நற்பேறாக கருதுவர். சர்க்கரைப் பொங்கல் செய்து அதனை அப்பெண்ணுக்குத் தருவர். மற்ற பெண்களும் அப் பொங்கலில் பங்கு பெற்று உண்பர். இவ்வாறு தலையில் எண்ணையிட்டுக் குளிக்கப்படும் குளியல் மட்டுமே நான்கு நாள்களுக்கும் அவள் குளிக்கும் ஒரே குளியலாகும். மூன்றாம் நாள் அவளை அரிசிச் சோறு உண்ண அனுமதிக்கமாட்டார்கள். வேறு தானியங்களால் செய்யப்பட்ட புட்டுக்களை அன்று அவள் தின்ன அனுமதிப்பர். அவள் மாமன் மனைவி, கணவனின் உடன்பிறந்தவள், பிற உறவினர்கள் ஆகியோர் அவளுக்குப் பணியாரங்களையும் பிறவற்றையும் அன்பளிப்பாக வழங்குவர். அன்றிரவு உடைமாற்றும் மாத்து சடங்கு நடைபெறும். அதன் தொடக்கத்தில் வண்ணான் வண்ணாத்தியோடும் இரண்டு துவைத்த சேலைகளை எடுத்துக் கொண்டு வருவான். வீட்டு வாசலில் ஒற்றைப் படையில் திரியிடப்பட்ட குத்துவிளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். மூங்கில் ஈர்க்காலான ஒரு தட்டில் வாழையிலை ஒன்றில் ஓர் இடங்கழி நெல்லினைக் குவித்து வைத்திருப்பர். மற்றொரு இலையில் ஒரு படி அரிசி குவித்து வைக்கப்படும். அதே இலையில் தனியான இரண்டு குவியல்களாகக் கால் படி அரிசியும் ஒரு துண்டு மஞ்சளும், சிறிது வைக்கோலும் ஒரு கயிற்றுத் துண்டும் ஒரு தேங்காயும் வைக்கப்பட்டிருக்கும். வீட்டில் நுழைந்தவுடன், வண்ணான் அந்த வைக்கோலையும் கயிற்றினையும் பயன்படுத்தி அந்த மூங்கில் கூடையில் உள்ளவற்றை ஒரு கட்டாகக் கட்டி மணையின் மேல் ஏற்றி வைக்கப்பட்டுள்ள குத்துவிளக்கின் அருகே வைப்பான். ஒரு தேங்காயை உடைத்து இரண்டு மூடிகளையும் அந்த மணையின் இரண்டு பக்கங்களிலும் வைப்பான். அந்த மணைமீது ஒரு வெண்கலத் தட்டில் சிறிது அரிசியும் ஏழு கட்டு வெற்றிலை பாக்கும் வைக்கப்பட்டிருக்கும். வண்ணான் மாத்தினை வண்ணாத்தியிடமிருந்து வாங்கித் தன் தலைமீது போட்டுக் கொண்டவனாக ஒரு பாட்டினைப் பாடுவான். அதன் இறுதியில் அவன் மிகப் பணிவான குரலில், "நான் மாத்தினை வைக்கிறேன்" எனக் கூறித் தான் முன்பு கட்டி வைத்த கட்டின் மீது தன் தலையிலிருக்கும் மாத்துத் துணியினை இடுவான். அந்தச் சிறுமியின் மாமன் மனைவியும் வேறு நான்கு பெண்களும் இச் சமயத்தில் வீட்டின் நடுக்கூடத்திலிருந்து ஏற்றிய

விளக்கு ஒன்றையும் ஒரு படி அரிசியினையும் கிண்டியில் நீரினையும் எடுத்துக் கொண்டு வெளியே வருவர். சிறுமியின் மாமன் மனைவி பட்டுத் துணியால் தன் மார்பகங்களை மறைத்துக் கட்டிக் கொண்டு தன்னிடம் இருக்கும் அணிகளை எல்லாம் அணிந்து கொண்டவளாக மற்ற நான்கு பெண்களும் தன் பின் வர மாத்தினை மும்முறை சுற்றி வருவாள். அதன்பின் அவள் ஒரு பணத்தை (நான்கணா) மாத்தின் மேல் வைத்தபின் ஒரு கையினை மாத்தின்மேல் வைத்து அமுக்கிக் கொண்டு மற்றொரு கையினை மணையின் அடியே கொடுத்து அனைத்தையும் தூக்கியபடி விளக்கு முதலியவற்றை மற்றப் பெண்கள் எடுத்துக் கொண்டு தன் பின் வர அந்த சிறுமி உறங்கிக் கொண்டிருக்கும் அறைக்குச் சென்று தன் கையிலுள்ள சுமையினை அந்தப் பெண்ணின் தலைமாட்டில் இறக்கி வைப்பாள். அடுத்து அனைவரும் விருந்துண்பர். வண்ணாத்தி பணத்தையும் வீட்டு வாசலில் பரப்பப்பட்டுள்ள நெல் அரிசியினையும் எடுத்துச் செல்வாள். இவ்வாறாக மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் முடிவுறும். நான்காம் நாள் அச்சிறுமி ஊரருகே உள்ள ஒரு குளத்தில் சில சடங்குகள் நிகழ்த்திக் குளிப்பாள். அவள் வீட்டை விட்டுப் புறப்படுமுன் வண்ணான் தரையில் ஒருமரத்தின் கிளையினை நட்டு வைத்து அதன் உச்சியிலிருந்து அடிவரை ஒரு நீண்ட கயிற்றினை இணைத்துக் கட்டியிருப்பாள். இந்தக் கிளையும் கயிறும் காமனுடைய வில்லினைக் குறிப்பனவாகும். அதனருகே குளக்கரையில் தென்னோலைகளையும் வாழைத் தண்டுகளையும் கொண்டு ஒரு சிறு கோயிலையும் அவன் அமைத்து வைப்பான். அதனருகே ஒரு விளக்கினை ஏற்றி வைத்து இரண்டு வாழை இலைகளில் தனித்தனியே சிறிது நெல் அரிசிகளைப் பரப்பிவைப்பான். அவற்றினருகே கரிப்பூசிக் கறுப்பாக ஆக்கப்பட்ட ஒரு தேங்காயையும் வைப்பான், வாழையிலைமேல் பரப்பப்பட்டுள்ள பச்சரிசி மீது மஞ்சளும் சுண்ணாம்பும் பூசிச் சிவப்பாக்கப்பட்ட தேங்காயையும் மற்றொரு இலை மீது உள்ள புழுங்கலரிசிமீது இன்னொரு தேங்காயையும் வைப்பான்.* மேலும் சில பழங்களையும் இரண்டு தேங்காய்களையும் அவன் அதனருகே வைப்பான். அச்சிறுமி முந்தின நாள் வண்ணாத்தி கொண்டு வந்து கொடுத்த ஆடையினைப் புனைந்தவளாக வீட்டை விட்டுப் புறப்படுமுன் அவள் உடல் முழுக்க நன்றாக எண்ணெயினைத் தேய்த்து விட்டிருப்பர். அவளோடு கூடச் செல்லும் நான்கு அல்லது ஆறு பெண்களும்

---

* நெல்லினை அரிசியாக்கும்முன் பெரும்பாலும் நெல்லினைச் சற்றே வேக வைப்பர். இது புழுங்கலரிசி எனப்படும். வேகவைக்கப்படாத நெல்லினைக் குற்றி எடுப்பது பச்சரிசி.

எண்ணெய் பூசிக் கொண்டவர்களாகச் செல்வர். அச் சிறுமியையும்அவளோடு செல்லும் பெண்களையும் பெண்கள் பலரும் தொடர்ந்து செல்வர். குளத்தில் சிறுமியும் அவளோடு சென்ற பெண்களும் குளிப்பர். குளித்த பின் குளக்கரையில் ஏற்றப்பட்ட திரிகளை கிழக்கு நோக்கி நின்று கையில் எந்தியவர்களாக வண்ணான்அமைத்து வைத்திருக்கும் சிறு கோயிலினை மும்முறை சுற்றி வந்தபின் எரியும் அந்தத் திரிகளை அக் கோயிலினுள் எறிவர். அப்போது சேகண்டி ஒன்றினை ஒரு குச்சியால் தட்டியபடி வண்ணான் மீண்டும் பாடத் தொடங்குவான். அவன் பாடி முடித்துத் தான் செய்ய வேண்டிய சில சிறு சடங்குகளை நிகழ்த்துவான். அப்பொழுது அச் சிறுமியின் கணவனோ (அவள் மணமாகாதவளாயின்) உடன்பிறந்தவனோ அங்கு வந்து சேர்வர். அவன் அந்தக் கிளையில் கட்டப்பட்டுள்ள கீழ் முனையில் தேங்காயோடு இணைக்கப்பட்டுள்ள கயிற்றினைக் கையால் இழுத்துப் பிடித்துக் கொள்வான். அச் சிறுமி அக் கயிற்றின்மீது முட்டாதபடி கிளைக்கும் கயிற்றுக்குமிடையே முதலில் முன்னோக்கிச் சென்று பின் பின்னோக்கியவளாக மும்முறை போய் வருவாள்.. இரண்டு முனைகளும் கொளுத்தப்பட்ட நூல் திரியினைத் தேங்காயின் மீது வைத்தபின் அச் சிறுமி அத் திரியோடு கூட அத் தேங்காய் இரு முடிகளாக உடையும்படியாக கொடுவாளால் ஒரே வெட்டில் உடைக்க வேண்டும். இவ்வாறு இத் தேங்காயை உடைப்பதில் அவள் வெற்றி பெறுவாளானால் அதனை நல்ல சகுனமாகக் கருதுவர். அதன்பின் அச் சிறுமி தன்னோடு வந்த பெண்களோடு கூட மீண்டும் ஒருமுறை குளிப்பாள். குளித்துக் கரையேறும் போது நடப்பட்டுள்ள மரக்கிளையை ஒரு குதிரை பின்னங்காலால் உதைப்பதைப் போல வலக்காலால் பின்னோக்கி உதைத்து அதில் இணைக்கப்பட்டுள்ள தேங்காயோடு குளத்தில் சென்று விழுமாறு செய்வாள். இரண்டாவது மாத்து அங்குக் கொண்டுவரப்பட அவள் அதனை அணிந்து கொள்வாள். பின்னர் அவளை ஆடை அணிகளால் அலங்கரித்து ஒரு பட்டு மேற்கட்டியின் கீழ் வீட்டுக்கு அழைத்துச் செல்வர். வீட்டின் நடுக்கூடத்திற்கு அவளைக் கூட்டிச் சென்று சோறும் பணியாரங்களும் தின்னத் தருவர். பின்னர் விருந்து நடைபெறும். அச் சிறுமி அவளுடைய அன்றாட நடைமுறைகளை மேற்கொள்வதற்காகத் தீட்டு நீக்கப்பட்டவளாக ஆகி இருந்தாலும் மேலும் ஒரு சடங்கினை நிகழ்த்திய பின்னரே அவள் வீட்டில் உள்ள சமையல் பாத்திரங்களைத் தொடும் உரிமையினைப் பெறுவாள். இது ஏழாம் அல்லது ஒன்பதாம் நாள் நிகழ்த்தப்படும். அதுவரை அச் சிறுமியை நாளும் மஞ்சளும் நல்லெண்ணையும் பூசிக் குளிக்கச் செய்வர். சமையல் அறையில் சமைப்பதற்குரிய மூன்று பானைகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்படும். இவற்றுள் மேலே உள்ளதில் சோறும், இடையில் உள்ளதில் சர்க்கரைப் பொங்கலும், அடியில் உள்ளதில் கறியும் இருக்கும்

புதிதானவையாக உள்ள அந்தப் பானைகளில் மேலிருந்து கீழாகச் சுண்ணாம்பால் கோடுகள் இழுக்கப்பட்டிருக்கும். அச் சிறுமி அந்தப் பானைகளுக்கு மேற்குப் பக்கமாகத் தாழ்வான மரத்தாலான மணையில் கிழக்கு நோக்கி அமர்ந்தவளாக அவற்றை ஒரு கத்தியால் தொடுவாள். ஒருத்தி முதன்முதல் பூப்படையும் போது நிகழ்த்துப்படுவதான இந்தச் சடங்குகள் அவளுடைய கணவன் வீட்டில் நிகழுமானால் அவளுடைய தாயார் இந்த இறுதிச் சடங்கு நிகழும் நாளன்று அவளுக்குப் பணியாரங்கள் கொண்டு வருவாள். அவற்றை அங்குக் கூடியுள்ளவர்களுக்கு வழங்கியபின் சிறிய அளவில் விருந்தும் நடத்துவர். முதல்நாள், ஏழாம் அல்லது ஒன்பதாம் நாள் நடத்தப்படும் சடங்குகளுக்கான செலவினை அது எங்கு நடத்தப்படுகின்றதோ அந்த வீட்டினைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்வர். நான்காம் நாள் நடைபெறும் சடங்கு அச் சிறுமியின் பிறந்த வீட்டில் நடக்குமானால் அதனை அவள் கணவன் எற்றுக் கொள்ள வேண்டும். அது அவள் கணவன் வீட்டில் நடக்குமானால் அதனை அவள் தந்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திருமணம் செய்துகொண்ட ஒருத்தி கருவுற்று ஐந்துமாதங்கள் ஆகும்வரை எத்தகைய சடங்குகளுக்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளாதவளாக நாள்களைக் கழித்து வருவாள். அவ்வாறு கருவுற்று ஐந்து மாதம் ஆகும்போது பல்வேறு தீய ஆவிகளைத் திருப்திபடுத்த அவள் பெலி கள என்ற சடங்கிற்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த தீய ஆவிகள் கருவில் வளரும் குழந்தைகளை அழிப்பதில் அதிகம் நாட்டங்கொண்டு இடைவிடாது செயல்படுபவை. இந்தச் சடங்கின்போது ஆவிகளைத் திருப்திப்படுத்தப் படையலிடப்படும். மீண்டும் இச் சடங்கை ஏழாம் மாதத்திலும் நடத்துவர். மண்ணான் மற்றும் பாணன் சாதியினைச் சேர்ந்தவர்களே இச்சடங்கை நடத்தி வைப்பவர்கள். இச் சடங்கினைத் தொடங்கும் முன் முதலில் ஒரு விருந்து நடக்கும். முகமதியர்களின் தபூட்* அமைப்பினை ஒத்த ஐந்தடி உயரமுள்ள கொட்டகையினை வீட்டு வாசலின் முன் அமைப்பர். இதனை இளம் வாழைத்தண்டுகளை வைத்து அமைத்துத் தென்னங் குருத்து ஓலைகளைக்

* தபூட், முகமதியர்களின் கல்லறை மாடங்களை ஒப்ப அமைக்கப்படும் உறசைனின் சமாதியினையொப்ப அமைக்கப்பட்டு, மொகரத்தின்போது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் கூடாகும்.

கட்டி அலங்காரம் செய்வர். இந்தச் சிறிய கொட்டகை அமைப்பு அமைந்துள்ள இடத்தின் தரையிலும் இதற்கு வெளியே மேற்குப் பக்கமாக இருக்கும் தரையிலும் நெல் உமியினை எரித்து எடுத்த கரித்தூளைப் பரப்புவர். அதன்மீது அரிசிமாவால் வெள்ளையில் கட்டங்கள் வரைந்து அவற்றுள் சில கட்டங்களைச் சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய வண்ணங்களாக உரிய பொருள்களைக் கொண்டு அமைப்பர். இந்த சதுரங்கள் எப்போதும் ஒன்றுபோன்ற அமைப்புடையனவாக அமைக்கப்படுவதில்லை. எந்த தேவதையினைத் திருப்திப்படுத்தச் சடங்கு நடத்தப்படுகின்றதோ அதற்குரிய அமைப்புடையனவாகச் சதுரங்களை அவ்வப்போது அமைத்துக் கொள்வர். கருவுற்றவள் தன்னோடு கூட ஆறு மகளிர் துணையாக வரக் கையில் விளக்கு முதலிய சடங்குக்குரிய பொருள்களை ஏந்தியவளாக அக் கொட்டகை அமைப்பை ஏழு முறை சுற்றி வருவாள். ஏழாம் சுற்றினைச் சுற்றி முடிக்கும் முன் ஒவ்வொருத்தியும் அக் கொட்டகையுள் எரியும் ஒரு திரியினை வீசி எறிவர். அதன்பின் அந்தக் கொட்டகையின் மேற்குப் பக்கமாகச் சென்று, கிழக்கு நோக்கி நின்று, பின்னர் அமர்வர். மண்ணான் சேகண்டியினைக் குச்சியால் அடித்தவனாகப் பாட்டுப் பாடி ஆவிகளை எழுந்தருளுமாறு வேண்டுவான். இச் சடங்கில் முழவுகளைப் பயன்படுத்துவதில்லை. இந்தப் பாட்டும் தேவதைகளுக்கு உரிய பூத ஆட்டமும் கிட்டத்தட்ட இரவு முழுதும் நடக்கும். பொழுது புலரும்போது நரம்புத் தளர்ச்சிக்கு ஆளானவர்களாக உள்ள சில பெண்கள் தீய ஆவிகள் ஏற்றப்பட்டவர்களாக உடல் நடுங்கத் தொடங்குவர். இந்தப் பேயாட்டத்திற்கு உரிய கட்டணத்தை பெண்ணின் தந்தையே செலுத்துவான். சடங்கின் இறுதியில் உயிரோடு உள்ள ஒரு சேவலைக் கருவுற்றவள் நெற்றிக்கு நேராகப் பிடித்து மந்திரங்களைப் பலமுறை உச்சாடனம் செய்து அவள் தலைமீது அரிசியினைத் தூவுவர். அப்போது அவளுக்கு நடுக்கம் ஏற்படுமாயின் உடனே அச்சேவலின் தலையினை அறுத்து அதன் குருதியினை தீய ஆவிக்குப் படைப்பர். அவளுக்கு எத்தகைய நடுக்கமும் ஏற்படவில்லையாயின் அச் சேவலைப் பலியிடாது விட்டுவிடுவர். அடுத்த இரண்டு மாதங்களுக்கும் அவளுக்கு சடங்கு ஏதும் நிகழ்த்தப்படமாட்டாது. அவளைப் பிறந்த வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின் அங்கு மேலும் ஒரு பெலிகல சடங்கு நடத்திப் பூத ஆட்டம் ஆடுவர். இதற்கான செலவினை அவளுடைய கணவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு ஐந்து ரூபாய் முதல் முப்பத்திரண்டு ரூபாய் வரை செலவாகும். செலவிற்கு ஏற்பக் கொட்டகை அமைப்பின் தரமும் பூத ஆட்டத்தின் சிறப்பும் அமையும். சில தீய ஆவிகளைத் திருப்திப்படுத்த அதற்காகவென்றே பயிற்சி பெற்ற தனித்த பூத ஆட்டக்காரர்களை அதிகத் தொகை கொடுத்து அழைக்க வேண்டியிருக்கும். பூத ஆட்டம் நடத்தி முடித்த இரவுக்கு அடுத்த நாள் காலையில் பெண்ணின்

பிறந்த வீட்டில் புளிகுடிச் சடங்கு நிகழ்த்தப்படும். இந்தச் சடங்கிற்கான செலவையும் அவளுடைய கணவனே ஏற்றுக் கொள்ள வேண்டும். நல்ல முகூர்த்த நேரம் ஒன்றில் கருவுற்றிருப்பவள் கணவனும் அவனோடு கூட இருவரும் அதிகாலையில் எழுந்து குளித்துத் தூய ஆடைகள் புனைந்து கொள்வர். கருவுற்றவள் கணவன் கழுத்தில் ஒரு சங்கிலியினை அணிந்து கொள்வான். அதன்பின் இவர்கள் அருகே உள்ள புளிமரத்தை அடைந்து இலைகள் நிறைந்துள்ள மூன்று கிளைகளை வெட்டி வீட்டுக்குக் கொண்டுவருவர். கருவுற்றவள் கணவனோடு உடன்பிறந்தவள் புளியம் இலைகளை வீட்டு வாசலில் போடப்பட்டுள்ள கல்லுரலில் இட்டு அரைப்பாள். பின் அதனை எட்டு முழ நீளமுள்ள இரட்டை வேட்டியிலிட்டு அவள் சாறு பிழிந்து எடுப்பாள். அவளுடைய கணவனுக்கு உடன்பிறந்த சகோதரிகள் இல்லையாயின் கருவுற்றவளோடு உடன்பிறந்த பெண்களோ அவள் அன்னையோ இப்பணியினை மேற்கொள்வர். அடுத்துத் தண்ணீரில் அரிசியினை இட்டுக் கஞ்சி காய்ச்சுவர். அதனோடு புளியஞ்சாறு கலக்கப்படும். கருவுற்றவள் கணவனும் அவனுக்குத் துணையாக உள்ளவர்களும் வீட்டு வாசலின் முன்னுள்ள பந்தலில் விளக்குக்கும் பிற சடங்குப் பொருள்களுக்கும் அருகே அமர்வர். கருவுற்றவள் தன் கணவன் பின் அமர்வாள். அவளுடைய உடன்பிறந்தவள் ஒரு தங்கக் கரண்டியினைக் கொண்டு மும்முறை அவளுக்குக் கஞ்சி புகட்டுவாள். அதே போல அவளுடைய கணவனோடு உடன்பிறந்வளும் அவளுக்கக் கஞ்சி புகட்டுவாள். கொண்டு வரப்பட்ட மூன்று கிளைகளுள் ஒன்றினை அவளுடைய கணவன், வீட்டின் முன் வாசலில் நடுவான். அவனுடைய மனைவி பிள்ளை பிறக்கும்வரை அதற்கு நாள்தோறும் நீரூற்றி வருவாள். ஒன்பதாம் மாதத்தின்போது அவளுடைய கணவனோடு உடன்பிறந்தவள் அவளுக்கு கொஞ்சம் வெந்தயத்தையும் சில கட்டி வெல்லங்களையும் அன்பளிப்பாக அனுப்பி வைப்பாள். இந்த அன்பளிப்பினைக் கொண்டு வருபவளுக்குச் சில பணியாரங்களும் இனிப்புப் பலகாரங்களும் கொடுத்துத் திரும்ப அனுப்ப வேண்டும். கருவுற்றிருக்கும் ஒருத்தி குழல் ஒன்றினுள் இடப்பட்ட தாயத்தை எப்பொழுதும் கழுத்தில் அணிந்தவளாக இருப்பாள். இது தீய ஆவிகளிடமிருந்து அவளைக் காக்கும் கவசமாகும்.

ஒருத்தியின் முதல்குழந்தையின் மகப்பேறு அவளுடைய பிறந்த வீட்டிலேயே நிகழும். அவளுடைய அன்னை அச் சமயத்தில் அவளுக்குத் துணையாக இருப்பாள். குழந்தை பிறந்தவுடன் குழந்தை பெற்றவளுடைய சகோதரன் வீட்டு வாசலுக்கு வந்து காய்ந்த ஒரு தென்னை மட்டையினை

மும்முறை தரையில் மோதுவான். பிறந்த குழந்தை ஆணாயின் அது இந்த ஒலியினைக் கேட்டு உரத்த குரலில் குவா என வீறிட்டு அழும். அதன்பின் குழந்தையைப் பெற்றவள் சகோதரனும் மருத்துவச்சியும் அதனுடைய தந்தையிடம் சென்று அச் செய்தியினை அறிவிப்பர். மருத்துவச்சி அவனிடமிருந்து தனக்குரிய கட்டணத்தைப் பெறுவாள். அவனுடைய சகோதரிகள் அவளுக்குச் சேலை முதலிய பிற அன்பளிப்புக்களை வழங்குவர். பிறந்தது ஆணாக இருப்பின் மகப் பெற்றவளுடைய சகோதரனுக்கு ஒரு வேட்டியினை அனுப்பி வைப்பர். பிறந்தது பெண்ணாயின் வெண்கலத் தட்டு ஒன்றினை அனுப்பி வைப்பர்.

ஒரு குடும்பத்தில் குழந்தை பிறக்குமானால் சாவின்போது தீட்டுப் பாவிப்பதைப் போலக் குடும்பத்தில் உள்ள அனைவரும் தீட்டுக்குரியவர்களாவர். இத் தீட்டு மூன்றாம் நாள் நடக்கும் சடங்கின்போது ஒரு பகுதி நீக்கப்படும். ஒன்பதாம் நாள் அல்லது பதினொன்றாம் நாள் நடத்தபபடும் சடங்கின்போது தீட்டு முழுவதுமாக நீக்கப்படும். இச்சடங்குகள் செவ்வாய்கிழமை போன்ற மங்கல நாள்களில் நடத்தப்படும். மூன்றாம் நாள் நடக்கும் முதல் தீட்டுக் கழிக்கும் சடங்கிற்கு முன்பு பிள்ளை பிறந்த வீட்டுக்கு வருகை தருபவர்கள் போட்டுள்ள உடையோடு கூடக் குளித்துத் தங்களுக்கு ஏற்படும் தீட்டினைப் போக்கிக் கொள்ள வேண்டும். முதல் தீட்டு நீக்கும் சடங்கிற்குப் பிறகும், இரணடாம் தீட்டு நீக்கும் சடங்கிற்கு முன்னும் அந்த வீட்டுக்கு வருகை தருபவர்கள் தீட்டுப் போக்கிக் கொள்ள குளிக்க வேண்டியதில்லையாயினும் அவர்கள் மகப்பேறு நிகழ்ந்துள்ள வீட்டில் உணவுகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. எனவே அவர்கள் வேறொரு வீட்டில் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். ஒரு நாசுவத்தியின் உதவியோடு வண்ணாத்தியே தீட்டுப் போக்கும் சடங்கினை நிகழ்த்தி வைப்பாள். முதலில் வீட்டின் அனைத்து அறைகளையும் பசுஞ்சாணத்தால் மெழுகுவர். வீட்டில் உடுத்து அழுக்குப்படுத்திய துணிகள் அனைத்தும் வண்ணாத்தியிடம் தரப்படும். வீட்டுப் பெண்கள் உடல் முழுதும் எண்ணெய் பூசிக் கொள்வர். வண்ணாத்தி அவர்களுக்கான மாத்தினைக் கொண்டு வந்து கொடுப்பாள். நாசுவத்தி அப் பெண்கள் மீது தர்ப்பையிடப்பட்ட பசும்பாலினைத் தெளிப்பாள். பிறகு அவர்கள் குளிக்கச் செல்வர். அப் பெண்களின் மீது பசும்பாலினைத் தெளிக்கும்போது குத்து விளக்கு, வெண்கலத் தட்டில் அரிசி, கிண்டியில் தண்ணீர் ஆகிய வழக்கமான சடங்குப் பொருள்கள் அவர்கள் முன் வைக்கப்படும். நாசுவத்தி தட்டில் உள்ள அரிசியினை எடுத்துக் கொள்வதோடு ஒரு பணமும் பெறுவாள். அவளுக்குச் சிறிது தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் ஆகியனவும் தருவர்.

இதே அளவுள்ள பொருள்கள் வண்ணாத்திக்கும் தரப்படும், இரண்டாவது தீட்டு நீக்கும் சடங்கு முடிந்த பிறகும் அந்த வீட்டுப் பெண்கள் பதினைந்தாம் நாள் முடியும்வரை சமையல் பாத்திரங்களைத் தொடக் கூடாது என்ற தடை உள்ளது. அதன்பின் முதல் பூப்படைந்தபோது பதினைந்தாம் நாள் பாத்திரங்களைத் தொடுவதற்கான சடங்கு நிகழ்த்தியதைப் போலவே இப்பொழுதும் சடங்கு நிகழ்த்துவர். தீட்டு நீக்கும் இந்த மூன்று சடங்குகளும் ஒவ்வொரு மகப்பேற்றின் பிறகும் நிகழ்த்தப்படவேண்டும்.

ஒரு குழந்தை பிறந்த இருபத்தேழாம் நாள் அல்லது நாற்பதாம் நாள் தாயும் சேயும் அவள் கணவன் இல்லம் செல்வர். அப்பொழுது குழந்தைக்கு முதன்முதல் பசும்பால் தருவர். இச் சடங்கும் புனிதம் உடையதாகக் கருதப்பட்டு வீட்டின் நடுக்கூடத்தில் நிகழ்த்தப்படும், அச் சமயம் குத்துவிளக்கு, பாய் முதலிய சடங்கிற்கு உரிய பொருள்களை அங்கே வைப்பர். குழந்தையின் தாத்தா அல்லது பெரியப்பா அல்லது குடும்பத்தைச் சேர்ந்த வேறொரு பெரியவர் நன்கு காய்ச்சிய பாலைக் குழந்தைக்கு முதன்முதல் புகட்டுவர். ஒரு தங்க வளையலைப் பாலில் தோய்த்து அதிலிருந்து சில சொட்டுக்கள் குழந்தையின் வாயில் விழுமாறு அவர் விடுவார். இவ்வாறு பாலை விடும்போது அவர் குழந்தையின் வலக்காதில் அதற்கு ஆறாம் மாதத்தில் இடப்படுவதற்கு உரிய பெயரையும் கூறுவார். குடும்பத்தில் முதல் குழந்தை எப்பொழுதும் அதன் தந்தையின் தந்தை பெயரைப் பெறுவான். இதே போன்று குடும்பத்தின் மூத்த பெண் தாயாரின் தாயின் பெயரைப் பெறுவாள். நண்பர்களும் உறவினர்களும் இவ்வாறு பால்புகட்டும் சடங்கின்போது குழந்தைக்கு வளையல் முதலிய பொருள்களை அன்பளிப்பாக வழங்குவர். அதன்பின் ஒரு விருந்து நிகழும். இச் சடங்கு முடிந்தபின் குழந்தையின் தாயின் பெற்றோர் அரை மூட்டை அரிசி மாவையும் வெல்லத்தையும் அவளுடைய கணவன் வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

முதல் ஆறு மாதங்கள் குழந்தை தாய்ப்பாலையும் பசும்பாலையுமே உணவாகக் கொள்கின்றது. ஆறாவது மாதம் முடிந்தபின் அதற்குச் சோறூட்டும் சடங்கினைக் குழந்தையின் தந்தையின் இல்லத்தின் நடுக்கூடத்தில் அல்லது ஒரு கோயிலில் நடத்துவர். குழந்தையின் தாத்தா அல்லது குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் ஒரு பாயின் மீது அமர்ந்து

குழந்தையை மடியில் வைத்து ஒரு தங்க மோதிரத்தைத் தேனில் தொட்டு மும்முறை அதனைக் குழந்தைக்குப் புகட்டியபின் சிறிது சோறு ஊட்டுவார். கூடியுள்ள பெண் உறவினர்களும் இதுபோலத் தேனும் சோறும் ஊட்டுவர். ஏற்றிய விளக்கைக் கையில் கொண்டு ஒருத்தி உடன்வரச் சில பெண்கள் குழந்தையை வீட்டு வாசலுக்குத் தூக்கிச் சென்று அதனைச் சூரியனைப் பார்க்கும்படி செய்வதோடு ஒரு தென்னை மரத்தையும் சுற்றி வந்தபின் மேற்கு நோக்கி நிற்பர். அப்பொழுது குடும்பத்தைச் சேர்ந்த முதியவள் ஒருத்தி வீட்டின் முன்வாசலில் நின்று அக் குழந்தையின் பெயரை மும்முறை உரக்கக் கூறி அதனை வீட்டினுள் வருமாறு அழைப்பாள். உறவினர் சிறிய அன்பளிப்புகளை வழங்குவர். தொடர்ந்து விருந்து நிகழும்.

குழந்தையின் வாழ்வும் சடங்குகளிலிருந்து விடுபட்டதாக இல்லை. வளர வளர அது தன்னைப் பல சடங்குகளுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டியதாகின்றது. பூமியில் வாழ்ந்து முடிந்த பிறகு சாவிற்குப் பின்னும் ஒருவன் பல சடங்குகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்கின்றான். இதனால் பொருட்செலவும் ஏற்படுகின்றது. எல்லாச் சடங்குகளையும் விட மிகுதியான பொருட் செலவினைத் தருவது திருமணச் சடங்கே. மற்ற சடங்குகளில் அதிக ஆடம்பரம் இல்லை. திருமணத்தைப் போல அச் சடங்குகளில் அதிக ஆடம்பரம் இல்லை. இந்த விருந்துகளைக் கார்ல்டன் நட்சத்திர விடுதியில் நடக்கும் பாராட்டுரைகளோடு கூடிய பெருவிருந்தினை ஒத்தவை எனக் கருதக்கூடாது. எளிய மக்களுக்கு எளிய முறையில் இடப்படும் உணவினாலேயே அவர்கள் முழுத் திருப்தி உறுகின்றனர்.

ஒரு குழந்தைக்குப் பல் முளைக்குமானால் அதனையும் ஒரு சிறு சடங்கினை நடத்திக் கொண்டாடுவர். இந்த நிகழ்ச்சி குழந்தை எப்படிப்பட்டதாக வளரும் என்பதனை அறிந்து கொள்ள உதவுவது. சடங்கிற்குரிய வழக்கமான பாய் முதலியவற்றோடு ஒரு வெண்கல தட்டில் அரிசிப் பணியாரம், கத்தி, பனையோலைச் சுவடி, தேங்காய், தங்க நகை ஒன்று ஆகியனவும் சடங்கு நடக்க உள்ள இடத்தில் வைக்கப்படும். குழந்தையை இறக்கி விட்டு இப் பொருள்களுள் அது எதனை எடுத்துக் கொள்கிறது எனப் பார்ப்பர். அது பணியாரத்தை எடுத்துக் கொண்டால் பேராசைக் காரனாவான் என முடிவு செய்வர். கத்தியினை எடுத்துக் கொண்டால் வீரமிக்கவனாவான் எனவும்

சுவடியை எடுத்துக் கொண்டால் படிப்பாளி ஆவான் எனவும் தேங்காயை எடுத்துக் கொண்டால் பெரிய பண்ணையாராக ஆவான் எனவும் பொன் அணியினை எடுத்துக் கொண்டால் பெருஞ் செல்வனாக ஆவான் எனவும் முடிவு செய்வர்.

மூன்றாம் அல்லது ஐந்தாம் ஆண்டில் குழந்தைக்கு மொட்டையடிப்பர். இதனை நிகழ்த்தும் அம்பட்டன் இச் சடங்கிற்காக வைக்கப்படும் அரிசியினைப் பக்கத்தில் உள்ள விளக்கோடு கூட எடுத்துக் கொள்வான். அத்துடன் ஒரு பணமும் ஒரு வேட்டியும் அன்பளிப்பாகப் பெறுவான். குழந்தையின் தாயாரின் பிறந்த வீட்டார் இச் சமயம் அரிசிப் பலகாரங்களைக் கொண்டு வருவர்.

குழந்தைக்கு ஐந்தாம் ஆண்டு நடக்கும்போது வரும் தசராப் பண்டிகையின் பத்தாம் நாளன்று குழந்தைக்கு எழுத்துக்களைக் கற்றுத் தருவர். ஒரு நல்ல ஆசிரியரை இதற்காகத் தேர்ந்தெடுப்பர். அல்லது ஆகிவந்த ஒருவனைக் கொண்டு இதனை நடத்துவர். அவர் ஒரு தட்டில் பரப்பப்பட்டுள்ள பச்சரிசியில் குழந்தையின் வலது கையை பற்றி ஐம்பத்தொரு மலையாள எழுத்துக்கைளையும் அந்த அரிசியில் விளம்புமாறு செய்வார். இறந்த மூதாதையருக்கு நீர் தெளிக்கவும் சாவுச் சடங்குகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தும் சுட்டு விரலை இதற்காகப் பயன்படுத்தாது நடுவிரலைக் கொண்டே எழுத்துக்களை எழுதச் செய்வர். இதே அடிப்படையில் ஒரு மருத்துவருங்கூட மாத்திரைகளை உருட்டச் சுட்டுவிரலைப் பயன்படுத்த மாட்டார். பின்னர் குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்பொழுது ஒரு தங்க எழுத்தாணியினைக் கொண்டு குழந்தையின் நாக்கில் ஐம்பத்தொரு எழுத்துககளையும் எழுதுவிப்பர். அவ்வாறு ஒவ்வொரு எழுத்தை எழுதி முடித்தவுடனும் அதனைக் குழந்தை தன் வாயால் உரக்கக் கூற வேண்டும்.

காதின் இரு மடல்களையும் தங்க ஊசி அல்லது முள்ளினைக் கொண்டு துளையிடுவர். புறச் செவியின் விளிம்பில் காதணி அணிவிக்கத் துளையிடும் வழக்கம் இல்லை. குடலிறக்கம் போன்ற நோய்களிலிருந்து குழந்தை விடுபடச் சில சமயங்களில் அவ்வாறு துளையிடப்படும். தென்னிந்தியாவின் எல்லாப் பகுதிகளும் எல்லா வகுப்பாரும் இடக் காதின் புறச் செவியின் விளிம்பில் துளையிட்டுக் கொள்ளும் வழக்கம் உள்ளது.

ஒரு சிறுமி பூப்படையும் முன்பே அவளுக்குத் தாலிகட்டுச் சடங்கினை நடத்த வேண்டும். தீயர் தங்கத்தாலான அரைப்பவுன் மதிப்புள்ள தாலியினை இதற்காகப் பயன்படுத்துகின்றனர். இதனை ஒருத்தி எப்பொழுதும்

அணிந்தவளாக இருக்கமாட்டாள். பின்வரும் தாலிகட்டுச் சடங்கின்போது மட்டுமே இத் தாலியினைக் கழுத்தில் அணிவாள். தென்னிந்தியா முழுவதிலும் தாலி இந்துக்களிடையே திருமணத்தின் அடையாளச் சின்னமாக இருந்து வருகின்றது. சிரியன் கிறித்தவர்கள் கூட இதனை அணிகின்றனர். மலபாரிலும் கொச்சி திருவாங்கூர் மாநிலங்களிலும் இது திருமணத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றது., ஒருத்தியை மணம்பேசி முடிக்கும் முன் அவளுக்கு இதனை அணிவிப்பது இன்றியமையாத சடங்காகக் கருதப்படுகின்றது. மூன்று நாள்கள் நடைபெறும் சடங்கில் இறுதி நாளன்று தாலி அணிவிக்கப்படும். சடங்கின் முதல் நாளன்று வீட்டின் முன் ஒரு பந்தல் அமைக்கப்படும். அதனுள் கமுகம் மடல்களைக் கொண்டு இன்னொரு சிறிய பந்தல் அமைப்பர். இதற்கான கமுக மரம் நல்ல சுபவேளையில் வெட்டப்படும். அதனை வெட்டும் முன் அதற்காகத் தண்டானின் அனுமதியினைப் பெற வேண்டும். இவ்வாறு உள்ளே அமைக்கப்படும் சிறிய பந்தலின் அமைப்புப் பணியினைத் தாலிகட்டுச் சடங்கின் முதல் நாள் அன்றுதான் தொடங்க வேண்டும். அன்று தரையைச் சேர்ந்த தச்சன் பலாமரத்தாலான ஒரு மணைப் பலகையினைக் கொண்டு வருவான். இதற்கான பலகையும் சுபவேளையில் வெட்டப்பட வேண்டும். மணை* என அழைக்கப்படும் இதற்கு ஒரு பணத்தை அவன் கட்டணமாகப் பெறுவான், வீட்டின் நடுக்கூடத்தில் ஒரு பெரிய பாய் விரிக்கப்படும். அதன் மீது ஒரு வெள்ளைத் துணியினையிட்டு அதன்மேல் மணைப்பலகையைப் போடுவர், விளக்கு, பானையில் தண்ணீர் முதலிய சடங்கிற்கான வழக்கமான பொருட்களை அதனருகே தெற்குப் பக்கத்தில் கொண்டு வைப்பர். இவற்றையெல்லாம் செய்து முடித்தபின் சிறுமியினை அவளுடைய மாமன் மனைவி பந்தலுக்கு அழைத்து வந்து மணையில் அமர்த்துவாள். அவள் முன் தரையில் ஒரு விளக்கு உட்பட சடங்கிற்கு இன்றியமையாத அனைத்தும் வைக்கப்படும். அவள் தலையில் ஒரு பொற்காசினை வைத்து அதன் மீது நல்லெண்ணெயினை ஊற்றுவாள். நெற்றி வழியே அக் காசு கீழே வழுக்கி விழும்போது அதனை ஒரு கிண்ணத்தில் பிடிப்பர். காசின் எந்தப் பக்கம் மேல் நோக்கி இருக்கும்படியாக விழுகின்றது எனக் குறிப்பாகப் பார்ப்பர். பின்னர் அவளை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்து மீண்டும் பந்தலுக்கு அழைத்து வருவர். அங்கிருந்து வீட்டின் நடுக்கூடத்திற்குப் பட்டு மேற்கட்டியில் கீழ் விளக்கை ஏந்திய பெண்கள் பின்வர ஊர்வலமாக அவளை அழைத்துச் செல்வர். பூப்டையும் சடங்கு பற்றிக் கூறப்பட்டது போல அலங்காரம்

---

* மணவாளன் - மணமகன்; மணவாட்டி - மணமகள்-ஆகியோர் அமரும் பலகை

செய்யப்பட்டிருக்கும் இந்த அறையில் அவள் மூன்றாம் நாள் சடங்குகள் முடியும்வரை தங்கியிருப்பாள், அரிசியாலும் நெல்லாலும் சுற்றிலும் கரை கட்டப்பட்ட பாயில் படுத்து உறங்குவாள். அவள் தலைப்பக்கம் கீழ் மேலாக வெள்ளைக் கோடுகள் இழுக்கப்பட்ட ஒரு செப்புப் பானை வைக்கப்பட்டிருக்கும். தரையினைச் சேர்ந்த கொல்லன் சரத்கோடு எனப்படும் குச்சியினைக் கொண்டு வருவான். இதன் ஒரு முனையில் ஒரு இரும்புக் கத்தி பொருத்தப்பட்டிருக்கும். இதனைக் காமன் அம்பாகப் பாவிப்பர். இந்தக் குச்சியினை அச் சிறுமி எப்பொழுதும் தன்னுடன் வைத்துக் கொண்டிருப்பாள். அந்த அறையினைவிட்டு வெளியே செல்லும் சமயங்களில் அதனைக் கையில் எடுத்துச் செல்வாள். அந்த அறையில் தங்கியிருக்கும் மூன்று நாள்களும் மீன், இறைச்சி, உப்பு ஆகியனவற்றை உணவோடு சேர்த்துக் கொள்ள அவளை அனுமதியார். அச் சமயம் விலங்குகள் முகத்திலும் அவள் விழிக்கக் கூடாது பூனை, நாய், காகம் ஆகியன முக்கியமாகத் தவிர்க்கப்பட வேண்டியவை. மூன்றாம் நாள் சிறுமியின் வீட்டிற்குப் பொற்கொல்லன் வந்து அங்கேயே தாலியினைத் தயாரித்துத் தருவான். சிறுமியின் தாய்மாமன் தரும் தங்கத்தை நல்லவேளையில் பந்தலி லேயே உருக்கி அதனை அவன் தாலியாக ஆக்குவான். அப்பொழுது தட்டில் நெல், அரிசி, ஒரு விளக்கு, கிண்டியில் தண்ணீர் ஆகியன அவனருகே வைக்கப்படும். அந்த நெல், அரிசி ஆகியவற்றோடு ஒரு பணமும் அவனுக்கு இதற்குக் கூலியாகத் தரப்படும். நெசவாளி மந்தரக் கோடி எனப்படும் இரண்டு துணிகளைக் கொண்டு வருவான். அவற்றுக்கான தொகையினைச் சிறுமியின் தாய்மாமன் அவனுக்குத் தருவான். அவற்றுள் ஒன்றினை அச்சிறுமி அணிவாள். மற்றொன்றினை மணையின் மீது விரிப்பர். பின்னர் சிறுமியினைக் குளிக்க அழைத்துச் செல்வர். குளித்துவரும் அவளை நன்கு அலங்கரித்து மேற்கட்டியின் கீழ் ஊர்வலமாக வீட்டிற்கு அழைத்து வந்து உள்ளறையில் சென்று இருக்கும்படி விடுவர். பந்தலினுள் அமைந்த சிறுபந்தலில் ஒரு பாயின் மீது மணையினை இடுவர். அதனருகே ஒரு துணி வைக்கப்பட்டிருக்கும். அச்சிறுமியின் மாமன் மனைவி அப்பாயில் அமர்வாள். அவள் மாமன் அவளைத் தூக்கியவனாக மும்முறை பந்தலைச் சுற்றி வந்து அவளைப் பாயிலிருக்கும் தன் மனைவியின் மடியில் உட்காரச் செய்வான். அங்கு வந்திருக்கும் சோதிடர் தாலி கட்டுவதற்கரிய நல்ல நேரத்தைக் குறிப்பிடுவார். சிறுமியின் தந்தை அவனுக்கு ஒரு பணத்தைத் தந்து முகூர்த்தம் எனக் கூறப்படும் சிறிது அரிசியினைப் பெற்றுக் கொள்வான். உரிய நேரம் நெருங்கியவுடன் ''நேரம் வந்துவிட்டது'' எனக் கூறித் தன் கையில் உள்ள அரிசியினைச் சிறுமியின் தலைமீது தூவுவான். அப்பொழுது அவளுடைய மாமன் மனைவி அவள்

கழுத்தில் தாலி அணிவிப்பாள். தாலியின் மேல் முனையில் இணைக்கப்பட்டுள்ள மோதிரத்தில் தாலிகட்டுவதற்குரிய நூல் கோக்கப்பட்டிருக்கும். இதற்காகப் பயன்படுத்தப்படும் நூல் மணை மீது விரிக்கப்பட்டுள்ள துணியிலிருந்து உருவி எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். (நாயர் குடும்பங்கள் சிலவற்றில் தாலியின் நூலினைக் கோக்க அதனோடு ஒரு மோதிரத்தை இணைக்காமல் தாலியிலேயே அதற்காக ஒரு துளையினை இட்டிருப்பர்). சிறுமியின் கழுத்தில் தாலிகட்டி முடிக்கப்பட்டவுடன் அங்குள்ள சிறுவர்கள் கணபதியினைப் போற்றிப் பாடுவதோடு நளன் தமயந்தியின் மணம்பற்றிய சிறப்பினையோ கண்ணன் ருக்மணி மணம் பற்றிய சிறப்பினையோ புலப்படுத்தும் கதைப் பாடல்களைப் பாடுவார்கள். கூடியுள்ளவர்களும் கூட்டமாகப் பாடி ஆரவார மகிழ்ச்சியுடன் பாட்டை முடிப்பர். அடுத்து உணவு படைக்கும் போலிச் சடங்கு நிகழும். பந்தலில் சிறுமியின் முன் மூன்று வாழையிலைகளையிட்டுச் சோறு, பழம், பப்படம். ஆகியவற்றை அவற்றில் படைப்பர். அவற்றில் சிறிது சிறிது எடுத்துச் சிறுமியின் மாமன் மனைவி சிறுமிக்கு மும்முறை ஊட்டுவாள். எனினும் அதனை அவள் உதட்டில் படாதபடி கைகளை உடனே எடுத்துக் கொள்வாள். பின்னர் சிறுமியினைத் தெய்வத்தின் ஆசிபெறக் கோயிலுக்கு அழைத்துச் செல்வர்.

மேலே கூறப்பட்டுள்ள விவரங்கள் திருமணம் உறுதி செய்யப்படாத சிறுமிக்கு நடத்தப்படும் தாலிகட்டுச் சடங்கு தொடர்பானவை. அவளுக்கென ஒரு கணவனைப் பேசி முடித்திருப்பின் அவளுக்குக் கணவனாக வர இருப்பவனே தாலிகட்டுவான். அவனுடைய உடன்பிறந்தவள் சிறுமியின் மாமன் மனைவி மேற்கொள்ளும் சடங்குகளை நிகழ்த்துவிப்பாள். மற்றபடி இச் சடங்கில் வேறு மாற்றங்கள் ஏதுமில்லை. கணவனாக நிச்சயக்கப்பட்டவனால் தாலி அணிவிக்கப்படும் சிறுமிக்குத் தாலி அணிவிப்பவன் முறையான திருமணம் நடக்கும் முன் இறப்பானாகில் அவள் வேறொருவனை மறுமணம் செய்து கொள்ளுதல் இயலாது.

தென் மலபாரில் நடப்பதைப் போலவே வட மலபாரிலும் ஒருத்தி பூப்படையும் முன்பே தாலிகட்டுச் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. அங்கு இச் சடங்கு நான்கு நாள்கள் அளவினதாக நிகழும். இதுவே மரபுவழிப்பட்ட சடங்கு நெறியாகும். சிறுமி வண்ணாத்தி தரும் துணியினை அணிந்தவளாக வீட்டின் நடுக்கூடத்திலிருந்து பந்தலுக்கு வந்து மணையில் அமர்வாள். அவள் முன் சிறிது நெல்லும் அரிசியும் வைக்கப்பட்டிருக்கும். வெளுத்த துணையொன்றும் வெண்கலத் தட்டில் வெண்கலத் கிண்டியும் அதனருகே இடம்பெறும்.

அவளுடைய தலைமீது வெள்ளி, செப்புக் காசுகளை வைத்து இளநீரை அம்பட்டன் அவள் தலையில் ஊற்றுவான். அவள் உறவினர்களுள் ஒருத்தி சிறிது பச்சரிசியிடப்பட்ட பாத்திரத்தில் உள்ள தண்ணீரை அவள் தலைமீது ஊற்றுவாள். அதன்பின் சிறுமியினை வீட்டின் நடுக்கூடத்திற்கு அழைத்துச் செல்வர். அங்கேயே அவள் மூன்று நாட்கள் தங்கியிருப்பாள். அன்று மாலை ஒரு விருந்து நிகழும். நான்காம் நாள் வீட்டு வாசலில் ஒரு பந்தல் அமைத்து அதனை அலங்கரிப்பர். அச் சிறுமியினை அருகில் உள்ள குளத்திற்குக் குளிக்க அழைத்துச் செல்வர். அவள் முன் ஒருத்தி விளக்கேந்தியவளாகச் செல்வாள். கிண்டியில் நீரையும் சடங்கிற்கான பிற பொருள்களையும் மற்றவர்கள் ஏந்திச் செல்வர். அவள் குளிக்கச் சென்ற சமயத்தில் பந்தலில் அம்பட்டன் கணபதி பூசை நிகழ்த்துவான். குளித்தபின் ஒரு தேங்காயினை உடைத்துவிட்டு அவள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுப் பின் மேற்கட்டியின் கீழ் பாட்டும் இசையும் முழங்கத் திரும்ப வந்து வீட்டின் நடுக் கூடத்தினுள் சென்று சேர்வாள். நாசுவத்தி அவள் தலையில் தங்கத்தாலான நெற்றிப்பட்டத்தைக் கட்டுவாள். அதன்மீது அவள் சந்தனம் பூசுவதோடு சிறுமியின் கண்ணுக்கும் மையிடுவாள். சிறுமியின் மாமன் மனைவி ஒரு விளக்கையும் பிற பொருள்களையும் மற்றொருத்தி எடுத்துக் கொண்டு முன்னே செல்ல மணையினை ஒரு துணியால் போர்த்து எடுத்துக் கொண்டு நடுக்கூடத்திலிருந்து பந்தலுக்குச் சென்று சேர்வாள். அவள் பந்தலை மும்முறை சுற்றி வந்தபின் மணையினை ஒரு கோரைப் பாயின்மீது இடுவாள். பாயின்மீது சிறுமி தன் பாதங்களை வைக்கும் இடத்தில் கொஞ்சம் அரிசியினையும் நெல்லினையும் பரப்பி வைப்பர். விளக்கு முதலியனவற்றை எடுத்துச் சென்றவள் திரும்பவும் நடுக்கூடத்திற்கு வந்து சிறுமியினைப் பந்தலுக்கு அழைத்துச் செல்வாள். அவள் பந்தலை மும்முறை சுற்றி வந்தபின் மணையில் அமர்வாள். அம்பட்டன் கொஞ்சம் அரிசியினை அவள் கையில் தர அவள் அதனை விளக்கின் மீதும் கணபதி பூசை நடத்தப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மீதும் பந்தலின் தென்மேற்கு மூலையில் நிற்கும் கம்பத்தின் மீதும் தூவுவாள். இந்தக் கம்பம் பலா மரத்தால் ஆனதாக இருக்க வேண்டும். அல்லது இதனோடு ஒரு பலா இலைக் கொத்து இணைத்துக் கட்டப்பட்டிருக்கும். மேலும் அவள் கையில் அரிசியினைத் தர அவள் அதனை எட்டுத் திசைகளிலும் ஆகாயத்தின் மீதும் தரையிலும் வீசுவாள். ஒரு சிறிய மண்சட்டியில் அரிசி, ஒரு தேங்காய், வெற்றிலை பாக்கு ஆகியன அச் சிறுமியின் அருகில் வைக்கப்படும். அப் பானையினுள் இவற்றுக்கிடையே பல பொருள்களையும் தனித்தனியே வாழையிலையில் கட்டி வைப்பர். தங்கக் காசு, வெள்ளி நாணயம், உப்பு, அரிசி, நெல், மஞ்சள், கரி, வீட்டுக் வரையின் பழைய பனையோலை ஆகியன இவ்வாறு கட்டி வைக்கப்படும்.

பொருள்களுள் சிலவாம். பின் அந்த பானையின் வாயினை ஒரு வாழையிலையிட்டு மூடி ஒரு கயிற்றைக் கொண்டு கட்டுவர். அந்தப் பானையின்மீது மும்முறை அரிசியினைத் தூவியபின் அச் சிறுமி அந்த வாழையிலையில் ஒரு துளையிட்டு அந்தப் பானையினுள் உள்ள பொருள்களுள் ஒன்றினை எடுப்பார். அவள் எடுக்கும் பொருளை ஆராய்ந்து அவளுடைய வருங்காலத்தைப் பற்றிய போக்கு எப்படியிருக்கும் என்பதனை முடிவு செய்வர். பின் வெற்றிலை பாக்கினை இருமுறை அவள் தலையினைச் சுற்றித் தூர வீசி எறிவர். பின் பந்தலின் ஒரு மூலையில் தொங்கவிடப்பட்டுள்ள குலையிலிருந்து ஒரு தேங்காயினை முறுக்கிப் பிய்த்து எடுப்பாள். அடுத்து மந்திரக் கோடி எனப்படும் புத்தாடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும். இசை தனிப்பட்ட முறையில் நெய்யப்பட்ட புதியவான துணிகளாம். அவள் உறவினர்கள் ஒவ்வொருவரும் அத்தகைய கோடி ஒன்றை அவள் தலையின்மேல் போர்த்துவர். அவற்றுள் பாதி (பத்து முதல் பன்னிரண்டு வரை) அம்பட்டனுக்கு உரியனவாக வழங்கப்படும். அவன் இச் சடங்கின் இறுதியில் சிறுமியின் தலைமீது ஒரு வெள்ளி மற்றும் செப்புக் காசினை வைத்துப் பனையோலை வழியே அதன் மீது இளநீரை ஊற்றுவான். பின் சோதிடரிடம் தாலிகட்டுவதற்கு உரிய நேரம் நெருங்கி விட்டதா எனக் கேட்பர். அவன் மும்முறை உரிய நேரம் வந்துவிட்டது எனக் கூறுவான். நாசுவத்தி ஒரு நூலில் கோக்கப்பட்ட தாலியினை அச்சிறுமியின் மாமன் மனைவியிடம் தர அவள் அதனைச் சிறுமியின் கழுத்தில் அணிவிப்பாள். பின்னர் நாசுவத்தி சிறுமியின் கரங்களில் நீருற்றுவாள். மும்முறை அந்த நீரை வான் நோக்கி வீசிய பின் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய திசைகளை நோக்கியும் வீசுவாள். ஒரு பருத்தித் திரியினை எண்ணெயில் தோய்த்து மூங்கில் குச்சி ஒன்றினைச் சுற்றி அதனைக் கட்டி ஓர் இளநீரினுள் சொருகி அதனை எரிய விடுவர். அப்பொழுது அந்தச் சிறுமியிடம் உனக்குக் கதிரவன் தெரிகின்றானா எனக் கேட்பர். அவள் எரியும் அந்தத் திரியினைப் பார்த்தபடி ஆம் எனக் கூறுவாள். உடன் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டு அச் சிறுமியினை ஒரு தென்னை மரத்திடம் அழைத்துச் செல்வர். அம் மரத்தை மும்முறை சுற்றி வந்த பின் அவள் வேர்மீது நீருற்றுவாள். இத்துடன் சடங்குகள் முடிவுறும். பின்னர் சிறுமியினை வீட்டின் நடுக் கூடத்திற்கு அழைத்துச் செல்வர்.

கள்ளிக்கோட்டைக்கும் கொச்சிக்கும் இடையே கடற்கரையில் உள்ள சாவக்காட்டில் தாலிகட்டுச் சடங்கின்போது மேற்கொள்ளப்படும் வேறுபாடுகளை பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம். இவர்கள் நடத்தும் சடங்கு சில தனிப்பட்ட

வழக்குகளைக் கொண்டதாகும். சிறுமியினை மணந்து கொள்ள உள்ளவன் அல்லது அவன் சார்பில் வேறொருவன் சடங்கின்போது சிறுமிக்குத் தாலி அணிவிப்பர். சடங்கு தொடங்க ஏழு நாள்களுக்கு முன் தரையைச் சேர்ந்த தச்சன் தண்டானின் (இப் பகுதியில் இவன் அவகாசி எனப்படுவான்) அனுமதி பெற்று ஒரு கமுக மரத்தை வெட்டுவான். அதன் ஒரு பகுதியினை தாலி கட்டுச் சடங்கு நடக்கும் பந்தலின் தென்கிழக்கு மூலைக்கு உரிய கம்பமாக நிறுத்துவான். ஆறாம் நாள் சிறுமியினை வீட்டின் நடுக் கூடத்தில் உரிய சடங்குகளுடன் கொண்டு வந்து அமர்த்துவர். தச்சன் பலாமரத்தாலான ஒரு மணைப்பலகையினைக் கொண்டு வருவான். அதற்குரிய தொகையினைச் செலுத்தி அதனைப் பெற்றுக் கொள்ளும் சிறுமியின் தந்தை அதற்குப் பூசை நிகழ்த்துவான். மணமகன் வீட்டைச் சேர்ந்தவர்கள் அங்கு வந்து சேர்வர். இன்னமும் முற்றுப் பெறாததாக இருக்கும் பந்தலில் ஒரு விளக்கினை ஏற்றி வைப்பர். விளக்கின் அருகே ஒரு படி நெல், நாழி அரிசி, முகம் பார்க்கும் கண்ணாடி, கிண்டியில் நீர், மரத்தாலான செப்பு ஆகியனவற்றை வைப்பர். தண்டான் மனைவியும் சிறுமியின் மாமன் மனைவியும் வேறு சில பெண்களும் சிறுமியினை அழைத்து வந்து மணையில் அமர்த்துவர். அவள் மாமன்மனைவி அவள் தலைமுடியை வகிர்ந்து தலைமீது ஒரு பொன்காசினை வைப்பாள். பலா இலையிலான தொன்னையிலிருந்து தண்டான் மனைவி மும்முறை அக் காசின்மீது சிறிது எண்ணெய் விடுவாள். மற்றப் பெண்களும் இதே போல எண்ணெய் விடுவர். அதன்பின் அச்சிறுமியினை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்து அழைத்து வருவர். அவள் குளத்திலிருந்து திரும்புமுன் அவளுக்காக மணையினை மீண்டும் நடுக்கூடத்திற்கு கொண்டுபோய் இட்டுவைப்பர். அன்று மாலை ஒரு விருந்து நிகழும். தாலிகட்டுவதற்கு முந்தின நாளுக்கு முந்தினநாள் பந்தலின் எஞ்சியுள்ள கால்களை நிறுத்துவர். தாலி கட்டு அன்று பந்தல் அலங்கரிக்கப்படும். விளக்கு, கண்ணாடி முதலியனவற்றை முன்பு போலவே பந்தலில் கொண்டு வந்து வைப்பர். தரையில் ஒரு பாயினை விரித்து அதன்மீது ஒரு கம்பளியைப் போட்டு அதற்கும் மேலே ஒரு வெள்ளைத் துணியினை விரிப்பர். அந்த விரிப்பின் இரண்டு பக்கமும் பக்கத்துக்கு ஒன்றாகத் தலையணைகள் இடப்படும். மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் முகூர்த்த நேரம் நெருங்கும்வரை பக்கத்து வீட்டில் காத்திருப்பர். உரிய நேரத்திற்கு முன் அவர்கள் பந்தலுக்கு வரக்கூடாது. மணமகன் தரையினைச் சேர்ந்த தண்டான் தன் நண்பர்கள் சிலருடன் முதலில் வந்து மணமகள் தரையைச் சேர்ந்த தண்டானிடம் இரண்டு துணிகளையும் ரூ.*10-8-0* ஐயும் கொடுத்துச் செல்வான். சிறுமியினை அவன் கொடுத்த துணிகளுள் ஒன்றினை உடுக்கச் செய்து

மணமகன் உடன் பிறந்தவள் அவளைக் கைப்பிடித்துப் பந்தலுக்கு நடத்தி வருவாள். அவள் தன் மாமன் கொண்டு வந்து தந்த துணியின்மீது இடப்பட்ட மணையில் வந்து அமர்வாள். மணமகனை அவனுடைய மாமன் தோளில் சுமந்தவனாக ஊர்வலமாக அழைத்து வருவான். பந்தலை மும்முறை சுற்றிவந்த பின் அவன் மணமகனைச் சிறுமியின் வலப்பக்கத்தில் அமர்த்துவான். சிறுமியின் மாமன் மனைவி அவளுக்கு இடப்புறமாக மணையில் அவள் அருகே அமர்வாள். சிறுமியின் தந்தை சோதிடரிடம் மும்முறை தாலிகட்ட உரிய நல்ல நேரம் வந்துவிட்டதா எனக் கேட்பான். சோதிடன் மும்முறை உரிய நேரம் வந்துவிட்டது எனத் தெரிவிப்பான். அதன்பின் மணமகனான சிறுவன் சிறுமியின் கழுத்தில் தாலியினை அணிவிப்பான். சிறுவனும் சிறுமியும் ஒன்றாகக் கணபதியினை வாழ்த்திப் பாடுவர். பாட்டின் இறுதியில் மும்முறை உரக்க மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர். பின்னர் சிறுவன் தலையணைக்கு வெளியே தரையில் வந்து அமர்வான். சிறுமியினை வீட்டினுள் அழைத்துச் செல்வர். விருந்துக்குப் பின் மீணடும் அவளை அழைத்து வந்து மணையில் அமர்த்துவர். அரிசியும் மலரும் அவள் மீது தூவப்படும். கள்ளிக்கோட்டையில் மாமன்மகனுக்குத் தொகை வழுங்கப்படுவதைப் போல இங்கே அதனை வழங்கும் வழக்கம் இல்லை. சிறுவனான மணமகன் மணமகளைக் கைப்பிடித்து அழைத்து வந்ததற்காக எட்டணாவைத் தன்அக்காவிற்கு வழங்குவான். மணமகன் சார்பில் வேறொருவன் சிறுமிக்குத் தாலிகட்டும்போது அவ்வாறு தாலி கட்டுபவனைப் பின்னால் அந்தச் சிறுமியினை மணம் செய்து கொடுக்கப் போகும் தர்வாடிலிருந்து தேர்ந்தெடுப்பர். அவன் சிறுமியின் வீட்டில் மூனறு நாள்கள் வரை தங்கியிருப்பான். நான்காம் நாள் சிறுவனையும் சிறுமியினையும் கோயிலுக்கு அழைத்துச் சென்று அவர்களிடையே முறைப்படி மணமுறிவினைச் செய்து வைப்பர்.

வட மலபாரில் தீயரிடையே நடைபெறும் மணச் சடங்குகள் பற்றி விவரங்கள் தர முயற்சி மேற்கொள்வது வீண் வேலையாகும். அவர்களிடையே மணச் சடங்குகள் எனக் கூறத்தக்க எவையும் இல்லை. அங்கு முகமதியரான மாப்பிள்ளாக்கள், தீயர் உள்ளிட்ட அனைத்து வகுப்பாரும் மருமக்கள் தாய உடமை உரிமை முறையினையே மேற்கொள்கின்றனர். குழந்தைகளுக்குத் தந்தையின் உடைமையில் எத்தகைய உரிமையும் இல்லை. கணவன் மனைவியருள் எவர் விரும்பினும் இழப்பு ஈடு ஏதும் தராமலேயே மணமுறிவு செய்து கொள்ளலாம். மணஉறவினை ஏற்படுத்துவதைப் போல அதனை முறித்துக் கொள்வதும் எளிதானதும் தடையேதுமற்றதாக உள்ளது.

மணத்தின்போது மண உறவு கொள்வோரின் சென்ற கால வாழ்க்கையைப் பற்றித் துருவிக் கேட்டறியும் வழக்கமும் இவர்களிடையே இல்லை. புறச் சடங்குகள் எதுவுமின்றி இருவர் தங்கள் வசதிக்கேற்பத் தங்களிடையே செய்து கொள்ளும் உடன்பாடே இவர்களிடையேயான திருமணம். மணமகளுக்குச் சேலையையும் அவள் அன்னைக்கு ஒரு சேலையையும் தன்னோடு எடுத்துக் கொண்டு சில நண்பர்களை உடன் அழைத்தவனாக மணமகன் தான் மணக்க உள்ள சிறுமியின் இல்லம் சென்று சேர்வான். வடமலபாரில் தீயர் சாதிப் பெண்கள் தங்கள் இரண்டு காதுகளின் புறமடல்களின் மேல்வளைவில் இடப்படள்ள துளையில் சித்து என்ற வளையத்தை அணிகின்றனர். இந்தத் துளைகள் அவர்கள் குழந்தையாக இருக்கும்போதே அவர்களுக்கு இடப்பட்டுவிடும். எனினும் ஒருத்தி ஒருவனோடு உடல் உறவு கொள்ளும்வரை அவள் காதில் உள்ள அத் துளையில் சிட்டு அணிவதில்லை. மணநிகழ்ச்சியின்போது மணப்பந்தலில் வைத்துச் சித்துகள் செய்யப்படும். அதற்கான தங்கத்தைச் சிறுமியின் மாமன் தருவான். இவ்வாறு செய்து அணிவிக்கப்படும் சித்துகள் எக்காரணத்தைக் கொண்டும் பின்னர் அகற்றப்படுவதில்லை. மிக வறுமை அடையும்போதே அதனை அகற்றுவர். “சித்துவையும் வித்தாச்சு”, என்ற வழக்கு ஒருத்தி அனைத்தையும் இழந்துவிட்டாள் என்பதனைக் குறிப்பதாகும். முன்பு திருமணச் சடங்குகள் ஏழு நாட்கள் நீட்டித்ததாகக் கூறுவர். பின்னர் அவை ஏழு வேளை சோறு என்ற அளவுக்குக் குறுகிவிட்டன. அதாவது மூன்றரை நாள் அளவினதாகச் சுருங்கியது. இப்பொழுது அது ஒரு நாள் சடங்காக உள்ளது. இப்பொழுது மணமகன் ஓரிரவு மட்டும் மணமகள் இல்லத்தில் தங்கி மறுநாள் அவளைத் தன் இல்லம் அழைத்துச் செல்வான், அவர்கள் புறப்படுமுன் உரிக்கப்பட்ட தேங்காய் ஒன்றினைப் பலா மரத்தாலான குறு நாற்காலி ஒன்றின்மீது வைத்து மணமகன் குழுவினைச் சேர்ந்தவன் ஒருவன் கை முட்டியால் அதனை உடைப்பான். மரபு வழி நிற்கும் வட மலபாரைச் சேர்ந்தவர்கள் சிலர் சாதகப் பொருத்தம் பார்க்கும் பழைய வழக்கினைத் தொடர்ந்து மேற்கொண்டவர்களாக உள்ளனர். மேற்கூறிய கஞ்சிச் சடங்குக்குச் சமமான அச்சாரக் கலியாணம் என்ற சடங்கினையும் சிலர் நடத்துகின்றனர். அப்போது தென்மலபாரில் தரப்படுவதான நாற்பத்திரண்டு பணத்திற்குப் பதிலாக நாற்பத்தொரு பணத்தை இவர்கள் காரணமாகச் செலுத்துவர். பழைய பொன்னாலான பணம் நான்கு அணாவிற்குச் சமம். ஐந்து வெள்ளிப் பணம் இன்று ஒரு ரூபாயுக்குச் சமம். மலபாரில் கிராமப்புரங்களில் அனைத்தையும் வெள்ளிப் பணமாகவே கணக்கிடுவர்.

10 பைசா (அணாவில் பன்னிரண்டில் ஒரு பங்கு) = *1* வெள்ளி
5 வெள்ளி = *1* ரூபாய்

கடைவீதிகளிலும் வாரச் சந்தைகளிலும் வணிகர்கள் தங்கள் விலையினை இத்தனை வெள்ளி எனக் கூறியே வணிகம் செய்வர்.

தீயன் ஒருவனுக்குச் சாவு நெருங்கும்போது நெருங்கிய உறவினர்கள் அனைவரும் வந்து கூடி அவன் சாவினை எதிர்பார்த்தவர்களாகக் காத்திருப்பர். சாக உள்ளவனை வீட்டின் நடுக்கூடத்தில் தரையில் எடுத்துக் கிடத்தியிருப்பர். கட்டிலில் படுத்தபடி உயிர்விடுவது புனிதமற்றதாகக் கருதப்படுகிறது. இறக்க உள்ளவன் குடும்பத்தின் தந்தையாக உள்ளவன் எனவும், பெரிய பண்ணை உரிமையாளன் எனவும் கருதிக்கொண்டு நாம் அவன் சாவுச் சடங்குகள் எப்படி நிகழும் என்பதனைப் பார்ப்போம். அவன் உயிர்போகும் முன் அவனுடைய மக்கள் அனைவரும் அவன் வாயில் கொஞ்சம் கஞ்சி விடுவர். உயிர் பிரியும்போது பெண்கள் அனைவரும் உரக்கக் கூக்குரலிட்டு அழுவர். அவன் பண்ணையில்அடிமைகளாக உள்ள செறுமான்களும் புரிந்து கொள்ளாத புலம்பல் உரைகளைக் கூறியவர்களாக உரக்கக் கூட்டத்தோடு கூட்டமாக அழுவர். வெளியூரில் உள்ள உறவினர்களுக்கு செய்தி அனுப்பப்படும். இறந்தவனுடைய சம்மந்தி வீட்டார் அனைவரும் பலாப்பழம், வாழைக்காய், தேங்காய் ஆகியவற்றைச் சாவு வீட்டுக்கு அனுப்பி வைப்பர். அத் தேங்காய்களின் ஒரு பாதியை மட்டும் மட்டை உரித்திருப்பர். இறந்தவனுக்கான சாவுச் சடங்குகளுக்குப் பின் இவற்றைத் தண்டான் கூடியுள்ளவர்களிடையே பிரித்து வழங்குவான். அவன் மற்றவர்களுக்கு வழங்குவதைப் போல இரண்டு மடங்கைத் தனக்கென ஒதுக்கிக் கொள்வான். உயிர் பிரிந்த உடலைத் தலை தெற்கு நோக்கி இருக்கும்படியாகக் கிடத்திக் கால் கை பெருவிரல்களை இணைத்துக் கட்டுவர், பின் அதனை வாசலுக்குத் தூக்கிச் சென்று எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிப் புதிய உடைகள் புனைந்து நடுக்கூடத்தில் கொண்டு வந்து கிடத்துவர். ஒரு தேங்காயை உடைத்து ஒவ்வொரு முடியிலும் திரியிட்டு விளக்கேற்றி ஒன்றைத் தலைமாட்டிலும் மற்றொன்றைக் கால்மாட்டிலும் வைப்பர். வீட்டுக்கு முதல்வன் பிணத்தின் மீது ஒரு பருத்தித்துணியினைப் போர்த்துவான். அவனை அடுத்து உறவினர்களும் நண்பர்களும் துணியினை இடுவர். எவரேனும் பிணத்திற்குப் பட்டுத்துணி போர்த்த விரும்பினால் அதனைப் போர்த்தும்போது உடன் ஒரு பருத்தித் துணியினையும் போர்த்த வேண்டும். அதன்பின் பிணத்தைப் புதைக்கவோ எரிக்கவோ எடுத்துச் சென்று புதைகுழி

அருகிலோ சிதை அருகிலோ வைப்பர். கிராமப்புறங்களில் வயதானவர்களையும் தர்வாடைச் சேர்ந்தகாரனவன்களையும் எரிப்பதையும் மற்றவர்களைப் புதைப்பதையும் வழக்கமாக வைத்துக் கொண்டுள்ளனர். தீட்டு நீக்கும் சடங்கை நிகழ்த்துவதற்குரிய அம்பட்டன் பிணத்தின் மேல் போர்த்தப்பட்ட துணிகளை அப்புறப்படுத்தித் தனக்குரியதாகத் தனியே வைத்துக் கொள்வான். பிணத்தின்மீது அடியில் இருக்கும் மூன்று துணிகள் மட்டும் பிணத்தின் மீதே விட்டுவிடப்படும். பிணத்தை எடுத்துச் சென்றவுடன் வீட்டு வாசல் வரை பிணத்தின் பின்னால் சாணநீரைத் தெளித்தபடி செல்வர். குடும்பத்தைச் சேர்ந்த சொத்துக்களுக்கு வாரிசாக ஆக உள்ள மூத்தவனும் சாவுச் சடங்குகளை நடத்தி வைக்கக் கடமைப்பட்டவனும் குடும்பத்தை சேர்ந்த ஒருவர் பிணத்தின் மீதிட்ட துணியில் ஒரு துண்டினைக் குறுக்காகக் கிழித்து அதனைத் தன் நெற்றியைச் சுற்றிக் கட்டிக் கொள்வான். அதனைக் கிழிக்கும்போது துணியின் ஒரு முனையினை அவன் பிடித்துக் கொள்ள அம்பட்டன் மறுமுனையினைப் பிடித்து இழுத்துக் கிழிப்பான். அதன்பின் அந்த அம்பட்டன் பிணத்தைப் போர்த்துள்ள துணிகள் வழியாக வாய், வயிறு, ஆண்குறி ஆகியன உள்ள இடத்தில் துளைகள் இடுவான். வாயின் மேல் உள்ள துளை வழியாகச் சிறிது தண்ணீரைவிட்டு அரிசியினைப் போடுவான். சாவுத் தீட்டிற்கு உரியவர்களாக உள்ள இறந்தவனின் பிள்ளைகள் பேரன்கள், அவன் உடன் பிறந்தவன் பிள்ளைகள், தம்பிகள், சகோதரியின் பிள்ளைகள் ஆகியோரும் இதுபோலவே அவன் வாயில் அரிசியிட்டு நீரூற்றியபின் புதைகுழியையோ சிதையையோ மும்முறை சுற்றி வருவர். அதன்பின் அம்பட்டன் புதைகுழியின் மீது நீருள்ள ஒரு பானையினைப் போட்டு உடைப்பான். இந்த நாளன்று வேறெந்தச் சடங்கும் மேற்கொள்ளப்படுவதில்லை. அன்றிரவு தீட்டுக்குள்ளானவர் சோறு உண்ணமாட்டார்கள். உடல் எரிக்கப்படுமானால் சுடுகாட்டில் பாணன்கள் ஐந்து நாள்கள் வரை காவல் இருப்பர். இவர்கள் இரவு முழுக்கத் தப்பட்டை முழக்கி அந்த இடத்தில் திரியும் தீய ஆவிகளை ஒட்டியபடி இருப்பர். இரண்டாம் நாள் காலையில் தீட்டுக்கு உள்ளானவர்களான அனைவரும் தலைமழித்துக் கொள்வர். இதனைச் சில சடங்குகளோடு தொடங்குவர். முகம் மழிக்கும் இடத்தருகே ஏற்றிய விளக்கு, வாழையிலையில் ஒரு படி அரிசி, ஒரு படி நெல் ஆகியன வைத்திருப்பர். அரிசியும் நெல்லும் தலை மழிக்கும் அம்பட்டனுக்கு உரியவை. தலை மழித்துக் கொண்டவர்கள் குளித்து வந்து காக்கைக்குச் சோறிடும் சடங்கினை நடத்துவர். மூன்று இளநீர்களை அடுப்புக் கற்களாக வைத்து அதன்மீது ஒரு வெண்கலப் பானையினை வைத்துச் சோறு சமைப்பர். பிணத்தின் மீது போடப்பட்ட துணியிலிருந்து ஒரு துண்டினைக் கிழித்து

நெற்றியில் கட்டிக்கொண்ட மூத்த மகன் சோற்றினை இரண்டு சிறிய உருண்டைகளாக உருட்டி ஒரு வாழையிலையில் வைத்து தர்ப்பைப்புல் வழியாக அவற்றின்மீது நீர்விட்டு அதனை இறந்து போனவரின் ஆவிக்காகப் படைப்பான். அவனைப் பின்பற்றித் தீட்டுக்கு உள்ளானவர்களாக உள்ள ஆண்களும் பெண்களும் பலிச்சோறு படைப்பர். இச் சோற்று உருண்டைகளைக் காகங்கள் உண்ணும். இந்தச் சிறு சடங்கினைச் சாவுத் தீட்டு முடிவுறும் பதினொன்றாம் அல்லது பதின்மூன்றாம் நாள்வரை நாள்தோறும் நிகழ்த்தி வருவர். பதினொன்றாம் நாள் செவ்வாய்கிழமையாகவோ வெள்ளிக் கிழமையாகவே கெட்ட நாளாகவோ வருமானால் தீட்டு நீக்கும் சடங்கைப் பதின்மூன்றாம் நாளுக்குத் தள்ளி வைப்பர். தீட்டுக் காலத்தின் முதல் சில நாள்கள் ஒரு மாதத்திலும் எஞ்சிய நாள்கள் அடுத்த மாதத்திலும் விழுமானால் அந்த ஆண்டு முடிவதற்குள் வீட்டில் மற்றொரு சாவு நிகழும் எனக் கொள்வர். ஐந்தாம் நாள் நிகழ்த்தப்படும் சஞ்சயனத்திற்கு முந்தின நாள் இரவு தீபம் பார்க்கும் நிகழ்ச்சி நடக்கும். வீட்டின் நடுக்கூடத்தின் தென்கிழக்கு மூலையில் கொஞ்சம் நெல்லி னைக் குவித்து வைத்து அதன் மீது ஒரு வெண்கலத்தட்டில் இரும்பு விளக்கு ஒன்றில் ஐந்து அல்லது ஏழு திரியிட்டு ஏற்றி வைப்பர். அந்த விளக்கின் கீழ் பசுஞ்சாண உருண்டை வைக்கப்பட்டிருக்கும். அதனருகே தென்னம்பாளை ஒன்றினை வைப்பர். மறுநாள் வரை அந்த விளக்கினைத் தொடர்ந்து எரியுமாறு பார்த்துக் கொள்வர். இறந்தவன் ஆணாயின் அவன் அக்கா மகள் அதன் அருகே ஒரு பாயில் படுத்தவளாக அதனைப் பார்த்துக் கொள்வாள். சாவுத் தீட்டினைப் போக்குவதன் முதல் கட்டம் சஞ்சயனம் சடங்கேயாகும். இதனை முடிக்கும்வரை சாவு வீட்டுக்கு வரும் அனைவரும் தீட்டுக்கு உள்ளானவர்களாகக் கருதப்படுவர். அவ்வாறு வருபவர்கள் குளிக்காமல் தங்கள் வீட்டினுள் நுழையவோ உணவு கொள்ளவோ கூடாது. பிணத்தை எரித்திருப்பார்களாயின் எஞ்சியுள்ள எலும்புகளைத் திரட்டி எடுத்துச் சென்று கடலில் விடுவர். கடல் தொலைவில் இருப்பின் ஆற்றில் விடுவர். தீட்டுக்குள்ளான குடும்ப உறுப்பினர்கள் உடம்பு முழுக்க எண்ணெயினைத் தேய்த்துக் கொண்டபின் அம்பட்டன் அவர்கள் தலைமீது தர்ப்பைப் புல்லால் பசும்பாலை எடுத்துத் தெளிப்பான். பிறகு அனைவரும் குளிப்பர். மூத்த மகனுக்கு மட்டுமே வண்ணான் மாத்து வழங்குவான். அடுத்துக் காகங்களுக்குச் சோறிடும் சடங்கை நடத்துவர். அதன்பின் அடுப்புக் கல்லாகப் பயன்படுத்தப்பட்ட இளநீர்களைத் தூக்கி தூர எறிவர். பின் வீட்டு வாசலில் பெரிய வெண்கலப் பானையொன்றில் நீர் நிறைத்து வைப்பர். வீட்டினுள் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கும் விளக்கினை அம்பட்டன் எடுத்து வந்து அந்த

வெண்கலப் பானை அருகே வைப்பான். தீட்டுக் குள்ளானவர்களான பெண்கள் வீட்டின் நடுக்கூடத்திலிருந்து கையில் எரியும் திரியினை ஏந்தியவர்களாக வந்து அந்த வெண்கலப் பானையினை மும்முறை சுற்றிய பின் அந்தத் திரியினை வெண்கலப் பானையில் உள்ள நீரில் இடுவர். அந்த விளக்கினை முந்திய இரவு அணையாது காத்துவந்தவள் அந்த பானையுள் நான்கணாவினை இடுவாள். மற்றவர்கள் சில காசுகளை மட்டும் போடுவர். மூத்த மகன் அணையப் போகின்ற இரும்பு விளக்கிலிருந்து மற்றொரு விளக்கினை ஏற்றி அதனை வீட்டின் நடுக் கூடத்தில் கொண்டு சென்று வைப்பான். அதன்பின் அம்பட்டன் அந்த இரும்பு விளக்கைப் பானையில் உள்ள தண்ணீரில் முக்கி அணைத்துவிட்டு அந்தப் பானையில் உள்ளே கிடக்கும் காசுகளை எடுத்துக் கொள்வான். அந்தப் பானையில் உள்ள தண்ணீரை ஒரு தென்னை மரத்தின் வேரருகே கொண்டு சென்று கொட்டுவர். அந்த வெண்கலப் பானை விளக்கினை அணையாது விழித்திருந்து காத்து வந்தவளுக்கு உரிமையுடையதாகும். எனினும் அவள் புலகுளி சடங்கு முடிந்து அந்த வீட்டைவிட்டுப் போகும்போதே அந்தப் பாத்திரத்தைத் தன்னுடன் எடுத்துச் செல்ல முடியும். விளக்கை நீரில் அமித்தி அணைக்கும்போது அதற்கென்றே கூலி கொடுத்து அழைத்து வரப்பட்ட ஒருத்தி வீட்டுவாசலில் தென்னந்தடுக்கு ஒன்றின்மீது உட்கார்ந்திருப்பாள். தண்டான் அவள் தலைமீது மும்முறை எண்ணெயினை ஊற்றுவான். அவள் சில வெற்றிலைகளையும் இரண்டு அணாவையும் பெறுவாள். பின் அங்கிருந்து எழுந்து வீட்டை நோக்கி முதுகைக் காட்டாது பின்னோக்கி நடந்து செல்வாள். தீட்டினை அவள் தன்னோடு கொண்டு சென்றவளாகின்றாள். பின்னர் அனைவருக்கும் வெற்றிலை வழங்குவர். சாவு நிகழ்ந்த அன்று பலாப்பழம், வாழைக்காய் முதலிய சாவுக்குரியனவற்றை அனுப்பி வைத்த சம்பந்திகள் இந்த நாளன்று ஒரு மூட்டை அரிசியினையும் நான்கு ரூபாயினையும் கொண்டு சேர்க்க வேண்டும். அவர்கள் அம்பட்டனுக்கு எட்டணாவினையும் வழங்க வேண்டும். மடிக்கப்பட்ட கைக்குட்டை ஒன்றினை முதலில் அம்பட்டனிடம் தருவர். அவன் வழக்கப்படி அதனைத் திருப்பித் தந்துவிட்டு அதற்குரிய தொகையான எட்டாணாவைப் பெற்றுக் கொள்வான். வந்துள்ளவர்கள் விடைபெற்றுச் செல்லும் முன் புலகுளி என்று நடத்துவது என்பதனைப் பற்றிப் பேசி முடிவெடுப்பர். சாவு தொடர்பான தீட்டினை முழுவதுமாகக் கழுவி நீக்கும் இறுதிச் சடங்கே புலகுளி. அன்று குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வர். அம்பட்டன் அவர்கள் மீது பசும்பாலையும் நல்லெண்ணையினையும் தெளிப்பான். அதன்பின் அவர்கள் குளிப்பர், வீட்டின் நடுக்கூடத்தில் அரிசிமாவையும் மஞ்சள் பொடியினையும் கொண்டு அம்பட்டன் இறந்தவரின் உருவத்தைத் தலைப்பக்கம் தெற்கே

இருக்குமாறு வரைந்து வைப்பான். அந்த உருவத்தை இரண்டு வாழையிலைகள் கொண்டு மூடி வைப்பர். அந்த வாழையிலைகளின் மீது சிறிது நெல்லோ அரிசியோ இட்டுவைப்பர். இவற்றின் மீது ஒரு புதிய துணியை விரித்து அதன்மீது மூன்று படி நெல்லுள்ள கூடையினை வைப்பர். இறந்தவரின் மூத்த மகன் தெற்கு நோக்கி அமர்ந்தவனாக ஒரு நாழியினால் கூடையில் உள்ள நெல்லி னை எடுத்துத் தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும் இடுவான். வடக்குத் திசையில் நெல்லினை இடமாட்டான். தன் இடது கையில் விரல்களை கோப்பை போல இணைத்துக் குவித்து மீண்டும் நெல்லினை முன்பு போலவே மூன்று திசைகளிலும் இடுவான். பின் முதல் விரலையும் நான்காம் விரலையும் கட்டை விரலோடு சேர்த்து இணைத்தபடி எஞ்சியுள்ள இரண்டு விரல்களால் கொஞ்சம் நெல்லினை எடுத்து முன்பு போலவே மூன்று திசைகளிலும் இடுவான். அடுத்து இதே போன்று அரிசியும் எடுத்துப் போடப்படும். நெல்லுள்ள ஒரு நாழியில் எரியும் திரியினை அதன் மேலே இட்டுக் கூடையினுள் வைப்பான். இறந்தவனின் மூத்த மகன் அந்த நாழியினைத் தன் இடக்கையில் எடுத்து முதுகுப் பக்கமாகக் கொண்டு சென்று வலக்கையால் வாங்கி மீண்டும் கூடையினுள் வைப்பான். எரியும் திரிமீது மும்முறை தண்ணீரைத் தெளித்து அதனை அணைப்பர். தரையில் வரையப்பட்டுள்ள உருவத்தின் தலைமாட்டில் வண்ணான் கொண்டு வந்த மாத்தான துவைத்த துணி வைக்கப்படும். மடிக்கப்பட்டுள்ள அந்தத் துணியின் மடிப்புகளிடையே மூன்று நாழி நெல்லினை இட்டு வைத்திருப்பர். அதன்மேல் ஒரு தேங்காய் வைக்கப்பட்டிருக்கும். அதன் நான்கு முனைகளிலும் கரி, சிறிது உப்பு, சில மிளகாய்கள், ஒரு தங்கப் பணம் ஆகியன முடியப்பட்டிருக்கும். சாவுச் சடங்கினை நடத்துபவனான இறந்தவனின் மூத்த மகன் அத் துணியினை அதிலுள்ள பொருள்களோடும் கூட எடுத்து முதலில் தன் தலைமீது வைத்துப் பின் அதனை நெற்றி, காதுகள், இடுப்பின் பக்கங்கள், முழங்கால்கள், கால்விரல்கள் ஆகியவற்றோடு ஒற்றி எடுப்பான். இவ்வாறு அவன் மும்முறை செய்வான். அதன்பின் தரையில் வரையப்பட்டுள்ள உருவத்தின் மீதுள்ள வாழையிலைகள் அகற்றப்படும். வரையப்பட்ட அந்த உருவத்திலிருந்து கொஞ்சம் மஞ்சள் பொடியினை எடுத்து அதனை மூத்த மகனுடைய நெற்றியில் அப்புவர். பின் அவன் மும்முறை காதுகளைப் பற்றியவனாகத் தோப்புக் கரணமிட்டுத் தலைதாழ்த்தி அந்த உருவத்திற்கு வணக்கம் தெரிவிப்பான். இது மாதிரி தோப்புக்கரணம் போடுவது எளிதில் இயலக்கூடியதன்று. இச் சடங்குகளின் போதெல்லாம் மூத்த மகன் பிணத்தைப் போர்த்திருந்த துணியிலிருந்து கிழித்த துண்டுத் துணியினைத் தன் தலையில் கட்டியவனாக இருப்பான். அப்போது நடுக் கூடத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய

வேறு சடங்குகள் எவையுமில்லை. பின் மூத்த மகன் வாசலுக்குச் சென்று காக்கைக்கு இறுதியாகப் பலியாகக் கொடுப்பதற்குரிய சோற்றைச் சமைப்பான். நான்காம் நாள் இரவு விளக்கு அணையாமல் காவலிருந்து வந்தவள் நெல்லி னைக் குற்றி மூன்று நாழி அரிசி தயாரித்திருப்பாள். அதனைக் சோறாகச் சமைத்து மூத்த மகன் கூடத்திற்குக் கொண்டு வருவான். அத்தோடு கொஞ்சம் கரும்புச் சர்க்கரை, வாழைப்பழம், பப்படம், ஆகியனவற்றையிட்டுப் பிசைந்து பெரியதும் சிறியதுமாக இரண்டு உருண்டைகளை உருட்டி ஒரு வாழையிலையில் எடுத்து வைப்பான். அவற்றுக்குப் பூசை செய்தபின் அவற்றை ஒரு பொற்காசில் வைத்து வீட்டு முற்றத்தில் காக்கைகளுக்கு இடுவான். சிலர் இப் பிண்டங்களை, ஆற்றுக்கோ கடலுக்கோ கொண்டு சென்று அங்கு விடுவர். அவ்வாறு கொண்டு சென்று விட்டுவரும் போது அதனைக் கொண்டு சென்றவர்கள் திரும்பவரும் சமயம் பல பொருள்களையும் தயாராக வைத்திருக்க வேண்டும். ஒரு புதுப் பானையில் தண்ணீர், கமுகம்பூம் பாளைக் கொத்து ஒன்று, மாவிலை, பொற்காசு அல்லது மோதிரம் உள்ளே இடப்பட்ட கிண்டி, துணியில் முடியப்பட்ட கொஞ்சம் உப்பு, கொஞ்சம் அரிசி, சில மிளகாய்கள் ஆகியனவே அவ்வாறு ஏற்பாடு செய்து வைத்திருக்க வேண்டிய பொருள்கள். தண்ணீர் உள்ள பானையின் வாய் மேலே ஓர் வாழையிலையிட்டுக் கட்டப்பட்டிருக்கும். பலாமரம், மாமரம் ஆகிய்வற்றால் செய்யப்பட்ட இரு குறுநாற்காலிகளையும் அங்கே போட்டு வைத்திருப்பர். மூத்த மகன் இவற்றுள் ஒன்றில் அமர்ந்து தன் கால்கள் தரையில் படாதபடி மற்றொன்றின் மீது கால்களை வைத்துக் கொள்வான். பானையில் உள்ள தண்ணீரை மாவிலையில் தொட்டு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளிலும் மூத்த மகன் தலைமீதும் அம்பட்டன் தெளிப்பான். எஞ்சிய நீர் முழுதும் அவன் தலை மீது கொட்டப்படும். பின் அம்பட்டன் அவன் மீது கமுகம் பாளையில் இளநீரைத் தொட்டுத் தெளிப்பான். அத்துடன் அதில் கொஞ்சத்தை அவன் பருகும்படியும் செய்வான். பானையின் வாயினைக் கட்டி யுள்ள வாழையிலையில் ஒரு துளையிட்டு அம்பட்டன் அதனுள் இருப்பனவற்றை வெளியே எடுப்பான். பின் மூத்த மகன் குளிப்பான். குளித்து வந்த அவனுக்கு அன்பளிப்புகளை வழங்குவர். வீட்டுத் திண்ணையில் அமர்ந்தவனாக அம்பட்டன் தீட்டுக்குள்ளானவர்கள் ஒவ்வொருவருக்கும் சிறிது உப்பும் பச்சரிசியும் வழங்குவான். அவர்கள் அவற்றைத் தின்பர். பின் அவன் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு வழங்குவான். அதைப் பெற்றுக் கொள்பவர்கள் அவனுக்குக் காலணாச் செலுத்துவர். மூத்தமகன் அம்பட்டன் தந்த வெற்றிலை பாக்கை மென்று அதனை அம்பட்டன் ஏந்தியுள்ள காளங்கியில் துப்புவான். அந்தக் காளங்கி அம்பட்டனுக்கு உரிய உடமையாகிவிடும். வீட்டுத் திண்ணையில்

அமரும் முன் அவ்வாறு அமர ஒரு புதுப்பாயும், கட்டிக் கொள்ள ஒரு வேட்டியும் பெற்றுக் கொண்டவனான அம்பட்டனுக்குத் தீயர் சாதிப் பெண்கள் அணிவது போன்ற ஒரு காதுவளையமும் ஒரு பட்டுத்துணியும் ஒரு வெள்ளை வேட்டியும் இரண்டணாவும் வழங்குவர். இறந்தவன் பிணம் எரிக்கப்பட்டிருப்பின் அவன் ஆறு பணத்தையும் புதைக்கப்பட்டிருப்பின் ஐந்து பணத்தையும் சாவுச் சடங்குகளை நிகழ்த்தி வைத்தமைக்குக் கட்டணமாகப் பெறுவான். இத்தகைய சமயங்களில் அம்பட்டர் சாதியினைச் சேர்ந்த ஆண் பெண்கள் பலர் அன்பளிப்புகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் வந்து கூடியிருப்பர். சாவுச் சடங்குகளின் போது உதவிகளைச் செய்தவர்களுக்கு ஒன்றுபோலவே அன்பளிப்புகள் வழங்கப்படும். அம்பட்டருள் மூத்தவன் மட்டும் சாவுச் சடங்குகளை நிகழ்த்தியதற்கான உரிய கட்டணத்தை பெறுவான். சாவு நிகழ்ந்த ஊரைச் சுற்றியுள்ள நான்கு ஊர்களைச் சேர்ந்த அம்பட்டர்களுக்கும் புதுவேட்டியும் தொகையும் அன்பளிப்பாக வழங்கும் புதுமையான வழக்கமும் இவர்களிடையே நிலவுகின்றது. சாவுத் தீட்டுக்கு உள்ளானவர்கள் மீன், இறைச்சி, ஆகியவற்றை விலக்குவதோடு வெற்றிலை வெல்லம் ஆகியவற்றையும் பயன்படுத்தக் கூடாது. இத்தடை புலகுளி நாளன்று நீக்கப் பெறும். தீட்டு நீக்கும் இறுதிச் சடங்கு பின்வருமாறு நிகழும். அம்பட்டன் கொஞ்சம் வெல்லத்தைத் தின்று கஞ்சி குடிப்பான். இதனை அடுத்து மூத்த மகன், தண்டான், ஓர்அண்டை வீட்டுக்காரர் ஆகிய மூவரும் வீட்டுக் கூடத்தில் விரிக்கப்பட்டுள்ள பாயில் அமர்ந்து கஞ்சி குடித்து வெல்லம் தின்பர். இத்துடன் தீட்டு ஒரு முடிவுக்கு வரும்.

குடும்பத்தில் முக்கியமானவன் இறப்பானாகில்-குடும்பத் தலைவன் போன்றவன் அவனுடைய உருவத்தை வெள்ளியால் செய்து அதனை ஒரு கோயிலில் ஒப்படைக்க ஏற்பாடு செய்வர். அங்கு அது மற்ற தெய்வங்களைப் போலப் பூசை செய்யப்படுவதோடு உரிய படையல்களையும் பெறும். ஆடி, ஐப்பசி மாசி ஆகிய மாதங்களில் வரும் அமாவாசையின்போது இந்த வழிபாடு சிறப்பாக நடத்தப்பெறும். வயநாட்டில் உள்ள திருநெல்லியும் திருநாவயியும் மலபாருக்கு உரிய பழமையான கோயில்கள் உள்ள இடங்கள். அக்கோயில்களிலேயே இத்தகைய சிலைகள் சேர்ப்பிக்கப்படுகின்றன. இப்பொழுது வசதி படைத்த சிலர் அதனை இராமேசுவரம், காசி போன்ற இடங்களில் உள்ள கோயில்களில் சேர்ப்பிக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். உள்ளூர் சிவன் கோயிலிலும் ஒரு வெள்ளி உருவத்தைச் செய்து வைப்பர். அங்கு ஒரு குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி ஒவ்வொரு அமாவாசையின்போதும் பூசைக்கு ஏற்பாடு

செய்வர். இந்த நாளில் மந்திரங்களை ஆயிரம் முறை கூறுவர் எனக் கருதப்படுகிறது. ஒரு சிலையினை வைத்துப் பதினாறாயிரம் முறை மந்திரங்கள் சொல்லப்பட்ட பிறகே அது கோயில் வைக்கத் தகுதியுடையதாகும். இத்தகைய உருவங்களே திருநாவாயி கோயிலில் இடம் பெற்றுள்ளன.

இறந்தவரின் ஆவிக்காக ஆண்டுச் சிரார்த்தமும் நடத்துவர். அப்பொழுது காகங்களுக்கு முன்பு விளக்கிய முறையில் சோறிடுவதோடு உறவினர்களையும் உண்பிப்பர். அன்றிரவு இறந்துபோனவருக்குப் பிரியமானவையாக இருந்த இனிப்புப் பலகாரங்களை அவருடைய ஆவிக்குப் படைப்பர். வீட்டின் நடுவே ஒரு குறு நாற்காலியின் மீது ஒரு விளக்கினை ஏற்றி வைத்து அதனருகே கிண்டியில் தண்ணிரும் இளநீரும் வைப்பர். அந்த நாற்காலியின் முன்பு இனிப்புக்களைப் படைப்பர். குழந்தைகள் அவற்றின் மீது அரிசியினைத் தூவுவர். அந்த அறையின் கதவு கால்மணி நேரம் மூடப்பட்டிருக்கும். சிரார்த்தத்தன்று காகங்களுக்குச் சோறுபடைப்பவன் ஒரு வேளை மட்டுமே உணவு கொள்வான். இறைச்சி, மீன் ஆகியன அந்த நாளுக்கு முந்தின நாளிலிருந்து விலக்கப்படும்.

இறந்தவர்களின் ஆவியினைத் திருப்தியுறச் செய்ய ‘பதவி வெளிச் சட்டு வரைதல்’ என்ற சடங்கும் நிகழ்த்தப்படும். ஆவியினை அழைத்தல் என்பது இதன்பொருள். ஒருவன் இறந்து ஓராண்டு முடிந்த பின்னரே இச் சடங்கை நிகழ்த்தலாம். அதுவரை இறந்தவரின் ஆவி, ஆன்மாக்கள் திருத்தமுறும் இடத்தைச் சேர்ந்திருக்கும். அதன்பின் அதனை எழுந்தருளச் செய்து கேள்விகள் கேட்டு விடை பெறலாம். இது நெலிகள மகப்பேற்றுச் சடங்கினை ஒத்த சடங்காகும். பாணன்கள் அல்லது வண்ணார் இதனை நிகழ்த்துவர். வீட்டு வாசலில் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் சில சிறுமியரை அமர்த்துவர். சடங்கை நடத்துபவன் இறந்தவரின் ஆவியினை எழுந்தருளுமாறு வேண்டிப்பாடுவான். இரவு நெடுநேரம் சென்றபின் அச் சிறுமியருள் ஒருத்தி மீது இறந்தவன் ஆவி எழுந்தருளி இறந்தவனைப் போலவே பேசிவருவதோடு செயற்படவும் செய்யும். வீட்டினுள் குழந்தைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரைப் பெயர் சொல்லி அழைக்கும். தன் சென்ற கால வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதோடு குடும்ப உறுப்பினர்களின் வருங்கால நடத்தைகளைப் பற்றியும் அறிவுறுத்தும். இதன்பின் அந்த ஆவி உலகப் பந்தங்களிலிருந்து விடுபட்டு வீட்டுலகத்தைச் சென்று சேரும்.

இறந்தவர்களை எரிக்க மாமரங்களையே பயன்படுத்துகின்றனர், இதற்கான மரத்தை உயிர்பிரிந்த பிறகே வெட்ட வேண்டும். சிதையில் ஒரு சில சந்தனக் கட்டைகள், கசகசா புல்லின் வேர்கள் ஆகியனவற்றையும் இடுவர். இன்று சாவுச் சடங்குகளின் நடைமுறைகள் வேகமாக மாறிவரக் காண்கின்றோம். சிதையினை அமைக்க மாமரத்திற்குப் பதிலாக சாணி வறட்டி பயன்படுத்துவதை வாய்ப்புக்கு உரியதாகக் கொள்வதற்கில்லை.

இவர்கள் நடத்தும் சடங்குகளுள் குட்டிபூசை என்பதும் ஒன்று. புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் சென்று குடிபுகும்போது இதனை நடத்துவர். தன் தலையினை வடகிழக்கிலும் கால்களை தென்மேற்கிலும் வைத்தபடி மல்லாந்து படுத்து இந்த உலகத்தை தாங்கியபடி இருக்கும் பெருந்தெய்வம் வாஸ்து புருசன் எனப்படுவான். இந்த உலகத்தை அந்தப் பெரிய உருவின் ஒரு சிறு அங்கம் எனவும் கூறலாம். காடுகள் அதன் தலைமயிர். கடல்கள் அதன் குருதிக் குழாய்கள். காற்று அதன் மூச்சு. வாஸ்து புருசனின் இந்த உடலில் ஐம்பத்து மூன்று தேவதைகள் வாழ்கின்றனர். பூமியின் மேற்பரப்பை வெட்டும்போது அத் தேவதைகள் அமைதி குலைவர். மரங்களை வீழ்த்தும் போதும், கடைக்காலிடக் குழிகள் வெட்டும்போதும் வீடு கட்டும்போதும் அவர்கள் அமைதி இழப்பர். இதனால் சினமுறும் அத் தேவதைகளை அனுமதிப்படுத்தவேண்டும். இல்லையானால் அந்த வீட்டில் வாழ்பவர்களுக்கு அத் தேவதைகள் எதிர்பாராத சாவையும் வறுமையையும் நோயினையும் தருவர். இச் சடங்கு பின்வருமாறு நிகழ்த்தப்படும். குடிபுக உள்ள வீட்டின் நடுக் கூடத்தில் ஐம்பத்தி மூன்று தூண் அமைப்பினையுடைய சதுரம் ஒன்றினை அரிசிமாவால் இடுவர். ஒவ்வொரு தூண் அமைப்புடைய கட்டத்தையும் மஞ்சள், சிவப்பு, கறுப்பு வண்ணப் பொடிகளால் நிரப்புவர். அதன்மீது ஒரு வாழையிலையினை இடுவர். அந்த இலைமீது சில படிகள் நெல்லினை இடுவர். அந்த நெல்லின் மீது மற்றும் ஒரு வாழையிலை இடப்படும். அதன்மீது பலவகைத் தானியங்கள், பழங்கள் தேங்காய், வெல்லம் ஆகியனவற்றைப் படைப்பர், வீட்டினைத் திட்டமிட்டுக் கட்டிய தச்சன் மலர்களிட்டுத் தீப தூபங்கள் காட்டிப் பூசை செய்வான். தொல்லை கொடுக்கும் குட்டிச் சாத்தானான குளிகனுக்குக் கள்ளும் சாராயமும் படைப்பதோடு ஒரு கோழியினையும் பலியிடுவர். பின் தச்சர், கொத்தர், கூலிகள் உள்ளிட்ட வீடு கட்டிய தொழிலாளிகள் அனைவரும் வீட்டுக் கதவுகள் சன்னல்களின் முன் தேங்காயினை உடைத்தவர்களாகக் கூக்குரலிட்டு அங்குத் தங்கியிருக்கக் கூடும் தீய ஆவிகளை விரட்டியபடி வீட்டினை மும்முறை வலம் வருவர். அதன்பின், “உங்களுக்கு நிறைவு

ஏற்பட்டுவிட்டது போதும்.'' என்று சொல்லும்வரை அவர்களுக்கு உணவு படைப்பர். பின் அவர்களுக்கு துணிகளும் அன்பளிப்புகளும் வழங்கப் பெறும். அதன்பின் தச்சன் முறைப்படி வீட்டை குடிபுக உள்ளவரிடம் ஒப்படைப்பான். அதனை அவன் நேரிடையாக வீட்டு உரிமையாளரிடம் தராமல் மூன்றாவது பேர்வழி ஒருத்தனிடம் அதனைத் தந்தே வீட்டுக்காரனிடம் தரும்படி செய்வான். இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மூன்றாவது பேர்வழி ஒருவனை ஏற்பாடு செய்தல் எளிதன்று. வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட குளிகன் அவனைப் பிடித்துக் கொண்டு அவன் செல்லும் இடங்களுக்கொல்லாம் வந்து தொல்லை கொடுப்பான் எனக் கருதப்படுவதே இதற்கான காரணமாகும். இத்தகைய மூன்றாவது பேர்வழி நல்ல அதிர்ஷ்டமும் போதுமென்ற மனமும் நோயற்ற திடமான உடலும் கொண்டவனாக இருக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன் கள்ளிக்கோட்டை அருகே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி எல்லோரும் விரும்பி அழைக்கின்ற ஒரு நாயர் வாழ்ந்து வந்தான். அவன் தச்சனிடமிருந்து பெற்று ஒப்படைக்கும் வீட்டில் குடிபுகுந்து வாழ்ந்தவர்கள் அனைவரின் வாழ்வும் பெருகலாயிற்று. இத்தகைய பணியை ஏற்கும் மூன்றாவது பேர்வழி வழக்கமாக வறுமையுற்றவனாக இருப்பான். வேட்டி, பணம், அரிசி ஆகியவற்றை அவனுக்குத் தந்து அவனை இப் பொறுப்பினை ஏற்குமாறு ஊக்குவிப்பர். இச் சடங்கின்போது அவன் தான் பெற்ற புதிய வேட்டிகளுள் ஒன்றினை உடுத்து வருவான். தச்சன் நடத்தும் பூசைச் சடங்குகள் முடிந்தபின் இந்த மூன்றாவது பேர்வழியினை வீட்டின் நடுக்கூடத்திற்கு அழைத்துச் சென்று வாசலைப் பார்த்தபடி இரு கால்களையும் இரண்டு வாழையிலைகள் மீது வைத்தபடி நிற்கச் செய்வர். அவன் வேட்டியின் நான்கு முனைகளிலும் கொஞ்சம் காய்ந்த புல்லினை முடிந்திருப்பர். அவன் கதவை மூடிப் பின் திறந்து மறுபடியும் மூடுவான். அப்போது தச்சன் வீட்டுக்கு வெளியே இருந்து அவனிடம் வீட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டாயிற்றா எனக் கேட்பான். அதற்கு நேரிடையாக அவன் பதிலிறுக்காது, ''தச்சர்களும் தொழிலாளர்களும் உரிய கூலியினை வாங்கியாயிற்றா? அப்படியாயின் நான் வீட்டின் பொறுப்பை ஏற்றவனாவேன்'' எனக் கூறுவான். இந்தக் கேள்விக்குத் தச்சன் பதில் ஏதும் கூற மாட்டான். அவ்வாறு கூறுவானாயின் தொல்லை வீட்டு உரிமையாளன் வழியாக மீண்டும் அவனையே வந்து சேரும். எனவே அவன் மீண்டும், ''நான் உன்னிடம் என் கூலியைப் பற்றிக் கேட்கவில்லை, நீ வீட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டாயா இல்லையா எனச் சொல்?'' எனக் கேட்பான். வீட்டின் உள்ளே இருப்பவன் நான் வீட்டின் பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன் எனக் கூறிக் கதவினை திறப்பான். அவன் தான் கால்வைத்து நின்றிருந்த வாழையிலைகளைக் கையில் எடுத்துக் கொண்டு பின்னால் திரும்பிப் பார்க்காமல்

எவ்வளவு வேகமாக ஓடமுடியுமோ அவ்வளவு வேகமாக ஓடுவான். எக் காரணம் கொண்டும் அவன் பின்னால் திரும்பிப் பார்க்கக்கூடாது. அவன் ஓடும்போது மக்கள் அவன்மீது வாழைப் பழங்களை எறிவதோடு கூக்குரலிட்டுக் கேலியும் செய்வர். அவன் ஓடிய பாதையில் பசுஞ்சாண நீர்தெளிப்பர். இச் சடங்குகள் அனைத்தும் முடிந்தபின் அந்தப் புதுவீட்டில் பசும்பாலில் அரிசியினையிட்டுச் சமைப்பர். அது அனைவருக்கும் வழங்கப்படும். பின் வீட்டின் உரிமையாளர் வீட்டின் பொறுப்பினை ஏற்றுக் கொள்வார்.

பிரிட்டிசாரின் வருகைக்கு முன் வசதி படைத்த சில தீயன்கள் நடுமுற்ற அமைப்புடைய நலபுரை எனப்படும் இல்லங்களில் வசித்தனர். பெரும்பாலான தீயன்கள் - இவர்கள் நாயர்களுக்கும் நம்பூத்ரிகளுக்கும் அடிமைகளாக இருப்பவர்கள் - ஒரே அறையையுடைய கூரை வீட்டிலேயே வாழ்ந்தவர்களாக உள்ளனர். தற்சமயம் களபுரை என்னும் கிழக்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலுமாக இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகள் வழக்கில் உள்ளன.

கள் இறக்குதல், சாராயம் தயாரித்தலோடு தொடர்புடைய பணிகள், நாட்டுச் சர்க்கரை தயாரித்தல் ஆகியனவே தீயன்கள் பரம்பரையாக வழக்கமாக மேற்கொண்டிருக்கும் தொழில்கள். எனினும் இவ்வகுப்பாரைச் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பல்வேறு தொழில்களை மேற்கொண்டவர்களாக இருக்க இன்று காணலாம். வட மலபாரைச் சேர்ந்த தீயர் குடும்பம் ஒன்றுக்கு முந்தைய சாமோரின் செரயி பணிக்கர் என்ற பட்டம் கொடுத்து சிறப்பித்த காரணத்தால் அந்தக் குடும்பத்தின் தலைவன் இன்றும் செரயி பணிக்கர் என்ற பட்டப் பெயரைத் தரித்துக் கொள்கின்றான். இத்தகைய பட்டங்கள் படைக்கலப் பயிற்சியில் மேன்மையுற்றவர்களாகத் திகழ்பவர்களுக்குத் தரப்படுவதே பொதுவான வழக்கம். முன்னாளில் தீயர் சாதியினைச் சேர்ந்த மருத்துவர்கள், முறிந்த எலும்பினைக் கட்டுவோர், சோதிடர், வருவதுரைப்போர், பில்லிசூனியம் செய்வோர் ஆகியோர் இருந்துள்ளனர்.

கள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தீயனை அடையாளம் கண்டுகொள்ளுதல் எளிது. உள்ளங்கை, கை விரல்கள், முன்கைகளின் உட்புறம், புறவடி ஆகியவற்றின் தோல் காய்ப்புப் காய்த்து இருப்பதைக் கொண்டு இவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். கள் இறக்க ஒருவனுக்கு மரம் ஏறுவதில் மிகுந்த திறமை வேண்டும். இவன் தன் தொழிலுக்கு உதவக் கூடிய

பல கருவிகளை உடன்எடுத்துச் செல்வான். மரம் ஏற கால்களை இணைத்துப் பிடித்துக் கொள்ளும் மென்மையான கயிற்று வளையத்தைத் தவிர இவன் வேறொன்றையும் பயன்படுத்துவதில்லை. முன்கைகளாலும் கைகளாலும் மரத்தைத் தாவிப்பிடித்து மேலே ஏறுவான். இந்தத் தொழிலில் பெரும்பாலும் யாரும் பதினெட்டு வயதிற்கு முன் இறங்குவதில்லை. தன் பன்னிரண்டாவது வயதிலேயே மரம் ஏறத் தொடங்கியதாகக் கூறும் ஒருவனை நான் சந்தித்தேன். இது மிகக் கடினமான தொழிலே. ஒருவன் ஒரு சமயத்தில் சுமார் பதினைந்து மரங்களில் கள் இறக்கலாம். அவன் அந்த மரங்களில் நாளும் மும்முறை ஏற வேண்டியிருக்கும். சென்னை மாநிலத்தின் வட பகுதியில் தெலுங்கு பேசும் பகுதிகளில் கள் இறக்குவோர் எட்டு முதல் ஒன்பதடி உயரமுள்ள ஏணியினைப் பயன்படுத்துகின்றனர். அதனை மரத்தின் மீது சார்த்திப் படிகளில் ஏறி மரத்தின் உயரத்தில் மூன்றில் ஒரு பகுதி அல்லது நான்கில் ஒரு பகுதியினைத் தாவி ஏறும் தொல்லையிலிருந்து விடுபடுகின்றான். மரத்தில் மேலே ஏறும் போதும் இறங்கும் போதும் இவர்கள் முதுகையும் மரத்தையும் பிணைத்து ஒரு பெரிய வளையத்தால் பிணைத்துக் கொள்கின்றனர். இதனை எளிதில் பிணைத்துக் கொள்ள ஏற்ற வகையில் இதில் துரும்பு வசதியுள்ளது. மரம் ஏற மிகவும் உதவியாக இருக்கும் இது மரம் ஏறுவதை எளிதாக்குகிறது. இந்த வளையம் முதுகோடு பொருந்தும் பகுதியில் தடித்த மென்மையான தோல் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். தீபகற்பத்தின் தென் மாவட்டங்களில் சாணாரிடையேயும் தீயரிடையேயும் ஏணியும் முதுகு வளையமும் வழக்கில் இல்லை. இவர்கள் கால் வளையத்தை மட்டும் போட்டுக் கொண்டு முன்னங் கைகளையும் கால்களையும் மட்டுமே பயன்படுத்தி மரத்தில் ஏறி இறங்குகின்றனர். குறுகிய பிடியினை உடைய கைக்கோடரியே கள் இறக்கும் தீயன் பயன்படுத்தும் கருவி. சுமார் ஏழு அங்குலச் சதுர அமைப்புடைய கனமில்லாத இரும்பால் அடிக்கப்பட்டுள்ள இதனைத் தீயன் மரக்குடுவை ஒன்றினுள் போட்டு வைத்திருப்பான். அந்த குடுவையினைப் பல கயிறுகளாலான இடைக்கச்சையோடு சேர்த்துப் பிணைத்திருப்பான். அந்தக் கச்சையில் செடிகளின் இலையினைக் கசக்கிப் பிழிந்து எடுக்கப்பட்ட பசைபோன்ற பொருள் ஒன்றுள்ள சிறிய பானையினையும் அடியில் பிணைத்துக் கொண்டிருப்பான். கள்ளினைக் கீழே இறக்கி கொண்டு வருவதற்காகச் சில காலன் அளவு கொள்வதற்குரிய பாக்கு மட்டையாலான கலத்தை இவன் பயன்படுத்துகின்றான். இடுப்புக் கச்சையில் இருபுறமும் ஈயக்கட்டுப் பிடிக்கப்பட்ட ஓர் எலும்பையும் இவன் இடைக்கச்சையில் சொருகிக் கொண்டிருப்பான். ஒருவன் தன்னிடமுள்ள சாம்பார் மானின் தொடை எலும்பான இதனை எந்த விலைக்கும் தர உடன்படவில்லை. அவன் அதைக்கொண்டு தட்டினால் எந்த மரத்திலிருந்தும் கள் கிடைக்கும்

எனக் கூறினான். மரம் ஏறும்போது மரம் ஏறுபவன் தன் இடைவேட்டியின் முனைகளைத் தொடைகளுக்கிடையே விட்டுப் பின்னால் சொருகிக் கொண்டிருப்பான். (மழைக் காலத்திலும் மற்ற சமயங்களிலும் இவர்கள் இதுபோல வேட்டியினை எடுத்து இழுத்துக் கட்டிக் கொள்வர்). தென்னோலைகளால் கூர்ங் கோபுர அமைப்புடையதாகப் பின்னப்பட்டுப் பாக்கு மட்டை இணைக்கப்பட்ட தலைக் குல்லாயினையும் இவன் அணிந்திருப்பான். தென்னை மரத்தில் ஏறும் போதெல்லாம் இவன் அடிமரத்தைத் தன் வலது கையால் தொட்டு நெற்றியோடு அக் கரத்தைச் சேர்த்து அந்த மரத்திற்கு வணக்கம் செலுத்துவான்.

கள் இறக்குவதைப் பற்றி மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: பொதுவாகக் கள் இறக்குபவனும் கள்ளுக் கடை வைத்திருப்பவனும் பங்குதாரர்களாக இருப்பர். முன்னவன் கள் இறக்குவதற்கான மரங்களை வாடகை கொடுத்துப் பிடிப்பதோடு மரத்துக்கான வரிகளையும் செலுத்தி அந்த மரங்களிலிருந்து இறக்கும் கள்ளினை ஒரு குறிப்பிட்ட விலைக்குக் கள்ளுக்கடை வைத்திருப்பவனுக்குத் தருவான். சில சமயங்களில் கள்ளுக்கடைக்காரனே மரங்களுக்கான வாடகையினையும் வரியினையும் செலுத்தியவனாகக் கள் இறக்குபவனைப் தன் பணியாளனாக அமர்த்திக் கொண்டு பாட்டிலுக்கு இவ்வளவு என அவனுக்குத் தொகையினைத் தருவான். தென்னை மரங்கள் ஒரே சமயத்தில் ஆறு மாதங்களுக்குச் சேர்ந்தாற்போல வாடகைக்கு விடப்படுகின்றன. ஒரு மரத்திற்கு ரூ.*1-0-0* முதல் ரூ.*1-8-0* வரை வாடகை தரப்பட வேண்டும். அவை காய்க்கத் தொடங்கியவுடன் கள் இறக்க ஏற்றவையாக இருப்பினும் அப்போதிருந்து நான்கு ஆண்டுகள் சென்ற பிறகே மிகுந்த பயனைத் தருகின்றன. ஒரு ஆண்டில் ஆறு மாதங்களுக்கு மேல் ஒரு மரத்தில் கள் இறக்கப்படுவதில்லை. கள் இறக்குவதால் மரத்தின் வாழ்நாள் குறைந்ததாக ஆகின்றது என்பது உண்மையே. எனினும் கள் இறக்கவிடப் பட்ட மரங்கள் அடுத்த ஆறு மாதங்களில் நன்கு காய்க்கின்றன. கள் இறக்குபவனுடைய தொழிலுக்கான கருவிகள் விலை மிகுந்தனவோ பலதிறப்பட்டனவோ அல்ல. மரப்பெட்டி ஒன்றில் ஒரு கத்தியினையும் ஈயக்கட்டுப் பிடிக்கப்பட்டுள்ள ஒரு எலும்பினையும் (சாம்பார் மானின் தொடை எலும்பையே இவர்கள் மிகுதியும் பயன்படுத்துகின்றனர்) வைத்திருப்பவர். சில பானைகளும் மரம் ஏற உதவும் இரண்டு கயிற்று வளையங்களையும் இவர்கள் உடன் வைத்திருப்பர். தென்னம்பாளை அதன் புறமடலால் மூடப்பட்டிருக்கும்போதே கள் இறக்க ஆவன செய்வர். நாளும் ஒருமுறை கள் இறக்குபவன் அதனைத் தன்னிடம்

உள்ள எலும்பால் மெல்லப் புடைத்துவிடுவான். மூன்றாம் நாளும் அதனை அடுத்து வரும் நாள்களிலும் நாளும் இரண்டு முறை அதன் முனையினைச் சிறிதே சீவி விடுவான். பதினைந்தாம் நாள் தொடங்கிக் கள் வடியத் தொடங்கும். அதன்பின் புடைத்தலை நிறுத்துவர். பாளையின் புற உறையினையும் உள்ளே உள்ள பூச்சிம்புகளையும் சேர்த்துத் தென்னை நாராலோ ஓலையாலோ இறுகக் கட்டியிருப்பர். பாளையின் முனையினைத் தொடர்ந்து நாளும் இரண்டு அல்லது மூன்றுமுறை சீவி விட்டபடி இருப்பர். ஒவ்வொரு முறை சீவிய பின்னரும் பச்சிலையினை அரைத்த கலவையினையும் தண்ணீரையும் சீவிய இடத்தில் பூசுவர். சீவிய காயத்தின் வழியே சாறு வழிந்து பாளையினைப் பாழ்படுத்தி விடாமல் இருப்பதற்காகவே இக் கலவையினைப் பூசகின்றனர். ஈச்சல் அல்லது வெட்டி மரத்தின் இலைகளே இந்தக் கலவையினைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டுமே ஒரே மரத்திற்கு (*Aporesa Lind leyana*) உரிய பெயர்களே. தமிழில் இம்மரம் விட்டில் எனப்படும். பிரிட்டிசாரின் ஆட்சியுள்ள கொச்சிப் பகுதியில் இம் மரம் வளர்வதில்லை. அப்பகுதியில் இதற்குப் பதிலாக உப்பங்கழியின் சேற்று மண்ணைப் பயன்படுத்துகின்றனர். பாளையின் சீவப்பட்ட வட்டமான முனைக்கும் தடித்த ஓலைக் கட்டுகளுக்கும் ஒரு தனி ஓலையினைக் கட்டிச் சொருகி இருப்பர். இதன் வழியாகப் பதநீர் கீழே கட்டப்பட்டுள்ள பானையில் வந்துவிழும். பானையில் சேரும் பதநீர் ஒவ்வொரு நாளும் காலையில் வடிக்கப்படும். சேரும் பதநீரில் அளவு மரத்தின் வளத்திற்கும் காலநிலையில் இயல்புக்கு ஏற்ப மாறும். பருவ மழைக் காலத்திலும் அதனை அடுத்து வரும் மாதங்களிலும் மூன்று பாட்டில்கள் அளவு பதநீர் சேரும். சேட்டுவாயிக்கத் தெற்கே உப்பங்கழிகளைச் சார்ந்து அமைந்துள்ள தோப்புக்களில் உள்ள மரங்களில் நல்ல பருவ நிலை நிலவும் ஆண்டுகளில் சராசரியாக நாளொன்றுக்கு மூன்று பாட்டில்கள் அளவு (சுமார் அரை காலன்)கள் வடியும் எனப் பாரி நிறுவனத்தார் கருதுகின்றனர். ஒரு பாட்டில் கள் மூன்று அல்லது நான்கு காசுகளுக்கு விற்கப்படுகின்றது.

கயிறு திரிக்கும் தொழில் தொடர்பாக மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: "தேங்காயிலிருந்து உரிக்கப்பட்ட மட்டைகளை ஆற்றோரங்கள், உப்பங்கழிகள், கடற்கூம்புகள் ஆகியவற்றின் தண்ணீர் கசிவுக்கு உட்பட்டு ஊறும்படியான அளவு ஆழக்குழி தோண்டி ஆறு மாதங்கள் முதல் பதினெட்டு மாதங்கள்வரை புதைத்து வைப்பர். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படியான காலம் புதையுண்டுள்ளதோ

அவ்வளவுக்கு அவ்வளவு அவை நல்ல பயன்பதரும். கயிற்றின் நிறமும் தரமும் தேங்காயின் நாரினை ஊற வைக்கும் தண்ணீருக்கு ஏற்ப வேறுபடும். ஓடும் நீருக்கு அருகிலும் நல்ல தண்ணீருக்கு அருகிலும் தேங்காய் நாரினைப் புதைத்து வைக்கப்படுவது நலம் பயப்பதாகும். தண்ணீர் உப்பாக இருக்குமானால் கயிறு முதலில் கிட்டத்தட்ட வெள்ளையாக இருக்கும்., பின் மழைநாளில் அது பொலிவு இழந்து கறைகளோடு கூடியதாக ஆகிவிடும். புதைத்து வைத்த தேங்காய் நாரினைக் குழியிலிருந்து எடுத்தவுடன் தியாட்டிகளும் (தீயர் சாதிப் பெண்கள்) வேட்டுவச்சிகளும் குறுந்தடிகளால் அடிப்பர். பின் அதனைப் பன்னிரண்டு மணிநேரம் வெயிலில் உலர்த்துவர். பின் அது கள்ளிக்கோட்டையிலும் கொச்சியிலும் உள்ளூர் வணிகர்களுக்கு விற்கப்படும். பின் அவர்கள் அதனை ஐரோப்பிய நிறுவனங்களுக்கு விற்பர். இந் நார் தியாட்டிகளாலும் பிற சாதிப் பெண்களாலும் நூலாக முறுக்கப்பட்டுக் கயிறாக ஆக்கப்படுகின்றது. இவ்வாறு மலபாரில் தயாரிக்கப்படும் கயிறு கொச்சி துறைமுகம் வழியாகப் பிரிட்டிசுக் கூட்டரசு, செர்மனி உள்ளிட்ட பிற உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

"எத்தகைய இடையீடும் இன்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் குடிசை தொழிலுக்கு வட மலபாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் கயிறு தயாரித்தலைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காட்டலாம். ஆண்டு முழுவதும் ஒருவர் எங்கு போனாலும் பெண்கள் நாரினைத் தட்டிக் கொண்டிருக்கக் காணலாம். மாலையில் அவர்கள் கயிறாகத் திரித்து முடித்த நாரினைச் சாலை ஓரத்தில் உள்ள கடைக்கு எடுத்துச் சென்று கொடுத்து அதற்குப் பதிலாக உப்பு, மிளகாய், நெல், முதலியவற்றைப் பெறுவர். மாவட்டத்தின் வட கோடியில் இத்தகைய தொழில் ஏதும் நிகழ்வதில்லை. அங்கு நாரினை அடுப்பெரிக்கவே பயன்படுத்துகின்றனர்" எனச் சொல்லப்படுகின்றது.

வடமலபாரில் முகமதியர்களான மாப்பிள்ளாக்கள் உட்பட அனைவரும் மருமக்கள்தாய உடமை உரிமை முறையினையே பேணுகின்றனர் என்பது முன்பே கூறப்பட்டது. மருமக்கள் தாய உடைமை உரிமை பேணாத தீயர் வாழும் தென் மலபாரில் உடமைகள் ஆண் பிள்ளைகள் வழியாகவே சென்று சேர்கின்றன. ஆண் பிள்ளைகள் அனைவரும் உடைமைகளைத் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். பெண்கள் பங்கேதும் பெறுவதில்லை. பலரும் ஒருத்தியை மனைவியாக்கிக் கொள்ளும் மலபார் தீயரிடையே (பிற

வகுப்பாரிடையேயும்) யான வழக்கத்தால் குடும்பச் சொத்துச் சிதறிப் போகாமல் காக்கப்படுகின்றது. பெயரளவில் ஒருவனுடைய உடைமைகளைப் பிள்ளைகள் அனைவரும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்கின்றனரேயன்றி உண்மையில் தர்வாடைச் சேர்ந்த உடைமைகளின் பொறுப்பு முழுதும் குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவன் மேற்பார்வையிலேயே இருந்து வருவது வழக்கமாக உள்ளது. தர்வாடைச் சேர்ந்த வீட்டில் இருந்து வாழும்வரை மற்றவர்கள் தங்கள் வாழ்க்கை நடத்தத் தேவையானதை மட்டும் பெற்று வருவர். ஈழவரிடையேயும் இதே நடைமுறையே வழக்கில் உள்ளது.

இந்துக்கள் அனைவரையும் போலவே இவர்களும் மாட்டிறைச்சியினைத் தின்பதில்லை. அரிசிச் சோறும் மீனுமே இவர்கள் முக்கிய உணவு. கஞ்சியினையே எப்பொழுதும் ஊக்கம் தரும் பானமாகப் பருகுகின்றனர். இத்துடன் டீ, காபி, சர்பத், சோடா முதுலான சுவை நீர்களையும் குடித்து மகிழ்கின்றனர்.

ஆண்கள் முழங்காலைக் கூடத் தொடாத இடைவேட்டியினையே உடுக்கின்றனர். தோளில் மதராசுக் கைக்குட்டை ஒன்றைப் போட்டுக் கொண்டிருப்பர். பெண்கள் இரட்டை வேட்டியினை உடுக்கின்றனர். இடைக்கு மேலே ஆடை எதுவும் அணிந்து கொள்ளப் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சாவுத் தீட்டுக்கு உள்ளாகி இருக்கும் சமயத்தில் மட்டும் மார்பகங்களை மறைத்து ஆடை புனைவர். எல்லா வண்ணங்களிலும் சேலை தரிப்பரெனினும் வெள்ளையும் நீலமுமே இவர்கள் மிகவும் விரும்பி அணியும் வண்ணங்கள். மணக்காதிலை என்ற அணியினைக் காதில் அணிகின்றனர். இதில் இருபது முதல் முப்பது வரையான உட்டுளையினை உடைய பொன்னான முத்துகள் கோக்கப்பட்டிருக்கும். தொங்கும் இதன் நடுவே ஒரு பதக்கத்தையும் இணைத்திருப்பர். தங்கம் அல்லது வெள்ளியாலான வளையல்களை அணிகின்றனர். முதல் குழந்தை பிறக்கும்வரை பெண்கள் உட்துளையுடைய வெள்ளி வளையல்களை அணிவர். காலமாற்றத்தின் காரணமாக தீயர் சாதிப் பெண்கள் நாயர், பிராமணர் சாதிப் பெண்களுக்குரிய அணிகளைக் கூட இன்று அணியத் தொடங்கிவிட்டனர். தலைமுடியினைக் கொண்டையாகப் போடுவதிலும் உடை உடுப்பதிலும் இன்று இவர்கள் கிறித்தவர்களின் நாகரிக முறையினை மேற்கொண்டவர்களாக மாறி வருகின்றனர். முன்பெல்லாம் தங்கள் பண்ணையாரான நாயரிடம் தண்டான் வாயிலாக குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி அனுமதி பெற்ற நாயர் சாதிப்

பெண்களுக்குரிய அணிகளைத் தீயர் சாதிப் பெண்கள் முக்கியமான நாள்களில் அணிந்து வந்தனர்.

வடமலபாரைச் சேர்ந்தவர்கள் கோட்டியூர் கோயிலில் கோயில் கொண்டிருக்கும் தெய்வமான பெருமாள் ஈசுவரன் மீது சத்தியம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தென் மலபாரில் கொடுங்கோளூர் பகவதி மீதோ உள்ளூர்த் தெய்வமான குருவாயூரப்பன் மீதோ சத்தியம் செய்வதே பொதுவான வழக்கம்.

சாதி தொடர்பான எல்லா வழக்குகளையும் கேட்டுத் தீர்த்து வைக்கும் ஊர்த்தலைவன் தரையைச் சேர்ந்த தண்டானே ஆவான். தென் மலபாரின் சாமோரினின் மூத்த ராணியே இவ்னைப் பதவியில் அமர்த்தும் வழக்கம் இருந்து வருகிறது. தண்டான் ஒருவனைப் பதவியில் அமர்த்த அவளுக்கு *101* பணம் *(ரூ.25-4-0)* வரை கட்டணமாகச் செலுத்த வேண்டும். இவ்வாறு பதவியில் அமர்த்தப்படுவது பற்றி ஏதேனும் சிக்கல்கள் நேருமானால் அதனைத் தீர்த்து வைப்பவளும் இவளே. சாமோரின் ஆளுகைக்கு வெளியே இருக்கும் பகுதிகளில் வட்டாரத்தின் அரசனே தண்டானைப் பதவியில் அமர்த்துகிறான். சிக்கலான வழக்குகளில் இறதி முடிவு கூறுபவரும் அவரே. தீயர் எப்பொழுதும் நயர்களுக்குக் கீழே அடங்கியவர்களாக இருப்பவர்கள் என்பதனை முன்பே பார்த்தோம் என்றாலும் அவன் எந்த ஒரு நாயருக்கும் தனிப்பட்ட முறையில் அடிமைப்பட்டவனில்லை. அவன் விருப்பம்போல் எங்கு வேண்டுமானாலும் சென்று தங்கி வாழலாம். நாயர் குறிப்பிட்ட ஒரு தலைவனுக்குக் கட்டுப்பட்டவனாக இருப்பதைப் போல இவன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவன் அல்லன். ஜெனரல் இ.எப்.பர்டன் இவர்களின் முந்தைய நிலைமைபற்றி இது தொடர்பாகக் கூறியிருப்பது வருமாறு:* "நாயர் சாதியினைச் சேர்ந்தவர்கள் மிகுந்த தற்பெருமை பாராட்டியவர்களாக அடுத்துள்ள உயர்சாதியாரான இந்துக்களான தீயர் தங்களை நெருங்கி வருவார்களாயின் அதற்குத் தண்டனையாக உறையிலிருந்தும் கழிந்ததாக எப்பொழுதும் கையில் ஏந்தியிருக்கும் வாளால் அவர்களை வெட்டி வீழ்த்துவர்."

தீயர் சமயம் பற்றி முதலில் நான் ஒரு பழைய வழக்கு வரலாற்றைச் சொல்ல உள்ளேன். அது பிராமணர்களால் படைத்து வைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஒரு காலத்தில் ஏழு தேவ மகளிர் நாள்தோறும் நாட்டில் இடையே

---

* An Indian Olio

இருக்கும் ஏரியில் வந்து குளித்துச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இதனை அறிந்த சிவன் அந்த ஏரிக்கரையில் நெருப்பாக வந்து இருந்தான். அந்தப் பெண்கள் அந்த நெருப்பினைச் சார்ந்து தங்கள் குளிரைப் போக்கிக் கொண்டனர். இவ்வாறு அவர்களை மயக்கிய சிவன் அவர்கள் அனைவரையும் கருவுற்றவர்ளாக ஆக்கினான். அவர்கள் ஏழு அழகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். சிவன் அவர்களைப் பார்வதியிடம் அழைத்து வந்துவிட அவள் அவர்களைத் தன் சொந்தக் குழந்தைகளாகவே பாவித்து நடத்தி வந்தாள். அவர்களைக் கைலாயத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு மறைவாக மேற்கொள்ளப்படும் சக்தி வழிபாட்டுக்காகக் கள்ளினைத் தயாரிக்கும் பணியில் அமர்த்தப்பட்டனர். தங்கக் கலசத்தில் இடுவதற்குரிய கள்ளினை அவர்கள் நாளும் குறிப்பிட்ட நேரத்தில் கொண்டு வந்து தந்தவர்களாக இருந்தனர். ஒருமுறை பார்வதி அவர்கள் அனைவரையும் ஒன்றுசேர அணைத்துக் கொள்ள அவர்கள் இணைந்து ஓர் உருவம் பெற்றனர். இந்தச் சிறுவன் ஒருநாள் வழிபாட்டுக்கான கள்ளினை ஒரு பிராமணன் வழியாக அனுப்பி வைத்தான். எத்தகையது என உண்மையறியப்படாத அந்தக் கள் தரும் நலங்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆவல் கொண்ட அந்தப் பிராமணன் ஓர் ஆற்றங்கரையில் தங்கி அதில் சிறிது பருகிய பின் தண்ணீரைக் கொண்டு கள்ளிருக்கும் அந்தக் கலத்தை மீண்டும் நிறைத்துக் கொண்டான். இதனால் அவன் பூசை நேரந் தவறி கைலாயம் சென்று சேர வேண்டியதாயிற்று. கோபமுற்ற சிவன் சவுணிகச் (பார்வதி அவனுக்குத் தந்த பெயர்) சிறுவனைத் தன்முன் அழைத்துவரும்படி பணித்தான். இதற்கிடையே நடந்தவற்றை அறிந்து கொண்ட அந்தச் சிறுவன் நடந்த உண்மையினைத் தன்னிடம் உள்ளபடி கூறிய பிராமணன் தலையினை வெட்டினான். அச்சிறுவன் ஒரு பிராமணன் தலையினை ஏந்தியபடி வருவதைக் கண்ட சிவன் வியப்புற்றவனாக அவனைத் தன்னருகே நெருங்கி வரும்படி கூறினான். அச் சிறுவன் சக்தி வழிபாட்டிக்கு இடையூறு விளைவித்த ஒருவனுடைய தலையைக் கொய்வது கொடுமையான குற்றமாகாது எனக் கூறினான். பிராமணனைக் கொல்வது பாவங்களுள் எல்லாம் கொடியது எனக் கூறிய சிவன் அவனைச் சாதியில் தாழ்ந்தவனாகும்படி சபித்தான். சக்தி வழிபாட்டிற்கு இடையூறு விளைவித்தவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் சண்டாளரே எனக் கூறிய அச் சிறுவனின் வாதத்தைச் சிவன் ஏற்றுக் கொள்ளவில்லை. சிவனுடைய கையாலே தான் சாக விரும்புவதாக அச் சிறுவன் கூறினான். இதனால் மனம் மகிழ்ந்த சிவன் அவனை மன்னித்தான். சாதியினால் இழிந்தவனாக இருக்க வேண்டியானாலும் அவனுக்குச் சக்தி வழிபாட்டின் தத்துவங்கள் அறிவுறுத்தப்பட்டதோடு

மதுவினைப் படைத்துச் சக்தியினை வழிபடும் தனி உரிமையினையும் அவன் பெற்றான், அவன் பிராமணர்களைப் பின்பற்றியவனான அனைத்துச் சடங்குகளையும் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டான். அவர்களுக்கு உரிய மந்திரங்ளை மட்டும் அவன் கூறக்கூடாதென விதிக்கப்பட்டது. அவன் தந்திரங்களைப் (கைகளால் நிகழ்த்தும் சைகைகள்) பயன்படுத்திப் பூசை செய்து மந்திரங்களால் பெறுவதற்குரிய பயனை முழுவதுமாகப் பெற்றான். இவ்வாறு அருளப்பெற்ற அவனே தீயர் சாதியின் குல முதல்வன்.

தீயரோடு தொடர்புடைய சமயம் தொடர்பான சிந்தனைகள் அனைத்தும் இந்து சமய - வேதநெறி சார்ந்த இந்து சமயநெறி - நெறியோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த நெறியின் செல்வாக்குத் தென்னிந்தியாவில் பரந்து பட்டதாக இல்லை. மேலும் மலபாரில் பிறபகுதிகளைவிட இந்த நெறி மிகுதியும் குழப்பமான கருத்துகள் புகுத்தப்பட்டு உண்மை நெறியினின்றும் மாறியதாக இருக்கக் காண்கின்றோம். மறுபிறவி, கர்மவினை, காசிக்குப் பயணம் போன்ற கோட்பாடுகளை இவர்கள் பிராமணர்களைப் பார்த்து மேற்கொண்டவர்களாக உள்ளனர். மேலே நாம் விளக்கிய திருமணம், சாவு தொடர்பான சடங்குகளில் இந்து சமயக் கோட்பாடுகள் பல நுழைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இறந்தவர்களுக்குப் பலிப் பிண்டம் தருவதில் அத்தகைய திணிப்புப் புகுத்தப்பட்டுள்ளது எனக் கூற முடியாது. இச் சடங்கு உலகெங்கும் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகக் காணப்படும் ஒன்றாகும்.

தீயரின் சமய வழிபாட்டுமுறை சக்தி வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. சில பிராமணர்களும் இந்த வழிபாட்டினை மேற்கொண்டிருப்பினும் அவர்கள் தீயர்களைப் போலச் சாராயத்தைப் பயன்படுத்த இயலாதவர்களாக உள்ளனர். அதற்குப் பதிலாக அவர்கள் தேன் அல்லது பாலைப் பயன்படுத்துகின்றனர். சிவனும் - இவனை வேதகாலத்திற்குரிய தெய்வமாக அப்படியே கொள்ள முடியாது - பார்வதியும் இயற்கை விதிகளின் அடிப்படையில் அமைந்த தெய்வங்களாகப் பழங்காலத்திய இரண்டு தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். சக்தியே எல்லாப் பொருள்களையும் சார்ந்து இயக்கி வருபவள். இதனால் சக்தி வழிபாடு இயற்கையோடு பட்ட உயிரியக்க ஆற்றலை வழிபடுவதாக அமைகின்றது. சக்தி என்ற சொல்லுக்கான தத்துவப் பொருள் என்ன என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்கப் போவதில்லை. அல்லது மொனியர் வில்லயமும் மாக்ஸ் முல்லரும் விளக்கிக் கூறியுள்ள சிவன் பற்றிய

தத்துவத்தையும் நாம் இங்கே விளக்கப் போவதில்லை. வேத கால இந்து சமயம், மலபாரில் ஆவிகள் வழிபாட்டோடும் எல்லா விதமான ஆதி காலச் சமய நெறியோடும் கலந்து மிகக் குழம்பிய நிலையில் தனித்துப் பிரித்து அறிய முடியாததாக ஆகிவிட்டுள்ளது. எனவே தீயர் மேற்கொண்டுள்ள உண்மையான சமயநெறி எத்தகையது என்பதனைத் தனிட ்பிரித்து அறிந்து சொற்களால் விளக்குவது என்பது இயலாது. ஏழைகளும் கல்வியறிவு அற்றவர்களும் குருட்டுத்தனமாகத் தங்கள் அறிவு நிலைக்கேற்ப தங்கள் உள்ளுணர்வு உணர்த்தும் சமய நெறியினையே இந்து சமய நெறியாக மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் கடைப்பிடிக்கும் இந்து சமய வழிபாடு இந்துசமயச் சாயலைக் கொண்டதான தாழ்ந்த வழிபாட்டு நெறிமுறையாகவே உள்ளது. இது தென்னிந்தியாவில் பொதுவாகத் தாழ்ந்த சாதி மக்கள் ஆங்காங்கே மேற்கொண்டு வரும் சமயநெறியினைச் சார்ந்ததாக இடத்திற்கு இடம் சற்றே வேறுபட்டதாக உள்ளது. இத்தகைய பொதுவானதொரு சமய நெறியினை உருவாக்கியதில் தீயர்களுக்கும் பங்கு உண்டு. வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் அனைத்துமே தீய ஆவிகளின் குறும்புகளால் நிகழ்வது என இவர்கள் நம்பாவிட்டாலும் இந்தக் கோட்பாட்டினை இவர்கள் முழுதும் நம்பாமலும் இல்லை. உயர்நெறியதான இந்து சமயம், இவர்கள் தகுதிக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. எனினும் இவர்களிடையே, பெருவழக்கினதாக இல்லாத மறைவாக நிகழ்த்தப்படுகின்ற சக்தி வழிபாடும் வழக்கில் உள்ளது. இவர்கள் மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியாதபடி அதனை ரகசியமாக நடத்தி வருவதுதான் வருத்தத்திற்கு உரியது. அத்தகைய வழிபாட்டு முறையினை மேற்கொள்வதாகச் சொல்லிக் கொள்வதை இவர்களுள் யாரும் பெருமைக்குரியதாகக் கருதுவதில்லை. உண்மையில் அதைப் பற்றி வெளியே கூறிக் கொள்ள இவர்கள் வெட்கப்படுகின்றனர். இந்தச் சக்தி வழிபாட்டு முறையினை உபதேசம் பெற விரும்புபவர்கள் முதலில் தங்களைப் புனிதப்படுத்திக் கொள்ளும் சடங்கிற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். சீடனின் காதில் குருவானவர் "பிரமம் அகம், விட்டுணு அகம், பைரவன் அகம்" (நான் பிரம்மன், நானே விட்டுணு, நானே பைரவன்) என்ற மந்திரத்தை ஓதுவார். ஒவ்வொரு மனிதனும் பரம்பொருளின் ஒரு சிறு கூறு என நம்பப்படுகிறது. அவனுள் அந்தப் பரம்பொருளின் சக்தி குடிகொண்டிருப்பதால் அவன் அதனை வளர்த்துக் கொண்டவனாகத் தெய்வத் தன்மை பெறலாம். சக்தி வழிபாட்டில் சாதிப் பாகுபாடு பாராட்டப்படுவதில்லை. பக்தர் உயர்ந்த சாதியினராகவும் இருக்கலாம், தாழ்ந்த சாதியினராகவும் இருக்கலாம். நம்பூத்ரி பிராமணர்கள் இந்த வழிபாட்டில் ஈடுபடுகின்றார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. பூசையின்போது இந்த நெறியினைப்

புதிதாக மேற்கொண்ட அனைவரும் சாதிவேறுபாடு பாராட்டாமல் ஒன்றாக உண்டும் குடித்தும் வருகின்றனர். ஆண்களும் பெண்களும் கூடி ரகசியமான சடங்குகளில் ஈடுபடுகின்றனர். சக்தியினைப் பற்றிய மறைபொருளான தத்துவத்தை குருவின் அனுமதியின்றி அல்லது சாவதற்கு முன் வெளியிடுவதில்லை என இவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். ஒருவன் உயிர்விடும்போது அவன் தன் உடலில் தங்கியுள்ள சக்தி தேவியின் ஆற்றலை வெளியேற்றிவிடக் கடமைப்பட்டவன். அப்போது அவனருகே ஒரு விளக்கு எற்றி வைக்கப்படும். சில துளசி (*Ocimum sanctum*) இலைகளில் கொஞ்சம் அரிசி, எரியும் திரியொன்று ஆகியனவற்றைச் சாக உள்ளவனிடம் தருவர். இவற்றைக் கைகளில் தாங்கியபடி தன் தலை முதல் பாதம் வரை தன் கையினை இவன் கொண்டு சென்று அப்பொருள்களை அருகில் உள்ளவனிடம் தருவான். இது அவனிடம் குடிகொண்டிருந்த சக்தியை வேறொருவனுக்கு மாற்றியதாக ஆகும். அதனைப் பெற்றுக்கொண்டவன் தொடர்ந்து வாழ்நாள் முழுதும் அதனை வழிபட்டு வரவேண்டும். இவ்வாறு இது பல தலைமுறைகளுக்கு மாறிச் செல்லும் சக்தியாக உள்ளது. ஒருவன் தன்னிடமுள்ள சக்தி தேவதையினை மேற்கூறியபடி வேறொருவனிடம் மாற்றித்தராமல் இறக்க நேரிட்டால் ஒரு பிராமணனை அழைப்பர். இறந்தவனைக் குறிக்கும்படியாகச் செய்யப்பட்ட வெள்ளியாலான ஓர் உருவகத்தில் அவன் இறந்தவனிடம் உள்ள சக்தி தேவதையினை மாற்றுவான். இவ்வாறு அது மாற்றப்படவில்லையாயின் இறந்தவனுடைய ஆன்மா முக்தி பெறாது. நாட்டில் பலகோட்பாடுகளும் சீர்குலைந்து இழிநிலையினை அடைந்துள்ளதைப் போலவே சக்தி வழிபாடும் சீர்குலைந்துள்ளது. இந்த வழிபாடு தொடர்பான முன்பு சிறப்புற்றிருந்ததான உயர்ந்த குறிக்கோள்களும் புனிதமான உணர்வுகளும்கிட்டத்தட்ட மறைந்துவிட்டன என்றே கூறலாம். எஞ்சியிருக்கும் இழிவழக்குகள் இந்த வழிபாட்டு நெறிக்குப் பெருமை சேர்ப்பனவாக இல்லை. இது எப்படியாயினும் ஒவ்வொரு தரையிலும் தீயருக்குரிய ஒரு பகவதி கோயில் இருக்கக் காண்கிறோம். இக் கோயில்களில் தீயரே பூசாரிகளாகப் பணியாற்றுகின்றனர். பகவதி கோயில்களில் நல்வாக்குச் சொல்பவன் சிவப்பு ஆடை புனைந்து மஞ்சள் கலந்த செஞ்சந்தனத்தை மேலே அப்பிக் கொண்டிருப்பான். பகவதி காடுகளில் திரியும் ஆவிகளுடனும் தேவதைகளுடனும் தொடர்புடையவளாகக் கருதப்படுகிறாள். கொமரம்கள் எப்பொழுதும் கறப்பு ஆடையே புனைவர். தீயர் கோயில்களில் நாள் வழிபாடு நடத்தப்படுவதில்லை. கண்ணனூர் வட்டாரத்தில் உள்ள சில கோயில்களில் மட்டும் நாள்தோறும் வழிபாடு நடத்தப்படுகிறது. மண்டலம் நாள்கள் எனப்படும் ஆண்டுத் திருவிழா கார்த்திகை மாதத்தின் முதல்நாள் தொடங்கப்பட்டு நடைபெறும். இந்த நாளன்று

விளக்குகள் ஏற்றி வைத்துத் தொடங்கப்படும் திருவிழா நாற்பது நாள்கள் வரை நீடிக்கும். இந்தத் திருவிழாவின் முடிவில் காடுறை தெய்வங்கள் மீண்டும் காடுகளில் சென்று சேரும். மீண்டும் அவை அடுத்த திருவிழாவின்போது திரும்ப வரும். கொமரமாக நல்வாக்குச் சொல்பவன் வீட்டில் சாவு நிகழுமேல் திருவிழாச் சடங்குகளைச் சில நாள்களுக்குத் தள்ளி வைப்பர். இந்தத் திருவிழாக் காலம் ஆண்டிற்குரிய உலகின் எல்லாச் செயல்பாடுகளும் தொடங்கி நடக்கின்ற பருவமாகக் கருதப்படுகின்றது. இந்த நிகழ்ச்சிகள் ஜீன் *21*ஆம் தேதியோடு முடிவுறும். இந்தப் பருவத்திலேயே இவர்களால் சக்தி வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பழநியில் உள்ள சுப்ரமணியர் கோயிலுக்குத் தீயர் பெருமளவில் புனிதப் பயணம் மேற்கொண்டு சென்று வருகின்றனர். இந்த கோயிலுக்கு மேற்கொள்ளப் படும் புனிதப் பயணம் தொடர்பான விவரங்கள் நாயர்கள் என்ற தலைப்பிலான எனது குறிப்பில் கூறப்பட்டுள்ளது. *(பார்க்க: நாயர்கள்)*. கொச்சி மாநிலத்தில் கடற்கரையில் அமைந்துள்ள கொடுங்கோளூர் பகவதி கோயில் தீயர் புனிதப் பயணம் மேற்கொள்ளும் மற்றொரு கோயிலாகும். பிராமணர்களைத் தவிர எஞ்சிய அனைத்துப் பிரிவினரும் இந்தக் கோயிலுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். அந்தக் கோயிலுக்குப் பயணம் மேற்கொள்வதாக நேர்ந்து கொண்டுள்ள அனைவரும் கோயிலில் மாசி மாதத்தில் நிகழும் திருவிழா தொடங்கு முன் ஒரு சேவலைத் தங்களோடு எடுத்துச் சென்று கோயிலில் பலியாகத் தருகின்றனர். பெருமாள்களின் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொருவரும் கொடுங்கோளூருக்குப் பயணம் மேற்கொள்வதைக் கண்டிப்பான நடைமுறையாக மேற்கொண்டிருந்தனர். இந்தக் கோயிலால் அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கின்றது. ஒவ்வொரு தரையிலும் தீயர்களுக்கு மட்டுமன்றி மீனவர், கைவினைஞர் ஆகிய அனைத்துச் சாதியினருக்கும் தனித்தனியே கோயில்தள் உள்ளன. இந்தக் கோயில்களைச் சேர்ந்த மூப்பன்- கொமரம்கள்- ஆண்டுதோறும் கொடுங்கேளூரில் உள்ள கோயிலுக்கு அன்பளிப்புச் செலுத்தி வரவேண்டும் என்ற விதியும் உள்ளது. கோயிலுக்கு உரிய நிலங்களில் பயிரிடுபவர்கள் கோயிலின் உரிமையின் ஒப்புக் கொள்வதன் அடையாளமாக பெயரளவில் கொஞ்சம் மிளகினைக் கோயிலுக்கக் குத்தகையாகச் செலுத்தி வருவர். பருவமழை தவறும் ஆண்டுகளில் குத்தகை செலுத்தத் தவறலாம். எனினும் வேண்டுதல் செய்து நேர்ந்து கொண்ட அன்பளிப்புக்களை எப்படியும் செலுத்தியே ஆக வேண்டும். இதன் காரணமாக

ஆட்சியில் உள்ளவர் தாழ்ந்த சாதியினர் கல்வி கற்பதனையும் முன்னேற்றம் காண்பதனையும் விரும்பவில்லை. தாழ்ந்த சாதியியரிடையே கல்வியறிவு பரவுவதையும் அறிவில் முன்னேற்றம் ஏற்படுவதையும் அன்று ஆட்சியில் உள்ளவர்கள் ஆதரிக்கவில்லை. அத்தகைய மாற்றம் நிகழின் இத்தகைய மூடநம்பிக்கைகளின் அடிப்படையிலான வருமானம் தங்களுக்குக் குறையும் என்று அவர்கள் கருதியதில் வியப்பேதுமில்லை.

வடமலபாரில் உள்ள கோட்டியூர் கோயிலுக்கும் தீயர் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். இவர்கள் இந்து சமயத்தின் தாழ்ந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்தாலும் இவர்களுடைய சக்தி வழிபாடு இவர்களுக்கே உரியது என்பதில் ஐயமேதுமில்லை. இதில் இவர்கள் தயாரிக்கும் சாராயத்தைப் பயன்படுத்துவதே இது இவர்களுக்கென அமைந்த வழிபாட்டு நெறி என்பதனைத் தெளிவு படுத்துகின்றது. சாராயத்தைப் படைப்பதன் மூலமே சக்தியினுடைய முழு அருளையும் பெற முடியும் என இவர்கள் நம்புகின்றனர். சக்தி தெய்வமான பகவதியினைத் தீயர் தங்கள் குல தெய்வமாகக் கருதுகின்றனர்.

மலபாரில் சமயக் கோட்பாடுகள் ஒன்றோடு ஒன்று கலந்து குழம்பி உள்ளன என்பதற்கு மாப்பிள்ளாக்கள் சக்தி வழிபாட்டில் ஈடுபடுவதையும், தீயர் நேர்ந்து கொண்டு காணிக்கைகளை மாப்பிள்ளாக்களின் மசூதிகளிலும் கிறித்தவர்களில் தேவாலயங்களிலும் செலுத்துவதையும் கூறலாம். மம்பரத்தில் இருக்கும் புகழ்பெற்ற சமாதிக்கு எல்லாச் சாதியினரும் நேர்ந்த கொண்டு காணிக்கை நெலுத்துகின்றனர். ஒரு பலா மரத்தின் முதல் பழத்தையும் முதன்முதல் கன்றுபோடும் பசுவின் பாலையும் உள்ளூரைச் சேர்ந்த தங்கள் எனப்படும் மாப்பிள்ளாவிற்குக் காணிக்கையாகச் செலுத்துவதைப் பொதுவாக எங்கும் காணலாம்.

தீயர் குடும்பங்கள் பலவும், ஆண்டுதோறும், முன்னாளில் பெரு வீரனாகத் திகழ்ந்த குன்னத் நாயர் என்பவனுக்கும் அவனுடைய நண்பனும் சீடனுமான குன்சி ராயன் என்ற மாப்பிள்ளாவிற்கும் படையலிடுகின்றன. இவர்கள் பில்லிசூனியம், மாயமந்திரம் செய்தல் ஆகியவற்றில் கைதேர்ந்தவர்களாதல் கூடும். வழக்கு வரலாறு நாட்டிலுள்ள எல்லாப் பாம்புகளின் மீதான கட்டுப்பாடும் தனக்குக் கைவரும்வரை இந்த நாயர் கருடனை வழிபட்டவனாக இருந்தான் எனக் கூறுகின்றது. பாம்புக் கடியினால்

ஏற்படும் விபத்துக்களிலிருந்து தப்பவே இவர்களுக்குப் படையலிடப்படுவதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு படையலிடும் குடும்பத்தவர்கள் இல்லங்களில் மகப்பேறு வாய்க்கவும் வளம் பெருகவும் பாம்புத் தெய்வம் அருள்செய்யும் என நம்புகின்றனர். பிள்ளையில்லாதவர்கள் குன்னத் நாயரை வழிபடுகின்றனர். தொழுநோயும் குழந்தைகளின் சாவும் பாம்புகளைக் கொன்ற பாவத்தால் நிகழ்கின்றன என நம்புகின்றனர். குன்ன நாயரையும் குன்கி நாயரையும் வழிபடும் பக்தர்களாகப் பெட்டியில் உள்ள பாம்புகளைக் காட்டி இரத்தலில் ஈடுபடும் மாப்பிள்ளாக்கள் உள்ளனர். நீலகிரி மலையடிவாரத்தில் உள்ள மன்னார் காட்டருகே பாம்புகள் உறையும் ஒரு மசூதி உள்ளது. அங்கு ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுகிறது. இந்த மசூதியின் பெயரால் சிலர் போலியாக இரத்தலை மேற்கொள்கின்றனர்.

மலபாரைச் சேர்ந்த கைவினைஞர்கள் அனைவரும் மலபாரைவிட்டு வெளியேறியதையும் பின்னர் அவர்கள் தீயர்களோடு திரும்ப வந்து சேர்ந்ததனையும் பாணன்கள் சுவையான கதைப்பாட்டாகப் பாடுகின்றனர். ஆசாரி (மரவேலை செய்வோர்) மூசாரி (வெண்கலத்தில் தொழில் செய்வோர்), தட்டான் (பொன் வேலை செய்வோர்), பெரின் கொல்லன் (இரும்படிக்கும் கொல்லர்) உள்ளிட்ட ஐந்து பிரிவினரான கைவினைஞர்கள் முன்னாளில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நால்வரோடு ஐந்தாவது பிரிவினராக இருந்தவர்கள் யாரென்பது இன்று புலனாகவில்லை. கைவினைஞர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் இறப்பானாயின் தரையைச் சேர்ந்த பாணன் சாவுக்கான மொய்யினை அவன் இல்லத்துக் கொண்டு செல்ல வேண்டும். இது பலா, தேங்காய், வாழைக்காய் முதலியன அடங்கியதாக இருக்கும். இந்தப் பொருள்களை வீட்டுவாசலில் கொண்டு வந்து வைக்கும் பாணான் தான் மனப்பாடம் செய்துள்ள நீண்ட சூத்திரம் போன்ற வசனத்தைக் கூறுவான். அவன் சொல்வதன் பொருள் என்னவென்று அவனுக்குத் தெரியாதென்றே கொள்ளலாம். அவன் அதனை ஒரே மூச்சில் ஒப்பித்து முடித்தவுடன் அவன் கொண்டு வந்து பொருள்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதே சூத்திரப் பாட்டைத் தச்சர், பொற்கொல்லர், கொல்லர் ஆகியோருடைய திருமணங்களின் போதும் தாலிகட்டுச் சடங்கின்போதும் இவன் ஒப்பிக்கின்றான். கைவினைஞர் எவ்வாறு சேரமான் பெருமாள் நாட்டைத் துறந்து ஈழுவர் நாடான ஈழத்து அரசனிடம் சென்று தஞ்சம் புகுந்தார்கள் என்பதனையும் பெருமாள் பாணன்களை அனுப்பி எவ்வாறு அவர்களைத் திரும்ப அழைத்து வந்தார் என்பதனையும் கூறும் பாட்டு இது. இந்தப் பழங்கதையினை அனைவரும்

அறிந்திருப்பதோடு உறுதியாக நம்பவும் செய்கின்றனர். இதனை மனப்பாடமாகச் செய்து வைத்திருக்கும் பாணான் ஒரு கைவருன் இறந்தவுடன் இதனை ஒரே மூச்சில் கூறி முடிக்கின்றான். இந்தக் கதையில் பொதிந்துள்ள பொருள் வருமாறு. கிரேத, திரேத, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் இந்த உலகத்தைப் பல மன்னர்கள் ஆண்டனர். பரசுராமன் இருபத்தொரு தலைமுறையினைச் சேர்ந்த சத்திரிய அரசர்களைக் கொன்றழித்தான். இந்த பாவத்தைப் போக்க அவன் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. கடலரசனான வருணனை அவன் வழிபட்டுக் கடலிலிருந்து நூற்றுஅறுபது காத தூரமுள்ள நிலத்தை மீட்டான். கோலநாடு (?) வேணாடு (திருவாங்கூர், கன்னியாகுமரி, சேரநாடு, ஆனைமலைக்கு அப்பால் உள்ள சங்கல வழி வரையான மலையாளம் ஆகிய பகுதிகளே இவன் கடலிலிருந்து மீட்ட பகுதிகளாகும். இந்தப் பகுதிகளைச் சேரமான் பெருமாள் ஆண்டு வந்தான். இதில் நால்வகைச் சாதியாரும் இருந்தனர். திருவஞ்சைக்களம் அவன் தலைநகராயிருந்தது. ஒருநாள் வெளுத்தேடன்* சிரமான் ஒரு குளத்தில் பெருமாளின் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தான். துறையில் தட்டையாகக் கிடந்த கல்லில் அவன் துணிகளை அடித்துத் துவைத்தான். தன் கையில் துணியின் ஒரு தலைப்பை மட்டுமே பிடித்துக் வைத்துக் கொண்டிருந்தான். அய்யேஸ்வரி என்ற பெருடைய தச்சர் சாதிப் பெண் அப்பொழுது மாத விலக்கானவளாக இருந்தபின் குளிப்பதற்காக அந்த வழியே சென்று கொண்டிருந்தாள். அவள் அந்த வண்ணானைப் பார்த்து, "ஓ! கம்மாள** துணியை இப்படித் துவைக்கக் கூடாது, நீ துவைக்கும் கல்லின் ஒரு பக்கத்தின் அடியில் மற்றொரு சிறு கல்லை அது சாய்வாக இருக்கும் படியாக வைத்துக்கொள். பின் துணியில் இரண்டு தலைப்புக்களையும் சேர்த்துக் கையில் பிடித்து கொண்டு துணியின் நடுப்பகுதியினைக் கல்லில் அடி" எனக் கூறினாள். அவள் அறிவுரையைப் பின்பற்றியதால் வெளுத்தேடன் துணிகள் நன்கு வெளுக்கப்பட்டு வெள்ளையாவதைக் கண்டான். பெருமாள் அவனைப் பார்த்து "நீ தானே இதுவரை துணியினை வெளுத்து வந்தவன். இன்று துணியினைத் துவைத்தது யார்?" எனக் கேட்டார். அதற்கு வெளுத்தேடன், "ஓ! தம்புரானே, ஒரு தச்சன் சாதிப் பெண் உங்கள் அடிமைக்குத் துணியினை எப்படி நல்ல முறையில் துவைப்பது எனச் சொல்லித் தந்தது. பெருமாள் அந்த பெண்ணை இந்த அடிமைக்கு மனைவியாக்கி வைக்க வேண்டும்" எனக்

---

* நம்பூத்ரி, நாயர் ஆகியோருக்கான வண்ணார் வெளுத்தேடன் எனப்படுவர்.

** தீயரும் கைவினைஞரும் நாயர்களைக் கம்மாள் என்றே அழைப்பர்.

கூறினான். இதனைக் கேட்ட பெருமாள், “அவள் எந்தச் சாதியினைச் சேர்ந்தவளாயினும் நீ அவளை வலுவில் உன் மனைவியாக்கிக் கொள்ளலாம். அதனால் நீ சாதியில் இழிந்தவனாகிவிடமாட்டாய்” எனக் கூறினார். அரசருடைய அனுமதியினைப் பெற்ற வெளுத்தேடனான சிரமான் அந்தத் தச்சன் வீட்டு வாசலில் ஒளிந்திருந்தவனாக அதிகாலையில் அவள் வாசல் பெருக்க வீட்டுக் கதவைத் திறந்தபோது அவளைத் தன்னுடைய வீட்டுக்குத் தூக்கிச் சென்று விட்டான். திருவஞ்சைக்களத்தச் சேர்ந்த தச்சனான சங்கரன் பெருமாளிடம் சென்று வெளுத்தேடன் கம்மாள் தன் மகளைத் தூக்கிச் சென்று தன்னை இழிவுக்கு உள்ளாக்கிவிட்டான் என முறையிட்டுக் கொண்டான். அவளை மீட்டு வரப் பெருமாள் தன்னோடு ஒரு படைவீரனை அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். “நான் எந்தக் கட்சிக்கும் படைவீரர்களைத் தந்து உதவ மாட்டேன். இதனை நீங்களே உங்களுக்குள் பலப் பரிட்சையின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்” என அவர் இதற்குப் பதிலிறுத்துவிட்டார். பின் ஐந்தொழில் செய்யும் கம்மாளரும் ஒன்று கூடிப் பேசி அனைவருமாக இணைந்து இதற்காகப் பொதுவில் போராடுவது என முடிவு செய்தனர். பாணன்கள், பெரிய மலையான்கள், செங்குறவன் ஆகியோர் கைவினைஞர்கள் கட்சியில் சேர்ந்தனர். வெண் தச்சன்கள், வேலன்கள், பரவன்கள், வேட்டுவன்கள், கணிசன், பணிக்கர், வேளாள நாட்டைச் சேர்ந்த பண்டிப் புள்ளுவன்கள் ஆகியோர் எதிரணியில் சேர்ந்தனர். பன்னிரண்டு ஆண்டுகள் இவர்களிடையே போர் நடந்தது. இறுதியில் கைவினைஞர்கள் தோல்விற்றனர். “நமது சாதிப் பெண்ணைத் தூக்கிச் சென்ற பதினாலாம் நாதியான வெளத்தேடன் நாயரால் நாம் தோற்கடிக்கப்பட்டோம். நாம் இந்த நாட்டை விட்டு வெளியேறி விடலாம்” எனத் தங்களுக்குள் பேசி முடிவு செய்து கொண்டனர். இதன்படி *7764* குடும்பத்தவர்களும் பெண்களும் குழந்தைகளும் உட்படத் தங்கள் பாய்படுக்கையைச் சுருட்டிக் கட்டி எடுத்தவர்களாகப் பெருமாளின் நாட்டைவிட்டு அதற்கு அப்பால் உள்ள ஈழுவர் நாட்டிற்குச் சென்று சேர்ந்தனர். அவர்கள் ஈழுவர் நாட்டு அரசன் முன் சென்று தங்கள் கதையைக் கூறினர். சேரமான் பெருமாள் பதினைந்து நாள்களுக்கு ஒரு முறை முகம் மழித்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தவர். அவர் அம்பட்டனான வெளக்கத்தலவனுக்குச் சொல்லியனுப்பினார். அவன் கையில் கத்தி இல்லாதவனாக வந்து சேர்ந்தான். அவனுடைய மனைவி அவன் கத்தியினைப் புதைத்து வைத்துவிட்டதே அவன் கத்தியின்றி வரக் காரணமாயிற்று. “ஓ! தம்புரானே, உன் அடிமை மீது கருணை காட்டுங்கள். உங்கள் அடிமை கத்தியினைப் பழுதுபார்க்கக் கொல்லனிடம் கொடுத்தான். அவன் அதனைத் தன்னோடு எடுத்துக் கொண்டு சென்று விட்டான். அவன் போகும் போது இந்த

இரும்புத் துண்டை என்னிடம் தந்து, "நீ பயன்படுத்தக் கூடிய நிலையில் உன் கத்தியைத் திரும்பப் பெறவேண்டுமானால் நீ ஈழுவர் நாட்டுக்கு வரவேண்டும். நாங்கள் திரும்ப வந்து அதனைச் செப்பம் செய்து தருவோம் எனக் கூறினான்" என தான் கத்தியின்றி வந்ததற்கான காரணத்தை அவன் பெருமாளிடம் கூறினான். இதனால் பெருமாளின் முகத்தில் தாடி வளர அவர் ஒரு முனிவரைப் போலக் காட்சி தந்தார். உழவுக் கருவிகளைச் செய்யத் தச்சரும் கொல்லரும் இல்லாத காரணத்தால் உழுவோர் கை முடங்கினர். தாலி செய்யப் பொற்கொலர் இல்லாத காரணத்தால் கன்னியரின் கழுத்து வெறுங்கழுத்தாகவே இருக்க வேண்டியதாயிற்று. கழுத்துச் சங்கலிகள் இல்லாத காரணத்தால் பிண்டம் தரும் சடங்குகளும் நடைபெறவில்லை. இதனால் பெருமாள் அமைச்சர்களோடு கூடி ஆலோசித்துப் பதினான்காம் சாதியினுள் ஒன்றாக உள்ள தீயரின் வண்ணான்களான மண்ணான்களையும் பதினொன்றாம் சாதியரான பாணன்களையும் கைவினைஞரை அழைத்து வர அனுப்பி வைப்பது என முடிவு செய்தார். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரம் பணத்தைக் கொடுத்து ஈழுவ நாட்டுக்குச் சென்று கம்மாளர்களைத் திரும்ப அழைத்து வரும்படி கூறினார். வீடுகள் உள்ள இடத்திலெல்லாம் நின்று தேடியவர்களாக அவர்கள் பல நாடுகளிலும் சுற்றி அலைந்தனர். அவ்விருவர்களுள்ளும் புத்திசாலியான பாணான் தன் வாயால் வயிற்றை வளர்த்தவனாகத் தன்னிடமிருந்த தொகையினைச் செலவளிக்காமல் அப்படியே வைத்திருந்தான். அவர்கள் இராமபுரியினைக் கடந்து திரிசிவம்புரியினை அடைந்தனர். அப்பொழுது மண்ணான் பாணனிடம் கடன்கேட்க பாணன் தர மறுத்துவிட்டான். ஒரு வெள்ளிக்கிழமை நடுப்பகல் நேரத்தில், "பாணன் மண்ணானுக்குத் தக்க சமமான துணைவனல்ல" எனக் கூறிப் பாணனைவிட்டுப் பிரிந்துவிட்டான். பெருமாளிடம் திரும்பி வந்த அவன் தான் தன் முயற்சியில் தோல்வி உற்றதையும் பாணன் தனக்குக் கடன் கொடுக்க மறுத்துவிட்டதையும் கூறினான். பாணான் ஆறு, கால்வாய்களைப் பரிசல்களில் ஏறிக் கடந்து இறுதியாக ஈழவர்களின் அரசன் ஆளும் நாட்டிற்கு வந்து சேர்ந்தான். அவன் அரசவையின் வரவேற்புக் கூடத்தை அடைந்தபோது அங்கே மன்னனுக்காக ஒரு பொன்முடியினை அப்பொழுதுதான் செய்து முடித்த பொற்கொல்லன் அது சரியாகப் பொருந்துகின்றதா என்று பார்க்க அதனை அவன் தன் தலையில் வைத்துக் கொள்வதைக் கண்டான். அவனையே அரசன் எனத் தவறாகக் கருதிய பாணன் அவனுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்தான். அந்தக் கம்மாளன் அவனை யாரென அடையாளம் கண்டுகொண்டான். அந்தப் பொற்கொல்லனைத் தம்புரான் என மரியாதையாக அழைத்துவிட்ட பிறகே பாணனுக்குத் தான் செய்துவிட்ட தவறு புரிந்தது. இதனால் இன்றுவரை

பாணன்கள் பொற்கொல்லரைத் தம்புரான்கள் என்றே அழைத்து வருகின்றனர். பாணன் கம்மாளனிடம் தன் வருகையின் காரணத்தைத் தெரிவித்தான். கம்மாளர் தச்சன் பெண்ணைக் கடத்திச் சென்றமைக்கான குற்றத்துக்கு இழப்பீடு செய்வதோடு அவர்களக்குச் சமூகத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் நீக்க மன்னர் உடன்பட்டால்தான் தாங்கள் திரும்ப வரமுடியும் எனக் கூறினர். 7764 குடும்பத்தினரும் இதுபற்றி ஈழவ அரசனுடைய கருத்தைக் கேட்டனர். அவன் அவர்கள் திரும்பப் போகக்கூடாது எனக் கூறினான். எனவே கம்மாளர் தாங்கள் மிக நல்ல வசதியோடு இருப்பதைப் பெருமாளுக்குத் தெரிவிக்கும் வகையில் பாணனுக்குப் பின்வரும் பொருள்களை அன்பளிப்பாகத் தந்து அவனைத் திரும்ப அனுப்பி வைத்தனர்.

1. பொன்னாலான வலம்புரி
   (வலது தோளில் அணிவதற்குரிய பொன்னாலான சங்கலி)
2. வெள்ளி இடம்புரி
   (அதே போன்று இடது தோளில் அணிவதற்குரியது)
3. பொன்னாலான நெற்றிப்பட்டம்
4. பொன் வளையல்
5. பொன் தலையணி

கடத்திச் செல்லப்பட்ட பெண்ணுக்குப் பதிலாக வேறொரு பெண்ணைத் தங்களுக்குத் தருவதோடு தங்கள் சமூகத்திற்கு இழைக்கப்பட்டுவரும் சில அநீதிகளைக் களைந்தாலன்றி தாங்கள் திரும்பி வர இயலாது எனக் கம்மாளர் பாணன் வாயிலாகப் பெருமாளக்குத் தகவல் அனுப்பினர். அதே சமயம் பாணன் தங்களுக்கு இந்த உரிமைகளைப் பெற்றுத் தந்தால் தாங்கள் அதனை அவனோடு பங்கிட்டுக் கொள்ள உடன்படுவதாகவும் சொல்லி அனுப்பினர். எனவே பாணன் பெருமாளிடம் திரும்பி வந்து சேர்ந்ததும் சேரப்பெருமாள் கம்மாளர் எங்கே எனக் கேட்டார். பாணன் தன் தங்கக் குல்லாயைக் கழற்றி கக்கத்தில் வைத்தவனாக அவர்கள் வசதியாக வாழ்வதாகவும் திரும்ப விரும்பவில்லை எனவும் கூறினான். இவ்வாறு கூறிய பாணன் தன்னிடமிருந்த கம்மாளர் தந்த அன்பளிப்புக்களைப் பெருமாள் முன் வைத்து அவர்கள் வளமோடு வாழ்வதாகவும் ஒரு சிறுமியினை அவர்களுக்குத் தந்து அவர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதியினைக் களைந்தாலன்றி அவர்கள்

திரும்ப மாட்டார்கள் எனவும் கூறினான். பெருமாள் பாணனைத் திரும்பச் சென்று அவர்கள் கூறும் விதிகளுக்குக் கட்டுப்படுவதாகக் கூறி அவர்களை அழைத்து வரும்படி ஏவினான். பெருமாள் பாணனிடம் கம்மாளர் தன் அரண்மனைக்கு வரும் வழியில் முதலில் அவர்களுக்கு கண்ணில்படும் சிறுமியினைப் பிடித்துக் கொள்ளலாம் எனவும் அவர்கள் வேண்டுகோள்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டனவெனவும் கூறி அனுப்பினான். பாணன் மீண்டும் ஈழவர் நாட்டை அடைந்து பெருமாள் கூறியனவற்றைக் கம்மாளரிடம் தெரிவித்தான். அவர்கள் ஈழவர் அரசனிடம் சென்று தாங்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்ப விரும்புவதாகத் தெரிவித்தனர். பின்னர்அவர்கள் ஒரு ஈழவன் சாதிச் சிறுவனைப் பிடித்துத் தங்களிடையே சிறைப்படுத்தினர். ஈழவ அரசன் அதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டான். அவர்கள் பன்னிரண்டு* ஆண்டுகள் தாங்கள் அவனுடைய ஆட்சியின் கீழ் வாழ்ந்து விட்டதாகவும் இனி வேறொரு அரசனைத் தங்கள் அரசனாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் எனவே ஈழவ அரசனின் முகவராக அந்தச் சிறுவனைத் தங்களுடன் அனுப்ப வேண்டும் எனவும் வேண்டினர். ஈழவ மன்னரும் அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான். அவர்கள் புறப்படும்போது அந்தச் சிறுவன் அழத் தொடங்கினான். தொம்ம (தாமஸ்) என்ற பெயருடைய நசராணி**யை அந்தச் சிறுவனைக் காப்பதற்காக அவர்கள் உடன் அழைத்துச் சென்றனர். கம்மாளர் தங்கள் நாட்டுக்கு வந்து சேர்ந்து சேரமான் பெருமாள் முன் வந்து சேர்ந்தனர். வரும் வழியில் அவர்கள் வாரியர் சாதியினைச் சேர்ந்த ஒரு சிறுமி பூப்பறித்துக் கொண்டிருக்கக் கண்டு அவளைக் கையால் பிடித்துக் கொண்டு தங்களுடையவளாக்கினர். கம்மாளரின் ஐந்து பிரிவினரும் அவள் மீது உரிமை கொண்டாடினர். இறுதியில் அவர்கள் அரசனின் முகவராகவும் தங்கள் தண்டானாகவும் தங்களோடு வந்துள்ள ஈழவச் சிறுவனக்கு அவளை மணம் முடித்து வைப்பதென்றும் அவளைத் தங்கள் உடன்பிறந்தவளாகக் கருதுவதெனவும் முடிவு செய்தனர். சேரமான் பெருமாள் தான் வாக்களித்தபடி பின்வரும் உரிமைகளைக் கம்மாளருக்குத் தந்தான்:

1. வீடுகளை மேலே ஒட்டுப்போட்டுக் கட்டிக் கொள்ளலாம்.
2. மேன்மாடிகள் கட்டிக் குடியிருக்கலாம்.

---

* பன்னிரண்டு மலபார் மக்கள் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க எண்

** மேற்குக் கடற்கரைப் பகுதியில் கிறித்தவர்களை நசராணி என்ற பெயரால் வழங்குவர்.

3. ஒரு கம்பம் நட்டு அதில் மாறி மாறி அமையும்படியாக முளையடித்து மாடிப்படிகள் அமைத்துக் கொள்ளலாம்.
4. வாசலில் காவல் வீடு அமைத்துக் கொள்ளலாம்
5. நான்கு கம்பங்கள் நட்டு இடப்பட்ட பந்தலின் கீழ் சிறுமியரின் தாலி கட்டுச் சடங்கினை நடத்தலாம். அந்தப் பந்தலில் ஒரு குறு நாற்காலியினையிட்டுக் கைப்பிடியோடு கூடிய முகம் பார்க்கும் கண்ணாடி, இராமாயணம் ஆகியவற்றை அதன்மீது வைத்துக் கொள்ளலாம். சிறுமியின் தலையில் ஒரு பட்டுத் துணியினை இட்டுக் கொள்ளலாம்.
6. தாலிகட்டுச் சடங்கின் இறுதியில் அறுப்பு எனக் கூவலாம் (சிறுவர்கள் அச்சடங்கின் இறுதியில் வேல்! அறுப்பு! எனக் கூக்குரலிடுவர்)
7. திருமணம் முதலான சடங்குகளின்போது செப்புப் பாத்திரத்தில் சோறு சமைக்கலாம். விருந்தில் சர்க்கரையும் பப்படமும் படைக்கலாம்.
8. ஊர்லவலத்தின் முன் குடையும் தழையும் (ஒரு கைக்குடை) எடுத்துச் செல்லலாம்.
9. கைகொட்டலாம், நடனம் ஆடலாம்
10. கறவை மாடுகளைத் தங்கள் உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம்.

இவற்றுடன் பின்வரும் அணிகளை அணிந்து கொள்ளவும் கம்மாளருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1. நெற்றிப்பட்டம் - தாலிகட்டுச் சடங்கின்போது நெற்றியில் அணிந்து கொள்வது.
2. அனந்தொவி- ஒரு காதணி. விட்டுணுவின் பாயலாக உள்ள பாம்பின் பெயர் அனந்தன். அவன் பெயரால் அமைந்தது இந்த அணி. இந்தப் பாம்புகள் தன் வாலினை வாயில் வைத்துக் கொண்டு முடிவற்றதான பெருவளையமாகக் கிடப்பதுபோன்ற உருவில் இதனைப் படைத்திருப்பர். தீயர் பெண்கள் தங்கள் காதில் அணியும் காதிலை என்ற அணியில் நடுப்பதக்கமாக அனந்தொவி இருக்கும். உருவில் இது ஒரு பாம்பினை ஒத்திருக்கும். தீயர் மற்றும் கைவினைஞர் சாதி ஆண்களும் இதனை முக்கியமான நிகழ்ச்சிகளின்போது அணிந்து கொள்வர்.
3. இடுப்புச் கச்சை.
4. கையில் வளையல்.

5. இரு பகுதிகளாகச் செய்து திருகாணி கொண்டு இணைக்கப்பட்ட இரண்டு முகப்புக்களை உடைய காற்சிலம்பு.
6. புலி மோதிரம். புலியின் நகத்தினை மோதிரத்தில் பதித்துக் குழந்தைகளுக்கு அணிவிப்பர்.
7. பொதிப்பு- ஒரு நூலில் நிறையக் காசுகளைக் கோத்து அதன் இரு முனைகளிலும் முடிச்சிட்டு அணிந்துகொள்ளதல்.
8. களஞ்சி - பொதிப்புக்கு மேல் மலரமைப்பில் பொருத்தப்படும் முகப்பு.
9. கழுத்துச் சங்கலி.
10. ஏடகம், மதகம் தாலி, கழுத்தணிகள். இவற்றுள் ஒன்றில் இருபத்தோரு கற்கள் பதிக்கப்பட்டிருக்கும்.

கம்மாளருக்குத் தரப்பட்ட இதே உரிமைகளைப் பெருமாள் அவர்களைத் திரும்ப அழைத்து வந்த திருவரங்கத்துப் பாணன் குடும்பத்தினருக்கும் வழங்கினார். அவன் மேற்கூறப்பட்ட அணிகள் அனைத்தையும் பூண்டவனாக பெருமாளிடம் சென்று தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான். எனினும் அப்போது அவன் தன் தலையில் அணிந்திருந்த தங்கக் குல்லாயினை எடுத்துவிட்டான். "ம் சரி, சரி, அப்படியே எடுத்து தான் விட்டேன்" எனக் கூறவும் அவன் தங்கக் குல்லாய் அணியும் உரிமையினை இழந்தவனானான். பெருமாள் கம்மாளர்களை வாழ்த்தியபின் அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பினர். அந்த ஈழவச் சிறுவனும் வாரியர் சிறுமிக்கும் அவர்கள் தனியே ஒரு வீடு அமைத்துத் தந்தனர். மலபாருக்கு வந்து சேர்ந்த முதல் தீயனான இந்த ஈழவச் சிறுவன் தன்னோடு கொண்டு வந்த தேங்காயைப் பயிரிட்டுப் பயன்படுத்தும் தனி உரிமைக்கு உரியவனானான். இன்றும் நிலத்தில் அடிமைகளாகப் பண்ணை வேலை பார்ப்போர் செறுமான் கணக்கன் முதலியோர் - தீயரை வாரியன் என்றே அழைக்கின்றனர். இவர்கள் வாரியர் சாதிச் சிறுமியின் வழிவந்தவர் என்பதே இதற்கான காரணமாகும்.

கம்மாளரிடையே உயர்பிரிவினராக ஐந்து வகுப்பார் உள்ளனர். எனினும் தோலில் பணிபுரியும் கைவினைஞரை இவர்கள் தங்கள் சாதியினைச் சேர்ந்தவர்களாக ஏற்றுக் கொள்ளாது தங்களிடையே நான்கு பிரிவுகள் மட்டுமே உள்ளதாகக் கூறி வருகின்றனர். இவர்கள் கூற்றுப்படி செம்பில் பணிபுரிவோரே ஐந்தாவது பிரிவினர். அவர்கள் இவர்களோடு மலபாருக்குத் திரும்ப வராமல் ஈழவ நாட்டிலேயே தங்கி விட்டனர் என்பர். எனினும் இவர்கள் எப்பொழுதும் தங்களை ஐங்குடிக் கம்மாளர் என்றே கூறி வருகின்றனர்.

இவர்கள் நாட்டை விட்டு வெளியேறியதைப் பற்றித் தச்சர்கள் மேலே கூறிய கதையிலும் வேறுபட்டதான ஒரு கதையினைக் கூறிவருகின்றனர். அதனையும் தெரிந்து கொள்ளலாம் என்றே கருதுகிறேன். இந்த மாறுபட்ட வழக்கு வரலாற்றைக் கம்மாளரின் திருமணம், தாலிகட்டுச் சடங்குகளின்போது பாணன்கள் கூறுவதில்லை. தச்சர்கள் தங்களிடையே வழங்கிக் கொள்ளும் கதையாகும் இது. பெருமாளினுடைய வண்ணான் வாழ்ந்த ஊர் கணிப்பய்யூர் என இவர்கள் கூறுவர். மலபாரிலுள்ள பொன்னானி வட்டத்தைச் சேர்ந்த நம்பூத்ரி ஒருவனுடைய இல்லத்தின் பெயரே கணிப்பய்யூர். இந்த நம்பூத்ரி கட்டிடக்கலை பற்றிய நுட்பங்களை அறிந்த வல்லுநர் எனக் கருதப்படுகின்றார். இக்கலை தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் நிகழும் போதெல்லாம் அதுபற்றி விளக்கம் பெற இவரையே நாடி வருவர். தச்சர்களும் கட்டிடக் கலைஞர்களும் இவருடைய தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொள்வர். வண்ணான் துவைக்கும் கல்லானது படுகிடையாகத் தண்ணீரில் கிடந்துள்ளது. அய்யேசுவரி என்ற சிறுமியும் கணிப்பய்யூரைச் சேர்ந்தவள் எனவும் அவளையே மேலே கூறிய கதையில் உள்ளபடியே வண்ணார் தூக்கிச் சென்றதாகவும் இவர்கள் கூறுகின்றனர். எனினும் அவளை மீட்டுவரத் தச்சர் படைஞரின் உதவி கேட்டதான செய்தி இந்த வரலாற்றில் இல்லை. பெருமாள் வண்ணானிடம் அவளை மணந்துகொண்டு அவளுக்கு நேர்ந்த இழிவினை நீக்கும்படி கூறியதாக இக்கதையில் கூறப்படுகிறது. அவனும் அதற்கு உடன்பட்டான். *7764* குடும்பங்களைச் சேர்ந்த கம்மாளர்களும் இத்திருமணத்திற்கு வந்து கூடினர். கருங்கற்களை நிறுத்திப் மிகப் பெரியதொரு பந்தல் அமைக்கப்பட்டது. வண்ணானுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் நல்ல விருந்து அளித்தனர். அந்தப் பந்தலைக் கம்மாளர் அது தானே சரிந்து விழும்படியான அமைப்புடையதாகப் போட்டிருந்தனர். இதனை அறிந்திருந்த கம்மாளர் அனைவரும் உரிய சமிக்ஞை கிடைத்ததும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர். பின் பந்தல் சரிந்து அந்த வண்ணானையும் அவன் நண்பர்களையும் அமுக்கிச் சாகடித்தது. இதன்பின் நாட்டை விட்டு ஓடிய கம்மாளர் ஓராண்டு, எட்டுமாதம், பதினொரு நாள் வரை ஈழவர் நாட்டில் தங்கியிருந்தனர். ஈழவ அரசரை முன் வைத்து அவர்களோடு உடன்பாடு காண முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தங்கள் வேண்டுகோள்களை நிறைவேற்றி வைக்கப்படுமானால் தாங்கள் திரும்பிவர உடன்படுவதாகக் கம்மாளர் கூறினர். ஈழவ அரசன் தன் படைவீரர்களையும் நசராணியினையும் பெருமாளிடம் அனுப்பி வைத்தான். இவ்வாறு கம்மாளர் நாட்டை விட்டு வெளியேறியதும் பின்னர் திரும்பி வந்ததும் பற்றிய கதை சாட்சிகள் முன்னிலையில் கருங்கல்லில் உரிய சடங்குகளுடன் வெட்டி

வைக்கப்பட்டது. கன்னி மாதத்தில் எட்டாம் நாளன்று ஒரு வெள்ளிக் கிழமையில் இது திருவஞ்சைக்களத்தில் உள்ள கோயிலின் வடக்கு வாசலில் புதைக்கப்பட்டது. ஏதேனும் ஐயப்பாடுகள் நேரும்பொழுது இந்தக் கல்லைத் தோண்டி எடுத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இதனையெல்லாம் செய்து முடித்தபின் ஈழவ அரசனின் தூதுவர்கள் திரும்பவும் தங்கள் மன்னரைச் சென்றடைந்தனர். அதன்பின் கம்மாளர் மலபாருக்குத் திரும்ப வந்தனர், தச்சர்கள் கூற்றுப்படி செம்புக் கொல்லர்கள் அப்போது திரும்ப வரவில்லை. தச்சர்களின் பதினெட்டுக் குடும்பங்களும் திரும்ப வராமல் தங்கி விட்டன என இவர்கள் கூறுகின்றனர். இவர்களுள் சிலர் நீண்டகாலம் சென்றபின் திரும்ப வந்தனர் என்றாலும் அவர்களைச் சாதியார் தங்களோடு சேர்த்துக் கொள்ள உடன்படவில்லை. இவர்கள் புழுதித் தச்சர் எனவும் பதினெட்டன்மார் எனவும் அழைக்கப்படுகின்றனர். பரப்பங்காடியிலும் அதனைச் சுற்றிலும் இப் பிரிவினைச் சேர்ந்த நான்கு குடும்பத்தவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தச்சுத் தொழில் செய்து வந்தாலும் ஆசாரிகள் இவர்களைச் சாதிவிலக்கத்திற்கு உள்ளானவர்களாகவே நடத்தி வருகின்றனர்.

கம்மாளர் கூட்டமாகக் குடிபெயர்ந்து நாட்டைவிட்டு வெளியேறியது பற்றிய மற்றுமொரு கதை வழக்கும் கூறப்பட்டு வருகின்றது. அது அண்மைக் காலத்தில் இட்டுக் கட்டப்பட்ட கதையாதல் வேண்டும். இந்தக் கதையில் கம்மாளர் பட்டர் பிராமணன் ஒருவன் உதவியினை நாடிச் சென்றதாகவும் அவன் கம்மாளருக்குத் தக்க சூழ்ச்சிகளை சொல்லிக் கொடுத்ததாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. மலபாரில் பட்டர் பிராமணர் அண்மைக் காலத்தில் வந்து குடியேறியவர்கள் என்பதனை நாம் அறிவோம்.

தீயரைப் பற்றி அண்மையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:* "முயற்சி, ஆள்வினையுடைமை ஆகிய பண்புகளைக் கொண்டிலங்குபவர் தீயர் என இவர்கள் எப்போதும் பாராட்டுப் பெறுவர். இவர்களுள் பலர் பயிரிடுதல் தொடர்பான பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டவர்களாக உள்ளனர். மலபாரில் மிகுந்த லாபம் ஈட்டித் தரும் பெருந்தொழில்கள் சிலவும் நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு இவர்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. கள், சாராயம் தயாரித்து விற்கும் தொழில் முழுவதுமாக இவர்கள் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இவர்களுள் பலர் மலபார்

* இந்தியன் ரெவியூ, அக்.*1906.*
(Indian Review, Oct., 1906)

முண்டு எனப்படும் பலரும் பயன்படுத்தும் துணி நெசவில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். தென்னையோடு தொடர்புடைய பிற தொழில்களிலும் தீயர் வெற்றிகரமாக ஈடுபட்டு வருகின்றனர். தீயருள் பலர் வெல்லம் தயாரிப்பதிலும் மிகுந்த லாபம் ஈட்டி வருகின்றனர். தென்னை நாரிலிருந்து கயிறு தயாரித்தல் இவர்கள் பரம்பரைத் தொழிலுள் ஒன்று. இதனை வீட்டில் கைத்தொழிலாகப் பெண்களே மேற்கொண்டு நடத்துகின்றனர். கயிற்றால் கால்மிதி முதலிய பொருள்கள், தரைவிரிப்பு ஆகியன தயாரித்தலிலும் இவர்கள் கைதேர்ந்தவர்கள். வணிகத்திலும் இவர்களுள் பலர் ஈடுபட்டுள்ளனர். உழவும் தொழிலும் ஆகிய இரண்டிலும் காட்டும் தங்கள் ஆர்வத்தோடுகூடத் தீயர் இலக்கியத்திலும் ஈடுபாடுடையர்வர்களாக உள்ளனர். இலக்கிய ஈடுபாட்டுடன் தொடர்பு கொள்ள இவர்கள் வாழ்க்கை எத்தகைய ஏற்ற சூழ்ல்களை நல்காத நிலையிலும் இவர்களுடைய இந்த ஆர்வம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவர்களிடையே வடமொழியில் நல்ல புலமை பெற்றவர்களும் உள்ளனர். மலையாள இலக்கியத்தை வளம்படச் செய்ததில் இவர்கள் பங்கு பெரிதாகும். இந்திய மருத்துவ முறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், சிறந்த சோதிடர்கள், கணக்கில் வல்லவர்கள் ஆகியோரும் இவர்களிடையே உள்ளனர். பிரிட்டிசாரின் மலபாரில் இவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். அண்மைக் காலத்தில் தீயர் சமூகத்தைச் சமூகப் பொருளாதாரத் துறைகளில் மேம்படுத்த ஓர் இயக்கத்தையும் இவர்கள் தொடங்கியுள்ளனர். அதில் முன்னே நிற்கும் சாதித் தலைவர்கள் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பான முதலிடம் தந்துள்ளனர். சாதியினைச் சேர்ந்தவர்களைத் தொழிலில் ஆர்வம் கொண்டவர்களாகத் தொழில் தொடங்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும் கல்வியறிவு புகட்டும் இயக்கங்களும் தொடங்கப்பட்டுள்ளன. *1905*-இல் கொல்லத்தில் இவர்கள் நடத்திய தொழில் தொடர்பான பொருட்காட்சி தந்த வெற்றியின் காரணமாக அதனை இவர்கள் ஆண்டுதோறும் நடத்த முற்பட்டுள்ளனர். இவர்கள் சாதியினைச் சேர்ந்த இளைஞர் சிலர் தொழில் முறை பற்றிய நுட்பங்களைத் தெரிந்து வரச் சப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் திரும்பி வந்து முடங்கிப்போய் அழிவை நெருங்கிக் கொண்டிருக்கும் உள்ளூர்த் தொழில்கள் சிலவற்றுக்குப் புத்துயிரளிப்பர் என நம்பலாம். திருவாங்கூரிலும் கொச்சியிலும் சில இடங்களில் கயிற்றுத் தொழில் தொடர்பான தொழிற்சாலைகளைத் தீயர் சிலர் நிறுவியுள்ளனர்."

"*1906* இல் தலைச்சேரியில் தீயருக்குரிய கோயில் ஒன்றுக்கு மிகுந்த பொருட்செலவில் அடிக்கல் நாட்டப்பட்டது. அடுத்த ஆண்டில் ஸ்ரீ நாராணன

தர்ம பரிபாலன யோகத்தினர் ஆதரவில் கண்ணனூரில் ஒரு தொழில் தொடர்பான பொருட்காட்சி ஒன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மிக அண்மையில் வேறு ஊர்களிலிருந்தும் தலைச்சேரிக்குக் கல்வி கற்கவரும் மாணவர்கள் தங்குவதற்காக விடுதியொன்று கட்ட இவர்கள் நிதி திரட்டி வருகின்றனர்."

தியோரு - Tiyōro

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தியோரு பற்றித் தரப்பட்டுள்ள விளக்கம் வருமாறு: "ஒரிய மீனவர்களான இவர்கள் தாமரையிலைகளைச் சேகரித்து உண்பதற்கான இலைகள் தைத்து விற்கின்றனர். தொரை, கோதை, ஆர்டிய குலொதொண்டிய என நான்கு அகமணக்கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. வேட்டையாடுபவன் எனப் பொருள்படும் திரவன் என்ற வடசொல்லின் திரிந்த வடிவமே இச் சாதிப் பெயர் என்றும் ஒரு கருத்துக் கூறப்படுகிறது." (*பார்க்க: ரிஸ்லெ- வங்காளக் குடிகளும் குலங்களும், தியர்*).

தோடர் - Toda

என்னுடைய நண்பரான முனைவர் டபிள்யூ. எச். ரிவர்ஸ் நீலகிரியில் நெடுங்காலம் தொடர்ந்து தங்கியுள்ளதன் விளைவாக அண்மையில் வேறெங்கும் காண்பதற்கரிய வாழ்க்கையை மேற்கொண்டுள்ள பழங்குடிகளான தோடர்களின் சமூகம், சமயம் முதலியனவற்றை விரிவாக விளக்கும் நூலினை* வெளியிட்டுள்ளார். அண்மைக் காலக் கணக்கெடுப்பு நீலகிரி மலையில் இவர்கள் எண்ணிக்கை *807* எனத் தெரிவிக்கின்றது. எனவே நான் உதகமண்டலத்திற்கும் பைகாராவிற்கு அவ்வப்பொழுது மேற்கொண்ட பயணங்களின்போது எடுக்கப்பட்ட குறிப்புகளோடு நீலகிரி வாழ் பழங்குடிகளைப் பற்றிய ஆய்வின் முன்னோடிகளான ஹார்க்னெஸ் முதலியவர்களின் குறிப்புகளையும் பயன்படுத்திக் கொண்டு மட்டுமே தோடர் பற்றிக் கூறப் போகிறேன்.

பெரிய கொம்புகளைக் கொண்டுள்ள எருமைகளை வளர்த்து, அவை தரும் பாலையும் அதிலிருந்து எடுக்கப்படும் வெண்ணையினையும் பெரும்பாலும் நம்பியே இவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். எனினும்

---

* தோடர், *1906.* (The Todas, 1906)

உதகமண்டலத்தில் கடைவீதி ஏ ப்பட்ட பின் இவர்கள் முன்பு போல தங்கள் வாழ்க்கைக்கு முழுமையாக எருமைகளை நம்பியிருக்கவில்லை எனலாம். ஒரு தோடன் பெற்றுள்ள செல்வத்தை அவன் வைத்திருக்கும் எருமைகளின் எண்ணிக்கையினைக் கொண்டே மதிப்பிடுகின்றனர். வேல்ஸ் இளவரசர் அண்மையில் இந்தியாவிற்கு வருகை தந்தபோது நிகழ்ந்த ஒரு சிறு சம்பவம் வருமாறு. தோடரிடையே சமயப் பணியாற்றி வரும் கிறித்தவப் பாதிரியார் ஒருவர் விளக்குக் காட்சிகள் வழியாகத் தோடர்களுக்கு வேதாகமத்தில் உள்ள கதைகளை விளக்கி வந்தார். குளிராக உள்ள பிற்பகல் நேரங்களில் தோடர் தங்கள் குடிசைகளைவிட்டு வெளியே வர உடன்படுவதில்லை. குழந்தைகளை மகிழ்விக்க இடையிடையே வேடிக்கை காட்டுவதைப் போல இவர்களை மகிழ்விக்க அப்பாதிரியார் வேல்ஸ் இளவரசரின் படத்தைத் திரையில் காட்டி அவருடைய வருகை பற்றிக் கூறியதோடு அவர்கள் மனதில் அவரைப் பற்றிய மதிப்பினை உண்டாக்க, "அவர் மிகப் பெருஞ்செல்வர் அவர் போகும் இடமெங்கும் இரு நூறு பணியாளர் உடன்செல்வர்" எனக் கூறினார். இதனைக் கேட்ட ஒரு முதியவன் தலையை ஆட்டியபடி, "அதெல்லாம் சரி! அவரோடு எத்தனை எருமைகள் வர உள்ளன? அதனைச் சொல்லுங்கள்" எனக் கேட்டானாம்."

மேய்ச்சல் தொழிலை மேற்கொண்டவர்களாகத் தோடர் எளிமையான வாழ்க்கையினையே வாழ்ந்து வருகின்றனர். இருந்தாலும் வனத்துறையில் வனக் காவலர் பொறுப்பில் அரசுப் பணியாளனாகத் தோடன் ஒருவன் இருந்து வருவது எனக்குத் தெரியும். மலைத்தோட்டங்களில் சிலர் தொழில் செய்ய அமர்த்தப்பட்டுள்ளனர். எனினும் அதனால் சிற்சில இடையூறுகள் விளைந்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். நிலத்தை உழுது பயிரிடுதல் தகுதிக்குக் குறைவானதோர் தொழிலெனத் தோடர் கருதுகின்றனர். முன்பு மாவட்ட ஆட்சியராக இருந்தவர் இவர்கள் உருளைக் கிழங்கு பயிரிடச் சில ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தந்தார். இவர்கள் அதனைப் படகருக்குக் குத்தகைக்கு விட்டமையால் அந்த உரிமை பறிக்கப்பட்டது. உடலை வருத்தித் தொழில் செய்வது தோடருக்கு உகந்ததாக இல்லை என்பதனைப் பின்வரும் நிகழ்ச்சி விளக்கும். சில எருமைகளைத் தோடன் ஒருவன் தவறாகத் தன்னுடையன என உரிமை கொண்டாடியதால் அவன் சிறைத் தண்டனை பெற வேண்டியதாயிற்று. பிற சிறைக் கைதிகளைப் போல அவனையும் ஏதேனும் ஒரு வேலையினை மேற்கொள்ளச் செய்யச் சிறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை. சிறை அலுவலர்கள் வன்முறையினைப் பயன்படுத்த

விரும்பாத அதே சமயத்தில் தங்கள் தோல்வியை வெளிகாட்டிக் கொள்ள விரும்பாதவர்களாக அவனை மேற்பார்வையாளர் என்ற போர்வையில் சோம்பேறியாக இருக்க அனுமதித்தனர். தோடர் இனப் பெண் ஒருத்தியின் அன்றாடப் பணிகள் மந்தையில் (தோடர் குடியிருப்பு) சுற்றித் திரிவதும், தலைமுடிக்கு நெயிட்டு அதனைச் சுருளாக்கிக் கொள்வதும் சமையல் செய்வதுமே எனலாம். சமவெளிப் பகுதியில் வாழும் பெண்களைப்போலக் காரணம் ஏதுமின்றியே அஞ்சி மருள்கின்ற மனப்போக்கு இவர்களிடையே இல்லை. ஐரோப்பியர்கள் தோடரின் மந்தைக்கு வருவார்களானால் இப் பெண்கள் குடிசைகளைவிட்டு உடனே வெளிப்பட்டு வந்து அவர்களைச் சுற்றி ஒரே பாட்டை எப்போதும் பாடியவர்களாக இனாமுக்காக அவர்களை நச்சரிப்பர். ஐரோப்பியர்களை இவர்கள் சாமி என விளிப்பர். குழந்தைகளையும் தங்களைப் போலவே ஐரோப்பியரைக் கண்டவுடன் சூழ்ந்துகொண்டு காசுகேட்டு அதனைப் பெறும்வரை நச்சரிக்கும்படியாகப் பழக்கியுள்ளனர். ஐரோப்பியர்கள் தங்கள் குடிசைகளுக்குள் நுழைவதற்குத் தோடர் பொதுவாகத் தடையேதும் கூறவில்லை. பல சமயங்களில் நான் அவர்கள் குடிசைக்குள் குனிந்து தவழ்ந்து செல்ல முற்பட்டபோது என் அடிபுதை செருப்புக்களை அகற்றி வரும்படி பணிவோடு கேட்டுக்கொண்டுள்ளனர். *1868* இல் முனைவர் ஜெ.ஸோர்ட், "தோடர் பெண்களுள் பலரும் ஐரோப்பியர்களின் சிற்றின்ப வேட்கைக்குப் பலி யாகி உள்ளனர். ஒரு காலத்தில் பாலுறவு நோய் ஏதும் இல்லாதிருந்ததான இவர்களிடையே அந்த நோய் பரவ ஐரோப்பியர்களே காரணமாக இருந்துள்ளனர். இதனால் நல்ல உடல் உறுதி வாய்க்கப் பெற்றிருந்த இந்தப் பெண்கள் மெல்ல உடல் நலம் குன்றியவர்களாக ஆகி வருகின்றனர். இன்று இந்த இனத்தவர்கள் தளர்ந்து ஆட்டங்கண்டு போனதான உடல்கூறு வாய்க்கப் பெற்றவர்களாக இருப்பதற்கு ஐரோப்பியர்கள் அறிமுகப்படுத்திய இந்த நோயே காரணம் எனலாம்" என ஐரோப்பியர் மீது குற்றம் சுமத்தியுள்ளார். இதனை மறுப்பதற்கில்லை. மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளும் நம் கண்ணில் படும் நோயாளிகளும் இதனை மெய்ப்பிக்கின்றனர். வெளியுலகத் தொடர்பு காரணமாகவே தோடரிடையே வெட்டை நோய் தோன்றியுள்ளது. இவர்களுள் சிலர் வளர்ச்சி குன்றியவர்களாக இருப்பதற்கு இந்த நோயின் தாக்குதலே காரணம் எனலாம். இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகாதவர்கள் நல்ல உடல் வாகு வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். அயலார் முன்னிலையில் தோடர் பெண்கள் சற்றும் கூச்சம் அற்றவர்களாக வெற்று மேனியராக வந்து போகின்றனர். தோடர் இனப் பெண்களின் ஒழுக்கம் பற்றி முனைவர் ரிவர்ஸ் பின்வருமாறு எழுதுகின்றார்: "தோடர் இனத்தவர் உடலுறவு கொள்வதில்

வரையறை ஏதும் அற்றவர்ளாகவே உள்ளனர். முறையற்ற வகையிலான இதுபோன்ற ஒழுக்கக்கேடு இந்த இனத்தவர்களிடையே மட்டும் நிகழ்வதாக அமையாமல் ஐரோப்பியர் குடியேற்றத்தின் காரணமாகப் பெரும் அளவில் நீலகிரிக்குத் தொடர்ந்து வந்த பிற இந்தியர்களோடும் தொடர்புடையதாக நிகழ்வதாயிற்று. தோடர் ஒழுக்கங் குன்றியவர்களாக உள்ளனர் என்ற பொதுவான கருத்து உண்மையில் இந்தக் கருத்துத் தோடர்களின் ஒரிரு ஊர்களைச் சேர்ந்தவர்களின் நடத்தையின் அடிப்படையில் கூறப்பட்டதாகவே கூறவேண்டும். ஐரோப்பிய குடியிருப்பினை அடுத்துள்ளதான ஸ்கூல்மந்தை அல்லது சைய்ல்க் மந்தையினைத் தவிர பிற மந்தையினைச் சேர்ந்த தோடர்களுள் பெரும்பாலோர் ஒழுக்க நெறிப்பட்டவர்ளாக இந்தக் கொடிய நோயினால் பீடிக்கப்படாதவர்களாக இருந்து வருகின்றார்கள் என்றே நான் கருதுகின்றேன்."

சில ஆண்டுகளுக்கு முன்பு பர்னமின் காட்சி அரங்குகளில் ஐரோப்பா, அமெரிக்கா ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உடல் அழகினையும் வலிமையினையும் காட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பழங்குடி இனத்தவர்களுள் தோடர் இனத்தவர் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்ட தோடனை நான் சந்தித்தேன். இவன் இன்றும் தான் கற்றுக் கொண்ட ஆங்கிலத்தைக் கொச்சையாக ஓரளவு பேசி வருகின்றான். காட்சியில் தன்னோடு பங்கு பெற்ற ஜம்போ என்ற யானையினைப் பற்றி இவன் ஆர்வத்தோடு பேசினான். சுற்றுப் பயணம் முடிந்து தன் சொந்த ஊரான மலைக்குத் திரும்பி வந்துள்ள இவன் தலையில் அணிந்து கொண்டுள்ள உயரமான வெள்ளைக் குல்லாய் தோடர் அனைவரின் கவனத்தையும் கவர்ந்து வருகின்றது. இவனுடைய கைரேகைப் பதிவுகள் முன்பே இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பதியப்பட்டுள்ளதால் அதனை நான் எடுக்கும்போது இவன் வியப்பு எதனையும் வெளிப்படுத்தவில்லை.

1870-இல் கர்னல் டபிள்யூ. ராஸ் கிங், தோடர் தங்கள் மீது மேலாண்மை செலுத்துபவர்களோடு அன்றாட நடைமுறைகளைப் பற்றி உரையாடத் தேவையான மொழியறிவு பெற்றுள்ளனர் எனக் குறித்துள்ளார்.* இன்று இவர்களுள் சிலர் தமிழினை எழுதக் கற்றுள்ளனர். பலர் தமிழில் இயல்பாக உரையாடுகின்றனர். நீலகிரியினைச் சேர்ந்த சி.எம்.எஸ். தமிழ்க் கிறித்தவப் பணியாளர் தோடர்களிடையேயும் தங்கள் பணியினைத்

* நீலகிரி மலைவாழ் பழங்குடிகள் (Aboriginal Tribes of the Nilgiri Hills.)

தொடங்கியுள்ளனர். இப்பணியின் காரணமாகத் தோடரிடை ப் பழங்குகின்ற தான பஞ்சை ஏழையும் பணம் பெருத்த செல்வரும் (Dires and Lazarus) கதை வடிவினை இங்கு எடுத்துக் காட்ட ஆவலுடையவனாயுள்ளேன். முன்னோரு காலத்தில் ஒரு பணக்காரனும் ஏழையும் இறக்க நேரிட்டது. பணக்காரன் சாவுச் சடங்கு மிக ஆர்ப்பாட்டமாக நடந்தது. எருமைகள் பலவற்றை அப்போது பலி யிட்டனர். ஏழையின் சாவுச் சடங்கில் இன்னிசையோ எருமைப்பலியோ நிகழவில்லை. ஆங்கிலேயர் அடுத்து உலகில் இந்த ஏழை மிகப் பெருஞ் செல்வனாக வாழ்வான் என நம்புகின்றனர். எனவே ஒருவன் சாவுச் சடங்குக்காக நிறையப் பொருளைச் செலவிடுவதால் பயனேதுமில்லை. கிறித்தவ சமயப் பணியாளர்கள் உதகமண்டலத்தில் ஒன்றும், பைகாரா அருகில் ஒன்றும் என இரண்டு பள்ளிகளைத் தொடக்கியுள்ளனர். பைகாரா அருகே உள்ள பள்ளியில் சிறுவரும் சிறுமியரும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டையும் எழுதப் படிக்கக் கற்று வருவதோடு அடிப்படைக் கணக்கையும் கற்று வருகின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன் தோடன் இனச் சிறுவன் ஒருவன் திருநெல்வேலியில் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டதோடு அங்கே தங்கிச் சமயக் கல்வியும் கற்று வந்தான். அவன் நீலகிரி மலைக்கு மக்களிடையே கிறித்தவ சமயத் தொண்டு புரியும் பணியாளனாக வருவான் என எதிர்பார்த்தனர்.** *1907*-இல் உதகமண்டலத்தில் உள்ள சி.எம்.எஸ். கிறித்தவ சபைக்குரிய தனிக்கோயிலில் தோடர் இனப் பெண்கள் ஐவருக்கு ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டது. "இவர்களுக்குத் தூய வெள்ளை ஆடையினை உடுத்தித் தலைமீதும் இந்தியக் கிறித்தவர்கள் போட்டுக் கொள்வதுபோல வெள்ளைத் துணியினை இட்டனர். இதனைக் காண கிறித்தவர்களான படகர் பலரும் பெருந்திரளாக வந்து கூடியதோடு இதனையடுத்து நடந்த வழிபாட்டு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டனர்."

நடுத்தர உயரம், அதற்கேற்ப அமைந்த உடல்வாகு, குறுகிய மூக்கு, கட்டான உடலமைப்பு, பொருத்தமுற அமைந்த பல்வரிசை ஆகிய இவையே தோடன் ஒருவனின் உருமாதிரித் தோற்றம் எனலாம். முனைவர் ரிவர்ஸ் குறிப்பிட்டிருப்பதைப்போலச் சிலருடைய மூக்குப் பக்கவாட்டிலிருந்து பார்க்கும்போது நன்கு வட்ட அமைப்புக் கொண்டது போலத் தோற்றம் தரும்,

** சென்னை மாவட்டத் திருச்சபை இதழ், நவம்பர், *1907*.
(Madras Diocesan Magazine, Nov.1907).

கால்வழி அற்றுப்போன பழங்குடி இனத்தவர்களுடன் தோடரை இணைக்க ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. சாவுச் சடங்கு ஒன்றுக்காகப் பெருங்கூட்டமாகத் திரண்டிருக்கும் இவர்களிடையேயிருந்து ஒபர் அம்மெர்கயுவின் மேடை நாடகத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கவோ துணைப் பாத்திரங்களை ஏற்கவோ தேவையானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தொல்லை ஏதும் இருக்காது. நீலகிரியினைச் சேர்ந்த பிற மலையினப் பழங்குடிகளிலிருந்து இவர்களை எளிதில் வேறுபடுத்தி அறிய உதவுவது இவர்கள் தங்கள் மயிரை ஒழுங்கு செய்து கொள்ளும் முறையேயாகும். என் குறிப்புக்களிலிருந்து இது தொடர்பாக எடுக்கப்பட்ட விவரங்கள் வருமாறு: அடர்த்தியான தலை முடி நடு வகிடு எடுத்துப் பிரிக்கப்பட்டு நெற்றியிலும் கழுத்தின் மேலும் சுருள் முடியாக விழுந்து புரண்டபடி உள்ளது; மார்பிலும் வயிற்றிலும் அடர்த்தியாக மயிர் வளர்ந்துள்ளது; வயிற்றின் நடுவிலான மயிரோழுங்கு மிக அடர்ந்ததாக உள்ளது; தோள் பட்டையின் மேலும் கீழும் அடர்த்தியான மயிர் உள்ளது; முதுகில் முடி அடர்த்தியுடையதாக இல்லை; முன்கை, கை இரண்டின் வெளிப்பக்கங்களிலும் மயிர் அடர்த்தியாக வளர்ந்துள்ளது; கையின் புறத்தைவிட முன்கையின் புறத்தில் மிக அடர்த்தியான வளர்ச்சியினைக் காணலாம். கால்களில் முன்பகுதி பின்பகுதி ஆகிய ஈரிடத்திலும் முடி மிகுதியாகவே வளர்ந்துள்ளது; தொடையின் வெளிப் புறத்திலும் முழங்கால் மூட்டினைச் சுற்றியும் காலின் பிற இடங்களை விட மயிரின் அடர்த்தி மிகுதி; பிட்டத்தின் கீழேயான பகுதியில் தாடி போல முடி அடர்த்தியாக வளர்ந்துள்ளது. கண்ணுக்கும் புருவத்திற்கும் இடைப்பட்ட குழிவு தெளிவாகப் புலனாகக் கூடியதாக உள்ளது; இரண்டு புருவங்களும் அடர்ந்த மயிர் கற்றை ஒன்றால் புருவ மத்தியில் கூடியதான தோற்றம் தருகின்றன; இரண்டு காதுகளின் புறமடல்களின்மேல் விளிம்பிலிருந்து மயிர் அடர்த்தியாக வளர்ந்து தென்னிந்திய பொனெட் குரங்கின் புறச் செவியினை ஒத்த தோற்றத்தினைக் கொண்டதாக உள்ளது; இவ்வாறு உடலில் அடர்த்தியாகத் தங்களுக்கு மயிர் வளர்வதற்கு மிகுதியாகப் பாலினைப் பருகுவதே காரணமாகும் எனத் தோடர் சிலர் கூறுகின்றனர்.

கிட்டத்தட்ட ஆண்கள் அனைவரும் தங்கள் வலத் தோளில் மேலெழுந்து கரணையாக வளர்ந்துள்ள புண்தழும்பினை உடையவர்களாக உள்ளனர். இந்தப் புண்கள் தோளினை கெஞ்சு (*Litscea Wightiana*) மரக்குச்சியின் புனிதமான நெருப்பினை உடைய தீக்கொள்ளி கொண்டு சுடுவதால் உண்டாக்கப்படுபவையே. இவ்வாறு சூடிட்டுக் கொள்வதால்

எருமைகளில் சுலபமாகப் பால் கறக்க முடிகின்றது எனத் தோடர் கருதுகின்றனார். முனை... ரிவர்ஸ் பால் கறப்பதால் ஏற்படும் க...ளப்பைப் போக்க இவர்கள் ...ம் முறை... கையாளுகின்றனர் என்க் கூறுகி...ார். அவர் மேலும் “ஒரு சிறுவன் எருமைகளைப் பால் கறக்கத் தொடங்... பன்னிரண்டு வயதாகும் சமயத்தில் அவனுக்கு இதுபோலச் சூடி...ன்றது” எனக் கூறியுள்ளார். ஒருத்தி கருவுற்ற ஐந்தாம் மாதம் வரு... அமாவாசையின்போது அவளுடைய பெருவிரல் மூட்டுக்களில் சூடிடும் ச...கு நிகழ்த்தப்படுகின்றது. ஒரு கந்தலைச் சுருட்டி எண்ணெயில் தோய்த்து அதில் நெருப்பினைக் கொளுத்தி அவளாகவே சூடிட்டுக் கொள்வாள் அல்லது மற்றொருத்தியைக் கொண்டு சூடிடும்படி செய்வாள்.

ஆண்களை விடப் பெண்கள் நல்ல நிறம் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் பால் கலந்த காபியினை ஒத்த உடல்நிறம் வாய்க்கப் பெற்றவர்கள் எனப் பொருத்தமுற வருணிக்கப்பட்டுள்ளனர். சிறுவர், சிறுமியர் உடலின் நிறத்தில் செம்பின் நிறத்தின் சாயல் புலப்படக் காணலாம். காக்கையின் கருமையினை ஒத்த தங்கள் கருங்கூந்தலை சுருளாகச் சுருட்டி வளர்த்துவிட்டுக் கொண்டிருக்கும் பளப்பளப்பான கண்களோடு கூடிய கன்னியர் சிலர் நல்ல அழகிகளாகத் தோற்றம் தருகின்றனர். எனினும் இவர்களுடைய இந்த அழகு விரைவில் கெட்டழிய அருவருப்பான தோற்றத்தோடு கிழவிகளாக காட்சி தருகின்றனர். மொரையர் பழங்குடியினருள் போலவே தோடருள்ளும் சிறப்பான பண்புகள் வாய்க்கப்பட்ட ஆண்கள், அஞ்சத்தக்க பண்புகள் வாய்க்கப்பட்ட பெண்களோடு வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாக உள்ளனர். இளம்பெண்களைத் தவிர மற்ற பெண்கள் அனைவரும் ஆண்மை ஆளுமை கைவரப்பட்டவர்களாகவே உள்ளனர். ஆண்களும் பெண்களும் சிவப்பு, நீலக் கரைகளோடு கூடிய வெள்ளைத் துணியால் தங்கள் உடலைப் போர்த்துக் கொள்கின்றனர். உதகமண்டலம் கடைவீதியில் வாங்கப்படும் இந்த மேலாடை புத்துக்குளி என அழைக்கப்படுகிறது. இதனைப் பெண்கள் சில சமயங்களில் பூத்தையலிட்டு மேலும் அழகுபடுத்தி அணிவதுமுண்டு. தங்கள் தலைமுடிக்கும் உடலுக்கும் தோடர் பூசிக் கொள்ளும் நெய்யின் மணம் காரணமாக இவர்கள் உடலிலிருந்து ஒரு தனித்த வாடை வீசியபடி இருக்கும். இவர்கள் உடலில் வீசும் இந்த வாசனையின் இயல்பைச் சோதிப்பதற்காகப் பைகாராவிலிருந்து நாங்கள் திரும்பி வந்து நீண்ட நாள்கள் சென்றபின் என்னோடு அங்கு வந்த என் நண்பர் ஒருவரின் கண்களைக் கட்டியபின் அவர் மூக்கருகே தோடன்

ஒருவனின் துணியினைக் கொண்டு சென்றேன். அவர் உடனே இது தோடரோடு தொடர்புடையது என இனங்கண்டு கூறிவிட்டார்.

முன்பெல்லாம் நீலகிரியினைச் சேர்ந்த பிற பழங்குடியினத்தவர்களிலி ருந்து படகரை அவர்கள் அணிந்திருக்கும் தலைப்பாகையினை வைத்து எளிதில் வேறுபடுத்தி அறிந்துவிடலாம். இப்போது தோடர் இனத்தைச் சேர்ந்த பெரியவர்களும், சாதித் தலைவர்களான மணியகாரர்களும் படகரைப் போலவே தலைப்பாகை அணியத் தொடங்கிவிட்டனர். எனக்கும் முனைவர் ரிவர்ஸ்க்கும் வழிகாட்டிகளாக அமர்த்தப்பட்ட தோடர்கள் தாங்கள் பெற்றுள்ள புதிய பொறுப்பினைச் சிறப்பிக்கும் வகையில் தலைப்பாகை அணிந்துகொண்டனர்.

தோடர் பெண்கள் பூப்படைந்தபின் பச்சை குத்திக் கொள்கின்றனர். இவர்களுள் பச்சை குத்திக் கொள்ளாத பலரை நான் பார்த்துள்ளேன். இவர்களுள் சிலர் பச்சை குத்திக் கொள்வதற்கான செலவினை மேற்கொள்ள வசதியில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டனர். மற்றும் சிலர் தொடர்ந்து கருவுற்றவர்களாகவோ குழந்தைக்குப்பால் கொடுப்பவர்களாகவோ இருப்பதால் பச்சை குத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லையெனக் கூறினர். அவ்வாறான சமயங்களில் பச்சை குத்திக் கொள்வது ஆபத்துக்கு உள்ளாக்கலாம் என்பதாலேயே இவர்கள் அதனை மேற்கொள்ளவில்லை. புள்ளிகளையும் வட்டங்களையும் பச்சை குத்தும்போது எளிய கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன.* விளக்குக் கரியினைத் தண்ணீரில் குழைத்து (*Berberis aristafa*) முள்ளில் அதனைத் தொட்டுத் தோடர் இனப் பெண் ஒருத்தி பச்சை குத்துகிறாள். பச்சை குத்துதலும் பெண்களுக்கு அணிகள் பூட்டி அலங்கரிப்பதும் எவ்வாறு நிகழ்த்தப்படுகின்றன என்பதனை விளக்கும் ஐந்து பெண்களின் ஒப்பனை பற்றிய தொகுப்புரை வருமாறு:

1. 22 வயதினள்: இவளுக்கு ஒரு குழந்தை உள்ளது. இடது கையில் பின்புறம் மூன்று புள்ளிகள் பச்சை குத்தப்பட்டுள்ளன. ஆர்க்காட்டு இரண்டனாக் காசுகள் கோர்க்கப்பட்ட வெள்ளியாலான கழுத்துச் சங்கலி அணிந்துள்ளாள். வலது மேற் கையில் சோழிகள் கோக்கப்பட்ட நூலும் வெள்ளிக் கொலுசும் அணிந்துள்ளாள். இடது முன் கையில் சோழிகள் கோக்கப்பட்ட கயிறு அணிந்துள்ளாள். இடக் கை மோதிர விரலில் பித்தளை மோதிரம்

* பார்க்க: சென்னை அருங்காட்சியக மடல், *1896*, படம்.
(See: Madras Museum Bull., IV, 1896, Pl.XII).

உள்ளது; வலக் கையின் நடு விரலிலும் மோதிர விரலிலும் வெள்ளி மோதிரங்கள் உள்ளன; காது மடல்களில் துளையிடப்பட்டுள்ளது; பாட்டி இறந்துபோன காரணத்தால் காது மடல்களில் உள்ள வளையங்கள் களையப்பட்டுள்ளன.

2. 28 வயதினள்: முகவாய்க் கட்டையில் ஒரே ஒரு புள்ளி மட்டும் பச்சை குத்திக் கொண்டுள்ளாள். மார்பு, மேற்கையின் வெளிப்புறம், இடக் கையின் பின்புறம், கெண்டைக் கால்களுக்குக் கீழ், முழங்கால்களுக்கு மேல், பாதங்களில் மேலே ஆகிய இடங்களில் புள்ளிகளையும் வளையங்களையும் பச்சைக் குத்திக் கொண்டிருந்தாள்; சிறு சோழிகள் கோக்கப்பட்ட கயிற்றினை வலது முன் கையில் கட்டிக் கொண்டிருந்தாள். இடது புஜத்தில் நூலாலான கயிறும் வேலைப் பாடுகளுடன் கூடிய இரண்டு பித்தளைக் கொலுசும் அணிந்திருந்தாள்; இடது மணிக்கட்டில் வேலைப்பாடுகளுடன் கூடிய பித்தளை வளையலும் கண்ணாடிப் பாசிமணிகளாலான வளையலும் அணிந்திருந்தாள் இடக்கைச் சிறு விரலில் ஒரு பித்தளை மோதிரமும் இடக்கை மோதிர விரலில் இரண்டு உருக்கு மோதிரங்களும் அணிந்திருந்தாள். கழுத்தில் சோழிகள் பிணைக்கப்பட்ட பாசிமணிச் சங்கலி அணிந்திருந்தாள்.

3. 35 வயதினள்: முன்னவளைப் போலவே பச்சை குத்திக் கொண்டிருந்த இவள் அத்துடன் முதுகிலும் நிறையப் புள்ளிகளையும் வளையங்களையும் பச்சை குத்திக் கொண்டிருந்தாள்.

4. 35 வயதினள்: கையில் அணிந்துள்ள கனமான பித்தளை வளையல் உரசி தழும்பு ஏற்படுத்தாதிருக்க மணிக்கட்டுகளில் துணிகளைச் சுற்றி கொண்டிருந்தாள்.

5. 23 வயதினள்: ஒரு குழந்தைக்குத் தாய். கெண்டைக் கால்களுக்குக் கீழும் முழங்கால்களுக்கு மேலும் பச்சை குத்திக் கொண்டுள்ளாள்.

நான் நேரில் ஆய்ந்து அளவெடுத்த தோடர் இன ஆண்களின் முக்கியமான உடல் அளவுகள் வருமாறு:

	சராசரி செமீ	மேல் அளவு செமீ	கீழ் அளவு செமீ
உயரம்	*169.8*	*186.8*	*157.6*
தலையின் நீளம்	*19.4*	*20.4*	*18.2*
தலையின் அகலம்	*14.2*	*15.2*	*13.2*

தலையின் நீள அகல விகித எண்	73.3	81.3	68.7
மூக்கின் உயரம்	4.7	4.7	4.6
அகலம்	3.6	3.8	3.4
உயர அகல விகித எண்	74.9	79.9	70.0

தலையின் நீள அகல விகித எண் ஒரின மக்களின் கலப்பில்லாத தனித்தன்மையை காட்டுவன என்பது உண்மையாயினும் தோடரின் தலையின் நீள அகல விகித எண் குறிப்பிடத்தக்க வகையில் கருத்தை ஈர்ப்பதாக உள்ளது.

69	&&
70	&&&&&&&
71	&&&&&&&&&&&
72	&&&&&&&
73	&&&&&&&&&&&&&&
74	&&&&&&&&&&&&&&&&&&&*
75	&&&&&&&&&
76	&&&&&&
77	&
78	&
79	&
80	
81	&

என்னுடைய சால்டெரின் கையால் இழுத்து உடல் ஆற்றல் அறியும் திறனறிமானி தோடரிடையே பெரும்கிழ்ச்சியினையும் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்திய ஒரு கருவியாகும். மந்தைதோறும் அதனைப் பற்றிய செய்தி காலப்போக்கில் பரவியதோடு சாவுக்காகத் தோடர் கூடும் இடங்களில் கூட அவர்கள் அதனைக் கொண்டு தங்கள் இழு திறன் காண முற்பட்டனர். ஒரு நாள் காலையில் கூடியிருந்தவர்களிடையே நன்கு பருத்து வளர்ந்திருந்த ஒருத்தி தனது இழுதிறன் 73 பவுண்டு எனத் திறன்மானியினை இழுத்துக் காட்டியபோது அது அங்கு கூடியிருந்த ஆண்களிடையே சஞ்சலத்திற்குக் காரணமானதோடு அவள் அப்பொழுது வெறுப்புக்குரிய வீராங்கணையாக அவர்களால் பாவிக்கப்பட்டாள். என்னுடைய ஆய்வகக் குறிப்பேட்டில் உள்ள விவரப்படி

* சராசரி 73.0

மிகுதியான இழு திறனாற்றல் வாய்க்கப் பெற்ற ஆங்கில மாது ஒருத்தியால் *66* பவுண்டு அளவே திறன்மானியினை இழுக்க முடிந்துள்ளதாகத் தெரிகிறது. நல்ல உடற்கட்டு வாய்க்கப் பெற்ற தோடன் ஒருவன் *98* பவுண்டு அளவு இழு திறனாற்றல் பெற்றிருந்தும் அதில் திருப்தியுறாதவனாகச் சில நாள்கள் தொடர்ந்து நல்ல உணவு உண்டும், பயிற்சி மேற்கொண்டும் திரும்ப வந்து *103* பவுண்டு இழுதிறனாற்றலைப் பெற்ற உடலாற்றலால் நிகழ்ந்ததன்று. அந்த மானியினை எப்படி நுட்பமாக இழுத்து அதிக ஆற்றலைப் புலப்படுத்துவது என்பதனை அவன் கற்றுக் கொண்டதின் பயனாக வெளிப்படுத்தப்பட்டதாகும்.

தோடர்களின் அன்றாட உணவுப் பழக்கம் பின்வருமாறு அமையும். இதனோடு கள்ளுக் கடையில் அவர்கள் குடிக்கும் போதை தரும் கள்ளினையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்:

அ. உறைபால் தெளிவில் வேகவைத்த அரிசிப் பொங்கல்

ஆ. வெல்லமிட்டுச் செய்த சர்க்கரைப் பொங்கல்

இ. கடைவீதியில் வாங்கிய காய்கறிகளோடு கீரைகளையும் இட்டுக் கடைந்த கூட்டு, இயற்கையில் கிடைக்கும் காய்கறி கீரைகளையும் தோடர் பயன்படுத்துகின்றனர். கூரிய சிறு குச்சியினைக் கொண்டு மலைப் பக்கங்களில் தரையில் படர்ந்துள்ள செடி கொடிகளை இவர்கள் தோண்டிக் கொண்டிருக்கக் காணலாம். தாங்கள் சிற்றின்ப விழைச்சினைத் தூண்டும் மருந்துகளைப் பயன்படுத்துவதில்லையென எரிச்சலுடன் தோடர் கூறுவர். ஆண்களும், பெண் ்களும் உடல் ஆற்றலை வளர்த்துக் கொள்ள ஒருவகைக் கிழங் ்னால் தயாரிக்கப்பட்ட சாலேப் மிசிரியினை பாலிலிட்டுக் கொதிக்க வைத்துக் குடிப்பதாகக் கூறுகின்றனர். சாலேப் மிசிரி (*Eulophia, Habenas sia*) இனங்களைச் சேர்ந்த செடிகளின் கிழங்குகளிலிருந்து தயாரிக்கப்படுவது.

இவர்கள் வாழும் பகுதியில் கிடைக்கும் உணவாகக் கொள்வதற்குரிய செடிகளும் கீரைகளும் வருமாறு:

1. திஸ்டில் என்ற வண்ணமலர் முட்செடியின் வேரினையும் பூக்களின் காம்புகளையும் களைந்த பின் அதன் பட்டையினின்றும் சுவைச் சாறு அல்லது கறி தயாரிக்கின்றனர்.

2. நீலகிரி பூனைக் காஞ்சொறிச் செடியின் விரைந்து வளரும் தளிர்களைப் பறித்து அதனை நசிக்கி அல்லது தட்டி அதில் ஒட்டியபடியிருக்கும் மயிர்போன்ற தூவிகளை அகற்றியபின் சுவைச் சாறாகவோ கறியாகவோ சமைப்பர். மந்தை அருகே வளர்க்கப்படும் இந்தச் செடியின் நாரினைக் கொண்டு புட்கூலியினைத் தைக்கின்றனர். பழங்காலத்தைப் போலத் தைக்க முள்ளினைப் பயன்படுத்தாமல் கடைவீதியில் வாங்கும் ஊசியினைப் பயன் படுத்துகின்றனர். இதன் பட்டையினைக் கொண்டு நார் தயாரிக்க இப் பட்டையினை கொதிக்கும் நீரில் சாம்பல் இட்டு வேக வைப்பர்.

3. முற்றாத மூங்கில் முளைகளையும் கறியாகச் சமைக்கின்றனர்.

4. முளைக்கீரை, தண்டுக்கீரை, பசலைக் கீரை முதலிய கீரை வகைகளையும் சமைக்கின்றனர்.

பின்வரும் மரஞ்செடி கொடிகளில் கிடைக்கும் கனிவகைகளைத் தோடர் உண்கின்றனர். எனத் திரு கே. இரங்காச்சாரி தொகுத்துள்ளார்.

Eugenia Arnoltiana	(நாகை)- இம்மரத்தின் பழத்திலிருந்து கிடைக்கும் கரிய சாற்றைத் தோடர் பெண்கள் தங்கள் முகத்தில் பூசி அழகுப்படுத்திக் கொள்கின்றனர்.
Rubus ellipticus	இவை மூன்றும் காட்டு
Rubus molucanus	ராஸ்பெர்ரி வகைச்செடிகள்.
Rubus lasiocarpus	
Fracasia nilgerrenris	நீலகிரியில் வளரும் காட்டு ஸ்ட்ராபெர்ரி வகை.
Elaeagnus latifolia	திரு மாசன் இது பழ கேக், பழ ஜெல்லி ஆகியன செய்யப் பயன்படுவதாகக் கூறுகின்றனர். தமிழில் இதனைக் கொழுங்கை வகை என்பர்.
Gaultheria fragrantissima	
Ehodomyrtus tomentosa	மலைக் கூஸ் பெர்ரி
Loranthus neelgherrensis	புல்லுருவியாக
Loranthus loniceroides	மரங்களின்மேல்வளர்ப்பவை
Elaeocarpus Oblongus	பிக்கி மரம்

Elaeocarpus Munronii	நரை[illegible]க்கி மரம்
Berberis asistata	[illegible]ர் எனப்படும்
Berberus nepalensis	கூட்டக் கொத்தாகக் சிவப்புப் பழங்களையுடைய புதர்ச் செடி
Solanum nigrum	எங்கும் சாலையோரத்தில் காணப்படும் கத்தரி வகைச் செடி
Vaccinium Leschenaultii	களாக்காய் படகர் மொழியில்
Vaccinium nilgherrense	அந்துவன் எனப்படும்
Toffalia aculeata	முள்ளோடு கூடிய புதர்ச் செடி
Ceropegia Pusilla	கிழங்கோடு கூடிய கொத்துச் செடி. இதன் கிழங்கினைக் காட்டுப் பன்றிகளும் விரும்பி உண்ணும்.

மேலே கண்ட கனிவகைகளோடு உண்ணத்தக்க காளான்களையும் தோடர்கள் உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

தோடர் தங்கள் அன்றாட வாழ்க்கையிலும் சடங்குகளிலும் பயன்படுத்தும் மரங்கள், செடிகொடிகள் முதலியவற்றுக்கான தோடர்கள் வழங்கும் பெயர்களையும் அவற்றுக்கான தாவரவியல் பெயர்களையும் ஒரு பட்டியலாக முனைவர் ரிவர்ஸ் தந்துள்ளார்.*

முன்னேற்றம் கண்ட அந்தக் காலக் கட்டத்தில் தோடர் குடிசைகளில் சமையல் முதலானவற்றுக்கான நெருப்புக்காக நெருப்புப் பெட்டியினையே பயன்படுத்தி வந்தனர். பைகாரா பங்களாவில் என்னுடைய அளவு கருவிகளில் அளவு எடுத்துக் கொள்ள வந்தவர்கள் தயக்கம் ஏதுமின்றி நெருப்புப் பெட்டியினைக் கேட்டு வாங்கி அவர்களுக்கு வழங்கப்பட்ட சுருட்டுக்களைப் பற்ற வைத்த பின்பே அங்கிருந்து செல்லும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். எனினும் பால் அறையின் எல்லையினுள் நெருப்புக் குச்சியினைப் இவர்கள் பயன்படுத்துவதில்லை. அங்குக் கெயின்ஜி** (*Litsea Wightiana*) மரக்குச்சிகள் இரண்டினைப் பயன்படுத்தியே நெருப்பு உண்டாக்குவர். இவற்றுள் ஒன்று இரண்டடி மூன்றங்குல நீளம் கொண்டதாக ஒரு முனை கூம்பு வடிவினதாக இருக்கும். மற்றொன்று இரண்டரை அங்குல நீளமுள்ளதாக ஓர் ஓரத்தில்

* முந்து நூல், பின்னிணைப்பு, IV, 738. (Op.Cit.Appendix.IV,738).

** படகர் வழக்கில் இம்மரத்திற்கான பெயர்.

அரைவட்ட வடிவினதான குழியோடு கூடியதாக இருக்கும். குறுகிய குச்சியில் ஓரத்தில் சிறு குழிவு உண்டாக்கி அதில் கடையும் குச்சியினை வைத்துச் சுழலச் செய்வர். இந்தக் குழிவில் மரத்தூள் தோன்றிக் குவியலாக அமுங்கிக் கிடக்கும். உராய்வின் வேகத்தால் உண்டாகும் வெப்பம் உரிய அளவினை எட்டும்போது இந்த மரத்தூளில் நெருப்பு பிடித்துக் கொள்கின்றது.* குறுகிய குச்சியில் உள்ள குழிவில் எளிதில் சுழலும்படியாக நீண்ட குச்சியினைத் தரையில் வைத்துக் குழிவுள்ள பக்கத்துக்கு எதிர்பக்கத்தின் மீது கால் பெருவிரலால் உறுதியாக அமுக்கிக் கொள்வர். அந்த அடிக் கட்டையின் குழிவில் சிறிது கரிப்பொடியினையும் இடுவர். பின் நீண்ட குச்சியினை உள்ளங்கைகளுக்கிடையே வைத்துக் கரிப்பொடியில் நெருப்புத் தோன்றும்வரை தயிர்கடைவதைப் போலச் சுழற்றியபடி இருப்பர். இவ்வாறு உண்டாக்கப்படும் நெருப்பையே தீ எனப்படும் மந்தைகளில் உள்ள பால் அறைகளிலும் ஆண்களின் பிணங்களை எரிக்கவும் பயன்படுத்துவர். தோடர்களின் வழக்கமான சாவுச் சடங்குகள் பற்றிய ஒரு குறிப்பில்** திரு வால்ஹவுஸ் குறிப்பிட்டிருப்பது வருமாறு: "சிதையின் விறகு அடுக்கி முடிக்கப்பட்டவுடன் இரண்டு உலர்ந்த குச்சிகளைக் கொண்டு தீக் கடைந்து நெருப்பினைப் பெறுகின்றனர். இதனை ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் மற்றவர்கள் கண்களில் படாதபடி மறைவாகவே நிகழ்த்துகின்றனர். தீக்கடைந்து நெருப்பினைப் பெறுவதனை மறைபொருளுடையதாகவும் புனிதமான செயலாகவும் இவர்கள் கருதுவதே இதற்குக் காரணம். ஒரு பெண்ணின் ஈமச் சடங்கின்போது சிதையில் நெருப்பு மூட்ட நான் நெருப்புக் குச்சியினைக் கொடுத்து உதவியுள்ளேன். பால் அறையில் தீக்கடைய வழக்கமாகப் பயன்படுத்தப்படும் தீக்கடை கோலினை என் உதவியாளனான பிராமணன் தொட்டதால் அது தீட்டுப்பட்டதாகப் பயன்படாது போயிற்று. தோடர்களின் பால் மடத்தில் பிராமணர்களை அனுமதிப்பதில்லை என ஹார்க்னெஸ் பதிந்துள்ளார்.*** அவ்வாறு ஒருவன் பால் மடத்தில் நுழைய நெருங்குவதைப் பற்றிக் கேள்விப்பட்ட உடனே அங்கிருந்த சிறுவர்கள் விரைந்து வந்து அவனைத் தூர விரட்டினர். "பலவகை மரங்களைத் தோடர் தீக்கடை கோலுக்காகப் பயன்படுத்துகின்றனர். தோடர் மொழியில்

---

* R.Bache - Royal Magazine, August 1901.

** இந்தியத் தொல்லியல், III, 1874. (Ind.Ant.III, 1874.)

*** நீலகிரி மலையின் முடியகத்து வாழும் பழங்குடியினம் ஒன்று பற்றிய விளக்கம், *1832*. (Description of a singular Aboridinal Race in habiting the summit of the Neigherry Hills, 1832.)

கெய்ஸ் அல்லது கெடஜ் எனப்படும் (*Litsea Wightiana*), மோர்ஸ் எனப்படும் (*Michelia Nilagirica*) பர்சுகுடி எனப்படும் (*Eloeagnus latifolia*), மைன் எனப்படும் (*Cinnamomum Wightii*) என்பன குறிப்பிடத்தக்கவை'' என முனைவர் ரிவர்ஸ் குறித்துள்ளார். ''புனிதச் செயல்களுக்காக நெருப்பைக் கடைந்து தீயுண்டாக்கத் தோடர் மொழியில் கெய்ஸ் அல்லது கெடஸ் எனப்படும் மரக்குச்சியினையே தீக்கடை கோலாகப் பயன்படுத்துகின்றனர். ஒரு சிறுவனைப் பாலோளாகப் பால்கறக்கத் தகுதியுடையவனாக ஆக்கி வைக்கும் தெசுகெராட் சடங்கிற்கு மட்டும் முளி மரக் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒருவனைப் பால் மடத்திற்கு உரியவனாக்க நடத்தப்படும் நிரொதிடி சடங்கிற்குச் சடங்கினை நடத்தும் உதவியாளன் முள்ளி மரக்கட்டையினைக் கொண்டு நெருப்பு உண்டாக்கியபின் சடங்கினைச் செய்து கொள்பவன் அதில் குளிர் காய்ந்து கொள்வான். தோடர் மந்தைகள் சிலவற்றுள் துட்மூக்கல எனப்படும் கல் வைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அதனை இரும்புத்துண்டால் கொட்டி நெருப்பு உண்டாக்கி வந்தனர்'' என முனைவர் ரிவர்ஸ் மேலும் தொடர்ந்து இது பற்றிக் கூறியுள்ளார்.

தோடர்களின் குடியிருப்பு மந்து எனப்படும். அதில் குடிசைகள், பால் மடம், கால்நடைகளுக்கான பட்டி ஆகியன இடம் பெற்றிருக்கும். மந்துவின் அமைப்பினைப் பற்றி முனைவர் ஸோர்ட்* நன்கு விளக்கியுள்ளார். ஆகையினால் நான் அதனை இங்கு எடுத்துத் தருவதே ஏற்புடையதாக இருக்கும் எனக் கருதுகின்றேன். ''ஒவ்வொரு மந்துவிலும் வழக்கமாக ஐந்து குடிசைகள் இருக்கும். அவற்றுள் மூன்றினைக் குடியிருக்கவும் ஒன்றினைப் பால்மடமாகவும் ஒன்றினை இரவில் கன்றுக் குட்டிகளைக் கட்டிப் போடவும் பயன்படுத்துவர். இந்தக் குடிசைகள் குறுக்கே வெட்டப்பட்ட அரைப் பீப்பாய்களின் அமைப்புடையனவாக *10* அடி உயரமும் *18* அடி நீளமும் *9* அடி அகலமும் கொண்டனவாக இருக்கும். நுழைவதற்கான வாயில் *32* அங்குல உயரமும் *18* அங்குல அகலமும் கொண்டது. வாயிலை அடைக்கக் கதவு ஏதும் இல்லை. *4* முதல் *6* அங்குல கனமுடைய வாயிலைக் குறுக்கே முழுதும் அடைக்கப் போதுமான நீளமுள்ள கட்டையினைக் குறுக்கே இடுவர். சரிந்து வாயிலை அடைக்கும் இக் கதவு குடிசையினுள்ளே தரையில் நடப்பட்டுள்ள இரண்டு பெரிய கட்டைகளில் பொருத்தப்பட்டிருக்கும். *30* அங்குலம் முதல் *36* அங்குல உயரமுடைய இந்தப் பலகைக் கதவினை எளிதாக இப்படியும் அப்படியுமாகத் தள்ளி வைக்கலாம். குடிசையினுள் நுழைய வேறு வழிகள் எவையும் இல்லை.

* முந்து நூல். (Op.Cit.)

புகை வெளியேறவும் காற்று உட்புகவும் புகைபோக்கி, ஜன்னல் போன்ற அமைப்புகளும் இல்லை. குடிசையினுள் நுழையும் வாயில் மிகக் குறுகியதாக இருப்பதால் ஒருவன் கூனிக் குறுகித் தவழ்ந்தவனாகத்தான் உள் நுழைய முடியும். குடிசைகள் மூங்கிலை நெருக்கமாக அமைத்துப் பிரம்பங்கொடியினால் பிணைக்கப்பட்டு மழைநீர் உட்புகாதபடி கூரை வேயப்பட்டு ஒழுங்குற அமைத்திருக்கக் காணலாம். குடிசையின் பின்பக்கமும் முன் பக்கமும் மரக்கட்டைகள் வைத்துத் தடுக்கப்பட்ட சுவர்கள் இருக்கும். கூரை இருபக்கமும் வளைந்து பக்கவாட்டில் தரையோடு ஒட்டியதான அமைப்புடையது. முன்னால் உள்ள கட்டைச் சுவரிலேயே நுழைவாயில் அமைந்திருக்கும். குடிசையின் உட்புறம் எட்டு முதல் பதினைந்து அடிச் சதுர அமைப்பு உடையதாகவும் நன்கு வளர்ந்த ஒருவன் நிமிர்ந்து நடமாடக் கூடிய உயரமான அமைப்பினை உடையதாகவும் இருக்கும். அதன் ஒரு புறம் சுமார் இரண்டடி உயரமுள்ள களிமண் மேடை அமைப்புக் காணப்படும். அம் மேடை மீது மான் அல்லது எருமையின் தோல் விரிக்கப்பட்டிருக்கும். இந்த மேடையினையே தூங்கும் இடமாகப் பயன்படுத்துகின்றனர். இந்த மேடைக்கு எதிரில் அடுப்பு இருக்கும். அதனருகே உள்ள சற்றே உயர்ந்த மேடையில் சமையலுக்கான பாத்திரங்கள் இடம்பெறும். அதனருகே கூரையை எட்டும் அளவுக்கு விறகுக் கட்டுகள் பிரம்பங்கொடியால் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருக்கும். அடுப்பருகிலேயே உலக்கை இடம்பெற்றிருக்கக் காணலாம். தரையில் உள்ள 7 முதல் 9 அங்குல ஆழமுள்ள குழியே உரலாகப் பயன்டுத்தப்படுகிறது. அடிக்கடி இடிக்கப் பயன்படுத்தப்படுவதால் தரையில் அமைந்துள்ள இக் குழி நன்கு கெட்டிப்பட்டுப் போயிருக்கும். மூன்று அல்லது நான்கு பித்தளைத் தட்டுகள், மூங்கிலாலான அளக்கும் படிகள், ஒரு கைக்கோடரி ஆகியனவே குடிசையில் இடம் பெற்றிருக்கும் பிற தட்டுமுட்டுச் சாமான்கள். ஒவ்வொரு குடிசையைச் சுற்றியும் கற்களை இரண்டு முதல் மூன்றடி உயரமுள்ளனவாக அடுக்கிச் சுற்றுச் சுவர் எழுப்பி இருப்பர். (இதில் ஓர் எருமை நுழைந்து வரும் அளவுக்கு கடவு விடப்பட்டிருக்கும்.) பால் மடம் மற்ற குடிசைகளைவிடச் சற்றே பெரியதாக இடையே மரக்கட்டைகளாலான தடுப்புச் சுவரைக் கொண்டிருக்கும். பால் மடத்தில் உட்பகுதி நெய், பால், தயிர் முதலியனவற்றைப் பாதுகாப்பாகத் தனித்தனியே பாத்திரங்களில் வைக்கும் பொருள்கள் வைக்கும் பகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. பால் மடத்தின் முன் அறை பால்மடப் பூசாரி தங்கும் இடமாகப் பயன்படுத்தப்படும். பால்மடத்தின் தரை சமதளமாக அமைந்திருக்கும். அதன் ஒரு கோடியில் அடுப்பு இடம் பெற்றிருக்கும். அது இரண்டு அல்லது மூன்று பால் கலங்களை வைக்க ஏற்ற அமைப்பு உடையதாக இருக்கும் பால்மடம் குடியிருப்புக் குடிசைகளை விட்டுச் சற்று

விலகியிருக்கும்படியாகவே அமைக்கப்பட்டிருக்கும். கன்றுகளைக் கட்டிப் போட்டிருக்கும் குடிசைகள் எளிய அமைப்புடையனவாக குடியிருப்புக்கான குடிசைகளை ஒத்திருக்கும். மந்தையினை அடுத்துக் கால்நடைகளை அடைக்கும் பட்டி இடம்பெற்றிருக்கும். வட்ட வடிவமாகக் கற்களைச் சுவராக அடுக்கி அமைக்கப்பட்டுள்ள இந்த பட்டிகளின் வாயில்களில் உறுதியான மரக்கழிகளைக் கொண்டு கால்நடைகள் வெளியேற முடியாதபடி தடுப்பு அமைப்பர். ஒவ்வொரு மந்துக்கும் எனத் தனியே கால்நடைகள் இருக்கும். தோடர் மந்துகளைப் பற்றி முனைவர் ரிவர்ஸ் குறித்திருப்பது வருமாறு: "கிராமங்களை அடுத்து அவற்றை அடைவதற்கான ஒற்றையடிப் பாதைகளிருக்கும். இவற்றின் வழியாகவே மந்துகளை அடையமுடியும். கால்வொல் எனப்படும் இந்தக் கால்நடைத் தடங்களுக்குச் சில பகுதிகளில் தனித்த பெயரும் உண்டு. சிலவற்றில் பெண்கள் நடக்கக் கூடாது என்ற விதியும் உள்ளது. மந்துக்குள்ளம் குறிப்பிட்ட கால்தடங்கள் இருக்கும். அவற்றுள் இரண்டு குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ஒன்று புனெட் கால்வொல் எனப்படும் பால்மடக்காரன் பால்மடத்திலிருந்து எருமைகளைப் பால்கறக்கச் செல்லும் வழியாகும். மற்றொன்று பெண்கள் பால்மடக்காரனிடமிருந்து மோர் பெற்றுக் கொள்ளச் செல்லும் மாஜ்வடித் கால்வொல் (மோர் வாங்கச் செல்லும் தடம்). பெண்கள் பால்மடத்திற்கும் அதனோடு தொடர்புடைய இடங்களுக்கும் மோர் முதலிய வாங்கிக் கொள்ள ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே செல்ல அனுமதிக்கின்றனர்."

குடியிருக்கும் குடிசைகளின் அமைப்பினை ஒத்தனவான பால்மடங்களோடு கூடத் தனியே பால்மடக் கோயில்கள் எனப்படும் கூர்ங்கோபுர அமைப்புடைய தனித்த கட்டமைப்புக்களையும் தோடர் பெற்றுள்ளனர். நீலகிரிப் பகுதியில் முட்டநாடு மந்து, கோத்தகிரி, சோலூர், முடிமந்து ஆகிய நான்கிடங்களில் இத்தகைய பால்மடக்கோயில்களில் உள்ளன. முடிமந்துவில் உள்ள கோயில் சிதைந்து அழிந்த நிலையில் உள்ளது. அதனை விரைவில் மீண்டும் கட்டிப் புதுப்பிக்கப் போவதாக எனக்குத் தெரிவித்தனர். முன்பு கூர்ங்கோபுர அமைப்புடையவாயிருந்த பல பால்மடங்கள் மீண்டும் புதுப்பிக்கப்படும் போது அவற்றைத் திரும்பக் கூர்ங்கோபுர அமைப்புடையனவாக அமைப்பதில் உள்ள தொல்லைகள் காரணமாகவும் வேலைப் பளு காரணமாகவும் பழைய அமைப்பினை உடையனவாகப் புதுப்பிக்கப்படாது குடிசையமைப்பு உடையனவாகப் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என முனைவர் ரிவர்ஸ் என்னிடம் தெரிவித்தார். முட்டநாடு மந்துவினைச் சேர்ந்ததாகச் சீகூர் கணவாயின் உச்சியில் அமைந்திருக்கும் கூர்ங்கோபுர அமைப்புடைய பெரிய

கட்டிடத்தை உதகமண்டலத்தைச் சேர்ந்த வேட்டைக்காரர் தோடரின் தலைமைத் திருக்கோயில் (Toda Cathedral) எனக் குறிப்பிடுவது வழக்கம். இதன் அடிப்பகுதி கற்களால் வட்டவடிவமாக அமைந்துள்ளது. அதன் மேலிடப்பட்டுள்ள உயர்ந்த கூர்ங்கோபுர அமைப்பிலான கூரையின் மீது ஒரு தட்டையான கல்லைப் பொருத்தியுள்ளனர். அதனைச் சுற்றிலும் கற்களை வைத்து வட்டமாகச் சுற்றுச் சுவரும் எழுப்பப்பட்டுள்ளது. இந்தப் புனிதப் பால்மடக் கோயிலினுள் மற்றவர்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அதனுள் பால் கறக்கும் கலங்களும் பால்மடத்திற்குரிய பொருள்களும் செம்பாலான மணியின் உருவின் ஒரு சாமியும் இருப்பதாக எங்களிடம் தெரிவித்தனர். பால்மடக்காரன் பாழாள் அல்லது வொர்சொல் எனப்படுவான். அதன் அருகே அமைந்துள்ள கால்நடைப் பட்டியின் முன்னே நான் புல்வெளியால் மூடப்படதான திடல் ஒன்றினைக் கண்டேன். அது புனிதமான இடம் என என்னிடம் கூறினார். அந்தத் திடல் இறந்தவர்களைப் புதைப்பதற்கு உரியதன்று. எனினும் இறந்தவர்களின் உடலை அதனருகே வைத்து அதிலிருந்து கொஞ்சம் மண்ணை எடுத்துப் பிணத்தின் மீது இட்டபின் பிணத்தினைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் வழக்கம் உள்ளது. சிறப்புக்கு உரியதல்லாத சாவுச் சடங்குகளின்போது இந்தத் திடல் அருகிலே எருமையினைப் பலியிடுதல் வழக்கம். கர்னல் மார்ஷல் இந்தக் கூர்ங்கோபுர அமைப்புக்களைப் பற்றி தெரிவிப்பதாவது:* "இந்த மடங்கள் உண்மையில் தோடரால் அமைக்கப்பட்டனவல்ல. இவை தோடரைப் போலவே இந்த மலையில் தோடரோடு கூட வந்து அடைக்கலம் புகுந்த இவர்களோடு உறவுடைய வேறொரு பழங்குடி இனத்தவர்களது ஆகலாம். அவர்கள் தோடர் கண்முன் அழிந்து போன ஒரு பழங்குடி இனத்தவர்களாதல் வேண்டும்."

தோடர் மலபாரைச் சேர்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பழங்குடி இனத்தவர்களின் வழித்தோன்றல்களாகலாம் என்ற கருதுகோளினை முனைவர் ரிவர்ஸ் ஆய்வாளர் முன் வைத்துள்ளாரெனினும் இவர்களுடைய தோற்றம் பற்றிய உண்மை இன்னமும் அறிஞர்களால் தெளிவுபடுத்த முடியாத ஒன்றாகவே உள்ளது. நீலகிரி மாவட்டத்தின் ஆணையராக இருந்த காலத்தில் திரு பிரீக் கண்டாய்ந்த** நீலகிரி மேட்டுநிலம் சார்ந்த கல்மாடங்களைக் கட்டியவர்கள்

---

* தோடரிடையே மண்டையோட்டு அமைப்பு ஓர் ஆய்வாளர், *1873.* (A Phrenologist - among the Todas, 1873).

** நீலகிரியினைச் சேர்ந்த பழங்குடி இனத்தவர்களும் அவர்கள் விட்டுச் சென்றுள்ள நினைவுச் சின்னங்களும், *1873.* (J.W.Breeks-Account of the prinitive Tribes and Monuments of the Nilgiris - 1873.)

யாரென்பதும் இதனைப் போலவே கண்டு தெளிய இயலாத புதிராகவே இருந்து வருகின்றது. திரு பிரீக்ஸ் சேகரித்த தொல்பொருட்களுள் பலவும் இன்று சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இத் தொகுப்பைச் சேர்ந்த மண்பாண்டங்கள் தென்னிந்தியாவில் வேறெங்கும் காணப்படாத தனித்த அமைப்புடையவை., இத் தொகுப்புப் பற்றித் திரு ஆர். புரூஸ் புட்டெ பின்வருமாறு எழுதுகின்றார்.* "இவற்றுள் குறிப்பிடத்தக்கவை உயரமான அமைப்புடைய குடுவைகளாகும். பல அளவுகள் கொண்ட குறுக்களவுடையனவான இவற்றின் அடிப்பக்கம் வட்டமாகவோ கூருளை வடிவினவாகவோ மண்ணாலான திரிகையின் மீதும் கொழி மண்ணில் குத்தியும் பொருந்தும்படியாக வைக்க ஏற்ற அமைப்புடையவை. இந்தக் குடுவைகள் குவிந்த அமைப்புடைய மூடிகளைக் கொண்டவை. இந்த மூடிகளின் மீது பல்வேறு உருவங்களில் மனிதர்களும் விலங்குகளும் அமர்ந்திருப்பது போலவும் நின்றிருப்பது போலவும் அமைக்கப்பட்டிருக்கக் காணலாம். ஒரு சிலவற்றின் மீது உயிரற்ற பொருள்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த உருவங்கள் அனைத்தும் பரும்போக்காக அமைந்தனவே. அழுக்கற்றனவாகவும் முரடாகவும் இவற்றில் உள்ள ஆண் பெண் உருவங்கள் தோற்றம் தரினும் இவற்றைப் படைத்த காலத்தில் வாழ்ந்த மக்களின் நாகரிக நிலையினை இவை புலப்படுத்துவதோடு அந் நாளில் வழக்கிலிருந்த ஆடை அணிகள் மக்கள் கையில் எடுத்துச் சென்ற படைக்கருவிகள். தொழில்கருவிகள் ஆகியன பற்றியும் அறிந்து கொள்ளத் துணை செய்கின்றன. விலங்குகளுள் சில அக் காலத்தில் அவர்கள் வீட்டில் வளர்த்தவை; சில அவர்களால் வேட்டையாடப்பட்டவை; மற்றும் சில அவர்கள் வணங்கி வழிபட்டவை எனத் தெரிய வருகின்றது. அவர்களுடைய வீட்டு விலங்குகள் பலவற்றுள்ளும் குறிப்பிடத்தக்கனவாக உள்ளவை எருமைகளும் ஆடுகளுமே. இந்த விலங்குகளின் கழுத்தில் மணியும் மாலைகளையும் அணியப்பட்டிருப்பதோடு அவற்றின்மீது பூசப்பட்டுள்ள வண்ணங்கள் அவை வேறு பல அணிகளையும் அணிந்தனவாக இருந்திருக்க வேண்டும் என்பதனை உணர்த்துகின்றன. இன்றும் இப்பகுதியில் வீட்டு விலங்குகளை இதுபோல அலங்கரிக்கும் வழக்கம் நிலவி வருகின்றது. இந்த உருவங்களுள் குறிப்பிடத்தக்கவை குதிரைமீது

* வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தொல்பழம் பொருள்களின் வகைப்படுத்தப்பட்ட பட்டியல், அரசு அருங்காட்சியகம், சென்னை, *1901.* (Catalogue of the Prehistoric Antiquities, Government Museum, Madras, 1901).

சவாரி செய்யும் தாடியோடு கூடிய மனிதர்களுடையவை. தோடர்களின் இன்றை எருமைகளை உருவில் ஒத்த பெரிய கொம்புகளோடு கூடிய எருமை உருவங்களும் இந்த உருவங்களுள் உள்ளன. சாவுச் சடங்குகளின்போது பலியிடப்படும் தோடர் எருமைகள், கழுத்தில் மணியோடு காட்சி தருவதைப் போலவே இவையும் மணியோடு காட்சி தருகின்றன.

தோடரிடையே இருவகையான பால்மடங்கள் வழக்கில் உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றோடு மூன்றாவதாகத் தீ மந்து என்ற ஒருவகைப் பால் மடமும் இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி முனைவர் பின்வருமாறு எழுதுகின்றார். "தீ என்பது ஒரு அமைப்பின் பெயராகும். அது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான எருமைகளோடு கூடிய பல பால்மடங்களையும் மேய்ச்சல் வட்டாரங்களையும் கொண்டது. இந்த அமைப்புக்கு பாலோள் என்பவன் தலைமை பூண்டு நடத்துவான். அவனுக்குக் கல்த்போக் என்ற உதவியாளன் உள்ளான். ஒவ்வொரு பால்மடமும் அதனோடு இணைந்த கட்டிடங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் சேர்த்து தீ ..து (தீ கிராமப்) எனப்படும். ஒரு தீயினைச் சேர்ந்த எருமைகள் பஸ்ப்ர் எனவும் புதீர் எனவும் இருவகையினவாகப் பாகுபடுத்தப்பட்டிருக்கும் ப..தீர் பிரிவினைச் சேர்ந்த எருமைகள் புனிதமானவை. தீயினைச் சேர்ந்த பால்மட ச் சடங்குகள் இவற்றினுயை பாலினைக் கொண்டே நிகழ்த்தப்படும். புதீர் எருமைகள் கிராமத்து பால்மடத்தைச் சேர்ந்த எருமைகளை ஒத்தவை. இவற்றின் பாலும் பால்பொருள்களும் பாலோளின் சொந்த உபயோகத்திற்கும் விற்பனைக்கும் உரியவை. இவற்றுக்குத் தனித்த சடங்குகளோடு எத்தகைய தொடர்பும் இல்லை. பாலோள் ஆகப் பொறுப்பு வகிப்பவன் அச் சமயம் தன் வீட்டிற்கோ வேறு மந்துகளுக்கோ செல்லுதல் கூடாது. வேறொரு தீ மந்துக்கு அவன் செல்லலாம். வெளியுலகத்தோடு அவன் தன் உதவியாளனை கல்த் போக் வாயிலாகவே தொடர்பு கொள்ள வேண்டும். தீயிற்கு அவனைக் காண வருபவர்களும் அவனுடைய உதவியாளர் வாயிலாகவே அவனோடு தொடர்பு கொள்ள வேண்டும். பாலோள் ஒரு ஆற்றினைக் கடக்க வேண்டியிருந்தால் அவன் பாலத்தின் வழியாகச் சென்று கடத்தல் கூடாது. ஆறில் பாலோளக்கு என உரியதான குறிப்பிட்ட துறைகளில் இறங்கி நடந்தே ஆற்றைக் கடக்க வேண்டும். பாலோள் பிரமச்சரியம் மேற்கொண்டவனாக இருத்தல் வேண்டும். திருமணம் ஆனவனாயின் அவன் தோடர் வழக்கப்படி அவனுக்கும் அவன் உடன்பிறந்தவர்களுக்கும் உரியவளான மனைவியினை அவர்களுக்கே உரியவளாக விட்டுப் பிரிந்து செல்ல வேண்டும். பைகாரா அருகிலே உள்ள தீயிற்கு முன்பே தகவல் தந்த பின் நான் நேரில்

சென்றேன். அதன் அருகே சுமார் முப்பதும் ஐம்பதும் வயதுடையவர்களான நல்ல உடல்வாகோடு கூடிய இரண்டு பாலோள்களைக் கண்டேன். அவர்கள் கறுப்பு வண்ண உடை உடுத்திருந்தனர். எட்டும் பத்தும் வயதான கோவணம் மட்டும் அணிந்த அவர்களுடைய கல்த் போக் எனப்படும் உதவியாளர்கள் தரையில் குந்திய படி எங்களுக்காகக் காத்திருந்தனர். பாலோள்களுக்கு மரியாதை தெரிவிக்கும் எங்களுக்குத் துணையாக வந்த தோடர் இருவரும் தங்கள் வலது கையினைப் போர்த்திருந்த புத்துக்குளியினை விலக்கிவிட்டுக் கொண்டதோடு தலைப்பாகை அணிந்திருந்த ஒருவன் தன் தலைப்பாகையையும் எடுத்துவிட்டான். நான் அந்த மந்துவினை ஒளிப்படம் எடுத்தால் அதனால் ஏற்படும் தீட்டினைப் போக்கிப் புனிதப்படுத்த ஆகும் செலவினைச் சரிக்கட்டப் பாலோள்கள் பதது ரூபாய் வேண்டுமெனக் கேட்டதால் நீண்டதொரு பேரம் நிகழ்ந்தது. இறுதியாக ஒரு சிறுதொகை தருவதாக வாக்குறுதி தந்தபின் அவர்கள் ஒளிப்படம் எடுக்கத் தங்கள் உடன்பாட்டினைத் தெரிவித்தனர். அவர்கள் தங்கியுள்ள குடிசை பாலோள்கள், கல்த் போக்குகள், அந்தக் குடிசையில் வளரும் பூனை ஆகியோர் அடங்கிய குழுவின் ஒளிப்படம் எடுக்கப்பட்டது.

பாலோள் பாலம் வழியாக ஆற்றைத் தாண்டிச் செல்லக்கூடாது என்பது தொடர்பாகச் சில வழக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பைகாரா பங்களாவை அடுத்து ஓடும் ஆற்றினைத் தோடர் புனிதமானதாகக் கருதுகின்றனர். ஆற்றுத் தெய்வத்தின் கோபத்திற்கு உள்ளாக வேண்டி வரும் என்ற காரணத்தால் கருவுற்றுள்ள தோடர் இனப்பெண்கள் அந்த ஆற்றினைக் கடப்பதில்லை. தோடர்கள் அந்த ஆற்றின் நீரைப் பயன்படுத்துவதேகூட வேறு வழியில்லாத போதே அதனைத் தொடவோ அதில் இறங்கவோ செய்வர். அவ்வாறு இறங்கி அதனைக் கடந்து அக்கரை சேர்ந்தவுடன் அதற்குத் தலை தாழ்த்தி வணக்கம் செய்வர். பைகாரா பாலத்தின்மீது நடந்து அதனைக் கடக்கும்போது தங்கள் புத்துக்குளிக்கு உள்ளிருக்கும் கையினைத் தங்கள் பணிவினைத் தெரிவிக்கும் வகையில் வெளியே எடுத்துவிட்டுக் கொண்டு செல்வர். பைகாரா ஆற்றின் தோற்றம் பற்றி விசித்திரமான ( ) வழக்கு வரலாற்றினை எங்களுக்கு எடுத்தோதினர். பல ஆண்டுகளுக்கு முன் ஒரு தோடனும் அவனோடு உடன்பிறந்தவன் மகனும் தேனெடுக்கப் புறப்பட்டுச் சென்றனர். சில மைல் தூரம் நடந்து சென்றபின் அவர்கள் இருவரும் வேறு வேறு வழிகளில் பிரிந்து சென்றனர். சிறுவனின் பெரியப்பாவிற்குத் தேன் கூடு ஏதும் அகப்படவில்லை. அந்தச் சிறுவன் இரண்டு கண்டிகள்

(மூங்கிலாலான படிகள்) தேன் சேகரித்தான். இதனை முழுவதுமாகத் தனக்கே உரியதாக வைத்துக் கொள்ள ஒரு சிறிதளவு தேன் போக எஞ்சிய அனைத்தையும் ஒரு பாறையிடுக்கில் மறைத்து வைத்துவிட்டுத் தனக்குக் கிடைத்தது தன்னிடமுள்ள கொஞ்சம் தேனே எனத் தன் பெரியப்பாவிடம் பொய் கூறினான். மறுநாள் அச் சிறுவன் தான் தேனினை மறைத்து வைத்திருந்த இடத்திற்குத் தனியே சென்றான். அங்குத் தேனோடு கூடிய மூங்கில் கண்டிகள் இரண்டும் பாம்புகளாக ஆகிவிட அவற்றின் அடியே இருந்து தேன் ஒழுகி வழிந்தபடி இருக்கக் கண்டான். இதனைக் கண்டு அச்சம் உற்ற அவன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான். அந்தப் பாம்புகள் அஞ்சியோடும் அவனைத் துரத்தியபடி பின் சென்றன. (அவை மனிதர்களைத் துரத்தும் மரத்தில் வாழும் நச்சுப் பாம்புகளாகலாம்). சில நிமிடம் ஓடியபின் அவன் தன் வழியில் ஒரு முயல் குறுக்கே வரக் கண்டான். புத்தி கூர்மையுடையவனான அவன் தன் உடலில் உடுத்திருந்த துணியினை அந்த முயல் மீது அவிழ்த்துப் போட்டிபடி ஓடினான். அந்த முயலை ஒரு மனிதன் எனத் தவறாகக் கருதியனவாக அவனை துரத்தி வந்த பாம்புகள் அந்த முயலைத் துரத்தத் தொடங்கின. முயல் வேகமாக ஓடிச் சென்று சூரியனையே அடைந்துவிட அதனைத் துரத்திச் சென்ற பாம்புகள் தங்கள் படத்தால் சூரியனை மறைக்கத் தொடங்கின. இதன் காரணமாகவே சூரிய கிரகணம் தோன்றலாயிற்று. மூங்கில் கண்டிகளிலிருந்து வழிந்த தேனே பைகாரா ஆறாகப் பெருக்கெடுக்கலாயிற்று.

எருமைகள் கூட்டமாக இடம்பெயர்ந்து செல்லுதல் தொடர்பாக முனைவர் ரிவர்ஸ் பின்வருமாறு கூறுகின்றார்: "ஆண்டில் குறிப்பிட்ட சில பருவங்களில் ஒரு ஊரையும் தீயனையும் சேர்ந்த எருமைகள் ஓரிடத்தைவிட்டு மற்றோர் இடத்திற்குப் புலம்பெயர்ந்து செல்லுதல் வழக்கம். சில சமயங்களில் ஓர் ஊரைச்சேர்ந்த எருமைகள் புலம்பெயர்ந்து செல்லும்போது அந்த ஊரார் அனைவரும் அவற்றின் பின்னால் செல்வதும் உண்டு. சில சமயங்களில் பால்மடங்களின் பொறுப்பாளர்களும் ஓரிரு ஆண்களும் மட்டுமே எருமைகளைப் பின்தொடர்ந்து செல்வர். இவ்வாறு எருமைகள் இடம்பெயர்ந்து செல்வதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. புதிய மேய்ச்சல் நிலங்களின் உடனடித் தேவையே இதற்கான தலையாய உடனடிக் காரணமாகும். மற்றொரு குறிப்பிடத்தக்க காரணம் சில ஊர்களும் பால்மடங்களும் தொன்றுதொட்டு இன்றுவரை மிகப் புனிதமானவையாகக் கருதப்பட்டு வருவதால் அவற்றிடம் மரியாதை காட்டும் பொருட்டு எருமைகளை அங்கு ஓட்டிச் செல்வது பழங்காலத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற வழக்கமாக உள்ளது." திரு

எச்.சி.வில்சன் தான் நேரில் பார்த்து விவரித்துள்ள பின்வரும் எருமைகளின் புலம் பெயர் நிகழ்ச்சி பற்றிய விவரங்களுக்கு நான் அவருக்குக் கடப்பாடுடையேன். "ஆண்டுதோறும் எருமைகள் குந்தாவிற்கு இடம்பெய ்து செல்லும்போது அவலாஞ்சியிலிருந்து சிஸ்பாறாவிற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையினை அவை நெருங்கும்போது குறிப்பிடத்தக்கதொரு வழ கத்தை நான் பார்ப்பதுண்டு. அந்தப் பாதைககு மறுபக்கம் தோடர் நடும்பம் வ து காத்திருப்பது வழக்கம். பெண்சள் புல்லின் மீது அமர்ந்தவர்களாகப் புனிதம் வாய்ந்த எருமைக் கூட்டத்திற் ாகக் காத்திருப்பர். ஒரு குறிபபிட பாதையில் நாட்டுப் புறத்தைக் கடந்து வந்த எருமைக் கூட்டம அவலாஞ்சி சிஸ்பா ாவிற்கு மேலே உள்ள மலைப் பகுதியில் இருநூறு அல்லது ு றுு செ தூரத்தை ஒற்றையடிப் பாதையில் கடந்து செல் வேண்டும். சாதாரண எ மைகளும் புனிதத்திற்குரிய எருமைகளும் ஒன்றாகக் கலந்தே செல்லும். சாதாரண எருமைகள் சிஸ்பாறா பாதையின் மேலாகச் செல்ல புனிதத்திற்குரிய எருமைகள் ஒன்றன்பின் ஒன்றாக சிஸ்பாறாவிற்குக் கீழே உள்ள பாதையில் சென்று இறுதியாக ஓடையினைக் கடந்து சோலையினுள் புகுந்து பள்ளத்தாக்கின் மறுபக்கத்தைச் சென்று சேரும். புனிதத் தன்மை வாய்ந்த எருமைகள் ஒற்றையடிப் பாதையினைக் கடந்து சென்றதும் தோடர் இன ஆண்கள் தங்கள் வீட்டுக்குரிய தட்டுமுட்டுச் சாமான்களைக் கீழே வைத்துவிட்டுப் பெண்களும் சிறுமியரும் உட்கார்ந்திருக்கும் இடத்தை அடைந்து அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கிச் சென்று எருமைகள் கடந்துபோன பாதைக்கு மேலாக உள்ள மலைப்பகுதியில் விடுவர். தோடர்களுள் ஒருவன் என்னிடம் புனித எருமைகள் நடந்த தடத்தில் பெண்கள் காலடி வைத்து நடக்க அனுமதிக்கப் படாததே இவ்வாறு அவர்கள் தூக்கிச் செல்லப்படுவதறகுக் காரணம் என என்னிடம் விளக்கினான். இந்த எருமை மந்தை இடம்பெயர்ந்து செல்லும்போது குறிப்பிட்ட ஒரு பாதை வழியாகச் செல்வதையே வழக்கமாகக் கொண்டள்ளது. மந்தையினைச் சேர்ந்த வயதான எருமைகளுக்கு எந்தப் பாதை வழியாகச் செல்ல வேண்டும் என்ற விவரம் தெரிந்திருப்பதால் அவை மற்ற எருமைகளைச் சரியான வழியில் நடத்திச் செல்கின்றன.

1885-ஆம் ஆண்டில் நீலகிரியில் வருவாய்த்துறையினரின் நில உடமை பற்றிய இறுதி ஏற்பாட்டின் மீதான தனது அறிக்கையில் திரு ஆர்.எஸ். பென்சன் தோடர் எந்தவகையான குத்தகை உரிமை அடிப்படையில் நிலத்திற்கு உரிமை உடையவர்களாக உள்ளனர் என்பது பற்றித் தொகுத்துக் கூறியுள்ளது வருமாறு: "நீலகிரியில் தொடக்கத்தில் வந்து குடியேறிய ஐரோப்பியர்கள் அவர்களுள்ளும்

குறிப்பாகத் திரு சல்லிவன் நீலகிரி மேட்டுநிலத்தின் மீதான தோடர்களின் முழு உடைமை உ மையினைத் தீவிரமாக ஆதரித்தனர். எனினும் திரு லூரயிங்க ன் தலைமையிலான பிறிதொரு கூட்டம் மேற்கூறிய கருத்தை எதிர்த்து நாடு மாநிலத்தி பொதுவாக வழக்கில் உள்ள உழவர் குடியுரிமை அடிப்படையிலேயே தோடரும் இப்பகுதியினை அனுபவித்து வருகின்றனர் என வாதிட்டது. பன்னெடுங்காலமாக நிலத்தைப் பயிரிட்டு வரும் படகரிடமிருந்து தோடர், கூட எனப்படும் கூடையில் தானியத்தைப் பெறும் உரிமையினைப் பெற்றவர்களாக இருந்து வருகின்றனர். இது படகர் தோடரின் மேய்ச்சலுக்கு உரிய நிலத்தைப் பயிரிடுவதற்காக எடுத்துக் கொண்டு அதனை மேய்ச்சலுக்குத் தகுதியற்றதாகிவிட்டதற்கான இழப்பீடாகும். எனினும் படகர் இவ்வாறு தானியம் செலுத்துவது தோடரின மன எரிச்சலால் ஏற்படும் தீங்கினுக்குத் தாங்களும் தங்கள் கால்நடைகளும் ஆளாகாமல் காத்துக் கொள்வதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டது எனவும் கூறுவர். குறும்ப (பார்க்க: தனிக்கட்டுரை) ரைப் போலவே தோடரும் மாந்திரீகத்தில் கைதேர்ந்தவர்கள், எனப் படகர் கருதுவதே இத்தகைய அச்ச மனப்பான்மைக்குக் காரணமாகும். நீலகிரியில் வந்து குடியேறிய ஐரோப்பியர்களுங் கூடத் தோடரிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளனர். உதகமண்டலத்தைச் சுற்றியுள்ள பகுதியில் தோடரின் வழக்கமான மேய்ச்சல் உரிமையில் குறுக்கீடு செய்தமைக்கு இழப்பீடாக அரசு ஆண்டுதோறும் ரூ. 50 இன்றுவரை செலுத்தி வருகின்றது. *21-1-1843* நாளிட்ட ஆணையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர்கள் இறுதியானதொரு முடிவினை வெளியிடும்வரை இவர்கள் உரிமை இரண்டுங்கெட்டான் நிலையிலேயே இருந்தது. அரசுக்கு உரிமையுடையதான நிலத்தில் ஒரு சிறு தொகையினை வரியாகச் செலுத்தி அதில் தங்கள் கால்நடைகளை மேய்க்கும் உரிமையினைத் தவிர வேறெந்த உரிமையும் தோடருக்கு இல்லையென அந்த ஆணையில் கூறபபட்டுள்ளது. அவர்கள் மந்துகளில் தங்கி வாழும் உரிமைக்கும் வழிபாடு நடத்தும் இடங்களுக்கும் புதிதாக வந்து குடியேறுபவர்களால் எத்தகைய இடையூறும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு மந்துக்கும் மூன்று புல்லாஸ் *(11.46 ஏக்கர்)* என அளவில் நிலவுரிமைப் பட்டா வழங்கப்பட்டது. *1863*-இல் திரு கிராண்ட் ஒவ்வொரு மந்துக்கும் மேலும் ஒன்பது புல்லாஸ்*(34.28 ஏக்கர்)* வழங்க அரசிடம் அனுமதி பெற்றார். இவ்வாறு வழங்கப்பட்ட நிலததை அவர்கள் மேய்ச்சலுக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதனை மற்றவர்களுக்கு விற்கவோ அதில் நிற்கும் மரங்களின்மீது உரிமை கொண்டாடவோ தோடர்களுக்கு உரிமையில்லை

எனவும் அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு தோடர்களுக்கு உரிமையாகக்கப்பட்ட நிலங்கள் இன்று மற்றவர்களுக்குப் பராதீனப்படுத்த முடியாத தோடர் சமூகத்திற்குரிய பொதுவுடமையாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. உரிய அனுமதியின்றி தோடருக்குரிய நிலத்தினைத் தங்கள் உரிமையாக்கிக் கொள்பவர்களுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்படும் என்ற *18-4-1882* நாளிட்ட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின் அவ்வாறு தோடருக்குரிய நிலத்தை மற்றவர்கள் தங்கள் உரிமையாக்கிக் கொள்ளும் போக்கு தடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆணை பிறப்பிக்கப்படும் வரை விலைக்கோ குத்தகைக்கோ தோடருக்குரிய நிலத்தைப் பிறர் உரிமையாக்கிக் கொள்வது அடிக்கடி நிகழும் நிகழ்ச்சியாக இருந்தது. இந்த ஆணையும் இதனை நடைமுறைப்படுத்த அமர்த்தப்பட்டுள்ள அரசுப் பணியாளர்களும் மேற்கூறிய நடைமுறையினைக் கட்டுப்படுத்தப் போதுமானதா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.'' தோடர்களுடைய நிலத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக *1893*-இல் அரசு அவர்களுடைய நிலத்தை மேற்பார்க்கும் பணியினைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இதற்கான சட்ட வரைவுகள் வனத்துறையினரால் இயற்றப்பட்டன. இதனால் நிலத்தின் மீதான தோடரின் உரிமைக்கு எவ்வகையிலும் கேடு நிகழாதபடி பார்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவுகளின் சுருக்கம் வருமாறு:

1. தோடருக்குரிய நிலத்திலிருக்கும் மரங்களை வெட்டவோ பட்டை நீக்கி வளையம் இடவோ, பட்டைகளையும் இலைகளையும் நீக்கவோ தீங்குண்டாக்கவோ கூடாது. அந்த நிலத்திலிருந்து மரங்களை அகற்றல் மரங்கள் தரும் பொருள்களைச் சேகரித்தல் ஆகியனவும் தடை செய்யப்படுகிறது. தோடருக்குரிய நிலத்தில் குழிகள் தோண்டிக் கல்லெடுத்தல், பாறைகளை உடைத்தல், பயிர் செய்ய உழுதல், கட்டிடம் கட்டுதல், கால்நடைகளுக்கான கொட்டகையிடுதல் ஆகியனவும் தடை செய்யப்படுகின்றது. பட்டாவில் பெயர் குறிக்கப்பட்டுள்ள தோடரைத் தவிர வேறு எவரும் அந்நிலத்தில் கால்நடைகள், மறி, ஆடு, ஆகியனவற்றை நீலகிரி மாவட்ட ஆளுநரின் அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலரின் அனுமதியின்றி மேய்த்தல் கூடாது.
2. தோடருக்குரிய எந்த நிலப்பகுதியினையும் மாவட்ட ஆட்சியர் காட்டுத்தீ தடுப்பு நடைமுறைக்கு உட்பட்டதாகத் தேர்ந்தெடுக்கலாம்.
3. தோடருக்குரிய நிலத்தில் மாவட்ட ஆட்சியரிடமிருந்து உரிமம் பெறாமல்

வேட்டையாடுதல், வேட்டை விலங்குகளை வெளிப்படுத்த கொட்டி முழக்குதல், துப்பாக்கியால் சுடுதல் ஆகியனவற்றிலும் யாரும் ஈடுபடுதல் கூடாது.

4. அந்த நிலத்தில் விலங்குகளை வீழ்த்த வலை விரித்தல் கண்ணி வைத்தல், பொறிகள் அமைத்தல் ஆகியனவும் தடை செய்யப்படுகிறது.

5. நீலகிரியினைச் சேர்ந்த சொந்த நிலப் பட்டாப் பெற்றுள்ள தோடர்களுக்குத் தங்கள் பட்டா நிலத்தைப் பொருத்தவரை மேற்கண்ட விதிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் நிலங்களில் எருமைகளை மேய்த்துக் கொள்ளலாம். குடும்ப உபயோகத்திற்காக விறகு, புல் ஆகியனவற்றை அந்த நிலங்களிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். தேன், மெழுகு ஆகியனவற்றைச் சேகரிக்கலாம். அந்த நிலத்தில் கட்டிடங்கள் கட்டிக் கொள்ளவும் மந்துகள், கோயில்கள் ஆகியனவற்றைப் புதுப்பித்துக் கொள்ளவும் அவர்களுக்கு உரிமம் வழங்கப்படும்.

6. மாவட்ட ஆட்சியர் தோடர் தங்கள் மேய்ச்சல் நிலத்தில் பயிரிட ஆண்டுதோறும் உரிமம் தருவார். இதற்காக இவர்கள் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. அரசு அதற்காகக் கட்டணம் செலுத்தும்படி கூறினாலும் இவர்கள் செலுத்தக் கடமைப்பட்டவர்கள். எனினும் இவ்வாறு பயிரிட ஆட்சியரிடமிருந்து உரிமம் பெற்ற தோடர் தங்கள் நிலத்தில் பயிரிடவும் பயிரிடுவதற்கு தங்களுக்கு உதவவும் தோடரைத் தவிர வேறு யாரையும் அமர்த்திக் கொள்ளக் கூடாது.

உள்ளூர் வனத்துறை அலுவலர்கள் பள்ளத்தாக்கில் உள்ள காய்ந்த புல்வெளியினை நெருப்பிட்டு அழிப்பது மரங்கள் நிறைந்த மலையிடுக்குகளுக்கும் சோலைகளுக்கும் கேடு சூழ்வதாகும் என அதற்குத் தடை விதித்தனை எதிர்த்து *1905* ஆம் ஆண்டில் தோடர் அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டனர். இவ்வாறு ஆண்டுதோறும் புல்வெளிக்குத் தீயிடுவது அந்தப் புல்வெளியில் புல் செழித்து வளர உதவுகின்றது எனத் தோடர் கூறுவதோடு நல்ல தீவனம் இல்லாத காரணத்தால் தங்கள் கால்நடைகள் வளம் குன்றி வருகின்றன என்றும் அவர்கள் முறையிட்டுக் கொண்டனர். நீலகிரிப் மேட்டுநிலத்தில் வாழ்பவர்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தங்கள் விருப்பம் போல் புல்லுக்கு நெருப்பிட்டுக் கொண்டு வருகின்றனர். இதனால் வனவளத்திற்கு எத்தகைய தீங்கும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. எனவே இந்த வழக்கத்தில் குறுக்கிட்டுத் தடைசெய்ய

வேண்டியதில்லை என அரசு அவர்களுடைய வேண்டுகோளை எற்றுக்கொண்டது.

தோடரின் சமூக அமைப்பைப் பற்றித் திரு பிரீக்ஸ் கூறியுள்ளதாவது: "தோடரிடையே தேர்த்தாள், தேவளி என்ற இரு பிரிவுகள் உள்ளன. இப் பிரிவினர் தங்களுக்கிடையே மண உறவு கொள்வதில்லை. முதல் பிரிவினருள், சிலவகைகளில் பிராமணரை ஒத்த பைசி உட்பிரிவினர் அடங்குவர். பெக்கன், குட்டன், கென்ன, தொடி என்பன இரண்டாம் பிரிவினருக்குரிய உட்பிரிவினராவர். பைகி உட்பிரிவினைச் சேர்ந்த ஒருத்தி தர்செர்ழால் பிரிவினரின் மந்துக்குச் செல்லமாட்டாள். எனினும் தர்செர்ழால் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் பைசி உட்பிரிவினரின் மந்துக்கு வந்து போகலாம்." பிரிக்ஸ் தந்துள்ள பிரிவுகளுக்கான பெயர்களை நான் நேரில் பேட்டி கண்ட தோடர் உடனே புரிந்து கொண்டனர். எனினும் தேர்த்தாள், தராதால் என்பனவே பெரும் பிரிவுகளுக்கு உரிய பெயர்கள் என அவர்கள் கூறினர். தேர்த்தாள் பிரிவைச் சேர்ந்த ஒருத்தி தேவளி மந்துவில் வாழும் தன் தோழியினைக் காணச் சென்றால் அவள் அந்த மந்துவினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டாள் எனவும் மந்துவுக்குச் சற்றுத் தொலைவிலேயே அவள் நின்றுவிட வேண்டிவரும் எனவும் அவர்கள் என்னிடம் கூறினர். தோடர் தங்கள் சோற்றுக்கான அரிசியினை மோரிலிட்டே சமைக்கின்றனர். தேர்த்தாள் பிரிவினைச் சேர்ந்த ஒருத்தி தேவளி மந்துக்கு வருகை தரின் அவளுக்காகத் தண்ணீரில் அரிசியினையிட்டு சமைப்பர். தேவளி பிரிவைச் சேர்ந்த ஒருத்தி தேர்த்தாள் மந்துவிற்கு வருவாளாயின் அவளை மந்துவினுள் நுழைய அனுமதிப்பதோடு அவளுக்கான சோற்றினை மோரில் சமைப்பர். தேர்த்தாள் பிரிவினைச் சேர்ந்த பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்குக் காரணமாக ஒரு நிகழ்ச்சியினைக் கூறுவர். ஒருமுறை தேர்த்தாள் மந்துவுக்கு வருகை புரிந்த தேவளி பெண் ஒரு துணியினை மடித்து அதனை அவளுடைய புத்துக்குளிக்குள் ஒரு குழந்தையைப் போல மறைத்துக் கொண்டாள். அவளுக்குச் சோறிடும்போது அவள் தன் குழந்தைக்கும் சோறிடுமாறு வேண்டினாள். அவ்வாறு சோற்றினைப் பெற்றவுடன் தன் கக்கத்திலிருந்த துணியினை எடுத்துக் காட்டினாள். இந்தச் சிறு வேடிக்கையினைத் தேர்த்தாள் பிரிவுப் பெண்களால் ரசிக்க முடியவில்லை. எனவே அவர்கள் தேவளி பிரிவுப் பெண்களை விலக்கி வைப்பது என முடிவு செய்தனர். "இவர்கள் சமூக அமைப்பின் அடிப்படை தேர்த்தாள், தேவளி (பிரீக்ஸ் குறிப்பிடும் தேய்வல்யாய்) என்ற இரண்டு தெளிவான பிரிவுகளைக் கொண்டனவாக உள்ளன. இந்த

இரு பிரிவினருக்குமெனத் தனித்த சிறப்புப் பணிகள் உள்ளன. தகுதியில் உயர்ந்ததான பூசாரிப் பொறுப்புக்களைத் தெய்வலியொல் பிரிவினரே மேற்கொள்கின்றனர். தேர்த்ததாள். தேவளி என்ற இரு பிரிவுகளும் தோடர்களின் அகமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகள். இந்தப் பெரும் பிரிவுகள் இரண்டும் பல குலங்களாக - உட்பிரிவுகளாக - மேலும் பிரிவு படுகின்றன. அவை புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்கள். ஒவ்வொரு குலப் பிரிவுக்குமெனத் தனியே சில கிராமங்கள் (மந்துகள்) உள்ளன. அவை அந்தப் பிரிவின் தலைவனின் (எடுத்து) பெயரைப் பெறுகின்றன. தேர்த்தாள் பிரிவு பன்னிரண்டு குலங்களாகவும் தேவளியர் பிரிவு ஆறு குலங்களாகவும் பிரிவுபட்டுள்ளன'' என முனைவர் ரிவர்ஸ் கூறுகின்றார்.

ஒரு சிறுமி பூப்படையும் பருவத்தை நெருங்கும்போது அவளுக்கு முதற்கட்டமாக ஒரு சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இதில் நல்ல உடல் வாய்ந்த தோடன் ஒருவன் பங்கு பெறுவான். பைகாரா பங்களாவில் இசைத்தட்டுக்களை ஒலிபரப்பும் நிகழ்ச்சியின்போது அத்தகைய உடற்கட்டு வாய்க்கப் பெற்ற ஒருவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

தோடரிடையே ஒருத்தி பல கணவர்களை உடையவளாயிருக்கும் வழக்கம் பற்றி முனைவர் ரிவர்ஸ் பின்வருமாறு எழுதுகின்றார்: ''நெடுங்காலமாகவே தோடரிடையே ஒருத்தி பலரை மணக்கும் வழக்கம் இருந்து வருகின்றது. இத்தகைய சமூக அமைப்பு முறை இவர்களிடையே இன்றும் பெருவழக்காகவே இருந்து வருகின்றது. சிறுமி ஒருத்தி சிறுவன் ஒருவனுக்கு மனைவியாகும்போது அதனை அவனுடைய உடன்பிறந்தவர்களுக்கும் ஒருங்கே அவள் மனைவியாவதாகவே வழக்கமாகக் கொள்கின்றனர். ஒருத்தியினுடைய கணவன்மார் உடன்பிறந்தவர்களாக இருப்பதே இன்றும் இதற்கு முந்தைய தலைமுறைகளிலும் பெருவழக்காக இருந்து வந்துள்ளது. சில சமயங்களில் அவர்கள் உடன்பிறந்தவர்களாக இல்லாதிருக்கலாம். அப்படியிருப்பின் அவர்கள் அனைவரும் ஒரே குலத்தவர்களாகவாவது இருப்பர். மிக அரிதாகவே அவர்கள் வேறு வேறு குலங்களைச் சேர்ந்தவர்களாக அமைவர். தோடரிடையேயான பல கணவரை உடையதாயிருக்கும் வழக்கத்தில் குழந்தையின் தந்தை யாரென முடிவு செய்வதில் தனித்ததொரு முறை பின்பற்றப்படுகிறது. கருவுற்றிருக்கும் ஒருத்திக்கு ஏழாம் மாதத்தில் நிகழ்த்தப்படும் சடங்கின்போது முக்கிய பொறுப்பு ஏற்பவனே அவளுக்குப் பிறக்க உள்ள குழந்தைக்கு சட்டப்படியும் சமூக வழக்கின் படியும் உரிய தந்தையாகக் கருதப்படுகின்றான். அச் சடங்கில்

வில், அம்பின் மாதிரி உருவங்கள் கருவுற்றவளிடம் தரப்படுகின்றன. ஒருத்தியின் கணவன்மார் அனைவரும் உடன்பிறந்தவர்களாக இருப்பின் அவர்களுள் மூத்தவனே அவளிடம் இந்த வில், அம்பினைத் தருவான். அவனே அவளுடைய குழந்தையின் தந்தையாகக் கருதப்படுவான், அவனோடு உடன்பிறந்த அனைவரும் கூட்டுக் குடும்பமாக ஒன்றாக வாழும்வரை அவனுடைய உடன்பிறந்தவர்களும் அந்தக் குழந்தைக்குத் தந்தையாகக் கருதப்படுவர். ஒருத்தியின் கணவன்மார் உடன்பிறந்தவர்களாக இல்லாதிருக்கும்போதே ஏழாம் மாதத்தில் நடத்தப்படும் வில், அம்பு தரும் சடங்கு சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அப்போது அவர்களுள் ஒருவன் அவளுக்குப் பிறக்க உள்ள குழந்தைக்குத் தந்தையாகக் கருதப்படுவதோடு மற்றொருவன் இச் சடங்கை நிகழ்த்தும்வரை அடுத்துப் பிறக்கக்கூடும் குழந்தைகளுக்கும் தந்தையாகக் கருதப்படுகின்றான். ஒருத்திக்கு வில், அம்பு தரும் சடங்கினை நிகழ்த்திய ஒருவன் இறந்து பல ஆண்டுகள் கழிந்த பின்பும் இடையில் அவளுக்கு வேறொருவன் அச் சடங்கினை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படாதிருப்பின் அவளுக்கு அடுத்தடுத்துப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வில், அம்பு சடங்கு நிகழ்த்திய இறந்துபோன கணவனே தந்தையாகக் கருதப்படுகின்றான். தோடரிடையே பல கணவரை மணக்கும் வழக்கத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது முன்பு இவர்களிடையே இருந்ததான பெண்ணாகப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்காகும். இன்று தங்களிடையே பெண்குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் இல்லையென இவர்கள் உறுதியாக மறுப்பினும் ஓரளவிற்கு அது இன்றும் வழக்கில் இருந்து வருவதாகவே தெரிகின்றது. முன்பு இருந்ததைக் காட்டிலும் இன்று பெண்கள் எண்ணிக்கையில் மிகுதியாகக் காணப்படினும் ஆண்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இவர்கள் குறைந்த எண்ணிக்கையினராகவே உள்ளனர். பெண்கள் எண்ணிக்கையில் மிக வாய்ப்பு ஏற்படும்போது பல கணவர்களை மணக்கும் இந்தப் பழக்கம் குறைந்து விடலாம் எனக் கூறுவதற்கில்லை. பல கணவரை மணக்கும் வழக்கோடு பல மனைவியரை உடையவனாயிருக்கும் வழக்கமும் இவர்களிடையே ஒருங்கே காணப்படுகிறது. அத்தகைய சமயங்களில் உடன்பிறந்தவர்களுள் ஒருவன் பல மனைவியருள் ஒருத்திக்கு வில், அம்பு தரும் சடங்கை நிகழ்த்தினால் மற்றொருவன் அடுத்தவளுக்கு அச்சடங்கை நடத்தும் முன்னுரிமை பெறுகின்றான்.''

மேலே கூறிய கருவுற்ற ஏழாம் மாதம் நடத்தப்படும் சடங்கு ஊர்வத்பிமி எனப்படுகிறது. நாம் வில், அம்பு தொடுதல் என்பன இதன் பொருள். இதுபற்றி

நான் பலரிடம் நேரில் விவரம் கேட்டறிந்தேன். கருவுற்றவள், கருவுற்ற ஐந்தாம் அல்லது ஏழாம் மாதம் மற்றத் தோடரினப் பெண்களுடன் ஒரு சோலைக்குச் சென்று அங்கு அவளுக்கு வில், அம்பு தந்து குழந்தையின் தந்தையாவதற்கு உரியவனோடு கூட ஒரு கையல் (*Eugenia Arnottiana*) மரத்தின் அருகே அமர்வாள். அவன் கருவுற்றிருப்பவளின் தந்தையிடம்தான் வில்லினைக் கொண்டு வரலாமா என அனுமதி கேட்பான். அவன் அனுமதி வழங்கியவுடன் வில் செய்வதற்கான குச்சியினை தரும் (*Sophora glauca*) புதர் செடியினைத் தேடிச் சென்று ஒரு குச்சியினை ஒடித்து ஒரு வில்லின் மாதிரியினைச் செய்வான். நார்க் (*Andropogon Schoenanthua*) எனப்படும் புல்லின் இதழே அம்பாகக் கொள்ளப்படும். இதற்கிடையே கையஸ் மரத்தில் முக்கோண வடிவமாக ஒரு குடைவினை ஏற்படுத்தி அதனுள் ஒரு விளக்கினை ஏற்றி வைப்பர். சடங்கிற்கு உள்ளாகின்றவள் அந்த விளக்கின் முன் அமர்வாள். அப்பொழுது வில்லோடு திரும்பி வந்து சேருபவனிடம் அவள், "இது யாருடைய வில்?" என்றோ "இது என்ன?" என்றோ கேட்பாள். எனக்குப் பிறக்கப் போகும் குழந்தை எந்த மந்துக்குரியது எனப் பொருள்படுவது இக் கேள்வி. அவள் அந்த வில்லையும் அம்பையும் அவளிடம் தருவான். அவள் அவற்றைத் தன் தலைக்கு உயர்த்தி அவற்றால் தன் நெற்றியைத் தொட்டபின் அவற்றை அந்த மரத்தருகே வைப்பாள். அப்போதிருந்து அவளுக்குப் பிறக்கவுள்ள குழந்தைக்கு வில், அம்பு தந்தவனே முறைப்படியான தந்தையாகக் கருதப்படுவான். அவன் அந்த மரத்தின் பக்கத்தில் தரையில் கொஞ்சம் அரிசி, பிற தானியங்கள், மிளகாய், வெல்லம், உப்பு முடியப்பட்ட ஒரு துணி ஆகியனவற்றை வைப்பான். அந்தப் பெண்ணையும் ஆணையும் தவிர மற்ற அனைவரும் அவ்விடத்தை விட்டு அகல்வர். அவ்விருவரும் அன்று மாலை ஆறு மணிவரை அந்த மரத்தருகிலேயே தங்கியிருந்தபின் மந்துக்குத் திரும்புவர். உதகமண்டலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அந்திமல்லி (*Onothera tetraptera*) என்ற மலரின் அரும்புகள் மலர்வதை வைத்தே நேரத்தைக் கணக்கிடுகின்றனர். தோடர் குடியிருப்புகளில் இதனை ஆறு மணிப் பூவு என்பர். மாலையில் மலரும் இதனை நான் பைகாரா பங்களாவின் முன் உள்ள புல்வெளியில் பார்த்துள்ளேன். ஒருவனுக்கு நடத்தப்படும் இரண்டாம் சாவுச் சடங்கின்போது ஒரு வில்லின் மாதிரியும் மூன்று அம்புகளும் கல்வளைவுக்குள் பிற பொருள்களோடு எரிக்கப்படுவதையும் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் (*1902-இல்*) மலபார் திருமணச் சட்ட வரைவினை ஒத்த ஒரு சட்ட வரைவின் வழித் தங்கள் திருமணங்களையும்

சட்டப்படி செல்லத் தக்கதாக ஆக்கச் சட்டம் இயற்ற வேண்டும் எனத் தோடர் அரசிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். அரசு இதற்கெனத் தனியே சட்டம் வேண்டியதில்லை எனக் கருதியதோடு தங்கள் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாக்க விரும்பும் தோடர் *1872*-ஆம் ஆண்டு மூன்றாம் திருமணச் சட்டத்தின் *10*-ஆம் பிரிவின் படியான ஒப்புதல் ஒன்றில் கையொப்பமிட்டுத் தங்கள் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாக்கிக் கொள்ளலாம் என அறிவித்ததோடு நீலகிரி கருவூலத்தின் உதவி ஆட்சியரைத் தோடர் திருமணங்களுக்கான பதிவாளராகவும் நியமித்தது. இன்றுவரை தோடர் எவரும் தங்கள் மணத்தைப் பதிவு செய்து கொள்ளவில்லை.

கர்னல் மார்ஷலுக்கு* வயதான தோடன் ஒருவன் தந்த தகவல்களின்படி தோடரிடையேயான பிறந்த குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் பற்றித் தெரிய வருவதாவது: "நீலகிரிக்கு முதன்முதல் வந்த ஆங்கிலேயரான சலிவனின் வருகையின்போது நான் சிறுவனாக இருந்தேன். அப்போது குழந்தை பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்கம் இருந்தது. அந்த வழக்கம் மறைந்து நெடுங்காலமாகிவிட்டது. இன்று அது பற்றி கேள்விப்படக்கூட முடியாது. இவ்வாறு குழந்தைகளைக் கொல்வது தவறா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இன்று குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரே புத்துக்குளிதான் உண்டு. நாங்கள் தெய்வம் எதனையும் திருப்திப்படுத்தக் குழந்தைகளைக் கொல்லவில்லை. தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் வழக்கமில்லை. பெற்றோரே குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் இல்லை. நாங்கள் எங்கள் கைப்பட அத்தகைய கொலையைச் செய்வோம் என நீங்கள் நினைக்கிறீர்களா? எருமைப்பட்டியின் திறப்பின் முன்னால் எருமைகள் மிதித்துச் செல்லும்படியாக நாங்கள் குழந்தைகளை வைத்துக் கொன்று விடுவோம் எனச் சொல்பவர்கள் பொய் சொல்கின்றார்கள். நாங்கள் அதுபோல எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. குழந்தைகளை நாங்கள் எருமைப்பாலில் அமுக்கிக் கொன்று விடுகின்றோம் என்பதும் முட்டாள்தனமாகக் கூறுவதாகும். ஆண் குழந்தைகள் ஒருபோதும் கொல்லப்படுவதில்லை. பெண் குழந்தைகளே கொல்லப்படுகின்றனர். நோயுற்றவர்களாகவும் உடற்குறையுள்ளவர்களாகவும் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொல்வதில்லை. அவ்வாறு கொல்வது பாவச் செயலாகும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை இருக்குமானால் அல்லது சில குடும்பங்களில் இரண்டு பெண் குழந்தைகள் இருக்கும்போது

---

* முந்து நூல் (Op.Cit.)

...ந்தும் பெண்ணாகவே பிறந்தால் அதனையே கொல்கின்றனர். அக் குழந்தை பிறந்தவுடன் ஒரு முதியவள் (கெலச்சி) உடனே அக்குழந்தையினை எடுத்துச் சென்று அதன் மூக்கு, காது, வாய் ஆகியனவற்றை ஒரு துணியால் - அவன் சைகை மூலம் அவள் செய்யும் செயலைச் செய்து காட்டினான். உடனே அது தலையை தொங்கவிட்டுக்கொண்டு கண்களை மூடிவிடும். உடனே நாங்கள் அதனைப் புதைப்போம். இதனைச் செய்யும் கெலச்சி அதற்கான கட்டணமாக நான்கணாப் பெறுவாள்." மிக வயதானவனான இவன் குறிப்பிட்ட எருமைப் பட்டியின் முகப்பில் குழந்தையைக் கிடத்திக் கொல்வது மலகாசியரிடையேயான வழக்காகும். அவர்கள் பிறந்த ஒரு குழந்தையினைக் கால்நடைகளை வெளியே ஓட்டும் பட்டியின் முகப்பில் கிடத்தி அக் குழந்தை மிதிபட்டுச் சாகின்றதா எனப் பார்ப்பர்*. கிறித்தவ சமயப் பணியாளரான மேட்ஜ் தோடர் சமூகத்தவர் குழந்தைகளை மூச்சுத் திணறச் செய்து கொல்கின்றனர் என்பதனை உறுதி செய்கின்றார்.**

1901-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்போது *453* ஆண்களும் *354* பெண்களும் தோடர் இனத்தவர் எனப் பதியப்பட்டுள்ளனர். தோடரிடையேயான ஆண், பெண் விகிதம் பற்றித் திரு ஆர்.சி. புன்னெட் கூறியுள்ளதாவது:*** "தோடர்கள் பற்றி ஆய்வு மேற்கொண்ட அனைவரும் முன்பு அவர்களிடையே குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் இருந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். *1872*-இல் மார்க்ஷல் அதற்கு முந்தைய ஆண்டுகளில் பெண் குழந்தைகள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரே காலப் போக்கில் இந்த வழக்கம் மறைந்து வந்து இப்போது முழுவதும் இல்லாததாக ஆகிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். தோடர் சிலர் கூறியதன் அடிப்படையிலேயே மார்க்ஷல் தன்னுடைய முடிவுகளை மேற்கொண்டுள்ளார். மார்க்ஷல் போன்றே தோடர் வாய்மொழியாகச் செய்திகளைக் கேட்டறிந்த முனைவர் ரிவர்ஸ் குழந்தைகள் கொலை பற்றி அவர்கள் சொல்வதை அப்படியே நம்பவில்லை. குழந்தைகளின் கொலையினைத் தடுக்கும் முயற்சிக்கு இந்திய

---

* எல்லீஸ் - மடகாஸ்கர் வரலாறு (Ellis-History of Madagascar.)

** நீலகிரி வாழ் பழங்குடி இனத்தவர் - ஒரு செர்மன் கிறித்தவ சமயப் பணியாளர். (Tribes in habiting the Neilgherry Hills. Bys German Missionary, 1856).

*** கேம்பிரிட்ஜ் தத்துவக் கழக நடவடிக்கைகள், XII, 1904. (Proc.Cambridge. Soc. XII, 1904.)

அரசின் ஒத்துழைப்பு இல்லாத நிலையில் அவர் குழந்தைகளின் கொலை அடியோடு ஒழிந்து விட்டது எனக் கொள்ள முடியாது எனக் கருதுவது சரியானதேயாம். தோடரிடையே ஆண் பெண்களுக்கு இடையேயான எண்ணிக்கையில் உள்ள மிகுதியான வேறுபாடு பெண் குழந்தைகள் கொலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதனைக் கருத்தில் கொள்ளும்போதுதான் பிற இனத்தவர்களோடு இவர்களும் ஒருங்கு இயைந்த வகையில் எண்ணிக்கையுடையவர்களாக உள்ளனர் என்ற முடிவினை உறுதிப்படுத்துவதாகின்றது." திரு புன்னெட் தன்னுடைய முடிவுகளாகக் கண்டு கூறுவன வருமாறு:

1. தோடரிடையே ஆண்கள் பெண்களைவிட எண்ணிக்கையில் மிகுதியானவர்களாக உள்ளனர்.
2. இந்த வேறுபாட்டுக்குக் காரணம் பெண் குழந்தைகள் கொலைக்கு உள்ளாக்கப்படுவதுதான் என்பதில் ஐயமில்லை. இப் பழக்கம் இவர்களிடையே இன்னமும் ஓரளவு இருந்து வருகின்றது.
3. ஆண்களின் மிகுதியான எண்ணிக்கையிலான இந்த வேறுபாடு சென்ற சில ஆண்டுகளாகக் குறைந்துள்ளது. பெண் குழந்தைகளைக் கொல்லும் வழக்கத்திற்கு எதிராக வெளியார் இவர்களிடையே மேற்கொண்ட சமூகப் பணியே இதற்குக் காரணமாகலாம்.

தோடரின் சாவுச் சடங்குகள் தொடர்பாக முனைவர் ரிவர்ஸ் குறிப்பிடுவதாவது: ஒருவன் இறந்தவுடன் அவன் உடல் எரிக்கப்பட்டு விடுகின்றது. இந்தச் சடங்கு எட்வைனோள் கெத்ர் எனப்படும். முதல்நாள் சடங்கு என்பது இதன் பொருள். சில நாட்கள் இடைவெளிக்குப் பின் - இது மிக நீண்ட இடைவெளியாகக் கூட இருக்கலாம். இரண்டாவதாக ஒரு சடங்கு நிகழ்த்துகின்றனர். இறந்து போனவனை முதல் சடங்கின்போது எரித்தபின் அவனுடைய எஞ்சியுள்ள பொருள்கள் சிலவற்றைப் பாதுகாக்கின்றனர். இந்தச் சடங்கு மர்வைனோள்கெதர் எனப்படும். மறுபடியும் செய்யப்படும் சடங்கு என்பது இதன் பொருள். இத்தகைய சாவுச் சடங்குகளில் தோடர் அனைவரும் கலந்து கொள்ளலாம் என்பதோடு வெளியாரையும் கலந்து கொள்ளும்படி அழைக்கின்றனர். இதனால் இவர்களுடைய சாவுச் சடங்குகள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தும் அறியப்பட்டிருப்பதோடு வெளியார் பலர் இவற்றைப் பற்றி விரிவாகவும் எழுதியுள்ளனர். தோடரின் பிற சமூகப் பழக்கவழக்கங்கள் படகர் மொழிச் சொற்களால் வழங்கப்படுவதைப் போலச் சாவுச் சடங்குகள் தொடர்பான பெயர்களும் படகர் மொழி வழக்கின் வழிப்பட்டனவாகவே உள்ளன.

முதல் சடங்கினைப் படகர் ஹெறசெ கெது (பச்சைச் சடங்கு) என்கின்றனர். இதன் அடிப்படையில் ஐரோப்பியர் இதனை (Green funeral) எனக் கூறத் தலைப்பட்டுள்ளனர். மனித இன இயல் கட்டுரைகளிலும் இச்சொல்லே இடம்பெற்றுள்ளது. இரண்டாவது சடங்கைப் படகர் "பரகெது" என்பர். இது வறண்ட சடங்கு எனப்பொருள்படும். இதனையும் dry funeral என ஆய்வாளர்கள் அப்படியே மொழிபெயர்த்துப் பயன்படுத்தி வருகின்றனர். பலவகைச் சாவுச் சடங்குகள் பற்றியும் முனைவர் ரிவர்ஸ் மிக விரிவாக விளக்கியுள்ளாராகையால் நான் நேரில் பங்கு கொண்டு கண்ட சடங்குகளைப் பற்றி மட்டும் இங்கு கூறலாம் எனக் கருதுகின்றேன்.

இரண்டு திங்கள்களுக்கு முன்பு பெரியம்மை வந்து இறந்துபோன ஒருத்தியின் இரண்டாம் சாவுச் சடங்கினை நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. உதகமண்டலத்திலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள வெட்ட வெளியான பள்ளத்தாக்கினை அடுத்திருந்த ஒரு அடர்ந்த சோலையின் விளம்பிற்கு எங்களைத் தோடர் வழிகாட்டி அழைத்துச் சென்றான். அங்கு இரண்டு குழுவினராகத் தோடர் அமர்ந்திருப்பதைக் கண்டேன். ஒரு குழுவில் பெண்கள், சிறுமியர், செம்பட்டைத் தலைமுடியோடு கூடிய பெண் குழந்தைகள் ஆகியோர் நெருப்பைச் சுற்றி அமர்ந்து தீக் காய்ந்து கொண்டிருந்தனர். மற்றொரு குழுவில் ஆண்கள், சிறுவர்கள்; தந்தையர் மடியில் ஆண் குழந்தைகள் ஆகியோர் இருந்தனர். சில நொடி நேரத்தில பெண்கள் குழுவிலிருந்து ஒரு முணுமுணுப்பு ஓசை கிளம்பியது. பின் சில பெண்கள் வாய்விட்டு உரக்கவே அழத் தொடங்கினர். பின் அக் குழுவிலிருந்த அனைவருமே அவர்களோடு கூடச் சேர்ந்து அழுது அரற்றத் தொடங்கினர். மிகச் சிறுமியராக இருந்தவர்களும் குழந்தைகளும் தவிர மற்றவர்கள் துக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். பெண்களுள் சிலர் உண்மையில் துக்கப்பட்டவர்களாக அழுதனர். சிலர் கடனுக்கு அழுதனர். வழக்கப்படி துக்கங் கொண்டாடப் பெண்கள் முதலில் அழுது அரற்றவேண்டும் என்பது விதி. பின் துக்கம் மேலிட்டு அவர்கள் இருவர் இருவராக இணையாகச் சேர்ந்து ஒருவர் தலையோடு மற்றவர் தலையினை இணைத்துக் கொண்டே இணைந்த குரலில் ஓலமிட்டு அழுதனர். இவ்வாறு இணைந்தவர்கள் பிரிந்து வேறொருத்தியோடு மீண்டும் இணைந்து அழச் செல்லுமுன் தலை தாழ்த்தி வணங்கியும் புத்துக்குளியால் மூடப்பட்டிருக்கும் மற்றவர் காலினை மேலே தூக்கியும் மரியாதை தெரிவித்தபின் பிரிந்தனர். (இவ்வாறு துக்கம் மேலிட்டு அழும் பெண்கள் சடுதியில் தங்கள் துக்கத்திலிருந்து விடுபட்டவர்களாகக் காசுகேட்டு

கெஞ்சுவதையும் நான் கண்டேன்). அவ்வப்போது தூரத்திலுள்ள மந்துகளிலிருந்து வருபவர்கள் துக்கங்கொண்டாடுபவர்களோடு புதியதாக இணை சேர்ந்தபடி இருந்தனர். ஆண்களும் பெண்களும் குழுக் குழுவாக மலைச் சரிவில் தூர வருவதைப் பார்க்கும்போது ஸ்காட்லாந்து தேசத்து மேட்டு நிலத்து மூர்களைப் பற்றிய நினைவு அனைவருக்கும் தோன்றவே செய்யும். நான்கு கோத்தர்கள் சேர்ந்த குழுவினர் குழலிசைத்தும் முழவடித்தும் செய்யும் ஆரவாரம் அந்த ஒற்றுமையினை மேலும் இணையுடையதாகத் தோன்றச் செய்தது. இசைக் குழுவினர் அங்கு வந்து சேர்ந்தவுடன் அழுதரற்றும் பெண்களுக்கு அருகே சென்று கூடி நின்று இசை இசைத்தனர். துக்கம் விசாரிக்க ஒவ்வொரு குழுவினர் வந்து சேரும்போதும் பெண்கள் அக் குழுவில் இடம்பெற்றிருக்கும் தங்கள் உறவினர்களை அடையாளங்கண்டு கொண்டவர்களாக முன்னே சென்று தோடருக்கு உரிய வழக்கப்படி அவர்கள் காலடியில் தாழ்ந்து பணிந்து முதலில் அவர்கள் வலது காலையும் பின் இடதுகாலையும் எடுத்துத் தங்கள் தலையில் வைத்துக் கொண்டனர். இசைக் குழுவினர் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கூடியுள்ளவர்களும் தூரத்தே சற்று தொலைவில் நின்று கொண்டிருக்கும் சில ஆண்களும் தங்கள் புத்துக்குளியினை ஆட்டி சைகைகளைத் தெரிவித்துக் கொண்டனர். பின் அனனைவரும் ஊர்வலமாகச் செல்ல வரிசையாக நிற்க ஏற்பாடு செய்யப்பட்டது. வரிசையில் ஆண்கள் முன்னும் இசைக் குழுவினர் நடுவிலும் பெண்கள் இறுதியிலுமாக இருக்கும்படியாக ஒழுங்குப்படுத்தப்பட்டனர். சோலைக்குள் நுழையும் குறுகலான பாதைக்கு எதிரே ஊர்வலத்தினர் சற்றே காலம் தாழ்த்தினர். அங்கு ஆண்களும் பெண்களும் முன்பு போலவே தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து அமர்ந்தனர். இசைக் குழுவினர் துக்க இசையினை இசைத்தபடி அவர்களைச் சுற்றி வந்தனர். சிறுமியர் சிலர் முன்பு அனைவரும் குழுமி உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சடங்கிற்கான நெருப்பினை எடுத்துவர மீண்டும் அங்குச் சென்றனர். அந்த முயற்சி வெற்றி தராததால் அவர்கள் எங்களுள் ஒருவர் தந்த நெருப்புப் பெட்டியினையே இறுதியில் நெருப்பு மூட்டப் பயன்படுத்தினர். இச் சமயம் பெண் ஒருத்தி பிற ஆண்களிலிருந்து தனியே பிரிந்து அமர்ந்திருந்த இறந்து போனவளுடைய மகனை நெருங்கினாள். அவனுக்கு அவள் எவ்வளவு ஆறுதல் கூறியபோதிலும் அவன் ஆறுதலடையாது அழுதபடி இருந்தான். சோலைக்குளிலிருந்து அமைப்பு வந்ததும் கூடியுள்ள தோடர் ஆண்களும் நாங்களும் ஒரு குறுகலான தடத்தில் நடந்து சென்று ஒரு பெரிய மரத்தைச் சுற்றியிருந்த வெட்ட வெளியில் கூடினோம். அந்த மரத்தில் அடிமரத்தில் குடையப்பட்ட துளையிலிருந்து இறந்து போனவளுடைய தலைமுடியால்

சுற்றப்பட்ட அவள் மண்டையோட்டின் ஒரு பகுதியினை எடுத்துக் காட்டினான். இப்பொழுது அழுது அரற்ற வேண்டியது ஆண்களுடைய முறை. அவர்கள் அனைவரும் ஒரு சேர அழுது தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தினர். அழுகுரலுக்கிடையே மண்டையோடைச் சுற்றியுள்ள மயிரை மெல்லப் பிரித்து ஒரு இரும்பு அகப்பையிலிட்டு எரித்தனர். அதிலிருந்து ஒருவகையான நறுமணம் பரவியது. ஒரு மூங்கில் குழாயில் நெய் கொண்டு வரப்பட்டு அந்த நெய்யினைப் பயபக்தியுடன் அந்த மண்டையோட்டில் தடவினர். பின் அதனைத் தரையில் விரித்திருந்த ஒரு துணி மீது வைத்தனர். இறந்தவரின் நினைவுச் சின்னமாக உள்ள இதன் முன் அங்குக் கூடியிருந்த ஆண்கள் மிகுந்த பரபரப்புடன் தரையில் தங்கள் தலைபடும்படியாகக் குனிந்து வணங்கினர். இந்தச் சமயத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகளைக் காண நெருங்கிய உறவினரான ஒரிரு பெண்கள் தவிரப் பிற பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. சடங்குகள் முடிந்தவுடன் அந்த மண்டையோட்டைத் துணியில் சுற்றி வெட்ட வெளியான இடத்தில் கொண்டு வந்து வைத்தனர். ஆண்களும் சிறுவர்களும் முதலில் அதற்கு வணக்கம் செலுத்தினர். மீண்டும் அனைவரும் ஊர்வலமாகச் செல்ல ஒருங்கு திரண்டனர். அந்த ஊர்வலம் பெரியதும் சிறியதுமான கல் வைத்துச் சுவரெழுப்பப்பட்ட எருமைகள் அடைக்கும் இரண்டு பட்டிகள் உள்ள இடத்தை அடைந்தது. பெரிய பட்டியினைப் பெண்கள் சுற்றிச் சூழ்ந்து நின்றனர். ஆண்கள் ஒருவரோடு ஒருவர் கதை பேசியபடியிருக்கப் பெண்கள் துக்கம் மேலிட்டவர்களாக அழுதனர். சிறிது நேரத்திற்குப் பின் அவர்களும் அழுகை ஓய்ந்தவர்களாக ஒருவரோடு ஒருவர் பேசத் தொடங்கினர். துணியால் சுற்றப்பட்டிருக்கும் மண்டையோட்டை எடுத்தபடி சில ஆண்கள் இறந்துபோன பல தோடர்களுக்கு கேது கொண்டாடியபடி உள்ள சோலையினை அடைந்தனர். அதன்பின் சிறிது நேரம் அமைதி நிலவியது. அந்தச் சோலையில் சாவுச் சடங்கினை மேற்கொண்ட தோடர் குழுவினர் பல வரிசைகளில் தங்கள் கைகளைக் கோத்தபடி "ஐயையோ" என ஒரே சீராக அரற்றியபடி வந்தனர். அக் குழுவினர் ஒரு பெண், இரண்டு ஆண்கள் ஆகியோருடைய மண்டையோடுகளைத் துணியில் சுற்றி எடுத்து வந்தனர். அவை தரையில் வைக்கப்பட்டன. கூடியுள்ள அனைவரும் வழக்கப்படி அவற்றுக்கு வணக்கம் செலுத்தினர். இச் சமயத்தில் கோத்தர்களின் சிறு குழு ஒன்று அருகே இருந்த குன்றின்மீது அங்குப் பலியிடப்பட இருக்கும் எருமையின் இறைச்சியினைப் பெறுவதற்காகக் கழுகுபோல மூக்கில் வியர்த்தவர்களாக வந்து நிற்கலாயினர். சில இளைஞர்கள் அங்கிருந்து பக்கத்திலிருந்த குன்றை நோக்கி எருமைகளை ஓட்டிவரச் சென்றனர். பின் அவர்கள் கோல்களால்

ஐந்து எருமைகளை விரட்டி ஒட்டியவர்களாக அங்கு வந்து அந்த குன்றின்மேல் ஆண்கள் கூடியிருக்கும் குன்றின் அடிவாரத்தில் சேறும் சகதியுமாக உள்ள இடத்தினை அந்த எருமைகள் வந்து அடைந்தவுடன் நல்ல உடல்வாகு வாய்க்கப் பெற்ற இரண்டு இளைஞர்கள் தங்கள் அணிந்திருக்கும் புத்துகுளியினைக் களைந்து எறிந்துவிட்டுக் குன்றின் உச்சியிலிருந்து பாய்ந்தோடி வந்து அந்த எருமைகளைக் கொம்புகளைப் பற்றி வீழ்த்தப் பார்த்தனர். அவர்களுள் ஒருவன் இம் முயற்சியில் கீழே விழவேண்டிதாயிற்று. அவன் பற்ற முயன்ற எருமை தப்பி ஓடியது. எஞ்சியுள்ள நான்கு எருமைகளுள் ஒன்றினைத் தங்கள் கைகளை இணைத்துக் கோத்தபடி கொம்பினைப் பற்றிப் போராடியவர்களாக முன்னங் கால்களை ஊன்றி மண்டியிடச் செய்தனர். அந்தக் கடாப் கன்று மிகுந்த எதிர்ப்பைக் காட்டியபோதிலும் அவர்கள் அதனைக் கழிகளால் தாக்கிக் குன்றின்மீது இழுத்துச் சென்றனர். கோத்தர் இசைக் குழு அதன் முன்னே செல்ல ஒருவன் அதன் வாலினை முறுக்கியபடி பின்னால் சென்றான். இரண்டு பட்டிமங்களுக்கும் இடையில் உள்ள வெற்றிடத்தை அடையும்போது முழுவதும் வலிமை குன்றி விட்ட அந்த எருமையின் மூக்கிலிருந்து குருதி கொட்டியது. அதன் முதுகில் ஒரு துணியினை இட்டனர். நல்ல இளமையும் உடற்கட்டும் வாய்க்கப் பெற்ற ஓர் இளைஞன் கோடரியால் அதன் தலையில் ஓங்கி வெட்ட அது இறந்து வீழ்ந்தது. இச் சமயம் எருமைப் பலியின் போது யாருக்கும் பெரிதாகக் காயம் ஏதும் படவில்லை. ஒருவன் மட்டும் தொடக்கத்தில் நிகழ்த்திய போராட்டத்திற்குப் பின் தேங்கியிருந்த குட்டை நீரில் தன் கால்களைக் கழுவியபடி இருக்கக் கண்டேன். கர்னல் ராஸ் கிங் எருமை தன் கொம்பினால் கழுத்தில் குத்தியபோது ஒருவன் தோள்பட்டை எலும்பிலிருந்து காதுவரை கிழிபட்டுப் பெருங்காயம் அடைந்ததைத் தான் கண்டதாகக் குறித்துள்ளார். எருமைப் பலி யோடு இந்த விசித்திரமான சாவுச் சடங்கு ஒரு முடிவுக்கு வந்தது. குழந்தைகள் உட்பட ஆண்களும் பெண்களும் முண்டியடித்துக் கொண்டு அந்த எருமையினை நெருங்கி அதன் கொம்புகளுக்கிடையே தங்கள் கரங்களை வைத்துத் தங்கள் வணக்கத்தை அதற்குத் தெரிவித்தனர். அப்போது அவர்கள் இணை இணையாக அழுது அரற்றியபடிங்கு வந்தனர். முகத்தில் சோகத்தை வரவழைத்துக் கொண்டவர்களாகக் காட்சிதரினும் அவர்கள் கண்களில் கண்ணீர் இயல்பாகப் பெருகி வழியவில்லை.

இறந்தவன் எச்சமாக எஞ்சியுள்ளவற்றை இறுதியாக எரித்து அந்தச் சாம்பலை அசரம் எனப்படும் வட்டக் கற்களிடையே புதைக்கும் சடங்கினை முனைவர் ரிவர்ஸ் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

மேலே நான் விளக்கியுள்ள சடங்கில் பங்கு பெற்றதற்கு சில நாள்கள் சென்றபின் பெரியம்மை வந்து ஐந்து நாள்களுக்கு முன் இறந்த ஒரு சிறுமியின் சாவுச் சடங்கில் பங்குபெற வரும்படி என்னை அழைத்தனர். அதனை ஏற்று முந்தைய சடங்கு நடைபெற்ற இடத்திற்குச் சென்று சேர்ந்த நான் பக்கத்து மந்துகளிலிருந்தும் வந்துள்ள சில தோடருடன் பாடையில் பிணத்தை எடுத்து வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். கோத்தரின் பேரிரைச்சலோடு கூடிய இசை அதன் வருகையினை அறிவித்தது. ஊர்வலம் மெல்லக் குன்றின் விளிம்பினை வந்தடைந்தது. ஏணியினை ஒத்த பரும்போக்கான பாடையில் வைக்கப்ப்டடிருந்த பிணத்தினை ஒரு துணியால் போர்த்திருந்தனர். பாடையினை நால்வர் தோளில் சுமந்து வர அதன்பின் இரண்டு கோத்தர்கள் இசை இசைத்தபடி வந்தனர். அந்தச் சிறுமியின் அன்னையினை ஒரு கோணியில் மறைத்துத் தூக்கி வந்தனர். அரிசி, வெல்லம் ஆகியவற்றை உறவினர்கள் மூட்டைகளில் உடன் சுமந்து சென்றனர். கியஸ் மரவிறகின் கட்டுகளைச் சிலர் சிதைக்காக உடன் எடுத்து வந்தனர். இச் சடங்கிற்காக அமைக்கப்பட்டிருந்த ஒரு சிறு குடிசையின் எதிரே வந்து சேர்ந்ததும் பிணத்தைப் பாடையிலிருந்து எடுத்துக் குடிசைக்கு வெளியே தரையில் மல்லாக்காகக் கிடத்தினர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் முந்தைய சடங்கு நிகழ்ச்சியின்போது போலவே துக்கம் மிக்கவர்களாகப் பிணத்திற்கு வணக்கம் செலுத்தினர். அதன்பின் ஆண்கள் சற்றுத் தொலைவில் சென்று ஒருவரோடு ஒருவர் உரையாடலில் ஈடுபட்டனர். பெண்கள் தொடர்ந்து பிணத்தைச் சற்றி நின்று அழுதவர்களாக இருந்தனர். இடையிடையே தூரத்து மந்துகளிலிருந்து வந்தவர்கள் நேரே பிணத்தை நெருங்கி மரியாதை செலுத்தக் கண்டேன். இதற்கிடையே இறந்த குழந்தையின் நெருங்கிய உறவினளான ஒருத்தி குடிசைக்குள் ஒரு கூடையில் கொஞ்சம் அரிசி, வெல்லம், கூந்தல் பனை, தேன் கூடு, இறந்த குழந்தையின் விளையாட்டுப் பொம்மைகள் ஆகியனவற்றைப் பிணத்தை எரிக்கும்போது உடன் எரிப்பதற்காகச் சேகரித்தபடி இருந்தாள். சற்றுநேரம் சென்றபின் அழுகை ஓய்ந்தது. பிணத்தைப் பின்னர் குடிசைக்குள் கொண்டு சேர்த்தனர். நெருங்கிய உறவினர்களும் பிணத்தோடு கூடக் குடிசைக்குள் சென்று தொடர்ந்து அழுதனர். பலியிடுவதற்கான எருமைகளைத் தேடிச் சென்றிருந்த ஆண்களும் சிறுவர்களும் அடங்கிய ஒரு குழு இப்போது மூன்று எருமைகளைத் தங்கள் முன் ஒட்டியபடி திரும்ப வந்து கொண்டிருந்தது. அந்த எருமைகள் தப்பியோடி மந்தையோடு சேர்ந்து கொண்டமையால் மீண்டும் அவற்றைத் தேடிப் பிடித்துவர வேண்டியதாயிற்று. அடுத்து நெடுநேரம் அமைதி நிலவியது. மேலும் மூன்று

எருமைகளைச் சேற்றுப் பள்ளத்தில் கொண்டு சேர்த்தனர். அவற்றுள் ஒன்றினைக் கொம்புகளைப் பற்றி வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து அந்தக் குடிசையின் முன் நிறுத்தினர். கோத்தர் அதனுடன் முழவும் குழலும் இசைத்தபடி வந்தனர். அதன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டதில் அது இறந்தது. பின்னர் பிணத்தைக் குடிசையிலிருந்து வெளியே கொண்டுவந்து அதன் பாதங்கள் அந்த எருமையின் நெற்றியின் மீது இருக்கும்படியாக மல்லாக்காகக் கிடத்தினர். அந்த எருமையின் கழுத்தில் ஒரு வெள்ளிச் சங்கலியை அணிவித்தனர். அதன் கொம்புகளுக்கு வெண்ணெய் பூசப்பட்டது. அடுத்து அனைவரும் துக்கம் பீறிட்டவர்களாக அழுது புலம்ப அந்தச் சந்தடியில் இறந்த குழந்தையின் அன்னை மயக்கமுற்று வீழ்ந்தாள். இவ்வாறு அழுது முடித்தபின் ஒருத்தி முதன்முதல் கருவுறும்போது நடத்தப்படுவதை ஒத்த ஒரு சடங்கினைப் பிணத்திற்கு நிகழ்த்தினர். இறந்துபோன சிறுமியின் உறவினர்களிடையே இருந்து மூன்று வயதுச் சிறுவன் ஒருவனைத் தேர்ந்தெடுத்தனர். அச் சிறுவனை அவன் தந்தை அழைத்துச் சென்று கண்ணம்புல்லையும் (*Andropogon Schoenanthus*) சொபொர கிளாபுசா (*Sophora glauca*) செடியின் இலைக் கொத்தினையும் பிணம் உள்ள இடத்திற்குக் கொண்டு வந்தான். இறந்துபோன குழந்தையின் தாயார் அக் குழந்தையின் கை ஒன்றினைப் புத்துக்குளியிக்கு வெளியே எடுத்துவிட்டாள். அந்தச் சிறுவன் தான் கொண்டு வந்த புல்லையும் இலைக் கொத்தியும் அக் கையில் வைத்தான். எலுமிச்சை, வாழைப்பழம், அரிசி, வெல்லம், தேனடை, வெண்ணெய் ஆகியன புத்துக்குளியில் உள்ள பையில் வைக்கப்பட்டபின் அந்தப் பையினை ஊசி நூல் கொண்டு வட்டவடிவில் தையல் அமைபுமாறு தைத்தனர். அந்தச் சிறுவனின் தந்தை பின் அவனுடைய புத்துக்குளியினைக் கழற்றி அதனை அவன் தலை முதல் பாதம் வரை மூடும்படியாக மாற்றி மீண்டும் அவனுக்கே அணிவித்தான். இவ்வாறு புத்துக்குளியலால் போர்த்தப்பட்ட அவன் மறுநாள் காலைவரை அந்தக் குடிசையின் வாயிலேயே காத்திருக்க வேண்டும். அவனுடைய நெருங்கிய உறவினர்களும் அவனுக்கு மணமகளாக ஆன இறந்துபோன சிறுமியினுடைய உறவினர்களும் அவனுக்குத் துணையாக விடிய விடிய அங்கே காத்திருப்பர். (மணம் முடிக்கப்படாத ஒரு சிறுவனுடைய சாவுச் சடங்கில் இதே போன்று ஒரு சிறுமியினை தேர்ந்தெடுத்து அவனைத் தலைமுதல் பாதம்வரை புத்துக்குளியால் போத்தி வைப்பர். மறுநாள் சிதையில் வைத்து எரிக்கப்படுவதற்குரியதான பித்தளைப் பாத்திரம் ஒன்றில் போட்டு வைக்கப்பட்டுள்ள வெல்லம், அரிசி முதலியனவும் அவளுடைய புத்துக்குளி மடிப்பில் வைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு தன்னைப் போர்த்தியவளாக அச்

சிறுமி உறவினர்களின் காவலோடு கூட இறந்துபோன சிறுவன் பிணம் கிடக்கும் குடிசை வாசலில் காத்து நிற்பாள். இதுபோன்ற சடங்கு திருமணமானபின் பிள்ளைப் பெறாமல் இறந்துபோகும் ஒருத்திக்காகவும் நிகழ்த்தப்படும். அச் சடங்கில் அவளுடைய கணவன் மேற்கூறிய சிறுவனையும் சிறுமியையும் போலச் சடங்கில் பங்குபெற்றவனாகத் தன் மனைவி அவள் சென்று சேரும் சொர்க்கத்தில் பிள்ளையைப் பெறுவாள் என்ற நம்பிக்கையோடு காத்திருப்பான்). அந்தப் பிணத்தைச் சோலையினுள் உள்ள சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர். அந்தச் சிறுமிக்கு மணம் செய்விக்கப்பட்ட சிறுவனின் அன்னை அந்தப் பிணத்தின் தலையிலிருந்து கொஞ்சம் முடியினைக் கத்தரித்துக் கொண்டபின் அதற்கு நெருப்பு மூட்டினர். கோத்தர் இசை முழக்கத்திற்கிடையே கூடியுள்ள நெருங்கிய உறவினர்கள் தரையில் மண்டியிட்டு அமர்ந்தவர்களாக அழுது புலம்பினர். பிணம் எரிந்தபின் சாம்பலிலிருந்து மண்டையோட்டின் ஒரு பகுதி எடுக்கப்பட்டது. அதனை இறந்த சிறுமிக்கு அன்று மாமியாராக ஆனவளிடம் ஒப்படைத்தனர். அவளுடைய தலைமுடியால் சுற்றித் தூத் (*Meloosa pugens*) மரப்பட்டையில் பொதிந்திருந்தனர். பிணத்திற்கு நெருப்பிடும் முன் இரண்டாவது ஒரு எருமையைப் பலியிடுவதோடு கூடியுள்ளவர்கள் மனைவியினை இழந்த சிறுவனையும் அவன் உறவினர்களையும் விட்டுப் பிரிந்து செல்லும் முன் அவர்களுக்கு வெல்லமும் அரிசியும் வழங்கப்படவும் வேண்டும். இரவு முழுதும் அங்குக் காத்திருந்தோர் காலையில் உணவு உண்டபின் தங்கள் மந்துக்குத் திரும்புவர். மணம் செய்விக்கப்பட்ட சிறுவனின் அன்னை முடி சுற்றப்பட்ட மண்டையோட்டினைத் தன்னோடு கூடத் தன் மந்துவிற்கு எடுத்துச் சென்று இரண்டாம் சாவுச் சடங்கு நிகழும்வரை அதனைத் தன் பொறுப்பில் வைத்திருப்பாள். பிணத்தை எரித்த சாம்பலைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. அதனைக் காற்று வாரித் தூற்ற விட்டுவிடுவர்.

பைகாராவிற்கு அருகே அமைந்த பள்ளத்தாக்கில் இறந்துபோன முதியவள் ஒருத்தியின் சாவு சடங்குகளில் பங்குபெற்றத் திரட்டிய வேறு சில தகவல்களும் குறிப்பிடத்தக்கன. நாங்கள் சாவு வீட்டிற்குச் சென்று சேர்ந்தபோது பரும்போக்கான ஒரு பாடையில் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. பாடை இழைதழைகளால் பரும்படியாக அமைக்கப்பட்டிருந்த பந்தலின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. பந்தலின் இருபுறமும் திறப்பு விட்டிருந்தனர். பிணத்தைச் சுற்றிலும் பெண் உறவினர்கள் குழுமியிருந்தனர். சற்றுத் தொலைவில் வட்டமாகக் குழுமி உட்கார்ந்திருந்த தோடர் அனைவரும் எங்களுக்கு மரியாதை தெரிவிக்க

ஒரு சேர எழுந்தனர். அவர்களுள், வெள்ளைத் தலைப்பாகை அணிந்து, வெயிலின் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஓலைக்குடை பிடித்துக் கொண்டிருந்த தோடர் சமூகத்தைச் சேர்ந்த பெரியவர்களும் சிலர் இருந்தனர். அவர்கள் வேடிக்கையாகக் கூடிப் பேசியதிலிருந்து இறந்துபோன மூதாட்டியின் மூத்தமகன் அவள் மருமகளை விதவையாக்கிவிட்டு முன்பே இறந்துபோய் விட்டதால் அவளுடைய இரண்டாவது பிள்ளையோடு அந்த மருமகளைச் சேரத்து வைத்து அவர்களைக் கணவன் மனைவியாக வாழ வைக்க வேண்டுமென அவர்கள் பேசி முடிவெடுத்தனர் என்பது தெரியவந்தது. இந்த முடிவை அவர்கள் தெரிவித்தவுடன் மணமகனாதற்குரியவன் தன் தலையை அங்கே கூடியிருந்த வயதான தோடர்களின் பாதங்கள் மீது வைத்து அவர்களுக்குத் தன் மரியாதையினைத் தெரிவித்துக் கொண்டான். அவர்களுள் சிலருடைய பாதங்கள் புத்துக்குளியின் மடிப்பிடையே மறைந்திருந்தன. மணமான ஒருத்திக்கான ஈமச்சங்கு தொடர்பாக அவளுடைய மகள் அல்லது மருமகள் மூன்று சடங்குகளை நிகழ்த்த வேண்டுமென எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவையாவன:

1. பிணத்தின் புத்துக்குளியோடு சேர்த்துத் திவிரி (*Atylosia Candolleana*) இலைக் கொத்து ஒன்றினைக் கட்டுவது.

2. பிணத்தின் முழங்கைக்கு மேலே நூல் கண்டினையும் சோழிகளையும் கட்டுவது.

3. சிதைக்கு நெருப்பிடுவது. நான் நேரில் கண்ட சடங்கில் ஒரு கந்தல் துணியினை நெய்யினில் தோய்த்து நெருப்புக்குச்சியால் அதனைக் கொளுத்திச் சிதைக்குத் மூட்டினர்.

எருமையினைப் பிடித்து வந்து பலியிடும் சடங்கு வழக்கமான பரபரப்போடு எத்தகைய விபத்துமின்றி நிகழ்த்தப்பட்டது. அன்று சாவுச் சடங்கு முடிந்தபின் எருமையினைப் பிடித்து வீழ்த்திய இளைஞர்களான வீரர்கள் எங்களை மகிழ்விக்கும் வகையில் எருமையோடு போரிட்டதற்கான அன்பளிப்பினைப் பெற வந்தனர். இந்தச் சடங்கில் பலியிடுவதற்காக நன்கு வளர்ந்த ஓர் எருமையினையும் ஒரு கன்றுக்குட்டியினையும் கொண்டு வந்திருந்தனர். பூப்பந்தலிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட பிணத்தருகே அந்த எருமையினையும் கன்றினையும் இழுத்து ஓட்டிச் சென்றபோது அவற்றின்

கொம்புகளில் வெண்ணையினைத் தடவுவதோடு கழுத்திலும் மணி ஒன்றினைக் கட்டினர். அந்த மணியினைப் பின்னர் கோத்தர் அவிழ்த்துக் கொண்டனர். அடுத்து ஒரு சாவு நிகழும்வரை அது அவர்கள் பொறுப்பில் இருக்கும். எருமையினை வீழ்த்துவதற்கான அடியினை அல்லது தேவைப்படும் அடிகளைக் கோடரியின் பருமுனையினால் போடுவர். பிணத்தின் பாதங்கள் எருமையின் வாயில் சேர்த்து வைக்கப்படும். . இறந்தது ஆணாயின் பிணத்தின் வலது கையினைக் கொண்டு எருமையின் கொம்புகளைப் பற்றிக் கொள்ளும்படி செய்வர். (ஓர் ஆணின் சாவுச் சடங்கில் எருமையினைப் பலியிட்ட பின்னர் ஆண்கள் நடனம் ஆடினர் என முனைவர் சிவர்ஸ் குறித்துள்ளார். நடனம் ஆடும்போது சோழிகள் கட்டி அலங்கரிக்கப்பட்ட தத்ரிசி அல்லது தட்ரி எனப்படும் நீண்ட கழிகளைப் பயன்படுத்துவர்). இணை இணையாகப் பிணத்தைச் சுற்றித் துக்கம் கொண்டாடி ஆடியபின் பிணத்திற்கு நான்கு துணிகளை அணிவித்து ஒரு பாடையில் அதனைக் கிடத்திச் சோலைக்கு அருகேயுள்ள வெட்டவெளிக்குத் தூக்கிச் சென்று விரைந்து அடுக்கி முடிக்கப்பட்டிருக்கும் சிதையருகே கிடத்துவர். பிணத்திற்கு அணிவிக்கப்பட்டுள்ள துணிகளுள், உள்ளே உள்ள துணி பாலோள் அணியும் உடையினை ஒத்த கறுப்புத் துணியாக இருக்கும். அதன்மேல் சிவப்பு, நீல வண்ணங்களிலான பூவேலை செய்யப்பட்ட புத்துக்குளியை அணிவித்திருப்பர். அதற்கு மேலே ஒரு வெள்ளைத் துணி போர்த்தப்பட்டிருக்கும். அதற்குமேல் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு துணியினைப் போர்த்துவர். சிதைக்கு அருகே இறந்து போனவனின் நெருங்கிய உறவினளான ஒரு முதியவள் அமர்ந்திருப்பாள். என்னையும் சிதைக்கு அருகே ஒரு மரக்கட்டையில் வந்து அமர்ந்துகொள்ளும்படி அன்புடன் அழைத்து அமர்த்தினர். அந்த முதியவள் சிதையருகே அமர்ந்து சடங்குகளைப் பார்த்தவளாக கண்ணாடிகளைத் துடைக்கும் குச்சியைக் கொண்டு ஒரு கைத்தடியைத் தயாரித்தவளாக இருந்தாள். இச் சடங்கின் நடைமுறையில் அரசின் சார்பில் ஒரு வன அலுவலர் கலந்து கொண்டார். காவல்துறை காவலர் ஒருவர் சடங்கு முடியும் வரை தன் அனுதாபத்தை வெளிப்படுத்தியவராகத் தன் கைக்குட்டையினை மூக்கருகே வைத்து அழுந்தியவராக நின்றிருந்தார். பிணத்திற்குப் பித்தளை மோதிரங்கள் அணிவிக்கப்பட்டன. புத்துக்களியில் வெல்லம், சோழிகளை வைத்து மடித்த காகிதம், பலவகைத் தானியங்கள், நெய், தேன், தகரச்சட்டம், போடப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடி, மூக்குப்பொடி, புகையிலை, தேங்காய், பிஸ்கோத்து, ஆகியன திணிக்கப்பட்டன. புத்துக்களியில் காலருகே வெள்ளியாலான சப்பான் யென் நாணயம் ஒன்றும், கிழக்கிந்திய

கம்பெனியாரின் ஆர்க்காட்டு ரூபாய் ஒன்றும் வைக்கப்பட்ட நீண்ட பணப்பை சொருகப்பட்டது. இவற்றையெல்லாம் நிறைவேற்றியபின் பிணத்தை தூக்கி எரியும் சிதையின் மீது மும்முறை ஆட்டினர். சிதையின்மீது குச்சிகளைக் கொண்டு போலியாக ஓர் சிதை அமைக்கப்பட்டிருந்தது. பின் பிணத்தின் உடலிலிருந்த அணிகள் அகற்றப்பட்டன. இறந்தவளின் மருமகள் மண்டையோட்டின்மீது சுற்றி வைக்க ஒரு கொத்து தலைமுடியினைக் கத்தரித்துக் கொண்டாள். பிணத்தைச் சிதையின் மீது வீசி ஆட்டும்போது இறந்தவள் செத்தவர்கள் உலகத்தைச் சென்று சேர்கின்றான் என என்னிடம் தெரிவித்தனர். இது தொடர்பாக முனைவர் சிவர்ஸ் எழுதுவதாவது: சிதையின்மீது பிணத்தை வீசி ஆட்டும் சடங்கானது பிணத்திற்கு அணிவிக்கப்பட்டுள்ள அணிகளைக் களைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டதெனலாம். நெருப்பின்மீது பிணத்தை ஆட்டுவது அது எரிக்கப்படுவதைக் குறியீடாகத் தெரிவிப்பதாகும். இவ்வாறு குறியீடாகப் பிணம் எரிக்கப்படுவதால் அதற்கு அணிவிக்கப்பட்டுள்ள பொருள்கள் எரிக்கப்படாமல் மற்றுமொரு சமயம் பயன்படுத்த உதவுவதாகின்றது. இதனையே இந்தச் சடங்கிற்குரிய விளக்கமாக நாம் கொள்ள வேண்டும். எனினும் இவ்விளக்கம் தோடரால் தரப்பட்டது அன்று, முன்பு ஒரு காலத்தில் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துபோனதாகக் கருதப்பட்ட ஒருவனைச் சிதையிலிட்டு நெருப்பிட்டனர். அச் சூட்டினால் அவன் மீண்டும் உயிர்பெற்று சிதையிலிருந்து எழுந்து நடக்கலானான். இதன் காரணமாகப் பிணத்தைச் சிதையில் வைக்குமுன் மும்முறை அதனைச் சிதை நெருப்பின்மீது வீசி ஆட்டவேண்டும் என்ற புதிய விதி வகுக்கப்பட்டது. (செத்து விட்டவனாகக் கருதிச் சிதையல் வைக்கப்பட்ட தோடன் ஒருவன் எழுந்து அவன் சாவுச் சடங்கிற்காக அணிவிக்கப்பட்ட அணிகளோடு கூடப் புதுப்பொலிவோடு அப்படியும் இப்படியுமாக நடக்கத் தொடங்கினான் எனவும் அவனுக்கு அணிவிக்கப்பட்ட அணிகளை அவன் மறுபடியும் உண்மையிலேயே இறக்கும்வரை தொடர்ந்து அணிந்தவனாக இருக்க அனுமதித்தனர் எனவும் கர்னல் மார்சல் தெரிவித்துள்ளார்) சிதையில் நன்றாக நெருப்புப் பற்றி எரியத் தொடங்கியவுடன் உறவினர்களான சில பெண்களைத் தவிர மற்றவர்கள் சோலையினை விட்டு வெளியேறினர். ஆண்கள் அருகிலிருந்த குன்றின் உச்சியில் ஏறி தங்கள் தெய்வத்தை வழிபட்டனர், நான்கு ஆண்கள் கோத்தர் தேவாடிகளைப் போலவே தாங்களும் தெய்வம் ஏறப்பட்டவர்கள் எனத் தங்களைப் பாவித்தவர்ளகான உடல் நடுங்கியவர்களாகக் கைகால்களை அப்படியும் இப்படியுமாக ஆட்டியபடி கண்களை மூடிக்கொண்டு உள்ளங்கைகளைக் குவித்து ஆட்டியபடி அப்படியும்

இப்படியுமாக ஓடலாயினர். அதன்பின் மலையாளத்தில் பேசத் தொடங்கிய அவர்கள் அங்கு நிகழ்ந்த ஒரு வியத்தகு நிகழ்ச்சியினை விவரித்தனர், அவர்கள் முன் மிகப் பெரிய ஓர் உருவம் தோன்றியதாகவும் அது எதிர்பாராது தோன்றியதுபோலவே எதிர்பாராது மறைந்துவிட்டது என்றும் கூறினர். அந்த ஆண்டு தீமிதிச் சடங்கில் தோடரிடையே ஏற்பட்ட பூசல் காரணமாக அவர்கள் இரு கட்சிகளாகப்பிரிந்து இரண்டு இடங்களில் தீக்குழி அமைத்தனர். இச் செயல் தெய்வங்களைக் கோபமுறச் செய்தது போலும். இதற்குக் காரணமானவர்கள் விரைவில் நாசமாவார்கள் என அச்சுறுத்தப்பட்டனர். இந்தக் கதை முழுதும் குழப்பமானதாகவே வழங்கி வருகின்றது. தெய்வம் ஏறப் பெற்ற தோடர் சிலர் மலையாளத்தில் சில வார்த்தைகளைப் பேசினர். நீலகிரி மலையின் வடக்கு, மேற்கு சரிவுகளில் எருமைகளை மேய்க்கும்போது பக்கத்தே உள்ள மலபார் மாவட்டத்து மலையாளம் பேசும் மக்களோடுகொண்ட தொடர்பின் காரணமாக இவர்கள் சில மலையாள வார்த்தைகளைக் கற்றுக் கொண்டனர் என விளக்கம் தருகின்றனர்.

தொழுநோய் வந்த ஒருவனுடைய சாவுச் சடங்கில் வட்டமாகக் கற்களை அடுக்கி ஒன்றரைக் கெசக் குறுக்களவு உள்ளதாக அச் சடங்கிற்காக என்றே அமைக்கப்பட்ட அமைப்பின் வாயிலின் முன் பிணத்தைக் கொண்டு வந்து வைத்தனர். எருமைப் பலி இடப்படுவதற்குச் சற்று முன் பைகி குலப்பிரிவினைச் சேர்ந்த ஒருவன் பிணத்தின் தலைமாட்டில் நின்றபடி ஒரு பிரம்பால் தரையில் ஒரு குழி தோண்டியவனான எதிர்பக்கத்தில் நின்றிருக்கும் கென்னனிடம் "புழுட் கென்ன" என மும்முறை கேட்பான். மண்ணை நான் இடலாமா என்பது இதன் பொருளாகும். இதற்குக் கென்னன் "புழுட்" என மும்முறை விடையிறுப்பான். அதன் பின் பைகி மும்முறை பிணத்தின் மீதும், வட்டக்கல் அமைப்பின் மீதும் மண்ணை இடுவான். கற்களால் அமைக்கப்பட்ட வட்ட அமைப்பு எருமைப்பட்டியாகக் கருதப்படும் வகையில் அங்கு அமைக்கப்படுகிறது என முனைவர் ரிவர்ஸ் தெரிவிக்கின்றார். எருமைப்பட்டி ஒன்றின் நுழைவாயிலிருந்தது தான் மண்ணை எடுத்துப் பிணத்தின்மீது இடவேண்டும் என்பது விதி. எனவே பட்டி இல்லாது சடங்கு நடத்தப்படும் இடத்தில் இதற்காக வென்றே பட்டி அமைக்கப்படுகின்றது என்கிறார் அவர்.

இறந்துபோனவனுடைய பல நல்ல குணங்களைக் கூறி அழுகின்ற பல ஒப்பாரிப் பாடல்களின் மொழிபெயர்ப்புகளை முனைவர் ரிவர்ஸ் தந்துள்ளார். என்னுடைய இசைத் தட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பாரிப் பாடலைத் திரும்ப

ஒலிக்கச் செய்தபோது இரண்டு இளம்பெண்கள் வாய்விட்டுக் கதறி அழக் கண்டேன். அந்த ஒப்பாரி அந்தப் பெண்களினுடைய தந்தை இறந்தபோது பாடப்பட்ட ஒப்பாரி பாடல்களின் ஒலிப்பதிவு என்பது எனக்குப் பின்னரே தெரிந்தது. அடுத்துப் படகர் சாவுச் சடங்குகளின்போது இறந்தவனின் பாவங்களைத் தொகுத்துக் கூறும் இசைத்தட்டை நான் ஒலிபரப்பியபோது அந்த பெண்கள் தங்கள் துக்கத்தை மறந்து மீண்டும் மகிழ்ந்தவர்களாயினர்.

நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு எருமைப் பலிச் சடங்கு தொடர்பாக விண்ணப்பம் எழுதுவோரைக் கொண்டு ஏழுதித் தோடர் தந்த பின்வரும் விண்ணப்பம் அக் காலத்தில் அவர்கள் மனநிலை எப்படியிருந்தது என்பதனைத் தெளிவுபடுத்துவதாகும்.

"நெடுங்காலமாக நாங்கள் பின்பற்றிவரும் சமய நெறிப்பட்ட வழக்கப்படி நாங்கள் பலிக்குரிய எங்கள் எருமைகளை முறையாகவே வளர்த்து வருகின்றோம். சென்ற ஆண்டு பலிக்கு உரிய எருமைகளைப் பார்வையிட வந்த மாவட்ட ஆட்சியர் கால்நடை பட்டியில் எருமைகளைத் தீனி ஏதும் போடாது அடைத்து வைக்கக் கூடாது என்று ஆணையிட்ட தோடு ஒவ்வொரு நாளும் ஓர் எருமையினை மட்டுமே பலியிடவேண்டும் எனவும் பட்டியில் இருக்கும் எருமைகளைத் தீனியின்றி அடைத்து வைக்காது மேய்ச்சலுக்கு ஒட்டிவிட வேண்டும் எனவும் ஆணையிட்டார். அவர் கட்டளைப்படியே நாங்கள் செயல்பட்டோம். இந்த நல்ல ஆணையின் நன்மையினை நாங்கள் புரிந்து கொண்டோம். அண்மையில் இறந்துபோன. . . . . தோடனின் மகனான . . . . ஊர்த் தலைவனான தோடன் . . . . ஊரைச் சேர்ந்த மணியக்காரரோடு சேர்ந்து அவ்வப்போது லஞ்சம் வாங்குவதோடு எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதோடு மிகப் பெருந்தொல்லைகளையும் தந்து வருகின்றான். அதோடு வேறொரு பெருந் தொல்லையினையும் தருகின்றான். திரு . . . . ஒருநாள் உள்ளான் குருவிகளைச் சுட அந்தப் பக்கமாக வந்தான். அப்போது அங்கே மேய்ந்து கொண்டிருந்த ஓர் எருமைக்கடா தன் கொம்புகளால் வேகமாக அவனை முட்டித் தள்ளி அவன் கால்களில் காயம் ஏற்படுத்தியது. அவனோடு கூட வந்த ஒருவனின் உதவியினால் அவன் ஆபத்திலிருந்து தப்பினான். இல்லையாயின் அவன் உயிரிழந்திருக்க வேண்டும். இப்பொழுது மேலே கூறிய மணியக்காரரும் ....னும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அந்தத் தோடனுடைய இறந்துவிட்ட தந்தைக்கான சாவுச் சடங்கினை இம்மாதம் 18-ஆம் தேதி நடத்தி

முடிக்க வேண்டும் என முடிவு செய்து உள்ளனர். இதற்காக அவர்கள் *18*-ஆம் தேதியன்று காலை *10* மணிக்கு எருமைகளைத் தீனி ஏதும் தின்ன மேயச் செல்லவிடாது பட்டியில் அடைத்துப் போடப்போகின்றார்கள். *19*-ஆம் தேதியன்று பிற்பகல் *4* மணிக்குதான் அவர்கள் சடங்கில் எருமையினைக் கொண்டு பலியிடப் போகின்றார்கள். இவ்வாறு செய்வது கடவுளுக்கு எதிராகச் செய்யப்படும் பாவமாகும். எனவே நாங்கள் உங்களை எங்களுக்குப் பின் வருமாறு உதவும்படி வேண்டுகின்றோம். அவர்கள் எருமைகளை வழக்கம்போல் மேய்ச்சல் நிலத்தில் ஒட்டி விடட்டும். பலியிட வேண்டிய நேரத்தில் அவற்றைப் பிடித்துப் பலியிடச் சொல்லுங்கள். நீங்கள் எருமைகளைப் பனியாகப் பட்டியில் அடைத்துப் போடும்படி அவர்களுக்கு ஆணையிடமாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இவ்வாறு பட்டினிபோட்டு அவர்கள் எருமைகளைக் கொல்ல நினைப்பார்களாயின் அந்த எருமைகள் எங்கள் மீதும் மற்றும் அங்கு வேடிக்கை பார்க்கக் கூடியுள்ளவர்கள் மீதும் வெறிகொண்டனவாகப் பாய்ந்து கொன்றுவிட வரலாம். எனவே தோடராகிய நாங்கள் மதிப்புக்குரிய உங்களிடம் *18*-ஆம் தேதி அந்தச் சாவுச் சடங்குத் தொடங்கும் முன்னதாக அவர்களை விசாரித்து அவர்களுக்கு மேற்கண்டபடி நடந்து கொள்ளாதிருக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.''

பைகாராவில் ஒரு ''விட்'' திங்கட்கிழமை போட்டிப் பந்தயங்கள், விளையாட்டுக்கள், ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டது, அதில் சிறுவர், சிறுமியர் கேலி விளையாட்டாக நடத்தும் தோடர் சாவுச் சடங்கு சுவையானதாகவும் பரபரப்பு மிகுந்ததாகவும் இருந்தது. தான் செய்யும் சிறுகேலியில் மிக விருப்பம் உடையவனான ஒரு தோடன் பச்சை கேது என்ற சாவுச் சடங்கினை எனது பங்களாவில் மேஜை மீது வந்து அமரும் ஈக்களை உயிரோடுபிடித்து அவற்றுக்குத் தான் அதனை நடத்துவதாகக் கூறுவான். சிறுவர் சிறுமியர் நடத்திய கேலிச் சாவுச் சடங்கிற்குச் சில இளைஞர்கள் குழுவாக ''யோ, உறா! யோ, உறா,'' என பெரியவர்களைப் போல நடித்து அழுது அரற்றியபடி வந்து சேர்ந்தனர். பலியாக உள்ள எருமையாக நடிக்கும் சிறுவன் தன் புத்துக்குளியினை அவிழ்த்துப் போட்டவனாகச் சிறு குன்றுக்கு அப்பால் மற்றவர்கள் பார்வையில் படாமல் மறைந்துவிட்டான். அந்தக் குன்றின் உச்சியில் மேலே உயர்த்திய அவன் கைகளும் தோள்களும் காட்சி தந்தன. அவை எருமையின் கொம்புகளாக மற்றவர்களால் கருதப்படவேண்டும், அவை கண்ணுக்குத் தெரிந்த அளவில் சில சிறுவர்கள் அவனைப் பிடித்துவரப் பாய்ந்து

ஓடினர். அவர்களிடையே போலியாக ஒரு சிறு சண்டை நிகழ்ந்தது. எருமையாக நடித்தவனைச் சிறுவர் பிடித்து இழுத்துவரும்போது அவன் திமிறியபடியும் கால்களை உதைத்துக் கொண்டும், கூக்குரலிட்டும், ஆர்ப்பாட்டம் செய்தபடி பிணம் கிடத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். போலியான ஒரு பிணமோ அதற்குப் பதிலாக ஒரு பொம்மையோ இல்லாத காரணத்தால் அந்த இடத்தில் சில சிறுமியர் அமர்த்தப்பட்டிருந்தனர். எருமையாக நடித்த பையனை அங்கே கொண்டுவரும்வரை அவர்கள் தங்களுக்குள் அரட்டை அடித்தவர்களாக அமர்ந்திருந்தனர். அதன்பின் அவர்கள் ஒருவரோடு ஒருவர் நெற்றியினைத் தொட்டுக் கொண்டபடி இணை இணையாக வழக்கமாகச் சாவிற்கு அழுது அரற்றுவதுபோல அழுது அரற்றினர். எருமையாக நடித்தவன் பின் மண்டையில் ஒரு துணியினைக் கோடரியாகக் கருதி அதனால் ஒரு மொத்து மொத்தியவுடன் அவன் இறந்துபோனதாகப் பாவனை செய்தான். கைகால்களை இழுத்துக் கொண்டபடி உயிர்போகும் துடிதுடிப்பைத் தன் நடிப்பில் அவன் காட்டி முடித்ததும் எருமையாக நடித்தவன் மீண்டும் குன்றுக்கு அப்பால் ஓடினான். அவனைப் பிடித்து இழுத்து வரும் முரட்டுத்தனமான விளையாட்டின் வேடிக்கையினை மீண்டும் அனுபவிக்கவே அவன் அவ்வாறு ஓடிச் சென்றவனாதல் வேண்டும். பின்னர் நடைபெற்ற தடகளப் போட்டிகளில், ஓட்டப் பந்தயத்தில் எருமையாக நடித்த சிறுவன் இரண்டாவதாக வந்து பரிசினையும் பெற்றான். ஒரு சமயம் நெடுஞ்சாலையில் மேய்ந்துகொண்டிருந்த அவன் இனத்து (அவன் நடித்த) விலங்குகள் (எருமைகள்) எங்களைத் துரத்தியபோது குறுக்கிட்டு அவற்றை விரட்டிக் எங்களை எருமைகளிடமிருந்து அவன் காப்பாற்றினான். இதுவே நான் அவனைக் கடைசியாகச் சந்தித்த சமயம் ஆகும். உதகமண்டலத்தைச் சேர்ந்த வேட்டைக்காரருக்கு எப்பொழுதும் தோடரின் எருமைகளிடம் ஒரு பயம் உண்டு. அவற்றின் கொம்புகளால் தாக்குண்டு குதிரைகளும் குதிரைகளில் சென்ற வேட்டைக்காரர்களும் அடிக்கடி காயப்பட்டுள்ளானமையே இந்த அச்சத்திற்குக் காரணம்.

இந்தச் சாவுச் சடங்கின் வேடிக்கை நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே ஆண்கள் எல்ன்* விளையாட்டிலான தங்கள் திறமையினைக் காட்டினர். இந்த விளையாட்டு ஆங்கிலேயரின் கிட்டிப் புள் விளையாட்டினை ஒத்தது. இலண்டன் நகரத்துச் சந்துகளில் சில பருவங்களில் கண்ட இடங்களிளெல்லாம் இந்த விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருக்கக் காணலாம். இரு முனைகளும்

* எல்ன் என்பதனைப் பிரீக்ஸ் இலடா என்பார். முனைவர் ரிவர்ஸ் இலடா என்பது இந்த விளையாட்டிற்குப் படகர் தந்துள்ள பெயர் என்பார்.

கூர்மையாகச் சீவப்பட்ட ஒரு சிறு குச்சியினையும் விளக்குமாற்றின் கைப்பிடி மட்டையினை ஒத்த கழியினையும் பயன்படுத்தி விளையாடப்படுவது. இந்த இரண்டினுள் சிறு குச்சியினைத் தரையில் ஒரு கல்லோடு சார்த்தி வைத்து அதனைக் கழியினைக் கொண்டு தட்டுவர். அது கல்லிலிருந்து எம்பி எழும்போது அதனைக் கழியினைக் கொண்டு வேகமாக அடிப்பர். அப்பொழுது தூர நிற்கும் எதிரணியினர் அதனைப் பிடிக்கப் பார்ப்பர்.

முட்ட நாட்டு மந்துவில் எங்களுக்கு இன்னும் சில விளையாட்டுக்களை நிகழ்த்திக் காட்டினர். இந்த விளையாட்டுக்களுள் ஒன்று நர்த்பிமி. தட்டையான ஒரு கல்லினைச் செங்குத்தாக நிற்கும் வேறு இரு கட்டைக் கற்களின் மீது படுகிடையாக இட்டு ஒரு குறுகிய சுருங்கையினை உண்டாக்குவர். ஒருவன் அதன்வழியே மிகத் தொல்லைப்பட்டவனாகப் புகுந்து இப்பால் வரலாம். இருவர் இந்த விளையாட்டில் இடம் பெறுவர். ஒருவன் அந்தச் சுருங்கையிலிருந்து முப்பது கெச தூரத்திலும் மற்றொருவன் ஆறு கெச தூரத்திலுமாக நின்று கொள்வர். இவர்களுள் சுருங்கை அருகே நிற்பவன் தன் ஆடையினை அகற்றியவான ஓடிச் சென்று அச் சுருங்கையில் புகுந்து இப்பால் வர முயல்வான். முப்பது கெச தூரத்தில் நிற்பவன் ஓடிவந்து முதலாமவன் தன் கால்களைச் சுருங்கையினுள் இழுத்துக் கொள்ளுமுன் அதனைத் தொட முயல்வான். நாங்கள் நேரில் கண்ட மற்றொரு விளையாட்டில் கனமான உருண்டைக் கல் ஒன்றினைக் கொண்டு ஒருவன் தன் ஆற்றலின் அளவை வெளிப்படுத்துவதாகும். இதில் பங்குபெறுபவர்கள் அந்தக் கல்லி னைத் தங்கள் தோள் உயரத்திற்குத் தூக்க வேண்டும். சாவுச் சடங்கின்போது எருமையின் தலையில் கோடரியினால் வெட்டி அதனை வீழ்த்தும் நல்ல உடல்வாகு வாய்க்கப் பெற்றவனாலேயே அவன் மிக வருந்தி முயன்றும் அந்தக் கல்லி னை அவன் வயிற்று உயரத்திற்கு மேல் தூக்க இயலவில்லை. நல்ல உடற்கட்டு வாய்க்கப் பெற்ற ஒரு பெரியவர் என்னிடம் தான் இளைஞனாயிருந்த அந்தக் காலத்தில் தன்னால் அந்தக் கல்லைத் தூக்கிச் சாதனை புரிய முடிந்தது என்றும் தோடர் இன இளைஞர்கள் வருந்தத்தக்க நிலையில் கட்டுடல் குலைந்தவர்களாக ஆகி வருகின்றனர் என்றும் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

மூலையில் பூனை (Puss in the corner) என்ற ஆங்கிலேயர் விளையாட்டினை ஒத்த காரியாலபிமி என்ற விளையாட்டினைத் தோடர்

விளையாடுவதாகத் திரு பிரீக்ஸ் குறிப்பிடுகின்றார். எங்களை மகிழ்விக்க எற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுக்களில் அந்த விளையாட்டு இடம்பெறவில்லை. "அன்றாட வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் போலியான விளையாட்டுக்களில் தோடர் இனக் குழந்தைகள் ஈடுபடுகின்றன. கிராமங்களின் அருகே சிறுவர்கள் விளையாட்டுக்காகச் சிறிய அளவில் அமைத்த எருமைப்பட்டிகளையும் அடுப்புக்களையும் நான் நேரில் கண்டுள்ளேன். என முனைவர் ரிவர்ஸ் குறித்துள்ளார். பெரிய இலைக் கொத்துக்களை எருமைகளாகவும் சிறிய இலைக் கொத்துகளை எருமைக் கன்றுகளாகவும் பாவித்துக் குழந்தைகள் விளையாடும் விளையாட்டினை நானே பலமுறை நேரில் கண்டுள்ளேன். எருமைகளின் அன்றாட வாழ்வில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அவர்கள் இந்தப் பாவனை இலைக் கொத்துக்களுக்கு நிகழ்த்துவிப்பர். தோடர் இனப்பெரியவர்களும் சிறுவர்களும் கையில் வளையும் ஒரு மரக்கிளையினை வைத்துக் கொண்டு அதனை எருமையின் தலையாகவும் கொம்பாகவும் பாவித்துத் திருகியபடி இருப்பதை எங்கும் காணலாம்.

தோடர் பாடும் பாடல்களுள் பின்வருவன திரட்டப்பட்டுள்ளன:

வெயில் ஏறுகின்றது; மூடுபனி படர்கின்றது;
மழை வரலாம். இடிமுழக்கம் கேட்கின்றது;
மேகம் திரள்கின்றது. மழை கொட்டுகின்றது.
காற்றும் மழையும் வீசி அடிக்கின்றது;
எல்லாம் வல்ல தேவனே!
எங்கும் வளம் பெருகட்டும் அறம் தழைக்கட்டும்!
எருமைகள் சினையாகட்டும்!
அவை கன்று ஈனட்டும்.
குழந்தையற்றவர்களும் குழந்தை பெறட்டும்.
இதனை நம் நாட்டுக் கடவுளிடம் சென்றுரைப்பாய்.

கெய்கமொர், எய்கமொர் (எருமைகளின்பெயர்கள்) களே!
மாலை நேரம் நெருங்குகின்றது
எருமைகள் மேய்ந்து திரும்புகின்றன
கன்றுகளும் உடன்வருகின்றன
எருமைகளுக்கு வணக்கம் தெரிவிக்கப்படுகின்றது
பால்மடக்காரன் கன்றுகளைக் குச்சியால் அடிக்கின்றான்.

மணிக்கு பால் படைக்கப்படுகின்றது
எங்கும் இருள் மிகுகின்றது
அழகிய கொம்புகளோடு கூடிய எருமை இது
படகன் அறிவுகெட்டுக் கொடுத்துவிட்ட எருமை.
காண்டல் மந்துவிற்கு வந்து சேர்ந்த எருமை
இது இன்னரொவ்ய (எருமையின் பெயர்.)
இதுபோன்ற எருமை வேறு எங்கும் இல்லை
பர்கூர் (தோடன் ஒருவன் பெயர்) அவனைப் போல வேறு
எவனும் இல்லை.
கதிரவன் ஒளி வீசுகின்றான். காற்றும் கடுகி வீசுகின்றது
மழை வர உள்ளது. மரங்கள் பூத்துக் குலுங்கியபடி நிற்கின்றன
கண்ணீர் வடிகின்றது. மூக்கிலோ எரிச்சல்
தன் குடையை விரித்துப் பிடித்தபடி அவன் வருகின்றான்
நல்ல உள்ளாடை அணிந்தபடி அவன் வருகின்றான்.
கறுப்பு வண்ண ஆடைகட்டி அவன் (பாலோள்) வருகின்றான்
பால மரக் கட்டையாலான
தடியினைத் தாங்கியபடி அவன் வருகின்றான்.
எனக்கு ஒரு தெய்வம் உள்ளது
நான் என்னவானேன்?
நெஞ்சில் துக்கம் மிக்கதால் நான் அழப் பார்க்கின்றேன்
ஓ! என் குழந்தையே அழாதே.
இது இன்னும் அழுகின்றது. துர்ரே துர்ரே
இங்கே பார் வாயை மூடு
கொழுத்ததொரு எருமைக் கடா ஆச்! ஆச்!
இந்தக் கடா எருமை
எருமையை அழைத்துச் செல்கிறது ஆ! ஆ!
இரண்டு மூன்றுபேர் அதனை ஓட்டிச் செல்கின்றனர் ஆ! ஆ!

மைசூர் மாநிலத்து பட்டத்து அரசியான மகாராணி உதகமண்டலம் வந்தபோது அவளைச் சிறப்பித்துப் பாடிய பாடல்

தோடர்கள் எல்லாம் அவள் அரண்மனைக்குச் சென்று
அவள்முன் ஆடினோம்.
அவள் எங்களுக்குப் பதினைந்து ரூபாய் தந்தாள்.
எங்கள் பெண்களை நெருங்கி அவர்களோடு அவள் பேசினாள்

எங்களுக்கு அவள் துணிகள் வழங்கினாள்
மறுநாள் நாங்கள் அவளுக்குப் பால் கொண்டுபோய்க் கொடுத்தோம்
காலையில் எட்டுப்பாட்டிலும், மாலையில் நான்கு பாட்டிலும் பால் தந்தோம்
மாதா மாதம் எங்கள் பாலுக்கு அவள் பணம் தந்துவிட்டாள்.
அவள் மைசூர் புறப்படும்போது நாங்கள் அவள்முன் வரிசையாக நின்றோம்
அவள் எங்களுக்கு துணியும் மூன்று ரூபாயும் தந்து சென்றாள்
பெண்கள் தலைமுடியினை வெட்டியபடி அவள்முன் நின்றனர்

திருமணப் பாட்டு

சிறுவரும் சிறுமியரும் பாடுகின்றனர்.
அவர்கள் நிறையப் பணத்தைச் செலவழிக்கின்றனர்.
மணமகளுக்கு அவள் தந்தை ஐந்து எருமைகள் தருகின்றான்.
கணவனாக வருபவன் தன் மனைவியிடம் அவள் தன் கூந்தலைச் சுருளாக்கிக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்றான்
அவள் கூந்தல் சுருட்டை முடியானால் அனைவரும் மிக மகிழ்வர்
எருமையைக் கொன்றாயிற்று.
நாம் அனைவரும் இப்பொழுது நடனமாடவேண்டும்
இங்கு ஏன் எல்லோரும் பெருங்கூட்டமாகத் திரளவில்லை
இன்னும் பலரும் வந்து கூட வேண்டும்.
என் எருமை பெரியது. மிகப் பெரியது
விரைந்து போய் அதனைப் பிடி
தோடர் அனைவரும் அங்குள்ளனர். அவர்கள் வரிசையாக நிற்கின்றனர்
யார் ஓடிச் சென்று முதலில் எருமையைப் பிடிக்கப் போகின்றீர்கள்?
அவ்வாறு பிடிப்பவனுக்கு ஐந்து ரூபாய் பரிசு வழங்கப்படும்
நான் போய் அதனை முதலில் பிடிப்பேன்
தோடர் அனைவரும் சண்டையிடுகின்றனர்
மக்கள் அவர்களுக்கு அரிசி தருகின்றனர்
அந்த எருமை வந்து கொண்டுள்ளது
அதன் கழுத்தைக் கட்டிப் பிடிக்க இருவர் ஓடிச் செல்கின்றனர்
பத்துபேர் கூடி அந்த எருமையினைக் கட்டிப் பட்டியில் கொண்டுபோய் அடைக்கின்றனர்

பகல் ஒருமணிக்கு நாங்கள் எங்கள் உணவை உண்டோம்
அந்த எருமை ஓடுகின்றது. நான் அதன் முதுகில் கழியால் ஒரு போடுபோடுகின்றேன்
அது திரும்பி ஓடப்பார்க்கிறது
என்றாலும் நான் அதனை அதன் வழியில் விரட்டுகிறேன்
இரவு வருகின்றது. நாங்கள் அனைவரும் நடனம் ஆடுகின்றோம்
மறுநாள் காலை பத்துமணிக்கு நாங்கள் அந்த எருமையைப்
பட்டியிலிருந்து வெளியே ஓட்டி வந்து அதனைப் பலியிடுகின்றோம்
அதிகாலையில் நான்கு மணிக்கு ஒரு வெள்ளைத் துணியில் அரிசியினையும்
தானியத்தையும் முடிந்து அதனை நாங்க . எரிப்போம்
பதினொரு மணிக்கு நாங்கள் சிறுவர் சிறுமியர் தலைமுடியை வெட்டுவோம்
காலையில் நான்கு மணிக்குப் பூசாரி பால்மடக் கோயிலுக்குச் செல்வான்
அவன் விளக்கை ஏற்றுகின்றான்
எட்டு மணிக்கு அவன் எருமைகளின் பாலைக் கறக்கின்றான்
அவன் மேலே ஆடை ஏதும் அணிவதில்லை
வெண்ணையினையும் நெய்யினையு அவன் தெய்வத்தின முன் படைக்கின்றான்
அதன்பின் அவன் தன் எருமைகளை மேய்க்கின்றான்
பின் அவன் தன் உணவை உண்பான்
அதன்பின் அவன் தனது உடைகளை அணிந்து கொள்வான்
பிற்பகல் மூன்று மணிக்குஅவன் மிண்டும் கோயிலுக்குச் செல்வான்
நெருப்பைக் கடைந்து அவன் விளக்குகளை ஏற்றுவான்.
பாலை ஒரு சட்டியில் இட்டு அதனை ஒரு பிரம்பால் கடைந்து நெய்யாக ஆக்குவான்
மோரோடு நீரைக் கலந்து அவன் பெண்களுக்குக் குடிக்கத் தருவான்
அவன் மட்டுமே கோயிலில் உறங்குவான்
காலையில் நான்கு மணிக்கு அவன் எருமைகளை மேய்ச்சலுக்கு
வெளியே ஓட்டிவிடுவான்
ஏழு மணிக்கு அவன் அவற்றின் பாலைக் கறப்பான்
அந்தப் பெண்ணின் வீடு குன்றின் சரிவில் உள்ளது
பூசாரி அந்தப் பெண்ணிடம் செல்லமாட்டான்

அவன் மணம் முடித்துக் கொண்டுவிட்டான்
வயது இருபதான பின்பு அவன் கோயில்களுள் நுழைய முடியாது
அவனுக்குப் பதிலாக வேறொருவன் பூசாரி ஆக்கப்படுவான்.

தோடர்களின் சமயநெறி தொடர்பான அமைப்புகள், விரிவான பால்மடச் சடங்குகள், சமயம் ஆகியன பற்றி முனைவர் ரிவர்ஸ் விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். தோடர் ஓரளவு இந்து சமயத்தின் செல்வாக்கிற்கு ஆட்பட்டவராக உள்ளனர். சிலர் மைசூரில் உள்ள நஞ்சன்கோடு கோயிலுக்கும் கோவை மாவட்டத்தில் காரமடையில் உள்ள கோயிலுக்கும் பிற கோயில்களுக்கும் சென்று வருகின்றனர். இவ்வாறு இவர்கள் புனிதப் பயணம் மேற்கொள்ளும் கோயில்களில் வழிபாடு நடத்துவதோடு வேண்டுதலுக்கான காணிக்கையினையும் செலுத்துகின்றனர். மகப்பேறு முதலியன வேண்டி வேண்டுதல் செய்து கொள்பவர்களும் உள்ளனர். *1872*-இல் திரு பிரீக்ஸ் பின்வருமாறு எழுதுகின்றார்: "உதகமண்டலத்தில் வாழும் தோடர் சிலர் தங்களை அடுத்து வாழும் இந்துக்களின் சமய நெறியினைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். அவ்வப்போது குழந்தைகளின் நெற்றிகளில் திருநீறு பூசிவிடுகின்றனர். எனக்கு நெருங்கிய நண்பனான கிண்ணியாவன் சிலநாள்கள் தலைகாட்டாதவனாக இருந்தபின் நஞ்சன் கோட்டிலிருக்கும் சிவன் கோயிலில் போட்டுக் கொண்ட மொட்டையனாக என்முன் வந்து நின்றான்". எனது ஆய்வுக் கூடத்திற்கு வந்த ஒருவனுடைய தலைமுடி சடையாக தோள்களுக்குக் கீழும் தொங்கியபடி இருந்தது. தனக்கு மணம் முடித்து ஐந்து ஆண்டுகள் ஆகியும் தன் மனைவிக்கு மகப்பேறு வாய்க்கப் பெறாதிருந்தமையால் அவன் வேண்டுதல் செய்து கொண்டு முடி வளர்த்ததாகவும் இப்பொழுது அண்மையில் அவளுக்குக் குழந்தை பிறந்துள்ளதாகவும் உறவினர் ஒருவனுடைய இரண்டாம் சாவுச் சடங்கு முடிந்தபின் நஞ்சன்கோடு கோயிலுக்குச் சென்று முடிக்காணிக்கை செலுத்தப் போவதாகவும் கூறினான். என்னுடைய கையேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் குறிப்புகள் தோடர் தீட்டிக் கொள்ளும் *(சில சமயங்களில் அலங்காரத்திற்காக)* அடையாளங்கள் பற்றியும் இன்று அவர்கள் எவ்வாறு முடிமழித்துக் கொள்கின்றார்கள் என்பது பற்றியும் தெளிவுபடுத்துவனவாம்.

1. *28* வயதான ஆண்: தீ மந்துவில் இவன் ஒரு சடங்கு நிகழ்த்தியுள்ளான் நெற்றியில் வெள்ளை நிறத்தில் வளைவான கோட்டினை இழுத்துக்கொண்டு அவற்றின் இரு முனைகளின் கீழும்

நெற்றிப் பொட்டிலும் புருவக் கடையிலும் புள்ளிகளை வைத்துக் கொண்டுள்ளான். மார்பு, கரங்களின் வெளிப்பக்கம், இடது மார்புக் காம்பு, கைமுட்டிகள், முன் கையின் அடி எலும்புகள், காதுமடல்கள் ஆகியவற்றிலும் வெண்ணீறு பூசிக் கொண்டுள்ளான்.

2. *21 வயதான ஆண்:* மேற்கொண்டவனைப் போலவே நெற்றியிலும் மார்பிலும் கண்ணிமைகளின் மீதும் வெள்ளை வண்ணம் பூசிக் கொண்டுள்ளான்

3. *35 வயதான ஆண்:* நெற்றியில் வெள்ளைத் திட்டுக்களைப் பூசிக் கொண்டுள்ளான்

4. *30 வயதான ஆண்:* தன் தாத்தா இறந்துவிட்ட துக்கத்திற்காகத் தலைமுடி, தாடி ஆகியனவற்றைக் குறுகக் கத்தரித்துக் கொண்டுள்ளான்.

5. *12 வயதான சிறுவன்:* தன் தாத்தா இறந்துவிட்டதன் காரணமாகச் சடையாக உள்ள மயிர்க்கற்றையினைக் கத்தரித்துக் கொண்டுள்ளான்.

6. *8 வயதான சிறுமி:* தலைமுடியினை உச்சியிலும் பின்பக்கத்திலும் நடுவகிட்டிலும் மழித்துக் கொண்டுள்ளான்.

7. *6 வயதான சிறுவன்:* கண் புருவங்களிடையே வெள்ளை வண்ணத்திட்டுகள் தீட்டப்பட்டுள்ளன. உச்சந்தலை, தலையின் பக்கங்கள், நடு வகிடு ஆகிய பகுதிகளின் தலைமுடி மழிக்கப்பட்டுள்ளது. நடு வகிட்டிற்கு இருபுறமும் உள்ள மயிர் நெற்றியின்மீது விழுந்து கழுத்தின் பின்புறம் புரண்டபடி உள்ளது.

8. *18 மாதங்களான ஆண் குழந்தை:* புருவங்களுக்குமேல் வெண்ணிறத் திட்டுகள் தீட்டப்பட்டுள்ளன. உச்சந்தலையும், தலையின் பக்கங்களும் மழிக்கப்பட்டுள்ளது.

தொடுபுழா வேளாளர்: Todupuzha Vellala

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. என் சுப்ரமணி அய்யருக்குக் கடப்பாடுடையேன். திருவாங்கூரில் நாஞ்சில்நாட்டு வேளாளரோடுகூட மலைப்பகுதியான தொடுபுழா வட்டத்தில் வேறு இரண்டு வேளாளர் சாதியினரும் உள்ளனர். இவர்கள் தென்காசி மற்றும் கும்பகோணம் வேளாளராவர். தென்காசியாரை ஐந்நூற்றில்லக்காரர் என்றே பெரிதும் அழைப்பர். கும்பகோணத்தார் முந்நூற்றில்லக்காரர் எனப்படுவர். இப்பெயர்கள் முதன்முதல் இவ்வட்டத்தில் வந்து குடியேறிய இவர்களுடைய குடும்பங்களின்

எண்ணிக்கையில் அமைந்தனவாகும். நாஞ்சில் நாட்டு வேளாளரைப் போலவே இவர்களும் பிள்ளை என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். ஒரு சிலர் கணக்கு என்ற சிறப்புக்குரிய முன்னிணைப்பையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

தென்காசி வேளாளர் முதலில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசி வட்டத்தில் வாழ்ந்துவந்தவர்கள். வழக்கு வரலாற்றின்படி ஒரு வடுக அரசன் இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஒருத்தியினை மணம் செய்துவைக்கும்படி கேட்டதால் இவர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாவர். இவர்கள் இவ்வாறு வந்து குடியேறிய சமயத்தில் தொடு புழாவை ஆண்டுவந்த வடக்கும்கூர் அரசர் இவர்களுக்குப் புகலிடம் தந்தார். கும்பகோணம் வேளாளர்தாங்கள் மலையாள சகாப்தத்தின் தொடக்கத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்திலிருந்து வந்து இங்குக் குடியேறியதாக நம்புகின்றனர். இவ்விரு பிரிவினரும் மலையாளத்தையே பேசுகின்றார்கள் என்றாலும் ஒரு காலத்தில் இவர்கள் தாய்மொழி தமிழாக இருந்திருக்க வேண்டும் என்பதனை இவர்கள் பேச்சுத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. சடங்குகள் தொடர்பான அழைப்பு ஓலைகளை இவர்கள் தமிழிலேயே எழுதுகின்றனர். ஐந்நூற்றில்லக்காரர் நாயர்களைப் போல ஆடையணிகளை அணிந்து வருகின்றனர். இருபிரிவினரும் குடுமியினை முன்பக்கமாகவே போட்டுக் கொள்கின்றனர். முந்நூற்றில்லக்காரர் வீட்டுப் பெண்கள், நாயர் மற்றும் ஐந்நூற்றில்லக்காரர் வீட்டுப் பெண்களைப் போலச் கொண்டையினை இடது பக்கமாக இடாமல் பாண்டி வேளாளரைப் போலப் பின்பக்கமாகவே இடுகின்றர். முந்நூற்றிலக்காரர் வீட்டுப் பெண்கள் தென்காசியாரைப்போல வெள்ளைச் சேலை கட்டாது தமிழ்நாட்டுப் பெண்களைப் போலப் பதினாலு முழத்தில் வண்ணச் சேலைகளையே உடுத்துகின்றனர். தென்காசியார் நாயர் பெண்களைப் போலத் தோடு முதலிய அணிகளை அணியக் கும்பகோணத்தார் பழைய பாணியிலான பம்பர், மேலிடு முதலியவற்றையே அணிகின்றனர். இவர்களுள் சிலர் கழுத்தில் நாகபடத் தாலி அணிகின்றனர். இவர்கள் சில பிரிவினர் மீன், இறைச்சி ஆகியவற்றை உண்பதனைக் கைவிட்டவர்களாகத் தங்களைச் சைவர் எனக் கூறிக் கொள்கின்றனர்.

பயிர்த்தொழிலே இவர்கள் சிறப்பாக மேற்கொண்டிருக்கும் தொழில். பத்ரகாளி, துர்க்கை ஆகிய இரண்டு மலைப்பகுதிகளுக்குரிய தெய்வங்களை இவர்கள் வழிபடுகின்றனர். கிரிக்கோடு பகுதியில் கிரிக்கோட்டு முறியில் உண்ணாமலைநாதர் எனப்படும் சிவனுக்குரிய ஒரு கோயில் உள்ளது.

அதற்கென மிகுதியான உடைமைகளை அது பெற்றுள்ளது. தென்காசி வேளாளருக்கு உரிய இக்கோயிலில் ஒரு மலையாளத்துப் பிராமணனே பூசாரியாக இருந்து வருகின்றான். அங்களம்மா கோவில், அண்ணாமலை மடம், வீர பத்ரன் கோயில் முதலியன கும்பகோணம் வேளாளருக்கு உரிய கோயில்களாக உள்ளன. இவர்கள் இவற்றுள் வழிபாடு நடத்துவதோடு வீரபத்ரன், கறுப்பன், பைரவன், மாரியம்மன், முத்தாரம்மாள் முதலிய இந்து சமயத்திற்குரிய சிறுதெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவர்களுடைய கோயில்களில் தொடுபுழா வட்டத்தில் வந்து குடியேறியுள்ள கிழக்கத்தியான்களான பிராமணர்களே பூசாரிகளாக உள்ளனர். இப் பிராமணர்கள் மேற்கொண்டுள்ள இந்தப் பணியினைப் பிற பிராமணர்கள் இழிவானதாகக் கருதுகின்றனர். கும்பகோணத்தார் கோயில்களில் சிறு தெய்வங்களின் பூசாரியாக இருப்பது குறிப்பாக இழிவிற்குரியதாகக் கருதப்படுகின்றது. இவர்கள் இப்பணியினை மற்றவர்கள் அறியாதபடி செய்து செல்கின்றனர். கும்பகோணம் பிரிவினரின் சாதித் தலைவன் மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் வட்டத்தில் வாழ்கின்றான். அவன் கட்டளைப்படி இவர்கள் தங்கள் இல்லங்களில் சிவனுடைய உருவத்தை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

எக்காரணம் கொண்டும் மணமுறிவு இவர்களிடையே அனுமதிக்கப்படுவதில்லை. கைம்பெண்கள் மறுமணத்திற்கும் இவர்கள் தடைவிதித்துள்ளனர். இந்தச் சாதியினைச் சேர்ந்த ஒருத்தி வடக்கும்கூர் அரசரின் மகளுடன் நட்புக் கொண்டிருந்ததாகவும் மணமான புதிதில் அவள் கணவன் இறந்த செய்தியினை அறிந்த அரசனின் மகள் அரசரை வற்புறுத்தி விதவையர் மறுமணத்தை அனுமதிக்கலாம் என ஆணை பிறப்பிக்கச் செய்ததாகவும், ஒரு வழக்கு வரலாறு வழங்கி வருகின்றது. ஒருத்தி பூப்பெய்தும் முன் மணம் செய்விக்கப்படவில்லையாயின் அந்தக் குறையினை நீக்க ஒரு சடங்கினை நிகழ்த்துகின்றனர். அதில் அச்சிறுமியின் சார்பில் அவளுடைய உறவினள் ஒருத்தி பங்கு பெறுவாள். திருமணச் சடங்கின் நான்காம் நாள் மணமகனும் மணமகளும் ஒருவருக்கொருவர் உடம்பில் எண்ணெய் தேய்த்து விட்டுக் கொள்வர். அதன்பின் நீர் நிறைந்துள்ள கொப்பரையினுள் பொன், வெள்ளி, மோதிரங்களை இட்டு அவற்றை மும்முறை தேடி எடுப்பர். இரு பிரிவு வேளாளரும் மக்கள் தாய முறையினையே மேற்கொள்கின்றனர்.

சிவலிங்கம், அருணாசலம், சிதம்பரம், ஆறுமுகம் முதலியன இவ்விரு பிரிவினருக்குமான பெயர்கள். இவை நாயர்களிடையே வழக்கில் இல்லை,

கும்பகோணம் பிரிவினரைவிட தென்காசியார் சமூகப்படி நிலையில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். தென்காசியார் பன்னிரண்டு நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்வதும் கும்பகோணத்தார் பதினாலு நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்வதுமே இதற்கான காரணமாகும். தென்காசியார் கோயில்களின் நாள் அம்பலத்துள் செல்வதோடு கூட நாயர்களைப் போல அதில் இடப்பக்கமாக நிற்பர். கும்பகோணத்தார் வெளிப் பிராகாரத்தில் பலிக்கம்பம் வரை மட்டுமே நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். தென்காசியாரிடமிருந்து பிராமணர்கள் மோர் பெற்றுப் பருகுவர். கும்பகோணத்தாரிடமிருந்து அவர்கள் அவ்வாறு பெறுவதில்லை. பாண்டி வேளாளர் தென்காசியார் வீட்டில் உணவு உண்பதும் அவர்களுக்குப் பெண்கொடுத்தலும் செய்யார். தென்காசியார் நாஞ்சில் நாட்டு வேளாளரோடு மணஉறவு கொள்வதல்லை.

தொகடர் - Togata

தொகடர் தெலுங்கு பேசும் நெசவாளர்கள். கடப்பை மாவட்டத்தில் எண்ணிக்கையில் மிகுதியாகக் காணப்படும் இவர்கள் ஏழை மக்கள் உடுக்கும் முரட்டுத் துணியினை நெய்கின்றனர். பெரும்பாலும் வைணவர்களான இவர்கள் பூணூல் அணிவதோடு வைணவப் பிராமணர்களையோ சாதானிகளையோ புரோகிதராக அமர்த்திக் கொள்கின்றனர். இறைச்சி உண்ணும் இவர்கள் தங்கள் சாதியினைச் சேர்ந்த கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். *1807* இல் புச்சனன்* தொகடர் பற்றி எழுதியுள்ளது வருமாறு: "கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லையாயினும் அவர்களை உடன்கட்டை ஏறுமாறு வற்புறுத்தும் பழக்கம் இவர்களிடையே இல்லை. பஞ்சாங்கம் எனப்படும் கிராமத்துச் சோதிடன் பிறப்பு, திருமணம், இறப்பு, சிரார்த்தம், புதுமனை புகுதல் ஆகியவற்றில் பங்குகொண்டவனாக ஒரு பணத்தைத் தட்சணையாகப் பெறுகின்றான். ஒரு நெசவாளி மற்ற சமயங்களில் இறைவழிபாட்டினை நிகழ்த்த ஒரு சாதானிகனை அழைத்துக் கொள்கின்றான். அவன் புரியாத மொழியில் சிலவற்றை முணுமுணுத்தவனாக வழிபாடு நிகழ்த்துபவனுக்குப் தன்னிடமுள்ள நீரினைத் தீர்த்தமாக வழங்குவான். அது சாதானி தன்னுடன் தான் போகும் இடமெங்கும் எடுத்துச் செல்லும் தெய்வ உருவத்திற்கு அபிடேகம் செய்த நீராகும்."

* அனந்தப்பூர் மாவட்ட விவரக் குறிப்பு (Gazetteer of the Anantapur Dist.)

தொகடர் தங்கள் தோற்றம் பற்றிக் கூறுகையில் தங்களைச் சௌடேஸ்வரியின் பிள்ளைகள் எனக் கூறிக் கொள்வர். அவள் கொஞ்சம் அரிசியினை நெருப்பிலிட்டபோது பல வீரர்கள் அந்த நெருப்பிலிருந்து தோன்றியதாகவும் அவர்களுடைய வழித் தோன்றல்களே தாங்கள் எனவும் கூறுவர். மற்றும் சிலர் பூப்பந்த முனிவரே தங்களுடைய மூதாதை எனக் கூறுவர். சௌடேஸ்வரி பற்றித் திரு பிரான்சிஸ்* பின்வருமாறு கூறுகின்றார்: தோகட சாதி நெசவாளர்களின் தெய்வமான சௌடேஸ்வரியின் வழிபாடு வேப்பமரத்தோடு தொடர்புடையதாக உள்ளது. அவள் வேப்ப மரத்தில் உறைவதாகக் கருதி இவர்கள் வேப்ப மரத்தை வழிபடுவர். அல்லது அந்த மரத்தின் அடியில் அவளைக் குறிக்கும் வகையில் ஒரு கல்லினை வைத்து தெலுங்குப் புத்தாண்டு நாள்போன்ற சமயங்களில் அவளை வழிபடுவர். இத்தகைய இவர்கள் வழிபாட்டில் பிற நெசவாளர்கள் பங்கு பெறுவதாகத் தெரியவில்லை. இந்த வழிபாட்டில் பெரும் அளவில் உயிர்களைப் பலியிடுவர். நந்தவரிகுல பிராம்ணர்கள் எனப்படும் பிராமணப் பிரிவினர் இச் சடங்குகளில் முக்கிய பங்கு பெறுகின்றனர். நந்தவரிகுலம் என்ற இந்தப் பெயர் கர்நூல் மாவட்டத்தில் உள்ள நந்தவரம் என்ற ஊரின் அடிப்படையில் அமைந்தாகும் அங்கு இந்தப் பிரிவின் தோற்றம் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. இவர்கள் எண்ணிக்கையில் மிகுதியாக வாழும் தத்பத்ரியில் வழங்கும் கதை வருமாறு: முன்னொரு காலத்தில் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஓர் அரசன் தன் மனைவியுடன் காசிக்கு யாத்திரை சென்றான். அங்கு அவன் தெரியாத்தனமாக இன்னதென்று விளக்க இயலாத ஒரு தீட்டுக்கு உள்ளானான். இதனால் பெரிதும் மனக் கலக்கமுற்ற அவன் சில பிராமணர்களை அழைத்துத் தனக்கு ஏற்பட்டுள்ள தீட்டைப் போக்குவித்தால் தன் நாட்டில் பாதியினைத் தருவதாகக் கூறினான். அவனுடைய இந்த வாக்குறுதியினைப் பின்னர் மெய்ப்பிக்கத் தக்க ஆவணம் ஒன்றைத் தரும்படி அவர்கள் வேண்டினர். அருகே கோயில் கொண்டிருந்த செடேஸ்வரியின் மீது ஆணையிட்டு அவளே இதற்குச் சான்றாவாள் என அவன் கூறினான். அவனுக்கு நேர்ந்த தீட்டு நீக்கப்பட்டபின் அவன் தன் ஊருக்குத் திரும்பினான். பின்னர் அந்தப் பிராமணர்கள் தெற்கு நோக்கி வந்து அவன் வாக்குறுதியினை நிறைவேற்றும்படி வேண்டினர். அந்த அரசன் தான் அதுபோல வாக்குறுதி அளித்ததாகத் தனக்கு நினைவில்லை எனக் கூறினான். அதன் பின்னர்

* மைசூர், மலபார் (கன்னடம்) வழியான பயணம். (Journey through Mysore, Canara and Malabar.)

அந்தப் பிராமணர்கள் காசிக்குச் சென்று சௌடேஸ்வரியினைத் தங்களோடு தெற்கே வந்து அந்த அரசன் வாக்குறுதி தந்ததற்காகச் சாட்சியம் சொல்லும்படி வேண்டினர். அவர்கள் தனக்கு முன்னால், தன்னைப் பின்னால் திரும்பிப் பாராதவர்களாகச் சென்றால் தான் அங்கு வருவதாக அவள் அவர்களிடம் கூறினாள். இதுபோன்ற பிற கதைகளில் நிகழ்வதுபோலவே இக் கதையிலும் அவர்களால் அவளிடம் உறுதி கூறியபடி திரும்பிப் பாராதவர்களாக நடக்க இயலவில்லை. நந்தவரத்தில் அவர்கள் திரும்பிப் பார்க்கவே அவள் அசையாது அங்கேயே நிலைகொண்டுவிட்டாள், அங்கு அவளுக்காக ஒரு கோயில் எடுக்கப்பட்டது. அந்தப் பிராமணர்களும் தென்னாட்டிலேயே தங்கிவிட்டவர்களாக தொகடர் தொடங்கிய சௌடேஸ்வரி விழாவில் பங்கேற்று வருகின்றனர். இவள் இந்துக்களின் சிறுதேவதைகளுள் ஒருத்தி அன்று என்றாலும் உயிர்ப்பலியில் மிகவும் திருப்தியுறுபவளாக உள்ளாள். தத்பத்ரியில் தொகடரோடு பிற சாதியினரும் இவளுக்கான திருவிழாவில் பங்கு பெறுகின்றனர்."

சௌடேஸ்வரியே தொகடனுரைக் காக்கும் குல தெய்வமாயினும் இவர்கள் பொலெரம்மா, எல்லம்மா, கொடம்மா போன்ற பிற தேவதைகளையும் வழிபடுகின்றனர்.

முதலில் துணிக்குச் சாயம் தோய்க்கும் தொழிலினையே தொகடர் மேற்கொண்டிருந்ததாகவும் அண்மைக் காலத்தில் கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக இவர்கள் பலர் இன்று பயிர்தொழிலை மேற்கொண்டவர்களாக உள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

பிற தெலுங்குச் சாதியாரிடையே இருப்பதைப் போலவே இவர்களிடையேயும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றின் பெயர்கள் வருமாறு:

பாத *(பழைய)*	கம்பபு *(கம்பம்)*
பானா *(பானை)*	மதக *(கலப்பை)*
நீலி *(நீலம்)*	சீலகர *(சீரகம்)*
அன்னம் *(சோறு)*	கோபலம் *(பிச்சை)*
மேகல *(ஆடு)*	சாமந்தி *(சாமந்திப் பூ)*
பெருமாள் *(தெய்வம்)*	குர்ரம் *(குதிரை)*
குத்திடி *(தீவட்டி)*	பண்டாரி *(பண்டாரகர்?)*

கோயில் வழிபாட்டுக்கான பூசாரிகள் எப்பொழுதும் பெருமாள் குலப் பிரிவினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுதலே வழக்கம். சாதி தொடர்பான செய்திகளை ஒரு குடியிருப்பில் பண்டாரிகள் இருப்பார்களாயின் அவர்களே சென்று தெரிவிப்பது வழக்கம். ஊர்வலங்களில் தீவட்டி ஏந்தி வருதலைக் குத்திடிக் குலப் பிரிவினரே மேற்கொள்கின்றனர். குர்ரம் குலப் பிரிவைச் சேர்ந்தவர்கள் குதிரை ஏறிச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இவர்களுக்கு உரிய ஊரவை பற்றி எதுவும் தெளிவாக கூறுவதற்கில்லை. தேவை ஏற்படும்போது கிராமப் பஞ்சாயத்துக்கான தலைவன் ஒருவன் தேர்ந்தெடுக்கப்படுகின்றான். தெலுங்கருக்குரிய புராண வழிபபட்ட சடங்குகளையே இவர்கள் திருமணம், சாவு போன்ற நிகழ்ச்சிகளை நடத்த மேற்கொள்கின்றனர். இறந்தவர்கள் சாய்ந்த நிலையில் வைத்துப் புதைக்கப்படுகின்றனர். சாவுச் சடங்கின் இறுதி நாளன்று சாதானி பத்மசாலேக்களுக்குத் தீர்த்தத்திற்குப் பதிலாகச் சாராயம் வழங்குவதைப் போலவே தொகடருக்கும் சாராயம் வழங்குகின்றான்.

தொகல - Tohala

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மலை சார்ந்த பகுதிகளில் பயிரிடுதலில் ஈடுபட்டுள்ள சிறு பிரிவினரான ஒரியர் எனவும் கஞ்சம் முகவர் பகுதியில் சில்லறை வணிகம் புரிவோர் எனவும் பதியப்பட்டுள்ளது.

தொலகாரி - Tolagari

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் முத்ராசாக்களின் ஓர் உட்பிரிவு எனப் பதியப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் தொலகாரியர் சிறு எண்ணிக்கையினரான பயிரிடும் சாதியார் எனவும் பாளையக்காரன்களைப் போல இவர்கள் முதலில் வேட்டைக்காரர்களாக இருந்தவர்கள் எனவும் பதியப்பட்டுள்ளது.

தொலர் - Tolar (wolf)

உறலேபைக்குகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். மொகேரிடையே தொலன என்ற இதனோடு ஒத்த குலப்பிரிவு உள்ளது. இவை நரி எனப் பொருள்படுவன.

தோல்கொல்லன் - Tolkollan

தோல்கொல்லன் அல்லது தோலன் என்போர் பற்றி *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தொகுத்துக் கூறப்பட்டிருப்பது வருமாறு: தோலில் பணிபுரிவதோடு சாயம் தோய்க்கும் தொழிலையும் செய்து வரும் இவர்கள் உடல் வளைத்து ஆடும் விளையாட்டுக்களை நிகழ்த்துவதோடு அதனைக் கற்றுத்தரும் ஆசான்களாகவும் விளங்குகின்றனர். வட்டிக் குருப்பு, சாயகுருப்பு, வில் குருப்பு என்ற பெயர்களும் இவர்களுக்கு வழங்கி வருகின்றன. தோல்கொல்லன்கள் பற்றித் திரு எ. சாட்டெர்ன் "தோல்பதனிடுதலும் தோல்தொழிலும்" பற்றியான தனிக்கட்டுரையின் கூறியுள்ளவை வருமாறு: சாதியில் கொல்லர்களான இவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலை விட்டுவிட்டுத் தோலில் தொழில் செய்தலை மேற்கொண்டவர்களாக உள்ளனர். மாப்பிள்ளாக்களே இவர்களைப் பெரிதும் பணிக்கு அமர்த்துகின்றனர். இச் சாதியில் உடன்பிறந்தவர்கள் இருவர் அல்லது மூவர் பொதுவாக ஒருத்தியை மனைவியாக வைத்து வாழும் தனித்த வழக்கம் உள்ளது. வாழ்க்கை வசதிகள் படைத்த ஒரு சிலரே தங்க. க்கெனத் தனியே மனைவியரை உடையவராக உள்ளனர். கள்ளிக்கோட்டையில் உள்ள வணிகவியல் பள்ளியின் தலைமையாசிரியரான எஸ். வைத்தியநாத அய்யர் மலபாரில் தோல் தொழில் தொடர்பாகத் தந்துள்ள விவரங்கள் வருமாறு:

அ. நாட்டுப்புற மற்றும் ஆங்கிலேயருக்குரிய அமைப்பிலான அடிபுதையரணங்கள் தயாரித்தல்.

ஆ. சேண வார் தயாரித்தல்.

இ. இந்தியர்கள் பயன்படுத்தும் செருப்புத் தைத்தல். இது மலபாருக்கே உரிய தனி அமைப்புடையது. இவற்றை இந்துக்கள் மற்றும் மாப்பிள்ளாக்குகள் சமூகத்தைச் சேர்ந்த அனைத்து வகுப்பாரும் பயன்படுத்துகின்றனர். ஆண்டுக்கு ஒருமுறை மேற்குக் கடற்கரைப் பகுதிக்கு வருகை தரும் அரேபியர் தங்களுடன் எடுத்துச் செல்ல இவற்றைப் பெரும் அளவில் வாங்குகின்றனர். ஓர் இணையின் விலை ரூ.*1-8-0* முதுல் ரூ.*5-0-0* வரை இருக்கும். தங்கச் சரிகை பதித்துத் சித்திர வேலை செய்யப்பட்டவை ரூ.*10* முதல் ரூ.*50* வரை விலை பெறுவன. இவற்றை வசதி படைத்த மாப்பிள்ளாக்களே வாங்குகின்றனர். மிதியடிகளில் "கிறீச்" ஒலி எழச் செய்ய முட்டையின் வெள்ளைக் கருவினைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய செருப்புக்களைத் தோல்பெருங்கொல்லன் மற்றும்

மாப்பிள்ளாப் பிரிவினரே கட்டுகின்றனர். மாப்பிள்ளாக்கள் இதில் நுட்பமான அலங்கார வேலைப்பாடுகளைச் செய்வதில் திறமை வாய்ந்தவர்களாக உள்ளனர்.

ஈ. கத்தி உறைகள் தயாரித்தல். நாயர், தீயர், மாப்பிள்ளா சாதிகளைச் சேர்ந்தவர்கள் தங்களோடு ஓர் அடி நீளமுள்ள கத்தியினை எப்பொழுதும் எடுத்துச் செல்லும் வழக்கம் உடையவர்களாக இருப்பதால் கத்தி உறைகள் தேவைப்படுகின்றன. இவற்றைப் பாணன்களோடுகூடத் தோல் பெருங்கொல்லன் மற்றும் மாப்பிள்ளாக்கள் ஆகியோர் தயாரிக்கின்றனர்.

உ. தோலால் கூடைகளும் செய்யப்படுகின்றன. இவை மிளகு, நெல் முதலியன கொண்டு செல்லப் பயன்படுத்தப்படுகின்றன.

ஊ. புடைப்பதற்கான முறங்களையும் தோலால் தயாரிக்கின்றனர். நெல், மிளகு முதலானவற்றைத் தூய்மைப்படுத்தும் களங்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

எ. மரக்கட்டைகள் பொருத்தி அமைக்கப்படும் மேலே தோல் வாரினை உடைய முட்டுச் செருப்புகள் மழைக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

தொல்ளைக்காதன் - Tollakkadan

1901 கணக்கெடுப்பில் சாணாரின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இவ்வாறு தங்களைப் பதிந்துகொண்டுள்ள சென்னையில் அரிசி விற்போர் சாணாருக்குரிய பட்டப்பெயரான நாடான் என்பதனைத் தரிக்கின்றனர். இதனோடு ஒத்த தொள்ளைக்காது என்பது கொங்கு வேளாளரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

தோல் மேஸ்திரி - Tol Mestri

செம்மான்களின் ஓர் உட்பிரிவு

தொண்டமான் - Tondaman

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தொண்டமான்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது: "தொண்டமான்கள் சுண்ணாம்புக்காரன்கள் (பார்க்க: தனித்தலைப்பு) எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் காணப்படும் சுண்ணாம்புக் காளவாய் போடுவோராவர். கள்ளரின் ஒரு கிளை

வழியினர் எனக் கூறப்படும் இவர்கள் தொண்டமான் நாடாகிய புதுக்கோட்டையிலிருந்தும் திருநெல்வேலிக்குச் சென்று குடியேறியவர்கள். இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் இன்று சுண்ணாம்புக் காளவாய் போடுவதோடு நாகசுரம் வாசித்தல், தவில் அடித்தல் ஆகியனவற்றையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். பிராமணர்கள் இவர்களுக்குப் புரோகிதம் செய்கின்றனர். என்றாலும் இவர்கள் இந்துக்களின் கோயில்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் மறவர்கள் இல்லங்களில் உணவுகொள்வர். சோழகன் என்பது இவர்களுக்குரிய பட்டப்பெயராகும். அதே குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: "செம்மான் சாதியில் தொண்டமான், தோல் மேஸ்திரி என்ற இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. இவர்களுள் முன்னவர் பின்னவர் பிரிவிலிருந்து பெண் கொள்வர். எனினும் பின்னவர் முன்னவர் பிரிவிலிருந்து பெண் கொள்ளும் வழக்கமில்லை." தொண்டமான் என்பது புதுக்கோட்டை அரசருக்கான குடும்பப் பெயர். புதுக்கோட்டை பிரிட்டிசார் ஆளுகையில் உள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களின் நடுவே உள்ள இந்திய நாட்டு அரசரால் ஆளப்படும் மாநிலமாகும். இதன் அரசர் கள்ளர் சாதியின் தலைவராவர். அம்மான் காசு எனப்படும் செப்புக்காசு இம்மாநிலத்தில் மட்டும் புழக்கத்தில் உள்ளது. நவராத்திரி விழாவின்போது பெருமளவில் வெளியிடப்படும் இதனை ஒன்பது நாள்களும் நாளும் அரசர் கொஞ்சம் அரிசியுடன் மக்களுக்கு வழங்குவார். இதன் ஒரு பக்கம் வெற்றி எனப் பொருள்படும் "விசய" என்ற சொல் பொறிக்கப்பட்டிருக்கும். *1761* இல் பிரிட்டிசார் பாண்டிச்சேரியினைக் கைப்பற்ற உதவிய கூட்டாளியான விசய ரகுநாத தொண்டமான் காலத்தில் இது முதன்முதலில் வெளியிடப்பட்டதால் இச் சொல் பொறிக்கப்பட்டதாதல் கூடும்.

தொண்டை மண்டலம் - Tondamandalam

பல்லவர் பழங்காலத்தில் ஆட்சி புரிந்த தொண்டை நாட்டைச் சேர்ந்த வேளாளரின் உட்பிரிவுக்கான பெயர்.

தொண்டி - Tondi

தொண்டியர் கஞ்சத்தில் வந்து குடியேறியுள்ள வங்காளத்தைச் சேர்ந்த நெசவாளர்கள்.* இப்பெயர் நூல்காரர் எனப் பொருள்படும். சாயம் ஏற்றாத

---

* பார்க்க: தண்டி. ரிஸ்லெ - வங்காளக் குடிகளும் குலங்களும்.
(Cf.Tanti, Risloey - Tribes and Castes of Bengal.)

முரட்டுக் காடாத்துணி நெய்வதே இச் சாதியாரின் பரம்பரைத் தொழில். தொண்டிகள் அனைவரும் காசியப என்ற ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். காசியபர் ஏழுப முனிவர்களுள் ஒருவரும் பரசுராமனின் குருவும் ஆவார். இவர்களிடையே புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகள் பல உள்ளன. இக் குலப்பெயர்களுள் சில பிஸ்வாலோ, தாசோ, பாலொ, பொனொ, சொண்டொ, பிரிமனிகொ, கொரொனொ, பேகர, மகாபாத்ரொ எனப் பட்டப்பெயர்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவர்களுடைய திருமணம், சாவு ஆகிய சடங்குகள் ஒரியர் வழிப்பட்டன. திருமணத்தின் நான்காம் நாளன்று பண்டாரி (அம்பட்டன்) ஒருவனுக்குப் புதுச்சட்டியில் அவலும் வெல்லமும் வைத்துத் தருவர். அவன் அவற்றை அங்குக் கூடியுள்ளவர்களுக்கு விற்றுக் கிடைக்கும் தொகையினை வைத்துக் கொள்வான். இவர்கள் இறந்தவன் பிணத்தை மற்றச் சாதியாரைப் போல வீட்டில் வைத்துக் குளிப்பாட்டாமல் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றே குளிப்பாட்டுகின்றனர்.

தொப்பத்தாலி - Toppa Tali

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வாணிகருள் சிலருக்கான பெயர். இச்சாதியினைச் சேர்ந்த மணமான பெண்களின் தாலி அமைப்பினால் இவர்கள் இப்பெயர் பெற்றனர்.

தொரை - Torai

ஒரியர் சாதிகள் பலவற்றுக்கும் உரிய பட்டப்பெயர்.

தொரெயர் - Toreya

தமிழ்நாட்டில் கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களில் மட்டும் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படும் கன்னடியர் தொரெயர். முதலில் மீனவர்களாகவும் பல்லக்குத் தூக்கிகளாகவும் இருந்த இவர்களுள் பெரும்பாலோர் இன்று பயிர்த்தொழிலை மேற்கொண்டவர்களாக உள்ளனர். ஆற்றுத்துறையினைக் குறிக்கும் துறை என்ற சொல்லிலிருந்து இவர்கள் பெயர் வந்ததாகக் கூறுவர். இவர்களில் பெரும்பாலோர் இன்று வெற்றிலைக் கொடிக்கால் போடுகின்றனர். கோயமுத்தூரில் நான் நேரில் விவரம் கேட்டறிந்த இச் சாதியாருள் வெற்றிலை மற்றம் கரும்பு பயிரிடுவோர், புகையிலை விற்போர், ரொட்டிக் கடைக்காரர், துணி விற்போர், ஒப்பந்த வேலை பார்ப்போர், பெட்டிக்கடைக்காரர், காவலர் ஆகிய பல தொழில்களை மேற்கொண்டவர்களும் இருந்தனர்.

கோயமுத்தூரைச் சேர்ந்த தொரெயர்கள் பின்வரும் அகமணக்கட்டுப்பாடு உடைய குலங்களைப் பதிந்துள்ளனர்:

இலை - வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவோர்.
சுண்ணம் - சுண்ணாம்புக் காளவாய் போடுவோர்.
காஜுல் - கண்ணாடி வளையல்.

யமுனைக் கரையில் மீனவனாக இருந்தவன் மகளான கந்தவதி எனப்படும் மச்சகந்தியின் வளையல்களிலிருந்து தொரெயர் சாதி தோன்றியது எனக் கூறுவர். அவள் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த சந்தனு மன்னனுக்கு மணம் செய்விக்கப்பட்டாள். அவன் மகாபாரத வீரர்களின் மூதாதையருள் ஒருவனாவான்.

தொரையருள் வழக்கில் உள்ள புறமணக்கட்டுப்பாடு உடைய பல குலப் பிரிவுகளுள் சில வருமாறு:

பெள்ளி - வெள்ளி, இப்பிரிவினர் வெள்ளி மெட்டியினை அணிவதில்லை
நாகம் - நாகம். இப்பிரிவினர் திருமணத்தின்போது நாகங்களின் உறைவிடமான புற்றுக்களை வழிபடுவர்.
ஆழ்வார் அல்லது கருடன்
சின்னம் - பொன்
கஞ்சுகாஜெ - சலங்கை. நடனத்தின்போது காலில் அணிவதற்கான வெங்கலத்தாலான அணி.
உருக்கத்தி - உருக்காலான கத்தி
வஜ்ஜிரம் - வைரம்
வசிட்டர் - இந்து சமய முனிவர்
மோகில - மேகம்
ஒன்னெ - (*Perprtrocapus Maraupium*) இப்பிரிவினர் இந்த மரத்தின் அடிமரத்திலிருந்து வடித்தெடுக்கப்பட்ட பாலினைக் கொண்டு நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வதில்லை.
ராக்கதன் - ஓர் அரக்கன். இப்பிரிவினர் ஓர் அரக்கனை

வெற்றி கொண்ட விழாவான தீபாவளியினைக் கொண்டாடுவதில்லை.

எருமை - எருமை

இச் சாதியின் சாதித் தலைவன் எசமான் என்று அழைக்கப்படுகின்றான். தளவாயி என்பவன் எசமானனுக்குக் கீழே பணியாளனாக உள்ளான். சாதிக்குரிய செய்திகளை அனைவருக்கும் போய்த் தெரிவிப்பவன் கொண்டிகாரன் எனப்படுவான். இந்த மூன்று பதவிகளும் பரம்பரை உரிமை உடையவை. சாதியாருக்குரிய கோயிலில் நடைபெறும் சாதிச் சபைக் கூட்டங்களில் தலைமை தாங்குபவன் எசமான். ஒவ்வொரு குடும்பத்தையும் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர் சாதிச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்ள உரிமை உடையவர். சபைக் கூட்டத்திற்குக் காலங்கடந்து வருபவர்கள் சபையோர் முன் தரையில் விழுந்து வணங்க வேண்டும். சபையில் சாட்சியம் உரைப்பவர்கள் முதலில் கொண்டிக்காரன் சொல்வதுபோலச் சொல்லிச் சத்தியம் செய்தல்வேண்டும். அவன் சாட்சியம் அளிக்க உள்ளவர்களைத் தரையில் வரைந்துள்ள ஒரு வட்டத்தினுள் நிறுத்திப் பின்வருமாறு தான் சொல்வதை அவர்களைச் சொல்லச் செய்வான்: "தெய்வத்தின் முன்னும் சபையில் கூடியுள்ள பெரியவர்கள் முன்னும் மேலே உள்ள வானத்திற்கு கீழே பூமியின் மேல் நின்றபடி நான் உண்மையினை மட்டுமே கூறுவேன்." இவ்வாறு அவனைக் கூறச் செய்தபின் கொண்டிக்காரன் தரையில் உள்ள மண்ணில் ஒரு துளியினை எடுத்து அதனைச் சாட்சியம் கூறுபவன் தலைமீது போடுவான். ஒருவனைச் செருப்பால் அடிப்பதாக வாயால் மட்டும் கூறும் குற்றத்திற்காக ஒருவன் சாதியைச் சேர்ந்த இருபத்தைந்து பேருக்கு உணவளிக்க வேண்டும். அவன் செருப்பைக் கையால் எடுத்திருப்பானாகில் அந்தக் குற்றத்திற்கு ஐம்பது பேருக்கு உணவளிக்க வேண்டும். செருப்பால் அடித்திருப்பானாகில் நூறு பேருக்கு உணவளிப்பதோடு கூடச் சிறுதொகையினையும் தண்டமாகச் செலுத்த வேண்டும். அத்துடன் செருப்பால் அடித்தவனும் அடிபட்டவனும் கோயிலில் தங்களைத் தீட்டுப் போக்கிக் கொள்ளும் சடங்கிற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். விளக்கு மாற்றால் அடிப்பதாகச் சொல்வதும் அடிப்பதும் ஆகிய இரண்டிற்கும் மேற்கூறியவாறே தண்டனை வழங்கப்படும். கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுபவர்கள் சாதிவிலக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்தகைய நடத்தையில் ஈடுபட்ட ஆண், பெண் இருவருள் யாரேனும் ஒருவர் இறந்த பிறகே மற்றவரைச் சாதியில் சேர்த்துக் கொள்வர். அப்போது அவன் சாதியினைச் சேர்ந்த பலருக்கும்

உணவளிப்பதோடு தண்டத்தொகை செலுத்துவதோடு சாதியார் முன் விழுந்து வணங்கவும் வேண்டும். அவனைப் புளியம் மிளாரினால் வெளுப்பர். பின் எஜமானின் பாதங்களை அலம்பி அவனை வணங்கவேண்டும். எஜமான் அதன்பின் அவன் வாயில் எரியும் சிறு கர்ப்பூரத்தையிட்டு அவன் தீட்டினைப் போக்குவான்.

மணமான ஒருத்தி பூப்படைந்தவுடன் அவளை அவளுடைய தந்தையின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். அங்கு அவளுடைய கணவன் அவளுக்காக அத்தி மரத்தின் (*Ficus glomerata*) இளங்கிளைகளைக் கொண்டு ஒரு குடிசை அமைப்பான். அதில் தங்கியிருந்தபின் இறுதி நாளன்று அக் குடிசை பிடுங்கி எறியப்படும். அதற்கு அவள் நெருப்பிடுவாள். வீட்டினைத் தீட்டு நீங்கித் தூய்மை செய்தபின்னர், அவள் வீட்டைச் சேர்ந்த பெண்கள் எசமான் இல்லத்திற்கும், சாதியினைச்சேர்ந்த மற்றவர்களின் இல்லத்திற்கும் சென்று தங்கள் வீட்டில் நடக்கவுள்ள சடங்கிற்கு வரும்படி அழைப்பர். இவ்வாறு அழைக்கப்படும் வீட்டாரின் கதவுகளில் கொஞ்சம் மஞ்சள் கலவையைப்பூசி வருவர். உறவினர்களும் சாதியைச் சேர்ந்தவரும் தட்டுக்களில் வெற்றிலை முதலியவற்றை ஏந்தியவர்களாகத் தெருவில் ஊர்வலமாக வருவர். அந்தச் சிறுமியினை ஒரு மணைப் பலகையில் அமர்த்தி அத்தட்டுக்களை அவள் முன் வைப்பர். அரிசி மாவு, பழம், வெற்றிலை முதலியவற்றை அவள் ஆடையில் முடிந்தபின் அவளை வீட்டினுள் அழைத்துச் செல்வர். பூப்படைந்த சிறுமி மணமாகாதவளாயின் அவள் தங்குவதற்கான குடிசையினை அவள் தாய்மாமன் கட்டுவான்.

இச் சாதியார் திருமணம் எப்பொழுதும் மணமகன் இல்லத்திலேயே நடைபெறும். தொரெயர் சாதியினைச் சேர்ந்த அரசன் ஒருவன் மகளை, மணமகள் இல்லத்திற்கு மணம் செய்விப்பதாக அழைத்துச் சென்று கொலை செய்த காரணத்தினாலேயே இவ்வாறு மணமகன் இல்லத்திலேயே மணம் நிகழ்த்தப்படுவதாக ஒரு வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது. மணமகன் தந்தையும் உறவினர்களும் மணமகள் இல்லம் சென்று பணம், துணிமணிகள், அணிகள் முதலியனவற்றை அன்பளிப்பாக வழங்குவர். இவர்கள் ஐந்து சுமங்கலிகளை வாழ்த்தி வழிபடுவதோடு அவர்களுக்கு நல்ல விருந்தும் படைப்பர். மணமகள், மணமகன் ஆகிய இருவர் இல்லத்திலும் மணப்பந்தலிடப்படும். மணமகள் சார்பில் அவள் வீட்டுக்கு ஐவரும் மணமகன் சார்பில் அவன் வீட்டுக்கு ஐவருமாகப் பத்துச் சுமங்கலிகள் சென்று நெல் குற்றுவர். இந்தப்

பத்துப் பேரும் பின்னர் குயவன் வீட்டுக்குச் சென்று வண்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட ஐந்து திருமணப் பானைகளைக் கொண்டு வருவர். இவற்றுள் மூன்றினை அவர்கள் குளத்திற்கு எடுத்துச் சென்று நீர்கொண்டு வருவர். அடுத்த நாள் மணமகனும் மணமகளும் எஞ்சிய இரண்டு பானைகளைக் கொண்டு சென்று நீர் நிரப்பி வருவர். இப்பானைகள் ஐந்து குடும்பத்திற்குரிய தெய்வங்களாகப் பாவிக்கப்பட்டு மணப்பந்தலில் வைக்கப்படும். மணமகன் உறவினர்கள் பன்னிரண்டு வகை அணிகளையும் ஒரு புதுத்துணியினையும் பூ முதலியவற்றையும் எடுத்துக் கொண்டு எசமான் வீட்டிற்குச் சென்று அவனையும் அழைத்துக் கொண்டு மணமகள் இல்லம் செல்வர். பின் அவளைக் குளிக்கச் செய்து அணிமணிகளால் அலங்கரிப்பர். ஒரு பிராமணன் பூசை நிகழ்த்திய பின்னர் அவள் நெற்றியில் பொன் அல்லது வெள்ளியாலா т மண்டைக்கட்டு என்னும் அணியினை அணிவிப்பான். அதன்பின் அவளை ஊர்வலமாக மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். இதற்கிடையே பிராமணன் மணமகன் இல்லத்திலும் பூசை நிகழ்த்தி அவனுக்கு மண்டைக் கட்டினை அணிவித்திருப்பான். மணமகன் பூணூல் அணிந்தவனாகக் கையில் கட்டாரியுடன் மணப்பந்தலில் ஒரு திரைக்குப் பின் வந்து அமர்வான். மணமகள் திரையினை மும்முறை வலம்வந்தபின் மணமகன் திரைக்கு முன் அமர்வாள். பிராமணன் பூசை செய்தபின் மணமக்களுக்கு உபதேசம் செய்வான். அதன்பின் திரை சிறிது தாழ்த்தப்படும். மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். மணமகள் பெற்றோர் மணமகன் கையில் சிறிது எள்ளினை இட்டு நீருற்றியவர்களாக தங்கள் மகள் அவனுக்கு உரியவளாகிவிட்டதாகவும் அவளைக் காப்பாற்ற வேண்டும் எனவும் கூறுவர். தாலியினைக் கூடியுள்ளவர்கள் வாழ்த்தியபின் பிராமணன் மணமகனிடம் தருவான். மணமகன் அதனை மணமகள் கழுத்தில் கட்டுவான். பின் திரையகற்றப்பட்டு மணமக்கள் அருகருகே அமர்வர். பின் புனித நெருப்பு மூட்டப்பட்டபின் அவர்கள் கரங்கள் இணைத்து வைக்கப்படும். அவர்கள் ஆடைகளின் முனைகள் முடியப்பட்டபின் அவர்கள் பந்தலைவிட்டு வெளிவந்து அம்மிக்கல்லினை மிதித்தவர்களாக அருந்ததி பார்ப்பர், மீண்டும் பந்தலை அடைந்து அவர்கள் அமர்ந்த பின்னர் பெரியவர்கள் அவர்கள் தலைமீது மஞ்சளிட்டுக் கலக்கப்பட்ட அரிசியினைத் தூவி வாழ்த்துவர். நான்காம் நாள் மணமக்கள் மீண்டும் பந்தலில் வந்து அமர்வர். வெள்ளை, சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு ஆகிய ஐந்து வண்ணங்கள் கலக்கப்பட்ட சமைத்த சோற்றினைத் ஐந்து தட்டுக்களிலிட்டு மற்றொரு தட்டில் ஒன்பது திரிகளிட்டு விளக்கேற்றி அவற்றை அவர்கள் முன் ஆரத்தி சுற்றுவர். திருமணமான ஐந்து ஆண்களும் ஐந்து பெண்களும் ஒரு கயிற்றினைப் பிடித்தவர்களாக

மணமக்களைச் சுற்றி வட்டமாக நிற்பர். அந்த வட்டத்திற்குள் மணமகள் உடன்பிறந்தவன் அரசிலைக் கொத்து ஒன்றினை ஏந்தியவனாக நிற்பான். மணமகன் தன் இரு கரங்களையும் சேர்த்துக் குவித்தவனாக நிற்கச் சிறிய அரிசிப் புட்டுகளை அவன் தலை, தோள்கள், முழங்கை, முழங்கால் ஆகியவற்றின் மீதும் மணமக்களின் விரல்களின் இடையேயும் வைப்பர், அதன் பின்னர் அவர்கள் குளித்துக் கையில் வெற்றிலையினைத் தாங்கியவர்களாக நான்கு திசைகளையும் தாழ்ந்து வணங்குவர். பந்தலில் உள்ள பன்னிரண்டு கம்பங்களுக்கும் மணமகன் நாமம் அல்லது விபூதி அணிவிப்பான். மணமகள் ஒவ்வொருகம்பத்தின் முன்னும் சிறிது பொங்கலையும் நீரையும் படைத்து கர்ப்பூர ஆரத்தி காட்டிப் பூசை செய்வாள். பின் அவர்கள் மணமகள் இல்லத்திற்குச் செல்வர். மணமகனோடு உடன்பிறந்தவள் அவர்களை மணமகள் இல்லத்தின் வாசலில் மறித்து நிறுத்தி அவர்களுடைய குழந்தையை அவளுடைய குழந்தைக்கு மணம் செய்விப்பதாக வாக்குறுதி பெற்ற பின்னரே மேலே செல்ல அனுமதிப்பாள். மணமகள் குளம் ஒன்றுக்குச் செல்லும் வழியில் கொஞ்சம் நெல்லை விதைத்தவளாக சென்று குளத்திலிருந்து ஒரு பானையில் தண்ணீர் கொண்டுவந்து அவளுடைய கணவனின் கைகால்களைக் கழுவுவாள். பின்னர் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் சிறிது பால்சோறு ஊட்டிவிட்டுக் கொள்வர். அவன் கையலம்பிய பின் மணமகளின் உடன்பிறந்தவன் மணமகன் கைவிரலில் ஒரு மோதிரம் அணிவிப்பான். ஒரு தட்டில் வெற்றிலை பாக்குக் கொண்டுவந்து வைப்பர், அவற்றில் மூன்று கைப்பிடி அளவு எடுத்து மணமகன் ஒரு துணியில் வைத்து முடிவான், பின் மணமக்கள் கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்துவர். ஐந்தாம் நாள் மண்பானைகளை மணமக்கள் ஆற்றுக்கு எடுத்துச் செல்வர். அங்கிருந்து திரும்பி வந்தபின் சுமங்கலிகள் ஐவரை வழிபட்டு அவர்களை உண்ணச் செய்வர். மணமக்கள் ஒழுக்கம் உடையவர்களாக நடந்து கொள்வார்கள் என்பதனுக்கு உறுதி கூறுபவர்களாக ஐந்து ஆண்கள் முன்வந்து, கூடியுள்ளவர்கள் முன்னிலையில் அதற்குத் தாங்கள் பொறுப்பு எனக் கூறுவர். அன்று மாலை மணமக்கள் மணமகள் இல்லம் செல்வர், அங்கு ஒருவர் மீது மற்றவர் எண்ணெண் பூசிவிட்டு மஞ்சள் நீரில் குளிப்பர், அதற்கும் மறுநாள் மணமக்கள் மணமகன் இல்லம் திரும்புவர்.

இறந்த தொரெயனுடைய பிணத்தைத் தென்னோலையும் திருகு கள்ளியும் பயன் படுத்திப் போடப்பட்ட பந்தலில் கிடத்துவர். இறந்தவன் நெற்றியிலும் அவன் மனைவியின் நெற்றியிலும் சமயச் சின்னங்கள்

அணிவிக்கப்படும். இறந்தவனுடைய மகன் பூணூல் அணிந்து கொள்வான், இவர்களுடைய சாவுச் சடங்குகள் பெரிதும் ஒட்டேக்களின் சாவுச் சடங்குகளை ஒத்தவை., புதைகுழியின் மேல் ஒரு மேடை அமைப்பர். பறையன் ஒருவன் புதைகுழியின் வடகிழக்கு மூலை தவிர எஞ்சிய மூன்று மூலைகளிலும் எருக்கம் கொத்துக்களை இடுவான். அந்தக் கொத்துக்களின் மீது இறந்தவனுடைய மகன் காசினை இடுவான். நீருள்ள பானையினையும் கையில் கொள்ளியினையும் ஏந்தியவனாக அவன் புதைகுழியினைச் சுற்றி வரும்போது அவனுடைய தாய்மாமன் புதைகுழியின் தலைமாட்டில் நின்றவனாக பானையில் பொத்தலிடுவான். இறந்தவனுடைய மனைவி மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்களில் புதிய சேலையுடுத்து மலர்சூடி அணிமணிகள் பூண்டவளாகப் புதைகுழி உள்ள இடத்திற்குச் சென்று பால், நெய், இளநீர், சந்தனம், கர்ப்பூரம் முதலியவற்றைப் படைப்பாள். புதைகுழியின் தலைமாட்டில் ஐந்து கற்களை மஞ்சளும் எலுமிச்சம் சாறும் பூசி வைத்து வழிபடுவர். கைம்பெண்ணாகி விட்டவள் புதைகுழியினை மும்முறை சுற்றி வந்து தலைமாட்டில் அமர்வாள். அவள் உடன்பிறந்தவன் அவள் கரங்களைப் பற்றிக் கொள்ள அவள் கணவன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தன் அவள் வளையல்களை உடைப்பான். அவள் தன் தாலியினை அறுத்துக் கூந்தலில் உள்ள மலரோடு புதைகுழி மீது எறிவாள். அவள் அணிகள் களையப்பட்ட பின் அவளை ஒரு சேலையில் போர்த்து ஆற்றுக்கு அழைத்துச் செல்வர். அங்கு அவள் பசுஞ்சாணத்தைத் தேய்த்துக் கொண்டு குளிப்பாள். இறந்தவனின் மகனும் பிற உறவினர்களும் வெண்ணெய் முதலியனவற்றை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் செல்வர். கோயிலில் ஒரு பிராமணன் பூசை செய்தபின் கோயிற் கதவுகளை மூடுவான். இறந்தவனின் மகன் அக் கதவுகளுக்கு முதுகைக் காட்டியவனாக நின்று அந்த கதவின்மீது கொஞ்சம் வெண்ணெயினை வீசுவான். பின்னர் பிராமணன் கதவுகளைத் திறப்பான். இவ்வாறு மும்முறை வெண்ணெய் வீசப்படும். ஏழாம் நாள் புனித நீர் தெளித்துத் தீட்டினைப் போக்குவர். அன்று சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு உணவளிக்கப்படும். கணவனை இழந்த ஒருத்தி கோஷாவாக மூன்று மாதங்கள் தனித்திருப்பாள். ஆண்டுதோறும் இவர்கள் சிரார்த்தம் நடத்துகின்றனர்.

தொரெயர் சிவன், விட்டுணு ஆகிய இரு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். அயோத்திராமனை தனிச் சிறப்புடன் வழிபடுவர். கோரியம்மாவிற்கு மறி, கோழி ஆகியவைகளைப் பலியிடுவர்.

தொரெயர் - Toreya

நீலகிரியினைச் சேர்ந்த படகரின் ஓர் உட்பிரிவு.

தோட்டர் - Tōta (garden)

பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள பலிசரின் ஓர் உட்பிரிவாகவும் போயர், செஞ்சு, வாதபலிசர் (அல்லது மீள), முத்ராசர், பெந்து சவரர் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பெயராகவும் பதியப்பட்டுள்ளது. இதற்குச் சமமான தோட்ட என்பது காவு, ஏனாதி சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலமாக உள்ளது. தோட்ட தேவுரு தீகலர் தோட்டக்காரர் மற்றும் பயிரிடுவோரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

தோட்டக்கீரை - Tōta kūra (*Amaranthus gangeticus*)

கம்மரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

தொத்தல அல்லது தொட்டதி - Toththala or Tottadi

வெலமரின் ஓர் உட்பிரிவு.

தோட்டி - Toti

கிராமத்தின் சமூக ஊழியருள் தோட்டியும் ஒருவன். இப்பெயர் தோண்டு என்பதிலிருந்தோ சுற்றிவருதல் எனப் பொருள்படும் தொட என்பதிலிருந்தோ வந்ததாகக் கொள்வர். ஊர்ச் சபையின் முன் ஊராரை வந்து கூடுமாறு பலவிடங்களுக்கும் சென்று செய்தி தெரிவித்தல் தோட்டியின் கடமையாகும். சமூகத்திற்குப் பயனுடைய பணியினை மேற்கொண்டிருக்கும் தோட்டியைப் பற்றி மாவட்ட அலுவலர் ஒருவர் பின்வருமாறு கூறினார்:* "கிராமத்தில் துப்புரவுப் பணி அனைத்தும் தோட்டிக்கே உரியதாகும்., இவன சாதியில் மிகத் தாழ்ந்தவனாகையால் எப்பணியினை ஏவினாலும் அதனை மறுப்பேதும் கூறாமல் செய்யக் கடமைப்பட்டவன். கேட்பாரற்ற அனாதைப் பிணங்களை அப்புறப்படுத்துதலும், அதனைப் புதைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் இவன் பொறுப்பே. தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டவர்களான வழிப்போக்கரும் மற்றவரும் தங்கும் சத்திரம், சாவடிகளைத் துப்புரவு செய்வதுபோன்ற ஒவ்வாப்பணிகளும் இவர்கள் தலையிலேயே விழும். இந்த இழிந்த பணிகளை

* சென்னை மெயில் நாளிதழ், *1906*. (Madras Mail, 1906)

மேற்கொண்டு செய்து வந்தாலும் இவன் கிராமத்தவர்களின் நம்பிக்கைக்கு மிகுதியும் உரியவனாக உள்ளான். இவன் மாதம் ரூ.3 முதல் ரூ.4 வரை மிகக் குறைந்த ஊதியம் பெற்று வருவதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இவனுடைய நேர்மை வியப்புக்கு உரியதாகவே உள்ளது. கிராமத்தில் கிராம அதிகாரிகளால் பெறப்படும் பல ஆயிரம் ரூபாய் வரிப்பணத்தை அரசின் கருவூலத்தில் கொண்டு சேர்க்கும் பொறுப்பை இவனை மட்டுமே நம்பி ஒப்படைக்கப்படுவதே இவன் நேர்மைக்குச் சான்றாகும். தோட்டியின் சுறுசுறுப்பை விளக்கும் வகையில் "தோட்டி மாதிரி உழைத்தால் தொண்டமான் மாதிரி வாழலாம்" என்ற பழமொழியும் வழக்கில் உள்ளது.

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தோட்டி என்பது சக்கிலியன் சாதியின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த தோட்டியினைப் பற்றித் திரு எல். ரைஸ்* கூறுவதாவது: "கிராம ஊழியருள் கடைநிலைப்பட்டவன் தோட்டியே. பயிரிட்ட நாளிலிருந்து விளைச்சல் களஞ்சியத்திற்கு வந்து சேரும்வரை பயிருக்குக் காவலிருக்கும் தலையாரியின் உதவியாளனும் இவனே.

தமிழ்நாட்டில் நகரசபைகளில் துப்புரவுப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டுள்ள ஒரிய உறட்டிகளின் தமிழ்ப் பெயர், ஒதிய தோட்டி என்பதாகும்.

தொட்டியன் - Tottiyan

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் திரு பிரான்சிஸ் தொட்டியன்கள் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்: "தொட்டியன்கள் தெலுங்கு பேசும் பயிரிடுவோர். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தொட்டியன்கள் எனப்படும் கம்பளத்தான்கள் பன்றிகள் வளர்த்தபடியும், பாம்பாட்டியபடியும், பிச்சையெடுத்தபடியும் அலைந்து திரிபவர்கள் எனக் கூறப்படுகிறது. திருநெல்வேலியைச் சேர்ந்த காட்டுத் தொட்டியன்களும் இது போன்றே வாழ்க்கை நடத்துவதாகக் கூறப்படுகிறது. திருநெல்வேலியினைச் சேர்ந்த தொட்டியன்களின் சாதித் தலைவன் மண்டைப் பெரிய தனக்காரன் எனவும் சேர்வைக்காரன் எனவும் அழைக்கப்படுகின்றான். இவர்கள் தங்கள் திருமணத்தை வீட்டில் நடத்தாமல் ஊர்ப் பொதுவிடத்தில் பச்சை இலைகளால்

---

* மைசூர் மற்றும் குடகு விவரக் குறிப்பு (Mysore and Coorg Gazetteer.)

பந்தலிட்டு நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. மணமகக்கள் மிகுந்த செல்வம் உடையவர்களாயினும் திருமண விருந்தின்போது அவர்கள் கம்பஞ்சோறும் கொள்ளுப் பருப்புமே உண்ண வேண்டும். சதி பாய்ந்து உயிர்துறந்த ஜக்கம்மா, பொம்மக்கா என்ற பெண்களையே இவர்கள் தங்கள் குலதெய்வமாகப் போற்றிக் கொண்டாடுகின்றனர். இவர்கள் சாதிப் பெண்கள் ஒழுக்கத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. வயது வேற்றுமை பாராது சிறுவர்களை அவர்களுடைய அத்தை மகள் அல்லது மாமன் மகளுக்கு மணமுடிக்கும் வழக்கம் உள்ளது. அவன் மிகச் சிறுவனாக இருப்பின் வயது வந்த அவனுடைய மனைவியோடு உடலுறவுகொண்டு மகனுக்காகப் பிள்ளைப் பெறும் பொறுப்பினை அவனுடைய தந்தையே ஏற்றுக் கொள்ள வேண்டும். மணமுறிவும் மறுமணமும் எத்தகைய தடையுமின்றி நிகழ்த்தப்படுகின்றன. மூதாதையர் வழிபாட்டின்போது இவர்கள் பொங்கலும் சாராயமும் படைப்பர், நரி, எலி ஆகியவற்றின் இறைச்சியினையும் மற்றவர்கள் எச்சிலையும் காட்டுத் தொட்டியன்கள் உண்பர். தொட்டியர் சாதிப் பெண்கள் பிராமணர்கள் இல்லங்களில் உணவு கொள்வதில்லை. இதற்கான காரணம் விளங்கவில்லை. ஆண்களுள் சிலர் தங்கள் கால்களில் வெள்ளியாலான தண்டை அணிவதோடு ஒரு தோளில் கடகமும் அணிகின்றனர். பெண்கள் பொது வழக்கப்படி இரண்டு கைகளிலும் வளையல் அணியாமல் இடக் கையில் மட்டுமே வளையல் அணிகின்றனர். மதுரையைச் சேர்ந்த சமீன்தார்களுள் சிலர் இச் சாதியைச் சேர்ந்தவர்களாவர். நாயக்கன் என்பது சாதிக்குரிய பட்டப் பெயராகும்.'' *1901* கணக்கெடுப்பின்போது மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கூடுலுக்காரன், தொட்டியன் சாதியின் ஒர் உட்பிரிவினராகப் பதியப்பட்டுள்ளது. உருமிமேளம் வாசிக்கும் உருமிக்காரன் மதுரை மாவட்டத்தில் தொட்டியன் என அழைக்கப்படுகின்றான். பிற மாவட்டங்களில் இத்தொழில் புரிவோர் பறையர் எனப்படுகின்றனர்.

''தொட்டியர் எனப்படும் கம்பளத்தார் மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர் மாவட்டங்களில் பயிரிடுதலில் ஈடுபட்டுள்ள தெலுங்கு சாதியார் ஆவர். இவர்கள் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையைச் சார்ந்த பகுதிகளை வெற்றி கொண்டு விசயநகா அரசர்களின் படைவீரர்கள், பாளையக்காரார்கள் ஆகியோரின் வழித்தோன்றல்கள் ஆதல் கூடும். இவர்கள் தங்களைக் கண்ணனின் ஆயர் குலத்தைச் சேர்ந்த எட்டாயிரம் கோபியர் (இடைச்சியர்) மகளிரின் வழிவந்தவர்கள் எனப் பெருமையோடு கூறிக் கொள்வதோடு தொடக்கத்தில் கால்நடைகளை மேய்த்தலும் வளர்த்தலுமே

தங்கள் குலத்தொழிலாக இருந்தது எனக் கூறிக் கொள்வர். கோலர், எருக்கோலர் என்பன தெலுங்குக் கோல்லர், யெருகோல்லருக்கான தமிழ்ப் பெயர்களாம். இவை தற்பொழுது ஆட்டிடையர் சாதியாக உள்ளது. முன்பு இவை ஆட்டோடுகூடக் கால்நடைகளையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த சாதிகளாதல் வேண்டும். கிள்ளெ அல்லது கிள்ளவர் எனப்படும் மிகப் பெரிய உட்பிரிவு தெலுங்குக் கால்நடை வளர்ப்போரான கிள்ளாரி சாதியின் பெயரின் திரிந்த வடிவமாதல் வேண்டும். இப்பிரிவினைச் சேர்ந்த மணமக்கள் திருமணத்திபோது எருதுகளின்மேல் சேணமிட்டு அமர்ந்தே மணம்புரிந்து கொள்வர் இவர்கள் பூணூல் அணிவதில்லை. இவர்களுள் பெரும்பாலோர் வைணவர்கள். சிலர் பிராமணர்களைப் புரோகிதம் செய்ய அமர்த்துகின்றனர். பெரும்போலோர் கோடாங்கி நாயக்கன் என அழைக்கப்படும் தங்கள் சாதியினைச் சேர்ந்தவனைக் கொண்டே சடங்கதுளை நடத்திக் கொள்கின்றனர். (மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் சாதி தொடர்பான பூசல்களைச் சாதித் தலைவனான மேட்டு நாயக்கனும் பூசாரியான கோடங்கிநாயக்கனும் தீர்த்து வைப்பர். கோடங்கி நாயக்கன் கோடங்கி என்ற சிறு முரசினை வைத்திருப்பதால் இப் பெயர் பெறுகின்றான் எனக் கூறப்பட்டுள்ளது.) ஒவ்வொரு குடும்பத்துக்கும் எனத் தனியே குலதெய்வங்கள் உள்ளன. தங்கள் கணவரோடு கூட ஈம நெருப்பில் விழுந்து உயிர் துறந்தவர்களும் கற்பு நெறி வழுவாது இல்வாழ்க்கை நடத்தியவர்களும் கன்னியருமாக இறந்துபோன பெண் உறவினர்களே பெரிதும் இவ்வாறு குலதெய்வங்களாகக் கொண்டாடப்படுகின்றனர். சிறுமியர் பூப்படைந்த பின்னரே இவர்கள் திருமணம் செய்விக்கின்றனர். குடும்ப வட்டாரத்தைச் சேர்ந்தவர்களிடையே நிகழும் முறையற்ற உடலுறவுகளை இவர்கள் கண்டுகொள்வதில்லை. வெளியாரோடு இத்தகைய முறையற்ற உறவு கொள்பவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளாகின்றனர். புதிதாக மணம் செய்துகொண்ட சிறுமியர் தங்களுடைய கணவனுடைய நெருங்கிய உறவினரோடுங்கூட உடலுறவு கொள்ள வற்புறுத்தப்படுவர். (இந்த வழக்கத்தைக் கைவிட நேர்ந்தால் அதனால் தீங்குற நேருமென்றும் எனவே இதனால் வரும் இழிவினைப் பொருட்படுத்தாதவர்களாக யாரேனும் இதனை மேற்கொள்ள மறுப்பார்களாயின் அவர்களை அவ்வாறு நடந்துகொள்ள அனுமதிக்கக் கூடாது எனவும் இவர்கள் சாதிப் பூசாரிகள் வற்புறுத்தி வருகின்றனர்.)* புங்க (*Pongamia glafra*) மரத்தை இச்சாதியார் புனிதமானதெனக் கருதுகின்றனர். முன்பு சதி

* மதுரை மாவட்டக் கையேடு (Manual of Madura district).

இவர்களிடையே பெருவழக்கினதாக இருந்ததோடு கைம்பெண்கள் மறுமணமும் ஊக்குவிக்கப்படவில்லை. இறந்தவர்களை எரிப்பதே பெருவழக்கு. ஆண்களும் பெண்களும் மாயவித்தைகளில் தேர்ந்தவர்களாகக் கருதப்படுவதால் மக்கள் இவர்களிடம் பொதுவாக அச்சங்கொண்டவர்களாக உள்ளனர். மாயமந்திரம் சொல்லிப் பாம்பு கடித்தவர்களைக் காப்பாற்றுவதில் இவர்கள் தேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டுக் கூறுவர். இவ்வாறு பாம்புக்கடிக்கான மந்திரத்தை முதன்முதல் கண்டுபிடித்தவர் பாம்பாலம்மன் எனத் தெய்வமாகப் போற்றப்படுகிறார். இறைச்சி உண்ணும் இவர்கள் தங்கள் வீட்டில் தெலுங்கினையே பேசுகின்றனர்.

தொட்டியன்கள் மதுரைமாவட்டத்தில் வந்து குடியேறியது பற்றியான வழக்கு வரலாறு மெக்கென்சி சுவடிகள் பலவற்றுள்ளும் இடம்பெற்றுள்ளன. மக்களும் இதனைத் தங்களிடையே வழங்கி வருகின்றனர். இந்த வழக்கு வரலாறு தெரிவிப்பதாவது: "பல நூற்றாண்டுகளுக்கு முன் தொட்டியன்கள் துங்கப்பத்திரா ஆற்றுக்கு வட பகுதியில் வாழ்ந்து வந்தனர். அங்கு முகமதியர் இவர்களுடைய பெண்களை மணம் செய்ய முயற்சி மேற்கொண்டதோடு இவர்ளை மாட்டிறைச்சியினை உண்ணும்படியும் வற்புறுத்தினர். இதனால் இவர்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு ஓர்இரவில் தெற்கு நோக்கி ஓடிவரலாயினர். முகமதியர் இவர்களை விடாது பின் தொடர்ந்து துரத்தினர், இவர்களுடைய பாதையில் ஆழ்ந்த நீர்பெருக்கோடு ஓடும் ஆறு குறுக்கிட்டது. வேறுவழியில்லை என இவர்கள் நம்பிக்கை இழந்துவிட்ட சமயத்தில் ஆற்றின் இருகரைகளிலும் நின்ற புங்க (*Pongamia glara*) மரங்கள் நீரில் சாய்ந்து ஆற்றின் இடையில் ஒன்று கூடிப் பாலமாக வழி அமைத்தன. அதன்வழியாக இவர்கள் விரைந்து இக்கரைக்கு வந்து சேர்ந்தவுடன் அந்த மரங்கள் மீண்டும் நிமிர்ந்து முகமதியர் ஆற்றைக் கடக்க இயலாதபடி நின்றன. இதனால் இன்றும் புங்க மரத்தைப் புனிதமானதாகக் கருதும் தொட்டியன்கள் அதன் கிளையைக் கொண்டே மணப்பந்தலுக்கான கால்களை நடுகின்றனர். பின் விசயநகரத்தை அடையும்வரை பயணம் மேற்கொண்ட இவர்கள் அந்த அரசின் கீழ் பணியில் அமர்ந்தனர். இவ்வாறு விசயநகரத்தில் பணி மேற்கொண்ட இவர்கள் அந்த அரசின் படையோடு கூட மதுரை வந்து சேர்ந்தனர்."*

* மதுரை மாவட்ட விவாக் குறிப்பு (Gazetteer of the Madura District).

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகுந்த எண்ணிக்கையினராக உள்ள தொட்டியரிடையே இரு பிரிவுகள் உள்ளன. இவர்களுள் ஒரு பிரிவினர் பயிரிடுவோரும் சிறு சமீன்தாரும் ஆவார். மற்றொரு பிரிவினர் பிச்சை எடுத்தும் கீழான பணிகளைச் செய்தும் அலைந்து திரிவோர் ஆவர். இவ்விரு பிரிவினரும் ஒருவர் வீட்டில் மற்றவர் உண்பதோ மணஉறவு கொள்வதோ இல்லை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் ஒழிந்த பிற மாவட்டங்களில் தமிழ்பேசும் சாதியார் தொட்டியன் என்ற பெயரைப் பிச்சை எடுப்பதிலும் பன்றிகள் வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள தெலுங்கு பேசும் ஜோகிகளுக்கு உரியதாக வழங்குகின்றனர். தொட்டியரிடையே இருபிரிவுகள் தோன்றியதுக்குக் காரணமாக கூறப்படும் வழக்கு வரலாறு வருமாறு: ஒரு காலத்தில் இவர்கள் ஒரு சிறுமியினை முகமதியனான ஆட்சியாளன் ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்தனர். தொட்டியர் அனைவரும் அவன் பின் சென்றனர். அவர்களுள் பெரும்பாலோர் ஆற்றின் ஒரு கரையில் உறங்கியவர்களாக இருக்கச் சிலர் ஆற்றைக் கடந்து அவனைவிட்டுச் சென்று விட்டனர். இவ்வாறு பிரிந்து சென்றவர்கள் உயர்ந்த பிரிவினராக உள்ளனர். இரந்து திரியும் பிரிவினர் ஆற்றங்கரையில் உறங்கியபடி இருந்தவர்களின் வழியில் வந்தவர்கள். இன்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த முகமதியரும் தொட்டியரும் ஒருவரை ஒருவர் நெருக்கமான உறவுமுறைப் பெயர் சொல்லி அழைத்துக் கொள்வதோடு மிக நெருக்கமானவர்களாகப் பழகுவதையும் காணலாம்.

மதுரை மாவட்டத்தில் தொட்டியர், வேக்கிலி, தொக்கல, யெரகோல்லர் என்று மூன்று அகமணக்கட்டுப்பாடுடைய குலங்களாகப் பிரிந்துள்ளதாகத் தெரிகின்றது. இவற்றுள் யெருகோல்லர் பிரிவினர் மற்ற இரு பிரிவினரையும் விடத் தகுதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். வேக்கிலிரி பிரிவினர் கம்பளத்தார் ராச கம்பளத்தார் என்ற பெயர்களாலும் அழைக்கப்படுவர். சில இடங்களில் - திருநெல்வேலியினைச் சான்றாகக் கூறலாம் - இவர்களிடையே தொக்கல், சில்ல, கோல்ல, நரசில்ல, காந்திகோல்ல, பால என்ற ஆறு பிரிவுகள் இருப்பதாகத் தெரிகின்றது. இப்பிரிவுகளுள் பாலபிரிவினரும் சில்லா பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு கொள்ளலாம். மற்ற பிரிவுகள் அகமணக்கட்டுப்பாடு உடையன. யெரகோல்லர் பிரிவினரிடையே சீக்கல (துடைப்பம்) உடம (பல்லி) போன்ற புறமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகள் உள்ளன. உடம என்ற பிரிவு காவுகளிடையேயும் ஒரு புறமணக்கட்டுப்பாடு உடைய பிரிவாக உள்ளது.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் யொரகோல்ல பிரிவினரிடையே ரேவல, கோல்ல வீரம்பா, கம்பளி நாயுடு, கரடி, உடும, சீல, கோலிபிதி என்ற ஏழு குலப்பிரிவுகள் உள்ளன. இப்பிரிவினர் தங்களுக்குள் மண உறவு கொள்வதில்லை, இவர்கள் தங்களைக் குருதி உறவுடையவர்களாகக் கருதுவதே இதற்குக் காரணம். குண்டகல, பூசல, மண்ணி, சுக்க, அலிவீரப்பா, சிக்க, மாத என்ற வேறு ஏழு குலப்பிரிவினரோடேயே மண உறவு கொள்ளவேண்டும். இவ்வாறு தாங்கள் மணஉறவு கொள்வதற்குரிய குலங்களின் பெயர்களை நினைவூட்டு வாசகம் ஒன்றைக் கொண்டுநினைவில் வைத்துக் கொள்கின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த தொட்டியன்கள் பற்றித் திரு எப். ஆர். ஹெமிங்வே பின்வருமாறு எழுதுகின்றார்: யெர்ர (சிவப்பு) கோல்லர் அல்லது பெத்த இண்டி (பெரிய இல்லம்), நல்ல (கருப்பு) கோல்லர் அல்லது சின்ன இண்டி (சிறிய இல்லம்) வாலுவர் எனப்படும் குடுகுடுப்பைத் தொட்டியர் என்ற மூன்று அகமணக் கட்டுப்பாடு உடைய பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. வாலுவர் ஓரிடத்தில் தங்காமல் பிச்சையெடுத்தபடியும் பில்லிசூனியம் முதலியன செய்தபடியும் அலைந்து திரியும் பிரிவினர். சிவப்புக் கோல்லர் தங்கள் பெயருக்கேற்பக் கருப்புக் கோல்லரைவிட நல்ல நிறம் வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். சிவப்புக் கோல்லர் பிரிவைச் சேர்ந்த பெண்கள் வெள்ளைச் சேலை உடுத்துகின்றனர். கருப்புக் கோல்லர் பிரிவுப் பெண்கள் அதனை அணிவதில்லை. இவ்விரு பிரிவினரும் கொண்டையிட்டுக் கொள்வதும் அணிமணிகள் பூண்பதும் வேறுவேறு விதமாகவே உள்ளன. சிவப்புக் கோல்லர் பிரிவுப் பெண்கள் திருமணம் ஆனவர்கள் என்பதற்கு அடையாளமாக எதுவும் அணிவதில்லை. கருப்புக் கோல்லர் பிரிவினர் பொட்டு அணிகின்றனர். சிவப்புக் கோல்லர் பிரிவினர் அதனை அனுமதிப்பதில்லை. இவ்விரு பிரிவினரிடையேயும் கம்பளம் எனப்படும் குலப்பிரிவுகள் உள்ளன. சிவப்புக் கோல்லரிடையே பதினான்கு பிரிவுகளும் கருப்புக் கோல்லரிடையே ஒன்பது பிரிவுகளும் உள்ளன. சாதிக் கட்டுப்பாட்டினைப் பொருத்து சிவப்புக் கோல்லர் ஒன்பது நாடுகளாகவும் கருப்புக் கோல்லர் பதினான்கு மந்தைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஊருக்கும் ஓர் நாயக்கன் என்ற தலைவனும் ஒவ்வொரு நாடு, மந்தை ஆகியனவற்றுக்குப் பட்டக்காரன் என்ற மேலாண்மைக்காரனும் உள்ளனர். சிறு சச்சரவுகளை ஊர் நாய்க்கனே தீர்த்து வைப்பான். சிக்கலான வழக்குகள் மட்டுமே பட்டக்காரனி[illegible] [illegible]ண்டு செல்லப்படும்.

பட்டக்காரன் மிகுந்த மரியாதையோடு நடத்தப்படுவதற்கு உரியவன். அவனை அனைவரும் கரங்கூப்பி வணங்கவேண்டும். அவனைப் பிணத்தைப் பார்க்க அனுமதிப்பதில்லை. சாதியினைச் சேர்ந்த திருமணமான பெண்கள் யாருடன் வேண்டுமாயினும் அவர்கள் விருப்பம்போல் உறவு கொள்ளலாம்.

தொட்டியன்கள் கம்பளச்சாதியார் ஒன்பதின்மருள் ஒருவராகக் கருதப்படுகின்றனர். காப்பிலியன், அனுப்பன், தொட்டியன், குருபர், கும்மார், பரிவாரத்தர், உருமிக்காரன், மங்களன், சக்கிலியன் ஆகியனவே அந்த ஒன்பது சாதிகள், காப்பிலியன், அனுப்பன், தொட்டியன், கோல்ல தொட்டியன், குருபர், கும்மரர், மேதரர், ஒட்டே, சக்கிலியன் என்பனவே அந்த ஒன்பது சாதிகள் என்பாரும் உளர். இவர்கள் சாதிச் சபைகள் கூடும்போது ஒன்பது கம்பளத்தார் பிரிவினைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்பர், ஒன்பது சாதிக்குப் பதிலாக ஒன்பது குலத்தவர்கள் இருக்க வேண்டும் எனக் கூறுவதும் உண்டு. வக்கிலியர் பிரிவுக்கு மேட்டு நாயக்கன் கோடிய நாயக்கன், கம்பளி நாயக்கன் என மூன்று சாதித் தலைவர்கள் இருப்பதாகத் தெரிகின்றது. இவர்களுள் மேட்டு நாய்க்கனே சிறப்பிற்கு உரியவன். திருமணம், பூப்புச் சடங்கு, ஜக்கம்மா, பொம்மக்கா ஆகிய தேவதைகளின் வழிபாடு முதலிய் நிகழ்ச்சிகளைப் பூசாரியாக இருந்து நடத்தி வைப்பவன் இவனே. சாதி விலக்கத்திற்கு உள்ளானவர்களைத் தீட்டு நீக்கி மீண்டும் சாதியில் சேர்த்து வைப்பவன் கம்பளி நாய்க்கன், இச் சடங்கின்போது ஒரு மறி அல்லது ஆட்டின் தலையினைக் கம்பளி நாயக்கன் அவர்கள் வீட்டுக்குள்ளே எடுத்துச் செல்வான். “குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தாங்கள் குற்றம் செய்யவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டும் அல்லது கடுஞ்சோதனைகளுக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பொழுது சுடப்படாத மண்சட்டியில் சோறு சமைத்தல் போன்ற எளிய சோதனைகளுக்கே இவர்கள் உட்படுத்தப்படுகின்றனர். *1813*-ஆம் ஆண்டில் கொதிக்கும் எண்ணெயில் கைவிடும் கடுஞ்சோதனையினைத் தான் புதுக்கோட்டை வட்டாரத்தில் கண்டதாக டர்ன்புல் குறித்துள்ளார். வேறு சாதியினரோடு உடல் உறவு கொள்வதே மிகக் கொடிய சாதிக் குற்றமாகக் கருதப்படுகின்றது. இக் குற்றத்தைப் புரியும் பெண்கள் சக்கிலியரால் கொலைக்கு உள்ளாகும் படியாகத் தண்டிக்கப்பட்டனர் என டர்ன்புல் கூறுகின்றார். இன்று இத்தகைய குற்றம் இழைப்போர் கண்டிப்பான சாதிவிலக்கத்திற்கு உள்ளாகின்றனர்” என மதுரை மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

இச் சாதியாரின் சபைக் கூட்டங்கள் நடக்கும்போது ஒரு கம்பளம் விரிக்கப்பட்டு அதன்மீது நீர்நிறைந்த ஒரு பித்தளைப் பாத்திரத்தினை வைத்து அதனுள் வேப்பிலையினைக் போட்டு அதனை மலர்களால் அலங்கரிப்பர். அப் பானையின் வாயினைத் தேங்காயினையும் மாவிலைக் கொத்தையும் கொண்டு மூடுவர். இதனாலேயே இவர்கள் கம்பளத்தார் என அழைக்கப்படுகின்றனர்.

"மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்குப்பகுதியினைச் சேர்ந்த சமீன்தார்கள் கம்பளப் பாளைப்பட்டு என அழைக்கப்படுகின்றனர். ஒருவன் சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருப்பானாயின் அவன் ராச கம்பளம் சாதியினைச் சேர்ந்தவன் என அழைக்கப்படுவான். இவர்கள் திருமணத்திற்காக மணமகனுக்கு என்று ஒன்றும் மணமகளுக்கு என்று ஒன்றுமாக ஊருக்கு வெளியே இரண்டு குடிசைகள் அமைக்கப்படும். தாலியினை மணமகள் கழுத்தில் முதியவள் ஒருத்தியோ மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனோ அணிவிப்பர். ஒருவன் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த ஒருத்தியினை மணம் செய்துகொள்ளும்போது மணமகனுக்கான குடிசை அமைக்கப்படுவதில்லை. அந்த மணச் சடங்கில் மணமகன் நேரடியாகப் பங்குகொள்வதும் இல்லை. ஒரு கட்டாரி அல்லது வாள் மணமகன் சார்பாக அனுப்பி வைக்கப்படும். அதன் முன்னிலையில் மணமகளுக்குத் தாலி அணிவிப்பர்" என ஒருவர் தொட்டியன்கள் பற்றி எனக்கு எழுதித் தெரிவித்துள்ளார்.

1894 ஆம் ஆண்டிற்குரிய சென்னை சட்ட அறிக்கைகள் இதழில் தொகுதி XVII வாதியின் அன்னை வாதியின் தந்தையினை கட்டாரி மணமுறையில் மணந்து கொண்டவர். கட்டாரி கமயர் எனப்படும் சப்தூர் சமீன்தார்கள் தங்கள் திருமணத்தின்போது உறவு கொள்ளும் பெண்வீட்டார் தாழ்ந்த சாதியாராயின் கட்டாரியினைமே. அனுப்பி வைக்கின்றனர். எனினும் அப்போது கம்பளசாதியாருக்கு உரிய எல்லாச் சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. எனினும் அதில் கட்டாரி இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயம் ஆதலால் மணமகள் சாதியில் மணமகன் தந்தையினைவிடத் தாழ்ந்தவளாக இருந்தபோதிலும் இது முறையான மணமாகவே கருதப்படுகின்றது. பிரதிவாதி சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் நேரில் வராது கட்டாரியினை வைத்து மணம் செய்வித்தமையால் இம்மணச் சடங்கில் மணத்தை உறுதி செய்யும் கைப்பிடித்தலோ பிற இன்றியமையாத சடங்குகளோ இடம்பெறவில்லை என வாதிட்டான். வாதி சாந்திமுகூர்த்தக் கல்யாணச் சடங்குகள் முறையாக நிகழ்த்தப்பட்டதாகவும் அதில் சமீன்தார்

நேரில் பங்குபெற்றதாகவும் வாதிட்டான். மேலும் கட்டாரி அங்கு ஒரு அலங்காரப் பொருளாகவே இருந்ததாகவும் மேலும் சமீன்தார் சாதியினர் திருமணங்களின்போது கட்டாரியினை ஊர்வலமாக எடுத்துச் செல்வது உண்டென்றும் அவன் வாதிட்டான். சமீன்தார் மணந்துகொண்ட இரு பெண்களும் சாதியில் சமீன்தாரைவிடத் தாழ்ந்தவர் என்பதனைக் குறிக்கவே அந்தத் திருமணத்தில் கட்டாரி இடம்பெற்றதாக நீதிபதி தன் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் தொட்டியன் சாதிச் சிறுமியர் பூப்டையும்போது நடத்தப்படும் சடங்கு தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதாவது: "பூப்படைந்த ஒருத்தி தனியே ஒரு குடிசையில் தங்கி இருப்பாள். ஒரு சக்கிலியன் அவளுக்குக் காவலாக இருப்பான். சிறுமியர் குழந்தையாக இருக்கும்போதோ பூப்டைந்த பின்போ மணம் செய்விக்கப்படுவர். ஒருவன் வழக்கப்படி தன் அத்தை மகளை மணந்து கொள்ள உரிமை கொண்டாடலாம். இந்த விதியினைக் கண்டிப்புடன் பின்பற்றும் காரணமாக வயதில் மிகக் குறைந்த சிறுவர்கள் வயதில் மிக மூத்த பெண்களை மணக்க நேரிடுகின்றது. அத்தகைய மணத்திற்கு உள்ளாகும் பெண்கள் தங்கள் கணவன்மார்களின் நெருங்கிய உறவினரோடு உடலுறவு கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இந்த உறவின் வழிப் பிறக்கும் குழந்தைக்கு அச் சிறுவனே முறையான தந்தையாகக் கருதப்படுகின்றான். மூன்று நாள்கள் வரை நீட்டிக்கும் திருமணத்தில் பல சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. ஊர்ப்பொதுவிடத்தில் திருமணத்திற்காக இடம்பெறும் பந்தலின் இரு பக்கத்திலும் மணமகனுக்கும் மணமகளுக்கும் உரியனவாகத் தனியே சிறுபந்தல்கள் இடப்படுகின்றன. இவர்கள் திருமணச் சடங்கில் இரண்டு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. வேறு கறையேதும் உடலில் இல்லாத செம்மறி ஆட்டுக்கடா ஒன்றினைப் பலியிட்டு அதன் குருதியினைக் கொண்டு மணமக்கள் நெற்றியில் பொட்டிடுவது ஒரு நிகழ்ச்சி. மணமகன் வில்லும் அம்பும் ஏந்தியவனாக தப்பிஓடுவதுபோலப் பாவனை செய்யும் ஒருவனைத் துரத்திச் செல்வான். இறுதியில் அவனைப் பிடித்துக் கட்டிப் போடுவர். பலியிடும் ஆட்டுக் கிடாயின் மீது முதலில் நீர் தெளிப்பர், அது உடலைச் சிலிர்க்குமானால் அதனை நல்ல சகுனமாகக் கொள்வர். மணமகளுக்கு உரிய பரிசமாக மணமகன் ஏழு கலம் கம்பினைச் செலுத்துவான். மணச் சடங்குகள் முடியும்வரை மணமக்கள் கம்பஞ்சோறும் கொள்ளுப் பருப்புமே உண்டு வரவேண்டும். மணமகன் உடன்பிறந்தவள் மணமகள் கழுத்தில் தாலியணிவிப்பாள்.

யெரகோல்லர் திருமணம் பற்றி எனக்குத் தகவல் தந்தவர் மணஉறுதிச் சடங்கின்போது கம்பஞ்சோறு சமைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். ஏழு குலங்களைச் சேர்ந்த ஏழு பேருக்கு அன்று அச்சோற்றினை இட வேண்டும். அதன்பின் அவர்களுக்கு வெற்றிலை பாக்குடன் ஒரு துணியில் நான்கணாவினை முடிந்து தந்து நடக்கவுள்ள திருமணத்தைப் பற்றி அறிவிப்பர். திருமண நாளன்று மணமேடையில் மணமக்களை மணைப் பலகையில் அமரச் செய்து மணமகன் மீது ஆண்களும் மணமகள் மீதும் பெண்களும் பாலினைத் தெளிப்பர். சில மணிநேரங்களுக்குப் பின் மணமகன் மணப்பந்தலில் வந்து அமர்வான். மணமகளை அவளுடைய தாய்மாமன் தூக்கி வந்து அங்கு அமரச் செய்வான். அவள் மணமகன் அருகே அமர்ந்தபின் மேட்டு நாயக்கன் அவர்களுடைய சிறுவிரல்களை இணைத்து வைப்பதோடு அவர்களை மோதிரம் மாற்றிக் கொள்ளும்படியும் கூறுவான் இதுவே திருமணத்தை உறதிப்படுத்தும் சடங்காகும். மணமகள் கழுத்தில் தாலி ஏதும் அணிவிக்கப்படுவதில்லை. வக்கிலியர் திருணமத்தில் ஊருக்கு வெளியே இரண்டு குடிசைகள் அமைக்கப்படும். அதன்முன் பன்னிரண்டு கம்பங்கள் நட்டுப் பந்தலிட்டுப் புங்கம் இலைக் கொத்துக்களைக்கொண்டு அந்தப் பந்தலை வேய்வர். அதற்கு மறுநாள் மணமகனையும் மணமகளையும் அந்தக் குடிசைகளுக்கு அழைத்துச் செல்வர். .மணமகளைப் பெரும்பாலும் அவள் தாய்மாமன் தூக்கிச் செல்வான். ஒரு தட்டில் மடித்து வைக்கப்பட்ட சேலை வேட்டிகளில் எழுந்ருளியிருக்கும் மூதாதையர்களை அவர்கள் வணங்குவர். மணமகள் குடிசையினுள் இருக்கும் மணமகள் கழுத்தில் மணமகன் உடன்பிறந்தவள் தாலியினை அணிவிப்பாள், அக் குடிசையின் முன் கம்பினைத் தூவுவர். வெற்றிலையும் ஒரு பணமும் மணமகள் மடியில் இடப்பெறும். மூன்றாம் நாளன்று மணமகன் சிறப்பான உடைதரித்துக் குதிரையில் ஏறி மண்பானைகள் உடன்வரக் குடிசைகளை மும்முறை வலம் வருவான்,. அதன்பின்அவன் மணமகள் குடிசையில் நுழைவான். மணமகளை மணமகன் தந்தையுடன் உடன்பிறந்தவர்கள், பிள்ளைகள் தங்கள் கைகளில் தூக்கியவர்களாக மும்முறை குடிசைகளைச் சுற்றி வருவர். அதன்பின் மணமக்கள் மணைப் பலகைகளில் அமர்வர். மேட்டு நாயக்கன் ஆணையினைப் பெற்று அவர்கள் சிறுவிரல்களை இணைத்து வைப்பர். அதன்பின் அவர்கள் மணமகன் குடிசையினுள் சென்று போலியாக உழும் சடங்கினைச் செய்வர். பின் அதனுள்ளிருந்து வெளிவரும் அவர்கள் ஒரு குழந்தையைத் தூக்கியவர்களாக மும்முறை குடிசைகளைச் சுற்றி வருவர். இவ்வாறு அவர்கள் செய்வதற்குக் காரணம் முன் நாளில் மணமக்கள் தங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கும்வரை அக்குடிசைகளிலேயே தங்கியிருக்க வேண்டும் எ[illegible] [illegible]ந்[illegible]ான்.

இப்பொழுது மேட்டு நாயக்கன் பல பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் ஓராண்டு காலம்வரை காத்திருந்து மணச்சடங்கை முடித்து வைக்க அவனுக்கு ஒய்வில்லாததால் இவ்வகையில் மணச் சடங்குகள் விரைவாக முடித்து வைக்கப்படுகின்றன.

நாடோடிகளாகத் திரியும் தொட்டியர் திருமணத்தில் அரவேணிப் பானைகள் அருகே ஒரு கோழியினைப் பலியிடுவர். அதன் குருதியினைக் கொண்டு மணமக்கள் தங்கள் குடிசைகளுள் நுழையும்போது அவர்கள் நெற்றியில் பொட்டிடுவர். வக்கலியர் கோழிக்குப் பதிலாக ஒரு மறியினையோ ஆட்டினையோ பலியிடுவர். இப்பொழுது இவர்களுள் நாகரிகத்தில் முன்னேறியவர்கள் பலிக்குப் பதிலாக ஒரு தேங்காயினை உடைக்கின்றனர்.

தொட்டியர் திருமணச் சடங்குகள் தொடர்பாகத் திரு ஹெமிங்வே பின்வருமாறு எழுதுகின்றார்: "தொட்டியர்களிடையே சிறுவனுக்கு வேளாளரிடையே இருப்பதைப் போல வயது வரும்வரை அவனுடைய தந்தையே அவளுடைய கணவன் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை மேற்கொண்டு செய்து வருவான். திருமணமான பெண்கள் தங்கள் கணவன்மார்களின் உறவினர்கள் தங்களோடு உறவுகொள்ள விரும்பினால் அதற்கு உடன்படுவர். ஒருவன் தன்னுடைய வீட்டு வாசலில் மற்றொருவனுடைய செருப்பினைக் கண்டால் அவன் அச் செருப்புக்கு உரியவன் வீட்டிற்குரியவளோடு உள்ளான் என்பதனைப் புரிந்து கொண்டு வீட்டில் நுழையாது வெளியேறுவான். எனினும் வேறு சாதியினைச் சேர்ந்தவர்களோடு உடல் உறவு கொள்ளும் பெண்கள் சாதியிலிருந்து விலக்கப்படுகின்றனர். தவறான ஒழுக்கத்தில் ஈடுபடும் கைம்பெண்களும் கன்னியரும் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர். முன்பெல்லாம் இத்தகைய குற்றம் புரிபவர்கள் கொலைக்கு உள்ளாகி வந்தனர்.

தொட்டியன் சாவுச் சடங்கில் சக்கிலியனே நெருப்பினைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வான். ஈம விறகில் இறந்தவனுடைய மக்கள் நெருப்பிடாமல் சம்பந்திகளே நெருப்பிடும் வழக்கம் உள்ளது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தொட்டியர் மூதாதையரை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு வழிபடப்படும் மூதாதையரைக் குறிக்கும் கற்கள் ஊரெல்லைக்குள் நடப்பட்டிருக்கும். அத்தகைய இடங்கள் மாலே என அழைக்கப்படும்., சாதியினைச் சேர்ந்த ஒருவர் இறப்பாரானால்

அவருடைய எலும்புகளுள் சிலவற்றை மூதாதையருக்கான இந்தக் குடிசையினுள் சில நாணயங்களோடுகூடப் புதைத்து அதன் மேல் ஒரு கல்லினை நடுவர் என ஹெறமிங்வே தெரிவிக்கின்றார். இக் கற்கள் ஒழுங்கற்ற வட்ட வடிவமாக நடப்பட்டிருக்கும். யெரகோல்லர் நினைவுக் கற்களின் வட்டங்கள் எளிமையான அமைப்புடையனவாக மலபாரைச் சேர்ந்த நாயாடிகள் கற்களை நினைவூட்டுவனவாக அமைந்திருக்கும். ஆனால் இவற்றின் நடுவே நாயாடிகள் கற்களின் நடுவே இருப்பதைப் போல மரம் இடம்பெற்றிராது. இக்கற்கள் சுடுகாட்டின் அருகே வெட்ட வெளியில் அமைக்கப்படுகின்றன. ஒருவன் இறந்தவுடன் சாவுச் சடங்கின் இறுதி நாளான கருமாந்திரத்தன்று அவனைச் சுட்ட இடத்தில் உள்ள சாம்பலினிடையே ஒரு கல்லினை நடுவர். அதன்பின் அது மூதாதையருக்கான கல் வட்டத்திற்கு மாற்றப்படும். தொட்டியன்களின் வக்கிலியன் பிரிவினருக்கான மாலேயின் நடுவில் மிகப்பெரியதொரு மரக்கம்பம் நிறுத்தப்பட்டிருக்கும். அதில் ஆண், பெண் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். பெரியதொருபாறையில் அமைந்துள்ள குழியில் நடப்பட்டுள்ள அதன்மீது தூண்களால் தாங்கப்படும் கூம்பு வடிவிலான கூரையும் அமைத்திருப்பர். இந்த மேற்கூரையினை வட்டமாகச் சுழற்றி விட்டால் நடுவில் உள்ள கம்பம் அசைவதுபோலத் தோன்றும். இத்தகைய தோற்றத்திற்கு மூதாதையரான தெய்வங்களின் சக்தியே காரணம் என நம்புகின்றனர். பத்தடி உயரமுள்ள நடுக்கம்பத்தைச் சுற்றிப் பல அளவுகளில் கற்கள் நடப்பட்டிருக்கும். இந்த நடுக்கம்பம் ஜக்கம்மாவையும் நெடுங்காலத்திற்கு முன் இறந்த மூதாதையரையும் குறிப்பதாகும். யெரகோல்லரைப் போலவே வக்கிலி யர்களும் கருமாந்திரச் சடங்கன்று பிணத்தை எரித்த இடத்தில் ஒரு கல்லினை நடுகின்றனர். என்றாலும் அதனை உடனடியாக மூதாதையருக்கான கற்கள் அமைக்கப்பட்டுள்ள வட்டத்திற்கு மாற்றாமல் அடுத்து நிகழும் மாலே வழிபாட்டு நாள்வரை அவ்விடத்திலேயே விட்டு வைப்பர். இந்த வழிபாடு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் செலவு மிகுதியுமாகும் சடங்காகும். இதற்கிடையே நீண்ட இடைவெளி இருக்குமானால் இறந்தவர்களுக்கான கற்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும். மாலே வழிபாடு நடக்க உள்ள செய்தியினைச் சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கெல்லாம் சொல்லி அனுப்புவர். குறிப்பிட்டநாளில் சாதியின் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கான கற்களைத் தங்களோடு கொண்டு வந்தவர்களாக வழிபாடு நடக்கும் இடத்திற்கு வந்து சேர்வர். வழிபாடு நடத்தும் ஊரார் இவ்வாறு வந்து சேரும் விருந்தினருக்கு வைக்கோல், பானைகள், நிறையக் கரும்பு ஆகியனவற்றைத் தருவர். தாராளமாகக் கரும்பு வழங்க மறுப்பார்களாயின் வழிபாட்டுச் சடங்கின் நோக்கமே பாழ்பட்டதாகிவிடும். வழிபாடு

முடிந்தவுடன் காளைகளை அவிழ்த்து விருப்பம்போல் ஓடும்படி விரட்டுவர். எந்த காளை மாலேயினை முதலில் சென்று சேர்கின்றதோ அதனை அலங்கரித்துப் போற்றி வழிபடுவர். அந்தக் காளைக்கு உரியவனுக்குப் பணமும் வேட்டி முதலி யனவும் தருவர். இச் சடங்கு காப்பிலியன்கள் இராச காளையினைத் தேர்ந்தெடுக்கும் சடங்கிற்கு ஒப்பானது எனலாம்.

“பிரிட்டீசார் ஆட்சி தொடங்கும் முன் கணவனோடு கைம்பெண்கள் சதி பாய்ந்து உயிர் துறந்து வந்தனர், இவ்வாறு உயிர் துறப்பவர்கள் நினைவினை மிகுதியும் மதித்துப் போற்றி வந்தனர். நெடுஞ்சாலைகளை அடுத்து இவர்கள் நினைவாக தீப்பந்த கோயில் எனப்படும் நினைவுக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இக் கோயில்களில் ஆண்டுக்கு ஒருமுறை இறந்துபோனவர்களின் ஆவியினைத் திருப்திப் படுத்தும் வகையில் படையல்கள் இட்டுவந்தனர். சதிபாய வேண்டும் என்பது இவர்களிடையே கட்டடாயமானதாக இல்லை. ஒருத்தி கணவன் இறந்தபின் ஒழுக்கம் தவறாதவளாக சமயப்பற்றினை மேற்கொண்டு வாழ்ந்து வருவாளானால் அவளும் சதிப்பாய்ந்தந்தவர்களுக்கு ஒப்பாகவே போற்றப்பட்டாள்” என மதுரை மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் சதி தொடர்பாகக் கூறப்பட்டிருப்பது வருமாறு: “முன்பு இச் சாதியினரிடையே சதி பாய்வது பெருவழக்காக இருந்தது. இச் சாதிக்குரிய இரு தெய்வங்களான ஜக்கம்மாவும் பொம்மக்காவும் இதுபோலச் சதி பாய்ந்தவர்களைத் தெய்வமாக ஆக்கப்பட்டவர்களே. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்தெய்வங்களைச் சிறப்பிக்கத் திருவிழாக் கொண்டாடுகின்றனர். அப்பொழுது காளைகளிடையே நடைபெறும் ஓட்டப் பந்தயம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதில் வெற்றி பெறும் காளையின் உரிமையாளன் ஒரு தொகையினைப் பரிசாகப் பெறுவதோடு அன்று விருந்தில் முதல் வெற்றிலை பாக்குப் பெறுவதற்கு உரிமை உடையவனாவான். இவர்கள் சாதிக்குரிய தெய்வம் பெருமாள், ஓர் அம்மிக் குழவியின் உருவில் இவரை ஏற்றி வைத்து வழிபடுவர். தொட்டியன்கள் தெற்கு நோக்கி ஓடிவந்த போது இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஒருத்தி தன்னுடைய அம்மிக் குழவி மிகுந்த கனமுடையதாக இருந்த காரணத்தால் அதனை வீசி எறிந்துவிட்டாள். எனினும் அது அவளுடைய கூடையில் மீண்டும் வந்துசேரக் கண்ட அவள் தங்கள் சாதித் தெய்வமே அந்தக் குழவியின் உருவில் உடன் வருவதாக உணர்ந்தாள்.”

தொட்டியன்கள் பிராமணர்கள் சாதியில் உயர்ந்தவர்கள் என்பதனை [illegible] சாவு, திருமணம் முதலான சடங்குகளை நடத்து[illegible]

புரோகிதர்களாகப் பிராமணர்களை இவர்கள் அமர்த்துவதும் இல்லை. இவர்கள் தங்கள் சாதிக்குரிய தெய்வங்களிடம் மிகுந்த ஈடுபாடுடையவர்களாக உள்ளனர். சதி பாய்ந்தவர்களான பொம்மக்கா, மல்லம்மா என்ற இருவர் இவ்வாறு சாதிக்குரிய தெய்வங்களாகப் போற்றி வழிபடப்படுகின்றனர். ஒரு புலியோடு போரிட்டு உயிர்துறந்த வீரக்காரன் எனப்படும் வீரமாதி, வடக்கேயிருந்து ஓடி வந்த சமயத்தில் தங்களுக்கு உதவிய பட்டாலம்மா, மாலேத் தம்பிரான் ஆகிய மூதாதையர் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர். முத்தாலம்மா, ஜக்காலம்மா ஆகியோரும் மூதாதையரான தெய்வங்களே. மாலேத் தம்பிரானை மாலேயில் வைத்து வழிபடுகின்றனர். பில்லிசூனியம், மாயமந்திரம் ஆகியவற்றில் தொட்டியன்கள் மிகுந்த நம்பிக்கையுடையவர்களாக உள்ளனர். இவர்கள் அனைவருமே தீய ஆவிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நம்புகின்றனர். இவர்களுள்ளும் நல்ல கோல்லர் இத்தகைய சக்தி மிகுதியும் வாய்க்கப் பெற்றிருப்பதாகக் கருதப்படுவதால் அவர்களிடம் அண்டை அயலார் மிகுந்த அச்சங் கொண்டவர்களாக நடந்து கொள்வர். காலில் செருப்பணிந்தபடியோ, குதிரையில் ஏறியவர்களாகவோ குடை பிடித்தப்படியோ வெளியார் தங்கள் ஊரில் நுழைய இவர்கள் அனுமதிப்பதில்லை. அயலார் இதுபோலவரின் அது தங்கள் தெய்வங்களைக் கோபமுறச் செய்யும் என்பதே இவர்கள் இவ்வாறு அனுமதிக்காததற்கான காரணம் ஆகும். யாரேனும் இந்த விதிகளை மீறி நடந்தால் அவர்கள் நோயுறவோ வேறுவகையில் தண்டனையுறவோ நேரும் என நம்புகின்றனர்'' என ஹெறமிங்வே எழுதுகின்றார்.

பிக்சிகவாடு என்ற இரவலர் பிரிவினர் தொட்டியரோடு இணைக்கப்பட்டவர்களாவர். இவர்கள் தோற்றம் பற்றிய வழக்கு வரலாறு வருமாறு: ஒரு காலத்தில் ஈரிவாரு குலத்தைச் சேர்ந்தவர்களாக ஏழு அண்ணன் தம்பிகளும் ஒரு தங்கையும் இருந்தனர். இந்தச் சகோதரர்கள் காசிக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டபோது தங்கள் உடன்பிறந்தவளை வீட்டிலேயே விட்டுச் சென்றனர். ஒருநாள் அவள் குளிக்கும்போது கோயிற் காளை ஒன்று அதன் விந்துவை அவள் சேலையில் விட்டுச் செல்ல அவள் கருவுற்றாள். காசியிலிருந்து திரும்பி வந்த அவள் உடன்பிறந்தவர்கள் அவள் நிலையைக் கண்டு அவள் ஒழுக்கந்தவறி நடந்திருக்கக்கூடும் என முடிவு செய்தவர்களாக அவளைச் சாதிவிலக்கம் செய்ய எண்ணினர். காளைகளோடு சேர்க்கை இன்றியே சில பசுக்கள் கன்றுகள் ஈன்றதை வைத்து ஆறு சகோதரர்கள் அவள் ஒழுக்கம் தவறியிருக்க முடியாது என முடிவு செய்தனர், ஏழாவதாக உள்ளவன் ஆதாரம் இன்றி இதனை நம்ப முடியாது எனக்

கூறினான். அவளுக்குக் குழந்தை பிறந்தவுடன் அதனை பட்டுப் போன ஒரு தட்டான்கொட்டை மரத்தின் கிளையோடு கட்டிப்போட அது தளிர்த்துப் பூப்பதாயிற்று. அவளுடைய ஒழுக்கத்தை ஐயுற்ற உடன்பிறந்தவன் நொண்டியாக ஆகிவிட அவனுடைய வழித்தோன்றல்கள் பிச்சிகவாரு எனவும் அந்தக் குழந்தையின் வழித்தோன்றல்கள் சில்லவாரு எனவும் அழைக்கப்பட்டனர்.

திரிவர்ணிக - Traivarnika (third caste men)

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கோமட்டிகளின் ஒரு பிரிவினராகப் பதியப்பட்டுள்ளனர். *(இவர்கள் தங்களை மனு வகுத்து வைத்த நான்கு வருணத்துள்ள மூன்றாம் வருணமான வைசியர் எனக் கூறிக்கொள்வர்).* இப்பிரிவினர் மற்றவர்களைவிடத் தீவிரமாகப் பிராமணர்கள் பழக்க வழக்கங்களை மேற்கொள்பவர்கள். விசாகப்பட்டினம் கையேட்டில் இவர்கள் இராமானுசர் நெறியை மேற்கொண்டவர்கள் எனவும் தங்கம், வெள்ளி ஆகியவற்றிலான வணிகமே இவர்களுடைய முக்கிய தொழில் எனவும் கூறப்பட்டுள்ளது.

திரிபுட - Triputa (*Ipomaea Turpethum*)

வீரமுஷ்டி சாதியின் ஒரு குலப் பிரிவு.

தசாகலர் - Tsakala

தசாகலர், சாகலர், க்ஷாகலர் என்போர் துவைத்தல் எனப் பொருள்படும் சாகு என்ற சொல்லிலிருந்து வந்த பெயர் பெற்றவர்களான தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த வண்ணார் ஆவார். தீவட்டி, பல்லக்கு ஆகியன சுமப்பவர்களாகவும் இவர்கள் பணிபுரிகின்றனர். *1901* கணக்கெடுப்பு அறிக்கையில் தெள்ள குலம் *(வெள்ளை வகுப்பார்)* என்பது இதற்குரிய மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. "தெள்ள குல வாண்டுலு உண்மையில் வண்ணாரே ஆவார். இவர்கள் அரசு அலுவலகங்களில் ஏவலர்களாகப் பணிவாய்ப்புப் பெற்றபின் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களைவிடத் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதத் தொடங்கிவிட்டனர். இவர்களுடைய உள்ளூரில் அல்லது நகரத்தில் இவர்கள் தங்களை வண்ணார் என ஒத்துக் கொண்டாலும் மற்ற இடங்களில் இவர்கள் தங்களுக்கு அத்தொழிலோடு உறவு உண்டு என்பதனை ஒத்துக் கொள்ள மாட்டார்கள்" என* மறைத்திரு ஜெ.கெயின்

---

* இந்தியத் தொல்லியல், VIII, 1879. (Ind.Ant., VIII, 1879)

கூறியுள்ளார். தசாகலர் பல்லக்குச் சுமப்பவர்களாக இருப்பதோடு எப்பொழுதும் அரசு அலுவலர்களின் தயவை நாடியவர்களாக இருக்க வேண்டியதாகின்றது. கட்டணம் ஏதுமின்றி அல்லது மிகக் குறைந்த கட்டணத்திற்குப் பிச்சைக்காரர்களைப் பல்லக்கில் தூக்கிச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கும் உள்ளாகின்றனர். இவர்களுள் சிலர் இனாம் நிலத்தை அனுபவிக்கின்றனர். சிலர் கூலிக்குப் பணிபுரிகின்றனர்'' எனக் கர்நூல் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

சாதாரண தசாகலர் கூன தசாகலரான வெலம தசாகலரிலிருந்து வேறுபடுத்தப் பான தசாகலர் எனப்படுகின்றனர். பானா என்பது வண்ணார் வெள்ளாவி வைத்துத் துணிகளை வேக வைக்கப் பயன்படுத்தும் பானையைக் குறிக்கும்.* குண தசாகலர் துணிக்குச் சாயம் போடுபவர்கள். வெலமரைப் பற்றிய ஒரு குறிப்பில் திரு எச்.எ. ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் பின்வருமாறு எழுதுகின்றார். ''இவர்கள் பலிசரின் உட்பிரிவினர் எனச் சிலர் கூறுகின்றனர். இதனை இவர்களே சிறிதும் பொருளற்றது என மறுப்பர். பலிசர் இவர்களைக் கூனி சாகலவாண்டுலு எனக் கேலியாக அழைப்பர். (கூனல் முதுகு வண்ணார் என்பது இதன் பொருள்.) இந்துக்களாக உள்ள சில சாதியார் கொண்டுள்ள தற்பெருமையும் பொறாமையும் காளத்தியினைச் சேர்ந்த வெலமரின் நடத்தையால் தெளிவாகப் புலனாகும். அந்த நகரத்தைச் சேர்ந்த உதவி தாசில்தார் கூனி சாகலவாண்டுலு என்ற பெயரின் தோற்றம் பற்றி அறிந்துகொள்ள விரும்பினார். இவர் இதற்கான கேள்வியைச் கேட்டவுடனே அச்சாதியினைச் சேர்ந்த ஒருவன் மாவட்டக் குற்றவியல் நடுவர் முன் உதவித் தாசில்தார் தங்களைக் கேவலப்படுத்தியதாக வழக்குத் தொடுத்துவிட்டார். வட மாவட்டங்களில் அச்சிடப்பட்ட சீட்டித் துணிகளை மூட்டையாகக் கட்டி முதுகில் சுமந்தபடி சுமை தூக்கிச் செல்லும் வண்ணாரைப் போல இவர்கள் குனிந்தபடி நடப்பதால் இந்தக் கேலிப் பெயர் இவர்களுக்கு வந்ததாகத் தெரிகிறது. இந்த விளக்கம் சரியானதா என்பது ஐயத்திற்கு இடமானதே. கோதாவரி மாவட்டத்தில் கூன சாகலவாண்டுலு என்ற பெயரில் உள்ள கூன என்பது இவர்கள் சாயம்போடும் முன் சீட்டித் துணிகளை வெளுக்கப் பயன்படுத்தப்படும் பானையினைக் குறிக்கின்றது.''

பிற தெலுங்கு சாதியாரைப் போலவே தசாகலரிடையேயும் இண்டிப் பேரு எனப்படும் குலப்பெயர்கள் உள்ளன. இப்பெயர்களுள் சீமல (எறும்பு)

---

* மேலெடுத்துக் காட்டிய நூலில்

என்பதே பலருக்கும் உரியதாகத் தெரிகின்றது. கும்மடி குலப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் கும்மடி காயினை உண்பதில்லை. மகிளி பிரிவினர் புலகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் (*Pandanus fascicularis*) பழத்தை உண்பதில்லை, இதே போன்று வாள் அவரைக் (*Canavalia ensiformis*) காயினையும் தம்பல்ல கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் உண்பதில்லை.

ரெட்டி பூமி, முரிகி நாடி, பாகனாடி (கிழக்கத்தியார்) தேச, கோல்கொண்ட என்பன இச் சாதியின் உட்பிரிவுகளாம். இவற்றுள் சில பிற தெலுங்குச் சாதிகள் சிலவற்றின் உட்பிரிவுகளுக்குரிய பெயர்களாகவும் அமைந்துள்ளன.

தேச அல்லது தேசூர் பலிசர் - காபு
முரிகி நாடி அல்லது முரிகி நாடு - கம்சாலர், மங்களர், மாலர், ராசு
பாக நாடி - பலிசர், கோல்லர், கம்சாலர், காவு, மாலர்
ரெட்டி பூமி - மாலர், மங்களர்

1891 கணக்கெடுப்பின்போது ஒட்டெ, தசாகலரின் ஓர் உட்பிரிவினராகப் பதியப்பட்டுள்ளது. விசாகப்பட்டின மாவட்டக் கையேட்டில் *(1869)* வட்டே எனப்படும் ஒட்டே சாகலி துணி துவைப்பர் என்வும் தீவட்டி தாங்கி வருபவர் எனவும் பதியப்பட்டுள்ளது. ஒட்ளேட தசாகலர் என்ற பெயர் ஒரியமொழி பேசும் வண்ணாருக்கு உரியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தெலுங்கர் ஒரிய நாட்டை ஒட்டரம் என்றும் ஒட்டே தேசம் என்றும் அழைப்பதோடு ஒரியர்களை' ஒட்ர என்றும் ஒட்மே வாண்டுலு எனவும் அழைப்பர்.

தமிழ்நாட்டு வண்ணாரைப் போலவே தசாகலரும் பல சாதியினரின் ஊர்வலத்திற்கும் சடங்குகளுக்கும் தீப்பந்தங்களையும் முகத்தை மூடும் துணிகளையும் தயாரித்துத் தருகின்றனர். சாவுச்சடங்கின்போது பிணத்தின் தலைமாட்டில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் நெல் இவர்களுக்கு உரியது. ரெட்டி பூமிப் பிரிவினரும் பிற உட்பிரிவினரும் மாலர், மாதிகர் நீங்கலாக வேற எல்லாச் சாதியினருடைய துணிகளையும் துவைக்கின்றனர். தேச மற்றும் கோல்கொண்டா உட்பிரிவினர் மாலர், மாதிகர் சாதிகளைச் சேர்ந்தவர்கள் துணிகளைத் துவைக்கின்றனர். எனினும் அத்துணிகளை இவர்கள் துவைக்க எடுத்துச் செல்லும்முன் அச்சாதியார்அவற்றை தண்ணீரில் மூழ்குப்படியாக முக்கி வைக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் எனத் தனியே வண்ணார் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் பணிக்கு ஈடாக ஆண்டுதோறும் ஒரு

குறிப்பிட்ட அளவு தானியம் பெற்று வருவதோடு சிலர் அதற்காக என விடப்பட்ட நிலங்களையும் அனுபவித்து வருகின்றனர். தேவதைகளின் முன் பலியிடப்படும் ஆடு, கோழி ஆகியவற்றின் தலையினை வெட்டும் அல்லது கழுத்தை நெரித்துக் கொல்லும் உரிமை தசாகலருடையதே. காபு சாதிப் பெண்கள் தொலைவில் உள்ள ஊர்களுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது அவர்களுக்குத் துணையாக தசாகலர் செல்வர். காபுகளின் திருமணத்தின்போது சில காபுகள் கொஞ்சம் சோறு, நல்லெண்ணெய் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தசாகலன் ஒருவன் வீட்டிற்கு ஊர்வலமாகச் சென்று அவனிடமிருந்து அவன் பொறுப்பில் உள்ள பருத்தி நூல் சுற்றப்பட்ட மூங்கிலாலான தோரணத்தையும் கங்கையம்மன் சிலையினையும் பெற்று வருவர். இவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்லும் சோற்றை அவனுக்குத் தருவதோடு கொஞ்சம் அரிசியினையும் ஒரு துணியில் கொட்டுவர். இவற்றைப் பெற்றுக் கொண்ட அவன் தீப்பந்தத்தின் உதவியில்லாமல் தன்னால் தோரணத்தையும் கங்கையம்மன் சிலையினையும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது எனக் கூறி நல்லெண்ணெய் வேண்டும் எனக் கேட்பான். அதனை அவனுக்குத் தந்த பின் தோரணத்தையும் கங்கையம்மன் சிலையினையும் பெற்றுத் திருமண வீட்டுக்குத் திரும்புவர். அங்குத் தசாகலனிடம் தோரணத்தைப் பந்தலிலோ கூரையிலோ கட்டும்படி வேண்டுவர். அவன் தரையில் கொஞ்சம் நெல்லைக் குவியலாகப் போடும்படி வேண்டுவான். அதன்மீது நின்றபடி அவன் தோரணத்தைக் கட்டுவான். பண்டகாபுகளின் திருமணத்தில் கங்கையம்மன் சிலை, ஒரு வெள்ளாடு, காவடி, கூடையில் அரிசி, பணியாரங்கள், வெற்றிலை பாக்கு ஆகியனவற்றை ஊர்வலமாக குளத்தங்கரைக்கோ கோவிலுக்கோ எடுத்துச் செல்வர். ஒரு வண்ணாத்தியினைப் போல சேலையினைக் கட்டிக் கொண்டு வண்ணான் இந்த ஊர்வலத்தின் முன்னே பாடி ஆடியபடி செல்வான். சடங்கு முடிந்தவுடன் அவன் கங்கையம்மன் சிலையினைப் பெற்றுச் செல்வான். தமிழ்நாட்டைச் சேர்ந்த பண்ட ரெட்டிகளிடையே வண்ணான் கங்கையம்மன் சிலையினை ரெட்டிகள் வீடுகளுக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று காணிக்கை பெற்றுக் கொள்ளும் வழக்கம் உள்ளது. ஈதிகர் திருமணச் சடங்கில் மணமகளின் உடன்பிறந்தவன் வேடிக்கையாக உடையணிந்தவனாகத் தலைப்பாகையில் வேப்பிலையைச் சொருகிக் கொண்டு வில்லையும் அம்பையும் ஏந்தியவனாக ஊர்வலத்தில் செல்வான். கோடங்கி என அழைக்கப்படும் இந்தக் கோமளியினைச்சில அமங்கலிகள் வண்ணான் தரையில் விரிக்கும் மாத்தின்மீது நடக்கச் செய்து கோயிலுக்கு அழைத்துச் செல்வர். காபு சாதிச் சிறுமியின் பூப்புச் சடங்கின்போது அவள் அணிந்திருக்கும் சேலை வண்ணாத்திக்கு உரியதாகும்.

தெலுங்கு-14

தசாகலருக்குரிய குலதெய்வம் மதிவாலய்யா. இத் தெய்வத்தைச் சிறப்பிக்க மைலார் எனப்படும் மைலார் பதங்க விருந்தினைப் பொங்கல் திருநாளை அடுத்து நிகழ்த்துகின்றனர். வண்ணார் தங்கள் தொழிலில் பயன்படுத்தும் பானை, துவைக்கும் கல் முதலியவற்றின் உருவத்தை அரிசிமாவால் செய்து வைத்து பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் படைத்தும் அல்லது ஆடு கோழி ஆகியவற்றைப் பலியிட்டும் வழிபடுவர். பலி ஆட்டின் குருதியினைக் கொஞ்சம் சோற்றோடு கலக்கித் துணி துவைக்கப் பயன்படுத்தும் கல், பானை முதலியவற்றின் மீது தெளிப்பர். இச் சடங்கு நிகழ்த்தப்படவில்லையாயின் வெள்ளாவி வைக்கும் பானையில் துணிகள் தீயில் வெந்து பாழாகிவிடும் என்று நம்புகின்றனர். இத் திருவிழா ஐந்து முதல் ஏழு நாள்கள் வரை நீடிக்கும்., அப்போது இவர்கள் தொழிலை மேற்கொள்ளாமல் ஒய்வாக இருப்பர். தாச மற்றும் கோல்கொண்ட பிரிவுத் தசாகலர் இந்த விழாவினை நடத்துவதில்லை.

ஒருத்தி முதன்முதல் பூப்படையும்போது அச்சிறுமியின் தாய்மாமன் ஏழுவகை மரக் கொம்புகளைக் கொண்டு ஒரு குடிசை அமைக்க வேண்டும். அவற்றுள் ஒன்று எட்டி (*Strychnos Nur-Vomica*) மரக்கிளையாக இருத்தல் வேண்டும், இவர்களுடைய திருமணச் சடங்குகள், பலிசர், கம்மர் திருமணச் சடங்குகளை ஒத்தவை. வெற்றிலை பாக்கு வழங்குவதும் பந்தலில் தோரணம் கட்டுவதும் கடம்தார் எனப்படும் சாதித் தலைவன் உதவியாளனால் நிகழ்த்தப்பட வேண்டும். திருமணத்தின் இறுதி நாளன்று திருமணப் பானைகளுக்கு ஓர் ஆட்டையோ மறியையோ பலியிடுவர். திருமணத்திற்கு வரும் விருந்தினருக்குக் கள் தாராளமாக வழங்கப்படும்.

மைலாரி அல்லது படம் என அழைக்கப்படும் சாதியோடு இணைக்கப்பட்ட இரவலரைத் தசாகலர் பெற்றுள்ளனர். தெய்வம் ஒன்றின் உருவம் பொறிக்கப்பட்ட பித்தளைத் தட்டு ஒன்றினை இவர்கள் தங்களோடு எடுத்துச் செல்வதால் படம் எனப்படுகின்றனர். இந்த இரவலர் லிங்காயதர் எனக் கூறப்படுகிறது.

தசல்லா அல்லது சல்லா - Tsalla or Challa (butter milk)

மாலரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

தசண்ட அல்லது சண்ட - Tsanda or chanda (tax or subseription)

கம்மர், மேதரர் சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். வரி அல்லது சந்தா எனப்பொருள்படுவது.

துலாபாரம் - **Tulabharam**

திருவாங்கூர் மன்னர்கள் வழங்கும் துலாபாரம் எனப்படும் துலாபுருஷதானம் பற்றித் திரு சங்குண்ணி மேனன் இது துலா (தராசு), புருஷ (ஆண்மகன்), தானம் (கொடை) சிறப்பாகச் சமய்த் தொடர்பானது என்ற மூன்று சொற்கள் இணைந்து அமைந்தது என்பார்.* இச் சடங்கு பற்றி விளக்கும் அவர் இதற்காக முதலில் துலா மண்டபம் அமைக்கப்பட்டு அதில் துலாம்கள் பொருத்தப்படும் எனக் கூறுகின்றார். சடங்கின் எட்டாம் நாள் வழிபாட்டை முடித்துப் படையல்களைச் செலுத்திய பின் மாமன்னன் துலாமண்டபத்திற்கு வந்து சேர்வான். அம் மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் அவனை நிறுத்தி அவன்மீது புண்யாகம் நீரினைத் தெளிப்பர். அதன்பின் அவன் மண்டபத்தின் ஒருபக்கமாக அமைந்துள்ள அறைக்குச் சென்று வெள்ளியாலான பூச்சட்டிகளில் நவதானியங்களை விதைப்பான். அங்கு ஆச்சாரியார் ஒன்பது கலசங்களில் உள்ளபுண்ணிய நீரால் அவனைக் குளிப்பாட்டுவார். அதன்பின் அரசன் அரண்மனைக்குச் சென்று உடைகளை மாற்றிக் கொண்டவனாக அச் சமயத்திற்கென உரிய சில அணிகளை அணிந்துகொண்டு உடைவாளை வலது கையிலும் கேடயத்தை இடது கையிலும் ஏந்தியவனாகக் கோயிலுக்குச் செல்வான். அங்குப் பொன்னாலான கொடி மரத்தின் கீழ் ஒரு களிற்றுக் கன்றினைக் கோயிலுக்குக் கொடையாக வழங்குவான். பின் கோயிலின் உள்ளே சென்று பட்டுத் துணிகள், பொற்காசுகள், அணிகள் ஆகிய மதிப்பு வாய்ந்த பொருள்களை வழங்கியபின் சேவை மண்டபத்தை வலமாக வந்து துலா மண்டபத்தில் மீண்டும் நுழைவான். பின் தராசினை மும்முறை வலமாக வந்து அதன்முன் தரையில் விழுந்து வணங்குவான். ஆச்சாரியர்கள் மூத்த உறவினர்கள் ஆகியோரை வணங்கித் துலாபுருஷதானம் செய்ய அனுமதி வேண்டுவான். அதன்பின் எமன், சூரியன் ஆகியோர் பிரதிமைகளை முறையே வலக்கையிலும் இடக்கையிலும் ஏந்தியவனாக அவன் தராசில் ஏறுவான், பட்டுத்துணி ஒன்றால் போர்த்தப்பட்ட பலா மரப்பலகையாலான புதிய மணையில் தராசுதட்டில் கிழக்கு நோக்கி அமர்வான். இவ்வாறு அமர்ந்தவனாக மந்திரங்களை அவன் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவன் அமர்ந்திருக்கும் தட்டுக்கு எதிர்த் தட்டுத் தரையைத் தொடும்வரை பொன்னினை இட்டபடி இருப்பர். அவ்வாறு இடப்படும் பொன், பொன் நாணயங்களாகவும் பொன் கட்டிகளாகவும் இருக்கும். மாமன்னன் அமர்ந்திருக்கும் தட்டு உயரச் சென்றபின் அதிலிருந்து அவன் கீழே இறங்குவான்.

---

* திருவாங்கூர் வரலாறு, *1878*. (History of Travancore, 1878).

பின் கிழக்கு நோக்கி அமர்ந்தவனாக பொன், துலாபுருஷ பிரதிமைகள் பிற உருவங்கள் ஆகியனவற்றை சந்தனம் முதலியன கொண்டு பூசி தாம்பாளத்தில் உள்ள தண்ணீரில் அவற்றையிட்டுப் பின் அவற்றைப் பிராமணர்களுக்குத் தாராளமாகத் தானமாக வழங்குவான்." தராசில் வைக்கப்பட்ட தங்கத்தில் நான்கில் ஒரு பங்கினைச் சடங்கினை நடத்தி வைக்கும் புரோகிதர்கள் தங்கள் உடமையாக்கிக் கொள்வர். எஞ்சிய நான்கில் மூன்று பங்கினைப் பிற பிராமணர்களிடையே பகுத்து வழங்குவான். இச் சடங்கில் பயன்படுத்துவதற்காகத் துலாபாரக் காசு என்ற சிறப்புப் பொற்காசுகள் வார்த்து அடிக்கப்படும். இக் காசுகளின் ஒரு பக்கத்தில் ஸ்ரீபத்மநாப என்ற வாசகமும் மற்றொரு பக்கத்தில் சங்கு உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

பெரியம்மை, காலரா ஆகிய நோய்களுக்கு உரிய தேவதையான கொச்சி மாநிலத்தில் இருக்கும் கொடுங்கோளூர் காளி கோயிலில் நடைபெறும் துலாபாரம் சடங்கினைப் பற்றித் திரு டி.கே. கோபால் பணிக்கர் பின்வருமாறு எழுதுகின்றார்:* ஒருவன் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு நோயுறுவானாயின் அவன் உறவினர்கள் அவன் நோயிலிருந்து மீள வேண்டி இந்தத் தேவதைக்குத் துலாபாரதானம் செய்வதாக வேண்டிக்கொள்வர். இச் சடங்கின்போது நோயுற்றவனைத் தராசின் ஒருதட்டில் அமரச் செய்து அவன் எடைக்குச் சமமாக மற்றொரு தட்டில் பொன்னைக் காணிக்கையாக இடுவர். பெரும்பாலும் மிளகை இடுவதே வழக்கம். (வேறு பொருள்களை இடுவதும் வழக்கம்). பின் அத்தட்டில் இடப்பட்ட பொருள் கோயிலில் உள்ள தேவிக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும். கோயில் வாசலில் தேவியின் நேர் எதிரே இச் சடங்கை நிகழ்த்துவதே வழக்கம்.

துலாபாரச் சடங்கு தொடர்பாக மற்றொரு செய்தியினையும் குறிப்பிட வேண்டியுள்ளது. தென் கன்னட மாவட்டத்தில் கொங்கணத்துப் பிராமணர்கள் மேற்பார்வையில் இருந்துவரும் ஒரு கோயில் உள்ளது. அக் கோயிலைச் சேர்ந்த கொங்கணி பிராமணன் ஒருவன் நாள்தோறும் பூசை முடிந்தவுடன் முற்பகல் *10* மணியிலிருந்து *11* மணிவரை தெய்வம் ஏறப்பெற்றவான மக்களுக்கு நல்வாக்குச் சொல்கின்றான். சிறிது காலம் முன்பு குசராத்தைச் சேர்ந்த செல்வனான பணியன் பிரிவு வணிகன் ஒருவன் "தர்சன" னான நல்வாக்கு உரைப்பவனிடம் தன்மனைவிக்குச் சுகபிரவசம் ஏன்பட என்ன செய்ய வேண்டும்

---

* மலபாரும் அங்கு வாழ்வோரும், சென்னை, *1900*. (Malabar and its Folk, Madras, 1900).

எனக் கேட்டான். "தர்சனம்" அவனுடைய மனைவியின் எடைக்குச் சமமான வெள்ளி, வெல்லம், பேரிச்சம் ஆகியவற்றைத் துலாபாரமாகத் தருவதாக நேர்ந்து கொள்ளும்படி அறிவுறுத்தியது. அவன் அதுபோலவே நேர்ந்து கொண்டான். அவன் மனைவியும் எத்தகைய தொல்லையும் இன்றி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அவன் தான் நேர்ந்து கொண்டபடி ஐயாயிரம் ரூபாய்கள் செலவழித்து துலாபாரதானச் சடங்கை நிகழ்த்தினான்.

துலபீனர் - Tulabina

கஞ்சம் மாவட்டத்தில் ஆங்காங்கேயும் கட்டாக் மாவட்டத்தில் பரந்துபட்டும் காணப்படும் பருத்தியினைத் துப்புரவு செய்யும் வகுப்பார் துலபீனர். இப்பெயர் தராசின் கோலான துலா என்பதும் பீனா (வீணா) என்ற சொல்லும் இணைந்து பிறந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். இவர்கள் பருத்தியினைத் துப்புரவு செய்யப் பயன்படுத்தும் கருவி பார்ப்பதற்கு வீணைபோலத் தோற்றம் தருவது. அதனை ஒரு கயிற்றில் இரு பக்கமும் சமமாக இருக்கும்படியாகத் தொங்கவிட்டு அதனை இருபுறமும் குடுவை அமைப்பு உடைய ஒரு கருவியால் ஒலியெழும்பும்படி அடிப்பர்.

துளசி - Tulasi (*ocimum sanctum*)

வெலமரின் ஓர் உட்பிரிவுக்கும் கோமட்டிகளின் ஒரு கோத்திரத்திற்கும் உரிய பெயர். துளசியினை இந்துக்கள் தங்கள் வீட்டில் வளர்க்கின்றனர். பெண்கள் இதற்கு வழிபாடு இயற்றுவர். இதன் மரக்கட்டை தியானம் செய்ய மணிமாலைகளுக்குரிய பாசிமணியாக ஆக்கப்படுகிறது.

துலுக்கர் - Tulukkar (turks)

முகமதியருக்குரியதாகச் சிலபோது வழங்கப்படும் தமிழ்ப் பெயர்.

துளுவர் - Tuluvar

துளு, துளுவ, துளுவன் என்பன தமிழ்நாட்டு வேளாளரின் ஓர் பிரிவினருக்கு உரியதாக வழங்குகின்றன. அகசர், பில்லவர், கௌடர், கும்பாரர் முதலிய தென்கன்னடத்தைச் சேர்ந்த சாதியினருக்கும் இப் பெயர்கள் உரியன. இதற்குச் சமமான துளுமர் என்பது துளுமொழி பேசும் மாவிளன் என்ற உட்பிரிவினருக்கு உரிய பெயராக உள்ளது.

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் துளுவ வேளாளர் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் இன்றைய தென் கன்னடத்தைச்

சேர்ந்த துளு நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் எனக் கூறியுள்ளார். சோழ மன்னனான ஆதொண்டைச் சக்ரவர்த்தி தொண்டை மண்டலத்தை வென்றபின் அவனால் அங்கு வந்து குடியேறும்படி அழைக்கப்பட்ட வேளாளர் பிரிவினர் துளுவ வேளாளர் எனத் திரு நெல்சன் கருதுகின்றார்.*

துன்னரர் - Tunnaran (tailor)

நாயர்களின் தொழில் சரிந்ததோர் உட்பிரிவு.

துப்பாகலர் - Tupakala

துபாகலர், துபாக்கி என்பன பலிசர், கவரை, ஏனாதி சாதிகளின் புறமணக்கட்டுப் பாடு உடைய குலமாகப் பதியப்பட்டுள்ளது.

துருக்கர் - Turuka

குருபர்களின் ஒரு குலமாகப் பதியப்பட்டுள்ளது. முகமதியருக்கு உரியதான தெலுங்குப் பெயராகவும் சிலபோது வழங்கி வருகின்றது. பட்டுத் துரகர் *(துருக்கர்)* என்ற திருடர் சாதியும் உள்ளது. *(பார்க்க: பட்ராசர்)*

துருவாளர் - Turuvalar

வேடர் சிலர் தங்களை அழைத்துக் கொள்ளும் சாதிப் பெயர் எனச் சேலம் மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. "துருவாளரரைக் காட்டிக் கொடுக்கிற சாதி என்ற பெயராலும் வழங்குவர். இவர்களிடையே ஒருவனும் ஒருத்தியும் தற்காலிகமாக சிலகாலம் திருமணம் இன்றியே இணைந்து வாழ்கின்ற வழக்கம் இருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்."

---

* மதுரை மாவட்டக் கையேடு (Manual of Madurai District).

U

உடாசி - Udasi

மத்திய இந்தியாவைச் சேர்ந்த சமயத் துறை சார்ந்த சில இரவலர்கள் தங்களை இவ்வாறு கணக்கெடுப்பின்போது பதிந்துகொண்டுள்ளனர். முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கோபால்தாஸ் என்பவரால் இப்பிரிவு தோற்றுவிக்கப் பட்டது என்பர்.

உதயர் - Udaiya

உதயர் பெருமகன் எனப் பொருள்படும். வாழ்க்கை வளமுள்ள லிங்காயதர்களும் சமணர் சிலரும் இதனைத் தங்கள் பட்டப்பெயராகத் தரித்துக் கொள்கின்றனர். உதயர் அல்லது உடையார் என்பது நீலகிரியைச் சேர்ந்த லிங்காயதரான படகர் பிரிவினருக்கு உரிய பெயராகவும் உள்ளது. மைசூர் அரச குடும்பத்தினர் உடையார் மரபினர். ஹைதருக்கும், திப்புவிற்கும் பிறகு இம்மரபினர் மீண்டும் அரசுரிமை பெற்றனர். ஸ்ரீகிருட்டிணராச உடையார் பகதூர் என்பது இப்போது மைசூரில் மன்னராக உள்ளவருக்கான பெயர்.

உடையான் - Udaiyan

"நந்தமான், மலையமான், சுடர்மான் (சுருதிமான்), உடையான் ஆகிய நான்கு சாதிகளும் நெருங்கிய தொடர்புடையவை. இவற்றுள் இறுதியில் கூறப்பட்டது ஒரு சாதியின் பெயர் என்பதனைவிட ஒரு பட்டப்பெயர் என்பதே பொருத்தமானதாகும். இப் பட்டப்பெயரை நத்தமான், மலையமான், சுடர்மான் ஆகிய சாதியாரோடு மண்பாண்டம் வனையும் குயவரும் தரித்துக் கொள்கின்றனர். நத்தமான் என்ற சொல் சமவெளியில் வாழ்பவன் எனப் பொருள்படும். மலையமான் மலைகளில் வாழ்பவன். சுடர்மான் அரும்பெரும் செயல்கள் புரியும் வீரனாவான். நத்தம்பதி என்பது நத்தமான் என்பதனுடைய மற்றொரு வடிவமாகும். இந்த மூன்று சாதியினரும் தேவராசா என்ற சேரமன்னன் மரபில் வந்தவர்கள். அவனுக்கு மூன்று மனைவியர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருத்தியும் பெற்றெடுத்த பிள்ளையே இந்த மூன்று சாதிக்கும்

மூதாதையர் என ஒரு வழக்கு வரலாறு கூறுகின்றது. இது பற்றி வேறு வழக்கு வரலாறுகளும் உண்டெனினும் அனைத்தும் இச் சாதிகளின் மூதாதை ஒரு சேர வேந்தனே என்கின்றன. இவர்கள் கொங்கு நாட்டைச் சேர்ந்த வேடர் சாதிப் படைவீரர்களின் வழித் தோன்றல்கள் ஆகலாம். பின்னர் இவர்கள் சேர நாட்டின் கிழக்குப் பகுதியில் குடியமரும்படி ஊக்குவிக்கப்பட்டிருக்கலாம். இவர்கள் முக்கியமான பொறுப்புக்களில் இருந்தவர்கள் என்பதனைப் பண்டரியார், பண்டாரத்தார் என்ற இவர்களுடைய பட்டப்பெயர்கள் உறுதி செய்கின்றன. இவற்றைச் சிலர் இன்றும் தரித்து வருகின்றனர். சிலர் பயிரிடுவோரால் பாளையக்காரர் என அழைக்கப்படுவதோடு காவல்காரர் என்ற பட்டத்தையும் புனைந்து கொள்கின்றனர்" என *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த உடையான், மலையமான், நத்தமான், சுடர்மான் ஆகியோர் பற்றிய ஒரு குறிப்பில் திரு எப். ஆர். ஹெமிங்வே எழுதுவது வருமாறு: "*1901* ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவை தனித்தனிச் சாதிகளாகப் பதியப்பட்டிருப்பினும் இம் மாவட்டத்தில் இவை உடையார் என்ற சாதியின் அகமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவுகள் எனத் தெரிய வருகின்றன. இவற்றுள் மூன்று உட்பிரிவினர் அவ்வையார் எடுத்து வளர்த்த மூன்று பறையர் சாதிப் பெண்களின் வழித் தோன்றல்கள் எனக் கூறிக் கொள்வர். இம் மூவரும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் மன்னனை மணந்து கொண்டனர். தேவதை ஒருத்தி அவனிடம் இவர்களை மணந்து கொள்வதன் மூலமே அவன் குலத்தை அழிவினின்றும் காக்கலாம் என எச்சரித்ததால் அவன் இவர்களை மணந்து கொண்டான். இவர்களை அவன் மணக்கும்போது சேர, சோழ, பாண்டிய மன்னர் மூவரும் வந்திருந்து வாழ்த்தியதோடு அவ்வையாரும் இவர்களை வாழ்த்தினார். அவ்வையின் வாழ்த்தினாலேயே சேரநாடு மழை வளமும், சோழ நாடு சோற்று வளமும், பாண்டிய நாடு பருத்தி வளமும் பெற்றுத்திகழ்கின்றது. பாண்டிய நாட்டுக்கான வளம் தகுதி வாய்ந்ததாக அமையாமைக்கு இந்தத் திருமணத்தில் பாண்டியன் மணமக்களை வாழ்த்த முதலில் தயக்கம் காட்டியதே காரணம் ஆகும். இந்த மூன்று உட்பிரிவினரும் ஒருவர் வீட்டில் மற்றவர் உண்பதோடு மூவரும் ஒரே மூதாதையின் வழிவந்த உறவுடையவர்கள் என்பதனை ஒப்புக் கொள்வர். எனினும் இவர்கள் தங்களுக்கிடையே மணஉறவுகொள்வதில்லை. அரிசிக்கார நத்தமான் என்ற பிரிவினரை மற்றவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதுவதோடு அவர்களுடன் எவரும் மண

உறவு கொள்வதில்லை. மூன்று பிரிவினுள்ளும் காணிகள் என்ற தெளிவான புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகள் உள்ளன. குளத்தூர், கண்ணனூர், அரியலூர் என்பது போன்ற இக்காணிப்பாளர்கள் இக்காணிகளின் குல முதல்வர்கள் வாழ்ந்த இடத்தில் அடிப்படையில் அமைந்தவை. உடையார் பிரிவினர் திருமணம், சாவு முதலானவற்றுக்கான சடங்குகளின் போது பூணூல் அணிந்து கொள்வர். சிலர் அண்மையில் பூணூல் அணியத் தொடங்கியுள்ளனர். குற்றச் செயலில் ஈடுபடுவதில் நாட்டமுடைய சுடர்மான்களைத் தவிர மற்ற பிரிவினர் சட்டத்தை மதித்தவர்களாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சுடர்மான்களின் ஒரு பிரிவினரான கபிஸ்தலம் மூப்பனார்கள் குற்றச் செயலில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பது அனைவரும் அறிந்து ஒன்று. திருமண உடன்பாடு செய்து கொள்வதன் முன் மணமகள் வீட்டார் மணமகன் இல்லம் சென்று அங்கு உணவு கொள்வர். கணித்தறிவதே இந்த விருந்தின் நோக்கம் ஆகும். ஒருவன் மணம் செய்துகொள்ளும் உரிமையுடைய முறைப் பெண்ணை அவளுடைய பெற்றோர் அவனுக்கு மணம் செய்து தர மறுப்பார்களாயின் அவன் அந்தப் பெண்ணின் கழுத்தில்தாலி அணிவித்து அவளைத் தன்னுடைய மனைவியாக்கிக் கொள்வான். குழந்தைகள் மணத்தைப் பற்றிய உடன்பாட்டையும் இவர்கள் மேற்கொள்வதுண்டு. அப்பொழுது குழந்தைகளுக்குப் புத்தாடையும் புதுப்பாயும் வழங்கி அவர்களின் நெற்றியில் திருநீறு பூசுவர். சாவுச் சடங்கின்போது தீட்டுக்கு உள்ளான குடும்பத்தார் சுடுகாட்டிலிருந்து திரும்பும்போது கொஞ்சம் அரிசியினை மென்று துப்புவர். பதினாறாம் நாள் கணவனை இழந்த ஒருத்தி விளக்கை வழிபடுவதோடு உப்புச் சட்டியினையும் தொழுவாள். நத்தமான் சாதிப் பெண்கள் மார்பை மறைத்து ரவிக்கை அணிவதில்லை. தங்கள் காதுகளின் மடல் நீண்டு தொங்கும்படியாக வளர்த்துக் கொள்ளும் இவர்கள் பறைச்சியரைப் போலக் கன்னங்களிலும் முகவாயிலும் பச்சைக் குத்திக் கொள்வர். தங்கள் தோற்றம் பற்றி நினைவு கூர்வதற்கு உதவும்பொருட்டு இவ்வாறு பறைச்சியரைப் போலப் பச்சை குத்திக் கொள்வதாகக் கூறப்படுகிறது. மலையமான் சாதிப் பெண்கள் தங்கள் தாலி யினை நூலுக்குப் பதிலாகத் தங்கச் சரட்டில் கோத்து அணிவர்.

தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் உடையார்கள் பற்றித் திரு பிரான்சிஸ் கூறியுள்ளவை வருமாறு: "தென் ஆர்க்காடு மாவட்டததில் எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கும் சாதியார் உடையார்களே. இவர்களுள் பெரும்பாலோர் பயிரிடுவோர் கள்ளக்குறிச்சியில் இவர்களுள் பலர் வட்டிக்கடை வைத்துள்ளனர். எத்தகைய வேறுபாடும் பாராட்டாதவர்களாகப் ப

பட்டப்பெயர்களையும் இவர்கள் சூடிக் கொள்கின்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் நாயக்கன், பிள்ளை, முதலி, உடையான் என்ற பட்டப்பெயர்களைத் தரித்தவர்களாக உள்ளனர். மலையமான், நத்தமான், சுடர்மான் என்ற மூன்று உட்பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. இம் மூன்று பிரிவினரும் தாங்கள் ஒரே கால்வழியினைச் சேர்ந்தவர்கள் என்பதனை ஏற்றுக் கொள்வதோடு ஒருவர் இல்லத்தில் மற்றவர் உணவு கொள்வர். எனினும் இவர்கள் தங்களுக்குள் மண உறவு கொள்வதில்லை. இச் சாதியாருள் சிலர் இன்று மரக்கறி உணவு மட்டுமே உண்போராக மாறி வருகின்றனர். இவர்கள் இறைச்சி உண்பவர்கள் வீட்டில் உணவு கொள்ள மறுப்பதோடு அவர்கள் குடும்பத்திற்கு தங்கள் பெண்களை மணம் செய்து தருவதில்லை. எனினும் தங்கள் பிள்ளைகளுக்கு அவ்வாறு இறைச்சி உண்பவர்கள் இல்லங்களிலிருந்து பெண் எடுக்கின்றனர். கிழக்குக் கடற்கரைப் பக்கத்தில் ஒரே சாதியில் மேற்கொள்ளப்படும் மிகையான உறவுவேறுபாடுகளுக்கு இதுசான்றாகும். மற்றெல்லா வகையிலும் இந்த மூன்று உட்பிரிவினரும் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களையே மேற்கொண்டவர்களாக உள்ளனர். சுடர்மான் பிரிவினர் இம் மாவட்டத்தில் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவே உள்ளனர். உடையார்கள் இந்த மூன்று பிரிவினரும் ஒரு காலத்தில் திருக்கோயிலூரை ஆண்ட மன்னர் ஒருவரின் வழிவந்தவர்கள் எனக் கூறுகின்றனர். அவருடைய மூன்று மக்களுள் முதல் மகன் தன் தந்தைக்கு உரியதாக இருந்த மலைநாட்டு ஆட்சிக்கு உரிமையுடையவனாக ஆயினமையின் மலையமான் எனப்பட்டான். இரண்டாமவன் சமவெளிப் பகுதியின் ஆட்சி உரிமையினைப் பெற்றதால் நத்தமான் எனப்பட்டான். மூன்றாமவன் கல்விகேள்விகளில் சிறந்து சுருதிகளில் வல்லவனாக இருந்தமையால் சுடர்மான் எனப்பட்டான். இந்த உடையார்கள் சாதியிலிருந்ததே பிரிட்டிசாரின் ஆளுகையின் தொடக்க நாள்களில் காவல்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காவல்துறையினராக அமர்த்தப்பட்ட இவர்கள் நாட்டில் திருடர் நடமாட்டம் இல்லாது கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு காவல்காரர்களாக இருந்தவர்களின் சந்ததியினர் இன்று பாளையக்காரர் எனச் சமூகத்தவர்களால் போற்றப்படுவதோடு சமூகத்தில் செல்வாக்கும் பெற்றவர்களாக உள்ளனர். இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் வேப்பூர் (குற்றவகுப்பாரானர்) பறையரோடு தொடர்புடையவர்கள் எனக் கூறப்படுகிறது. எனினும் இச் சாதியில் தரம் குறைந்தவர்களே அத்தகைய உறவினை மேற்கொண்டவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் காவல்காரர் பொறுப்பில் இருந்த காலத்தில் பறையர் தலையாரிகளாக இவர்களது ஏவலின் படி பல கிராமங்களின் காவல்

பொறுப்பினை ஏற்றிருந்தனர். இன்று, அந்த உறவு, அந்த பறையர்கள் திருடும் திருட்டுப் பொருள்களை வாங்கிக் கொள்வதிலும், அவர்களை அந்தக் குற்றங்களிலிருந்தும் காவலர்கள் படுத்தும் தொல்லைகளிலிருந்தும் மீட்பதற்காக வழக்குரைஞர்களை அமர்த்திக் கொடுப்பதிலும் உதவுவது என்ற நிலைக்கு மாறியுள்ளது. இந்த உறவு சில சமயங்களில் மேலும் நெருக்கமுடையதாவதும் உண்டு என்பது அனைவரும் அறிந்த ஒன்று. குற்றச் செயலில் ஈடுபட்டுத் தலைமறைமவாகிவிடும் அல்லது சிறை செல்லும் பறையர்களின் மனைவியர் உடையார்களால் ஆதரித்துக் காப்பாற்றப் படுகின்றனர். இதன் காரணமாகவே இப்பறையர் பிரிவினர், மற்றப் பறையர்களைவிட நல்ல நிறம் வாய்கப்ட்டவர்களாக உள்ளனர் என்ற பழிக்கு ஆளாகி உள்ளனர்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மங்கலம் கிராமத்தில் இன்றும் எருமையினைப் பலியிடும் வழக்கம் உள்ளது. அது குறிப்பிடத்தக்க சிறப்புப் பெறுகின்றது. மங்கலத்தில் உள்ள காளி கோயிலுக்குச் சேலம், தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் உள்ளவர்கள் கூட எருமைகளை நேர்ந்து விடுகின்றனர். இதனால் இந்த ஊரை மாடுவெட்டி மங்கலம் என வழங்குகின்றனர். ஒருவன் நோயுற்றாலோ அவனைச் சார்ந்த ஆடுமாடுகள் நோயுற்றாலோ அவன்இந்தக் கோயிலுக்கு என ஓர் எருமையினை நேர்ந்துவிடுவான். அவன் நோய் நீங்கப் பெறுவானாயின் நேர்ந்துவிடப்பட்ட எருமை அக் கோயிலில் வைகாசி மாதத்தில் நடைபெறும் திருவிழாவின்போது பலியிடுவதற்கென அனுப்பி வைக்கப்படும். எருமையினை நேர்ந்துவிடும்போது குங்கும நிறத்துணி ஒன்றில் காசு ஒன்றையும் அந்த எருமை நேர்ந்துவிடப்பட்டதற்கான அறிவிப்புப் பொறிக்கப்பட்ட பனையோலை நறுக்கினையும் வைத்து முடிந்து அந்த எருமையின் கொம்பில் கட்டிவிடுவர். இவ்வாறு நேர்ந்து விடப்பட்ட எருமைகள் அவற்றின் விருப்பம்போல் எங்கு வேண்டுமாயினும் மேயலாம். பலி நாளன்று எருமைகளைத் தேர்ந்தெடுத்துக் கோயிலுக்கு ஓட்டி வருவர். அவற்றுள் ஏழு எருமைகளைக் கோயிலின் முன் உள்ள ஏழு கற்றூண்களில் கட்டிப் போடுவர். உடையார் சாதியினைச் சேர்ந்த பூசாரி அவற்றை ஒவ்வொன்றாக வெட்டிப் பலியிடுவான். அதன்பின் கோயிலில் உள்ள தேவியினைத் தேரில் ஊர்வலமாகக் கொண்டு செல்வர். ஊர்வலம் முடிந்து தேவி கோயிலுக்கு வந்து சேர்ந்த பின் எஞ்சியுள்ள ஏழு எருமைகளையும் முன்போலவே பலியிடுவர். பலிக்காகத் தேர்ந்தெடுக்கப்படாத எருமைகளை விற்றுக் கிடைக்கும் தொகையினைக் கோயிலுக்கு உரியதாகச் சேர்ப்பர். இக் கோயிலில் இரண்டு தேவதைகளின் உருவங்கள் உள்ளன.

அவற்றுள் ஒன்று காளியின் உருவம். மற்றொன்று கோயிலின் பின்புறம் வைக்கப்பட்டுள்ள மங்கலயாச்சியின் உருவம். மங்கலயாச்சி உயிர்ப்பலி எதனையும் ஒப்புக் கொள்வதில்லை. பலிச் சடங்குகள் அவள் கண்ணில் படாதபடி இருக்கப் பலி நிகழும்போது அவள் முன் ஒரு திரையைத் தொங்கவிடுவர்.*

சில ஆண்டுகளுக்கு முன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஒரு பிடாரிகோயில் திருவிழாவின்போது விரும்பத்தாகாத ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளதாக மேற்றிராணியார் வைட்ஹெறட் குறிப்பிட்டுள்ளார். திருவிழாத் தொடங்கிவிட்டது என்பதற்கு அடையாளமாகப் பூசாரி மஞ்சளில் தோய்க்கப்பட்ட கயிற்றினைக் கையில் அணிந்து கொண்டான். கோயில் தக்காரிடையே ஏற்பட்ட தகராறு காரணமாகத் திருவிழா நிறுத்தப்பட வேண்டியதாயிற்று. இச்சிக்கல் தீராததால் மூன்றாண்டுகளுக்குத் திருவிழா தொடர்ந்து நடத்தப்படவில்லை. இந்த மூன்று ஆண்டுகாலமும் உடையார் சாதியினரிடையே அப் பகுதியில் திருமணம் ஏதும் நிகழவில்லை. கையில்காப்புக் கட்டிக் கொண்ட பூசாரிதான் கோயிலை விட்டு வெளியேறினால் பிடாரியின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமென்று கோயிலிலேயே மூன்றாண்டு காலமும் தங்கியிருந்தான் என அவர் கூறியுள்ளார்.

1901-இல் சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: நத்தமான்கள் தாங்கள் முதலில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் தங்கி வாழ்ந்ததாகவும் பின் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்குப் பரவிப் பின் இறுதியில் மதுரைக்கும் சென்று சேர்ந்ததாகவும் கூறுகின்றனர். இவர்களுடைய இக் கூற்றை இவர்களிடையேயுள்ள பதினைந்து புறமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவுகள் தெளிவுபடுத்துகின்றன. இவை அனைத்தும் அரியலூர் புத்தூர் என்பனபோல ஊர்ப் பெயர்களின் அடிப்படையில் அமைந்தவை. இந்தப் ஊர்ப் பெயர்கள் அனைத்து தென் ஆர்க்காடு, திருச்சி, தஞ்சாவூரில் உள்ள ஊர்ப் பெயர்களாகவே இருப்பது இவர்களுடைய இந்தக் கூற்றை மெய்ப்பிக்கின்றன. ஒருவன் தன் அத்தை மகளைத் தனக்குரிய முறைப் பெண்ணாக மணக்க உரிமை கொண்டாடலாம். அவளை வேறொருவனுக்கு மணம் செய்து கொடுப்பார்களாயின் அவனுடைய தந்தையின் உடன்பிறந்தவள் அவள் தான் திருமணத்தின்போது பெற்றுக் கொண்ட பரிசப் பணத்தை தன் தந்தை அல்லது சகோதரனுக்குத் திரும்பத் தரவேண்டும்.

* தென் ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பு (Gazetteer of the South Arcot district).

இத்தொகை அவளை மணக்க உரிமை கொண்டாடுபவனுக்குத் தரப்படும். இதே வழக்கம் குறவர், கள்ளர் சாதியாரிடையேயும் வழக்கில் உள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்தவனுக்கு அக் குடும்பத்தினர் சேர்ந்துள்ள காணிக்குரிய தெய்வத்தின பெயரை இடுவர். பெயரிடும்போது காணிக்குரிய குல தெய்வத்தின் கோயிலுக்குக் குழந்தையை எடுத்துச் செல்வதும் பெரும்பாலும் வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்றது. குழந்தைமணம், வயது வந்தபின் மணம் ஆகிய இருவகை மணங்களும் இவர்களிடையே வழக்கில் உள்ளன. கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை. சடங்குகளை நடத்தப் பிராமணர்களே அமர்த்தப்படுகின்றனர். இவர்களுக்குப் புரோகிதம் செய்யும் பிராமணர்களை மற்ற பிராமணர்கள் தங்களுக்குச் சமமாக மதிப்பதில்லை. பிணத்தை எரித்தல், புதைத்தல் ஆகிய இருவகை வழக்கையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். வேளாளர் நத்தமான்கள் வீட்டில் உணவு கொள்வர். இச் சாதிக்குரிய பட்டப் பெயர் உடையான். நயினார் என்ற பட்டப்பெயரையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர். பள்ளி, சமணர் ஆகியோராலும் நாயனார் என்ற பட்டப்பெயர் பயன்படுத்தப்படுகின்றது. நத்தமுற்றினால் நயினார் என்ற பழமொழியும் வழக்கில் உள்ளது. நத்தமான்கள் வளமான வாழ்க்கை வாய்க்கப் பெற்றவுடன் நயினார் என்ற பட்டப்பெயர் தரித்துக் கொள்வர் என்பது இதன் பொருளாகும். *1901* கணக்கெடுப்பில் நத்தமான்கள் சிலர் தங்களை நற்றமிழுடையான் எனப் பதிந்து கொண்டுள்ளனர். ஊர் உடையான் என்பதும் இவர்கள் சாதிக்கு உரியப் பெயராகத் தரப்பட்டுள்ளது. நத்தமான் என்பது பள்ளியாரின் ஓர் உட்பிரிவாகவும் இடம் பெற்றுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் நத்தமாடி என்ற தலைப்பின் கீழ் நத்தமான்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: இவர்கள் பயிர்த்தொழில் புரியும் வகுப்பார். சிலர் ரயத்துவாரி நிலஉரிமை முறையின் கீழ் பெரும் பண்ணைகளுக்கு உரிமையாளர்களாக உள்ளனர். இச் சொல் ஊர் எனப் பொருள்படும் நத்தம் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். நத்தமக்கள், நத்தமார், நத்தமாடி என்ற பெயர்கள் இவர்களுக்கு உரியனவாக உள்ளன. இவர்களுள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் ரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். வல்லத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேறு சமய நெறியினைப் பின்பற்றும் சாதியார் ஒரு சிலரே உள்ளனர். மதுரை மாவட்டக் கையேட்டில் நத்தம்படியர்களைப் பற்றி மேலும் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: சமூகத்தில் மதிப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ள பயிர்த்தொழிலாளர் இவர்கள். இவர்கள் எட்டாண்டுகளுக்கு உள்ளாகத்தான் மதுரைக்கு குடிபெயர்ந்து வந்து

சேர்ந்ததாக கூறப்படுகிறது. கருத்தைக் கவரும் நடைமுறைகளை மேற்கொண்டுள்ள இவர்களுள் பலர் இயேசு சபையினைச் சேர்ந்த சமயத் தொண்டர்களால் ரோமன் கத்தோலிக்க சமயநெறிக்கு மாற்றப்பட்டுள்ளனர். உடல் வாகில் வேளாளரைவிடவும் நல்ல கூறுகள் வாய்க்கப் பெற்றவர்கள் இவர்கள் எனக் கூறப்படுகிறது. உடையார் எனவும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். துறையூர் நாடு அல்லது தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையத்திலிருந்து இவர்கள் வந்ததாக ஒரு வழக்கு நிலவுகின்றது. பெரிய சமீன்தாரி வட்டாரங்களில் பெரும் எண்ணிக்கையில் குடியமர்ந்துள்ள இவர்கள் மறவர்களின் பழக்க வழக்கங்களில் மாறுபட்டவர்களாக ஒழுங்கு, சுறுசுறுப்பு, செட்டு ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடித்தவர்களாக உள்ளனர்.

நத்தமான் பிரிவுப் பெண்கள் கூலிவேலைக்குப் போவார்கள் எனவும் வயலுக்குப் போயிருக்கும் கணவன்மார்களுக்குச் சோறு கொண்டு போவார்கள் எனவும் எனக்குத் தகவல் தெரிவித்துள்ளார். ஆனால் மலையமான் பெண்கள் இச்செயல்களை மேற்கொள்வதில்லை.

1901-சென்னை மாநில கணக்கெடுப்பு அறிக்கையில் சுடர்மான்களைப் பற்றிப் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலேயே மிகுந்த எண்ணிக்கையில் காணப்படும் இவர்கள் பயிரிடுவோராக உள்ளனர். தங்கள் சமூகப் பழக்க வழக்கங்களைப் பிராமணர்களையும் வேளாளர்களையும் பார்த்து அமைத்துக் கொண்டுள்ளனர். இவர்களுள் சிலர் தங்கள் தகுதியினை உயர்த்திக் கொள்ள இறைச்சி உண்பதனை விட்டுவிட்டனர். எனினும் கள்ளர், இடையர் ஆகியோர் இல்லங்களில் உணவு உண்பர். மூப்பன் என்பது இவர்களுக்குரிய பட்டம் பெயர். சுடர்மான்கள் சிலர் அகமுடையராக மாறியுள்ளனர் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

உத்தாரி - Uddari

கிராமத்துத் தலையாரிக்கான மற்றொரு பெயர்.

உத்து - Uddu (*Phaseolus Mungo*)

காப்பிலியன் சாதியின் ஓர் உட்பிரிவு. உழுந்து எனப் பொருள்படுவது.

உத்தாண்டர் - Udhahandara

குருமொக்கள் சிலருக்குச் சமீன்தார்கள் தரும் பட்டப்பெயர்.

உடும - Uduma

உடும எனப்படுவது உடமல பல்லி இனத்தைக் குறிக்கும். இது போயர், காபு, தொட்டியன், ஏனாதி ஆகிய சாதிகளுடக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர்.

உக்ராணி - Ugrani

கிராமத்துத் தானியக் களஞ்சியம், கருவூலம், பூதஸ்தானம் ஆகிய உக்ராணியினைக் காவல்காக்கும் ஊர்ப்பணியாளனான காவல்காரனுக்குத் தென்கன்னட மாவட்டத்தில் வழங்கும் பெயர். *1907* இல் காவல் துறையைச் சேர்ந்த காவலன் என்ற தகுதி உக்ராணிக்கு வழங்கப்பட்டது. அதற்கு அறிகுறியாக இவன் ஊர்க்காவல் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பித்தளைச் சின்னத்தைக் கையில் அணிந்துள்ளான். பின்வருவனவற்றை ஊரைச் சேர்ந்த குற்றவியல் நடுவருக்குத் தெரிவிக்க வேண்டியது உக்ராணியின் கடமையாகும்.

1. திருட்டு, வீடுகளை உடைத்துப்புகுதல், கொள்ளை, வழிப்பறி, எதிர்பாராத சாவுகள், தற்கொலை ஆகிய கொடிய குற்றங்கள் முதலியன பற்றி
2. நிலத்தகராறு தொடர்பாக ஊரில் கலகம் மூளலாம் என்ற சூழல் நிலவுவது பற்றி
3. பகீர்கள், பைராகிகள் முதலியோர் ஊர்ப்பக்கமாகப் புதிதாக வருபவர்களைப் பற்றிய தகவல்
4. விரும்பத்தகாத நடத்தையுடையவன் என ஊரார் கருதும் ஒருவன் ஊருக்குக் குடிவந்திருத்தல் பற்றிய தகவல்
5. பொதுச் சொத்துக்கள், சாலைகள், பாலங்கள், மாட்டுப்பட்டி, ஊர்ப்புறம் போக்கில் வளர்ந்துள்ள மரங்கள் ஆகியவற்றுக்கு நிகழும் கேடுகள் பற்றி.

ஊழியக்காரன் - Uliyakaran

பரிவாரம் சாதியாரின் குற்றேவலருக்கான பெயர்.

உள்ளாடர் - Ulladan

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் உள்ளாடர் பற்றிப் பதியப்பட்டுள்ளதாவது: உள்ளாடர்களும் நாயாடிகளும் மலைப்பக்கங்களிலும் சமவெளிகளிலும் வாழ்கின்றனர். மிக நெடுங்காலத்திற்கு முன்பு சில உள்ளாடர் குடும்பங்கள் சபரிமலைக்கு அருகேயுள்ள தலபுறக்கோட்டையில் வந்து குடியேறினர். இன்றும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் இந்த இடத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர். சமவெளியில் உள்ளாடர் வழிபாடு நடத்துகின்ற அதே தெய்வங்களை வாலன்களும் வழிபடுகின்றனர். இதனால் உள்ளாடர்களை இவர்கள் கொச்சுவாலன்கள் என்கின்றனர். சபரிமலையில் இவர்கள் ஒரு காலத்தில் தங்கியிருந்த இடம் கொச்சுவாலக்குடி என்று இன்றும் அழைக்கப்படுகிறது. உள்ளாடர்களுள் பலரும் காட்டு விலங்குகளிடம் உள்ள அச்சம் காரணமாக இப்பொழுது அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டனர். இப்பொழுது இவர்கள் காடுகளில் நிலையாக ஓரிடத்தில் தங்காமல் இடம் பெயர்ந்தபடி உள்ளனர். இவர்கள் நம்பூத்ரி பிராமணத்தி ஒருத்தியின் வழித்தோன்றல்கள் எனப்படுகின்றனர். சாதிவிலக்கம் செய்யப்பட்ட அவள் தான் செய்த குற்றத்தை உள்ளதுதான் என ஒப்புக் கொண்டதால் அவளுடைய வழித்தோன்றல்கள் உள்ளாடர் எனப்பட்டனர் என்பர். உள் என்ற சொல்லும் ஓடுனு என்ற சொல்லும் இணைந்து காட்டுக்குள் ஓடுபவன் எனப் பொருள் தரும்படியாக உள்ளாடன் என்ற பெயர் அமைந்தது என்றும் கூறுவர். இச் சாதியார் உயர்சாதியினரைக் கண்ட அளவில் காட்டுக்குள் ஓடி விடுவதால் இவ்வாறு பெயர் பெற்றனர் என்பர். சிறந்த வேட்டைக்காரர்களான இவர்கள் காடுபடு பொருள்களான மெழுகு முதலியவற்றைச் சேகரிப்பதில் கைதேர்ந்தவர்கள். இவர்களிடையே புதுமையான மணமுறை ஒன்று பெருவழக்காக உள்ளது. முனைவர் டே அதனைப் பின்வருமாறு விளக்குவார்: இலைகளைக் கொண்டு அகன்றதான ஒரு பெரிய குடிசை அமைத்து அதனுள் மணமகளை மறைவாக இருக்கச் செய்வர். ஊரிலுள்ள திருமண வயது வந்த இளைஞர்கள் அனைவரும் அதன்பின் அக்குடிசையினைச் சுற்றிவளைத்து நிற்பர். அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் அந்தப் பெண்ணின் தந்தையோ நெருங்கிய உறவினனோ கையில் ஒரு தப்பட்டையுடன் அமர்ந்திருப்பார். மற்றும் சிலரும் வாத்தியக் கருவிகளுடன் அங்கிருப்பர். இசை இசைக்கத் தொடங்கியவுடன் கையில் நீண்ட மூங்கில் கம்புகளை வைத்துள்ள அந்த இளைஞர்கள் மணமகள் அமர்ந்துள்ள குடிசையினைச் சுற்றி நடனமாடத் தொடங்குவர். இடையிடையே அவர்கள் தங்கள் கையிலுள்ள மூங்கில் கம்பினைக் குடிசையினுள் சொருகுவர். இவ்வாறு சுமார் ஒரு மணி நேரம் நடனம் தொடர்ந்து நிகழும். இந்த

நடனத்தின்போது குடிசையினுள் இருப்பவள் யாருடைய மூங்கில் கழியினைப் பிடுங்கிக் கொள்கின்றாளோ அவனே அவளுக்கு மணமகனாவதற்கரிய பேறு வாய்க்கப்பட்டவனாவான். இதனை அடுத்து ஒரு விருந்து நிகழும்.* இவர்கள் காட்டுக் கனிகள், காட்டு வள்ளிக்கிழங்கு முதலியவற்றை உண்டு மிகக் கேவலமான வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கையில்துப்பாக்கி ஏந்த வாய்ப்புக் கிட்டும்போது சிறந்த வேட்டைக்காரர்களாகத் திகழ்கின்றனர்.

உள்ளாடர் பற்றித் திரு எஸ். மட்டீர் பின்வருமாறு எழுதுகின்றார்:** இவர்கள் காட்டு வள்ளிக்கிழங்கு, கூவைக் கிழங்கு முதலிய காட்டில் இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே வாழ்க்கை நடத்துகின்றனர். இக் கிழங்குகளைத் தோண்ட எப்பொழுதும் கையில் கூரிய முனையோடு கூடிய கழி ஒன்றினை வைத்திருப்பர். இத்துடன் வில், அம்பைப் பயன்படுத்தி வேட்டையாடும் இவர்கள் வேட்டையில் வீழ்த்தும் விலங்குகளையும் உணவாகக் கொள்கின்றனர். இவர்கள் பயன்படுத்தும் அம்பில் இரும்பாலான கூர்முனை பொருத்தப்பட்டிருக்கும். வளைந்து நெளிந்து செல்லும் நாகத்தை ஒரே அம்பில் இரு துண்டாக்கும் திறமை பெற்றவர்கள் உள்ளாடர். இவர்கள் மலைகளில் உள்ள புகழ்பெற்ற கோயில்களின் அடிமைகள் எனப்படுகின்றனர். மலைநிலத்துப் பண்ணையார்களும் இவர்கள் மீது உரிமை கொண்டாடுகின்றனர். நாயர், சிரியர் முதலியவர்களிடமும் இவர்கள் கூலிக்கு வேலை பார்ப்பர். சமவெளியில் வாழும் உள்ளாடர் சிலர் தங்களை அல்லது தங்கள் தந்தையரைக் குழந்தைகளாக இருக்கும்போது சமவெளியில் வாழ்பவர்கள் திருடி வந்து சமவெளியில் அடிமைகளாக அடைத்து வைத்திருப்பதாகக் கூறுவர்.

திருவாங்கூரில் உள்ள கோட்டயத்தில் நான் குறுக்கு வில்லோடு கூடிய உள்ளாடர் குழு ஒன்றினை எதிர்ப்பட்டேன். இந்த விற்கள் ஆறு, உப்பங்கழி, குளம் ஆகியவற்றில் மீன் பிடிக்கப்பயன்படுத்தப்படுவதாக அவர்கள் கூறினர். அதில் பயன்படுத்தப்படும் அம்பு இரண்டு முதல் மூன்றடி நீளம் இருக்கும். அதன் ஒரு முனையில் ஒரு தூண்டில் பொருத்தப்பட்டிருக்கும். இதனோடு மெல்லிய உறுதியான கயிறு ஒன்றின் ஒரு முனை இணைக்கப்பட்டிருக்கும். அதன் மறுமுனையை அம்பின் மரத்தாலான துளை வழியே நுழைத்துக் கொண்டுவந்து வில்லின் குறுக்குச் சட்டத்தில் பொருத்தியிருப்பர். இந்த கயிறு சுமார் முப்பதடி நீளம் இருக்கும். இக் கயிறு தூண்டில் அகப்படுத்தும் மீனினை

* ஒப்பு நோக்குக: நாயாடி (Cf.Nayadi.)

** திருவாங்கூரில் இந்தியர் வாழ்க்கை. (Native Life in Travancore, 1883)

நீரிலிருந்து இழுத்துக் கரை சேர்க்க உதவுவதோடு அம்புகள் தொலைந்து போகாமல் இருக்கவும் உதவுகின்றது. வேறு எந்த பழங்குடி இனத்தவர்களிடத்தும் நான் இதுபோன்ற குறுக்குவில்லைக் காண நேர்ந்ததில்லை. அது தொடர்பாக இவர்கள் பறங்கி என்ற சொல்லை சொல்லக் கேட்டவுடன் எனக்குத் தெளிவு பிறந்தது. இந்தச் சொல் மேற்குக் கடற்கரையில் வந்து சேர்ந்த போர்த்துகீசியரைக் குறிப்பதாகும். இந்தியர்கள் ஐரோப்பியர் அனைவரையும் பறங்கியர் என்ற சொல்லால் குறிப்பர். போர்த்துகீசிரியடமிருந்தே இவர்கள் இந்தக் குறுக்கு வில்லைப் பயன்படுத்தக் கற்றிருக்க வேண்டும்.

கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த உள்ளாடர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு எல்,கே.அனந்தகிருட்டிண அய்யர்* அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இவர்களுடைய குடிசைகள் சமவெளியில் உள்ள காடுகளில் நெல்வயலைச் சார்ந்து அல்லது தென்னந்தோப்புக்களுள் மேல்சாதிக்காரர்கள் குடியிருப்பை விட்டு விலகி இருக்கும். கிறித்தவ மாப்பிள்ளாக்களை மட்டும் இவர்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் காணலாம். இவர்களுடைய குடிசைகள் குறுகிய மூங்கில் கம்பங்களின் மீது அமைக்கப்படுகின்றன. குடிசையின் கூரையும் நான்கு பக்கங்களும் பின்னப்பட்ட தென்னோலைகளால் தடுக்கப்படும். மூங்கில் பட்டியில் பொருத்தப்பட்ட தென்னோலை குடிசையின் கதவாக உதவுகின்றது. பின்னப்பட்ட தென்னோலைகள் சிலவும் இவர்களே நெய்த பாய்களுமே உட்காருவதற்கான இருக்கைகளாக உதவுகின்றன. அவற்றையே இரவில் படுக்கையாகவும் பயன்படுத்திக் கொள்வர். சமைப்பதற்கும் நீரெடுத்து வைப்பதற்குமான சட்டிபானைகளே இவர்கள் பாத்திர பண்டங்கள். மண்தட்டுக்களும் கலையங்களும் அவற்றோடு கூட இடம்பெறும். தட்டுக்களில் உணவு உண்ணும் இவர்கள் கலயங்களை நீர் குடிக்கப் பயன்படுத்துகின்றனர். அகன்ற பாக்கு மட்டைகளில் உப்பு, மிளகாய் முதலியனவற்றை வைத்திருக்கவும் கண்டேன். இவர்கள் தங்களிடமுள்ள கொஞ்சம் தானியங்களையும் சில துணிமணிகளையும் மூங்கில் கூடையில் வைத்திருப்பர். அக் கூடைகள் குடிசையின் கூரையிலிருந்து தொங்கியபடி இருக்கும்.

இச் சாதியினைச் சேர்ந்த மூத்தவர்களே சாதிச் சபையின் உறுப்பினர்கள். மூப்பன் என்ற சாதித்தலைவன் உள்ளான். அவனுக்கு பொனம்பன் என்ற உதவியாளன் உளன். சாதியினைச் சேர்ந்தவர்கள் திருமணம்,

* தனிக்கட்டுரை, இன இயல் கணக்கீடு, கொச்சி, எண் 9.1906
(Monograph. Eth.Xurvey. Cochin. No.9. 1906).

சாவு ஆகியவற்றை மூப்பனே முன்னின்று நடத்தி வைப்பான். சாதியாரின் பூசல்களைக் கேட்டுத் தீர்த்து வைப்பவனும் மூப்பனே. ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் பற்றிக் கேட்டறியவே சாதியார் சபை அடிக்கடி கூடுகின்றது. குற்றம் இழைத்தவர்கள் சபையார் முன் அழைக்கப்படுவர். சபைக்குத் தலைமை தாங்கும் மூப்பன் விவரங்களைக் கேட்டறிவான். குற்றம் புரிந்தவர்கள் தாங்களாகவே குற்றத்தை ஒப்புக் கொண்டால் அவர்கள் அரசர் முன் அழைத்துச் செல்லப்படுவர். அரசருக்கு இது பற்றி முன்பே அறிவிக்கப்பட்டிருக்கும். குற்றம் புரிந்த ஆண்களுக்கு அடிகள் தரப்படுவதோடு தண்டமும் விதிக்கப்படும். பெண்களுக்குத் தண்ணீர் அல்லது இளநீரைப் பருகத் தருவர். அது இவர்கள் பாவத்தைப் போக்கும். தண்டத் தொகையில் சில சமயங்களில் கள் வாங்கிச் சாதியினைச் சேர்ந்த அனைவரும் பருகுவர். சாதித் தலைவன் தான் மேற்கொண்ட தொல்லைகளுக்காகச் சில புத்தன் காசுகளைப் பெறுவான்.

சமய நெறியினைப் பொருத்தவரை உள்ளாடர் ஆவிகளையும் தீய தேவதைகளையும் வழிபடுபவர்கள், நோயும், பிற துன்பங்களும் ஒருவனுக்குத் தீய தேவதைகளின் செல்வாக்காலேயே வருகின்றன. என நம்பி அந்தத்தீய தேவதைகளின் கோபத்தைத் தணிக்க வேண்டுவது இன்றியமையாதது எனக் கொள்வர். கப்பிரி, தீக்குட்டி, சாத்தான் ஆகிய தீங்கிழைக்கும் தேவதைகளைக் கொட்டில் எனப்படும் கூரைக் கோயில்களில் கற்களில் எழுந்தருளிவித்து வழிபடுவர். அரிசி, மாவு, மறி, கோழி, கள், பொங்கல், தேங்காய், வாழைப்பழம் ஆகியனவற்றை அத் தேவதைகளுக்குப் புரட்டாசி மாதத்தில் வெள்ளிக்கிழமைகளில் படைப்பர். சாதியினைச் சேர்ந்த ஒருவனே அப்போது வெளிச்சப்பாடாக (தெய்வ வாக்கு உரைப்பவன்) இருந்து தெய்வ ஆவேசம் உற்றவன்போல் பேசுவான். பேய் பிடித்திருக்கும் பெண்களின் உடம்பிலிருந்து பேயினை ஓட்டுபவனும் இவனே, தெய்வம் அவனை விட்டு மலையேறியபின் படைக்கப்பட்டவற்றில் பாதியினை எடுத்துக்கொள்ளும் அவன் மறுபாதியினை அங்குக் கூடியிருப்பவர்களிடையே வழங்கக் கொடுத்து விடுவான். குடும்பத்தைச் சேர்ந்த மூதாதையர்களின் ஆவிகளையும் இவர்கள் வழிபடுகின்றனர். அவர்கள் தங்கள் கனவில் வந்து அவர்களுக்கு வேண்டியனவற்றைக் கேட்பர் எனவும் நம்புகின்றனர். அவ்வாறு கனவில் வந்து கேட்டனவற்றைத் தரவில்லையாயின் அவர்களுடைய ஆவிகள் குடும்பத்திற்குத் தீங்கியற்றும் எனவும் நம்புகின்றனர்.

இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு என உரிய சொட்டலை என்ற இடத்தில் பிணங்களைப் உள்ளாடர் புதைக்கின்றனர். சிலர் குடியிருக்கும்

குடிசைகளிலிருந்து சில கெச தூரம் தள்ளிப் பிணத்ததைப் புதைப்பதும் உண்டு. வயதில் இளையவர்கள் பிணத்தை மிக ஆழமான குழிகள் தோண்டிப் புதைக்கும் இவர்கள் முதியவர்கள் பிணத்தை அவ்வளவு ஆழமாகக் குழி தோண்டிப்புதைப்பதில்லை. மூங்கில்களாலான பாடையின் மீது புதிய துணியொன்றினை விரித்து அதன் மீது பிணத்தைக் கிடத்தி உறவினர்கள் புதைகாட்டிற்குத் தூக்கிச் செல்வர். அண்டை அயலாரான சாதியினைச் சேர்ந்த நண்பர்களும் உறவினர்களும் பாடையின் பின் சென்று பிணத்தைப் புதைத்தபின் குளித்துத் திரும்புவர். இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அன்றிரவு விரதம் இருப்பர். பதினைந்து நாள்களுக்குத் தீட்டினை மேற்கொள்ளும் இவர்கள் பதினாறாம் நாள் காலையில் தலைப்பாளை (அம்பட்டானான புரோகிதன்) அழைத்துத் தீட்டு நீக்குவர். அவன் பசுஞ்சாண நீரினைக் குடிசையின் உள்ளும் அதனைச் சுற்றியும் தெளிப்பதோடு குடும்ப உறுப்பினர்கள் மீதும் தெளித்துத் தீட்டினைப் போக்குவான். அன்று சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்து அளிப்பர். உள்ளாடர், புலையர் முதலிய தாழ்ந்த சாதியினரிடையே விருந்துக்கு அழைக்கப்பட்டால் தங்கள் கையோடு கொஞ்சம் அரிசி, உப்பு, மிளகாய், கள் ஆகியனவற்றை அல்லது சில அணாக்களை விருந்துக்கான செலவினைச் சரிக்கட்டக் கொண்டு செல்லும் வழக்கம் உள்ளது. பெரும்பாலும் மேற்கூறிய பொருள்களைத் தாராள மனம் படைத்த உயர்சாதியாரிடமிருந்து இவர்கள் பெற்றுச் செல்வர். சாவு நிகழ்ந்து ஓராண்டு முடிவுறும்போது மீண்டும் இதுபோன்றதொரு விருந்தினை நிகழ்த்துவர். உள்ளாரிடையே இறந்து போனவனுடைய உடன்பிறந்தவன் மகனே துக்கம் மேற்கொள்பவன். அவனே இறந்தவனுடைய உடமைகளுக்கு உரிமையுடையவனாதலால் சாவுச் சடங்குகளை முன்வந்து நடத்தித் தன் உரிமையினை நிலைநாட்டிக் கொள்வான்.

கடற்கரைப் பகுதியினைச் சார்ந்து வாழும் உள்ளாடர் மரங்களை வெட்டுவதோடு படகு கட்டும் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். உள்நாட்டில் வாழ்வோர் தேன் முதலிய காடுபடு பொருள்களைச் சேகரித்து ஒப்பந்தக்காரர்களுக்கு விற்பர். பயிர்த்தொழில் நடைபெறும் மாதங்களில் இவர்கள் உழுதல், விதைத்தல், நடுதல், அறுத்தல் முதலான எல்லா வகைப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். உழவர்களின் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும் பொறுப்பினையும் ஏற்றுச் செய்கின்றனர். தங்கள் உழைப்புக்குச் சில அணாக்கள் மதிப்புடைய நெல்லை மட்டும் கூலியாகப் பெறும் இவர்கள் ஆண்டில் பெரும்பாலான மாதங்களில் பட்டினியால் வாடியவர்களாக காட்டுக் கிழங்குகளையும் வேட்டை விலங்குகளையும் (எலி, ஆமை, மீன், முதலை முதலியன) உணவாகக் கொள்கின்றனர். எலிகளை எங்கே தேடிப் பிடிக்கலாம்

என்பதனை அறிந்துள்ள இவர்கள் நீண்ட கழி ஒன்றினை எலி வங்குகளுள் செலுத்திக் குடைந்து அவற்றை வெளிப்படுத்திக் கொல்வர். நாட்டுப் புறங்களில் ஆண்களும் பெண்களும் இதற்காகவென்றே கைகளில் கழிகளோடு திரிவர். வயல் வரப்பு, வேலியோரம், மூங்கில் திடல் ஆகியவற்றில் எலி வங்குகளைக் காண நேர்ந்தால் உடனே எலிவேட்டையில் ஈடுபடுவர். முதலைகளையும் இவர்கள் பிடிக்கின்றனர். முதலைகள் வாழும் நீர்நிலைகளின் கரையில் கோழி, ஆடு முதலியவற்றின் உடலை கூரிய முனையோடு கூடிய கழிகளோடு இட்டு வைப்பர். அதனைப் பற்றி உண்ணவரும் முதலைகள் வாயில் கூரிய இரும்பு தைக்கும். காத்திருக்கும் உள்ளாடர் கழிகளாலும் கத்தியாலும் முதலையினைத் தாக்கிக் கொல்வர். நீரில் நஞ்சிட்டும், தூண்டில் போட்டும் மீன்களைப் பிடிக்கும் இவர்கள் நீரில் மேலெழும் மீன்களை ஈட்டி எறிந்து கொல்வதிலும் கைதேர்ந்தவர்கள். வேட்டைக்காரர்களுக்கு விலங்குகளின் கால் தடம் கண்டு கூறி அவை சென்றுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்வர். திருமண விருந்திற்கான இறைச்சிக்கான வேட்டையில் ஈடுபடும் மாப்பிள்ளாக்களுடன் வேட்டைக்குத் துணையாகப் போகின்றனர். அப்போது அவர்கள் இவர்களைக் கொட்டிமுழக்கி விலங்குகளை வெளிப்படுத்த மட்டும் அமர்த்திக் கொள்வர். இதற்குக் கூலி யாகத் திருமண நாளன்று இவர்களுக்கு உணவளிப்பதோடு கொட்டுமுழக்கில் பங்குபெற்ற ஒவ்வொருவனுக்கு மூன்றரை அணா மதிப்புடைய நெல்லையும் வழங்குவர். கையில் கழிகளோடு செல்லும் இவர்கள் வேட்டைக்கு நாயினை அரிதாகவே உடன் அழைத்துச் செல்கின்றனர். நாய்கள் விலங்குகளை விரட்டிவிடும் என எண்ணுவதே இதற்கான காரணமாகும். காட்டு விலங்குகளை வேட்டையில் கொல்லும்போது அந்த விலங்கின் பின்பாதியில் வலப்பக்கம அரசுக்கு உரிமையுடையதாகும். அதனை வன அலுவலரிடம் தருவர். அவர் அதனை ஏலம் விட்டு (ஏப்பம் விட்டன்று) கிடைக்கும் தொகையினை வட்டாராக் கருவூலத்தில் கட்டுவார். விலங்கின் இடப்பக்கம் அதனைச் சுட்டு வீழ்த்தியவனுக்கு உரியது. முகமும் நாவும் அவனுக்கே உரியன. உள்ளாடர் சாதித் தலைவனும் அந்த விலங்கில் ஒரு பங்கு பெறுவான். எஞ்சியுள்ள இறைச்சியினை வேட்டைக் குழுவில் இடம்பெற்ற அனைவரும் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். இவ்வாறு பங்கிடும்போது அவர்களிடையே உடன்பாடு ஏற்படாதுபோனால் வேட்டை விலங்கை வீழ்த்தியவன் கூறும் முடிவினை அனைவரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். வேட்டைக்கான ஏற்பாட்டினை மாப்பிள்ளாக்கள் செய்திருப்பார்களாயின் உள்ளாடர் கூலியும் சோறும் மட்டுமே பெறுவர். யானைகளைப் பிடிக்கக் குழி அமைத்திருக்கும் காட்டுப் பகுதிகளில் வேட்டையாட அனுமதிக்கப்படுவதில்லை.

நாயாடிகளைப் போலவே உள்ளாடர்களும் சமவெளிப் பகுதியில் வாழும் சண்டாளர் எனக் கருதப்படுகின்றனர். பிராமணர், நாயர் ஆகிய உயர்சாதியரிடமிருந்து அறுபத்து நான்கடி தூரத்தில் இவர்கள் விலகி நிற்கக் கடமைப்பட்டவர்கள். சாலையின் நடுவே நடக்கவோ கடைத் தெருக்களில் நுழையவோ உள்ளாடருக்கு உரிமையில்லை. உயர்சாதியினர் வாழும் குடியிருப்புக்களையும் இவர்கள் நெருங்கிச் செல்லுதல் கூடாது. புலையரும் பறையரும் இவர்கள் தொடுவதால் தாங்கள் தீட்டுக்கு உள்ளாவதாகக் கூறுகின்றனர். எனினும் உள்ளாடர் சாதிப் பெண்கள் புலையர் சாதிப் பெண்களைப் போலக் கூலிக்குச் செல்வதை இழிந்ததாகக் கருதுவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். தங்களுக்கு வேண்டியதைத் தேடிக் கொண்டு வருவது தங்கள் கணவன்மார் பொறுப்பு என உள்ளாடர் சாதிப் பெண்கள் கூறுகின்றனர்.

உள்ளி - Ulli (Onions or garlic)

காய்கறித் தோட்டம் போடும் தீகலரின் உட்பிரிவு ஒன்றுக்கான பெயர். இதற்குச் சமமான உள்ளிப் போயல் என்பது கோல்லர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். உள்ளிக் கட்டை என்பது போயர், குறவர் சாதியின் குலப்பிரிவுக்கான பெயர்.

உளும்பர் - Ulumbau

"உளும்பர் நாயர் சாதியின் அகமணக்கட்டுப்பாடு உடைய ஒர்உட்பிரிவினர். வெளியிலிருந்து வந்து குடியேறியவர்களாகவோ மாடு மேய்ப்போராகவோ இவர்கள் இருத்தல் வேண்டும். துவாரகையிலிருந்து வந்து குடியேறியவர்கள் இவர்கள் என்ற ஒரு வழக்கு உள்ளது. கோட்டியூரில் உள்ள காட்டுக் கோயிலில் ஆண்டுத் திருவிழாவின்போது அபிடேகத்துக்கான நெய்யினைத் தரும் பொறுப்பு இன்றும் இவர்களுடையதாகவே இருந்து வருகின்றது. தலைச்சேரியில் உள்ள திருவெங்காட்டுக் கோயிலுக்கு மோரினை வழங்குபவர்களும் இப்பிரிவைச் சேர்ந்த குடும்பத்தவர்களுடைய உரிமையாகும். எல்லாக் கோயில்களுக்கு அபிடேகத்திற்கான பால் தரும் உரிமையும் இவர்களுக்கு உண்டு" என மலபார் மாவட்டக் கையேடு கூறுகின்றது.

உளுவலர் - Uluvala (*Dolichos biflorus*)

போயர், ஜோகி சாதிகளின் புறமணக்கட்டப்பாடு உடைய குலப்பெயர் கொள்ளு எனப் பொருள்படுவது.

உங்கரா் - Ungara

மோதிரம் எனப் பொருள்படும் இது பலிசா், குருபா் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவின் பெயராகப் பதியப்பட்டுள்ளது.

உண்ணித்திரி - Unittiri

உண்ணித்திரி அல்லது உண்யாத்திரி எனப்படும் இது போற்றுதற்குரிய சிறுவன் எனப் பொருள்படும். இது சாமந்தா் சாதியின் ஓா் உட்பிரிவு. உண்ணித்தான் என்பது நாயா்களின் பட்டப்பெயா்களுள் ஒன்றாக *1901* திருவாங்கூா் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளது. உண்ணி *(சிறியது)* தான் *(தகுதிக்கான பட்டம்)* என்றே சொற்கள் இணைந்து இது வந்ததாகக் கூறுவா்.

உண்ணேகங்கணம் - Unnekanganam

குருபா்களின் ஓா் உட்பிரிவு. இவா்கள் மண நாளன்று கம்பளி நூலினைக் கையில் கங்கணமாக அணிவா்.

உண்ணி - Unni

திருவாங்கூரைச் சோ்ந்த உண்ணிகளைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்குத் திரு என். சுப்பிரமணி அய்யருக்கு நான் கடப்பாடுடையேன். உண்ணி என்ற சொல் முன்பு எப்பொருளை உணா்த்தி வந்தபோதிலும் இன்று அது அம்பலவாசி பிரிவினைச் சோ்ந்த நான்கு சாதியாருக்கு உரிய பட்டப்பெயராக உள்ளது. இந்த நால்வரும் தங்கள் பழக்கவழக்கங்களில் மிகுந்த வேறுபாடு கொண்டவா்கள், புட்பகன், பிராமணி, தீயாட்டுண்ணி, நாட்டுப்பட்டன் என்பனவே இந்த நான்கு உட்பிரிவினருக்கான பெயா்கள், இவா்களுள் புட்பகன் தொடங்கி ஒருவருக்கொருவா் சமூகப்படி நிலையில் தாழ்ந்தவராவா். புட்பகன் என்ற பெயா் புட்பம் அல்லது பூப்பு என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததாதல் வேண்டும். பிராமணியினைப் பாப்பினி என்றே வழங்குவா். இவா்கள் திருவாங்கூரைச் சோ்ந்த சூத்திராகளுக்குப் பிராமணா்கள் நிகழ்த்தும் சில சடங்குகளை நடத்துவிப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனா். தீயாட்டுண்ணிகள் மலபாரில் தீயம்பதிகள் எனப்படுகின்றனா். இந்துக் கோயில்களில் இவா்கள் ஆற்றும் சில பணிகள் காரணமாக இப் பெயா் பெற்றனா். நாட்டுப்பட்டா்கள் பட்டா் உண்ணிகள் என அழைக்கப்படுகின்றனா். கரைப்புரம் உண்ணிகள் என்ற பெயரும் இவா்களுக்கு உண்டு. உண்ணி என்ற சொல் குழந்தை எனப் பொருள்படும். இது

நம்பூத்ரிகளின் இல்லத்துக் குழந்தைகளை அழைக்கப் பயன்படுத்தப்படும் செல்லப் பெயராகும். அம்பலவாசிக் சாதியினரான இவர்கள் இப்பெயர்களால் அழைக்கப்படுவதற்குக் காரணம் இவர்கள் நாயர்களைவிடத் தகுதியில் உயர்ந்தவர்கள் என்பதாலேயாம். இப்பெயரை முதன்முதலில் நாயர்களே பயன்படுத்தியவர்களாதல் வேண்டும். புட்பகன்கள், புட்பகன், நம்பியாசான், பூப்பிலி என மூன்று பிரிவினராக உள்ளனர். புட்பகன் பிரிவினர் மத்திய திருவாங்கூரில் உள்ள ஏவூர் வரையே காணப்படுகின்றனர். அதற்கும் வடக்கே இவர்கள் நம்பியார் என அழைக்கப்படுகின்றனர். நம்பியாசான்கள் கொச்சி, திருவாங்கூர் மாநிலங்களில் வாழ்கின்றனர். பூப்பலிப் பிரிவினர் தெற்குப் பகுதியிலேயே காணப்படுகின்றனர். பிராமணிகளிடையேயும் கனாப் புரமுண்ணிகளிடையேயும் உட்பிரிவுகள் எவையும் இல்லை. தீயாட்டுண்ணிகளிடையே சாஸ்தா கோவிலில் பணியாற்றும் வடபகுதிகளைச் சார்ந்த தீயாட்டு நம்பிகள் பத்ரகாளி கோயிலில் பணியாற்றும் தீயாட்டுண்ணிகள் என்ற இரு பிரிவுகள் உள்ளன. பெண்கள் அதொவரம்மார், கோலிவலம்மார் என அழைக்கப்படுகின்றனர்.

பூப்படைந்த பிராமணத்தி தன் கணவனோடு சேர்ந்த சமயத்தில் கருவில் உருவானவன் புட்பகன் என்று கூறப்பட்டுகின்றது. பரசுராமன் இவர்களைத் தனியே பிரித்து வைத்து மலபாரில் உள்ள கோயில்களில் பூக்கட்டும் பணியினை இவர்களுக்குத் தந்தார். புட்பகரின் தோற்றம் பற்றிய இந்த வரலாறு கேரளமகாம்மியத்தில் கூறப்பட்டிருப்பினும் கோயில்களுக்கான பூப்பலியினை மேற்கொண்டமையால் இவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டனர் என்று கொள்வதே பொருத்தமானது. பூப்பள்ளி என்ற பெயர் இவ்வாறு வந்ததாகக் கொள்ளலாம். எனினும் பள்ளி என்பது புனிதமான அனைத்தையும் குறிப்பதாகும். தெய்வங்களுக்கான மாலை தயாரிப்பதாலேயே இப்பிரிவினர் இப்பெயர் பெற்றனர். நம்பியார், நம்பிகள் என்றழைக்கப்படும் நம்பியாசான்கள் பூப்பள்ளிப் பிரிவினரையும் பிராமணி பிரிவினைரையும் ஒப்பப் புட்பகன்களோடு சேர்ந்த வகுப்பாராதல் வேண்டும். சில இடங்களில் நம்பியாசான்கள் களரிகளும் படைப்பயிற்சிச் சாலைகளும் வைத்திருப்பதாகத் தெரிகிறது. நாயர்களின் இல்லங்களில் நடக்கும் திருமணங்களில் பிராமணிகள் சமயத் தொடர்புடைய பாடல்களைப் பாடுவதால் ஓரளவு தகுதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வாறு நாயர் வீடுகளில் சென்று பாடும் தொழிலை மேற்கொள்ளாதவர்கள் தனிக் குலத்தவர்களாகக் கருதுகின்றனர். இச் சாதியின் தோற்றம் பற்றிய மற்றொரு வழக்கு வரலாறும் கூறப்படுகின்றது. மலையாளப் பிராமணர்களிடையே தொடக்க கால வழக்குப்படி பெண்களைப் பூப்படையும்

முன் சிறுமியாக இருக்கும்போதே மணம் செய்விக்கும் வழக்கம் இருந்தது. தன்னுடைய மகள் பூப்படைந்தபின் மணம் செய்வித்த நம்பூத்ரியின் குடும்பத்தைச் சாதிவிலக்கம் செய்தனர். இவனே புட்பகன் பிரிவின் மூதாதையாகக் கருதப்படுகின்றான். இந்தக் கூற்றினை உண்மையென ஏற்றுக் கொள்வதற்கில்லை. வேதகாலத்தில் இருந்ததைப் போலவே பிற்காலத்திலும் பெண்கள் பூப்டைந்த பின் மணம் செய்வித்தலே வழக்கமாக இருந்தது. வேத நெறியினைப் பின்பற்றுவதில் கிழக்குக் கடற்கரைப் பிராமணர்களைவிட நம்பூத்ரிகள் தீவிரம் காட்டுபவர்களாகையால் மேற்கூறிய வழக்கு வரலாற்றினை உண்மையெனக் கொள்ள இடமில்லை. தாரகனை வதைத்தபின்னும் சினம் தணியாதிருக்கும் பத்ரகாளியினைச் சினம் தணிவிக்க அவளைப் புகழ்ந்து பாடும்படி சிவபெருமானால் அனுப்பப்பட்ட பூதத்தின் வழித்தோன்றல்கள் தீயாட்டுண்ணிகள் எனக் கூறப்படுகிறது. தொடக்க கால முதலே இவர்கள் அம்பலவாசியருள் தனிப் பிரிவினராக இருந்து வந்ததாகத் தெரிகின்றது. கரைப்புரம் உண்ணிகளை இன்றுள்ள உயர்ந்த நிலைக்கு உயர்த்தியவர். கேரளத்தை முன்னாளில் ஆண்ட சேரமான் பெருமாளே ஆவார். சூத்திர சாதியினராக இருந்த இவர்கள் ஒரு சமயத்தில் அவருக்குப் பிராமணர்கள் இயற்றும் சடங்குகளை நிகழ்த்திக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதன்பின் இவர்கள் உண்ணி என்ற பட்டப்பெயரைத் தரித்துக் கொள்ளவும் தங்களைப் பட்டர் எனக் கூறிக் கொள்ளவும் அவர். அனுமதித்தார். இது கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த பிராமணர்களுக்கு மலபாரில் வழங்கும் பெயராகும். இவ்வாறாக இவர்கள் நாட்டுப்பட்டர், பட்டர் உண்ணி, கரைப்புரம் உண்ணி என்ற மூன்று பெயர்களுக்கு உரியவராயினர். கரைப்புரம் எனப்படும் சேர்த்தலையிலேயே அப் பெயருக்குரிய பிரிவினர் அரசரிடமிருந்து சமூகத் தகுதியில் உயர்வு பெற்றனர். இப்பிரிவினருள் பலர் இன்றும் அம்பலப்புழா மற்றும் சேர்த்தலை வட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

புட்பகன் ஒருவனுடைய இல்லம் புஷ்பகம், பூமடம், படோடதகம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது, இவற்றுள் இறுதியில் உள்ளதான படோடதகம் என்பது தெய்வத்தை மஞ்சனமாட்டும் நீர் தெய்வ உருவின் காலிலிருந்து விழும் இடத்தைக் குறிக்கும். புட்பகருடைய இல்லங்கள் அவர்களுடைய பணியினை நிறைவுறுத்த உதவும் வகையில் கோயிலுக்கு மிக அருகாமையில் அமைந்திருப்பதாலேயே படோடதகம் எனப்படுகின்றது. தீயாட்டுண்ணி, நாட்டுப்பட்டர ஆகிய பிரிவினரின் இல்லங்கள் பவனம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. வெளியே செல்லும்போது பிராமணர்களைப் போலவே

புட்பகர் பிரிவுப் பெண்களான புட்பாணியரும், பிராமணியரும் தங்கள் உடலை ஒரு துண்டால் போர்த்து கொள்கின்றனர், குடையொன்றைப் பிடித்துக் கொள்வதோடு நாயர் சாதிப் பணிப்பெண் ஒருத்தியினையும் அப்போது உடன் அழைத்துச் செல்வர். நம்பூத்ரிகள் சாதிப் பெண்கள் சேலையில் இருப்பதைவிட இவர்கள் சேலையில் மேலும் ஒரு மடிப்பு இருக்கும். செறுத்தாலிக் கூட்டம் என்ற கழுத்தணியினை இச் சாதிப் பெண்கள் அணிகின்றனர். காதணி கட்டு இலை என வழங்கப்படும். மணிக்கட்டில் வெண்கலத்தாலான வளையல்களை அணிகின்றனர். தியாட்டுண்ணிப் பிரிவுப் பெண்களும் நாட்டுப்பட்டரும் இத்தகைய வளையல்களை அணிவதில்லை. வெளியே செல்லும்போது பெரும்பாலும் நாயர் சாதிப் பெண்ணை உடன் அழைத்துச் செல்லும் வழக்கமும் இவர்களிடையே இல்லை.

கோயில்களில் பயன்படுத்தப்படும் மாலைகளைக் கட்ட மிகத் தகுதி வாய்ந்தவர்கள் புட்பகன்களே எனக் கூறப்படுகிறது. நாள்தோறும் இறைவனுக்குப் படைக்கப்படும் பொருள்களைத் தயாரிப்பதிலும் இவர்கள் உதவி புரிகின்றனர். முன்காலத்தில் நம்பியாசன்கள் படைக்கலப் பயிற்சி கற்றுத் தரும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இன்றுங்கூட இவர்கள் களரிகள் எனப்படும் போர்பயிற்சிக் கூடங்களை நடத்தி வருகின்றனர். இவர்களுடைய புண்யாகம் எனப்படும் தீட்டு நீக்கப்படும் சடங்கினைப் புட்பகன்களே நடத்தி வைக்கின்றனர். சத்தியர் முதல் நாயர் வரையான எல்லாச் சாதியாரின் இல்லங்களில் நடைபெறும் திருமணங்களில் பிராமணிகள் சமயத் தொடர்பான பாடல்களைப் பாடுகின்றனர். குமாரநல்லூரிலும் பிற இடங்களிலும் உள்ள பகவதி கோயில்களில் பகவதியினை வாழ்த்திப் பாடும் பாடல்களைப் பாடப் பெண்கள் அமர்த்தப்படுகின்றனர். ஆண்கள் மாலைகள்கட்டுவதோடு உட்பிரகாரத்தையும் பீடங்களின் அடிப்பகுதியினையும் பெருக்கித் துப்புரவு செய்தல், பாத்திரங்கள் துலக்குதல், தேவியின் ஊர்வலத்தில் விளக்கு ஏந்திச் செல்லுதல் ஆகிய பணிகளையும் செய்கின்றனர். புட்பகன்கள் மேற்கூறிய பணிகளுள் மாலைகள் கட்டும் பணியினை மட்டுமே மேற்கொள்கின்றனர். புட்பகன் பிரிவினைச்சேர்ந்த பெண்கள் திருமணங்களில்பாட வெளியே செல்வதில்லை. தீயாட்டு என்ற சொல் தெய்வ ஆட்டம் (தெய்வத்தை மகிழ்விக்க ஆடும் ஆட்டம்) என்ற சொல்லின் திரிந்த வடிவம் எனக் கூறுவர். கோயில்களில் குற்றேவல் பணியினை மேற்கெண்டதால் தீயாட்டுகள் புட்பகன்களிலிருந்து தகுதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர் என்ற ஒரு வழக்கும் வழங்குகின்றது. சாதி விதிகள் கண்டிப்புடன் பின்பற்றப்பட்டு வந்த முன் காலத்தில் தீயாட்டினைக்

கோயில்களிலும் பிராமணர்கள் இல்லங்களிலும் மட்டுமே நடத்தி வந்தனர். இன்று சூத்திரத சாதியினர் கூடத் தீயாட்டுண்ணிகளைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்துத் தீயாட்டு நடத்தும் உரிமையினைப் பெற்றுள்ளனர். எனினம் சூத்திரர் இல்லங்களில் புண்யாகச் சடங்கு நிகழ்த்தாமல் தீயாட்டு நடத்தப்படுகின்றது. இச் சடங்கின்போது முதலில் இன்னிசைக் கருவிகள் முழங்கக் கணபதியினையும் பத்ரகாளியினையும் வழிபடுவர். இந்த வழிபாடு நடுப்பகல் நேரத்தில் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகையால் உச்சப்பாட்டு என்றழைக்கப்படுகிறது. வெள்ளை, மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய ஐந்து வண்ணப் பொடிகளால் தரையில் பத்ரகாளியின் உருவம் ஒன்று வரைந்து இரவில் அத் தேவதையினைப் புகழ்ந்து தீயாட்டுண்ணியும் அவன் குழுவினரும் பாடல்கள் பாடுவர். பின் அக் குழுவினைச் சேர்ந்த ஒருவன் பத்ரகாளி தாரகனை வதைத்த காட்சியினை நடித்துக் காட்டியபின் இச்சடங்கினை நடத்தும் வீட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் முன் தீப்பந்தம் ஒன்றினை ஆட்டிக் கண்ணேறு பட்ட தீங்கினை நீக்குவான். இதுவே இச் சடங்கில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இந்தத் தீப்பந்தம் சிவனால் கொடுக்கப்பட்டது என நம்புகின்றனர். அதனை ஆட்டும் முன் சிவனை வழிபடுவர்.

கரைப்புரம் உண்ணி பிற பிரிவினர்களிலிருந்து மாறுபட்டவர்களாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உண்ணிகள் அனைவரும் ஸ்மார்த்தர்கள். எனினும் தீயாட்டுண்ணிப் பிரிவினரும் பிராமணிகளும் பத்ரகாளி வழிபாட்டில் மிகுந்த ஆர்வங்காட்டுகின்றனர். உண்ணிகளிடையேயான எல்லாச் சமூகப் பூசல்களையும் மேற்பார்த்துத் தீர்த்து வைப்பவர்கள் நம்பூதிரிகளே. இவர்கள் சாதியினைச் சேர்ந்தவர்களே வழக்குகளின்போது நடுவர்களாக இருப்பர். ஒரு புட்கனுடைய வீட்டிற்கு ஏதேனும் சடங்கை நடத்தி வைக்க நுழையும் முன் அங்குப் புண்யாகம் நடத்தப்பட வேண்டும் என அதற்காக வரும் நம்பூதிரி கூறுவான். இளையாடுகளைத் தங்களைவிடத் தகுதியில் உயர்ந்தவர்கள் எனப் புட்பகன்கள் ஏற்றுக் கொண்டாலும் அவர்களைச் சடங்குகளை நடத்த இவர்கள் அமர்த்துவதில்லை. இளையாடுகள் ஒரு காலத்தில் நாட்டுப்பட்டர்களின் புரோகிதர்களாக இருந்து வந்ததாகத் தெரிகின்றது. இன்று நாட்டுப்பட்டர் பிரிவினுள்ளேயே நன்கு கற்றறிந்தவர்கள் அதனை மேற்கொண்டு செய்து வருகின்றனர். புண்யாகம் சடங்கினை மட்டும் நம்பூதிரிகளை முகவர்களாக வைத்து நடத்துகின்றனர். நம்பியாசன்கள், தியாட்டுண்ணிகள், பிராமணிகள், ஆகியோருக்கு இளையாடுகளே புரோகிதர்களாக இருந்து வருகின்றனர்.

வயது வந்தபின் மணம் செய்வித்தலையே இவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். சிறுமியர் பன்னிரண்டு வயது அடையும்போது மணம் செய்விக்கப்படுகின்றனர். திருமண நாளுக்கு முந்திய நாள் மாலையில் மணமகள் குளிக்கும் சடங்கு நிகழ்ச்சி நிகழும். அதன் பின் அவள் மல்லிகைப் பதியத்தினை நடும் சடங்கு நிகழும். அந்தப் பதியத்தில் மலரும் மலர்களை அவள் தெய்வத்திற்கு உரியதாக்குவாள். மணநாளன்று மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் மணமகள் இல்லத்திற்கு ஊர்வலமாக வருவர். மணமகள் முகத்திரையிட்டவளாக கைகளில் கண்ணாடியினையும் மாலையொன்றினையும் ஏந்தியவளாக வீட்டு வாயிலில் நின்று அவர்களை வரவேற்பாள். அவள் முகத்திரை விலக்கப்பட்ட பின் மணமக்கள் ஒருவர் முகத்தில் ஒருவர் விழித்துக் கொள்வர். முகூர்த்த நேரம் நெருங்கியவுடன் அவர்கள் கரங்கள் இணைத்து வைக்கப்படும். பின் மணத்திற்குரிய பிற சடங்குகளை நிகழ்த்துவர். புட்பகன் ஒருவனுடைய திருமணத்தில் மணி அடித்து ஆடல், கைகொட்டிக்களி, யாத்ர களி ஆகிய ஆட்டங்கள் நிகழ்த்தப்படும். முன்பெல்லாம் புட்பகன்களிடையே மணமுறிவு சாதாரமணமாக நிகழ்ந்து வந்தது. இன்று மணமுறிவுகள் நிகழ்வதில்லை. முதல் கணவன் இறந்தபின் ஒருத்தி மலையாள பிராமணனோடு சம்பந்தம் செய்து கொள்ளலாம். பிராமணிகள் மணமுறிவு வழக்கினைக் கைவிட்டுவிடவில்லை. நம்பியாசன்கள், பூப்பலிகள், பட்டர் உண்ணிகள், பிராமணிகள் ஆகியோர் மருமக்கள்தாய உடைமை உரிமையினை மேற்கொண்டவர்களாக உள்ளனர். புட்பகன்களும் தீயாட்டுண்ணிகளும் மக்கள்தாய உடமை உரிமையினைப் பேணி வருகின்றனர். பிராமணி ஒருத்திக்குப் புட்பகன் ஒருவனோடு கொண்ட உறவால் பிறக்கும் பிள்ளை மக்கள்தாய உரிமை மேற்கொள்ளம் குடும்பத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும். நம்பூத்ரிகளிடையே இருப்பதைப் போல உண்ணிகளிடையேயும் குடும்பத்தில் மூத்தவனே முறையாக மணம் செய்து கொள்கின்றான். மற்றவர்கள் நாயர் சாதிப் பெண்களோடு சம்பந்தம் வைத்துக் கொண்டு சநாதனகாரனாக இருந்து வருவர். இல்லம் பிரிவு நாயர்கள் தங்கள் வீட்டுப் பெண்கள் உண்ணிகளோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள அனுமதிப்பதில்லை.

ஜடாகர்மம் இவர்களுக்கு உரியதன்று ஆயினும் இன்று இவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. நாமகர்ணம் சடங்கு, அன்னப் பிரசனம் சடங்கோடு ஆறாம் மாதம் ஒன்றாக நடத்தப்படுகின்றது. சவுளம் சடங்கு குழந்தைக்கு மூன்று வயது ஆகும்போது நடத்தப்படுகின்றது. நாட்டுப்பட்டர் பிரிவினர் இதனை உபநயனச் சடங்கோடு கூட அதற்கு முன்னர் நடத்துவர். உபநயனச் சடங்கு

நடத்த உரிய வயது எட்டுக்கும் பதினாலுக்கும் இடைப்பட்டதாகும். உபநயனச் சடங்கு முடிந்த பதினான்காம் நாள் சமொவர்த்தனச் சடங்கு நிகழ்த்தப்படும். சாவுத் தீட்டினைத் தீயாட்டுண்ணிகள் பத்து நாள்களும் பிராமணிகள் பன்னிரண்டு நாள்களும், நாட்டுப் பட்டர் பதின்மூன்று நாள்களும் மேற்கொள்கின்றனர். இவர்கள் நாளும் மும்முறை பத்துத் தடவை காயத்ரி ஒத அனுமதிக்கப்படுகின்றனர்.

அம்பலவாசிகளுள் பூணூல் அணியும் பிரிவினருள் புட்பகன்களே தகுதியில் உயர்ந்தவர்கள் என்பதனை அவர்களுடைய தோற்றம் பற்றிய வழக்கும் சமயம் சமூகம் தொடர்பான வழக்குகளும் தெளிவுபடுத்துகின்றன. பட்டர் உண்ணிகளே அம்பலவாசிகளுள் கடையர். இவர்கள் குருக்கள் சாதிப் பிரிவுக்கு ஒரு படி உயர்ந்தவர்கள். கோயிலில் பூசை செய்வோர் இவர்களுக்கு நேரிடையாகத் தீர்த்தமும் பூவும் வழங்குவதில்லை. எனினும் கோயில் கருவறையில் நுழையும் வாயிற்படிக்கு வலப்பக்கத்தில் நிற்கும் தனி உரிமையினை இவர்கள் பெற்றுள்ளனர். எல்லா அம்பலவாசிப் பிரிவினருக்கும் இவ்விதி பொருந்தும். அம்பலவாசிப் பிரிவினருள் மற்றவர்கள் உண்ணிகளிடமிருந்து உணவு பெற்று உண்பதில்லை. உண்ணிப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் தங்களுக்குப் புரோகிதம் செய்யும் இளையாடுகளிடமிருந்து உணவுபெற்று உண்பர். புட்பகன்கள் புண்யாகம் சடங்கு நடத்த நம்பூத்ரிகளை அமர்த்திக் கொள்வதால் நம்பூத்ரிகள் இவர்கள் இல்லங்களில் மூத்ததுகளின் இல்லங்களில் உணவு சமைத்துக் கொள்வதைப் போல உணவு சமைத்துக் கொள்கின்றனர்.

"தீயாட்டுண்ணிகள் (தீ - நெருப்பு, ஆட்டம் - ஆடுதல்) கோயில்களின் முன் நெருப்பினுள் புகுந்து ஆடிச் செல்வதால் இப் பெயர்பெற்ற மலபாரைச் சேர்ந்த போலிப் பிராமணர்கள்" எனத் திரு லோகன் கூறியுள்ளார். "தீயாட்டுண்ணிகளின் பணி நெருப்பினுள் ஆடிச் செல்வது எனத் திரு லோகன் கூறியுள்ளது சரியானதென நான் கருதமாட்டேன். இவர்கள் கைகளில் ஏற்றிய திரிகளைத் தாங்கியவர்களாகக் கண்ணேறு பட்டதைத் தவிர்க்க அல்லது கோயில்களின் வழிபாடு தொடர்பாகவே ஆடுவதாகக் கூறலாம். இந்த ஆட்டம கணியன்களின் பள்ளிப்பண்ண மற்றும் கோலன்துள்ளல் ஆட்டங்களை ஒத்தது எனலாம். பத்ரகாளியின் உருவத்தினைத் தரையில் வண்ணப் பொடிகளைக் கொண்டு வரைந்து அத் தேவதையின் அவதாரத்தின்போது நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சிகளை தீயாட்டுண்ணிகள் பாட்டுக்களாகப் பாடுவர். பாடி முடித்தபின் சில தேங்காய்களை உடைத்து வைத்துத் திரியினை ஏற்றி

கோயிலில் உள்ள தேவியின் முன் வைப்பர். யாரேனும் ஒருவருக்கோ பலருக்கோ கண்ணேறு பட்டதை நீக்க இந்த ஆட்டம் நிகழ்த்தப்படும்போது அவ்வாறு கண்ணேறுபட்டவர்கள் முன் திரிகள் எற்றி வைக்கப்படும்" எனத் திரு சுப்ரமணி அய்யர் இது தொடர்பாக விளக்கம் தந்துள்ளார்.

உப்பளவர் - Uppalavar (salt workers)

அளவன்களுக்கான மற்றுமொரு பெயர்.

உப்பரர் - Uppara

பின்வரும் உப்பரர் பற்றிய குறிப்புகளுக்கு நான் திரு சி. உறபவதன ராவ் அவர்களுக்கு பெரிதும் கடப்பாடுடையேன். தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் உப்புக் காய்ச்சுவதில் ஈடுபட்டுள்ள இவர்கள் உப்பிலியன், உப்பரன், உப்பாரர், உப்பிலிகள் என்று பலவாறு அழைக்கப்படுகின்றனர். உப்பிலியர் தமிழ் பேசுகின்ற தமிழ்நாட்டவராவர். உப்பரர் தெலுங்கு பேசுகின்ற தெலுங்கு நாட்டாரராவார். உப்பாரர் மைசூரையும் அதனை அடுத்துள்ள மாவட்டங்களையும் சேர்ந்த கன்னடம் பேசுவோர். உப்பரர் பற்றித் திரு எச்.எ.ஸ்டுவர்ட் கூறியுள்ளதாவது:* "தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த உப்பிலியன்களை ஒத்த இவர்கள் குளங்களைத் தூர்வாருவது, மண்வெட்டிக் கரைகட்டுவது ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். தோற்றம், பழக்க வழக்கம், கூலிதேடுதல் ஆகியவற்றில் இவர்கள் பெரிதும் ஒட்டர்களை ஒத்தவர்கள். மண்ணிலிருந்து உப்புக் காய்ச்சி எடுப்பதே இவர்கள் பரம்பரைத் தொழில் என்பதனை இவர்கள் பெயர் புலப்படுத்துகின்றது. தங்களை இவர்கள் வைணவம். சைவம் ஆகிய சமயங்களைப் பின்பற்றுபவர்கள் எனக் கூறி கொண்டாலும் நடைமுறையில் இவர்கள் சுங்காலம்மா, திம்மம்மா, ஜம்புலம்மா முதலிய கிராம தேவதைகளையே வழிபட்டு வருகின்றனர்." உப்பிலியன்கள், உப்பரர், உப்பாரர் ஆகிய பிரிவினர் தொடக்கத்தில் ஒரே சாதியினைச் சேர்ந்தவர்களாயிருந்து பல்வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து சென்று தங்கி அவ்விடங்களில் வழங்கிய மொழிகளைத் தங்கள் மொழியாகக் கொண்டவர்களாதல் வேண்டும். இச் சாதியினர் இவ்வாறு பல கிளையினராகப் பிரிந்ததற்கான காரணம் தெளிவாகப் புலப்படக் கூடியதாகவே உள்ளது. இச்சாதியின் தோற்றம் பற்றிய வழக்கு வரலாறு இவர்கள் தொழில் எரி, குளம், கால்வாய் ஆகியன தோண்டுதலாகும் என்கிறது. இன்று போலவே முன்பும் தென்னிந்தியா பயிர்த்தொழிலினையே முக்கிய

* வட. ஆர்க்காடு மாவட்டக் கையேடு (Manual of North Arcot district).

தொழிலாகக் கொண்டிருந்தது. நீர் கிடைக்கும்போது அவற்றைத் தேக்குதல், கிடைக்காத இடங்கள் தோண்டிப் பெறுதல், தேக்கிய நீரை வாய்க்கால்கள் வழியே விளைநிலங்களுக்குக் கொண்டு செல்லுதல் ஆகியன பயிர்த்தொழிலின் அடிப்படைத் தேவைகளாகும். திரு வெங்கையா அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளள கல்வெட்டுகள்* தென்னிந்தியாவை முன்பு ஆண்டு வந்த அரசர்கள் ஏரிகள், கிணறுகள், கால்வாய்கள் ஆகியன அமைத்தலில் மிகுந்த ஆர்வங்காட்டி வந்துள்ளனர் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றன. இன்று சென்னை மாநிலத்தில் வடக்கே கஞ்சம் மாவட்டம் முதல் தெற்கே திருநெல்வேலி மாவட்டம் வரை உப்பியன்கள், உப்பரா், உப்பாரா் ஆகியோர் பரவலாகக் காணப்படுகின்றனர். மேலே கூறிய தொழில்களுடன் இவர்கள் செங்கல் கட்டிடம் கட்டுதல், வீடு கட்டுதல், கோட்டை அமைத்தல் முதலிய மண்வேலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெலுங்கு உப்பரா் பற்றிப் புச்சனன்** எழுதியுள்ளதாவது: "இவர்கள் மண்ணால் சுவர் வைத்தலையே தங்கள் முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். கோட்டைகளுக்கான சுவர் அமைத்தல் இவர்கள் சிறப்பாக மேற்கொண்டு வந்த பணியாகும்." இச் சாதியார் மேற்கொண்டிருந்த மிகவும் சிறப்பு வாய்ந்த தொழில் மண்ணுப்பும் வெடியுப்பும் தயாரித்து வந்ததாகும். இவற்றுள் வெடியுப்பு துப்பாக்கிக்கான மருந்து தயாரிக்க இன்றியமையாததொரு மூலப்பொருள். "இந்தியாவெங்கும் வெடியுப்புக் கிடைக்கின்றது. இந்துக்கள் இதன் இயல்பு பற்றி நன்கு அறிந்திருந்தினர். இது சாதாரணமாக மருந்தாகக் கூடத் தரப்படுகின்றது. இந்த வெடியுப்பின் ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் இருந்து வந்ததோடு இன்றும் தொடர்ந்து அதன் ஏற்றுமதியில் முன்னணியில் நிற்கின்றது. டச்சுக்காரர் ஆட்சி இந்தியாவில் இருந்த காலத்தில் அவர்கள் இந்த வெடியுப்பு வணிகத்தையே சிறப்பாக மேற்கொண்டிருந்தனர் என முனைவர் ஜி.ஒப்பொ்ட் கூறுகின்றார்.***

---

* இந்தியத் தொல்பொருள்துறை ஆண்டறிக்கை, *1902-1903.*
(Archaeolog.Survey of India, Annual Report, 1902-1903.)

** மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம், *1807*-ஆம் ஆண்டுப் பதிப்பு.
(Journey through Mysore, Canara and Malabar, Ed., 1807.)

*** பண்டை இந்தியாவின் போர்க் கருவிகள், படைவகுப்பு, அரசியல் நெறி - சிறப்பாக வெடி மருந்தும் வெடி படைக்கலன்களும், சென்னை, *1880.*
(On the Weapons, Army Organization, and Political Maximums of the Ancient Hindus, with special reference to gun powders and fine arms, Madras, 1880.)

தங்கள் தெய்வத்தின் உணவிற்கான உப்பினைத் தயாரிப்பதற்காகப் படைக்கப்பட்ட ஒருவனின் வழித்தோன்றல் தாங்கள் என உப்பிலியன்கள் கூறுகின்றனர். அவ்வாறு படைக்கப்பட்டவன் மனைவி, சில கண்ணாடி வளையல்களுக்கு அந்த உப்பினைப் பண்டமாற்றுச் செய்ததால் அவன் தெய்வத்தின் அருளை இழந்தான். இதனால் சினமுற்ற அவன் மனைவியினைக் துளை காளவாயில் தள்ளிக் கொல்லப் பார்த்தான். அவள் காளவாயில் மறுபக்கம் இருந்த இருந்த துளை வழியே வெளியேறித் தப்பினாள். இக் கதையினை உண்மையென நம்பச் செய்ய உப்பிலியன்கள் தங்கள் சாதிப் பெண்கள் கண்ணாடி வளையல் அணிவதில்லை என்பதனையும் அவர்கள் காளவாயில் ஒரு துளை இருப்பதையும் சுட்டிக் காட்டுவர். வங்கக் கடலைத் தோண்டிய புராணக் காலத்தவனான சகரன் என்பவன் வழியில் வந்தவர்கள் தங்கள் சாதியார் என்றும் இவர்கள் கூறிக் கொள்வர். அவனுடைய வரலாறு விட்டுணு புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு: ஹைஹயன், தாலஞ்சகன் என்பவர்களால் தோற்கடிக்கப்பட்டுக் காட்டுக்குச் சென்ற பாகு என்பவனுடைய மகன் சாகரன், பாகு காட்டில் அவுரவ முனிவரின் குடிலின் அருகே தங்கி இருக்கும்போது அவன் மனைவியருள் ஒருத்தி கருவுற்றாள். பாகுவின் மற்றொரு மனைவி அவள் கருப்பத்தைக் கலைக்க வேண்டி அவளுக்கு நஞ்சிட்டாள். இதற்கிடையே பாகு முதுமையால் இறக்க நேரிட கருவுற்றிருந்த அவன் மனைவும் அவனோடு ஈமத்தீயில் பாய்ந்து உயிர்விட முற்பட்டாள். அவுரவ முனிவர் அவள் உலக முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளும் மாமன்னன் ஒருவனைப் பெற்றெடுக்கப் போவதாகக் கூறி அவளைச் அவ்வாறு கணவனோடு உடன் உயிர் துறவாது தடுத்தார். அவள் சிறந்ததொரு ஆண் மகனைப் பெற்றெடுத்தபோது அவள் உடலில் ஊட்டப்பட்ட நஞ்சும் அவனோடு வெளிப்பட்டுவிட்டது. இதனால் அந்த முனிவர் அவனுக்கு நஞ்சோடு வெளிப்பட்டவன் என்ற பொருள்பட சகரன் எனப்பெயர் தந்தார். அவன் வளர்ந்த பின் தன் தந்தையுற்ற தொல்லைகளை அறிந்து தன் நாட்டை மீட்க முடிவு செய்தவனாக ஹைஹயர் அனைவரையும் கொன்று அழித்ததோடு மற்ற அரசர்களையும் தன் தலைமையை ஏற்று கொள்ளம்படி செய்தான். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். ஒருத்தி அசமஞ்சசன் என்ற மகனைப் பெற்றெடுத்தாள். மற்றொருத்தி அறுபதனாயிரம் பிள்ளைகளைப் பெற்றாள். பின்னர் சகரன் மேற்கொண்ட அசுவமேத யாகத்தில் அவன் பிள்ளைகள் அவன் வெற்றிக்கு உதவினர். யாகக் குதிரையினை ஒருவன் பாதளத்தில் கொண்டு சேர்த்துவிட்டான். சகரன் தன் பிள்ளைகளிடம் அந்தக் குதிரையினைத் தேடிக் கொண்டுவரும்படி பணித்தான். அதனுடைய குளம்புத் தாரைகள் பாதாளம்

நோக்கிச் சென்றிருப்பதைக் கண்ட அவர்கள் அது நுழைந்து சென்ற சுருங்கையினை ஆளுக்கு ஒரு காதம் அளவு ஆழம் என்று கணக்கிட்டுத் தோண்டினர். பாதாளத்திற்கு வந்து சேர்ந்த அவர்கள் அக் குதிரை அங்கு உரிமையோடு திரித்து கொண்டிருக்க அதனருகே கபில முனிவர் அமர்ந்து தவத்தில் ஈடுபட்டிருக்கக் கண்டனர். "இவர்தான் நம் யாகத்து இடையூறாகக் குதிரையை மறித்துக் கொண்டு வந்தவர். இவரை இப்போதே கொல்வோம் எனக் கூறிப் படைக்கருவிகளை ஓங்கியபடி அவர்மீது அவர்கள் பாய்ந்து செல்ல அந்த முனிவர் கண் திறந்து அவர்களைக் கணநேரம் உற்று நோக்கிய அளவில் அவரிடமிருந்து வெளிப்பட்ட புனித நெருப்பில் அவர்கள் அனைவரும் எரிந்து சாம்பலாயினர். தன் மக்கள் இறந்ததைக் கேள்விப்பட்ட சகரன் அசமஞ்சசன் மகன் அம்சுமானை யாகக் குதிரையினைப் போய்க் கொண்டுவரும்படி பணித்தான். தன் தந்தையும் சிற்றப்பன்மாரும் தோண்டிய வழியில் நுழைந்து பாதாளம் வந்து சேர்ந்த அவன் கபில முனிவரைக் கண்டு பணிந்து வணங்கினான். அம் முனிவர் அவன் தந்தையிடம் ஒப்படைக்கும்படி அவன் தேடி வந்த குதிரையைக் கொடுத்து உதவியதோடு அம்சுமான் கேட்ட வரத்தையும் தந்தருளினார். அதன்படி அவனுடைய பேரன் புனிதக் கங்கையினைக் கொண்டு வந்து பாதாளத்தில் சேர்த்தவுடன் சாம்பலும் எலும்புமாக எரிந்துபோன அவர்கள் சொர்க்கம் சேர்வர் எனவும் அருள் புரிந்தார். தன் அசுவமேத யாகத்தை முடித்த சகரன் தன் பிள்ளைகளிடம் கொண்ட அன்பின் நினைவாக அவர்கள் பாதாளத்திற்குச் செல்லத் தோண்டிய வழியினைச் சாகரம் என அழைக்கலானான். அதுவே இன்றவும் கடலுக்கு உரிய பெயராகச் சிறப்பாகக் கங்கை சங்கமாகும். வங்கக் கடலுக்கு உரிய பெயராக இருந்து வருகின்றது. கபில முனிவர் தந்த வரத்தின்படி அம்சுமானின் பேரனான பகீரதன் கங்கையினைக் கொண்டு வந்ததால் அது பாகீரதி என்ற பெயரும் பெறுவதாயிற்று. இதுவே இச் சாதியின் தோற்றம் பற்றிய வரலாறு ஆகும். இதனால் உப்பரர் தங்களைச் சாகர குலத்தவர் எனவும் அழைத்துக் கொள்கின்றர். சகரன் மக்கள் கடலைத் தோண்டியதைப் போல இவர்களும் இன்று, குளம், கிணறு, கால்வாய் முதலியவற்றைத் தோண்டி வருகின்றனர், மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் உப்பரர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் இவர்கள் உப்பரர் எனவும் தென்பகுதியில் உப்பலிகர் எனவும் மேற்குப் பகுதியில் மேல்சர்க்கரை எனவும் அழைக்கப்படுகின்றனர்." (இவர்கள் சர்க்கரையைவிட இன்றியமையாததான உப்பினைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பதால் மேலான - உயர்ந்த-சர்க்கரை என்ற பொருளில் மேல்சர்க்கரை என அழைக்கப்படுவதாக சிலர் கூறுகின்றனர்). இச் சாதியினர் தெலுங்கர், கர்நாடகர் என இரு

உட்பிரிவினராக உள்ளனர். கருநாடகப் பிரிவினர் மண்ணிலிருந்து உப்புத் தயாரிக்கின்றனர். தெலுங்குப் பிரிவினர் செங்கல் மற்றும் கல்கட்டிடங்கள் கட்டும் தொழில் செய்கின்றனர். வசதிபடைத்த இச் சாதியார் சிலர் பொதுப்பணித்துறை சார்ந்த ஒப்பந்தப் பணிகளை மேற்கொண்டு செய்து வருகின்றர். சிலர் இந்துக்களுக்கான வீடுகளைத் திட்டம் இட்டுக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களாக உள்ளனர். இத்தகைய கட்டிடங்கள் துல்லியமான அளவுகட்கு உட்பட்டனவல்ல. சிலர் பயிரிடுதலை மேற்கொண்டிருக்க மற்றும் சிலர் இவ்வாறு பயிரிடுவோரிடம் தொழில் செய்து வருகின்றனர். "சென்னை மாநிலத்தில இச் சாதியினைச் சேர்ந்த சிலர் குளம், கிணறு முதலியன வெட்டுவோராகவும் கட்டிடத் தொழில் செய்வோராகவும் பணிபுரிந்து வருகின்றனர்,. மற்றவர்கள் பயிர்த்தொழில் செய்யும் கூலிகளாகவும் ஊர்களில் குற்றேவலராகவும் பணிசெய்து வருகின்றனர். சிலர் மண் எடுத்து இடும் பணி செய்கின்றனர். மற்றும் சிலர், காஞ்சிவரத்திற்கு அருகில் முத்தியாலுபேட்டையில் உள்ளவர்கள் சாயம் தோய்ப்பதில் ஈடுபட்டுள்ளதைப் போலச் சாயம் தோய்க்கும் தொழில் செய்து வருகின்றனர். சிலர் அரசுப் பணியில் காவலர்களாக உள்ளனர். கடினமான உழைப்புக்கு அஞ்சாதவர்களான உப்பரர் பெண்கள் தங்கள் கணவன்மாருக்கு அவர்கள் பணியில் உதவுவர். இதனாலேயே மணமகளுக்கான பரிசத் தொகையாக பெருந்தொகை தரவேண்டியவர்களாக இவர்கள் உள்ளனர். சென்னையில் உள்ள சாலைகள் ஒழுங்காகப் பேணிப் பாதுகாக்கப்படுவதற்குச் சென்னையில் வந்து குடியேறியுள்ள உப்பரர் குடும்பத்தினர் சிலரே காரணமாவர். கோதாவரி மாவட்டத்தில் ஏரிகள் வெட்டும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களைப் பற்றி மறைத்திரு ஜெ.கெயின் கூறியிருப்பதாவது:* "ஏரி வெட்டுவோர் சிறு குழு ஒன்றில் ஏற்பட்ட குழப்பம், மசூலிப்பட்டிணத்தில் குளம், குட்டை வெட்டவோர் தங்களுக்குக் கிடைக்கும் தொகையினை எப்படிப் பங்கிட்டுக் கொள்கின்றனர் என நான் முன்பே கேள்விப்பட்டிருந்ததை உறுதி செய்தது. அவர்கள் ஒர் ஏரிக்கரையினைப் பழுதுபார்த்தபடி இருந்தனர். அதற்கான தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் தங்களுக்குள் அந்தத் தொகையினைப் பங்கிட்டுக் கொண்டபோது ஒருத்தி தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கவில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டாள். அது எப்படி நிகழ்ந்தது எனக் கேட்டறிந்தபோது, அவள் கருவுற்றவளாக இருந்ததாகவும் அவள் தன் கருவில் இருக்கும் குழந்தைக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என எதிர்பார்த்தாகவும் அதனை யாரும் கண்டு கொள்ளவில்லை என்றும் தெரியவந்தது. அவள்

---

* இந்தியத் தொல்லியல் VIII, 1879. (Ind.Ant.VIII, 1879.)

தனக்கான மற்றொரு பங்கினைக் கேட்ட போது முன்பே தங்கள் பங்கினைப் பெற்றுக் கொண்டவர்கள் அவள் கேட்கும் பங்கு நியாயமானதென ஒப்பினர். ஆயினும் இன்னொரு பங்கிற்கான தொகைக்கான காசினைத் திரும்பத் தரமறுத்தாலேயே குழப்பம் ஏற்பட்டது."

1889 சென்னை மாநில உப்புவரிச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அ. ஒருவன் இச் சட்டப்படி அனுமதியின்றியோ அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலோ உப்பினைக் கொண்டு செல்லக்கூடாது மேலும்,

ஆ. விவசாயம் அல்லது கட்டிடத்திற்கான அடித்தளம் தொடர்பாக அல்லாமல் வேறு எக்காரணத்திற்காகவும் உவர் மண்ணைத் தோண்டிக்குவித்தாலும் அது சட்டத்திற்குப் புறம்பாக உப்புச் சேகரித்தாக் கருதப்படும். மேலும்,

இ. உவர் மண்ணைத் தோண்டியோ சேகரித்தோ உப்புத் தயாரிப்பதைவிட வேறுவகையில் உப்புத் தயாரித்தால் அது கள்ளத்தனமாக உப்புத் தயாரித்ததாகக் கருதப்படும். மேலும்,

ஈ. உவர் மண்ணைத் தவிர வேறு உப்பினை அது கள்ளத்னமாகத் தயாரிக்கப்பட்டதெனத் தெரிந்துகொண்டோ தெரிந்து கொள்ள முயற்சி ஏதும் செய்யாமலோ விலைக்கு வாங்குவது, பெற்றுக் கொள்வது, வைத்திருப்பது, விற்பது, நிறுப்பது ஆகியன குற்றமாகும், மேலும்,

உ. இச்சட்டத்தில் குறிப்பிட்டபடி முறைப்படியான உரிமம் இன்றி வெடியுப்புத் தயாரித்தல் குற்றமாகும். மேலும்,

ஊ. இந்தியக் குற்றவியல் சட்டத்தை மீறும்படியாக உப்புத்தொழில் தொடர்பான செயல்களில் ஈடுபடுதலும் மேற்கண்ட விதிகளை மீறிசெயல்படுவதும் ஆகியவற்றில் ஈடுபடுவோர்,

மேற்கண்ட ஒவ்வொரு குற்றத்திற்கும் ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை அல்லது ஐந்நூறு ரூபாய் அபராதம் விதிக்கப்படுதற்குரியர், அல்லது இவ்விரு தண்டனைகளும் ஒரு சேர அவர்களுக்கு விதிக்கப்படலாம்.

பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: "இந்த மாவட்டம் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பின் கீழ் வந்தபோது உப்பரர்களால் உவர் மண்ணிலிருந்து தயாரிக்கப்படும் மண் உப்பு, மேற்கு கடற்கரையில் கடல்நீரிலிருந்து தயாரிக்கப்படும் கடல் உப்பு ஆகிய இருவகை

உப்புகள் பயன்பாட்டில் இருந்தன. கடற்கரையில் தயாராகும் உப்பினை லம்பாடிகளும் கொறச்சர்களும் மேற்கு மலைத் தோடர்களில் உள்ள கணவாய்கள் வழியாகப் பொதி எருதுகளில் எற்றி உள்நாட்டுக்குக் கொண்டு வருகின்றனர். ஒப்படைக்கப்பட்ட மாநிலங்களில் புழக்கத்தில் உள்ளதும் பெல்லாரி மாவட்டத்தில் எங்கும் பரவலாகப் புழக்கத்தில் இருப்பதுமான மோடுகளில் மண் உப்புத் தயாரிக்கப்படுகிறது. உப்பு மண்ணினைக் குவியலாகக் மோடுகளில் குவித்து அதன் உச்சியில் குழிவாக ஐந்தடி குறுக்களவும் இரண்டடி ஆழமும் உள்ளதாக வட்டமாக ஒரிரு பாத்திகளை அமைப்பர். இந்த வட்டக் குழிகளில் அடியிலிருந்து சுண்ணாம்பால் கரை கட்டப்பட்ட வாய்க்கால் சுண்ணாம்பால் கரையமைக்கப்பட்ட பாத்திகளை நோக்கிச் செல்லும். கோடை காலத்தில் வறட்சியான மாதங்களில் உவர் மண் உள்ள பகுதிகளில் இயற்கையாக உப்புப் பூக்கும்போது அதனைப் பொதி எருதுகளில் ஏற்றிக் கொண்டுவந்து மோடுகளில் குவிப்பர். அதனை மண்மேட்டில் உள்ள வட்டக் குழிகளில் பரப்பிப் பின் ஓரளவு நீர் விட்டு நிரப்புவர். உவர்மண்ணில் பூத்த உப்பு, நீரில் கலந்து கீழே கட்டப்பட்டுள்ள குழிகளில் சென்று நிரம்பும். அதனை அக் குழிகளிலிருந்து சட்டியில் மொண்டு சமதரையாக அமைத்துச் சுண்ணாம்பால் மெழுகப்பட்ட பாத்திகளில் ஊற்றி, நீர் வெயிலில் ஆவியாகிப் பிரிந்தபின் உப்பு மட்டும் அடியில் தங்கும்படியாக விட்டு வைப்பர். இவ்வாறு உவர் மண்ணிலிருந்து உப்பினைக் கரைத்துப் பிரித்து எடுத்தபின் எஞ்சிய மண், மேட்டில் உள்ள குழிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும். இவ்வாறு தொடர்ந்து மண்ணை அகற்றிப் போடுவதால் மோடுகளைச் சுற்றியுள்ள பகுதி மிக உயரமாக மேடிட்டுவிடும். எனினும் அதில் அடுத்தடுத்துக் குழிகள் அமைத்தபடி இருப்பர். சில இடங்களில் இந்த மோடுகள் இருபதடி உயரம் கூட இருக்கும். அவற்றின் உச்சிக்கு எருமைகள் உவர்மண் பொதிகளைச் சுமந்து செல்ல முடியாத அளவுக்கு அவை உயரமாகிவிடும்போது அந்த இடத்தைக் கைவிட்டு வேறிடங்களில் உப்பு மோடு அமைப்பர். இவ்வாறு தயாரிக்கப்படும் உவர்மண் உப்பு கடல் உப்பைப் போல நல்லதாகவும் சத்து உடையதாகவும் இருப்பதில்லை. எனினும் ஏழை மக்கள் பெரும்பாலும் இதனையே பயன்படுத்துகின்றனர் கால்நடைகளுக்கு இந்த உப்பினையே தருகின்றனர். *1805* ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உப்புத் தொழில் தொடர்பான சட்டத்தின்படி அரசுக்கு வரியாகக் கிடைக்கும் ஊதியத்தில் இத் தொழிலால் ஓரளவு இழப்பு எற்படுகிறது. *1806* ஆம் ஆண்டிலேயே மண் உப்பெடுக்கும் இந்தத் தொழிலுக்குத் தடைவிதிக்க அரசு கருதியது. அவ்வாறு தடை விதித்தால் உப்பு எடுக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள உப்பரும் மலிவான இந்தப் உப்பினைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களும் தொல்லைக்கு உள்ளாவார் எனக் கருதி

அது பற்றிய முடிவு எதனையும் எடுக்காது *1870* வரை அரசு, இதனை எவ்வகையில் தடை செய்யலாம் எனச் சிந்திப்பதிலேயே காலத்தைக் கடத்தியபடி இருந்தது. *1873*இல் வருவாய்த்துறை உறுப்பினரான திரு ஜி.தார்ன்உறில் ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று இத் தொழிலின் நிலையினை ஆராய்ந்தார். மோடுகள் பரந்துபட்டனவாகப் பல இடங்களில் இருப்பதால் அரசுக்கு வரி செலுத்தித் தயாரிக்கப்படும் கடல் உப்போடு இந்த மண் உப்புப் போட்டியிடுவதைத் தடுக்க இயலாது என அவர் கருத்துத் தெரிவித்தார். அதே காரணம் கருதியும் அத்துடன் உப்பரர் மிகுந்த ஏழைகளாக இருப்பதாலும் இத்தொழிலை மேற்கொள்ள உரிமத் தொகை ஒன்றினை விதிப்பதும் நடைமுறைக்கு ஏற்றதன்று எனக் கருத்துத் தெரிவித்த அவர், அதே சமயம் இத் தொழில் நடக்க அனுமதிப்பதால் அரசுக்கு ஆண்டுதோறும் எட்டு முதல் பத்து இலட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்படுகின்றது என்றும் கூறியுள்ளார். அரசுக்கு வரி செலுத்துவோர் தயாரிக்கும் கடல் உப்புப் பெல்லாரியிலும் பிற உள்நாட்டு மாவட்டங்களிலும் குறைந்த விலைக்குக் கிடைப்பதால் அரசு படிப்படியாக இத் தொழிலை நசுக்க முற்பட வேண்டும் எனவும் அவர் பரிந்துரை செய்துள்ளார். அப் பரிந்துரையினை எற்றுக்கொண்ட அரசு புதிதாக மோடுகள் அமைப்பதற்குத் தடைவிதித்ததோடு நடப்பில் இருக்கும் மோடுகளுக்கும் அவற்றின் உற்பத்தியின் விகிதத்திற்கு ஏற்ப உரிமத் தொகை விதித்ததோடு *1879* வரை அத் தொகையினைப் படிப்படியே உயர்த்தி வந்து *1879*இல் கடல் உப்புக்கு விதிக்கப்படும் தீர்வை அளவே இந்த உப்புக்கும் உரியதாகும் என அறிவித்தது. இதனால் மண் உப்புத் தயாரிப்பின் அளவு குறைந்தது. எனினும் அரசு எதிர்பார்த்தபடி வரி இழப்பினை இது ஈடுகட்டவில்லை. எனவே *1876*-இல் சென்னை அரசின் உப்பு வரிக் குழுமமும் வருவாய்த்துறையும் ஒருங்கே மண் உப்புத் தயாரிப்பு உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்தன. மத்திய அரசு தன் ஒப்புதலைத் தரவே *1880*-இல் மோடுகளுக்கு உரிய இழப்பீட்டினைத் தந்த பின் மோடுகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது. இதனால் மாவட்டத்தில் மண் உப்புத் தயாரிக்கும் தொழில் அடியோடு ஒழிந்துவிட்டது. அத்தொழில் செழிப்புற்றிருந்ததனை நினைவுறுத்தும் வகையில் இன்றும் ஆங்காங்கே மோடுகள் நிற்பதைக் காணலாம். உப்பரர் சிலர் இன்றும் ஒவ்வோர் ஆண்டும் வறட்சியான மாதங்களில் நிசாமின் மாநிலத்திற்குச் சென்று பழைய முறையில் மண் உப்புத் தயாரிக்கின்றனர். இதற்கான உரிமையினைப் பெற இவர்கள் குறிப்பிட்ட ஒரு தொகையினைச் செலுத்துகின்றனர். அத் தொகையில் நான்கில் ஒரு பங்கினைத் தொழில் தொடங்குமுன் செலுத்திவிட வேண்டும். இறுதியில்

இதனால் இவர்கள் ஓரளவு லாபம் ஈட்டுகின்றனர் என்பது உண்மையாயினும் மழை மிகுதியாகப் பெய்யும் ஆண்டுகளில் தொடக்கத்தில் செலுத்திய தொகையினையும் உழைத்த உழைப்பினையும் இழக்க வேண்டியவர்களாகின்றனர். சென்னை மாநிலத்தின் பல பகுதிகளிலும் இச் சாதியார் வெடியுப்பினை ஓரளவு மிகுதியாகவே தயாரிக்கின்றனர். இதற்குக் காரத்தன்மை வாய்க்கப்பெற்ற உவர்மண்ணினை நீரில் ஊறவைத்துப் பிரித்தெடுத்தலைச் செய்கின்றனர். இதற்காக இவர்கள் ஆண்டுதோறும் உப்புத் துறையிடமிருந்து உரிமங்கள் பெறுகின்றனர். இவ்வாறு தயாரிக்கப்படும் நயமற்ற வெடியுப்பு காப்பித் தோட்டங்களுக்கு எருவாகப் பயன்படுத்தவும் பட்டாசு முதலியன தயாரிக்கவும் பயன்படுகின்றது.

உப்பிலியன்கள், உப்பரர், உப்பாரர் ஆகியோர் வேறு வேறு மொழிகளைப் பேசியவர்களாக வேறு வேறு வட்டாரங்களில் வாழ்கின்ற காரணத்தால் இவர்களிடையே மண உறவு நிகழ்வதில்லை. இப்பிரிவினர் அருகருகே குடியிருக்க நேரிடின் ஒருவர் இல்லத்தில் மற்றவர் உண்பர்.

பெரிய தனக்காரன், எசமான் முதலிய பெயர்களால் அழைக்கப்படும் சாதித் தலைவனுக்கு இச் சாதியார் கட்டுப்பட்டு நடக்கின்றனர். சில இடங்களில் இவனுக்குச் சாதிபிட்டா (சாதிப்பிள்ளை) என்ற உதவியாளன் உளன். சாதியாருக்குத் தகவல்களைச் சென்று அறிவிப்பதும் சாதிச் சபைக்கூட்டத்திற்கு உறுப்பினர்களை அழைப்பதும் போன்ற பணிகளை உதவியாளன் மேற்கொள்வான். குற்றம் இழைப்பவர்களுக்குச் சாதிச் சபை சாதி விலக்கம், தண்டத் தொகை, சாதியாருக்கு விருந்தளிக்க ஆணையிடுதல் போன்ற தண்டனைகளை விதிக்கின்றது. கன்னடம் பேசும் உப்பாரரிடையே ஒழுக்கம் தவறிய நடத்தையில் ஈடுபடுபவளுக்குப் பின்வருமாறு தண்டனை அளிப்பர் என எனக்குத் தெரிவித்தனர். அவளுடைய தலைமுடியில் ஒரு கொத்தினை அறுத்தபின், அவளைக் குளிர்ந்த நீரில் குளிக்கச் செய்தபின் பசுஞ்சாணம் கரைத்த நீரினையும் பருகச் செய்வர். பின் அவளைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வர். அங்கு பூசாரி அவள் தலையில் புனித நீர் தெளிப்பார். அவள் குடும்பத்தார் ஒரு குறிப்பிட்ட தொகையினைத் தண்டமாகச் செலுத்துவர். இத்தகைய ஒழுக்கம் தவறிய நடத்தையில் ஈடுபடும் ஆண்மகனின் ஒரு பக்கத்து மீசையும் ஒரு கண் புருவமும் மழிக்கப்படும். தலையில் இணைகோடாக மூன்று வகிடுகள் உண்டாகும்படியாகத் தலைமயிர் மழிக்கப்படும். வைக்கோலால் ஏழு சிறிய குடிசைகள் அமைத்து அவற்றுக்கு நெருப்பிடுவர். அவன் இவ்வாறு

நெருப்பிடப்பட்ட குடிசைகள் வழியே புகுந்த செல்ல வேண்டும். பின் அவனை இழுத்துச் சென்று ஒரு குளத்தில் தள்ளுவர். அங்கு அவன் குளித்துக் கரையேறியபின் அவன் மீது புனித நீர் தெளிப்பர். பெண்களும் நெருப்பிடப்பட்ட குடிசைகளுள் நுழைந்து செல்ல வேண்டும் எனவும் எனக்குத் தெரிவித்தனர்.

சிறுமியர் பூப்படையும் முன்போ பூப்படைந்த பின்போ மணம் செய்விக்கப்படுகின்றனர், உப்பிலியன்களிடையேயும் உப்பரரிடையேயும் அத்தை மகளை மணக்க உரிமை கொண்டாடும் வழக்கம் உள்ளது. இவர்கள் திருமணச் சடங்குகள் இடத்துக்கு இடம் வேறுபடுகின்றன. மதுரையைச் சேர்ந்த உப்பிலி யன்களிடையே, மணமகள் ஊரைச் சேர்ந்த சீர்க்காரி என அழைக்கப்படுபவளே மணமகள் கழுத்தில் தாலிகட்டும் வழக்கம் உள்ளது. உப்பரரிடையே சில இடங்களில் தமிழ்நாட்டில் வேறு சில சாதியாரிடையே இருப்பதைப் போல மணமகன் உடன்பிறந்தவள் மணமகள் கழுத்தில் தாலிகட்டும் வழக்கமும் உள்ளது. தெலுங்கு, கன்னடம் பேசும் உப்பாரர் பிரிவில் மணமகனே மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கின்றான். தென் கன்னடத்தைச் சேர்ந்த உப்பாரர் தாரே மணச்சடங்கு நெறியினை மேற்கொள்கின்றனர். இதில் மணமகள் தந்தை ஒரு பாத்திரத்திலிருந்து இணைக்கப்பட்ட மணமக்கள் கைகளின் மேல் நீருற்றுவார். கன்னடம் பேசம் உப்பரர் சிலரிடையே மணமகன் தலையை மொட்டை அடித்துக் கொள்வதோடு பிராமணர்கள் பூணூலை ஒத்த இரட்டை வடத்தாலான செம்புக் கம்பியினைப் பூணூலாக ஐந்து நாள்கள் வரை அணிந்து கொள்ளும் வழக்கம் இருப்பதாக எனக்குத் தெரிவித்தனர். தெலுங்கு பேசும் உப்பரரிடையே ஏழு மாதல, பதகாலு (பதினாறு) எனப்படும் இரு பிரிவுகள் உள்ளன. இவை மணமகளுக்குத் தரப்பட வேண்டிய பரிசத் தொகையின் அடிப்படையில் அமைந்ததாகும். மாதல இரண்டு ரூபாய்களுக்குச் சமமாகும். மாதல என்பது முன்பு வழக்கிலிருந்து மோடுகளைக் குறிக்கும் எனச் சிலர் கூறுகின்றனர். உப்பிலியன்கள் சிலரிடையே நீர் நிறைந்த பானைகளைச் சுவர்போலச் சுற்றிலும் அடுக்கி அவற்றின் நடுவே மணமக்களை ஆடைகளின் முனைகளை முடிச்சிட்டு அமரச் செய்து அங்குள்ள பெண்கள் அவர்கள் தலைமீது அப்பானைகளில் உள்ள தண்ணீரைக் கொட்டும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. இவர்கள் கைம்பெண்களின் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். உப்பாரரிடையே கணவனை இழந்த ஒருத்தியினை மனைவியினை இழந்த ஒருவனையே மணக்க அனுமதிக்கின்றனர். இதே போல மனைவியினை இழந்த ஒருவன் கைம்பெண் ஒருத்தியினையே மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றான்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த உப்பிலியன்கள் பற்றிய குறிப்பில் திரு எப்.ஆர்.ஹெமிங்வே கூறியிருப்பதாவது: "இவர்களுடைய திருமணச் சடங்குகள் சில விசித்திரமானவை. இன்னும் பிறக்காத ஒரு சிறுவனுக்கு இன்னும் பிறக்காத அவனுடைய அத்தை மகளுக்கும் திருமணம் உறுதி செய்து வைக்கும் வழக்கம் இவர்களிடையே உள்ளது. மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரிடம் பலமுறை சென்று கேட்ட பின்னரே அவர்கள் பெண்தர ஒப்புவர். அவ்வாறு இல்லையாயின் கேட்டவுடன் பெண்தரச் சம்மதித்த இழிவிற்கு அவர்கள் ஆளாக வேண்டிவரும். திருமணமும் மணமகள் வீட்டிலேயே நடத்தப்பட வேண்டும் என்ற வழக்கம் உள்ளது. இல்லையாயின் பெண்ணை அவள் பெற்றோர் மணமகன் தலையில் கட்டிவிட்ட இழிவிற்கு உள்ளாவர். இச் சாதியினர் பால்கம்பம், முளைப்பாலிகைச் சட்டி ஆகியனவற்றைத் திருமணச் சடங்கில் பயன்படுத்துவதில்லை. மணமகள் கைகளில் மஞ்சள் நூல் கயிற்றினைக் கங்கணமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மணமக்கள் மணிக்கட்டுக்களைக் கம்பளி நூலால் இணைத்துக் கட்டுவர். தமிழ்ப் பேசும் பிரிவினரிடையே திருமணத்தின் முதல் நாளும் இரண்டாம் நாளும் மணச் சடங்குகள் தொடங்குமுன் மூன்று சுமங்கலிகள் தங்கள் முகத்தை மஞ்சள் நீரால் அலம்பித் தந்த நீரால் மணமக்களைக் குளிக்கச் செய்யும் வழக்கம் உள்ளது. ஒரு சிறுமி பூப்படையும்போதும் இவர்கள் விசித்திரமான சடங்குகளை மேற்கொள்கின்றனர். ஒருத்தி பூப்படையும்வரை அவளுடைய கணவன் அவள் முகத்தில் விழிக்கும் வழக்கம் இல்லை. அவள் பூப்படைந்தவுடன் அவள் கணவன் அவள் வீட்டிற்கு ஒரு மறியினையும் கொஞ்சம் காய்கறிகளையும் கொண்டு வருவான். மறியினை வெட்டியபின் அவன் மைத்துனன் அதன் குருதியினால் அவன் நெற்றியில் பொட்டிடுவான். பூப்படைந்தவள் கணவன் வாழைப்பழத்தைத் தின்று, கொஞ்சம் பாலையும் குடித்து அதனைத் திரைக்குப் பின்னால் நிற்கும் தன் மனைவியின் மீது உமிழ்வான். திருமணம் ஆவதற்கு முன்பே ஒருத்தி பூப்படைந்திருப்பின் தமிழ்ப் பிரிவினர் அவளை மணநாளன்று ஏழு மர வளையங்களின்மேல் நடக்கச் செய்வர். இச் சடங்கினை நிறைவேற்ற அவளுடைய கணவனுடைய அனுமதியினை முதலில் பெற வேண்டும். அப்போது ஒரு வண்ணானும் உடன் இருக்க வேண்டும். தெலுங்கு பேசுபவர்கள் முதன்முதலாகப் பூப்பு அடையும் ஒருத்திக்கு இறுதிப் பூப்பு நாளன்று இச் சடங்கினை நிகழ்த்துவர். அப்போது அவள் தாய்மாமன் அங்கு இருக்க வேண்டும். உப்பிலியன்கள் கைம்பெண்கள் மணவிலக்குப் பெற்றோர் ஆகியவர்களின் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். கன்னி ஒருத்தியினை மணக்கும்வரை ஓர் ஆண்மகன் முகம் மழித்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு மணக்க ஒருவனுக்கு வாய்ப்பு ஏற்படவில்லையாயின் அவன்

தன் வாழ்நாள் முழுவதும் முகம் மழித்துக் கொள்ளாமலேயே கழிக்க வேண்டும்.

இறந்தவர்களைப் புதைப்பதே இவர்களுடைய பொதுவான வழக்கம். கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசும் பிரிவினரை விட உயர்ந்த சமூகப் படிநிலையில் இருக்கும் உப்பிலியன்கள் ஏழு நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர். உப்பாரர் பதினாறு நாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர்.

இவர்களுடைய சாவுச் சடங்குகள் பற்றித் திரு ஹெறமிங்வே பின்வருமாறு எழுதுகின்றார்: "தமிழ்ப் பேசும் பிரிவினைச் சேர்ந்த கைம்பெண்கள் தங்கள் தாலியினை அகற்றுவதில்லை. அது தானாகவே அறுந்து விழும்வரை அவர்கள் அதனை அணிந்தபடி இருப்பர். ஒருவன் இறப்பானாகில் அவனுடைய மனைவி அவன் உயிரோடிருப்பதாகப் பாவித்து நடித்தவளாக அவனுக்கு எண்ணெய்த் தேய்த்துக் குளிப்பாட்டி மாலைகள் அணிவிப்பாள். இறந்தவனைப் புதைப்பதாயின் துக்கம் கொண்டாடுபவன் புதைகுழியினைத் தோண்டுவதுபோல நடிப்பான். தமிழ்ப் பிரிவினர் கருமாந்திரம் சடங்கினைப் பதினாறாம் நாள் நடத்துவர். அன்று அவர்கள் கொஞ்சம் பாலினை எடுத்துச் சென்று நரி ஒன்று ஊளையிடத் தொடங்கியவுடன் அதனை எருக்கம் செடி (*Calotrdaopis gignatica*) ஒன்றின் மீது விடுவர். அவ்வாறு ஊற்றுபவருக்கும் அம்பட்டன் உதவுவான். அப்போது, "சுவர்க்கத்தின் வழியே கைலாசம் சென்று சேர்வாயாக" எனக் கூறுவர்.

இவர்களுள் சிலர் வைணவர்கள். மற்றவர்கள் சைவர்கள். சில இடங்களில் வைணவப் பிரிவினர் குருமாரான வைணவப் பிராமணர்கள் இவர்கள் தோளில் சங்கு சக்கர முத்திரையிடுகின்றனர். இவர்கள் கிராம தேவதைகளையும் வழிபடுகின்றனர். அவை அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றன. *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் கங்காலம்மா, ஜம்புலம்மா, திம்மப்பா ஆகிய தெய்வங்களை இவர்கள் வழிபடுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

கருவாண்டராய பொம்மதேவன் உப்பிலியன் சாதிக்கு உரிய குல தெய்வமாகும். அத் தெய்வத்திற்கு எனத் தனியே கோயில் ஏதும் இல்லை. எனினும் ஒவ்வொரு ஆண்டும் தை மாதத்தில் வெடியுப்பு எடுக்கத் தரையைச்

கூரண்டும் முன் அனைவரும் கூடி அத் தெய்வத்திற்குப் படையல் இடுவர். இப் படையலுக்கு இவர்கள் ஆவாரம் (*Cassia auriculata*) பூவினையும் ஆற்று மணலையும் பயன்படுத்துகின்றனர். இவர்கள் சாதிக்கெனத் தனியே மூன்று தேவதைகள் உள்ளனர். தீய்ப்பாய்ச்சாள்கள் என அழைக்கப்படும் அவர்கள் கணவனோடு சதியில் உயிர்துறந்து தெய்வமானவர்கள். இவர்களுக்கெனத் தனியே பிராமணக் குருக்கள் உள்ளனர். அவர்கள் ஆண்டுதோறும் இவர்களுடைய உப்புக்குழிகளுக்கு வருகை தந்து அதனை வாழ்த்துவர் எனத்திரு ஹெமிங்வே குறித்துள்ளார்.

உப்பிலியரின் சமூக அமைப்பைப் பற்றித் திரு ஹெமிங்வே எழுதுவதாவது: "சாதிச் சட்டத்திற்கு எதிராக யாரேனும் குற்றம் புரிந்ததான வழக்கு வருமேல் அது பற்றிய தகவல் பட்டக்காரனுக்குத் தெரிவிக்கப்படும். குற்றம் இழைத்தவன் சாதி விலக்கம் செய்யப்பட்டுள்ளான் என்ற செய்தி உப்பிலியர் சமூகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் தெரிவிக்கப்படும். அனைவரையும் பஞ்சாயத்துக் கூட்டத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு இரண்டாவதாக அறிவிப்புச் செய்வர். இச் சபைக் கூட்டத்தைக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று பட்டக்காரன்களேனும் தலைமை தாங்கி நடத்த வேண்டும். குல தெய்வத்தின் பிரதிநிதியாக ஆவாரம் பூக்கள், நீர் நிறைந்த பானை, வேப்பிலை ஆகியன சபையில் இடம் பெறும். குற்றம் சுமத்தப்பட்டவன் குற்றம் செய்யவில்லை என நிரூபிக்கப்படுமானால் அவன் எப்பாவமும் அறியாதவன் என்பதற்கு அடையாளமாக சபையில் வைக்கப்பட்டுள்ள தண்ணீர்ப் பானையினைத் தொடும்படி பணிக்கப்படுவான். குற்றம் சுமத்தப்பட்டவன் குற்றவாளி எனச் சபையோரால் முடிவு செய்யப்படின். அவனுக்கும் அவன் மீது குற்றம் சுமத்தியவனுக்கும் ஒரு தொகையினைத் தண்டமாக விதிப்பர். குற்றம் சுமத்தியவனுக்குத் தண்டம் விதிக்கக் காரணம் குற்றம் செய்தவன் இழைத்த குற்றத்தால் தீட்டுப்பட்டிருக்கும் அவன் வீட்டினைப் புனிதப்படுத்த ஆகும் செலவினைச் சரிக்கட்டவே ஆகும். புனிதப்படுத்தும் சடங்கு மருதூர் நாட்டைச் சேர்ந்த இரட்டை விளக்குக்காரன் என்பவனால் நிகழ்த்தப்படுகிறது. அவன் இச் சடங்கில் தன் கைகளைப் பின்னால் கட்டியவனாகத் தீட்டுப்பட்ட வீட்டில் உணவு கொள்வான்.

உப்பாரர் கல்வியறிவு அற்றவர்கள் என அண்மையில் குறிக்கப்பட்டுள்ளது. படிக்க, எழுத, கணக்கிடத் தெரியாத காரணத்தால் இவர்கள் தங்களுக்குள்ளும் தங்களை வேலைக்கு வைத்துக் கொள்பவர்களோடும்

அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையைச் சேர்ந்த கிறித்தவப் பணியாளர்கள் பிற்பட்ட இச் சாதியாருக்காக ஒரு பள்ளியினைத் தொடங்கியுள்ளனர். *1906*-இல் இந்துக் கல்விச் சங்கத்தினர் சென்னையில் உப்பரபாளையம் பகுதியில் உப்பரபாளையம் ஆர்ய பாடசாலை என்ற பெயரில் ஒரு பள்ளியினைத் தொடங்கியுள்ளனர்.

உப்பரனைப் போல இரண்டுங்கெட்டானாகிவிட்டான் என்ற தெலுங்குப் பழமொழி ஒன்றுவழங்கி வருகின்றது. தன் குலத் தொழிலைவிட்டுச் சந்நியாசி ஆகிவிட்ட ஒரு உப்பரனை யாரும் சந்நியாசியாக மதிப்பதில்லை. அவனால் குலத் தொழிலும் செய்ய இயலாது. எனவே அவன் இரண்டுங் கெட்டானாகக் கருதப்படுகின்றான். செட்டி என்பது இவர்களுக்குரிய வழக்கமான பட்டப்பெயர்.

கூச ஹெறாலவையர் என்பதற்கான மற்றொரு பெயராகவும் உப்பாரர் என்பது வழங்குகின்றது.

உப்பு - Uppu (Salt)

உப்பு வாணிகம் செய்யும் பலிசர், குறவர் ஆகிய சாதிகளின் உட்பிரிவினருக்கான பெயர். இப் பிரிவினர் உப்பினைக் கழுதைகள், எருதுகள் ஆகியவற்றில் பொதியாக ஏற்றி நாட்டுப்புறங்களில் கொண்டு சென்று விற்பர். கோமட்டி சாதியின் உட்பிரிவு ஒன்றுக்கும் இது தொழில் தொடர்பாக அமைந்த பெயராக வழங்குகின்றது. இதற்குச் சமமான உப்பு என்பது கேலசி சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றுக்கு உரிய பெயர். உப்புக் கோட்டை என்பது மறவருள் ஒரு பிரிவினருக்கான பெயர். உப்புத் தொழுவாரு என்பது ஒட்டே சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். உப்பிரி *(உவர் மண்)* குருபா் சாதியின் ஒருகுலம்.

ஊராளி - Urali

"மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகுதியான எண்ணிக்கையினராக உள்ள பயிர்த்தொழிலில் உதவும் கூலிகள் ஊராளிகள். ஊராளி என்ற சொல் ஊரை ஆள்பவன் எனப் பொருள்படும். அம்பலக்காரன்களைப்போல இவர்களும் தாங்கள் முத்துராச ஒருவரின் பரம்பரையில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இச் சாதியினரிடையே முத்துராசா என்ற உட்பிரிவு ஒன்று மட்டுமே உள்ளது. முன்பு படைவீரர்களாகப் பணி புரிந்து வந்ததாகவும் இவர்கள் கூறிக்கொள்கின்றனர். வயநாட்டில்

குறும்பரிடையே ஊராளிக் குறும்பர் என்ற ஒரு பிரிவு உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த ஊராளிகள் குறும்பர் இனத்தின் ஒரு கிளையினராதலும் கூடும்" என *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதே அறிக்கை ஊராளிகளைப் பற்றி மேலும் தொகுத்துக் கூறியுள்ள விவரங்கள் வருமாறு: "கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் பயிர்த்தொழில் நடைபெற உதவும் கூலிகள் இவர்கள். ஊராளிகள் அம்பலக்காரன்கள் அல்லது முத்தரையரோடு ஒருவகையில் உறவுடையவர்கள் எனத் தெரிகின்றது. இவ்விரு பிரிவினரும் குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமே காணப்படுகின்றனர். தமிழ்நாட்டு வலையன்களின் ஒரு கிளையினராக ஊராளிகள் இருத்தல் கூடும். இக் கிளையினர் தங்கள் தொழிலை மாற்றிக் கொண்டதன் காரணமாகத் தனிச் சாதியினராக ஆயினர் எனலாம் *(பார்க்க: அம்பலக்காரன்)* இச் சாதியில் பல உட்பிரிவுகள் உள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இப் பிரிவினர் வாழும் வட்டாரத்தின் பெயர்களே (நாடு) இப்பிரிவுகளுக்கான பெயர்களாக வழங்குகின்றன. சாதி விலக்கம் பெற்ற ஒருவன் மீண்டும் சாதியில் சேர சாதியினைச் சேர்ந்த பெரியவர்கள் முன் ஒரு மறியினையோ ஆட்டினையோ வெட்டி அதன் குருதியால் தன் நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ள வேண்டும். அதன்பின் அவன் சாதியினைச் சேர்ந்த அப் பெரியவர்களுக்கு விருந்து தருவதோடு உணவின் ஒரு பகுதியினைத் தன் வீட்டுக் கூரைமீது இடுவான். அதனைக் காகங்கள் உட்கொள்ளுமானால் அவன் மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்ளப்படுவான். (இதேபோன்று பிராமணர்களும் தங்கள் சிரார்த்தச் சடங்கின்போது சோற்றினைக் கூரைமீது இட்டு அதனை யாருக்காகச் சிரார்த்தம் நடத்துகின்றார்களோ அவர் ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதனைக் காகங்கள் அதனை உண்பதனை வைத்து முடிவு செய்வர்.) குழந்தை மணம், வயது வந்த பின் மணம் ஆகிய இருவகை வழக்கும் இவர்களிடையே உள்ளது. திருமணமாகாத ஒருத்தியோடு கள்ளக்காதல் கொள்ளும் ஒருவனுக்கு அபராதம் விதிக்கப்படுவதோடு அவளை மணந்துகொள்ளும்படியும் அவன் வற்புறுத்தப்படுவான். இவர்களிடையேயான திருமணத்தில் மணமகள் கழுத்தில் தாலிக்குப் பதிலாக அவளோடு கள்ளக்காதல் கொண்டவன் அரைநாணினையே கட்டுவர். இச் சாதியில் வசதி படைத்தவர்கள் பிராமணர்களைத் தங்கள் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்கின்றனர். மற்றவர்கள் சாதிப் பெரியவர்களை வைத்துச் சடங்குகளை நடத்திக் கொள்கின்றனர். கைம்பெண்களும் மணமுறிவு பெற்றவர்களும் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இறந்தவர் உடலைப் புதைக்கவோ எரிக்கவோ செய்வர். செல்வ வளம் படைத்தவர்கள் இறந்தவர்களுக்காக

சிரார்த்தச் சடங்கினை நிகழ்த்துகின்றனர். மதுவகைகளைப் பருகும் இவர்கள் கோழி, ஆடு, பன்றி, மீன், எலி முதலியவற்றின் இறைச்சியினை உண்பர். சமூகப் படிநிலையில் இவர்கள் இடையன், தொட்டியன், கள்ளன் சாதிக்கு அடுத்த தாழ்ந்த சாதியினராகக் கருதப்படுகின்றனர். கவண்டன் என்பது இவர்களுக்கான பட்டப்பெயர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த ஊராளிகளைப் பற்றிய பின்வரும் விவரங்களுக்குத் திரு எப்.ஆர். ஹெமிங்வே அவர்களுக்கு நான் கடப்பாடுடையேன். அயோத்திக்கு அருகில் அலிபுரத்திலிருந்து அரசாண்ட சத்திரியர் மரபினர் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். வீரச் செயல்களில் கொண்ட ஆர்வங் காரணமாகவோ வாழ்விடத்தில் நிகழ்ந்த சச்சரவு காரணமாகவோ தங்கள் மனைவியரை அங்கேயே விட்டுவிட்டுப்புறப்பட்ட இவர்கள் தென்னாட்டில் வந்து குடியேறிய பின் கூலிக்காரிகளான புலுக்கச்சிகளை மணந்து கொண்டதாகக் கூறுகின்றனர். தங்களை முத்தராச கூட்டத்தினர் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் முத்தராசர் கூட்டம் என்ற தொடருக்கான சரியான விளக்கம் கூற அறியாதவர்களாக உள்ளனர். இதே போன்று தங்களை முத்தராச கூட்டத்தவர் என அம்பலக்காரர் கூறிக் கொள்வதற்கு அவர்களுக்கு எத்தகைய உரிமையும் இல்லையென இவர்கள் கூறுவர். வேறு எந்தச் சாதியாரையும் இவர்கள் தங்களுக்குச் சமமானவராகக் கருதி அவர்கள் இல்லத்தில் உண்பதில்லை. வேளாளர் இல்லங்களில் மட்டும் இவர்கள் தனியே அமர்ந்து உண்பர். ஏழு நாடுகளாக இவர்கள் பிரிவுபட்டுள்ளனர். நாடுகள் என்ற உட்பிரிவுகள் அகமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளாகும். வடசேரி, பில்லூரு, சேங்குடி, கடவங்குடி அல்லது விராளி, தலக்கா, பழுவஞ்சி அல்லது மகலி, மருங்கி என்ற ஊர்களின் பெயர்களின் அடிப்படையில் அமைந்த பிரிவுகளே இந்த நாடு பிரிவுகள். இப் பிரிவுகளைச் சேர்ந்தோர் பெரும்பாலும் இப் பிரிவுகளுக்கு உரிய ஊர்களைச் சேர்ந்து வாழ்பவர்கள் ஆவர். முதல் மூன்று நாட்டுப் பிரிவுகளையும் சேர்ந்தோர் வடசேரி ஊராளிகள் என அழைக்கப்படுகின்றனர். எஞ்சிய நான்கு நாடுகளையும் சேர்ந்தவர்கள் நாட்டுச் சீமை ஊராளிகள், குண்டுவ நாட்டு தொக்காடுகள் அல்லது நண்டுதின்னிகள் எனப்படுவர். இவர்கள் அனைவருமே ஒன்றாக இருந்து உண்பர். நாடுகள் என்ற பிரிவு சாதியினரிடையேயான பூசல்களைத் தீர்த்து வைப்பதற்கென முதலில் தோன்றிய அமைப்புகள் எனக் கூறும் இவர்கள் நாடுகளே இன்றும் சமூக அமைப்பின் கட்டுக்கோப்புப் பிரிவுகளாக உள்ளன எனக் கூறுகின்றனர். ஒவ்வொரு நாட்டுப் பிரிவுக்கும் ஒரு தலைவன் உள்ளான். அந்த நாட்டுப்

பிரிவினைச் சேர்ந்த ஊர்கள் அனைத்தும் அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்க உரியவை. ஊராளிகளிடையே பல புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகளும் உள்ளன. வடசேரியார் இக் குலப்பிரிவுகளைக் கரைகள் என்கின்றனர்; நாட்டுச் சீமையார் காணியாட்சி என்கின்றனர். பயிர்த்தொழிலையே இவர்கள் பெரும்பாலும் மேற்கொண்டுள்ளனர். ஒரு சிலர் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. திருமணம், சாவுச் சடங்கு ஆகிய நிகழ்ச்சிகளின்போது இவர்கள் பூணூல் அணிந்துகொள்கின்றனர். பின் கொசுவம் வைத்துச் சேலையுடுத்திருப்பதை வைத்து இச் சாதிப் பெண்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். கழுத்தில் இவர்கள் பென்சில் உருவத்திலான 'குச்சு' என்ற அணியினை அணிகின்றனர். திருமணம், சாவு தொடர்பான இவர்களுடைய சில சடங்குகள் விசித்திரமானவை. நாட்டுச் சீமைப் பிரிவினரிடையே திருமண நிச்சயதார்த்தத்தை மணமக்கள், தாய்மாமன்மாரே உறுதி செய்கின்றனர். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவர் இல்லங்களிலும் மற்றவர் முன்னிலையில் மூன்றுபடி நெல்லினைப் பக்தி சிரத்தையோடு அளந்து குவிப்பர். இவர்கள் சாவுச் சடங்கின் போது பாடையினை ஊருக்குள் கொண்டுவராமல் ஊரெல்லையிலேயே வைத்துப் பிணத்தினைப் பாடையுள்ள இடத்திற்குக் தூக்கிச் செல்கின்றனர். வடசேரிப் பிரிவினர் இது போலப் பிணத்தைத் தூக்கிச் செல்ல ஏற்பாடுகளை மேற்கொள்ளும்போது பறைச்சி ஒருத்தி நடனம் ஆடுகின்றாள். நாட்டுச் சீமையார் எட்டாம் நாள் சடங்கின்போது இந்த நடனத்தை நடத்துகின்றனர். சாவுச் சடங்கின் இரண்டாம் நாள் இறந்துபோனவரின் உறவினர்கள் வீட்டின் முன் ஓர் உரலில் வைக்கப்பட்டுள்ள பசுஞ்சாண நீரில் தங்கள் கால் பெருவிரல்களை நனைத்துக் கொண்டு தலைமீது விபூதியினைத் தூவிக் கொள்வர். வசதி படைத்தவர்களே கருமாந்திரம் சடங்கினை நடத்துகின்றனர். மூன்றாம் நாளுக்குப் பின் என்று வேண்டுமாயினும் அதனை நடத்திக் கொள்ளலாம். எட்டாம் நாள் சடங்கும் மூன்றாம் நாளுக்குப் பின் வசதிபோல் நடத்திக் கொள்ளப்படுகிறது. அதில் விசித்திரமான சடங்கு ஒன்று இடம் பெறுகின்றது. இரு பிரிவினருமே இச் சடங்கிற்காகப் பந்தல் ஒன்று போடுகின்றனர். அதில் மூன்று வாழை மரங்கள் கட்டப்பட்டிருக்கும். கொள்ளிபோட்டவனும் அவன் உறவினர்களும் அந்தப் பந்தலில் காத்திருந்து துக்கம் தெரிவிக்க வருபவர்களை வரவேற்பர். இந்தச் சடங்கு தொடங்கி இருபிரிவினர்களின் சடங்குகளும் சற்றே வேறு பட்டனவாக நடைபெறும். வடசேரிப் பிரிவினரிடையே துக்கம் கேட்க வரும் நண்பர்கள் தனித்தனியே ஒவ்வொருவராக வருவர். துக்கம் மேற்கொண்டவன் அவர்களிடம், "என்னைக் கட்டிக் கொண்டு அழுகிறாயா?" எனக் கேட்பான். இதற்குப் பதில் போலத்

துக்கம் கேட்க வந்தவன் துக்கம் மேற்கொண்டவனுடைய நீட்டிக் கொண்டிருக்கும் கைகளை ஒன்றாக இணைத்து மூடுவான். இது அவனைக் கட்டிக் கொண்டதற்கான அடையாளம் ஆகும். அல்லது அவன் பந்தலில் தரையில் விழுந்து அழுவான். அதன்பின் அவ்வாறு வந்த ஒவ்வொரு வரும் ஊருக்கு வெளியே நாடு கூடியிருக்கும் இடத்திற்குச் சென்று கூட்டத்தில் கலந்து கொள்வர். அதன்பின் ஒரு பறையனும் மூன்று ஊராளிகளும் சாதித் தலைவனிடம் சென்று பந்தலுக்குத் துக்கம் கேட்க வந்தவர்கள் யார் யார், வராதவர்கள் எவர் என்ற விவரத்தைக் கூறிப் பந்தலைப் பிரித்துவிடலாமா எனக் கேட்பர். அதற்கான அனுமதி கிடைத்தவுடன் வாழை மரங்கள் வெட்டி வீழ்த்தப்படும். பின்னர் பெண்கள் பந்தலில் வைக்கப்பட்டுள்ள சொம்பினைச் சுற்றி நின்று ஒப்பாரி வைத்து அழுவர். பின் அனைவரும் நாடு கூடியுள்ள இடம் செல்வர். அங்கு ஒரு பறையன், ஒரு நாட்டியக்காரி, ஒரு சிறுமி ஆகியோருடைய தலையில் தலைப்பாகை கட்டுவர். நாட்டுச் சாம்பன் எனப்படும் பறையன் தன் முரசினை முழக்கியவனாக அந்த நாடு பிரிவினை வாழ்த்துவான். அதன்பின் அனைவரும் இறந்தவன் இல்லம் செல்வர். சாதித் தலைவன் அங்கு இறந்தவன் மனைவியினுடைய அல்லது குடும்பத்தைச் சேர்ந்த வேறொருத்தியுடைய சேலைத் தலைப்பில் மூன்று பிடி கம்பினை இட்டபின் உரல் ஒன்றினைக் கவிழ்த்து விடுவான். சாதி விதிகளுக்கு எதிரான குற்றங்களுக்குத் தரப்படும் தண்டனைகளும் விசித்திரமானவை. சாதி விலக்கம் செய்யப்பட்டவனுடைய வீட்டின் கூரையில் வேப்பிலைக் கொத்தினைச் சொருகி வைப்பர். ஒருவன் சாதியினைச் சேர்ந்த ஒரு சிறுமியோடு கள்ளக் காதல் கொள்வானாயின் அதுபற்றிக் கேட்டறிந்து அவர்கள் இருவருக்கும் மணம் முடித்து வைப்பர். அவ்வாறு கள்ளத் தொடர்பு கொண்டவன் இடுப்பு அரைஞாண் கயிறே அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலிக்குப் பதிலாகக் கட்டப்படும். இவ்வாறு கள்ளத் தொடர்பு கொண்டவர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் அதனால் ஏற்படும் தீட்டினைப் போக்கத் தொட்டியன் ஒருவன் அழைக்கப்படுவான். அவர்களைத் தொட்டியன் குளத்திற்கு அழைத்துச் சென்று அதில் நூற்றியெட்டுக் குழிகள் தோண்டி ஒவ்வொரு குழியில் உள்ள நீரிலும் அவர்களைக் குளிக்கச் செய்வதோடு அதன் நீரையும் அவர்கள் தலைமீது தெளிப்பான். பின் ஒரு தொட்டியனும் சக்கிலியனும் சேர்ந்து ஒரு மறியினைக் கொன்று அதன் தலையினைக் புதைத்து அதன்மீது கள்ளக் காதலர்களையும் அவர்கள் உறவினர்களையும் நடக்கச் செய்வர். வெட்டப்பட்ட மறியின் குருதியால் அவர்கள் நெற்றியில் பொட்டிட்ட பின் அனைவரும் மீண்டும் குளிப்பர். பின் பசுவின் கோமயத்தை அவர்களுக்குக் குடிக்கத் தந்து மீண்டும் அவர்களைக் குளிக்கச்

செய்வர். அடுத்து அவர்களுக்குக் குடிக்கப் பால் தந்து அவர்களைப் பஞ்சாயத்துச் சபையார் முன் தரையில் விழுந்து வணங்கும்படி செய்வர். இறுதியாக அவர்கள் பஞ்சாயத்தாருக்கு உணவளிக்க வேண்டும். அந்த உணவில் கொஞ்சத்தைக் காக்கைகளுக்கு இடுவர். காக்கைகள் அந்த உணவை எடுத்த பின்னரே இவர்கள் தீட்டிலிருந்து விடுபட்டவர்களாகக் கருதப்படுவர். ஊராளிகள் வேட்டைப் பிரியர்கள். சிவராத்திரி அன்று இரவு குல தெய்வத்திற்கு இவர்கள் பலியிடுவர். மறுநாள் ஊரைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் வேட்டைக்குச் செல்வர். இவர்களுக்குக் காவேட்டைக்காரன் என்ற வேட்டைத் தலைவன் ஒருவன் உள்ளான். வேட்டையில் வீழ்த்தப்படும் விலங்குகள் அனைத்தையும் இவனிடம் ஒப்படைப்பர். இவன் அவற்றின் தலையினை வெட்டுவதோடு கால்களையும் ஒடிப்பான். விலங்கின் தலை அதனை வேட்டையில் கொன்றவனுக்கு உரியதாகும். எஞ்சிய பகுதியினைச் சாதியினர் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர்.

திருவாங்கூரைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் வாழும் ஊராளிகளைப் பற்றி *1901* திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: "ஏல மலைகளில் குடியிருக்கும் மலைவாழ் பழங்குடிகள் ஊராளிகள். குன்னநாடு, வேளம்பன், குரக்கநாடு, மன்னுக்காடு, களநாடு, பெரியாறு ஆகிய மலைப்பகுதிகளிலேயே இவர்கள் காணப்படுகின்றனர். இந்தப் பகுதி ஒவ்வொன்றிலும் வாழும் ஊராளிகளுக்குத் தலைவன் காணிக்காரன் எனப்படுகின்றான். இவர்கள் மதுரையை ஆண்ட மன்னர் ஆதரவில் வாழ்ந்தவர்கள் என வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது. அரசு தொடர்பான ஊர்வலங்களின்போது குடையினை எடுத்து வருவதே இவர்களுக்கு உரிய பணியாகும். பழங்காலத்தில் இன்று தொடுபுழா வட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கும் பல பகுதிகள் முன்பு மதுரை அரசைச் சேர்ந்தனவாயிருந்தன. ஒரு முறை மதுரை மன்னன் நேரியமங்கலம் வந்தபோது அவனோடு உடன்வந்த இவர்களுடைய மூதாதையர்களை அவன் இவ் ஊர்ப்பகுதியினை ஆள அங்கேயே விட்டுச் சென்று விட்டானாகையால் இவர்கள் ஊர் ஆள்பவர் என்ற பொருளில் ஊராளிகள் எனப்பட்டனர். இப்பிரிவினைச் சேர்ந்த ஆண்கள் சமவெளியில் வாழும் ஆண்களைப் போல நான்கு முழ வேட்டியினை முழங்காலை மறைக்கும்படி தொங்கவிட்டு உடுத்துகின்றனர். ஒன்று அல்லது இரண்டு முழ நீளமுள்ள மற்றொரு வேட்டியினை முதுகில் இட்டுக் கொள்கின்றனர். அதன் ஒரு முனை வலது கையிடுக்கின் வழியாகவும் மற்றொரு முனை தோள் மீதுமாக மார்பின்மேல் வந்து சேரும். அவ்விரு முனைகளையும் அங்கு ஒன்றாக இணைத்து முடிச்சிட்டுக் கொள்வர். அந்த முடிச்சு, மேல் துண்டு பைபோல் மார்பில் அமையும்படியாக

இடப்படுவதோடு அதில் அவர்கள் வழிநடைக்குத் தேவையானவற்றை வைத்துக் கொள்வர். பெண்கள் ஒன்பது முழமும் இரண்டரை முழமும் நீளமுள்ள இரண்டு துணிகளை உடுக்கின்றனர். இவை நடுவே மடிக்கப்படும். நீளமான துணியினை இடுப்பில் சேலையாக அணியும் இவர்கள் சிறிய துணியினை மேலாடையாகக் கழுத்தைச் சுற்றி அணிந்து அதன் இரு முனைகளையும் சேர்த்து முடிச்சிட்டுக் கொள்வர். ஆண்கள் பித்தளையாலான மோதிரங்களைக் கைவிரல்களிலும் மெட்டிகளைக் கால்விரல்களிலும் அணிகின்றனர். இவற்றைச் சிலர் வெள்ளியாலும் கூடச் செய்து கொள்கின்றனர். சிலர் கழுத்தில் பதினைந்து முதல் முப்பதுவரையான பாசிமணிகளைக் கோத்து அணிந்து கொள்கின்றனர். பெண்கள் காதுமணி என்ற காதணியினை அணிகின்றனர். அவை உலோகத்தாலான நான்கைந்து கம்பிகளைச் சுற்றி முறுக்கப்பட்டவையாகும். ஆண்கள் தங்கள் தலைமுடியினை வளர விடுகின்றனர். முகத்தை மட்டும் அவ்வப்போது மழித்துக் கொள்வர். ஆண்டில் ஆறுமாதங்கள் அரிசிச் சோறு உண்ணும் இவர்கள் எஞ்சிய ஆறு மாதங்கள் கிழங்கு, காய்கனி முதலிய காட்டில் கிடைக்கும் பொருள்களை உண்டு வாழ்ந்து வருகின்றனர். ஊராளிகள் தாங்கள் பயிரிட்டு விளைவிக்கும் நெல்லில் பெரும்பகுதியினைச் சமவெளிக்குக் கொண்டு சென்று துணிக்கும் உப்புக்கும் பண்டமாற்றுச் செய்து கொள்கின்றனர். இவர்கள் விலங்குகள் பலவற்றின் இறைச்சியினை உண்பவர்களாயினும், யானை, எருமை ஆகிய இரண்டையும் மதித்துப் போற்றி அவற்றுக்கு எத்தகைய தீங்கும் இயற்றுவதில்லை. எருமைகளை நெருங்கிச் செல்வது கூடக் கூடாது என்பதனைச் சமயநெறியோடுபட்ட ஒழுக்கமாக மேற்கொள்கின்றனர். தை மாதத்தில் காட்டினை அழிக்கத் தொடங்கும் இவர்கள் சித்திரை மாதத்தின் இறுதியில் விதை தூவுகின்றனர். உழுவதற்கு இவர்கள் கத்தி எனப்படும் ஒரு வெட்டுவாளினை ஒத்த கருவியையே பயன்படுத்துகின்றனர். பயிரிட்ட பின் இவர்கள் தங்கள் குடியிருப்பை வேறு இடங்களுக்கு மாற்றிக் கொள்வர். பயிரிட்ட நிலம் பார்வையில் இருக்கும்படியாக மூங்கிலையும் நாணலையும் கொண்டு குடிசைகள் அமைத்துக் கொள்வர். பழைய குடியிருப்புகளை விட்டு வெளியேறிப் புதிய குடிசைகள் அமைத்துக் கொண்டு அவற்றில் குடியேறும்வரையான இடைப்பட்ட காலத்தில் பல நாட்கள் குகைகளிலும் மரத்தடியிலும் தங்கி வாழ்வர். காவல் காப்பதில் திறமை வாய்ந்த இவர்கள் வேலி அமைத்தல், களைபிடுங்குதல், பயிர்களைக் காட்டுவிலங்குகளிடமிருந்து காத்தல் ஆகிய பணிகளையும் திறமையுடன் ஆற்றுவர். நாணலைக் கொண்டு தரமான பாய்களைத் தயாரிக்கும் இவர்கள் வேட்டையாடுவதிலும் வல்லவர்கள், தங்கள் வேட்டை நாய்களிடம் மிகுந்த அன்புடைய இவர்கள் தானியங்களை விரிவள்ளம் எனப்படும் பிரம்புக்

கூடைகளில் வைத்துப் பாதுகாக்கின்றனர். பித்தளை மற்றும் செம்புப் பாத்திரங்கள், உரல், வெட்டுக் கத்தி, அரிவாள், மண்வெட்டி, சிக்கிமுக்கிக் கற்கள் ஆகியனவே இவர்களுக்கு உரிய தட்டுமுட்டு சாமான்கள். திருமணம் ஆனவுடன் ஒருவன் தன் பெற்றோரை விட்டுத் தனிக் குடித்தனம் போய்விடுகின்றான். வீட்டு விலக்கு, மகப்பேறு ஆகியவை தொடர்பான தீட்டுக்களைக் கண்டிப்புடன் மேற்கொள்ளும் இவர்கள் இச் சமயங்களில் பெண்கள் தங்கியிருக்க குடிசையிலிருந்து தூரமான இடத்தில் பாட்டுப்பந்தல் என்ற மாடங்களை அமைக்கின்றனர். அங்குப் பெண்கள் மூன்று நாட்கள் தங்கியிருப்பர். அவள் நான்காம் நாள் குளித்த பின் குடிசைக்கு அருகே உள்ள மற்றொரு மடத்தில் வந்து ஓரிரு நாட்கள் தங்குவாள். ஏழாம் நாள் அவள் குடும்பத்தவர்களோடு மீண்டும் சேர்ந்து கொள்வாள். மகப்பேற்றின்போது தூரத்தில் உள்ள குடிசையில் பன்னிரண்டு நாள்கள் தங்கியிருப்பவள் அதன்பின் ஐந்து நாள்கள் அருகே உள்ள குடிசையில் வந்து தங்குவாள். அதன் பின்னரும் இருபது நாள்கள் வரை அவள் குடும்பத்தைச் சேர்ந்த பிற உறுப்பினர்களைத் தொட அனுமதிக்கப்படுவதில்லை. அச் சமயத்தில் குடிசையின் கூரையினைக்கூட அவள் தொடக் கூடாது. இந்த நாள்களின்போது மற்றவர்கள் உணவு சமைத்து அவளுக்குத் தருவர். பிள்ளையைப் பெற்றவள், மற்றும் வீட்டுக்கு விலக்கானவள் குளித்த தண்ணீர் தீர்க்க இயலாதபடியான தீட்டுக்கு உள்ளானதாகக் கருதப்படுகிறது. இதனால் இவர்கள் குளிப்பதற்கென பாட்டுவெள்ளம் எனப்படும் குட்டைகள் தனித்த ஒதுக்குப்புறமான இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சமவெளிப் பகுதிக்கு வரும் ஊராளிகள் தண்ணீர் குடிக்கத் தயங்குவர். தாங்கள் குடிக்க உள்ள தண்ணீர் தீட்டுப் பட்டதாக இருக்கும் என்ற ஐயமே இத் தயக்கத்திற்குக் காரணம். ஒருத்தி முதன்முதல் பிள்ளையைப் பெறும்போது அவள் கணவன் மூன்று நாள்களுக்குத் தீட்டுக்கு உரியவனாகக் கருதப்படுவான். அவளுடைய அடுத்த மகப்பேற்றின்போது அவன் அவ்வாறு தீட்டுக்கு உரியவனாவதில்லை. ஒருத்தியின் மகப்பேற்றின்போது அவள் தாய்வழி உறவினர்கள் ஐந்து நாள்கள் தீட்டு மேற்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த பதினெட்டாம் நாள் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினன் குழந்தைக்குப் பெயரிடுவதோடு அதற்குக் காதுகளையும் குத்திவிடுவான். குழந்தை நடக்கத் தொடங்கியவுடன் மொட்டை போடுவர். தலையின் முன் பகுதியில் ஒரு கொத்து முடி மட்டும் விடப்படும். ஊராள்களின் பிணங்கள் எரிக்கப்படுவதில்லை. வீட்டைவிட்டுச் சற்றுத் தொலைவான தூரத்தில் பிணத்தைப் புதைப்பர். உறவினர்கள் ஒவ்வொருவரும் புதைகுழியினுள் புதிய துணி ஒன்றினை இடுவர். புதைகுழியினை மூடியபின் அதன் மீது ஒரு கொட்டகை அமைத்து அதனுள்

இறந்துபோனவரின் வெட்டுக்கத்தி, கொஞ்சம் புழுங்கல் அரிசி, கொஞ்சம் வெற்றிலை பாக்கு ஆகியனவற்றை வைப்பர். ஏழாண்டுகளுக்குப் பின் இறந்துபோனவரின் ஆவிக்காகச் சோறும் சாராயமும் படைப்பர். சாவுத் தீட்டினை இவர்கள் பதினாறு நாள்களுக்கு மேற்கொள்கின்றனர். ஊராளியர் தந்தையை அப்பன் எனவும் தாய்மாமனை அச்சன் எனவும் அழைப்பர். மருமக்கள் தாய உடைமை உரிமை முறையினையே இவர்கள் மேற்கொள்கின்றனர். பெற்றோரே திருமண உடன்பாட்டினைச் செய்வர். ஒருத்தி மணமானவள் என்பதற்கு அடையாளமாகத் தாலி அணியும் வழக்கம் இல்லை. மணம் உறுதி செய்யப்பட்ட பின் பெண்ணை அவள் கணவனுடைய பந்தலுக்கோ குடிசைக்கோ அனுப்பி வைத்துவிடுவர். ஊராளிகள் உள்ளாடன்களோடு கலப்பு மணம் செய்து கொள்கின்றனர் சில சமயங்களில் முதுவன்களோடும் மணஉறவு கொள்கின்றனர். ஒரு குடும்பத்திலிருந்து பெண் கொள்ள விரும்பும் ஒருவன் தன் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியினை அக் குடும்பத்தில் ஒருவருக்குக் கட்டித்தர வேண்டும். இசையில் நாட்டம் கொண்ட இவர்கள் இரவில் தூங்கச் செல்லும் முன் சில இனிய பாடல்களைப் பாடுவர். காணிக்காரரைப் போல இவர்களும் நோய்கள் நீங்கச் செப்புக மற்றும் சாட்டுக ஆட்டத்தை நிகழ்த்துகின்றனர். சூனியக்காரனாக ஆக விரும்பும் ஒருவன் பல மாதங்கள் காட்டில் தனியே அலைந்து திரிய வேண்டும். பின் அவர்கள் தங்களை மறந்த மயக்கத்தில் ஆழ்வர். அப்போது அவர்கள் முன் அவர்களுடைய மூதாதையர்கள் கன்னியராகத் தோன்றி மந்திர வித்தைகளைக் கற்று தருவர். ஊராளிகள் சுமையினைத் தலையில் வைத்துத் தூக்காமல் முதுகில் வைத்தே சுமந்து செல்வர். தங்கள் வெட்டுக் கத்தியினை உடன் எடுத்துக் கொள்ளாமல் இவர்கள் தொலைதூர இடங்களுக்குச் செல்வதில்லை. காடுகளில் இவர்கள் திறமையாக வழிகாட்டி அழைத்துச் செல்வர். தோடரிடையே போலவே ஊராளிகடையேயும் ஒருத்தி பலரை மணக்கும் வழக்கம் இருப்பதாக மறைத்திரு எஸ். மட்டீர் கூறியுள்ளார்.*

திருவாங்கூரைச் சேர்ந்த தண்டன்களுக்கு உரிய மற்றுமொரு பெயர் ஊராளி என்பதாகும். முன்னாளில் இவர்கள் ஊர்களுக்குப் பாதுகாவலராக இருந்ததால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். திருவாங்கூரைச் சேர்ந்த குறவர்களின் சாதித் தலைவனுக்கும் மலபாரைச் சேர்ந்த கோலாயன்களுக்கும் உரிய மற்றுமொரு பெயராகவும் ஊராளி என்பது உள்ளது.

* திருவாங்கூரில் மக்கள் வாழ்க்கை.
(Native Life in Travancore.)

ஊராளி - Urali

இத் தலைப்பில் கூறப்படும் (முந்தையவர்களின் பெயர்கொண்ட) ஊராளிகள் கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள திம்பம் காடுகளில் 1800 அடி உயரத்தில் வாழ்பவர்கள் ஆவார். அவ்விடத்தில் காற்று வேகமாக வீசும் மலைவிளிம்பு ஒன்றில் வனத்துறைக்குரிய மாளிகை ஒன்று உள்ளது. அந்த மாளிகை ஊராளிகளையும் தொல்பழங்குடியினரான சோலகரையும் பற்றிய ஆய்வு மேற்கொள்ள தக்க இடமாக வாய்த்திருந்தது.

ஊராளியர் தாங்கள் வாழும் இடத்திற்குச் சில மைல்கள் தள்ளி வாழும் படகரோடு நெருக்கமாகப் பழகுகின்றனர். எருமைகளுக்கான மேய்ச்சல் நிலத்தைத் தேடி நீலகிரிப் பீடபூமியில் அலையும் தோடர், கோயமுத்தூர் பக்கமான மலைச் சரிவில் வாழும் குறும்பர் மற்றும் இருளர் ஆகியோரோடும் இவர்கள் கலந்து பழகுகின்றனர். திம்பத்திலிருந்து பதினேழு மைல் தொலைவில் சமவெளியில் உள்ள சத்தியமங்கலம் கடைவீதிக்குச் சுமைதூக்கி வருகின்ற காரணத்தால் இவர்கள் நாகரிக உலகத்தோடும் தொடர்பு கொண்டவர்களாக உள்ளனர். நீலகிரியினைச் சேர்ந்த படகரைப் போலத் தலைப்பாகை தரிக்கும் இவர்கள் வெள்ளை அல்லது சிவப்பும் நீலமும் கலந்த கோடுகளோடு வடிய நீண்ட அங்கியினை அணிகின்றனர். தலை முடியினை நீள வளர்ப்பவர்களையும் இந்துக்களைப் பார்த்து முன் தலையை மழித்துப் பின் குடுமி வைத்திருப்பவர்களையும் இவர்களிடையே காணலாம். கிளி, மயில், காட்டுக்கோழி முதலிய காட்டுப் பறவைகளைப் போலவே குரல் கொடுத்துத் கத்தும் ஒருவனை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். வனத்துறை மாளிகையின்முன் கூடிய சிறு குழுவினர் கற்கள், சமையல் கட்டில் உள்ள இரும்புச் சட்டி, மூங்கில், அவ்விடத்திலேயே கல்குச்சி (*Ficus Tsiela*) மரப்பட்டையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கயிறு ஆகியவற்றின் உதவியால் பறவையைப் பிடிக்க ஒரு கண்ணியினை அமைத்து வைத்தனர். இவர்களிடையே சக்கிமுக்கிக் கல், உருக்குத் துண்டு ஆகியன கொண்டு நெருப்பு உண்டாக்கும் முறை நெருப்புப் பெட்டி அறிமுகம் காரணமாக வேகமாக மறைந்து வருகின்றது.

ஊராளிகள் தங்களை ஏழு குலத்தவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். திருமணப் பந்தலுக்கு இவர்கள் ஏழு கம்பங்கள் நடுவர். அத்துடன் இவர்கள் தங்களைப் பில்லியர் மக்கள் என்றும் கூறிக் கொள்வர். சோலகர்களை இவர்கள் ஐந்து குலத்தவர் எனவும் கரையர் மக்கள் எனவும் கூறுவர். தங்களை ஊராளிகள் என்றோ இருளர் என்றோ கூறிக் கொள்ளும்

இவர்கள் விவரம் கேட்கும்போது பில்லியரும் கரையர்களும் உடன்பிறந்தவர்கள் ஆகையால் தங்களைச் சோலகர் எனவும் அழைக்கலாம் என்பர். எனினும் ஊராளிகள், சோலகர் ஆகியோரிடையே மண உறவுகள் நிகழ்வதில்லை. இவர்கள் சில சமயங்களில் ஒருவர் வீட்டில் மற்றவர் உண்பர். மற்றொரு வழக்கு வரலாற்றின்படி ஊராளிகளும் சோலகன்களும் ஆகிய இருவருமே கரையான்கள் வழியும், பில்லயம் அல்லது மாதேசுவரம் சார்ந்த சிவாச்சாரியர்கள் வழித் தோன்றியவர்கள் எனவும் கூறப்படுகின்றது. (பார்க்க: சோலகர்) கன்னடமும் தமிழும் கலந்த கொச்சை மொழியினையே இவர்கள் பேசுகின்றனர். இவர்களிடையே புறமணக்கட்டுப்பாடுடைய பல குலப்பிரிவுகள் இருப்பினும் அவற்றின் பெயர்க்காரணம் தெளிவாகப் புரியவில்லை. இவர்களிடையே செல்லப் பெயர்கள் பல வழக்கில் உள்ளன. அவை அப்பெயர்களுக்குரியவர்களின் தனித்த இயல்பினை விளக்குவன. கழுதைக்காலன், பெருவயிறன், பானைவயிறன், முயல் உதடன், கரடி அல்லது கீரிவால் போல அடர்ந்தோன், பெக்கைவாயன், பொய்யன், மோர்குடித்து வளர்ந்தவன் என்பன இவர்களுக்கான செல்லப் பெயர்களுள் சிலவாம். ஒருவனுக்குக் கொத்த கள்ளன் (கொத்த - கல்) என்பது செல்லப் பெயர். கோத்தகிரியில் ஒரு பாறை அருகே பிறந்தமையால் அவன் இவ்வாறு பெயர் பெற்றான்.

காட்டில் கிடைக்கும் எளிய பொருள்களான கடுக்காய், மெழுகு, தேன், மலைப்பாதையில் ஏறும் வண்டிகள் பின்னோக்கிச் செல்லாமல் தாங்கும் மரக்கட்டை ஆகியவற்றைச் சேகரிப்பதின் வழி இந்தப் பழங்குடிகளுள் பலர் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். வண்டிக்கான தடுப்புக் கட்டைகளைக் கயிற்றில் கட்டி வண்டிகளின் பின்னால் தொங்கவிடுவர். அவை தரையோடு இழுபட்டனவாக வரும். வண்டியினை நிறுத்தும்போது இக் கட்டைகள் சக்கரங்கள் பின்னோக்கிச் செல்லாமல் தடுக்கின்றன. சிலர் மண்ணைக் கொத்திப் பலவகைத் தானியங்களையும் பயிரிடுகின்றனர். மற்றும் சிலர் ஆடு மாடுகள் வளர்க்கின்றனர். சில குடும்பங்கள் வரி ஏதும் செலுத்தாமல் வனத்துறையினர் தந்த நிலத்தை அனுபவித்து வருகின்றனர். இதற்காக அவர்கள் வனத்துறையினருக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் தங்கள் உழைப்பை நல்கக் கடமைப்பட்டவர்கள். இவ்வகுப்பார் கடினமான உழைப்பில் ஈடுபட விரும்புவதில்லை. வட்டிக்குப் பணம் தரும் செட்டிகளின் பிடியில் இவர்கள் அகப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ராகியே இவர்கள் அன்றாட உணவு. மறி, கோழி, ஆடு, மான், புறா, மாடப்புறா, கருங்குரங்கு, கரடி, முயல், முள்ளெலி, கிளி, காடை மற்றும் கவுதாரி காட்டுக்கோழி, காட்டு உள்ளான், மரங்கொத்தி முதலிய காடுவாழ்பவைகள் அனைத்தின் இறைச்சியினையும்

இவர்கள் உண்கின்றனர். ஒருவனிடம் மாட்டிறைச்சி, பூனை, தவளை, கரடி, குரங்கு ஆகியவற்றை உண்பதுண்டா எனக் கேட்டபோது இவை ஒவ்வொன்றின் பெயரைக் கேட்டவுடனும் அவன் தன் தீவிரமான எதிர்ப்பைத் தெரிவித்தான். மாட்டிறைச்சி, பூனை, தவளை ஆகிய மூன்றின் பெயரைச் சொன்னபோதுதான் அவன் மிகுந்த எரிச்சல் உற்றவனாகத் தன் எதிர்ப்பைத் தெரிவித்தான்.

இப் பழங்குடிகள் தங்களிடையே நிகழும் சச்சரவுகளை எசமானன் எனப்படும் சாதித் தலைவனிடம் முறையிடுவர். அவன் சம்பே குலப் பிரிவைச் சேர்ந்த பரம்பரைப் பதவி உரிமையுடையவன். அவனுக்கு உதவியாளர்களாகக் கல்கட்டி, கோல்கரை, குரினங்கா குலப்பிரிவுகளைச் சேர்ந்த மூவர் பதவியில் அமர்த்தப்படுவர். இவர்கள் முறையே பட்டக்காரன், கௌடன், கோல்காரன் என்ற பட்டப்பெயர்களுக்கு உரியவர்கள். மக்களைப் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு அழைப்பதும் விதிக்கப்பட்ட தண்டத்தொகையினை வசூலிப்பதும் திருமணங்களின்போது நேரில் சென்று இருப்பதும் கோல்காரன் கடமைகளாம். திருமணத்திற்குப் பின் கணவனோடு வாழ மறுக்கும் ஒருத்தி பின்வருமாறு தண்டிக்கப்படுவாள். அவளை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டியபின் கோல்காரன் ஒரு குளவிக் கூட்டினை அவள் காலடியில் உடைத்து குளவியை வெளிப்படுத்துவான். அதன்பின் சில மணித்துளிகள் சென்றபின் அவளைக் கணவனுடன் சென்று வாழ விருப்பமா எனக் கேட்பர். அதற்கு அவள் உடன்படுவாளாயின் அவள் தன் உடன்பாட்டைத் தெரிவிக்க, அவள் கணவன் முதுகில் கோழியின் கழிச்சலைக் கொண்டு கோல்காரன் இடும் அடையாளத்தை, "நீ என் கணவன். இனி நான் உன்னோடு சண்டையிடாமல் உனக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்" எனக் கூறியவளாக நடக்க வேண்டும். இத்தகைய கொடிய தண்டனைக்கு உள்ளான பின்பும் ஒருத்தி குறிப்பிட்ட தண்டத் தொகையினைச் செலுத்திய பின் தன் கணவனைவிட்டுச் சாதியினைச் சேர்ந்த வேறொருவனோடு சென்று வாழலாம்.

பூப்படையும் சிறுமி ஒருத்திக்கு எண்ணெய் பூசியும் அணிகளால் அலங்காரம் செய்தும் தனியே ஒரு குடிசையில் ஏழு நாள்கள் தங்கும்படி செய்வர். அப்போது வேறு இரு சிறுமியர் அவளுக்குத் துணையாக இருப்பர். எட்டாம் நாள் மூவரும் ஓர் அருவி அல்லது குட்டையில் குளித்தபின் அந்தச் சிறுமியின் இல்லத்திற்கு ஈரத்துணியோடு வந்து வீட்டு வாசலின் முன் இடப்பட்டுள்ள உலக்கையின் மேல் அமர்வர். அவர்கள் முன் ஒரு வாழையிலையினை இட்டுச் சோறு, காய்கறி ஆகியன படைக்கப்படும். எட்டு அல்லது ஒன்பது மாதமான

குழந்தை ஒன்றினை அச் சிறுமியின் மடியில் கிடத்துவர். அவள் அந்தக் குழந்தைக்குச் சிறிது சோறு ஊட்டுவதோடு தானும் சில வாய் சோற்றினை உண்பாள். பின் கூடியுள்ளவர்களும் உணவு கொள்வர். அதன் முடிவில் அவர்கள் கையலம்பிய நீருள்ள பாத்திரத்தை அச்சிறுமி வெளியே கொண்டு சென்று கொட்டுவாள். பின் விருந்து நடைபெற்ற இடத்தை அவள் பசுஞ்சாண நீரால் மெழுகித் தூய்மைப்படுத்துவாள்.

சிலபோது சிறுமியர் குழந்தைகளாக இருந்தபோதே மணம் செய்விக்கின்றனர். எனினும் வயதுவந்தபின் மணம் செய்வித்தலே பெருவழக்கு. சிறுவனின் பெற்றோரே தங்கள் உறவினருடன் பெண்கேட்டு இருமுறை செல்வர். அப்போது ஒரு முறை சிறுவனையும் உடன் அழைத்துச் செல்லும் வழக்கம் உள்ளது. முதன்முறை செல்லும்போது ராகியினைச் சிறுமியின் வீட்டாருக்கு அன்பளிப்பான வழங்குவர். இரண்டாம் முறை வாழைப்பழம், அரிசி, புட்டு ஆகியனவற்றை உடன்கொண்டு செல்வர். இவ்வாறு செல்பவர்களை உரிய மரியாதையுடன் வரவேற்க வேண்டும். விருந்தினராக வருபவர்களின் கைத்தடியினை வீட்டுக்கு உரியவர் வாங்கி வைத்துவிட்டபின் அவர்களை வீட்டினுள் பாய்விரித்து அமரச் செய்தலே மரியாதை காட்டுவதாகும். விருந்தினர் பாதங்களை இரு கைகளாலும் தொட்டு வணங்கி அக்கைகளை நெற்றி வரை உயர்த்தி வணங்குவது வழக்கமான வரவேற்பு முறையாகும். வந்தவர்கள் பாயில் அமரும் முன் பாயின்மேல் வெற்றிலை பாக்கோடு வைக்கப்பட்டுள்ள நீர் நிறைந்த பாத்திரத்தை வணங்குவர். தங்கள் குல தெய்வத்தைக் குறிக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ள கல் அல்லது படத்தின் மீது ஒரு பூவினை வைத்துப் பூசை செய்தபின், "இந்தத் திருமணத்தால் குலம் தழைக்கும் என்றால் இந்தப் பூவினை வலப் பக்கம் விழச் செய். இல்லையேல் இடப்பக்கம் விழச் செய்" எனக் கூறி வேண்டுவர். அந்தப் பூ விழாமல் உருவத்தின் மீதே இருக்குமானால் அதனை மிக நல்ல சகுனமாகக் கொள்வர். மண உறுதிச் சடங்கிற்குச் செல்லும் மணமகன் வீட்டார் வழியில் ஓர் ஓடையினைக் கடக்க வேண்டியிருப்பின் அதில் நீர் ஓடினாலும் ஓடாவிட்டாலும் மணமகனை அதனைத் தாண்ட அனுமதிப்பதில்லை. மணமகனுடைய தாய்மாமன் அவனைத் தன் தோளில் தூக்கியவனாக ஓடையைக் கடப்பான். அவர்கள் மணமகள் வீட்டை நெருங்கும்போது கோல்காரனும் மற்றும் இருவரும் அவர்களை எதிர்கொண்டு அவர்களுடைய கைத்தடிகளைப் பெற்றுக் கொள்வர். இவ்வாறு கைத்தடியினைப் பெற்றுக் கொள்ளத் தவறினால் வந்தவர்கள் அதனைத் தங்களை அவமதித்ததாகக் கருதுவர். பெருந்தொகையினைத் தண்டமாகச் செலுத்தியே இக்குற்றத்திற்குக் கழுவாய்

தேடிக் கொள்ளமுடியும். விருந்தினர் ஊர்வலம் மணமகள் இல்லத்தை அடைந்ததும் மணமகள் ஊரைச் சேர்ந்தவர்கள் அவள் வீட்டு வாசலின் குறுக்கே கழி ஒன்றினை வைத்து அவர்கள் மணமகள் வீட்டினுள் நுழைய முடியாதபடி தடுப்பர். இரு சாராரிடையேயும் போலியாகச் சண்டை ஒன்று நிகழும். அப்போது இரு சாராரும் ஒருவர் மேல் மற்றவர் மஞ்சள் நீரினை ஊற்றிக் கொள்வர். இறுதியில் வாயிலின் குறுக்கே உள்ள கழி அகற்றப்படும். அங்கு உணவு உண்டபின் மணமகள் வீட்டார் மணமகன் ஊருக்கு புறப்பட்டுச் செல்வர். மணமகன் ஊரில் மணமகளும் மணமகனும் தனித்தனி இல்லங்களில் தங்குவர். மணமகன் வீட்டின் முன் வரிசைக்கு மூன்றாக நான்கு வரிசையாக நடப்பட்ட பன்னிரண்டு கம்பங்களோடு கூடிய பந்தல் இடப்படும். வீட்டின் வாயிலின் அருகே நிற்கும் இரண்டு கம்பங்களும் மூர்த்திக் கம்பங்கள் எனப்படும். இக் கம்பங்களை நடக்குழி தோண்டியவுடன் அவற்றுக்கு தேங்காய் உடைத்து வழிபாடு செய்த பின் நெய், பால், சில செப்புக் காசுகள் ஆகியவற்றை இடுவர். மணமக்கள் எண்ணெய் தேய்த்துக் குளித்த பின் பந்தலுக்கு அழைத்து வரப்படுவர். அணிகள், புத்தாடை ஆகியன பூண்டுள்ள இவர்கள் மணைபலகை ஒன்றில் அமர்வர். ஒரு தேங்காயினை உடைத்த பின் ஒரு தட்டின் மேல் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தை வணங்குவர். பின் மணமக்களின் உறவினர் அருகில் உள்ள ஒரு குட்டை அல்லது ஓடைக்குச் சென்று குல தெய்வத்திற்குப் பூசை போடுவர். அங்கிருந்து திரும்பும்போது மணமக்களின் தாய்மாமன்மார் நடனம் ஆடியபடி உடன்வரவேண்டும். வீடுவந்து சேரும்வரை இவ்வாறு நடனம் ஆடுபவர்கள் முன் சிதறு தேங்காய் இட்டபடி வருவர். அதன்பின் மணமக்கள் தங்கள் சிறுவிரல்களை இணைத்தபடி மீண்டும் மணைப்பலகையில் அமர்வர். அப்போது தெரவு எனப்படும் பரிசத் தொகை மணமகள் தந்தைக்கும் பால்வலி எனப்படும் தொகை மணமகள் அன்னைக்கும் வழங்கப்படும். பின் தங்கத் தகட்டாலான தாலியினை மணமகன் வீட்டைச் சேர்ந்த ஒருத்தி மணமகள் கழுத்தில் அணிவிப்பாள். பின் மணமக்கள் கூடியுள்ளவர்களை வணங்கி ஆசி பெற்றபின் வீட்டினுள் செல்வர். அங்கு மணமகளைச் சோறு வடிக்கும்படி பணிப்பர். அதனை அவளும் அவள் கணவனும் ஒரே இலையிலிருந்து எடுத்து உண்பர்.

ஊராளிகளிடையே கூடிவாழி என்ற வழக்கம் உள்ளது. ஓர் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் உடன்பட்டவர்களாகக் காட்டுக்கு ஓடிச் செல்வர். அவர்கள் உறவினர்கள் அவர்களைக் கண்டுபிடித்துத் திரும்ப அழைத்து வரும்வரை ஒன்றாக வாழ்ந்து வருவர். பின் பஞ்சாயத்தார் கூடி அவர்களைக் கணவனும் மனைவியுமாக ஏற்றுக் கொள்வர். அவ்வாறு ஏற்றுக் கொள்ளுமுன்

பரிசப் பணத்தையும் தண்டத் தொகையினையும் மணமகன் செலுத்த வேண்டும். இவற்றைச் செலுத்தத் தவறுபவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளாவர். இதனைச் கொண்டாடும் வகையில் பெண்ணை அழைத்துக் கொண்டு ஓடியவன் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கத் தவறும் அவன் இறக்க நேர்ந்தால் அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் முறையற்ற உறவின்வழிப் பிறந்தனவாகக் கருதப்படும். இதுபோல ஒருவன் இறக்க நேர்ந்தால் அவன் பிணத்தை அப்புறப்படுத்தும் முன் அவனுடைய கைம்பெண்ணாகிவிட்ட மனைவியினைப் பெயர் அளவிற்கு ஒரு சிலருக்கு உணவு படைத்து அவளுடைய குழந்தைகளை முறையாகப் பிறந்த குழந்தைகளாக ஆக்கிக் கொள்ளும்படி வற்புறுத்துவர்.

ஊராளிகள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். இவர்கள் சாவுச் சடங்குகள் ஓரளவு படகர் சாவுச் சடங்குகளை ஒத்தியல்வன. ஒருவன் இறந்தவுடன் அவனுடைய உடலுக்கு எண்ணெய் பூசிக் குளிப்பாட்டி புதிய உடைகளையும் தலைப்பாகையினையும் அணிவிப்பர். அவன் முகத்தில் மூன்று வெள்ளிக் காசுகளை ஒட்டி வைப்பர். நெற்றியில் ரூபாய் நாணயம் ஒன்றும் கண்கடைகளில் கால் ரூபாய் நாணயங்களும் பதிக்கப்படும். சடங்கிற்கு வரவேண்டிய அனைவரும் வந்து கூடியபின் பிணத்தை வெளியே எடுத்து வந்து ஆறு அடுக்குகள் கொண்ட தேர் ஒன்றில் வைப்பர். மூங்கில், மரக்கழிகள் ஆகியவற்றால் கட்டப்பட்டிருக்கும் அத் தேரினை வண்ணத் துணிகளினாலும் கொடிகளாலும் அலங்கரித்து அதன் உச்சிக் கலசம் ஒன்றையும் குடை ஒன்றையும் கவித்திருப்பர். கொட்டு முழக்கிற்கு இயைய தேரினைச் சுற்றி நடனம் ஆடுவர். பின் ஊர்வலம் புதைகாட்டை நோக்கிப் புறப்படும். அங்கு எருமைமாடு ஒன்றினைத் தேரருகே பிடித்துவந்து அதன் பாலைப் பீச்சி மும்முறை பிணத்தின் வாயில் விடுவர். ஒரு பசுவும் ஓரிரு கன்றுக்குட்டிகளும் தேரைச் சுற்றி ஓட்டிச் செல்லப்படும். அக்கன்றுக்குட்டிகளை இறந்தவனோடு உடன் பிறந்தவளுக்கு வழங்குவர். பின் தேரின் அலங்காரங்களைக் கலைத்த பின் தேரினை உடைப்பர். பிணத்தை அங்கேயே புதைப்பர். அல்லது தூரத்தில் உள்ள நீர்குண்டிக்கு எடுத்துச் சென்று அங்கே புதைப்பர். சாவுச் சடங்கு நிகழ்த்த எட்டாம் நாள் அல்லது நீர்குண்டியிலிருந்து திரும்பிய பின் இறந்தவரின் மூத்த மகன் மொட்டையடித்துக் கொண்டு தன் சகோதரன் மனைவியோடு கூட விரதம் இருப்பான். பிணத்தை நீர்குண்டியில் புதைத்திருப்பார்களாயின் இறந்தவர் மகன் தன் உறவினர்களோடு ஒரு துணியில் கொஞ்சம் சோற்றை முடிந்து எடுத்தவனாக அவ்விடத்திற்குச் செல்வான். அங்குச் சென்று சேர்ந்ததும் அவன் அச் சோற்றினைக் கொப்பமனை எனப்படும்

புதைக்காட்டில் நிற்கும் அனைத்து நினைவுக் கற்களுக்குப் பூசுவான். அதன்பின் படைக்கப்பட்ட சோற்றினை அவன் மீண்டும் சேகரிப்பான். அவனுடன் வந்தவர்களுள் ஒருவன் தெய்வம் ஏறப்பட்டவனாக அந்தப் பருவத்தின் செழிப்புப் பற்றியும் இறந்தவனுடைய குடும்பத்திற்கு நிகழ இருப்பவை பற்றியும் நல்வாக்குச் சொல்வான். சேகரிக்கப்பட்ட சோற்றினைப் புனிதமானதாகக் கருதி அனைவரும் உட்கொள்வர். ஒவ்வொரு குலப்பிரிவுக்கு என்றும் தனியே கொப்பமானங்கள் (புதைக்கும் இடங்கள்) உள்ளன. அவை மூன்று பக்கங்களிலும் மண்சுவர்களோடு கூடிய நீண்ட சதுர அமைப்புடையவை. ஊருக்கு அருகிலேயே பிணத்தைப் புதைக்கும் வழக்கம் உள்ள கிராமங்களில் புதைகாட்டில் கற்கள் வரிசையாக நிற்கக் காணலாம். ஒருவன் இறந்து இரண்டு மூன்று ஆண்டுகளானபின் அவன் புதைகுழியினைத் தோண்டி எலும்புகளை எடுத்துக் கொண்டுவந்து அவன் வாழ்ந்த வீட்டின் முன் வைப்பர். அப்பொழுது உறவினர்கள் அனைவரும் கூடி அழுவர். பின் இறந்தவனுடைய மகன் அதனை நீர்குண்டிக்குக் கொண்டு சென்று புதைப்பான். எட்டாம் நாள் அவன் மீண்டும் நீர்குண்டிக்குச் சென்று சடங்குகளை நிகழ்த்தி நினைவுக் கல் நடுவான்.

ஊராளிகள் சிறு தேவதைகள் பலவற்றை வழிபடுகின்றனர். பால்ராயனுக்கு ஆட்டையும் மறியையும் பலியிடுவர். இவர்கள் பின்வரும் இரு ஆண்டுத் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

அ) தை நோன்பு - இத் திருவிழாவின்போது வீடு முழுவதையும் துப்புரவு செய்வர். வேப்பிலைக் கொத்தையும் பூளைப் பூவையும் இணைத்துக் கட்டி வீட்டின் முன் கூரையில் சொருகி வைப்பர். வீட்டு வாசற்படியின் மேலும் இவை சொருகி வைக்கப்படும். அன்று அனைவரும் வயிறார விருந்துண்பர். இத் திருவிழா தை மாதத்தில் நிகழும்.

ஆ) வியாசி நோன்பு - பங்குனி மாதம் இந் நோன்பினை நிகழ்த்துவர். சுவர் ஓரமாக ஒரு பெரிய தொட்டியினை வைத்து அதில் உப்புக் கரைத்த நீரினை நிரப்புவர். இலைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட கால்நடைகளை ஒவ்வொன்றாக அத்தொட்டியருகே ஓட்டி வந்து உப்பு நீரைக் குடிக்கும்படி செய்வர்.

ஊரில் பரிச்சா - Uril parisha

மூசாடுகளின் ஒரு பிரிவினர்.

ஊரு - Uru

ஊர், ஊரு என்பன குடியிருப்புக்களுக்கு உரிய பெயர். பேடர், போயர், கொல்லர், குறுவர், குருபர், மாதிகர், ஒட்டே ஆகிய சாதிகளின் உட்பிரிவுக்கு உரிய பெயராகவும் இது விளங்குகின்றது. பேடர்களும், போயர்களும் ஊரு *(கிராமங்களில் வாழ்பவர்கள்)*, மையாசர் *(காடுகளில் ஊருக்கு அப்பால் வாழ்பவர்)* என இரு பிரிவினராக உள்ளனர். இதே போன்று தங்கள் இயல்பான நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு ஒரே இடத்தில் தங்கி வாழும் ஒட்டர்கள் ஊர் ஒட்டர் எனப் பெயர் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள பயிரிடும் சாதிகள் சிலவற்றின் சாதித் தலைவன் ஊர்க்கவுண்டன் எனப்படுவான்.

ஊர் உடையான் - Ur-Udiyan (lord of the village)

நந்தமான்களுக்கான மற்றுமொரு பெயர்

உருக்கத்தி - Urukathi (a kind of knife)

தொரையர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

உருக்காரன் - Urukkaran

இலக்கத் தீவுகளில் கலம் செலுத்தும் முகமதிய வகுப்பாருள் ஒரு பிரிவினர். *(பார்க்க: மாப்பிள்ளர்)*

உருமிக்காரன் - Urumikkaran

உருமி மேளம் அடிப்பவர்கள் மதுரை மாவட்டத்தில் தொட்டியன்கள் எனவும் பிற இடங்களில் பறையன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.* காப்பிலியன்கள் தாங்கள் உருமிக்காரன்களோடு துங்கபத்திரா நதிக்கரையிலி ருந்து குடிபெயர்ந்து வந்ததாகக் கூறுகின்றனர். தொட்டியன்கள் தங்கள் சாதிப் பெண்களைப் பெண்டாள விரும்பியதே தாங்கள் இவ்வாறு குடிபெயர்ந்து வரக்காரணம் என அவர்கள் கூறுவர். காப்பிலியன்கள் திருமணத்தில் இரண்டாம் நாள் வெற்றிலை பாக்கு வழங்கும்போதும், சாவுச் சடங்கின் இறுதி நிகழ்ச்சிகளின்போதும் உரிமைக்காரன் ஒருவன் வந்திருக்கவேண்டும் என்பது வழக்கமாக உள்ளது.

உசிர - Usira (*urisika; Phyllanthur Embalica*)

கோமும்டிகளின் ஒரு குலப்பிரிவு.

உட்லர் - Utla

உட்லர் அல்லது உட்லவாரு எனப்படுவோர் பெருக்கலரின் தொழில் தொடர்பான ஓர் உட்பிரிவுக்கு உரிய பெயராகப் பதியப்பட்டுள்ளது. போயர், பத்ம சாலேக்கள் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயராகவும் இது உள்ளது. இப்பெயர் பானைகளை வைப்பதற்கான தொங்கும் உட்லம் (உறி) என்பதிலிருந்து வந்ததாகும். பெருக்கலர் இதற்கான உறிகளைப் பனை நாரால் தயாரித்து விற்கின்றனர்.

உத்தரேணி - Uttareni (Achyrantes aspera)

போயர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

உய்யால - Uyyala (a swing)

மாலர், முத்ராசர், பெருக்கலர் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர். பிராமணர்கள், மற்றும் சில பிராமணர் அல்லாதார் சாதிகளின் திருமணத்தின்போது மணமக்கள் மணப்பந்தலில் ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவர். அப்போது இசைக்கும் இன்னிசையோடுகூடப் பெண்கள் ஊஞ்சல் பாட்டினைப் பாடுவர்.

வாடர் - Vada

கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் கடலில் மீன் பிடிப்பவர்கள் தெலுங்கு பேசும் வாடரும் ஜாலாரிகளுமேயாவர். ஆண்கள் கடலில் சென்று மீன் பிடித்து வரப் பெண்கள் அதனைக் கடைவீதிகளிலும் கிராமங்களிலும் கொண்டு போய் விற்றுவருகின்றனர். கெவுட்டொ, கொந்தர, தியொரொ முதலிய ஒரியச் சாதியினரும் மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொண்டிருப்பினும் இவர்கள் நன்நீர் நிலைகளிலும் ஆறுகளிலுமே மீன் பிடிக்கின்றனர். தங்களை இவர்கள் வாட பலிசர் எனக் கூறிக் கொள்ளினும் பலிசர்கள் எனக் கூறிக் கொள்ள இவர்களுக்கு எத்தகைய உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரியர் இவர்களைச் சில சமயங்களில் கலாசியர் என அழைப்பர்.

சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்களாகவே உள்ள வாடர் கொச்சையான தெலுங்கைப் பேசுகின்றனர். தமிழ்நாட்டுப் பட்டணவன் சாதி மீனவர்கள் அணிவது போன்ற கூருருளை வடிவினதான பனை, தென்னை ஒலைகளால் பின்னப்பட்ட குல்லாயினை இவர்கள் அணிகின்றனர். மேல் சாதியார் முன் செல்லும்போது இவர்கள் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இடுப்பு வேட்டியினை அவிழ்த்துக் கழுத்தில் மாலைபோல் இட்டுக் கொள்வர். வேறு சாதியாரிடையே இது அவமரியாதை செய்யும் செயலாகக் கருதப்படும்.

பிற தெலுங்குச் சாதியாரிடையே இருப்பதைப் போலவே வாடரிடையேயும் புறமணக்கட்டுப்பாடுடைய இல்லப்பேர்கள் உள்ளன. மயிலப்பிள்ளை, கனுப்பிள்ளை, சோத்துப்பிள்ளை, தவுலுப்பிள்ளை என்பன இச் சாதியாருக்கே சிறப்பாக உரிய இல்லப் பெயர்கள். பிற இல்லப்பெயர்கள் பிற தெலுங்குச் சாதியாருக்கும் பொதுவாக உள்ளனவே. இச் சாதித் தலைவன் குலராசு, பிள்ளா என்ற பட்டப்பெயர்களுக்கு உரியவன். குறிப்பிட்ட சில குலத்தைச்

சேர்ந்தவர்களே சாதித் தலைவர்களாக உள்ளனர். சத்ரப்பூரில் மபிலப்பிள்ளை, வங்கா குலப்பிரிவினரே சாதித் தலைவர்களாக உள்ளனர். சமயனோடு என்ற சாதிக்கு உரிய ஏவலனும் இவர்களுக்கு உள்ளான். பிற தெலுங்குச் சாதிக்குரிய சாதித் தலைவர்களைவிட வாடர் சாதித் தலைவன் மிகுதியான அதிகாரம் படைத்தவனாக உள்ளான் எனத் தெரிகிறது. சாதி தொடர்பான எல்லா வழக்குகளையும் தீர்த்து வைக்கும் உரிமை உள்ளவன் இவனே. ஒவ்வொரு திருமணத்தின்போதும் குறிப்பிட்ட தொகையினைக் கட்டணமாகப் பெறும் இவன் திருமணச் சடங்குகள் பலவற்றையும் முன்னின்று கவனித்துக் கொள்கின்றான். திருமணங்கள் தெலுங்கர் மணமுறையினை ஒட்டியனவாகச் சில வேறுபாடுகளை மட்டும் கொண்டனவாக நிகழும். ஓர் இளைஞனின் உறவினர் ஒருத்தியைப் பெண் கேட்டுச் செல்வார்களாயின் அவ் வீட்டுப் பெரியவர்கள் அந்த உறவுக்குத் தங்கள் உடன்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் பித்தளைக் குவளைகளில் பெண்கேட்டு வந்தவர்களுக்கு தண்ணீர் கொடுப்பர். மணச் சடங்குகளின்போது மணமக்கள் பந்தல் ஒன்றின்கீழ் அமர்ந்திருப்பர். அங்கு மணமகன் வீட்டார் கூடியுள்ளவர்கள் பார்வையிடும்படியாக வெற்றிலை, பாக்கு, எண்ணெய், மஞ்சள் கலவை முதலியனவற்றைக் கொண்டுவந்து வைத்திருப்பர். காகிதம், கந்தல்துணி முதலிய அமங்கலப் பொருள்கள் அவற்றுடன் இடம் பெற்றிருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பது கண்டுபிடிக்கப்படின் அக் குற்றத்திற்காகத் தண்டம் விதிப்பர்.

சென்னை அருங்காட்சியகத்தில் கஞ்சம் மாவட்டததைச் சேர்ந்த மீனவர்கள் வழிபடும் களிமண்ணாலான பொம்மை உருவங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.அவற்றைக் குறித்து திரு எச்.டெ.எ.சி.ரெய்ல்லி பின்வருமாறு கூறுகின்றார். "மீனவர்கள் வழிபடும் முக்கிய தெய்வங்களின் மாதிரியினை நான் உங்களுக்கு அனுப்பியுள்ளேன். பெர்உறாம்பூர் வட்ட ஆட்சியர் குயவர்களைக் கொண்டும், தச்சர்களைக் கொண்டும் இவற்றைச் செய்ய ஏற்பாடு செய்தார். கோபால்பூரைச் சேர்ந்த மீனவர்களுக்காக இவற்றைச் செய்பவர்கள் இந்தக் குயவர்களும் தச்சர்களுமேயாவர். நான் பல இடங்களில் மீனவர்கள் கோவில்களை நேரில் கண்டுள்ளேன். சில குடும்பங்களுக்கெனத் தனியே சில கோயில்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஒரு பக்கம் திறப்புள்ள பெரிய சட்டிகளைக் கவிழ்த்து வைத்து இவர்கள் அவற்றைக் கோவில்களாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் சில அலங்கார வேலைப்பாடுகளோடு கூடிய சட்டிகளாம். சில கோவில்கள் செங்கற்களையும் சுண்ணாம்பையும் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளன. நான் நேரில் பார்த்த கோயில்கள் அனைத்தின் வாயில்களும்

கடலை நோக்கியனவாகவே இருந்தன. இக் கோயில்களுள் இருவகை உருவங்கள் இடம்பெற்றுள்ளன. களிமண்ணால் செய்து வைக்கப்பட்டுள்ள தெய்வ உருவங்கள் அவற்றுள் ஒரு வகை இவற்றை மீன் பிடிக்கச் செல்லும் முன்னும் தொற்றுநோய் பரவியுள்ள காலங்களிலும் வழிபடுகின்றனர். மற்றொரு வகை மரத்தால் செதுக்கப்பட்ட இறந்துபோன மூதாதையர்களின் உருவங்கள். இவையும் களிமண் உருவங்களைப் போலக் கற்பனை நயம்படப் படைக்கப்பட்டிருந்தன. தெய்வ உருவங்களையும் மூதாதையர் உருவங்களையும் குடும்பத்திற்கு உரிய கோயிலில் ஒன்றாகவே வைத்திருந்தினர். நூற்றுக்கணக்கான தெய்வ உருவங்களுள் ஒரு குடும்பத்தினர் தங்கள் விருப்பத்திற்கும் சுவைக்கும் ஏற்ற தெய்வ உருவங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நான் அனுப்பியுள்ள உருவங்கள் வேங்கடராய பள்ளியைச் சேர்ந்த குயவனால் உருவாக்கப்பட்டு உப்புலாபதியினைச் சேர்ந்த தச்சனால் வண்ணம் தீட்டப்பட்டவை. இவ்விரு கிராமங்களும் கோபால்பூருக்கு அருகே உள்ளனவே. இவற்றைக் கோபால்பூர் பயணிகள் விடுதியில் வைத்துப் பிரகம்பர் வட்ட ஆட்சியர் சரிபார்த்துக் கொண்டிருந்த சமயம் அறுபது எழுபது மீனவர்கள் அங்குக் கூடி இவற்றை வழிபட்டதோடு தங்கள் தெய்வங்களைக் கொண்டு செல்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தனராம். இவர்கள் தங்கள் தெய்வத்திடம் கொண்டுள்ள பக்தியினைக் கேள்விப்பட்டுள்ள அரசு அத் தெய்வங்கள் சிலவற்றைச் சென்னையில் வைக்க ஆவல் கொண்டிருப்பதாகக் கூறி அவர்களைச் சமாதானப் படுத்தியதாக அந்த வட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

அருங்காட்சியகத்தில் உள்ள களிமண் உருவங்கள் வருமாறு:

பெங்காளிபாபு: தலையில் தொப்பி அணிந்து கருப்புக் குதிரைமேல் அமர்ந்துள்ள உருவம். மீனவர்களைக் காப்பாற்றும் காப்புத் தெய்வமான இது மீன்பிடிக்கச் செல்லும் அவர்களுக்கு நிறைய மீன் கிடைக்கவும் உதவுகின்றது. கஞ்சம் மீனவர்களுக்குப் பெங்காளி பாபுவிற்குமான இந்த உறவு வங்காளி ஒருவனைத் தெய்வமாக ஆக்கிப் போற்றும் பரந்த மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இத்தகைய வழிபாட்டின் தோற்றம் பற்றி ஆய்வதோடு எவ்வளவு காலமாக எதற்காக இவ்வாறு வங்காளி ஒருவனை வழிபட்டு வருகின்றனர் என்பதனை ஆய்வதும் சுவையான தகவல்களைத் தருவதாகலாம். வங்காளத்தின் ஆளுநரான சர் ஜார்ஜ் காம்பெல் வங்காளி அலுவலர்கள் இத்தகைய ஆராய்ச்சியில் ஆர்வம் அற்றவர்களாயினும் இத்தகைய ஆய்வுகளில் ஈடுபடுமாறு அவர்களை வற்புறுத்தி வந்தார்.

சாலாலம்மா: சிவப்புப் பாவாடையும் பச்சை மேல் சட்டையும் அணிந்துள்ள உருவம். மீனவர்களைக் காய்ச்சலிலிருந்து காப்பது.

ராசம்மா: வலக்கையில் ஒரு வாளினை ஏந்தியபடி யானை மீது வீற்றிருக்கும் பெண் உருவம். மலடிகளான பெண்களுக்கு மகப்பேறு அருள்பவள். தன் பக்தர்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது அவர்களுக்கு நிறைய மீன் அகப்படச் செய்வாள்.

யெரெனம்மா: வலக்கையில் வாளேந்தியபடி வெள்ளைக் குதிரையில் வீற்றிருக்கும் உருவம். மீனவர்கள் கடலில் மூழ்காமலும் பெரிய மீன்களுக்கு இரையாகாமலும் காப்பவள்.

பாகீரதம்மா: எட்டு அல்லது பன்னிரண்டு கைகளுடன் யானை மீது வீற்றிருக்கும் உருவம். இரவில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை மீட்க காப்பவள். காலரா, வயிற்றுப் போக்கு முதலிய தொற்று நோய்களிலிருந்து அவர்களைக் காப்பவள்.

நூக்காலம்மா: சிவப்புச் சட்டையும் பச்சைப் பாவாடையும் தரித்துள்ள இவள் மீனவர்களை பெரியம்மையிலிருந்து பாதுகாக்கின்றாள்.

ஒரு சந்தி அம்மவாரு: படகுகள் மூழ்காமலும் பழுதுறாமலும் காப்பவள்.

மகாதேவி: புலிமீது வீற்றிருக்கும் இவள் மீனவர்களைக் காலராவிரிருந்து காக்கின்றாள்.

வெய்யி கண்ணுல அம்மவாரு: ஆயிரங் கண்ணுடையாள் எனப் பெயர் பெற்றுள்ள இவள் பல துளைகளை உடைய பானையில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள நல்லெண்ணெய் விளக்கில் வதிபவள். மீனவர்களின் பொதுநலத்தைப் பேணும் தெய்வம்.

வாடரின் முக்கிய தெய்வம். ஒரு சண்டியம்மாவே. இவள் உருவத்தை வேப்ப மரத்தால் அமைக்க வேண்டும். இவள் நான்கு கைகளை உடையவள். கடற்கரையில் அமைந்துள்ள கோயில்கள் பலவும் இவளுக்கு உரியனவே. எக் காரணம் கொண்டும் இத் தேவதையினைக் கோபம் உறச் செய்தல் கூடாது. அவ்வாறு கோபம் உறுவளாயின் மீன் பிடி படகுகள் கவிழ ஏதுவாகும். இரவு நேரத்தில் இடைவிடாது கடலின் மீது இவள் பவனி வந்தவளாக இருப்பாள் எனக் கருதுகின்றனர். இராமசொண்டி என்பது இவளோடு உடன்பிறந்த ஆண் தெய்வம். ஒரு சண்டியினை ஒவ்வொரு குடும்பத்தினரும் தனியே வழிபடுகின்றனர். வழிபாட்டின்போது மலர்கள், இரண்டு துணிகள், ஒரு கோழி, ஒரு ஆடு, ஒரு புட்டி கள் அல்லது சாராயம் ஆகியனவற்றைக் கடற்கரைக்கு ஊர்வலமாக கொண்டு செல்வர். ஊர்வலம் புறப்படும் முன் பூசை போடுகின்றனர் வீட்டின் முன் மக்கள் கூடிப் பூசை போடுபவனையும் ஆட்டையும் பூசைபோடுபவன் வீட்டின் முன் கட்டப்பட்டுள்ள கம்பத்தோடு சேர்த்துக் கட்டுவர். அக் கம்பத்தின் முன்

சிறிய உருவிலான ஒரு படகு வைக்கப்படும். மன்னாரு எனப்படுபவன் இராமசொண்டியினை எழுந்தருளுமாறு வழிபட்டபின் அத் தெய்வம் அவனுள் புக அவன் தெய்வம் ஏறப்பட்டவன் ஆவான். ஒரு கோழியினைப் பலியிட்ட பின் மன்னாரு கம்பத்தின் முன் உள்ள சிறிய படகினைத் தலையில் சுமந்தவனாகக் கடற்கரையினை நோக்கிச் செல்வான். பின் ஒரு சண்டியினை எழுந்தருளுமாறு ஏத்திப் போற்றுவர். ஒரு சண்டி இராமசொண்டியினைப் போல அவ்வளவு எளிதில் எழுந்தருளமாட்டாள். அவர்களுள் ஒருவன் மீது அவள் வந்து ஏறும்வரை மீண்டும் மீண்டும் அவளை எழுந்தருளும்படி வேண்டுவர். ஆடு, கம்பம், ஒரு சொண்டிக்கான பானைக்கோயில் ஆகியனவற்றைக் கடற்கரைக்குக் கொண்டு செல்வர். அங்கு ஒரு சிறு மேடை அமைக்கப்படும். அம் மேடையின் மீது சுண்ணாம்பு பூசப்பட்ட பானைக் கோயிலை வைப்பர். அதனுள் தேவதையின் உருவம் வைக்கப்படும். அவளை வழிபட்டபின் ஆடு நான்கு கால்களையும் மடக்கித் தவழ்ந்தபடி நடுங்குமானால் அதனைப் பலியிடுவர். ஆடு அவ்வாறு செய்யவில்லையாயின் வேறு ஒரு ஆடு கொண்டு வரப்படும். ஒவ்வொரு குடும்பமும் இதுபோல ஒரு பானைக் கோவிலை வைப்பதால் அவை எண்ணிக்கையில் மிகுந்தனவாகக் கடற்கரையில் பல பர்லாங்கு தூரம் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கக் காணலாம்.

கடல் தேவதையான மருளுபோலம்மாவினை ஈச்சம் ஓலைகளாலான ஒரு கொட்டகையில் வைத்திருப்பர். இவர்கள் மிகுதியும் அஞ்சி வழிபடுகின்ற தேவதை பூலோகம்மா ஆவாள். இவளைப் புதைகாட்டில் வைத்து வழிபடுவர். நடுப்பகல் அல்லது நள்ளிரவு நேரத்திலேயே இவளுக்கான வழிபாடு நிகழ்த்தப்படும். கழுத்துப் பகுதி மட்டும் உடைக்கப்பட்ட ஒரு பானையில் இவளை எழுந்தருளச் செய்வர். அப் பானையின் நான்கு பக்கங்களிலும் நான்கு துளைகள் இடப்படும். அவை ஒவ்வொன்றுள்ளும் ஒரு இலைக்கொத்தினை நுழைப்பர். அந்த இலைக் கொத்துக்களின் முனைகளை ஒரு கயிற்றால் ஒன்றாக இணைத்துக் கட்டுவர். இவை பார்ப்பதற்கு ஒரு சிறு பந்தலைப் போலக் காட்சி தரும். ஒரு வெள்ளையும் கருப்புமான சேலை அணிந்தவனான மன்னாரு அந்தப் பானையோடு ஏனுக சக்தியினை ஏற்றப்பட்டிருக்கும் பானையினையும் சுமந்தவனாகச் செல்வான். பூலோகம்மாவின் பானையினை அவன் இடப் பக்கம் கக்கத்தில் வைத்தவனாகவும் ஏனுக சக்திப் பானையினைத் தலையில் வைத்தவனாகவும் செல்ல பானைகள் புதைகாட்டுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். அவ்வாறு செல்லும்போது வழியில் ஒருவன் தெய்வம் ஏறப்பட்டவனாகப் பின்வரும் கதையினைக் கூறுவான்: நான் பூலோக சக்தி, பல யுகங்களுக்கு முன் நான் ஒரு முட்டையாக இருந்தேன். அதில் மேற்பாதி ஆகாயமாகவும் கீழ்ப்பாதி பூமியாகவும் ஆயிற்று. அதன்பின்

நான் அந்த முட்டையிலிருந்து வெளிவந்தேன். சந்திரனே என் நெற்றியில் உள்ள பொட்டு. சூரியன் நான் முகம் பார்க்கும் கண்ணாடி. நான் பிறந்த ஏழு கடிகைகளுக்குப் பின் மேற்கே இருந்து காற்று எழுந்தது. இச் சமயத்தில் நான் ஒரு கன்னியாக வளர்ந்துவிட்டேன். எனவே நான் காற்றைத் தழுவினேன். அதனால் நான் கருவுற்றேன். ஒன்பது கடிகைகளுக்குப் பின் பிரமன் பிறந்தான். அவன் பெரியவனாக வளர்ந்தபின் நான் அவனிடம் என்னைத் தழுவும்படி வேண்டினேன். அவன் அதற்கு உடன்படவில்லை. எனவே நான் அவனைக் கல்லாகும்படி சபித்தேன். விட்டுணுவிற்கும் இத்தகைய கதியே நேர்ந்தது. நான் என் மூன்றாவது கண்ணையும், தோளில் உள்ள பையனையும், பிரம்பினையும் தந்தால் என் விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சிவன் கூறினான். இதனை நான் தந்தவுடன் என் சக்தியினை இழந்தேன். பின் தண்ணீர் முழுவதும் வற்றிவிட நான் சேற்றால் மூடப்பட்டேன். சிவன் மீண்டும் தண்ணீர் வரும்படி செய்தான். நான் அதில் மூன்று கையளவு எடுத்து அதனை என்மீது தெளித்துக் கொண்டேன். மூன்றாவது முறை நான் தண்ணீர் தெளித்துக் கொண்டபோது அது என்னை எரித்துச் சாம்பலாக்கியது. இந்தச் சாம்பலிலிருந்து சரஸ்வதி, பார்வதி, பூலேகம்மா ஆகியோர் படைக்கப்பட்டனர். நான் தான் அந்தப் பூலோகம்மா. நான் சிவனிடம் ஒரு வரம் கேட்டேன். அவன் என்னை இந்தப் பூரியினுள் தங்கி இருக்குமாறு பணித்து மூன்று கோடுகளை இட்டு என்னை வெளிவாராதவளாக இருந்து கோழிகள், ஆடுகள் ஆகியவற்றைப் பலியாகப் பெற்றுக்கொள்ளும்படி கூறினான். இவ்வாறு கதை கூறி முடிக்கப்பட்ட பின் மன்னாரிடம் ஒரு கோழிக் குஞ்சினைத் தருவர். அவன் அதனைக் கடித்துக் கொல்வான். புதைகாட்டில் வழிபாடு நிகழ்த்தியபின் ஒரு ஆட்டினைப் பலியிடுவர். இத் தேவி பூமிக்குள்ளே புதைந்து கிடப்பவளாகையால் இவளுக்கெனக் கோயில்கள் எடுக்கப்படுவதில்லை இவளுக்கென உருவம் ஏதும் அமைக்கப்படுவதும் இல்லை. ஒரு சிறிய பந்தலி ட்டு அதனருகே அப்பானையினை வைப்பர்.

கரிமூக்கம்மா என்ற தேவதையினை ஒரு காகிதம் அல்லது மரப்பலகையாலான முகமூடியில் கரியினைத் தடவி எழுந்தருளிவிப்பர். அம் முகமூடியிலிருந்து நாக்குத் தொங்கியபடி காட்சி தரும். இவளோடு ஒன்றாக இருப்பவன் இவளோடு உடன்பிறந்தவனான பாய்தாரி. ஈசுவரனுடைய வேண்டுகோளுக்கு ஏற்பப் பிரமன் தன் முகத்திலிருந்து படைத்த பிரமனோடு உடன்பிறந்தவள் இவள். பொலம்மா, மருதி பொலி, கொத்தபொலி, ஜங்கபொலி நுகபொலி, ருஞ்சம்மா, குண்டம்மா ஆகியோர் இவ்வாறு பிரமனால் படைக்கப்பட்டவர்களாவர். களிமூக்கம்மாவின் கோயில் வைக்கோலால்

அமைக்கப்பட்ட தாழ்வான கொட்டகையாகும். இவளுக்கு வழிபாடு நிகழ்த்தும்போது மன்னாரு ஒருவன் பெண்ணைப் போலச் சேலை கட்டியவனாக முகமூடியினைத் தன் முகத்தின் மீது தரித்தவனாக அத் தெய்வத்தின் குறியீடாக இருப்பான். களிமக்கம்மாவின் உருவம் பொறிக்கப்பட்ட கற்பலகை ஒன்றினைப் பெண் ஒருத்தி எடுத்துச் செல்வாள். கல்லில் உருவமாக அமைத்து வழிபடப்படும் தேவதை இவள் ஒருத்தியேயாவாள், இவளுக்குப் பன்றிகளைப் பலியிடுவர்.

பெத்தம்மா அல்லது பொலம்மாவினை மரத்தாலான பொம்மை உருவில் வைத்து வழிபடுவர். இவளோடு கூட மருதியம்மாவையும் ஒன்றாக வழிபடுவர். பெத்தம்மாவிற்கு ஆடு அல்லது மறியோடுகூட ஒரு பானை பாலையினையும் படைப்பர். மருதியம்மாவிற்கு ஒரு பன்றியினைப் பலியிடுவர். வழிபாடு நடத்தப்படும் இடத்திற்கு மக்கள் ஊர்வலமாகச் செல்லும்போது; மருதியம்மாவாகக் கருதப்படுபவன் மீது ஒரு விளையாட்டு வண்டியினைக் கட்டுவர். மற்றொருவன் ஒரு விளையாட்டுப் படகினை உடன் எடுத்துச் செல்வான். வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் அவனோடு சேர்த்துக் கட்டப்பட்டுள்ள வண்டியினை அகற்றிவிட்டு ஒரு பன்றியினை வயிற்றைக் கறிப் பலியாக இடுவர்.

சமலம்மா அமைதியான தேவதை. காய்கறிகளை பலியாகப் பெறும் இவளுக்கு உயிர்ப் பலியினைத் தருதல் கூடாது. குதிரையில் வீற்றிருக்கும் தெய்வமாக முன்பு கூறப்பட்ட வங்காளி பாபுவோடு தொடர்புடையவள் இவள். இவள் உருவத்தைச் சிறுமியரே எடுத்துச் செல்ல வேண்டும். பெண்கள் அதனைத் தொடுதல் கூடாது.

வாடர் வழிபடும் சக்தி தேவதைகளுள் குறளு சக்தி குறிப்பிடத்தக்கவள். இவளுக்கு வழிபாடு இயற்றுபவனை கட்டை வண்டி ஒன்றோடு சேர்த்துக் கட்டுவர். அந்த வண்டியின் நடுவிலும் நான்கு மூலைகளிலும் கழிகளை இணைப்பர். பெண்ணைப் போலச் சேலையணிந்து கொண்டு அவன் அந்த வண்டியினை இழுத்துச் செல்வான். அதனை அவன் மூன்று முறை வட்டமாக இழுத்துச் செல்வான். அதன்பின் அந்த வண்டியில் மூலைகளில் இணைக்கப்பட்டுள்ள கழிகளில் நான்கு கோழிக் குஞ்சுகளைச் சொருகுவர். வண்டியின் நடுவில் உள்ள கழியில் ஒரு பன்றியினைச் சொருகுவர்.

முன்பெல்லாம் தெய்வங்களின் உருவங்களைக் களிமண்ணாலேயே செய்து வந்தனர். அனுபவத்தில் மரத்தால் செய்யப்படும் உருவங்கள் நீண்ட

நாள்கள் நிலைத்திருப்பதாகக் கண்டதாலும் அடிக்கடி மாற்றப்பட வேண்டிய தேவையில்லாததாலும் மரத்தாலேயே இப்பொழுது உருவங்கள் அமைக்கப்படுகின்றன. இவர்கள், வழிபடும் தெய்வங்கள், தேவதைகள் ஆகியவற்றின் உருவத்தோடு இறந்த தங்கள் உறவினர்கள் உருவங்களையும் பெத்த தினத்திற்குப் பின் வைத்து வழிபடுகின்றனர்.

மன்னார்கள் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புக்கு உரியவர்கள். இவர்கள் வழிபாடு நடத்துவதோடு மக்களின் பல ஐயங்களையும் போக்கி உதவுகின்றனர். ஒருவனுக்குப் போதுமான அளவில் மிகுதியாக மீன்கள் கிடைக்கவில்லையாயின் தன் கெட்ட காலத்தின் காரணத்தை அறிந்துகொள்ள மன்னாரிடம் செல்வான். கல்லொன்று கட்டப்பட்டுள்ள கயிற்றினைத் தன் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் மன்னார் பல தேவ, தேவதைகளின் பெயரைச் சொல்லி அவர்களை எழுந்தருளுமாறு வேண்டுவான். ஒரு பெயர் சொல்லப்படும் போதெல்லாம் அந்தக் கல் அப்படியும் இப்படியுமாக ஊஞ்சலைப் போலவோ அல்லது வட்டமடித்தோ ஆடும். எந்தத் தெய்வத்தின் பெயரைக் கூறும்போது கல் ஊஞ்சலைப் போல அசைந்து ஆடிகிறதோ அந்த தெய்வமே அவனுடைய துன்பத்திற்குக் காரணம் எனக் கூறி உரியவகையில் அந்தத் தெய்வத்திற்கு வழிபாடு இயற்றும்படி கூறுவான்.

வடக்குப்புரத்து - vadakuppurathu

திருவாங்கூரைச் சேர்ந்த மாரான்களுக்கு உரிய மற்றுமொரு பெயர். கோயிலின் வடக்குப் பக்கத்துக்கு உரிமை உடையவர் என்பது இதன் பொருள்.

வத்ர - Vadra

வத்ர, வத்ரங்கி, வத்ல என்ற பெயர்கள் தெலுங்கு கம்சாளரின் ஓர் உட்பிரிவினருக்கு உரியவை. இவர்கள் தச்சுத் தொழிலைத் தங்கள் குலத் தொழிலாக மேற்கொண்டு செய்து வருபவர்கள். தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: தேர் வேலை செய்யும் தச்சர் எனக் கூறப்படும் இவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் பல இடங்களில் மிக்க கலை நயம் வாய்ந்த மரச் சிற்பங்கள் செய்யும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். தஞ்சாவூர், மன்னார்குடி, திருவாவடுதுறை, திருவடி ஆகிய இடங்களிலும் மற்றும் சில இடங்களிலும் இவர்கள் காணப்படுகின்றனர். திருவடியில் காணப்படுவோர் வத்திகளாவர். கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த வத்திகளும் மரத்தில் செதுக்குவேலை செய்கின்றனர். சில சமயங்களில் இவை மிகுந்த தொழில் நுட்பம் வாய்ந்தனவாக அமைகின்றன.

வடுகன் - Vadugan

1891 கணக்கெடுப்பில் *180,884* பேர் தங்களை வடுகன் எனப் பதிந்து கொண்டுள்ளனர். இச் சொல் வடக்குப் பகுதியினைச் சேர்ந்தவன் அல்லது தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும். எனினும் அன்றாட வழக்கில் இது பலிசரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. வடுகருள் *56,380* பேர் தங்கள் உட்பிரிவினைக் கம்மவார் அல்லது கம்மர் எனப் பதிந்துள்ளதாக எனக்குத் தெரிய வருகின்றது. இச் சொல் தெலுங்குச் சாதியார் பலரையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. *1901* கணக்கெடுப்பில் தங்களை வடுகன் எனப் பதிந்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை *95,924* ஆகக் குறைந்துவிட்டது. தெலுங்கு பேசுபவன் எனத் மொழியடிப்படையில் வழங்கும் இச் சொல்லினைத் தமிழ் மாவட்டங்களில் வாழும் கம்மர், காபுகள், பலிசர் ஆகியோர் தங்கள் சாதிக்கு உரிய பெயராகத் தவறாகப் பதிந்து கொண்டுள்ளனர் எனக் கணக்கெடுப்பு அறிக்கைக் கண்காணிப்பாளர் குறிப்பிடுகின்றார். சேலம் மாவட்டக் கையேட்டில் வடுகன் என்பது தமிழ் மாவட்டங்களில் தெலுங்கு பேசும் ஒட்டர், பெஸ்தர் முதலிய எல்லாச் சாதியாரையும் குறிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

சமூகப் படிநிலையில் கம்மாளரோடு ஒப்ப வைத்து எண்ணப் படுபவர்களாகப் பாலக்காட்டிலும் அதனை அடுத்துள்ள வள்ளுவ நாட்டுப் பகுதிகளிலும் காணப்படும் மக்கள் தாய உடைமை உரிமை பேணும் வெளியாரான வடுகன்கள் உள்ளனர் என மலபார் மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டு புறமணக்கட்டுப்பாடு உடைய பிரிவினராக உள்ளனர். இவற்றுள் ஒன்று மற்றதைவிடத் தகுதியில் தாழ்ந்ததாக கருதப்படுவதோடு சாதியாருக்குத் தீட்டு நீக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இவர்கள் குடுமி வைத்துக் கொள்ளாமல் தங்கள் தலைமுடியினைக் குறுகக் கத்தரித்துக் கொள்கின்றனர் என மலபார் மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

1542 முதல் *1544* வரையான காலக்கட்டத்தில் சேவியர் தனது குறிப்புகளில் அடிக்கடி படுகொர் என்பவர்களைப் பற்றி கூறுகின்றார். இவர்கள் அரசுக்குச் சேர வேண்டிய வரியினை வசூலிப்பவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. சேவியரால் கிறித்தவர்களாக மதம் மாற்றம் செய்யப்பட்ட திருவாங்கூரைச் சேர்ந்த மீனவர்களை இவர்கள் மிகுந்த கொடுமைக்கு உள்ளாக்கினர் எனக் கூறப்படுகிறது.* முனைவர் கால்டுவெல் சேவியரின் கடிதங்கள் பற்றிக்

---

* காலரிட்ஜ் பாதிரியார் எழுதிய புனித பிரான்சிஸ் சேவியர் வாழ்க்கையும் கடிதங்களும்.

Father colesidge's Life and Letters of St.Francis Xavier.)

குறிப்பிடும்போது* இந்தப் படுகெர் வடக்கேயிலிருந்து வந்த வடுகர் என்பதில் ஐயமில்லை. சேவியர் காலத்தைச் சேர்ந்த இயேசு சபை எழுத்தாளர் ஒருவர் இவர்களை நாயர்கள் எனத் தவறாகக் கூறியுள்ளார். உண்மையில் இவர்கள் மதுரையிலிருந்து வந்த நாயக்கன்களே எனக் கூறியுள்ளார். இயேசு சபையார் இவர்களை நாயர்கள் எனக் குறிப்பிட்டது சரியானதென்றே நான் கருதுகின்றேன். *1568*இல் ஒரங்டினொ பாதிரியார் இந்தப் படுகெர் பற்றிக் குறிப்பிடும்போது இவர்களை மதுரைக்கு வடக்கேயுள்ள பிசயநகருக்கு அருகேயுள்ளதான அடிக்கடி குறிப்பிடுவதான விசயநகரமேயாகும். மலபாரைச் சேர்ந்த நாயர்களின் தோற்றம் விசயநகரத்தைச் சேர்ந்த நாயக்கன்களோடு நெருங்கிய தொடர்புடையது என்பதற்குக் குறிப்பிடத்தக்க அளவு சான்றுகள் உள்ளன எனத் திரு எல்.மூர். குறித்துள்ளார்.** *(பார்க்க: நாயர்)*

வடுகாயன் - Vadugayan (Telugu shepherd)

கோல்லர்களுக்கான தமிழ்ப் பெயர். தெலுங்கு ஆயர் எனப் பொருள்படுவது.

வகிரி அல்லது வாகிரிவாலா - Vagiri or Vagirivala

பார்க்க: குருவிக்காரன்.

வாகிடி - Vagiti (doorway or courtyard)

ஜோகிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். வாசல் எனப் பொருள்படுவது.

வகுணியன் - Vaguniyan

பார்க்க: வயணி

வைத்தியன் - Vadiyan

வைத்தியன் அல்லது பைத்தியன் மருத்துவர்களைக் குறிப்பதாகும். க்ஷெரகர், பில்லவர், புள்ளுவன் ஆகிய சாதிக்குரிய பட்டப்பெயராக உள்ள இதனைக் கணக்கெடுப்பின் போது சில சமயங்களில் பறையருக்கு உரிய தொழில் தொடர்பான ஓர் உட்பிரிவாகவும் பதிந்துள்ளனர்.

---

* திருநெல்வேலியின் வரலாறு. (History of Tinnevelly.)

** மலபார் சட்டமும் வழக்கங்களும், மூன்றாம் பதிப்பு, *1905*
(Malabar Law and custom, 3rd ed., 1905)

கிராமத்து மருத்துவர்கள் வைத்தியர்கள் எனப்படுவர். இவர்கள் உயர்ந்த அல்லது தாழ்ந்த எந்தச் சாதியினைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். நாடி பார்த்தே வைத்தியன் நோயின் கூறுகளைக் கண்டு கூறுகின்றான். நீண்ட நேரம் நாடி பார்த்தபின் வாதம், பித்தம், சிலேசுமம் ஆகியவற்றுள் ஒன்று அதிகமாகி இருப்பதாகக் கூறுவான். வாதம், பித்தம், உஷ்ணம், சிலேசுமம், காரகம், மேகம் அல்லது மீகம், சப்த்தியம் முதலிய சொற்களே இவன் அடிக்கடி பயன்படுத்துபவை. உயர்சாதியினைச் சேர்ந்த பெருமக்கள் தங்கள் கையினை வைத்தியன் நேரே பிடித்துப் பார்த்து அனுமதிப்பதில்லை. நோயாளியின் மணிக்கட்டின் மீது ஒரு பட்டுத்துணியினைப் போட்ட பிறகே அதனை அவன் பிடித்துப் பார்க்க இவர்கள் அனுமதிப்பர். ஆண்களுக்கு வலக்கையிலும் பெண்களுக்கு இடக்கையிலும் நாடி பார்ப்பர். வைத்தியர்கள் சிலர் நாடி பார்க்கும் முன் கைவிரல்களில் சொடுக்கு முறிப்பர். சிலர் எல்லா வகை நோய்களுக்குமான பொது மருத்துவம் பார்க்கின்றனர். காய்ச்சல், மூலம், காமலை, கிரந்தி, முடக்குவாதம் முதலியவற்றுக்குச் சிறப்பாக மருத்துவம் பார்ப்பவர்களும் இவர்களிடையே உள்ளனர். இவ்வாறு சிறப்பாகத் தனித்த நோய்களுக்கு வைத்தியம் பார்ப்பவர்கள் பரம்பரையாக அதனை மேற்கொண்டு வருபவர்கள். நோய்களுக்கு வைத்தியர்கள் பொடி, மாத்திரை, கஷாயம், ஆகியனவற்றைத் தருகின்றனர். இம் மருந்துகள் கிராமங்களில் உள்ள நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கின்றன. அல்லது இவற்றைக் கிராமத்தைச் சேர்ந்த மூலிகை சேகரிப்பரிடமிருந்து பெறலாம். நாட்டு மருந்துகளுள் இஞ்சி, மிளகு, வேம்பு, வசம்பு, திப்பிலி, பெரு இரட்டை முதலிய நாட்டு மருந்துச் சரக்குகளையே இவர்கள் பயன்படுத்துகின்றனர். நீண்ட நாள்களுக்கு மருந்து சாப்பிட வேண்டியிருந்தால் இந்த நாட்டு மருந்துச் சரக்குகளைச் சேர்த்து லேகியமாகச் செய்து கொடுக்கின்றனர். பின்வாதி, கூசபந்தம், பூரணாதி போன்றவை இவர்கள் தரும் லேகியங்களுள் சிலவாம். சுவர்ண பஸ்பம், பவள பஸ்பம், சங்கு பஸ்பம் முதலிய சில பஸ்பங்களையும் சில வைத்தியர்கள் தயாரித்துத் தருகின்றனர். மிகுந்த தொகை செலவழித்துச் செய்யப்படும் சிறப்பான மாத்திரைகளையும் சிலர் செய்து வைத்திருப்பர். இவை பல தலைமுறையினரால் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய மாத்திரைகள் கடுகளவினவாக மிகக் குறைவாகப் பயன்படுத்தப்படுவதால் நீண்ட காலத்துக்கு வைத்துப் பயன்படுத்த முடிகின்றது. ஒரு சொட்டுத் தேன் அல்லது வெண்ணையினை ஒரு கல்லின் மீது இட்டு அதில் இந்த மாத்திரையை உரைத்த பின் அந்தத் தேனையோ வெண்ணையினையோ வழித்து நோயாளிக்குத் தருவர். இவர்கள் நோயாளிகளுக்குக் கஞ்சி மட்டும் உப்பின்றி உட்கொள்ளுமாறு பத்தியம்

இருக்குமாறு பணிப்பது வழக்கம், லங்கணம் பரம ஔடதம் என்பது இவர்களிடையே வழங்கும் பழமொழி. காமலை வந்தவர்களுக்கு தயிரில் கீழாநெல்லிக் (*Phyllanthus Niruri*) கொழுந்தினை அரைத்துக் கலக்கிக் கொடுப்பது யாவரும் அறிந்த ஒரு நாட்டு வைத்திய முறையாகும்.

நாட்டு வைத்தியர்கள் கண்படலம் அகற்றும் முறைபற்றிய தனது மிகச் சுவையான குறிப்பில்* மேஜர் ஆர்.எச்.எல்லியட் ஐ.எம்.எஸ். பின்வருமாறு எழுதுகின்றார்: கிராமத்து மக்கள் மிக்க மடமையும் அறியாமையும் நிரம்பியவர்களாக இருப்பதால் ஒரு கண்ணினை ஆங்கில வைத்திய முறையை மேற்கொண்டுள்ள மருத்துவ மனையில் காட்டிவிட்டு மற்றொரு கண்ணை நாட்டு வைத்தியரிடம் காட்டுவர். மருத்துவமனைக்கு முதன்முதலாக வரும் கிராமத்தான் தான் நாட்டு வைத்தியனிடம் செல்லவேயில்லை என அடித்துக் கூறுவான். நாட்டு வைத்தியனால் பாழ்படுத்தப்படாத அவனுடைய மற்றொரு கண்ணை நல்ல முறையில் அறுவைச் சிகிச்சை செய்து குணமாக்கிய பின் அவன் உண்மையினைச் சில சமயங்களில் ஒப்புக் கொள்வான் தென்னாட்டில் இரண்டு வகை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. கடைவீதிகளில் தொடர்ந்து நீண்டகாலம் தங்கியிருப்பவர்களாகக் கண் வைத்தியம் செய்வோர் ஒருவகை. கண் வைத்தியம் செய்தபடி ஊர்ஊராகச் செல்லும் நாடோடி வைத்தியர்கள் மற்றொரு வகை. இவ்விரு வகை வைத்தியர்களும் முகமதியர்களே, முன்னவர்கள் பின்னவர்களைவிடக் கண்ணினை குணப்படுத்துவதில் ஓரளவு திறமையுடையவர்கள். இவர்களை அனுபவம் மிக்கவர்கள் எனக் கூறுவர். பின்னவரான நாடோடிகள் நீண்டநாள்கள் ஓரிடத்தில் தங்குவதில்லை. பல நோயாளிகளை ஒன்று திரட்டி ஒரே சமயத்தில் அவர்களுக்கு வைத்தியம் செய்து முடித்து விட்டுத் தாங்கள் இழைத்த தீங்கு வெளிப்படும் முன் இவர்கள் அந்த ஊரைவிட்டுக் கிளம்பி விடுவார்கள். இந்த இருவகைப் பிரிவினரும் கிருமிகள் இல்லாது அழிக்க முடியும் என்பதையும் கிருமி நாசினிகள் உண்டு என்பதனையும் அறியாதவர்களே. இவர்கள் கண்படலம் அகற்ற தூய்மையற்ற ஊசியினையோ மரத்தாலான பற்றுக் கரண்டியினையோ பயன்படுத்துகின்றனர். இவர்கள் கிருமிநாசினி எதனையும் பயன்படுத்துவதில்லை. பத்து நாள்கள்வரை கண்களைக் கட்டி வைத்திருப்பர். இதனால் கண்ணில் உண்டாகும் வலியினை மாற்றிவிட மற்றொரு இடத்தில் அரிப்பை உண்டாக்கி அவர்கள் கவனத்தைத் திருப்பி விடுவது இவர்கள் வழக்கம். இவர்களிடம் வைத்தியம் பார்த்துக் கண்பார்வை இழந்தவர்கள் மேல்நாட்டு வைத்திய முறையினை நடைமுறைப்படுத்தும்

* இந்திய மருத்துவ விவரக் குறிப்பு (Indian Medical Gazetteer XLI. 8, 1906.)

மருத்துவமனைக்கு வர வெட்கப்பட்டவர்களாக வராமலேயே இருந்து விடுவது வழக்கம். ஒரு வைத்தியன் நல்ல முறையில் வைத்தியம் பார்த்து வெற்றி பெறவில்லையாயின் அவனிடம் வரும் நோயாளிகள் யாரும் இல்லாது போக அவன் தொழில் தானே முடங்கிவிடும் எனக் கூறப்படுகிறது. இந்திய மக்களின் மனப்போக்கினைச் சரியாகப் புரிந்துகொள்ளாதவர்களும் அடிமட்டத்தினராக உள்ள மக்களின் அறியாமையைப் புரிந்துகொள்ளாதவர்களுமே மேற்கண்டவாறு கூறுவர். கிராம மக்கள் பகட்டான போலி விளம்பரங்களுக்கு எவ்வாறு எளிதில் பலியாகி விடுகின்றனர் என்பதனை அவர்களோடு கூட ஒன்றாகத் தங்கி வாழ்ந்த மேற்கொண்டுள்ள இவனுடைய உறுதியான தன்னம்பிக்கையும் பல தலைமுறையினரை ஒருங்கே துன்பத்தைத் தேடிக் கொள்ள வழி வகுத்துவிடுகின்றது. அறியாமை மிகுந்த போலி மருத்துவன் அழுக்கு நிரம்பிய ஊசியினைத் தூசி மிகுந்த கடைவீதியில் அமர்ந்து இவன் குருட்டுக் கண்ணில் விட்டுத் துழவும் காட்சியானது நாம் இந்த மண்ணில் காலடி வைத்த நாள் முதலாய் நமது கண் அறுவைக் சிகிச்சையாளருக்கு மிகுந்த வேதனையைத் தந்து வருகின்றது. நூற்றுக்கு தொண்ணூறு பேருக்குத் திரும்பப் பார்வையைத் தரும் எல்லாவகை வசதிகளையும் கொண்ட ஆங்கில முறை மருத்துவமனைக்கு அருகே கடைவீதியில் இன்று போலி மருத்துவர்கள் அமர்ந்திருக்க காணலாம். இவர்கள் கண் அறுவைச் சிகிச்சைக்கு மூன்று பென்சு முதல் எட்டு சில்லிங் வரை கட்டணமாகப் பெறுவதோடு ஆடு அல்லது கோழியினையும் அன்பளிப்பாகப் பெறுகின்றனர். இந்த அன்பளிப்புக்களைத் தெய்வத்திற்குப் பலியிடுவதற்காகப் பெறுவதாகக் கூறும் அவர்கள் அதனைக் கறி சமைத்தே உண்கின்றனர் என நான் உறுதிப்படக் கூறுவேன். விதிப்படி நடக்கட்டும் என வைத்தியம் பார்க்கும் இவர்கள் காவிநிறக் கந்தலைப் பயன்படுத்தியே நோயாளியின் வீங்கிய கண்ணிலிருந்தான சீழினைத் துடைக்கின்றனர். இந்த வண்ணத் துணியில் சீழும் இரத்தமும் இருப்பது மற்றவர்களுக்குப் புலப்படாதாகையால் நோயாளிகள் ஏதும் இல்லை என நினைத்து விடுகின்றனர். தான் கண்ணை மூடிக் கொண்டால் தனக்கு ஆபத்து ஏதும் வராது என நினைக்கும் நெருப்புக் கோழியின் கதையினைப் போல மருத்துவனிடம் கண்மூடிகளாகச் செல்லும் இவர்கள் இறுதியில் வாழ்க்கைக்கு இன்றியமையாத முக்கியமான உறுப்பினை இழந்தவர்களாகின்றனர்.

நம்பூத்ரி பிராமணர்களிடையே உள்ள பல்வேறு பிரிவுகளைப் பற்றிக் கூறும்போது* வைத்தியர் பிரிவினரான மருத்துவர்கள் மூசாடுகள்

* கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை, *1901*
(Cochin Census Report, 1901.)

எனப்படுகின்றனர். இவர்கள் மருத்துவம் படித்து அதனைப் பின்னர் தொழிலாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மருத்துவத் தொழிலை மேற்கொள்பவர்கள் அறுவைச் சிகிச்சையினையும் செய்யும் கட்டாயத்துக்கு உள்ளாகிக் குருதியினைச் சிந்த நேரிடுவதால் மூசாடுகளான இவர்கள் சற்றே தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்திய வைத்தியர்கள் பற்றிய மேலும் சில செய்திகளைக் குசவர்கள் மற்றும் மாதுலர் பற்றிய தலைப்புகளிலான கட்டுரைகளில் காணலாம்.

வைகானசர் - Vaikhanasa

வைகானச முனிவரைப் பின்பற்றுபவர்கள். இவர்கள் தெலுங்கு நாட்டில் அர்ச்சகப் பிராமணர்களாக இருந்து வருகின்றனர்.

வைரவன் கோயில் - Vairavan Kovil

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய கோயில் பிரிவுகளுள் ஒன்று.

வைராவி - Vairavi

பைராகி, வைராகி என்பனவற்றுக்குச் சமமான பெயர். பண்டாரங்களின் ஓர் உட்பிரிவு. இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலேயே காணப்படுகின்றனர். தானியங்கள் அளப்பதும் கிராம தேவதைகளின் கோயில்களில் பூசை செய்வதும் இவர்களுடைய தொழில் எனப் வைராசிகளைப் பற்றி *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் வைராவிகள் மேளக்காரன் சாதியினைச் சேர்ந்தவர்கள் எனப்படுகின்றனர். இவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்களில் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

வைசியர் - Vaisya

மனு வகுத்துள்ள நான்கு வருணத்துள் மூன்றாவது வருணத்தார். திராவிட இனத்தவர்களான வைசியப் பிரிவினர் எனத்தனியே உள்ளனரா என்பது ஐயத்திற்கு இடமானதே. செட்டி என்ற பட்டப்பெயர் தரித்த வணிகத்தில் ஈடுபட்டுள்ள சாதியாரான கோமட்டிகள் போன்றவர்களைப் பிராமணர்கள் வைசியர்களாக ஏற்று நடத்துகின்றனர். எனினும் பிராமணர்கள் வேதத்தில் இரு

பிறப்பாளர்களுக்கு மட்டுமே உரியதென விதிக்கப்பட்டுள்ள சமயச் சடங்குகளை இவர்கள் மேற்கொள்ள உரிமை இல்லை எனவும் புராண நெறிப்பட்ட சடங்குகளையே இவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறுவர். முன்பு தங்களை நாயர்கள் எனக் கூறிக் கொண்ட மலபாரைச் சேர்ந்த முத்தான்கள் அண்மையில் தங்களை மேலும் உயர்த்திக் கொண்டவர்களாக வைசியர் எனப் பதிந்து கொண்டுள்ளதோடு வைசியருக்கு உரிய பட்டப்பெயரான குப்தா என்பதனையும் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் பூணூல் அணிவதோ வேதவிதிகளின்படியான சடங்குகளை நிகழ்த்துவதோ இல்லை. இவர்களைத் தொடுவதால் தாங்கள் தீட்டுக்கு உள்ளாவதாக நாயர்கள் கருதுகின்றனர் எனத் திரு பிரான்சிஸ் *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறியுள்ளார். வேளாளர் சிலரும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளும் தங்களைப் பூ வைசியர் எனக் கூறக்கொள்வதாக மேலே சுட்டிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. காணீகர் சிலரும் தங்களைத் தர்மசிவாச்சார் வைசியர் என அழைத்துக் கொள்கின்றனர் என *1891* மைசூர் மாநில கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. கன்னடம் பேசும் எண்ணெய்ச் செக்காட்டும் வைசியரைப் போலவே தமிழ்நாட்டு வாணியன்களும் தங்களை வைசியர் என அழைத்துக் கொள்கின்றனர். வைசிய பிராமணன் என்ற சொல் விசித்திரமானதொரு கலப்புச் சொல்லாகத் தெரிவதாக *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. கொங்கணி வாணியர்கள் இப் பெயராலேயே தங்களை அழைத்துக் கொள்கின்றனர். தங்களைச் சமணசமய வைசியர் எனக் கூறிக்கொள்ளும் பாணியன்களின் சிறு குடியிருப்பு ஒன்று கொச்சி மாநிலத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.* சென்னை காலாண்டு பொது மக்கள் பதிவு அறிக்கையில் செட்டி, செட்டியார் என்ற பட்டப்பெயர்கள் தரித்த பல சாதியினரும் வைசியர் எனப் பதியப்பட்டுள்ளது.

வச்சிரம் - Vaijira (diamond)

தொரெயரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

வக்கலிகர் - Vakkaliga

பார்க்க: ஒக்கிலியன். (See: Okkiliyan)

---

* என். சங்குண்ணி வாரியர், இந்தியத் தொல்லியல், *1892.* (N.Sankuni Wasiar, Ind,.Ant.XXI, 1892).

வாலகதவர் - Valagadava

தென் கன்னடத்தைச் சேர்ந்த சப்பாலிகர், மொகிலி, பாத்ரமேலர் ஆகிய இசைவாணர்களாக உள்ள சாதியாருக்கான தொழில் தொடர்பான பெயர்.

வலை - Valai (net)

வலையினைப் பயன்படுத்தி வேட்டையாடும் பறையர் பிரிவுக்கு உரிய பெயர் இது எனக் கூறப்படுகிறது. வலையர் என அழைக்கப்படும் அம்பலக்காரர் கங்கை ஆற்றில் சிவனுடைய மோதிரத்தை மீன் ஒன்று விழுங்கியபோது அதனைப் பிடிக்கத் தங்கள் மூதாதையருள் ஒருவனே முதன்முதல் வலையினைக் கண்டுபிடித்ததாகக் கூறிக் கொள்கின்றனர்.

வளையல் - Valaiyal

கண்ணாடி வளையல் விற்போரான காசுல பலிசருக்குச் சமமான தமிழ்நாட்டுக் கவரை சாதியாரின் உட்பிரிவு.

வலையர் - Valaiyan

மதுரை மாவட்டக் கையேட்டில் *(1868)* வலையரைப் பற்றிக் கூறியிருப்பது வருமாறு:

"வலையர் சமூகப் படிநிலையில் தாழ்ந்த இழிந்த சாதியார். வலை என்ற சொல்லிலிருந்து இவர்கள் சாதியின் பெயர் வந்ததாகக் கருதப்படுகிறது. காடுகளில் வலைவிரித்து விலங்குகளைப் பிடித்து வருவதையே தொடர்ந்து இவர்கள் தொழிலாகக் கொண்டிருப்பதாலும் இப்பெயருக்கு உரியராகின்றனர். இவர்களுள் பலரும் இன்று வலையை நம்பியே பிழைப்பு நடத்துகின்றனர். சிலர் மீன் பிடிக்கின்றனர். சிலர் இரும்பு அடிக்கும் உலைக்களம் வைத்துள்ளனர். பலர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாகவும் சுமை தூக்குவோராகவும் கூலி களாகவும் இருக்கின்றனர். வலையர் சாதிப்பெண்ணொருத்தியின் வழியாகவே வல்லம்பர் சாதியினர் தோன்றினர் என்ற வழக்கு வரலாறு வலையர் சாதி இந்த நாட்டின் தொன்மையான சாதிகளுள் ஒன்று என்பதனை உறுதிப்படுத்தும் சான்றாக உள்ளது". தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: பறவைகளை வலைபோட்டுப் பிடித்தும் நன்னீர் நிலைகளில் மீன்பிடித்தும் வாழ்க்கை நடத்தி வருபவர்கள் வலையர்கள். பயிர்த்தொழில் கூலி களாகவும் தலைச் சுமை தூக்குதல், நெல் குற்றுதல், விறகு வெட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் கூலிகளாகவும் இவர்கள் உழைக்கின்றனர்.

ஏழைகளான இவர்கள் சாதியில் தாழ்ந்த வகுப்பாராவர். எலிகளையும் காட்டுக் கோழிகளையும் பிடிக்கத் தக்க நுட்பமான அமைப்புடைய கண்ணிகளைச் செய்வதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்களுக்கும் எலி இனத்திற்கும் இடையே தொடர்ந்து நீடிக்கும் பகையினை விளக்கும் ஒரு வேடிக்கைக் கதை வழக்கில் உள்ளது. அக் கதையில் எலி இனங்களின் தலைவர்கள் ஒன்று கூடித் தங்கள் பகைவர்களாகிய வலையர்களை எவ்வாறு துன்புறுத்தித் தொல்லை கொடுக்கலாம் என ஆராய்ந்ததாகக் கூறும். இன்றும் எலிகள் வலைகளைக் கடித்து வருவதற்கு இதுவே காரணம்.* ஒரு காலத்தில் தாங்கள் சிவனுடைய தோழர்களாக இருந்ததாகவும் எலிகளையும் தவளைகளையும் உண்ணத் தொடங்கிய பாவத்தின் காரணமாகத் தாங்கள் தாழ்ந்த சாதியினர் ஆகவேண்டியதாயிற்று எனவும் வலையர் கூறுவர்.

1901 கணக்கெடுப்பு அறிக்கையில் வலையர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களில் காணப்படும் வேட்டையாடும் வகுப்பார் வலையர். தஞ்சாவூரில் இவர்கள் அம்பலக்காரன், சேர்வைக்காரன், வேடன், சிவியான், குருவிக்காரன் என்ற பெயர்களுள் ஏதாவதொன்றால் எத்தகைய வேறுபாடும் பாராட்டாது அழைக்கப்படுகின்றனர்." அம்பலக்காரன், முத்தரையன், முத்ராசன், ஊராளி, வேடன், வலையன், வேட்டுவன் ஆகிய சாதியாரிடையே இவர்களுக்கு ஓரளவு உறவு உள்ளதாகத் தெரிகிறது. எனினும் இதற்கான அடிப்படை என்ன என்பதனைக் கண்டறிய வேண்டும். இவர்கள் அனைவரும் ஒரே மூதாதையரின் வழிவந்த சந்ததியினராதல் வேண்டும். அம்பலக்காரன்கள் வேடர் சாதியினைச் சேர்ந்த அறுபத்திமூன்று நாயன்மாருள் ஒருவரான கண்ணப்ப நாயனாரின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். தஞ்சாவூரில் வாழும் வலையர்களும் தங்கள் தோற்றம் பற்றி இதேபோன்று கூறிக்கொள்வர். அம் மாவட்டத்தில் அம்பலக்காரன், முத்தரையன் என்பன வலையன்களுக்குரிய பெயர்களாகவும் வழங்குகின்றன. மாவட்டங்களின் விவரக் கையேடுகள் வலையர் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரங்கள் எங்கெங்கு அம்பலக்காரன் மிகுதியாக வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் வலையர் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும், எங்கு வலையர் மிகுந்த எண்ணிக்கையினராக உள்ளனரோ அங்கு அம்பலக்காரர் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதையும் தெரிவிக்கின்றன. அம்பலக்காரருள் மேல்தட்டு வாசிகள் வேளாளருக்கு உரியதான பட்டப்பெயரான பிள்ளை என்ற பட்டப்பெயரை தரித்துக்

* மதுரை மாவட்ட விவரக் குறிப்பு (Gazetteer of Madurai district.)

கொள்கின்றனர். தஞ்சாவூரில் மற்றவர்கள் மூப்பன் எனவும் திருச்சிராப்பள்ளியில் அம்பலக்காரன், முத்தரையன், சேர்வைக்காரன் எனவும் அழைக்கப்படுகின்றனர். எனக்குத் தெரிந்தவரை வலையருக்கு உரிய வழக்கமான பட்டப்பெயர் மூப்பன் என்பதேயாகும். சிலர் தங்களைச் சேர்வை, அம்பலக்காரன் எனக் கூறிக்கொள்கின்றனர்.

மதுரையைச் சேர்ந்த வலையர் தஞ்சாவூரைச் சேர்ந்த வலையர் அளவுக்குப் பிராமணீயச் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக இல்லை. தஞ்சாவூரார் பிராமணர்களைத் தங்கள் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்கின்றனர். இவர்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. இறந்தவர்களைச் சில சமயங்களில் எரிக்கின்றனர். உணவுமுறையிலும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டவர்களாக உள்ளனர். எனினும் இன்னமும் எல்லாக் கிராம தேவன்களையும் தேவதைகளையும் வழக்கம்போல வழிபட்டு வருகின்றனர். என *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. சில இடங்களில் வலையர் எலி, பூனை, தவளை, அணில் உட்பட கிடைக்கும் அனைத்தையும் உண்பர் என *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது.

பள்ளர், பறையரைப் போலச் சில இடங்களில் வலையரும் தங்கள் சாதிக்கென உரிய தனித் தெருக்கள் அல்லது கூடியிருப்புக்களில் ஊருக்கு வெளியே வாழ்கின்றனர். கணக்கெடுப்பின்போது இவர்கள் தங்களுக்குள் பல உட்பிரிவுகள் உள்ளதாகப் பதிந்துள்ளனர். அவற்றுள் மாதிரிக்குச் சில வருமாறு:

மொனதின்னி	-	புழுபூச்சிகளைத் தின்பவர்.
பாசிகட்டி	-	கண்ணாடி பாசிமணியைக் கட்டிக் கொள்வோர்.
சருகு	-	உலர்ந்த இலைகள்.
வன்னியன்	-	பள்ளி சாதிக்குரிய மற்றுமொரு பெயர்.
வெற்றாம்புற்று	-	கரையான் புற்று.

சில இடங்களில் சருகு உட்பிரிவினர், மறவர்கள் மற்றும் கள்ளர்களிடையே காணப்படுவதைப் போன்ற பெண்வழிபட்டனவாகச் செல்லும் கிளைப் பிரிவுகளைப் பெற்றுள்ளனர். இக் குடும்பங்களுள் உடன்பிறந்த ஆண்களும் பெண்களும் தங்கள் தாய், தாய்மாமன் ஆகியோர் கிளைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களேயன்றித் தங்கள் தந்தையின் கிளையினைச் சேர்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

வகினி, வலத்து, பரடி, கங்கு என்ற நான்கு அகமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவினராக வலையர் பிரிவுபட்டுள்ளனர். இவற்றுள் கங்கு என்ற பிரிவினர் பாசிகட்டி (தாலிக்குப் பதிலாகக் கண்ணாடிப் பாசிமணியினைக் கட்டிக்கொள்வோர்) காரைகாட்டி (கள்ளர் சாதிப் பெண்களைப் போல குதிரை மயிராலான கழுத்துச் சங்கலியினைப் பெண்கள் அணியும் பிரிவினர்) என மேலும் இரு பிரிவினராகப் பிரிவுபட்டுள்ளனர். மூப்பன் என்பதே சாதிக்குரிய பட்டப்பெயர். சாதியாரிடையே ஏற்படும் சச்சரவுகளைக் கம்பளியான் எனப்படும் சாதித் தலைவன் தீர்த்து வைக்கின்றான். அருப்புக் கோட்டையில் கூடியிருக்கும் இவன் தன் பணி தேவைப்படும் இடங்களுக்குக் குதிரை மீது ஏறி அதிகார தோரணையோடு வந்து சேர்வான். ஒருவன் இவனுக்குக் குடைபிடித்தவனாக உடன் வர மற்றொருவன் ஆலவட்டம் வீசியவனாக உடன் வருவான். கம்பளியில் அமர்ந்து வழக்குகளைக் கேட்டறியும் இவன் விதிக்கும் தண்டத் தொகையில் பாதி அரண்மனைக்கும் (அதாவது வழக்கைக் கேட்கும் இவனுக்கும்) மறுபாதி ஒரமனைக்கும் (சாதியாருக்கும்) உரியதாகும் என மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த வலையர் தங்களிடையே சருகு, எட்டரைக் கொப்பு, தானம்பநாடு அல்லது வாலுவாடி, நடுநாடு அல்லது அசல், குறும்பர், வன்னியர், அம்புநாடு, புனல் என்ற அகமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகள் உள்ளதாகக் கூறுகின்றனர். இக் குலப்பிரிவுகளுள் சில கள்ளர், அம்பலக்காரர் குலப்பிரிவுகளை ஒத்தவை என எப்..ஆர்.ஹெமிங்வே குறித்துள்ளார்.

வலையர்களிடையே வேடன், சுழுந்துக்காரன், அம்பலக்காரன் என்ற அகமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவுகள் உள்ளன. இவற்றுள் வேடன் பிரிவைச் சேர்ந்தவர்கள் வேட்டையாடிப் பிழைப்பவர்கள். சுழுந்துக்காரன்கள் தீப்பந்தம் பிடிப்பவர்கள். அம்பலக்காரன்கள் பயிரிடுவோர். தாழ்ந்த சாதியாரான இவர்களைக் கோயிலுக்குள் அனுமதிப்பதில்லை. இவர்கள் வேளாளரைத் தொட்டால் வேளாளர் தீட்டுக்குள்ளாவர். பயிர்த்தொழில்களைச் செய்வதும், கூலி வேலையும், வேட்டையுமே இவர்கள் மேற்கொண்டுள்ள தொழில்கள். இவர்கள் குற்றச் செயலிலும் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. அச் செயலில் இவர்கள் கள்ளரின் கையாட்களாகச் செயல்படுகின்றனர் எனத் தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வயதுவந்தபின் பெண்களுக்கு மணம் செய்வித்தலே இவர்கள் வழக்கம். மணம் செய்விக்கத் தாய்மாமன் உடன்பாடு இன்றியமையாதது.

கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் தடையேதுமின்றி அனுமதிக்கின்றனர். மணச் சடங்கின்போது மணமகன் உடன்பிறந்தவள் தாலியினை எடுத்துக் கூடியுள்ளவர்களுக்குக் காட்டியபின் அதனை மணமகள் கழுத்தினைச் சுற்றி இறுக்கமாக அணிவிப்பாள். அதனைச் சற்றே தாழ்வாக விலா எலும்பினைத் தொடும்படி தொங்கவிட்டு அணிவிப்பது சாதி வழக்கத்திற்கு முரணானது என இவர்கள் கருதுகின்றனர். தாலி கட்டும் சடங்கு எப்பொழுதும் இரவிலேயே நிகழும். மணமகன் உடன்பிறந்தவளே அதனை அணிவிப்பாள். மணமகனால் தாலி அணிவிக்கப்பட்டால் அவன் இறந்தபின் அதனை அகற்றிவிட்டு அவள் மறுமணம் செய்துகொள்ள இயலாது போய்விடும். தை முதல் வைகாசி வரை திருமணங்கள் நிகழ்கின்றன. எனினும் ஆடி மாதம் முடியும்வரை மணமகளுக்குச் சாந்தி முகூர்த்தம் நடத்தப்படுதல் இல்லை. ஆடிக்கு முன் உடல் உறவு கொண்டால் முதல் குழந்தை நல்ல மாதம் அல்லது சித்திரை மாதத்தில் பிறக்கலாம் என்பதாலேயே சாந்தி முகூர்த்தம் இவ்வாறு தள்ளி வைக்கப்படுகிறது. இது தொடர்பாக இரண்டு தமிழ்ப் பழமொழிகள் வழக்கில் உள்ளன. ஆடியில் ஒருத்தி பிறந்தகத்தில் இருக்க வேண்டும். சித்திரையில் குழந்தை பிறந்தால் குடும்பத்திற்கு ஆகாது என்பனவே அப் பழமொழிகள்.

இவர்கள் திருமணம் தொடர்பாக மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: திருமணத்தின்போது மணமகனின் உடன்பிறந்தவள் மணமகள் கழுத்தில் தாலியினை அணிவித்து மணமகளைத் தன் சகோதரன் காத்திருக்கும் அவனது இல்லத்திற்கு விரைந்து அழைத்து செல்வாள். பூப்படையும் ஒருத்தி பதினைந்து நாள்கள் வரை தனியே தங்கி இருக்கும்போது சாதியினைச் சேர்ந்த சிறுபெண்கள் அக் குடிசையின் வெளியே கூடிப் பெண்மை நலம் வாய்க்கப்படுவதன் சிறப்பினையும் அது எவ்வாறு மணமகாத இளைஞர்களின் கவலையினைப் போக்குகின்றது என்பதனையும் விளக்கும் ஒரு பாடலைப் பாடுவர். அப் பாட்டின் இரண்டு செய்யுள்கள் வருமாறு:

ஒரு ஆணின் தலைமுடி எப்படி இருக்கும்?
அது பின்னலிட்டுச் சிக்குப்பிடித்த சுமையாக இருக்கும்
ஒரு பெண்ணின் மயிர்க்கற்றை எப்படி இருக்கும்?
அவை பூமாலையில் உள்ள மலர்களைப் போல புகழ்மிக்கனவாக இருக்கும்

ஒரு மனிதன் வாழ்க்கை எப்படிப்பட்டது?
அரண்மனை வாசலில் காத்துக் கிடக்கும் நாயின் வாழ்க்கையை ஒத்தது அது.

ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்படிப்பட்டது?
அது தோரணத்தில் ஆடி அசையும் இலைகளைப் போன்றது

"உரிய கட்டணத்தைச் செலுத்தி ஒருத்தி விருப்பம் போல் மணமுறிவு பெறலாம். கைம்பெண்களும் மணமுறிவு பெற்றவர்களும் மறுமணம் புரிந்துகொள்ளலாம். திருமணமான ஒருத்தி ஒழுக்கந்தவறி நடப்பாளேயாகில் அவளைக் கம்பளியான் முன்னால் கொண்டுவந்து நிறுத்துவர். அவன் அவளுக்கு அறிவுரை வழங்கியபின் அவ்வளுடைய கள்ளக் காதலனின் அரைஞாண் கயிற்றை அறுத்து அவள் கழுத்தில் கட்டும்படி ஆணையிடுவான். இதனால் அவளுக்கு அந்த உறவின் வழிக் குழந்தைகள் பிறக்குமானால் அதற்கு அவள் கள்ளக்காதலனே தந்தையென்பது உறுதியாகின்றது." பட்டுக்கோட்டையினைச் சேர்ந்த வலையன்கள், மணமாவதற்குமுன் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் கொள்ளும் உறவை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. இத்தகைய உறவின் வழிப் பிறக்கும் குழந்தைகளையும் இவர்கள் சாதியினைச் சேர்ந்தனவாகவே கருதுகின்றனர். அவ்வாறு பிறந்தவர்கள் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களோடு மணஉறவும் கொள்ளலாம். ஆனால் அதற்கு முன் அவர்களின் பெற்றோர் சாதிச் சபையினர் தண்டமாக விதிக்கும் சிறுதொகையினைச் செலுத்த வேண்டும்.

திருச்சிராப்பள்ளியினைச் சேர்ந்த வலையன்கள் பற்றித் திரு ஹெமிங்வே பின்வருமாறு எழுதுகின்றார்: இவர்களிடையே மூன்றுவகைத் திருமணங்கள் வழக்கில் உள்ளன. மணமகன் வீட்டைச் சேர்ந்தவர்கள் மூன்று மரக்கால் அரிசியோடும் ஒரு சேவலோடும் மணமகள் இல்லத்திற்கு ஒரு நல்ல நாளில் செல்வர். அங்கு இரு வீட்டாரும் விருந்துண்பர். இதுவே பெரு வழக்காக உள்ள மணமுறை. சில சமயங்களில் ஓர் இளைஞனின் உடன்பிறந்தவள் மணமகள் இல்லம் சென்று அவள் கழுத்தில் தாலி அணிவித்து மணமகன் இல்லம் அழைத்து வரும் வழக்கத்தையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். பெரிய கலியாணம் எனச் சொல்லப்படும் வழக்கப்படியான கலியாணத்தை இவர்கள் சிறு சிறு மாற்றங்களுடன் நடத்துகின்றனர். எனினும் வலையர் இத்தகைய மணமுறையை விரும்பி மேற்கொள்ளாதவர்களாக மற்ற இருவகையான மணமுறைகளே நல்ல உறவுக்கு ஏற்றவை எனக் கூறுவர். மணத்திற்கு முன் ஒருத்தி கன்னிமையிழந்திருப்பாளாகில் அதனை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஒருத்தி பல பிள்ளைகள் பெற்றவளாயிருப்பினும் அவளையும் முறையாக மணம் செய்து கொண்டு அக் குழந்தைகளை முறைப்படி பிறந்தனவாக ஆக்கிக் கொள்ள அனுமதிக்கின்றனர். கைம்பெண்களும்,

மணமுறிவு பெற்றவர்களும் மறுமணம் செய்துகொள்ள இவர்கள் அனுமதிக்கின்றனர். கூடாஒழுக்கத்தில் ஈடுபடும் பெண்களுக்கு எருக்கம் (*Caslotropis gigantica*) பூ மாலை அணிவித்துச் சேற்றுக் கூடையினைச் சுமந்தபடி ஊரைச் சுற்றி வரும் தண்டனை விதிக்கின்றனர். கள்ளத் தொடர்பில் அடிக்கடி ஈடுபட்டவர்களாகக் குற்றம் புரியும் ஆண்களின் கால்பெருவிரல்களை கழுத்தோடு சேர்த்து ஒரு கொடியால் இணைத்துக் கட்டி உட்கார வைக்கும் தண்டனை வழங்குகின்றனர். ஒருத்தி மணமுறிவு பெறும்போது அவளுடைய ஆண் குழந்தைகள் அவள் கணவனோடு செல்கின்றன. பெண்களை அவள் தன்னோடு வைத்துக் கொள்ள அனுமதிக்கின்றனர்.

சிங்கப் பிடாரி (அய்யனார்), பதினெட்டாம்படிக் கருப்பன் ஆகியன வலையருக்குரிய குலத் தெய்வங்களாம். ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தில் வரும் அமாவாசைக்கு மறுநாள் வலையர் இத் தெய்வங்களை வழிபட ஒன்றாகக் கூடுகின்றனர். அதிகாலையில் அய்யனார் கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தியபின் காட்டுக்குச் சென்று முயல் முதலிய சிறு விலங்குகளை வேட்டையாடுவர். வேட்டைக்குப் பின் திரும்பும் இவர்களை மஞ்சள் நீர், ஆரத்தி, அரிசி, மாலை, வெற்றிலை பாக்கு முதலியன ஏந்தியவர்களாக வலையர் சாதிச் சுமங்கலிப் பெண்கள் வரவேற்பர். ஆரத்தி சுற்றும்போது ஆண்கள் சிலர் ஆவேசம் வந்து ஆடத் தொடங்குவர். அவர்களுக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்வர். இவர்கள் தெய்வம் ஏறப்பெற்றவர்களாக இருக்கும்போது தாய்மார் இவர்களிடம் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடும்படி வேண்டுவர். வேட்டையில் கிடைத்தவற்றைச் சாதித்தலைவன் வீட்டுக்குக் கொண்டு செல்வர். அங்கு அவை அனைவருக்கும் பங்கிட்டு வழங்கப்படும். திரு கே, இரங்காச்சாரி, நேரில் கண்ட வலையர் திருவிழா ஒன்றில் நிகழ்ந்தவை வருமாறு: முற்பகல் பத்து மணியளவில் வலையர் சாதியினைச் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் பகட்டான உடையணிந்து குடிசையை விட்டு வெளியேறி ஒரு தோப்புக்குச் சென்று சேர்ந்தனர். ஆண்களும் சிறுவர்களும் எறிவதற்குரிய மரக்கழி அல்லது இரும்பு முனை பொருத்தப்பட்ட தோண்டுவதற்கரிய குச்சி ஆகியனவற்றைக் கைகளில் ஏந்தியவர்களாகச் சென்றனர். தோப்பை அடைந்தவுடன் அவர்கள் அனைவரும் கிழக்கு நோக்கி வரிசையாக நின்றனர். பின் தங்கள் கைகளில் உள்ள கழிகளைக் கீழே போட்டு அவற்றை வணங்கியதோடு அவற்றின் முன் தரையில் விழுந்தும் கும்பிட்டனர். பின் அனைவரும் தங்கள் கழிகளை எடுத்துக் கொண்டனர். சிலர் அப்போது குழல் ஊதினர். பெண்கள் சிலர் பூமாலையோடு வந்து நான்கு ஆண்களுக்கு அம் மாலைகளை அணிவித்தனர். அப்போது

அந்த ஆண்கள் தங்கள் கையில் உள்ள குச்சிகளை தரையில் ஊன்றியவர்களாக நின்றனர். பின் அவர்கள் நடுங்கத் தொடங்கியவர்களாகச் சுற்றிவந்து அங்கே உள்ளவர்களை உதைக்கத் தொடங்கினர். இவ்வாறு தெய்வ ஆவேசம் உற்றவர் மிகுந்த பலம் வாய்ந்தவர்களாகத் தோன்றினர். ஆண்கள் நான்கைந்து பேர் சேர்ந்து முயன்றும் அவர்களைக் கட்டியடக்க முடியவில்லை. இவர்கள் சிலரைப் பெயர் சொல்லி அழைத்து அவர்களிடம் குலதெய்வத்தை மதித்துப் பொங்கலும் பலியும் கொடுத்து வழிபாடு நிகழ்த்துவாயா எனக் கேட்டனர். அப்போது பெண்கள் தங்கள் குழந்தைகளை அவர்களிடம் கொண்டு வந்து பெயரிடும்படி வேண்டினர். சில இடங்களில் குழந்தைகளுக்கு பெயரிடும் சடங்கு ஐயனார் கோயிலில் தெய்வ ஆவேசம் ஏறப்பெற்றவர்களால் நிகழ்த்தப்படுகின்றது. அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையாயின் பெயர்கள் எழுதி இணைக்கப்பட்ட பல பூக்களைத் தெய்வத்தின் முன் இட்டு ஒரு சிறுவனை அல்லது பூசாரியினைக் கொண்டு அவற்றுள் ஒன்றினை எடுக்கச் செய்து அந்தப் பூவோடு இணைக்கப்பட்ட பெயரைக் குழந்தைக்கு இடுவர்.

வலையன்கள் பேய் வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுகின்றார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒரத்தநாட்டில் ஒவ்வொரு வலையன் வீட்டிலும் புறக்கடையில் ஓர் ஒதிய (*Odina wodier*) மரம் இருக்கும். அந்த மரத்தில் பேய் வாழ்வதாக அவர்கள் நம்புவர் எனத் தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அம்மையநாயக்கனூரில் வாழும் வலையர் சிலர் சிறு மலையில் உள்ள தெய்வங்களுக்குப் பரம்பரைப் பூசாரிகளாக இருந்து வருகின்றனர். இந்த மலையில் உள்ள சில தெய்வங்கள் வேறிடங்களில் காண முடியாதவை. இவற்றுள் ஒன்றாகப் பாப்பாராயன் என்பது ஒரு பிராமணச் சோதிடன் ஆவியாக விளக்குவது. பருவமழை பற்றி இவன் சொன்ன சோதிடம் பலிக்காத காரணத்தால் வெட்கமுற்ற இவன் தன் வாக்குப் பொய்த்ததற்காக மலை ஒன்றிலிருந்து விழுந்து உயிர்துறந்தவன் எனத் திரு டபிள்யூ. பிரான்சிஸ் மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

முட்டாள் ராவுத்தன் என்ற சிறப்பான தெய்வத்தைத் தங்கள் சாதிக்கு உரியதாக வலையன்கள் வழிபட்டு வருவதாகத் திரு ஹெறம்மிங்வே கூறுகின்றார். இத் தெய்வம் இறந்து போன முகமதியன் ஒருவன் ஆவியாகும். இவனைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

கள்ளர், அகமுடையார் ஆகிய சாதியார் நிகழ்த்தும் சடங்குகளை ஒத்த சடங்குகளை நிகழ்த்தி வலையரும் இறந்தவர்களைப் புதைக்கவே

செய்கின்றனர். பதினாறாம் நாள் இறுதிச் சாவுச் சடங்கினை நிகழ்த்துகின்றனர். அதற்கு முந்தின நாள் இரவு இறந்தவன் உயிர்விட்ட இடத்தில் நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தை வைப்பர். கண்களில் துளையிடப்பட்ட இரண்டு தேங்காய்களும் அப் பாத்திரத்தின் அருகே வைக்கப்படும். மறுநாள் காலை அனைவரும் ஒரு தோப்பு அல்லது குளத்திற்குச் செல்வர். இறந்தவரின் மூத்த மகன் அல்லது கருமாந்திரம் செய்பவன் தலைமழித்துக் கொண்டு குளித்து வந்து தரையில் ஒரு சதுரம் வரைவான். அதனுள் ஆல், அரசு ஆகியவற்றின் உலர்ந்த குச்சிகள் சில வைக்கப்படும். பின் அவற்றில் நெருப்பு மூட்டுவான். பிச்சைகாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் அரிசி, சோறு முதலியன வழங்கப்படும். இறந்தவன் மகனும் அவன் பங்காளிகளும் தங்கள் தலையில் புதிய வேட்டியைத் தலைமேல் இட்டுக் கொள்வதோடு இச் சடங்கு நிறைவுறும். உறவினர்கள் மார்பில் அடித்துக் கொண்டவர்களாக,

"எங்களுக்குக் கஞ்சி உங்களுக்குக் கைலாசம்"
"சோறு எங்களுக்கு சுவர்க்கலோகம் உங்களுக்கு".

எனப் பாடியவர்களாக பந்தலின் கீழ் வைக்கப்பட்டுள்ள தானியம் நிறைந்த கூடையினை மூன்று முறை சுற்றி வருவர். அதன்பின் இறந்தவருடைய மூத்த மகனைக் குடும்பத் தலைவன் என்ற பொறுப்புக்கு உரியவனாக்கும் வகையில் அவன் தலையில் உருமாலை கட்டுவர். ஒருத்தி தன் கணவனை இழப்பாளாயின் அவள் தோளில் தண்ணீர் பானையைச் சுமந்தபடி ஊர் மந்தையை மும்முறை சுற்றி வருவாள். அவள் ஒவ்வொரு சுற்று வந்தவுடனும் அம்பட்டன் அந்தப் பானையில் ஒரு துளையிடுவான். மூன்றாம் சுற்றின் போது அவன் அந்தப் பானையினைப் போட்டு உடைப்பான். அப்போது அவன், இறந்தவன் ஆவியின் காதில் கேட்கும்படி கணவனை இழந்தவளையும் குழந்தைகளையும் அமைதியாக வாழவிட்டுப் போகும்படி உரக்கக் கூக்குரலிடுவான் எனத் திரு பிரான்சிஸ் பதிந்துள்ளார். அவர்களுடைய சாவுச் சடங்குகள் தனிப்பட்ட இயல்புடையவை. கரையான்கள், பறையர் ஆகியோர் சாவுச் சடங்குகளுக்கும் இவர்கள் சாவுச் சடங்குகளுக்கும் ஓரளவு ஒற்றுமை உள்ளது. சொத்துக்கு உரிமையுடையவன் இரண்டாம் நாள் சுடுகாட்டுக்குச் செல்லும்போது ஓர் உரலை வீட்டின்வெளி வாசலிடையே வைத்து அதனுள் ஒரு விளக்கினை ஏற்றி வைப்பர். அவன் சுடுகாட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் அந்த உரலைக் கவிழ்த்து விட்டு அதனுள் இருந்த விளக்கை வணங்குவான் எனத் தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

வாலன் - Valan

கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த மீனவரான வாலன் மற்றும் கடல் அரயன் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு எல்.கே.அனந்தகிருட்டிண அய்யருக்குக் கடப்பாடுடையேன்.

வாலன் என்ற பெயர் வலை என்பதிலிருந்து வந்ததாகும். இது குளத்தின் உள்ள மீனைக் குறிக்கும். சிலர் இச் சொல் வலையன் என்ற சொல்லில் மற்றொரு வடிவம் எனக் கருதுவர். மீன் பிடிக்க வலை வீசுபவர் என்ற பொருளின்படி அவ்வாறு அமைகிறது. இன்று இவர்களிடையே உள்ள நம்பிக்கையும் வழக்கு வரலாறும் இவர்கள் பரசுராமனால் கேரளக் கடற்கரைக்குப் படகு வலித்து ஆறு, உப்பங்கழி ஆகியவற்றை மக்கள் கடக்க உதவுவதற்காகக் கொண்டு வரப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கின்றது. வாலன்கள் முதலில் அரயன்களாக இருந்தவர்கள் எனவும் பெருமாள்களுள் ஒருவர் அரயர் குடும்பத்துள் சிலரைப் படகு வலிக்க எனத் தேர்ந்தெடுத்துச் சில தனிச் சலுகைகள் வழங்கிய பின் இவர்கள் தனிச் சாதியினர் ஆயினர் எனவும் மற்றொரு வழக்கு வரலாறு தெரிவிக்கிறது. இவர்கள் இன்றும் தங்கள் குலம் மிகத் தொன்மை வாய்ந்த பெருமையுடையது எனக் கூறிக் கொள்வதோடு புராணங்களை இயற்றிய வேதவியாசரும் இராமன், சீதை, இலக்குவன் ஆகியோர் கங்கையைக் கடக்கப் படகு வலித்த குகனும் தங்கள் குலத்தவர் எனக் கூறிக் கொள்வர்.

இந்தச் சாதியுள் உட்பிரிவுகள் எவையும் இல்லை. எனினும் அலயக்காடு, எண்ணாறு, வைசயகிரியம், வழப்பள்ளி என்ற நான்கு புறமணக்கட்டுப்பாடு உடைய இல்லங்களாக இவர்கள் பிரிவுபட்டுள்ளனர். இவை பிராமணர்களின் கோத்திரங்களைப் போன்ற அமைப்புடையவை. ஓர் இல்லத்தைச் சேர்ந்த அனைவரும் ஒரு பொது மூதாதையின் சந்ததியினர். இவர்கள் ஒரு காலத்தில் மேலே கூறப்பட்ட நான்கு நம்பூத்ரி இல்லங்களோடு ஒரு சில பணிகளைச் செய்வதற்காக இணைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும், அந்த இல்லங்களைச் சேர்ந்த நம்பூத்ரிகளின் சந்ததியினராக இருந்த இவர்கள் சில தவறான நடத்தைகள் காரணமாக இன்றுள்ள இழிநிலையினை அடைந்தனர் எனவும் இன்றும் இவர்களிடையே ஒரு நம்பிக்கை நிலவி வருகின்றது. இவர்கள் தங்களைச் சமூகப்படி நிலையில் உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொள்ள இக்கதை புடைக்கப்பட்டதாகலாம். இவர்கள் மேலே கூறப்பட்ட நான்கு பிராமணர்கள் குடும்பத்து அடிமைகளாக இருந்திருக்கக் கூடும் என நான் நினைக்கின்றேன். திருச்சூர் வட்டத்தில் உள்ள பெருமணத்தைச் சேர்ந்த சித்தூர் மணக்கால்

நம்பூத்ரிபாடு உடன் கணக்கன்கள் கொண்டுள்ள உறவினை ஒத்ததாக இவர்கள் உறவு இருந்திருத்தல் கூடும். இன்றும் அந்த பிராமணர் குடும்பங்களை வேலன்கள் மிகவும் மதித்துப் போற்றுகின்றனர். தங்கள் குடும்பத்தில் ஏதேனும் கேடுகள் விளைந்தால் இவர்கள் சில கட்டு வெற்றிலை, சில அணாக்கள் ஆகியனவற்றை அவர்களிடம் கொண்டுசென்று காணிக்கையாகச் செலுத்தித் தங்கள் எசமானர்களான அந்தப் பிராமணர்கள் வாழ்த்தினைப் பெற்றுத் தங்கள் குடும்பத்துக்கு நேர்ந்துள்ள இன்னலை மாற்றிவிடப் பார்க்கின்றனர்.

உப்பங் கழிகளின் இருப்பக்கங்களிலும் அமைந்துள்ள தாழ்ந்த மணற்பாங்கான பகுதிகளிலேயே மீனவர்களான இவர்கள் தங்கி வாழ்கின்றனர். கொடுங்கோளுருக்குத் தெற்கே உள்ள சில இடங்களில் இவர்கள் இல்லங்கள் உப்பங்கழிகளை அடுத்து தென்னந்தோப்புகளுள் மறைந்தனவாக அமைந்திருக்கக் காணலாம். இவற்றிடையே ஆங்காங்கே சுண்ணாம்பு அடிக்கப்பட்ட ரோமன் கத்தோலிக்கத் தேவாலயங்களும் ரோமன் சிரியர் தேவாலயங்களும் அழகுறக் காட்சி தந்தபடி இருக்கும். இவர்களின் இல்லங்கள் கிட்டத்தட்டக் குடிசைகளே. பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இக் குடிசைகள் சிலவற்றில் ஒன்றாகச் சேர்த்து வாழக் காணலாம். அங்கு அவர்கள் மிக நெருக்கமாகத் தங்கள் வலைகளை உலர்த்தக்கூடப் போதுமான இடவசதியின்றி தென்னை மரங்களுக்கிடையே அவதிப்பட்டுக் கொண்டிருக்கக் காணலாம். இக் குடியிருப்புகளுள் பெரும்பாலானவை ஜென்மிகளுக்கு உரியவை. அவர்கள் இவற்றை வாடகை இல்லாமலோ அல்லது குறைந்த வாடகைக்கோ இவர்களுக்கு விட்டிருப்பர். அந்தக் குடியிருப்பில் உள்ள தென்னை மரங்கள் சிலவற்றை இவர்கள் அனுபவித்துக் கொள்ளவும் தென்னோலைகளைப் பயன்படுத்திக் குடிசைகளை வேய்ந்து கொள்ளவும் வாலன்களுக்கு அவர்கள் உரிமை வழங்குவதும் உண்டு. இவர்கள் இல்லங்களுள் பத்துக்கு ஒன்று மரத்தாலும் கல்லாலும் கட்டப்பட்டனவாக இருக்கும். பெரும்பாலானவை சேற்று மண்ணாலும் மூங்கிலாலும் அமைக்கப்பட்டவை. கோடை காலத்தில் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் தங்க இவற்றுள் போதுமான இடம் இருக்காது. வீட்டுக்கு வெளியேயே சமையல் செய்துகொள்ளும் இவர்கள் படுத்து உறங்குவதும் வெட்டவெளியில்தான். இதற்கேற்றபடி இவர்களின் குடியிருப்புகள் நல்ல நிழல் உள்ளனவாகவும் காற்றோட்டமுடையனவாகவும் அமைந்துள்ளன. நள்ளிரவு வரை கடினமாக உழைக்கும் இவர்கள், பகலில் வெயில் காய்ந்தபடி தங்கள் வலைகளையோ மீன்களையோ உலர்த்தியபடி இருக்கக் காணலாம். மண்சட்டிகள், எனாமல் தட்டுகள் ஆகியனவே இவர்களுடைய தட்டுமுட்டுச் சாமான்கள், மரப்பலகைகளும் முரட்டுப் பாய்களும் படுக்கைகளாக உதவுகின்றன.

வேலன் சாதிப் பெண்கள் பூப்படையும் முன்போ பூப்படைந்த பின்போ திருமணம் செய்விக்கப்படுகின்றனர். எனினும் தாலிகட்டுக் கலியாணத்தைப் பூப்படையும்முன் நடத்தியாக வேண்டும். அவ்வாறு நிகழ்த்தப்படவில்லையாயின் அச் சிறுமியிரும் அவர்கள் பெற்றோரும் சாதிவிலக்கத்திற்கு உள்ளாவர். தாலி கட்டுக் கலியாணத்திற்கும் முறையான திருமணத்திற்கும் மணமகனும் மணமகளும் வேறுவேறு இல்லங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். தாலிகட்டுக் கலியாணத்திற்கு ஒரு நல்ல நாளை முடிவு செய்தபின் மணமகள் வீட்டார் ஆறணா எட்டுகாசு, கொஞ்சம் வெற்றிலை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு அரவனிடம் சென்று சடங்கை நடத்த அவன் அனுமதியினை வேண்டுவர். அதற்கு அனுமதி வழங்கும் அவன் தன் கடவிற்கு உரிய தன் உதவியாளனைப் பொன்னம்பனிடம் இச் சடங்கு முறைப்படி நடத்தப்படுகின்றதா என மேற்பார்த்துக் கொள்ளும்படி கூறுவான். பொன்னம்பனும் மணமகனும் மணமகனைச் சேர்ந்தவர்களும் மணமகள் இல்லம் செல்வர். குறிக்கப்பட்ட முகூர்த்த நேரம் வந்தவுடன் பொன்னம்பன்களும் இரண்டு கடவுளைச் சேர்ந்த சாதியினரும் அரவன் வந்திருப்பதை உணர்த்தும் வகையில் ஆறணா எட்டுக் காசினை தனியே முடிந்து வைத்தபின் புரோகிதனிடம் மணமகனிடம் தாலி யைத் தரும்படி வேண்டுவர். கூடியுள்ளவர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே மணமகன் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பான். மணச் சடங்கு இரண்டு நாட்கள் வரை நீட்டிக்கும். இச் சடங்கு எப்பொழுதும் இரவு நேரத்திலேயே நிகழ்த்தப்படும். தாலிகட்டுக் கலியாணத்தில் மணமகன் அச் சிறுமிக்குக் கணவனாக அமைய வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லை. சடங்கு முடிந்ததும் இரண்டு வேட்டிகளையும் சில அணாக்களையும் பெற்றுக் கொண்டு அங்கிருந்து வெளியேறும் அவன் பேருக்குக் கணவனாகவே இருப்பான். அவன் அச்சிறுமியினையே தன்னுடைய மணமகளாக அடைய விரும்புவானாயின் அவன் தன் செலவில் மணத்திற்கான தாலி, கலியாணச் சேலை, பரிசப் பணமாகச் சில ரூபாய்கள் ஆகியனவற்றைத் தர வேண்டும். இச் சடங்கின்போது தாலி யினையும் தாலிகட்டுக் கலியாணத்திற்கான புதிய உடைகளையும் சிறுமியின் தாய்மாமன வங்கித் தருவதே வழக்கம்.

திருமணம் தாலிகட்டுச் சடங்கைவிட விரிவான முறையில் நடத்தப்படும். ஒருத்தியை மணக்க விரும்புகின்றவனுடைய தாய்மாமனோ தந்தையோ முதலில் அந்தச் சிறுமியின் இல்லம் சென்று அவளைக் கண்டு தங்கள் திருப்தியினைத் தெரிவிப்பர். பின் அவர்கள் சோதிடரை அணுகிச் சாதகப் பொருத்தம் உள்ளதா எனப் பார்ப்பர். சாதகங்கள் பொருந்தியபின் அவர்கள் உடனே சிறுமியின் இல்லம்

செல்வர். அங்கு அவர்கள் நன்கு உபசரிக்கப்படுவர். பின்னர் மணமகள் பெற்றோரும் உறவினர்களும் மணமகன் இல்லத்திற்கு வருகை புரிவர். அங்கு அவர்கள் முன்புபோலவே உபசரிக்கப்படுவர். பின் இரு வீட்டாரும் முறைப்படியான மண உறுதிச் சடங்கை நிகழ்த்துவதற்குரிய நாளினைப் பற்றி முடிவு செய்வர். அன்று மணமகன் ஊரைச் சேர்ந்த வாலன் ஒருவனும் ஏழெட்டு பெரியவர்களும் பெண் வீட்டைச் சேர்ந்த பொன்னம்பனும் கூடுவர். அங்குக் கூடியுள்ளவர்கள் முன்னிலையில் மணமகன் வீட்டைச் சேர்ந்த வேலன் ஒருவனும் மணமகள் வீட்டைச் சேர்ந்த வேலன் ஒருவனும் ஒரு பலகை மீது ஆளுக்கு நான்கணா வைப்பர். அதன்பின் மண உறுதிப்பாட்டினை அனைவரும் அறிய முடித்துக் கொண்டமைக்கு அடையாளமாக இருவீட்டைச் சேர்ந்தவர்களும் தங்களுக்குள் இணங்கு மாற்றம் என்ற வெற்றிலை மாற்றிக் கொள்வர். அடுத்து மணநிகழ்ச்சிக்கு உரிய நாள் முடிவு செய்யப்படும். பின் அங்கிருந்து அவர்கள் திரும்புவர். முடிவு-செய்யப்பட்ட மணநாளன்று மணமகள் தன்னை நன்கு அலங்கரிக் கொண்டவளாகக் காத்திருப்பாள். கொண்டு சென்ற சேலையில் ஒரு ரூபாய், அரிசி ஆகியனவற்றை மணமகள் அன்னையிடம் மணமகளுக்கு உரிய விலையாகத் தருவர். விருந்துக்குப் பின் மணமகள் வீட்டார் அங்கிருந்து புறப்பட்டு நல்ல ஓரையில் மணமகன் இல்லத்தில் நுழைவர். மணமகன் வீட்டுவாசலில் ஒரு விளக்கு, பாத்திரத்தில் நீர் ஆகியனவற்றை ஏந்தி மணமக்களை வரவேற்பதோடு அந்தப் பாத்திரத்திலுள்ள நீரையும் அவர்கள் மீது தெளிப்பர். மணமகன் இல்லத்தைச் சேர்ந்த பெயரிவர்கள் அவர்களை வரவேற்று ஒன்றாக அமரச் செய்து இனிப்பினை வழங்கி உண்ணச் செய்தபின் மணமகளை மணமகன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியாக அறிவிப்பர். இச் சடங்கு ஒரு விருந்தோடு முடியும். இதற்கான செலவினை இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

ஒருவன் ஒருத்திக்கு மேற்பட்ட மனைவியரை மணக்கலாம். எனினும் ஒருத்தி ஒருவனுக்கு மேற்பட்டவனோடு உடல் உறவு கொள்ள உரிமை இல்லை. கைம்பெண் ஒருத்தி தன் பெற்றோரின் அனுமதி பெற்றுச் சாதியினைச் சேர்ந்த ஒருவனை மணந்து கொள்ளலாம். எனினும் அவள் தன் கணவனோடு உடன்பிறந்தவர்களை மணக்க இயலாது. அவள் வேறொருவனை மணக்குபோது முதல் கணவன் வழியாக அவளுக்குப் பிறந்த குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பினை அவளுடைய முதல் கணவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்வர். கணவன், மனைவி இருவருள் எவர் விரும்பினாலும் மணமுறிவு வேண்டி அரவனிடம் முறையிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு முறையிட்டுக் கொள்வோர் தங்கள் தகுதிக்கு ஏற்பப் பன்னிரண்டு அணா முதல் ஆறரை

ரூபாய் வரை அரவனுக்குச் செலுத்த வேண்டும். அதன்பின் அரவன் அந்த மணமுறிவுக்கு இசைவு அளித்தாக அவர்கள் வாழும் ஊரைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புவான். அவர்கள் அதனை ஊரில் அறிவிப்புச் செய்வர். இதற்காக என மணமுறிவு கேட்டு அரவனிடம் விண்ணப்பித்தவர்கள் ஊரைச் சேர்ந்த சாதியாருக்கு நான்கணாச் செலுத்த வேண்டும்.

வாலன் சிறுமி ஒருத்தி பூப்படையும்போது அவளை வீட்டில் தனித்து ஓர் அறையில் இருக்கச் செய்வர். நான்கு நாட்கள்வரை அவள் தீட்டுக்கு உரியவளாக இருப்பாள். நான்காம் நாள் அவளைக் குளிக்கச் செய்தபின் அண்டை அயலார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு நல்ல விருந்து அளிப்பர். தெரலிக்க எனப்படும் ஒரு சிறுமியைப் பூப்படைந்தவளாக ஆக்கும் விசித்திரமான வழக்கம் இவர்களிடையே உள்ளது. இச் சடங்கின்போது அதற்குரிய சிறுமியினை தனித்த அறையொன்றில் இருக்கச் செய்து அவள் பூப்படைந்துள்ளதாக அறிவிப்பர். இச் சமயத்தில் அண்டை அயலாரான சாதியினைச் சேர்ந்த பெண்களும் வண்ணாத்தியும் அந்தச் சிறுமியின் இல்லத்திற்கு வந்து சேர்வர். வண்ணாத்தி அச் சிறுமியின் தலையில் சிறிது நல்லெண்ணெயினை ஊற்றுவாள். பின் அவள் உடம்பில் மஞ்சள் பொடி தேய்க்கப்படும். அதன்பின் அவள் பூப்படைந்ததாக அறிவித்து அவளைக் குளிக்கச் செய்து நான்கு நாள்கள் தீட்டுக்கு உரியவளாகக் தனி அறையில் இருக்கச் செய்வர். பிற சாதியாரிடையேயும் காணப்படும் இப்பழக்கத்தை இன்று பெரும்பாலானவர்கள் கைவிட்டு வருகின்றனர்.

உடமை உரிமை பேணுவதில் வாலன்கள் தந்தையின் உடமை மகனுக்கு உரியதாக ஆகும் ஒரு முறையினை மேற்கொள்வதோடு ஒருவன் உடமைகள் அவனோடு உடன்பிறந்தவள் பிள்ளைகளுக்கு உரிமையாகும் நெறியினையும் பேணுகின்றனர். ஒருவன் தன் சொந்த முயற்சியில் ஈட்டிய தனி உடமைகளை அவனுடைய மக்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். ஒருவன் பரம்பரை உடமைகள் அவனுடைய உடன்பிறந்தோருக்குச் சென்று சேரும். வாலன்களுள் பெரும்பான்மையோர் தினக் கூலிகளே. அவர்களுக்கு உரிய உடமைகள் தொழில் தொடர்பாக பயன்படுத்தும் கருவிகளும் பிற சாதனங்களுமேயாம்.

பிற சாதியாரிடையே இருப்பதைப் போலவே வாலன்களுக்கும் சாதிச் சபைகள் உள்ளன. இவர்கள் சாதித் தலைவன் அரவன் அல்லது அரவர் எனப்படுவான். இவனை மாட்சிமை பொருந்திய மன்னரே தனது தீட்டுரம் வாயிலாகப் பதவியில் அமர்த்துகிறார். அரவன் உள்ளூர்ச் சாதித்

தலைவன்களான பொன்னம்பன்களை அமர்த்தும் உரிமையுடையவர். ஒவ்வொரு தேசத்திலும் (கிராமம் அல்லது கடவு என்றும் இவர்கள் வாழும் ஊர்கள் அழைக்கப்படும்) ஒன்று, இரண்டு அல்லது மூன்று வரையான பொன்னம்பன்கள் பதவியில் இருப்பர். அரசின் அமைப்பும் ஆணையும் முறையாக இப்பகுதியில் கால்கொள்ளும் முன் அரவன்கள் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர். இன்றும் இவர்கள் ஓரளவு அதிகாரம் படைத்தவர்களாகவே உள்ளனர். சாதித் தொடர்பான சச்சரவுகளோடு கூடச் சாதியினைச் சேர்ந்தவர்கள் குற்றவியல் தொடர்பான வழக்குகளை இவர்கள் தீர்த்து வைக்கின்றார். திருமணம், சாவு முதலான அனைத்துச் சமூகச் சடங்குகளுக்கும் இவர்களுக்குக் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி இவர்களுடைய அனுமதியினைப் பெறவேண்டும். சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்கள் சாதித் தலைவனைக் கண்டு அனுமதிப் பெறச் செல்லும்போது வெற்றிலை, கட்டணம், அரிசி, நெல் ஆகியனவற்றை அன்பளிப்பாகக் கொண்டு செல்வர். எல்லாச் சடங்குகளையும் முறைப்படி நடத்தி வைக்க அரவன் தனக்குக் கீழே உள்ள பொன்னம்பனுக்கு ஆணை வழங்குவான். சடங்கு நிகழ்ச்சிகளின்போது கடவுகளின் தலைவர்களான பொன்னம்பர்களும் சில அன்பளிப்புக்களைப் பெற உரிமையுடைவர்கள். அரவன் பதவி, பரம்பரை உரிமை உடையது அன்று ஆயினும் ஒருவன் இறந்தபின் அது அவன் குடும்பத்தைச் சேர்ந்த அடுத்த மூத்த உறுப்பினருக்குச் சென்று சேர்வதே வழக்கமான உள்ளது. இவ்வாறு பதவி உரிமை பேணுபவர்கள் இறந்துபோனவனுடைய மகன், உடன்பிறந்தவன், உடன்பிறந்தவன் மகன் ஆகியவர்களுள் யாராக வேண்டுமாயினும் இருக்கலாம். சில சமயங்களில் வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனை இப் பொறுப்பில் அமர்த்துவதும் உண்டு. அரவன் ஓணம் திருவிழாவின்போது அரசரிடமிருந்து இரண்டு வேட்டிகளும், அதேசமயம், விசு நாள்களின்போது ஆறணா எட்டுக் காசுகளும் பெறுவதற்கும் உரிய உரிமையுடையவன். அரவன் ஒருவன் இறக்கும்போது அரசர் பட்டுத் துணித் துண்டு ஒன்று, சிறு துண்டு சந்தனக்கட்டை, பத்து ரூபாய் முதலியனவற்றை அவனுடைய சாவுச் சடங்குகளை நடத்த அனுப்பி வைப்பார்.

இந்து சமயத்தை மேற்கொண்டுள்ள வாலன்கள் சிவன், விட்டுணு மற்றும் இந்துக்களின் புராணங்களில் கூறப்பட்டுள்ள பிற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். பிற சாதியினரைப் போலவே இவர்கள் பகவதியிடம் மிகுந்த மதிப்பு வைத்துள்ளனர். செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் அவளுக்கு அரிசி, மாவு, கள், இளநீர், வாழைப்பழம், கோழி முதலியனவற்றைப் படைத்து வழிபாடு நிகழ்த்துவர். மார்ச் மாதத்தின் இடையில் (மாசி மாதத்து இறுதியில்)

கும்பம் பரணி (சேவல் திருவிழா) என்ற திருவிழாவினை அவளுக்காகச் சிறப்பாக நடத்துகின்றனர். அப்பொழுது நாயர்களும் தாழ்ந்த சாதியினரும் பகவதிக்குச் சேவல்களைப் பலியாகத் தந்து வரும் கோடைப்பருவத்தில் தங்களை நோய் நொடிகளிலிருந்து காக்குமாறு வேண்டுவர். இந்தத் திருவிழாவிற்கு மலபார், கொச்சி, திருவாங்கூர் ஆகிய எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் "நட, நட" நடைப்பாட்டு பாடியபடி கொடுங்கோளூரிலுள்ள பகவதி கோயிலுக்குப் பெருந்திரளாக வந்து சேர்வர். கோயிலை நோக்கிச் செல்லும்போது நட நட எனக் கூவியபடி செல்லும் இவர்கள் இடையிடையே தேவியினைப் பலவாறு பழித்துத் தூற்றுபவர்களாகச் செல்வர். இத்தகைய பழிச் சொற்கள் அவளுக்கு விருப்பமானவை என நம்பும் இவர்கள் கோயிலுக்கு வந்து சேர்ந்தபின் அதனை எவ்வளவுக்கு எவ்வளவு அசுத்தப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அசுத்தப்படுத்துவர். இவ்வாறு கோயிலை அசுத்தம் ஆக்குவதையும் அவளுக்கு விருப்பமானது என நம்பும் இவர்கள் கற்கள், குப்பை கூளம் ஆகியனவற்றை அவளைப் பழித்துத் தூற்றியபடி கோயிலை நோக்கி வீசி எறிவர். அரயன் சாதியின் தலைவனான கோழி முட்டத்து அரயன் கோயிலில் முதலில் நுழையும் உரிமைக்கு உரியவன். கோயிலினுள் அண்மையிலேயே தெய்வ உருவம் வைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இக் கோயிலினுள் பாதி திறந்த நிலையில் உள்ள கல்லாலான கதவு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இந்துக்களும் கிறித்தவர்களும் இது பற்றிய ஒரு நம்பிக்கையை உடையவர்களாக உள்ளனர். கிறித்தவ சமயம், இந்து சமயம் பற்றியான சிறப்புகளைப் பற்றிப் புனிதர் தாமசும் பகவதியும் பள்ளித்துறையில் உரையாடியதாக இவர்கள் நம்புகின்றனர். அப்போது விவாதம் சூடு பிடிக்கப் பகவதி மேற்கொண்டு விவாதிப்பது பயனில்லை எனக் கருதியவளாக அங்கிருந்து குதித்து கொடுங்கோளூர் ஆற்றினைக் கடந்து நேரே கோயிலினுள் வந்து புகுந்துகொண்டாள். தோல்வியினை ஒப்புக் கொள்ள விரும்பாத அவள் புனிதர் தாமஸ் அவளைத் தொடர்ந்து விரைந்து கோயிற் கதவினை மூடும் தருவாயில் அதனிடையே கால் வைத்து அதனை மூடமுடியாதபடி தடுத்தார். ஒருவர் அதனைத் திறக்க முடியாதபடியும், மற்றவர் அதனை மூடமுடியாதபடியும் அங்கு அவர்கள் இருவரும் அந்தக் கதவு கல்லாக மாறும்வரை அப்படியே நின்றிருந்தனர்.

கொடுங்கோளூரில் நிகழ்த்தப்படும் மற்றொரு முக்கியமான திருவிழா மகரவிளக்கு, இது தை மாதம் முதல் நாளன்று கொண்டாடப்படுகின்றது. அன்றிரவு கோயிலின் உள்ளும் புறமும் மிகுதியான எண்ணிக்கையில் விளக்குகளை ஏற்றி வைப்பர். நன்கு அலங்கரிக்கப்பட்ட பத்து பன்னிரண்டு

யானைகள் முரசுகளும் இன்னிசைக் கருவிகளும் முழுங்கப் பலமுறை கோயிலைச் சுற்றிவரும்.

சபரிமலையில் ஐயப்பன் எனப்படும் சாஸ்தர காட்டு நிலத் தெய்வமாவர். இவருடைய கோயில் திருவாங்கூரில் உள்ள சபரிமலையில் உள்ளது. வாலன்கள் இவரிடம் மிகுந்த பக்தி பூண்டுள்ளனர். மேலும் இவர்கள் கள்ளச்சன் முறி, கொச்சு மல்லன் ஆகிய தீங்கு இழைக்கும் கிராம தேவதைகளையும் கோழிகளைப் பலியிட்டு வழிபடுகின்றனர். இவர்களுக்கெனக் கொடுங்கோளூரில் ஒரு காப்புத் தெய்வம் உள்ளது. இவர்கள் தங்கள் மூதாதையாரின் ஆவிகளையும் மிகவும் மதித்துப் போற்றி வழிபடுகின்றனர். அமாவாசை, கர்க்கடகம், துலாம், மரக சங்கிராந்தி ஆகிய நாள்களில் அந்த ஆவிகளுக்குப் படையலிடுவர்.

பிற சாதியாரைப் போலவே வாலன்களும் மண்டல விளக்கு, சிவராத்திரி, விசு, ஓணம், தசரா ஆகிய திருவிழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

மண்டல விளக்கு மண்டலம் எனப்படும் கார்த்திகை மார்கழி மாதங்களின் இறுதிப் பத்து நாள்கள் நிகழ்த்தப்படுகிறது. இச் சமயத்தில் பகலில் இன்னிசைக் கருவிகளை முழக்கியவர்களாக மகிழ்ந்து திரியும் வாலன்களுள் சிலர் இரவில் காந்தர்வன், யட்சி, பகவதி முதலிய தெய்வங்களுள் ஒன்று ஏறப்பட்டவர்களாகத் தெய்வவாக்கு உரைப்பர். அப்போது வருங்காலம் பற்றிக் கேட்கப்படும் கேள்விகளுக்கு அவர்கள் கூறும் பதில்களைக் கருத்துடன் கேட்டு அதன்படி நடப்பர். ஆடு, கோழி, இளநீர், வாழைப்பழம் முதலியன இவ்வாறு தெய்வம் ஏறப்பட்டவர்களுள் உறையும் தேவதைகளுக்காகப் படைக்கப்படும். இப்படையல்களைப் பின்னர் அங்கு கூடியுள்ள சாதியினைச் சேர்ந்தவர்களிடையே வழங்குவர்.

மாசி மாதத்து இறுதியில் சிவராத்திரி விழாக் கொண்டாடப்படுகிறது. அன்று நாள் முழுவதையும் சிவனை வழிபடுவதில் செலவிடுவர். வாலன்களும் பிற சாதியாரைப் போலவே ஆலவாய்க்குச் சென்று ஆற்றில் குளித்து, இரவு கண்விழித்துச் சிவபுராணங்களைப் படிப்பதோடு சிவன் பெயர்களைப் பலமுறை உருவேற்றுவர். மறுநாள் அதிகாலையில் மீண்டும் குளித்துச் சோற்றுருண்டைகளை மூதாதையருக்குப் படைத்து இல்லம் திரும்புவர்.

வாலன்களுக்கு என்று தனியே கோயில்கள் இல்லை. முக்கியமான நாள்களில் இவர்கள் உயர்சாதியாருக்குரிய கோயில்களுக்குச் சென்று வெளிப் பிரகாரத்திலிருந்து தொலைவாக நின்றே வழிபாடு நிகழ்த்துகின்றனர். முக்கியமான சமயத் திருவிழாக்களின் போது எம்பரன்களை அழைப்பர். அவர் இவர்களுக்காக கலசம் சடங்கினை நடத்துவிப்பார். அதற்காக அவர்களுக்குத் தாராளமாக அன்பளிப்புக்களை வழங்குவர். கலசம் நீர் நிறைந்த பானையாகும். அதனுள் மாவிலையும் தர்ப்பைப் புல்லும் வைக்கப்பட்டிருக்கும். புல்லின் ஒரு முனையினை நீருள்ள பானையில் விட்டு மறுமுனையினைக் கையால் பற்றியபடி வேத மந்திரங்களை ஓதுவர். இவ்வாறு புனிதப்படுத்தப்பட்ட நீர் தெய்வ உருவங்களை நீராட்டப் பயன்படுத்தப்படும். மற்றவர்களுடைய சமய நெறியோடு வாலன்களுடைய சமய நெறியினை ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்கள் ஆவிகளையும் பேய், பிசாசு முதலிய தெய்வங்களையும் வணங்குபவர்கள் எனப் புலனாகும். எனினும் இவர்கள் உயர்நெறி சார்ந்த தெய்வ வழிபாட்டினை மிக விரைந்து ஏற்று வருகின்றார்கள் என்பதில் ஐயமில்லை. காலப் போக்கில் மிகுதியாகக் கல்வியறிவு பெற்றவர்களாக இவர்கள் மாறி வருவதால் சமய நூல்களைக் கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். படகு வலிக்கும்போது பாடப்படும் வஞ்சிப் பாட்டு எனப்படும் பாடல்களைப் புராணக்கதைகளின் அடிப்படையில் கட்டிப்பாடுவோர் இவர்களிடையே உள்ளனர்.

வாலன்கள் இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோ செய்வர். இறந்தவரின் மகனோ உடன்பிறந்தவன் மகனோ கருமாந்திரம் சடங்குகளைச் செய்வான். சித்தையன் எனப்படும் பூசாரி காட்டும் வழிமுறைகளைப் பின்பற்றி அவன் சாவுச் சடங்குகளை நிகழ்த்துவான். அப்போது பூசாரி புதுவேட்டி, தலைப்பாகை, பூணூல் ஆகியன தரித்தவனாக இருப்பான். இரண்டாம், ஐந்தாம், ஏழாம் நாள்களின்போது கருமாந்திரம் செய்பவன் அதிகாலையில் குளித்து இறந்தவரின் ஆவிக்குச் சோற்றுருண்டைகளைப் பலியாகத் தருவான். பதின்மூன்றாம் நாள்வரை இதுபோலப் பலி தரப்படுவது தொடரும். அன்று நெருங்கிய உறவினர்கள் முகம் மழித்துக் கொள்வர். பதினைந்தாம் நாள் உள்ளூரைச் சாதியினர், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு நல்ல விருந்து தருவர். பதினாறாம் நாள் இறந்துபோனவரின் ஆவிக்கு மீண்டும் மனைப் பிண்டம் எனப்படும் பலி தருவர். அந்தப் பலி உருண்டைகள் அருகில் உள்ள உப்பங்கழிகளுள் எறியப்படும். சடங்கு நடத்தப்படும் நாள்களில் தினமும் பூசாரிக்கு

ஒரு பாத்திரம் நிறைய அரிசியினைத் தருவதோடு அவருடைய பணிக்கு ஈடாகப் பத்துரூபாயும் வழங்குவர். சாவுச் சடங்குகளை முறையாக நடத்தவில்லையாயின் இறந்தவரின் ஆவி வீட்டைச் சுற்றியபடி இருக்கும் என நம்புகின்றனர். அவ்வாறு நிகழுமாயின் ஒரு சோதிடரிடம் சென்று அவருடைய அறிவுரையினைப் பெற்று அதன்படி நடப்பர். அவர் சம்உறார உேறாமம் நடத்தும்படி பணிப்பார். இறந்தவருடைய உருவத்தை வெள்ளி அல்லது தங்கத்தால் செய்து வைத்து மந்திரங்களை ஓதி அதனைத் தூய்மைப்படுத்துவர். மற்றுமொரு புனிதப்படுத்தும் சடங்கை நிகழ்த்தி அந்த உருவத்தை ஒரிரு ரூபாய் காணிக்கையுடன் கோயில் பூசாரி ஒருவரிடம் சேர்த்துவிடுவர். இத்துடன் சாவுச் சடங்குகள் முடிவுறுகின்றன.

வேறு சில சாதியாரைப் போலவே வாலன் சாதிச் சிறுமியருக்கு ஒரு வயதாக இருக்கும்போது காது குத்தப்படுகிறது. ஓர் இறகு, நூல், அல்லது மரக் குச்சியினை காதின் துளையில் இட்டு வைப்பார். தேங்காயெண்ணெய் தடவிப்புண்ணை ஆற்றுவர். அதன்பின் ஓர் ஈயக்குச்சியினைத் துளையில் சொருகுவர். காதுத் துளை படிப்படியாகப் பெரிதாகப் பெரிதாக வாழையிலை, தென்னோலை, பனையோலை ஆகியவற்றைச் சுருட்டிக் காதுத் துளையில் இட்டு வருவர்.

வாலன்கள் படகு வலிப்பதில் கைதேர்ந்தவர்கள். கொச்சி அரண்மனையில் நடைபெறும் முடிசூட்டு விழாவிற்கு மாட்சிமை தங்கிய மன்னரைப் படகில் அமர்த்தித் திருப்புனத் துறையிலிருந்து அழைத்துச் செல்லும் தனியுரிமை வாலன்களுடையது. அப்போது அரவன் கையில் வாளேந்தியவனாக அரசரின் முன் படகில் நின்றிருப்பான். மேலும் உப்பங்கழிகளில் அரசு விழாக்கள் தொடர்பாக அரசர் படகில் செல்லவேண்டியிருக்கும்போதும் இவர்கள் படகு வலித்துச் செல்வர். சென்னை மாநில ஆளுநர் அல்லது பிற உயர் அலுவலர்கள் வருகை தரும்போது சாதித் தலைவனே ஒரு பாம்புப் படகினை அவர்கள் ஏறிவரும் படகுக்கு முன் வழிகாட்டிபோல வலித்துச் செல்வான். உயர் அலுவலர்களும் அவர்களோடு உடன்பவருபவர்களும் ஏறிச் செல்லும் படகுகளைச் செலுத்தத் தேவையான அளவு வாலன்களைத் தந்து உதவ வேண்டியதும் சாதித் தலைவன் கடமையாகும்.

கடக்கோடி எனப்படும் கடல் அரையன்கள் வாலன்களைவிட சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்கள். இவர்களும் வாலன்களைப் போலக் கடற்கரையினைச் சார்ந்தே வாழ்கின்றனர். போர்த்துகீசியருக்கும்

டச்சுக்காரருக்கும் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் கடல் அரையன்கள் பேருதவியாக இருந்துள்ளனர். அவர்களுடைய பொதிகளைப் படகில் ஏற்றிக் கரைக்குக் கொண்டு சேர்ப்போராகவும் தேவையான மீன்களை வழங்குபவர்களாகவும் இவர்கள் உதவியுள்ளனர். முன்பெல்லாம் சமூகப் படிநிலையில் தாழ்ந்தவர்கள் என்ற காரணத்தால் கடல் அரையன்கள் சாலைகளில் நடக்க அனுமதிக்கப்படவில்லை. போர்த்துகீசியர் கைமேலாங்கியிருந்த காலக்கட்டத்தில் இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ரோமன் கத்தோலிக்கப் பிரிவுச் சமயத் தொண்டர்கள் இவர்களுள் பொரும்பாலோரைத் தங்கள் சமயத்திற்குச் சமய மாற்றம் பெறச் செய்து இவர்களின் சமூகத் தகுதியினை உயர்த்தினர். கடல் அரையன்கள் கடலில் மீன் பிடிப்பவர்கள். மலபாரைச் சேர்ந்த அரசர் ஒருவர் இறப்பாரானால் மீன் பிடிப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்ட்டு அதனை மீண்டும் மூன்று நாள்களுக்குப் பிறகு தொடங்குவர். இறந்தவரின் ஆவி எத்தகைய இடையூறுக்கும் உள்ளாகாமல் சென்று தங்குவதற்குரிய இடத்தை அது தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காகவே இவ்வாறு மீன் பிடிப்பது நிறுத்தி வைக்கப்படுகின்றது.

கடல் அரையரிடையே சங்கன், பரதன், அமுக்குவான், முக்குவன் என்ற நான்கு தனித்த பிரிவுகள் இருப்பதாக அவர்களே கூறுகின்றனர். இவர்களுள் அமுக்குவன் பிரிவினர் பூசாரித் தொழிலை மேற்கொண்டவர்களாக உள்ளனர். இச் சாதியார் கட்டோட்டில்லம் கரோட்டில்லம், செம்பாட்டில்லம், பொன்னோட்டில்லம் என்ற நான்கு இல்லப பிரிவினராகப் பிரிவுபட்டுள்ளனர்.

கடல் அரையன் சாதிச் சிறுமியர் பூப்படையும் முன்போ பூப்டைந்த பின்போ மணம் செய்விக்கப்படுகின்றனர். வாலன் சாதியாரிடையே பூப்படையும் முன் கட்டாயமாக நடத்தப்பட வேண்டிய தாலிகட்டுச் சடங்கினைக் கடல் அரையன்கள் தள்ளி வைத்து திருமணச் சடங்கோடுகூட ஒன்றாக நடத்துகின்றனர். மணத்துக்கு முந்தைய பேச்சு வார்த்தைகள் வாலர்களிடையே நடப்பதைப் போலவே நடைபெறுகின்றன. திருமணத்துக்கான முகூர்த்த நேரத்தைக் காலை மூன்று மணியிலிருந்து எட்டு மணிக்குள்ளாக வைத்துக் கொள்வர். மணத்திற்கு முந்திய நாள் மாலை மணமகனும் அவனைச் சேர்ந்தோரும் மணமகள் இல்லம் வந்து சேர்வர். அங்கு அவர்களை வரவேற்றுச் சிறப்பாக விருந்து தருவர். அதன்பின் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்ட பந்தலில் விருந்தினரோடு கூட மணமகளும்

மணமகனும் தனித்தனியே உட்கார்ந்திருப்பர். வாலன் சாதியினைச் சேர்ந்த வண்ணானும் அவன் மனைவியும் சீதை அல்லது பார்வதியின் திருமணம் தொடர்பான கதைப்பாடல்களைப் பாடுவர். இதனைப் பாடக் கேட்பது மணமக்கள் மனம் ஒருமைப்பட்டவர்களாக வாழ உதவும் என்று நம்புகின்றனர். இக்கதை நிகழ்ச்சி பொழுது புலரும்வரை நிகழும். அப்போது பூசாரி தாலியினை மணமகன் கையில் தர அவன் அதனை மணமகள் கழுத்தில் கட்டுவான். அதன் பின்னரும் ஓரிரு மணிநேரம் கதைப்பாடல்கள் பாடப்படும். அதன்பின் பொலி தொடங்கும். கூடியுள்ள விருந்தினர்கள் தங்கள் சக்திக்கேற்ப ஒரு ரூபாய், எட்டணா, நான்கணா என அன்பளிப்பாக வழங்குவர். இத் தொகையினைப் பூசாரிக்கும், பாட்டுப் பாடியவர்களுக்கும் முழவு அடித்தவர்களுக்கும் தரப்படவேண்டிய கட்டணத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வர். பகல் பன்னிரண்டு மணிக்கு விருந்தினருக்கு மீண்டும் சிறப்பாக விருந்திடுவர், அதன்பின் மணமகனும் அவனைச் சேர்ந்தோரும் மணமகளோடு மணமகன் இல்லம் திரும்புவர். அவர்கள் புறப்படும்போது அல்லது அதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக மணமகன் சில ரூபாய்களையோ சில சவரனையோ மணமகளுடைய சேலையின் ஒரு முனையில் வைத்து முடிவான். இது அவளை அவனோடு வர ஊக்குவிக்கத் தரப்படுவதாகலாம். அப்பொழுது மணமகளுக்கு உரிய விலையான *101* புத்தன்கள் *(ரூ.5-12-4)* அவளுடைய பெற்றோருக்குத் தருவர். மணமகன் இல்லத்தில் மணமகளோடு உடன் வந்தவர்களை உண்பிப்பர். அங்குச் சுப வேளையில் மணமக்களை ஒன்றாக அமர்த்தி அவர்களுக்கு வாழைப்பழமும் பாலும் தருவர். அப்பொழுது மணமகளை மணமகன் குடும்பத்தைச் சேர்ந்தவளாக அறிவிப்பர். சிறுமி ஒருத்தி திருமணத்திற்குப் பின் பூப்படைவாளானால் அவளைத் பதினொரு நாள்களுக்குத் தனியே இருக்கச் செய்வர். முதலாம், நான்காம், ஏழாம், பதினொன்றாம் நாள்களின்போது அவள் குளிப்பாள். பதினொன்றாம் நாளன்று சாதியினைச் சேர்ந்தவர்களுக்குச் சிறப்பாக விருந்திடுவர். இதற்கான செலவினை அவளுடைய கணவனே ஏற்றுக் கொள்ளவேண்டும். கடல் அரையன்களிடையே பெரும்பாலும் ஒருத்திக்குமேல் மனைவியரை மணக்கும் வழக்கம் இல்லை கைம்பெண் ஒருத்தி தன் கணவன் இறந்த ஓராண்டிற்குப் பின் சாதியினைச் சேர்ந்த ஒருவனோடு குடும்பம் நடத்தலாம். அவள் தன் கணவனோடு உடன்பிறந்தவர்களை மணந்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் மக்கள் வழித் தாய உடைமை உரிமை முறையினையே மேற்கொண்டுள்ளனர்.

கடல் அரையன்களுக்கும் அரவான்கள் என்ற சாதித் தலைவர்கள் உள்ளனர். இவர்களுடைய பொறுப்புகள் வாலன் சாதித் தலைவர்களின்

பொறுப்புகளை ஒத்தனவே. அரச குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவர்களான ஆண், பெண்கள் யாரேனும் இறப்பாராயின் மசானத்திற்குத் தன்னுடைய திருமுலகழச்சோடு முதலில் சென்று இருக்கும் உரிமை அரவனுடையதே. அவனுடைய திருமுல்கழச்சில் வாழையிலையில் மடித்துக் கயிற்றால் கட்டப்பட்ட சிறிது உப்பும் வெளீசுகாசு அல்லது வேறொரு தங்கக் காசும் இருக்கும். அரச குடும்பத்தினர் துக்கம் கொண்டாடும் சமயத்தில் தர்பாரைச் சேர்ந்த அலுவலர்களும் பிற பிரதானிகளும்., பெருமக்களும் அரவன் சென்று துக்கம் விசாரித்த பிறகே சென்று துக்கம் விசாரிக்க அனுமதிக்கப்படுகின்றனர். கொடுங்கோளூரில் இருக்கும் பகவதி கோயிலில் நடைபெறும் சேவல் திருவிழாவின்போது தீட்டுப்பட்ட சமயத்தில் கோழிமுட்டத்து அரவனே பிற சாதியாருக்கு முன் அக்கோயிலுள் நுழையும் தனி உரிமை பெற்றவன்.

கடல் அரையன்கள் இந்து சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் வழிபாட்டு முறையும் பிற சமயச் சடங்குகளும் வாலன்களுடையதைப் போன்றனவே. இறந்தவர்கள் எரிக்கவோ புதைக்கவோபடுகின்றனர். சாவுத் தீட்டினைப் பதினொரு நாள்களுக்கு மேற்கொள்கின்றனர். பதினொராம் நாள் குளித்த பிறகு பங்காளிகள் தீட்டிலிருந்து விடுபட்டவர்களாகின்றனர். பன்னிரண்டாம் நாள் உறவினர்களும் நண்பர்களும் உள்ளிட்ட சாதியினைச் சேர்ந்த ஊரார் அனைவருக்கும் நல்ல விருந்திடுவர். கருமாந்திரம் செய்யும் இறந்தவரின் மகன் ஓராண்டு காலம் முகம் மழித்துக் கொள்ளாமல் தீக்சா மேற்கொள்வான். அவன் இறந்தவரின் நினைவாக ஆண்டுதோறும் சிரார்த்தச் சடங்கை நிகழ்த்துவான்.

கொச்சியின் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் சில முறைகளைப் பற்றி முனைவர் பிரான்சிஸ் டே பின்வருமாறு* விளக்குகின்றார்: அதிகாலையில் அல்லது பிற்பகலில் கடற்கரையில் *50* முதல் *100* கெச இடைவெளிவிட்டு நின்றவர்களாகப் பல மீனவர்கள் வீசு வலையினைப் பயன்படுத்தி மீன் பிடிக்கின்றனர். கடல் நீர்ப்பரப்பைக் கவனமாக பார்த்தபடி இருக்கும் இவர்கள் மீன்கள் போதுமான அளவு கரையை நெருங்கி வந்துள்ளன எனக் கண்டவுடன்

* பெருமாள்களின் நாடு அல்லது கொச்சி, அதன் தொன்மையும் இன்றைய நிலையும், *1863*.
(The Land of the Perumals or Chocin, its past and its present, 1863).

விரைந்து சென்று தங்கள் வலையை மீன்கள் மீது வீசுவர். ஐரோப்பாவில் மீனவர்கள் வலையினை அதற்கு வேகம் கொடுப்பதற்காக பலமுறை தலையைச் சுற்றித் திருப்புவதைப்போல இவர்கள் வலையினைத் தலைக்கு மேல் சுற்றுவதில்லை. வலையை வீசுபவனே வலையோடு கூடச் சுற்றிச் சுற்றி வந்தவனாகிப் பின்வலையினை வீசுகின்றான். அடிக்கடி இந்த மீனவர்கள் அலையால் மோதப்பட்டுக் கீழே தள்ளப்படுகின்றனர். மீன் கிடைத்தால் அவை கெட்டுப்போகாமல் இருக்க அதனை மணலில் புதைத்து வைப்பர். அகலமான உள்நாட்டு ஆறுகளில் மீனவர்கள் வீசு வலையினைப் பின்வருமாறு பயன்படுத்துகின்றனர். ஒவ்வொருவருடனும் சிறுவன் ஒருவன் மூங்கிலால் வலிக்கும் படகில் இருப்பான். மீனவர்கள் ஒரு வீசு வலையினையும் ஒரு காலி யான தேங்காய்ச் சிரட்டையினையும் வைத்திருப்பர். இதனை அவன் படகுக்கு முன்னால் இருபது கச தூரத்தில் சென்று விழுமாறு வீசுவான். தண்ணீரை வாரியிறைத்தபடி நீரில்வந்து அது விழும். இவ்வாறு தேங்காய்ச் சிரட்டையினை வீசுவது முதலைகளை விரட்டுவதற்காக என்று கூறப்படுகிறது. தேங்காய்ச் சிரட்டை சென்று விழுந்த இடத்தைப் படகு நெருங்கும்போது அங்கு அவன் தன் வலையினை வீசுவான். சிறு மீன்களைப் பிடிக்கவே இம்முறை கையாளப்படுகிறது. ஒரே இடத்தில் மீன் பிடிக்க இதுபோலப் பதினைந்து படகுகள் வரை பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஒன்றின்பின் ஒன்றாக விரைந்து செல்லும் இவற்றுள் சில ஆற்றின் நடுவிலும் சிற ஆற்றின் ஓரங்களிலும் சென்றபடி இருக்கும்.

உப்பங்கழிகளில் நீண்ட மூங்கில்களை இடைவெளிவிட்டு இருவரிசையாக நட்டிருப்பர். இவற்றின்மீது கடல் ஏற்றத்தின்போது வந்து சேர்ந்த மீன்கள் கடலுக்குத் திரும்பமுடியாத படி வலைகளைக் கட்டிப்போட்டிருப்பர். இவ்வகையில் சில சமயங்களில் பெரிய மீன்கள் பல அகப்படுவது உண்டு. ஆற்றங்கரைகளை ஒட்டி ஒருவகை சீன வலைகளைப் பயன்படுத்துகின்றனர். இவை *16* அடிச் சதுரம் உடையவை. நான்கு முனைகளும் மூங்கிலோடு பிணைக்கப்பட்டு வாளிபோல இவை நீருள் மூழ்கியபடி கிடக்கும். சில நிமிடங்கள் சென்றபின் இவற்றை மேலே இழுப்பர். தென்னங் குருத்தோலைத் துண்டுகள் பிணைக்கப்பட்ட கயிறு ஒன்று நீர் வடியும் பக்கமாகக் கட்டப்பட்டு மீன்கள் வெளியேறாதபடி காப்பாக அமைந்திருக்கும். இது நண்டுகளைப் பிடிக்கச் சிறிய அளவில் பயன்படுத்தப்படும் வழிமுறையினை ஒத்தது. மூன்றடி சதுரமான வலையின் குறுக்கே இரு குச்சிகளைக் குறுக்காக வைத்து வலையின் நான்கு மூலைகளையும் குச்சிகளோடு பிணைத்திருப்பர். அக் குச்சிகள் குறுக்காகச்

சந்திக்கும் இடத்தில் இந்த வலையினை மேலே இழுக்கவும் கீழே விடவும் உதவும்படியாக ஒரு கயிறு பிணைக்கப்பட்டிருக்கும். வலையின் உள்ளே இறைச்சித் துண்டு ஒன்றினைக் கட்டிப் போட்டிருப்பர். இதனை ஒரு மேடையிலிருந்து தண்ணீருள் விட்டுச் சில நிமிட நேரம் சென்ற பின் மேலே இழுப்பர். இறைச்சியினைத் தின்ன வரும் நண்டுகளை இவ்வாறு பிடிக்கின்றனர்.

"ஆழ்கடலில் தூண்டிலிட்டு மீன் பிடிப்பது அரிதாகவே நிகழ்கின்றது. சுறா, கதிர்மீன் முதலிய பெரிய மீன்களே இவ்வகையில் பிடிக்கப்படுகின்றன. இதற்காக இரண்டு வகைத் தூண்டில்களைப் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் ஒன்று இந்தியர் தயாரிப்பது. இது முரட்டு வேலைப்பாடுடையதாயினும் உறுதியானதாகும். மற்றது இங்கிலாந்தில் செய்யப்படும் சீனத் தூண்டிகள் எனப் பெயரிடப்பட்டவை. தும்பு எனப்படும் ஒருவகை நார்க் கயிற்றில் தூண்டிலினை இணைப்பர். இந்த நார்க் கயிறு கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனினும் இவை தென்னைவகை ஒன்றின் நார்கயிறாக இருக்க வேண்டும் என்றே கருதுகின்றேன். தூண்டில் கயிறு, சணல், பருத்தி (*Caryota urens*) ஆகியவற்றின் நாரால் ஆனதாக இருக்கும். இதன் நாரை ஊறவைத்து இக்கயிறு தயாரிக்கின்றனர். ஐரோப்பாவில் இதனை இந்தியன் கட் என அழைப்பர்.

"கடற்கரையிலிருந்து ஆற்றின் கழிமுகம்வரை தூண்டில் வீசி இழுத்து வருவது கடல் அமைதியாக இருக்கும் குளிர்பருவத்தில் காலை மாலை வேளைகளிலேயே நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாறு இழுத்து வருவதற்கான தூண்டில்கயிறு *80* முதல் *100* கெசம் வரை நீளம் உள்ளதாக இருக்கும். இதனை இடது கையில் சுற்றிக் கொண்டிருப்பர். தூண்டிலை ஒரு பித்தளைக் கம்பியால் தூண்டில் கயிற்றோடு பிணைத்திருப்பர். உயிருள்ள ஒரு மீனே தூண்டிலில் இரையாகச் சொருகப்பட்டிருக்கும். மீனவன் தூண்டில் கயிற்றுக்கு வேகம் தருவதற்காக அதனைத் தன் தலைக்குமேல் சுழற்றியபின் அதனைச் சரியாகக் குறிபார்த்து *50* முதல் *60* கெச தூரத்தில் விழும்படி வீசி எறிவான். அந்த இடத்தின் அருகே ஒருவன் வலையோடு கூடவும் தூண்டில் இரை மீனோடும் காத்தபடி இருப்பான். அவன் அந்த மீன்களைக் காலணாவிற்கு ஒன்று என விற்றபடி இருப்பான். இம்முறை மிகவும் பரபரப்பான மீன் வேட்டை எனலாம். இதில் பயன் மிகக் கிடைக்குமா என்பதனையும் உறுதியாகக் கூறமுடியாது. எனவே இதனைக் கூலி வேலைக்குப் போகின்றவர்கள் தங்கள் வேலை தொடங்கும் முன்போ அல்லது வேலையை முடித்துக் கொண்டு வந்த பின்போ மேற்கொள்கின்றனர்.

"கொச்சியில் பருவமழைக் காலத்தில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பது நாள் முழுவதும் நடைபெறுகின்றது. ஏற்றுமதி இறக்குமதி வேலை நின்றுபோயிருக்கும் சமயத்தில் ஒவ்வொரு இறங்கு துறையின் மீதும் ஐந்தாறு பேர்கள் இவ்வாறு மீன் பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கக் காணலாம். 'பகரு' மீன்கள் இச் சமயத்தில் மிகுதியாக வருகின்றது. அவை எளிதில் தூண்டில் இரையினைக் கவ்வுவதால் பெரும் அளவில் பிடிபடுகின்றன.

"சிறிய படகுகளில் சென்று மீன் பிடிப்பது சிலபோது ஆபத்தானதாகத் தெரிகின்றது. ஒரு துடுப்பினைப் போட்டபடி தனியாக ஒருவன் உட்கார்ந்து செலுத்தும் சிறிய வள்ளம் எப்பொழுது வேண்டுமானாலும் கவிழ்ந்து போகக் கூடியதாகத் தோன்றலாம். இதுபோன்ற வள்ளங்களில் செல்வோர் சில சமயங்களில் மிகப் பெரிய மீன்களைக் கூடப் பிடிக்கின்றனர். தனியொருவனால் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாத அளவு பெரிய மீன்கள் இவர்கள் தூண்டிலில் விழுமானால் அருகே வேறொரு வள்ளத்தில் மீன் பிடித்தபடி இருப்பவன் உதவிக்கு வருவான். அந்த உதவிக்கு ஈடாக அவன் அம் மீனில் கால் பங்கு பெறுவான். இவ்வாறு ஆண்டு முழுவதும் மீன்பிடிப்பர். இவ்வகையில் சில சமயங்களில் மிகப் பெரிய அளவிலான பக்ரி மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

மீன்களைப் பலமுறைகளில் அம்பு எய்து கொல்கின்றனர். சிட்டகாங் மூங்கில்குழாய் இவ் வகையில் மீன் எய்யப் பயன்படுத்தப்படுகிறது. இதனுள் உள்ள அம்பினைச் செலுத்தபவன் மூங்கில் குழாயினை வாயில் வைத்து ஊதி அம்பைச் செலுத்துவான். இவ்வகையில் சில சமயங்களில் மிகுதியான மீன்களை வீழ்த்த முடியும். கடற்கரை, அருவிக் கரை, உப்பங்கழிக்கரை ஆகியவற்றில் மறைந்திருந்து இவ்வாறு அம்பெய்வர். சிலபோது இவர்கள் மரங்களில் ஏறி அமர்ந்து நல்ல வாகான மீன் வரும்வரைக் காத்திருப்பர். மழைப் பருவத்தில் இவர்கள் சிற்றோடைகள் பெரிய பரப்புடைய ஆறுகளில் கலக்கும் இடத்தில் மீன்களின் வருகையினை எதிர்பார்த்துக் காத்திருப்பர். சில மீனவர்கள் வில்லையும் அம்பையும் பயன்படுத்தி மீன்களை எய்வர். சிலர் குறுக்கு வில்களைப் பயன்படுத்துவர். இவற்றில் வைத்து எய்யும் இரும்பாலான அம்புகள் தொலைந்து போகாமல் இருக்க இவற்றோடு கயிற்றைப் பிணைத்திருப்பர். வலைவீசுதல், தூண்டில் போடுதல், அம்பால் எய்தல் ஆகியன மட்டும் மீன்களைப் பிடிப்பதற்கான வழிவகைகள் அல்ல. மூங்கில் சல்லடைகள், மூங்கில் கூடைகள் ஆகியவற்றோடு மனிதரின் கைகளுங்கூட மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆழமில்லாத உப்பங்கழிகளில் நண்டு பிடிப்போர், ஐரோப்பாவில் விலாங்கு மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் கூடைகளை ஒத்த கூடைகளைப் பயன்படுத்துகின்றனர். எனினும் இவை இரு பக்கமும் திறப்புடையனவாய் உள்ளன. மீன்களின் நடமாட்டம் இருக்கின்றது என்பது தெரியவரும்போது மீனவர்கள் சேற்றில் நடந்தபடி கூடையால் அந்த இடத்தை மூடுவர். இவ்வாறு மூடிய கூடையின்மேலே உள்ள துளை வழியாகக் கையினைவிட்டு உள்ளே உள்ள மீனினை வெளியே எடுப்பர். மீனினைக் கையால் பிடிக்க இவர்கள் கையாளும் மற்றொரு முறை வருமாறு: இரண்டு கயிறுகளில் தென்னங்குருத்து ஓலைகளை இணைத்து அவற்றை அவன் தன் கால் பெருவிரல்களில் கட்டிக் கொள்வான். அவன் கால்விரல்களிலிருந்து அவை இருபுறமும் பரந்து கிடக்கும். இந்தக் கயிற்றின் மறுமுனையை சற்றே தொலைவில் உள்ள மற்றொருவன் தன்னோடு பிணைத்துக் கொண்டிருப்பான். இந்தக் கயிறுகளை ஆட்டி உலுக்கும்போது மீன்கள் அஞ்சியனவாக இவற்றைக் காலில் கட்டிக்கொண்டிருப்பவர்கள் பாதங்களைச் சுற்றி கொள்ளும் அவற்றின் செய்கை விசித்திரமானதே. அப்போது அவன் குனிந்து தக்க சமயத்தில் அந்த மீன்களைக் கைகளால் பிடிப்பான்.

மூங்கிலாலான அடைப்புகள் உப்பங்கழிகளில் ஆங்காங்கே கிடக்கக் காணலாம். இவற்றின் உதவியால் மீன், விலாங்கு, நண்டு முதலியன பிடிக்கப்படுகின்றன. இத்தகைய தடைகள் மூங்கிலைப் பிளந்து அமைக்கப்பட்ட தட்டித் தடைகளால் அமைக்கப்பட்டு அவற்றின் போக்கு நீரிலிருந்து செங்குத்தாக மீன்களை அகப்படுத்துவதற்கு உரிய பெரியதொரு அறைக்கு இட்டுச் செல்லும். நண்டுகளைப் பிடிக்கச் செத்த பூனையினை இரையாகப் பயன்படுத்துகின்றனர். பூனையின் உடலோடு ஒரு கயிற்றை இணைத்து அதனைச் சில நாள்கள் நீரில் கிடக்கும்படி விட்டுவைப்பர். பின் அதனோடு ஒட்டிக் கொண்டிருக்கும் நண்டுகளோடு கூட அதனை வெளியே இழுப்பர். நண்டுகள் உணவாகக் கொள்ளத் தக்கன அல்ல எனக் கூறும்போது மக்கள் வியப்புத் தெரிவிக்கின்றனர். எத்தகைய தூய்மையற்ற இரையினை அவை உண்கின்றன என்பதனைக் கூறியவுடன் அவர்கள் வியப்பு நீங்கியவர்களாகின்றனர்.

உள்நாட்டு ஆறுகளில் நஞ்சினைக் கலக்கி மீன்களைப் பிடிக்கின்றனர். நீர் வற்றிய நிலையில் உள்ள ஆறுகளிலேயே இம் முறையினைக் கையாள முடியும். ஆற்றின் குறுக்கே கரையமைத்துத் தேங்கும் நீரில் நஞ்சினை இடுவர். கொக்கொலஸ் இண்டிகஸ் (*Cocclus indicus*) பழங்களை அரிசியோடு சேர்த்து

இடித்துப் பொதுவாக நஞ்சாகப் பயன்படுத்துகின்றனர். க்ரோட்டன் விதைகள் முதலியனவும் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.

வலங்கை - Valangai

வலங்கை, வலங்கான், வலங்கமத்தான், பலகை என்பனவெல்லாம் வலங்கைப் பிரிவினரைக் குறிக்கப் பயன்படும் சொற்கள். கணக்கெடுப்பின்போது இது தேவதாசி ஹெறாலையர், நோக்கர், பணிசவன், பறையன், சாலியன் ஆகிய சாதியாருக்கு உரிய மற்றுமொரு பெயராகவும் பதியப்பட்டுள்ளது. தேவதாசிகள் சிலர் தங்களை இடங்கைப் பிரிவினர் எனப் பதிந்து கொண்டுள்ளனர்.

வளையக்காரச் செட்டி - Valayakara Chetti

கண்ணாடி வளையல் விற்பவர்களான காசுல பலிசருக்கான தமிழ்ப் பெயர். இதற்குச் சமமான வளைச் செட்டி என்பதும் பதியப்பட்டுள்ளது.

வேலேக்காரன் - Velekara

வில்லைக்காரன் (பித்தளை வில்லை அணிந்த ஏவலன்) என்பதற்கான படகர் மொழிச் சொல். இச் சொல் படகர் இசைப் பாடல்களில் அடிக்கடி இடம்பெறுகின்றது. நீலகிரியில் வட்டார அலுவலகத்தில் பணிபுரியும் ஏவலர்கள் வேலேக்காரன்கள் எனப் படுகின்றனர்.

வாலி சுக்ரீவன் - Vali Sugriva

லம்பாடிகளுக்கான மற்றுமொரு பெயர். இவர்கள் இராமாயணத்தில் இடம் பெறும் வாலி, சுக்ரீவன்களின் வழி வந்தவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர்.

வலிஞ்சியன் - Valinchiyan

பார்க்க: விளக்கட்டலைவன் (See: Velakkattalavan)

வல்லபராயன் - Vallabarayan

ஒச்சன்களுக்கான ஒரு பட்டப்பெயர்

வல்லம்பர் - Vallamban

தஞ்சாவூர், திருச்சி, மதுரை மாவட்டங்களில் பயிரிடுகையினை மேற்கொண்டுள்ள தமிழ்ச் சாதியாரான வல்லம்பர் எண்ணிக்கையில்

குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். வேளாளன் ஒருவனுக்கும் வலைச்சி ஒருத்திக்கும் இடையேயான உறவின் வழி பிறந்தவர்களின் சந்ததியினராகக் கூறப்படும் இவர்கள் இன்று எண்ணிக்கையில் குறைந்தவர்களாகப் பயிரிடுகையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுள் சிலர் தங்கள் முன்னோர்கள் நிலத்தின் மீது உரிமையுடையவர்களாக இருந்து வந்ததாகவும் அவ்வாறு நில உரிமையாளராக இருந்தவர்களின் நலங்கருதியே வேளாளர் பயிர்த்தொழில் செய்து உதவி வந்ததாகவும் கூறுகின்றனர். கள்ளர்களோடு சேர்ந்து வேளம்பன்கள் வேளாளர்களைத் தாக்கி விரட்டியதாக வழக்கு வரலாறு கூறுகின்றது. நிலத்தை விற்கும்போது வல்லம்பர் தங்களை (தஞ்சாவூரில் உள்ள வல்லம் நாட்டை) இழந்தவர்களின் சந்ததியினர் எனக் குறித்துக் கொள்வர் என மதுரை மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது. சில வல்லம்பர் தங்களை இறைச்சி உண்ணும் வேளாளர் என்றும் வேளாளர் பரம்பரையினர் ஆகையினால் கள்ளருக்கும் மறவருக்கும் சாதியில் உயர்ந்தவர் எனவும் கூறிக்கொள்வர். வல்லம்தோட்ட வேளாளர் அல்லது வல்லத்தை இழந்த வேளாளர் எனக் கூறி கொள்ளும் இவர்கள் தங்களைத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வல்லத்தைச் சேர்ந்த வேளாளர் எனவும் பஞ்சத்தின் காரணமாகத் தாங்கள் பிறந்த நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது என்றும் கூறுவர்.

மதுரை, தஞ்சாவூர் மாவட்டங்களின் சில பகுதிகள் நாடுகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட சாதியார் பெரும்பான்மையினராக உள்ளனர். மதுரை மாவட்டத்திலுள்ள சிவகங்கைச் சமீனைச் சேர்ந்த வல்லம்பர்களும் கள்ளர்களும் பாளைய நாட்டார் என அழைக்கப்படுவதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். குறிப்பிட்ட ஒரு நாட்டைச் சேர்ந்த பல்வேறு சாதியாருடைய வழக்கு விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் உரிமை அந்த நாட்டைச் சேர்ந்த நாட்டார்களுக்கே உரியதாகும். இந்த நாட்டார்கள் சில தனிச் சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். கோயில்களில் பிராமணர்களுக்கும் சமீன்தார்களுக்கும் திருநீறு வழங்கப்பட்டபின் அடுத்து இவர்களுக்கு வழங்கப்படுவதை இதற்குச் சான்றாகக் கூறலாம். சாதிச் சபைக் கூட்டங்களுக்கு வல்லம்பர் பதினான்கு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்கள் சாதிச் சபை தலைமை ஊரினையும் அதனைச் சார்ந்த பிரதிநிதிகளையும் கொண்டிருக்க வேண்டும் எனக் கருதுவதால் தலைமை ஊருக்கு உரிய பிரதிநிதி தவிர மற்றப் பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களே சாதிச் சபையில் இடம்பெறுகின்றனர்.

செஞ்சிநாடு, அமராவதி நாடு, பாளையநாடு, மேல்நாடு, கீழ்நாடு என ஐந்து உட்பிரிவுகள் தங்களிடையே இருப்பதாக வல்லம்பர் கூறுகின்றனர். மேல் நாட்டையும் கீழ்நாட்டையும் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மணஉறவு கொள்கின்றனர். மேல்நாட்டாரையும் கீழ்நாட்டாரையும் வேறுபாடு கண்டறிய உதவுவது மேல்நாட்டார் மட்டும் வைத்துக் கொண்டிருக்கும் மீசையாகும். இவர்கள் பிரிவுப் பெண்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிகளைப் போல சேலை உடுத்துக் கொள்கின்றனர். பச்சை குத்திக் கொள்வதை இவர்கள் அனுமதிப்பதில்லை. இவ் விதியினை மீறிப் பச்சைக் குத்திக் கொள்பவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளாகின்றனர். ஆண்களுக்கெனப் பட்டப்பெயர் ஏதும் இல்லை. அரசுப் பணியாளர்களாக இனாம் நிலத்தை அனுபவித்து வரும் சிலர் தங்களை அம்பலக்காரன் எனக் கூறிக் கொள்கின்றனர். மேல்நாட்டுப் பிரிவினரிடையே புறமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவுகள் இல்லை. கோவில் பங்காளிகள் என்ற முறையினை இவர்கள் பின்பற்றி வருகின்றனர். கீழ்நாட்டாரிடையே புறமணக்கட்டுப்பாடு உடைய கிளைகள், கரைகள், பட்டங்கள் என்ற பிரிவுகள் உள்ளன எனத் திரு எப்.ஆர் ஹெறமிங்வே குறித்துள்ளார். இக் கீழ்நாட்டாரிடையேயான புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகளுக்குச் சோழன்கள், பாண்டியன்கள், நரியன்கள், புலியன்கள் என்ற பிரிவுகளைச் சான்றாகக் கூறலாம்.

வல்லம்பரின் சாதித் தலைவனைச் சேர்வைக்காரன் என அழைப்பதே வழக்கம். பலநாடுகளைக் கொண்ட குழுவின் தலைவன் நாட்டுச்சேர்வை எனப்படுவான். ஓர் ஊரைச் சேர்ந்த தலைவன் ஊர்ச் சேர்வை என்றோ சேர்வை என்றோ அழைக்கப்படுவான்.

வயது வந்தபின் மணம் செய்வித்தலே இவர்கள் வழக்கம். கைம்பெண்கள் மறுமணத்தினையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். ஒருவன் தன் தாய்மாமன் மகளையும் அத்தை மகளையும் மணந்துகொள்ள முறைப்பெண் உரிமை கொண்டாடலாம். இதனால் பத்து வயதே நிரம்பப்பட்ட சிறுவன் ஒருவன் மணம் ஆகாதவளாகவோ மகப்பேறு வாய்க்கப் பெறாத இருபது இருபத்தைந்து வயது நிரம்பிய ஒருத்தியாகவோ இருப்பவளுக்கு மணம் செய்விக்கப்படுதலைக் காண்கின்றோம். அச் சிறுவனின் குடும்பத்தைச் சேர்ந்த வயதுவந்த ஒருவன் - அவன் அண்ணன், சிற்றப்பன் அவன் தந்தை ஆகியோருள் ஒருவன் அவளோடு உடலுறவு கொள்வர். இந்த உறவின் வழி அவள் பெற்றெடுக்கும் குழந்தைகளை அச் சிறுவன் வயது வந்த பின் தன் சொந்தக் குழந்தைகளாகவே ஏற்றுக் கொள்வான் என மதுரை மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

இதுபோல வயதில் அதிக வேற்றுமையுடையவர்களிடையேயான மணஉறவு பற்றி வழங்கும் பழமொழி வருமாறு: "ஒரு மரக்கட்டையானாலும் சரி தாலி கட்டினால் போதுமானது." இவர்கள் திருமணச் சடங்குகள் பிராமணீய நெறி சாராதனவாகவே நடைபெறுகின்றன. வசதிபடைத்த சில குடும்பங்கள் பிராமணப் புரோகிதர்களை அமர்த்திக் கொள்கின்றன. திருமணச் சடங்கின்போது உம்பலக்காரன் எனப்படும் சாதித் தலைவன் வந்திருக்க வேண்டும். திருமணநாளன்று மணமக்கள் தங்கள் இல்லங்களில் மனைப் பொங்கல் வைப்பர். மணமக்கள் முன் மஞ்சள் கலந்த அரிசியினைச் சுற்றியும் அவர்கள் முழங்கால்கள், தோள்கள், தலை ஆகியனவற்றைப் புட்டால் தொட்டு அதனை அப்பால் வீசியும் நலங்குச் சடங்கு நிகழ்த்துவர். அவர்களின் தாய்மாமன் பழைய துணி ஒன்றினை மஞ்சள் நீரில் தோய்த்து மணிக்கட்டில் கங்கணமாக அணிவிப்பான். பொங்கலும் காய்கறிகளும் மணமேடையின்முன் தெய்வங்களுக்குப் படைக்கப்படும். மணமகனிடம் நான்கு வெற்றிலைகளைத் தருவர். அவன் மணமேடையினைச் சுற்றி வந்தவனாக அதன் நான்கு மூலைகளிலும் நின்று வெற்றிலை வழியே நீரூற்றி நான்கு திசைகளையும் வணங்குவான். பின்னர் மணமேடையில் மணைப் பலகையில் அமரும் அவன் தாலியினைத் தன் உடன்பிறந்தவளிடம் தருவான். அவள் அத்தாலியினை எடுத்துக் கொண்டு நலங்குச் சடங்கு நடத்தி முடித்தவளாகத் தன் வீட்டில் இவள் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் மணமகளிடம் செல்வாள். அங்குச் சென்று சேர்ந்ததும் அவள் மணமகளுக்கு சீதனம் எங்கே எனக் கேட்பாள். மணமகளோடு உடன்பிறந்தவர்களுள் ஒருவன் குறிப்பிட்ட ஒரு காணியின் பெயரைச் சொல்லி அது மணமகளுக்கான சீதனம் என்பான். அதன்பின் மணமகன் உடன்பிறந்தவள் சிறுமியர் வழக்கமாக மணத்திற்கு முன் கழுத்தில் அணியும் கருப்புப் பாசிமணி மாலையினை மணமகள் கழுத்தில் கட்டுவாள். கூடியுள்ள பெண்களும் குழந்தைகளும் மனைப் பொங்கலிடும் போதும் தாலிகட்டும்போதும் சங்கினை முழக்குவர். பின் மணமகள் மணமகன் இல்லத்திற்கு அழைத்து செல்லப்படுவாள். அங்கு அவள் மணமகனோடு கூட மணையில் அமர உறவினர்கள் அவர்களுக்கு அன்பளிப்பினை வழங்குவர்.

இச் சாதியாரின் இறப்புப் பற்றிய தகவல்களை உறவினர்களிடம் சென்று கூறுபவன் பறையனே, வீட்டின் முன் நான்கு கம்பங்கள் நட்டு இடப்பட்ட பந்தலின் கீழ் பிணத்தைக் கிடத்துவர். ஒரு முறத்திலிருந்து சிறிது நெல்லைப் பிணம் கிடத்தப்படும் இடத்தின்மீது தரையில் இடுவர். பிணத்தின் முகத்தின் மீதும் அரிசி தூவப்படும். இரண்டாம் நாள் அரிசி முதலிய பிற உணவுப்

பொருள்களை அம்பட்டன் பிணத்தைப் புதைத்த அல்லது எரித்த இடத்திற்கு எடுத்துச் செல்வான். பிணம் எரிக்கப்பட்டிருக்குமாயின் அம்பட்டன் எலும்புகள் சிலவற்றை எடுத்து இறந்தவனுடைய மகனிடம் தருவான், மூன்றாம் நாள் கணவனை இழந்தவள், வீட்டின் முன் உள்ள பந்தலை மும்முறை சுற்றி வந்த பின் அதனுள் நுழைந்து தன் தாலியினை அறுப்பாள். அவள் கழுத்தில் புதிய சேலையினை இடுவர். பதினாறாம் நாள் கருமாந்திரம் சடங்கினை நடத்துவர். விருந்து தரப்படுவதோடு தீட்டுக்கு உள்ளானவர்களின் தலையில் புதிய துண்டினைக் கட்டுவர். தீட்டு முப்பது நாள்வரை மேற்கொள்ளப்படுகிறது.

வல்லம்பர் சைவநெறியினையே பேணுகின்றனர். எனினும் வேலங்குடியில் வீற்றிருக்கும் பெரிய நாயகியினையே இவர்கள் தங்கள் குல தெய்வமாகப் போற்றுகின்றனர். ஒவ்வொரு நாட்டுக்கும் எனத் தனியே சிறப்பான தெய்வங்கள் உள்ளன. வேம்பு அய்யனார், நெல்லியாண்டி அய்யனார் முதலியன அத் தெய்வங்களுள் சிலவாம். சில இடங்களில் குல தெய்வ வழிபாடான செவ்வாய் வழிபாடு செவ்வாய்க்கிழமையில் நடத்தப்படுகிறது. அன்று சாதியாரால் தயாரிக்கப்பட்ட - விலைக்கு வாங்கப்படாத - அரிசிச் சாராயத்தை வழிபாடு நடக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வர். ஒரு செவ்வாய்க் கிழமையில் இந்த வழிபாடு நடத்தும் குடும்பத்தார் கொஞ்சம் அரிசியினைத் தண்ணீரில் ஊறவைப்பர். அடுத்த செவ்வாயன்று பனம்பாளையின் பூங்கொத்துக்களைப் புளித்த அரிசி மாவு உள்ள பானையில் இடுவர். சாதாரணக் குடும்பத்தவர்களின் பானைகள் அவர்கள் இல்லங்களிலேயே வைத்திருக்கப்படும். உம்பலக்காரன், சேர்வைக்காரன் ஆகியோர் குடும்பங்களைச் சேர்ந்த பானைகள் தெய்வங்களின் பிரதிநிதிகளாகக் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வாறு கொண்டு செல்லப்படும் பானைகளுள் பனம்பாளையினைச் சாதியினைச் சேர்ந்த பெரியவர்கள் இடுவர். ஒரு வாரத்திற்குப் பின் இந்தப் பானைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் சாராயம் மற்றவர்கள் பானைகளுள் ஊற்றப்பெறும். அதனைப் பெற்றுக் கொள்ளப் பெண்கள் அப்பானைகளைத் தூக்கியவர்களாகக் கோயில் தேரினை வலமாக மும்முறை சுற்றிவருவர். அதன் பின் அச் சாராயம் ஒரு குளத்திலோ ஏரியிலோ கொட்டப்படும். உம்பலக்காரன் சேர்வைக்காரன் ஆகியோர் வீட்டுப் பானைகளை இளம் கன்னியர் அல்லது மாதவிலக்குத் தீட்டுக்கு உள்ளாகாத பெண்கள் தூக்கிவரவேண்டும். இவ்வாறு பானைகளைத் தூக்கி வரும் பெண்களுள் ஒருத்தி மீது தெய்வம் ஏறுதல் வழக்கமாக நிகழ்வது. இத்திருவிழாவின்போது வேண்டுதல் செய்துகொண்டவர்கள் குயவர்கள் மண்ணால் செய்த தொட்டில், குதிரை, மனிதர், யானை முதலியவற்றை வேண்டுதல் செய்துகொண்டவர்கள் விலைக்கு வாங்கி வந்து கோயிலில் வைப்பர்.

வள்ளியம்மைக் கூட்டம் - ValliAmmi Kuttam

குறச் சாதிப் பெண்ணான சுப்பிரமணியரின் மனைவி வள்ளியம்மையினை வழிபடும் குறவருக்கான மற்றுமொரு பெயர்.

வள்ளோடி - Vallodi

மலபார் மாவட்டத்தில் உள்ள வள்ளுவநாடு வட்டத்தைச் சேர்ந்த ஒரு குடியிருப்பின் பெயர். வள்ளுவநாட்டு அரசர் சேர்ந்துள்ள நாயர், சாமந்தர் சாதிகளின் ஓர் உட்பிரிவாக இது பதியப்பட்டுள்ளது.

வள்ளுவன் - Valluvan

வள்ளுவன்கள் பற்றித் திரு எச்.எ.ஸ்டுவர்ட் தொகுத்துக் கூறியிருப்பது* வருமாறு: வள்ளுவன்கள் பறையர், பள்ளர் சாதிக்கு உரிய புரோகிதர்கள். குறளைச் செய்த புகழ்பெற்ற தமிழ்ப்புலவரான திருவள்ளுவர் இச் சாதியினைச் சேர்ந்தவரே. இச் சாதியினைப் பறையர் சாதியின் ஓர் உட்பிரிவாகக் கருதுவர். பிராமணர்கள் வருகைக்கு முன் வள்ளுவன்களே பல்லவ மன்னர்களின் புரோகிதர்களாக இருந்து வந்துள்ளனர் எனத் தெரிகின்றது.** பிராமணர்கள் வருகைக்குப் பின்னும் இவர்கள் இப் பொறுப்பில் இருந்து வந்துள்ளனர் எனத் தெரிகிறது. ஒன்பதாம் நூற்றாண்டினைச் சேர்ந்த இன்னமும் வெளியிடப்படாத ஒரு கல்வெட்டில் பின்வரும் வாக்கியம் இடம் பெற்றுள்ளது. வள்ளுவம் புவனவன் கோயிலைச் சேர்ந்த உவச்சன் (ஒவச்சன்) நாளும் கோயில் பணிகளுக்காக அறுவரை அமர்த்துவான். திருவள்ளுவ நாயனார் வேளாளர் சாதியினைச் சேர்ந்த ஒருத்தியை மணந்துகொண்டார் என்ற கதை*** உண்மையானால் அன்று வள்ளுவன்கள் வேளாளருக்குச் சமமானதொரு சமூகத் தகுதியினைப் பெற்றவர்களாக இருந்திருத்தல் வேண்டும். அவர் சாதி வேறுபாடுகளை உடன்பட மறுத்தார். வேளாளர் சாதியினைச் சேர்ந்த ஒருத்தியினைத் தன் மனைவியாகப் பெறுவதில் அவர் வெற்றி பெற்றார். இந்த உறவின் வழித்தோன்றிய சந்ததியினரே தாங்கள் என வள்ளுவர் சாதியில் ஒரு பிரிவினர் கூறிக் கொள்கின்றனர்.

---

* *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு. (Madras Census Report, 1891 and Manual of North Arcot district)

** பார்க்க: திவாகரம் மற்றும் சூடாமணி நிகண்டு.

*** பார்க்க: லாசரஸ் திருக்குறள் பதிப்பில் உள்ள திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு.

தங்களுடைய மூதாதையரான திருவள்ளுவர் கல்வி ஆராய்ச்சியில் செலவிட்ட நேரம்போக எஞ்சிய நேரத்தை இடையிடையே நெய்தல் தொழிலை மேற்கொண்டதால் தாங்கள் இப்பொழுதும் கிழிந்த துணிகளைத் தைக்கும் பணியினைச் செய்வதாகக கூறுகின்றனர். எனினும் சோதிடம் பார்த்தலும் பறையர்களுக்குப் புரோகிதம் செய்வதும் இவர்களுடைய முக்கியத் தொழிலாக இருந்து வருகின்றது. பறையரின் சாவுச் சடங்குகள், திருமணச் சடங்குகள் ஆகியனவற்றை இவர்கள் நடத்துகின்றனர். சிலர் புனிதம் அற்றதான சாவுச் சடங்குகளை நடத்தி வைக்க உடன்படுவதில்லை. இவர்கள் அதனை நடத்தி வைக்கும் பொறுப்பினைப் புனிதமற்ற வள்ளுவன்களான பறையதாடன்களிடம் விட்டுவிடுகின்றனர். வள்ளுவன்களுள் மற்றொரு பிரிவினர் ஆழ்வார் தாசரி எனப்படும் தாவடதாரிகளாவர். இவர்கள் துளசி மணிகளாலான மாலைகளைக் கழுத்தில் அணிவர். சைவர்களும் வைணவர்களும் ஒருவர் வீட்டில் மற்றவர்கள் உணவு கொண்டாலும் இவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லை. பறையன்களைப் போல வள்ளுவன்கள் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. பல மனைவியர் மணத்தையும் இவர்கள் உடன்படுவதில்லை. இவர்களுள் பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பூணூல் அணிகின்றனர். மற்றொரு வழக்கு வரலாற்றின் படி வள்ளுவன்கள் பிராமண முனிவர் ஒருவருக்கும் பறையர் சாதிப் பெண் ஒருத்திக்கும் இடையே ஏற்பட்ட உறவின்வழிப் பிறந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் தங்கள் இழிந்த நிலையினைப் பற்றித் தங்கள் தந்தையிடம் குறைப்பட்டுக் கொண்டனர். அவர் இவர்களை வாழ்த்தி இவர்கள் சிறந்த சோதிடர்களாக ஆவர் எனவும் அதன் காரணமாகப் போற்றப் பெறுவர் எனவும் கூறினார். *1901* திருவாங்கூர் கணக்கெடுப்பில் வள்ளுவன் புலையன் சாதியின் ஓர் உட்பிரிவினர் எனவும் புலையர்களுக்குப் புரோகிதம் செய்பவர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆண்களும் பெண்களும் சோதிடர்களாகவும் மருத்துவர்களாகவும் பணிபுரிகின்றனர். எல்லாச் சாதிகளைச் சேர்ந்தவர்களும் அடிக்கடி இவர்களிடம் சோதிடம் கேட்க வருகின்றனர். பல கிராமங்களில் இவர்கள் உழவர்களிடமிருந்து அறுவடையின்போது ஒரு கை தானியம் பெறும் உரிமையுடையவர்களாக உள்ளனர் என வள்ளுவன்கள் பற்றி *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நான் கோயமுத்தூரில் மூன்று வள்ளுவன்களை நேரில் பேட்டி கண்டேன். வெண்தாடியோடு கூடிய அவர்களுள் ஒருவன் ஒரு

லிங்கத்தை இளஞ்சிவப்புத் துணி ஒன்றில் முடிந்து கழுத்தில் கட்டிக் கொண்டிருந்ததோடு வலதுபுயத்தில் இளஞ்சிவப்புத் துணியொன்றில் முடிச்சிடப்பட்ட தாயத்தையும் அணிந்து கொண்டிருந்தான். கருந்தாடியோடு கூடிய மற்றொருவன் செம்பொன் வண்ணத் தலைப்பாகை அணிந்திருந்தான். மூன்றாமவன் ஒரு ஆங்கிலேயப் படைவீரன் வேண்டாமென விட்டெறிந்த தளர்வான உடையணி அணிந்தவனாக இருந்தான். மூவரும் உருட்திராட்சம் அணிந்து நெற்றியில் சந்தனக் கீற்றுத் தீட்டியவர்களாக இருந்தனர். ஒவ்வொருவரிடமும் பஞ்சாங்கமும் சோதிட சாத்திரம் பற்றிய பாடல்கள் எழுதப்பட்ட பனை ஓலைச் சுவடிகளை (உள்ளம் உடையான்)யும் வைத்திருந்தனர். நோயுற்றவர்களுக்கு நோய் நீங்கத் தாயத்து எழுதித் தருதல். பிறக்கும் குழந்தைகளுக்குச் சாதகம் எழுதித் தருதல், தரையில் கட்டம் கீறி ஒருவருக்கு வர உள்ள நலந் தீங்குகளைப் பற்றிக் கூறுதல் ஆகியனவே இவர்கள் மேற்கொண்டுள்ள தொழிலாக உள்ளது. சில வள்ளுவன்கள், புரோகிதர்களாகத் தொழில் செப்பவர்கள் உண்மையில் வள்ளுவர் சாதியினைச் சேர்ந்தவர்கள் அல்லர் என எங்களிடம் கூறினர். உண்மையில் வள்ளுவனாக உள்ளவர்கள் பறையன்களுக்குப் புரோகிதம் செய்யார் என இவர்கள் தெரிவித்தனர்.

பறையன், தாவிடதாரி, திருவள்ளுவன் என்பனவே கணக்கெடுப்பின்போது வள்ளுவர் சாதியின் முக்கியமான உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளன. எனக்குக் கிடைத்த தகவலின்படி அறுபது கட்சி, நாற்பது கட்சி என்ற இரண்டு முக்கிய பிரிவுகள் இவர்களிடையே இருப்பதாகத் தெரிகின்றது. அறுபது கட்சியார் நந்திக்குருக்கள் என்பவரின் வழிவந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்கள் இவருடைய பெயரையே தங்கள் கோத்ரப்பெயராகக் கொண்டுள்ளனர். நாற்பது கட்சியார் கோத்திரப் பெயர் சிதம்பர சாயுட்ச அப்யங்கார் என்பதாகும், சிதம்பரம் புனிதமான சிவன் கோயில் உள்ள இடமாகும். ஆழ்வார் உட்பிரிவினர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான திருப்பாணைழ்வார் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் பறையன்கள் முருளிப் பிச்சன், கோவிந்தாழ்வான் முதலிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர்களை - பட்டப்பெயர்கள் - உடையவர்களாக உள்ளனர்.

வள்ளுவர்களுள் வைணவர், சைவர் ஆகிய இரு பிரிவினரும் உள்ளனர். சைவர்களுள் பெரும்பலோர் ஆண். பெண்கள் உட்பட லிங்கம் அணிகின்றனர். சாதித் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் சாதிச் சபை தீர்த்து

வைக்கிறது. பல இடங்களில் கோல்க்காரன், கணக்கன் என்ற இரண்டு பரம்பரை உரிமையுடைய சாதிச்சபை அலுவலர்கள் உள்ளனர்.

மண இறுதிச் சடங்கின்போது பரிசத் தொகை, வெற்றிலை, நகைகள், பூ, பழம் ஆகியனவற்றை மணமகளாக வர உள்ளவள் மடியில் இடுவர். பரிசத்தொகை ஏழு ரூபாய் முதல் பத்து ரூபாய்க்கு உட்பட்ட தொகையாக இருக்கும். மணமகன் ஊர் மணமகள் ஊர் இருக்கும் ஆற்றின் பக்கமாக இருக்குமானால் மேற்கூறிய அளவினதாக இருக்கும் பரிசத்தொகை, மணமகன் ஊர் ஆற்றின் எதிர்கரையில் ஆற்றுக்கு அப்பால் இருக்குமானால் பத்துரூபாயிலிருந்து இருபது ரூபாய்வரை இருககும். உறவுமுறைக்கட்டு எனப்படும் சிறுதொகையும், பந்தல் வரிசை எனப்படும் சிறுதொகையும் மணமகன் வீட்டார் தருதல் வேண்டும். இத் தொகை உறவினர்களுக்கு கள் வாங்கி வழங்கப்பயன்படுத்தப்படும். இவ்வாறு அனைவரும் சென்று கள் குடிக்கும்போது சாதி சபையினர் சாதித் தொடர்பான சச்சரவுகளைப் பேசித் தீர்த்து வைப்பர். மண நாளன்று பச்சை மூங்கிலைப் பால்கம்பமாக நடுவர். குயவன் வீட்டிலிருந்து வாங்கி வரப்பட்ட பல பானைகளை அதன் அருகே அடுக்கி வைப்பர். மணமேடையின் மீது நான்கு விளக்குகள் ஏற்றி வைக்கப்படும். அவற்றுள் ஒன்று சாதாரணப் பித்தளை விளக்கு, ஒன்று குட விளக்கு, ஒன்று அலங்கார விளக்கு, ஒன்று பாலிகை விளக்கு. மணமக்கள் கொஞ்சம் மணலைக் கொண்டு வந்து அதனை மணமேடையின் முன் தரையில் பரப்புவர். அதன்மீது ஏழு இலைகள் இடப்படும். மஞ்சளில் தோய்க்கப்பட்ட பருத்தி நூலினைப் பானைகளுக்கும் பால்கம்பத்திற்கும் சுற்றுவர். அந்த இலைகளில் பணியாரங்களும் பொங்கலும் படைத்து மணமக்கள் தங்கள் குலதெய்வங்களை வழிபடுவர். வள்ளுவப் பூசாரி தப்பும் தவறுமாக வடமொழியில் சில மந்திரங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லியபின் மணமக்கள் மணிக்கட்டில் கங்கணத்தைக் கட்டுவான். பின் அவர்கள் வீட்டினுள் அழைத்துச் செல்லப்பட்டு மல்லிகை அல்லது அரளிப் பூமாலை அணிவிக்கப்படுவர். பானைகள் மணமேடையில் அடுக்கி வைக்கப்படும். மணலைப் பால்கம்பத்திற்கு அருகே பரப்புவர். பானைகளுள் ஒன்றில் பெண்கள் முளைப்பாலிகையினை இடுவர். மணமகன் வீட்டார் நான்கு பானைகளுள் நீரினை நிரப்புவர். முளைப்பாலிகையில் சிறிதளவினை ஒரு துணியில் முடிந்து முளைப்பாலிகை உள்ள பானை மீது வைப்பர். மறுநாள் காலையில் அந்த முடிச்சை அவிழ்த்து அவை நல்ல நிலையில் உள்ளனவா என ஆராய்ந்து பார்ப்பர். அவை நன்றாக இருந்தால் மணமகளைத் தகுதி வாய்ததவள் எனக் கொள்வர். அவை நல்ல நிலையில் இல்லையாயின் மணமகளைக் கெட்டவள் எனவோ இளமையில்

இறக்கப் போகின்றனவள் எனவோ கொள்வர். அடுத்து வழக்கமான நலங்குச் சடங்கு நிகழும். மணமக்களுக்கு எண்ணெய் பூசிப் பாசிப் பயறுக் கலவையினையும் தடவுவர். அடுத்து பதினொரு இலைகளில் மூதாதையருக்கும் குல தெய்வங்களுக்கும் படையல் இடுவர். அன்று மாலை மணமக்கள் உட்கார ஏற்றபடி மணமேடை அலங்கரிக்கப்படும். மணமேடையில் இரண்டு மணைப் பலகைகள் இடுவர். அவற்றின் மீது வண்ணான் கொடுத்த துணி விரிக்கப்படும். மணைப் பலகையில் அமரும் மணமக்கள் வெற்றிலை மற்றும் நெல்லினை ஒன்பது அல்லது பன்னிரண்டு முறை மாற்றிக் கொள்வர். அரிசியினை இருபத்தேழு முறை மாற்றிக் கொள்வர். புரோகிதன் புனிதத் தீ மூட்டி அதனுள் சிறிது நெய்யினை மாவிலையில் எடுத்து விடுவான். மணமகனிடம் அருந்ததியினைப் பார்க்க முடிகின்றதா என மும்முறை கேட்பர். அவன் பார்க்க முடிகின்றது எனப் பதிலிறுப்பான், பின் தாலியினைக் கற்பூரம் கொளுத்தப்பட்ட தட்டில் ஒரு ரூபாயோடு வைத்து வானத்தை நோக்கிக் காட்டுவர். கூடியிருப்பவர்கள் தாலியினை வாழ்த்தியபின் அதனை மணமகன் மணமகள் கழுத்தில் கட்டுவான். அப்போது மணமகன் தனது வலது காலை மணமகள் மடிமீது வைத்தவனாக இருப்பான். மணச் சடங்கின் இரண்டாம் நாள் மணமக்கள் ஊர்த்தெருக்களில் ஊர்வலமாக வருவர். மூன்றாம் நாள் அவர்கள் கங்கணம் அவிழ்க்கப்படும்.

சில இடங்களில் வள்ளுவன்கள் தங்கள் திருமணத்தில் பள்ளியரையும் வேறு சில சாதியாரையும் போலப் பந்தலைத் தொடும்டியாகப் பந்தமுட்டியெனப் பானைகளை அடுக்குகின்றனர்.

சைவர்களான லிங்காயதர் இறந்தவர்களைப் புதைகுழியின் பக்கத்தில் குடையப் பட்ட குழிவில் உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைப்பர். உயிர் பிரிந்த்வுடன் தேங்காயினை உடைத்து வைத்துக் கர்ப்பூரம் கொளுத்திக் காட்டுவர். உறவினர்கள் ஒன்பது பானை தண்ணீர் கொண்டு வந்து பிணத்தைக் குளிப்பாட்டுவர். பிணத்தின் தலையில் லிங்கம் கட்டப்படும். ஒரு ரூபாய், ஏழு வில்வ (*Aegle Marmelos*) இலைகள், ஒன்பது துளசிக் (*Ocimum sanctium*) கொத்துகள், ஒன்பது தும்பைப் (*Leucus aspera*) பூக்கள் கொண்ட முடிச்சினை ஐந்து பித்தளைப் பாத்திரங்களால் சூழப்பட்ட தேரில் பிணத்தை வைத்துப் புதைகுழிக்கு எடுத்துச் செல்வர். புதைகுழியில் பசுவின் கோமயத்தையும் பசுஞ்சாண நீரையும் தெளித்துத் தூய்மைப்படுத்திய பின் பிணத்தை அதனுள் இறக்குவர். புதைகுழிக்குப் பிணத்தை எடுத்துச் செல்லும் வழியில் புரோகிதன்

பல பாடல்களைப் பின்வருமாறு பாடியபடி வருவான் இதுதான் கைலாசம். இது தான் கைலாசத்து சிதம்பரம். எங்கள் வேண்டுகோள் இதுதான் நந்தி தர்ம கோத்திரம் நல்லிய முத்தன் சுருகிருது வருடம் தை மாதத்தில் வியாழக்கிழமையன்று இறந்துபோனான். சாலோகம், சாமீபம், சாருபம் ஆகிய நிலைகளின் வழியாக இவன் நான்காம் நிலையான சாயுட்ச நிலையினை அடையவேண்டும், இவன் கல்லும் முள்ளும், நெருப்பும் பாம்பும் ஆகியவை நிறைந்த ஆறுகளைக் காளையாகிய நந்தியின் வாலைப் பிடித்தபடி கடந்து வந்துள்ளான். இவன் பாதுகாவலோடு கூடச் சொர்க்கத்தைச் சென்று சேர நாங்கள் அரிசிமாவு இடித்து மா விளக்கு ஏற்றியுள்ளோம். புரோகிதன் தன் பணிக்காக ஒரு தொகையினைக் கட்டணமாகப் பெறுகின்றான். புதைகுழியினை மூடியபின் அதன் மீது அமைத்து வைக்கப்படும் உருவத்தின் முன் அவன் அத்தொகையினை வைப்பான். அத் தொகையினைப் புதைகுழியின் மீது வைக்க நந்தி, அல்லது லிங்கம் அல்லது கற்பலகை வாங்கச் செலவிடுவர். சாவுக்குப் பின் மூன்றாம் நாள் இறந்தவனுடைய பெண் உறவினர்கள் வீட்டினுள் ஒரு பாத்திரத்தில் பாலினைவிட்டு வைப்பர். ஆண் உறவினர்கள் அதனைப் புதைகுழிக்கு எடுத்துச் சென்று ஊற்றியபின் அப் பாத்திரத்தைச் சுத்தம் செய்வர். அங்கு மேலே செல்லச் செல்ல அளவில் சிறுத்து வரும்படியான பல அடுக்குகளை உடைய மேடை ஒன்றினை அமைத்து அதன்மீது லிங்கம் ஒன்றினை வைப்பர். இந்த மேடையின் வடக்குத் தெற்கு மூலைகளில் மண்ணால் செய்த நந்தி, பரதேசி ஆகியவர்களின் உருவங்களை அமைப்பர். அதன் நான்கு மூலைகளிலும் இலையிட்டு அதில் சோறு, பழம், காய்கறி முதலியவற்றைப் படைப்பர். இறுதிச் சாவுச் சடங்குகளைப் பதினேழாம் நாள் நடத்துவர். பந்தல் ஒன்று இட்டு அதன் நான்கு பக்கங்களையும் துணியினைக் கட்டி மூடுவர். அதனுள் நூல் சுற்றப்பட்ட ஒரு பானை, ஐந்து உரல் உலக்கைகள் ஆகியன வைக்கப்படும். மணமான பெண்கள் ஐவர் அந்த உலக்கைகளை எடுத்து அந்தப் பானையில் உள்ள அரிசியில் கொஞ்சத்தை இடித்து மாவிளக்குச் செய்து அதனை ஒரு தட்டில் வைப்பர். இறந்தவருடைய மூத்த மகன் அந்த விளக்கைத் தலையில் வைத்தவனாக நான்கு பக்கங்களிலுள்ள வழியுள்ள ஓர் அடைப்புக்குள் புகுவான். இந்த அடைப்பு மண்சுவர் வைத்து எழுப்பப்பட்ட என்றும் இருக்கக் கூடியதாக அல்லது பாய்களைக் கொண்டு தற்காலிகமான அமைக்கப்பட்டதாக இருக்கும். அதனுள் நடுவில் ஐந்து பானைகளும் நான்கு பக்கங்களில் நான்கு பானைகளும் வைக்கப்பட்டிருக்கும். சிவப்பு, வெள்ளை, கருப்பு சாம்பல் ஆகிய நிறங்களையும் புள்ளிகளையும் உடைய ஐந்து பசுக்களின் கோமயத்தால் அப்பானைகளைச் சுத்தம் செய்வர். அப்பானைகள் அருகே பூசைக்கு உரிய பொருள்கள்

வைக்கப்படும். பூசையினை நடத்தும் புரோகிதர் அப்பானைகள் அருகே அமர்வார். இவ்வாறு தடுத்து மறைக்கப்பட்டுள்ள இடம் சொர்க்கமாகப் பாவிக்கப்படும். அதில் உள்ளே இலைகளிட்டுச் சோறு படைக்கப்பட்டுள்ள வாயில்கள் நான்கும் சொர்க்கத்தின் வாயில்களாககும். இறந்தவரின் மூத்த மகன் தலையில் விளக்கோடு சிவனுக்கு வழிபாடு நடத்தும்போது கிழக்கு வாயிலின் முன் நிற்பான். அப்போது பூசை செய்பவர் சில பாடல்களைத் திரும்பத் திரும்பச் சொல்வார். அதனுடைய சுருக்கம் வருமாறு: சிவனுடைய பெயரைச் சொல்லியபடி நள்ளிரவில் சித்தர்களைப் போல வந்த நீ ஏன் சிவபதத்தின் அருகே வந்துள்ளாய். நான் என் திரிசூலத்தால் உன் நெஞ்சினைப் பிளப்பேன் ஓடிவிடு. இவற்றை எமபுரிக்கோ நரகத்திற்கோ கொண்டு செல்லட்டும். அப்போது ஏதோ சத்தம் வருவதைக் கேட்ட சிவனும் பார்வதியும், என் மக்களே! உறர, உறர எனக் கூறிக் கொண்டிருக்கும் நீங்கள் யார்? உங்கள் உண்மையான பெயரையும் ஊரையும் கூறுங்கள் என்பர். இதற்குத் தரப்படும் பதில் வருமாறு: "எம் இறைவா! மார்க்கண்டேயனுக்கு அருள்செய்த இறைவனின் பக்தன் நான். நான் வீரசைவ சமய நெறியினைச் சார்ந்தவன். நான் சொர்க்கத்துள் புக வந்துள்ளேன். நாங்கள் தூய நல்வாழ்க்கை வாழ்ந்தவர்கள். பல தான தர்மச் செயல்களைச் செய்துள்ளோம். எனவே எங்களைச் சொர்க்கத்தில் நுழையவிடாது தடுப்பது நியாயமில்லை. அங்கே பெற்றோரைக் கொடுமைப்படுத்துபவர்களும் பெரியோர்களைத் துன்புறுத்துபவர்களும் பலவகைத் தீயச் செயல் புரியும் பாவிகளும் கொலைகாரர்களும் தங்கள் சமயநெறியினையும் சமய ஆச்சாரியர்களையும் விட்டுப் போகின்றவர்களும் ஆகியவர்களே தெற்கு வாசல் வழியாக நரகத்தில் தள்ளப்பட உரியவர்கள்." இச் சமயத்தில் அந்த அடைப்பைச் சுற்றி ஒரு நூலினைக் கொண்டு செல்வர். தலையில் விளக்கைச் சுமந்தவனாக நிற்பவனான இறந்தவரின் மகன் கிழக்கு வாசலிலிருந்து தெற்கு, மேற்கு வாசல்களைக் கடந்து நூலை அறுத்துக் கொண்டு வடக்கு வாசல் வழியாக அந்த அடைப்பினுள் நுழைவான். நந்திக்கோல் எனப்படும் பரம்பரை ஊர்த்தலைவன் முதலில் இறந்தவரின் மூத்த மகன் தலையிலும் பிறகு அடுத்துள்ள பங்காளிகளின் தலையிலும் ஒரு துணியினைச் சுற்றிக் கட்டுவான்.

வள்ளுவன்கள் மாட்டிறைச்சியினை உண்பதில்லை. பறையர்களோடு இவர்கள் கலந்து பழகினாலும் அவர்கள் இல்லத்தில் உண்பதில்லை. இவர்கள் பறச் சேரியினைச் சார்ந்து வாழ்வதுமில்லை.

வள்ளுவன்கள் பண்டாரம் எனறோ சில சமயங்களில் வள்ளுவப் பண்டாரம் எனறோ சில சமயங்களில் அழைக்கப்படுகின்றனர். சில இடங்களில் வேளாளப் பண்டாரங்கள் வள்ளுவன்களுக்குப் புரோகிதராக இருக்கின்றனர்.

வல்லுவன் - Valluvan

மலபாரைச் சேர்ந்த மீனவரும் படகு வலிப்போருமான எண்ணிக்கையில் குறைந்த தாழ்ந்த சாதியார் என மலபார் விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

வால்மீகி - Valmika

வால்மீக அல்லது வால்மீகி என்பது போயர்களும் பைதிகளும் தரித்துக் கொள்ளும் பெயர். இவர்கள் தங்களை இராமாயணம் செய்த வால்மீகியின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்வர். இவர் ஓர் இடத்தில் அசையாது நெடுங்காலம் அமர்ந்து தவம் செய்தபோது கரையான் (வால்மீகம்) இவரைச் சுற்றிப் புற்றமைத்துவிட்டது. என்முன் உள்ள ஒரு குறிப்பில் வால்மீகி இந்தியாவின் ஸ்பென்சர் எனக் குறிக்கப்பட்டுள்ளார். வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் வால்மீகிரு என்பது வேடன்களுக்குரிய மற்றுமொரு பெயராகப் பதியப்படுட்டுள்ளது. கரையான் புற்றில் கிடைப்பதை வைத்து வாழ்க்கை நடத்துபவர்கள் என்பது இதன் பொருள்.

வாள் நம்பி - Val Nambi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வாள் நம்பி பற்றிப் பதியப்பட்டுள்ளதாவது: மூசாடுகளுக்கான மற்றுமொரு பெயர். நம்பி என்பது பிராமணனுக்கு உரிய பட்டப்பெயர். வாள் போர்க் கருவியாகும். பெருமாள்களுக்கு முன் மலபாரைப் பிராமணர்கள் ஆண்டு வந்தபோது போர் வீரர்களாக இருந்த பிராமணர்கள் தங்களுக்கு இருந்த வேதம் ஓதும் பிராமணருக்கு உரியதான சில உரிமைகளை இழந்துவிட்டதால் இவர்கள் இவ்வாறு பெயர் பெற்றனர் என ஒரு வழக்கு வரலாறு நிலவுகின்றது.

வலுவாதி - Valuvadi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வலுவாதிகள் புதுக்கோட்டை மாநிலத்தைச் சேர்ந்த பயிரிடுவோர் எனப் பதியப்பட்டுள்ளது. நகரம் சமீன்தார் சேர்ந்துள்ளதான வலையர் சாதியின் ஒரு பிரிவே வலுவாதி என எனக்குத் தகவல் தந்துள்ளனர். வலுவாதி என்பது முதலில் நகரம் சமீன்தாருக்கு உரிய மரியாதையைக் குறிக்கும் பட்டப் பெயராகவே இருந்தது. இப்போது சமீன்தாராக உள்ளவர் பெயர் பாலசுப்ரமணிய வலுவாதியர். முப்பது ஆண்டுகளுக்கு முன் வலுவாதி என்ற ஒரு சாதி இல்லை. செல்வ வளம் பெற்றவர்களாக வலையர் சிலரும் நகரம் சமீன்தாருக்குத் திருமண

உறவு வழி உறவினர்களாகச் சிலரும் தங்கள் சாதிப் பெயரைத் தங்கள் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் காட்டிக் கொள்ள வலுவாதி என மாற்றிக் கொண்டனர்.

வம்மெ - Vamme

சணப்பன்களின் ஒரு கோத்திரம். இக் கோத்திரப் பிரிவினர் பொம்படை எனப்படும் ஒருவகை மீனினை ௳ ்பதில்லை. இவர்கள் சாதியினைச் சேர்ந்த மூதாதையர் சிலர் திருமணப் பா...யில் தண்ணீர் எடுத்துவரச் சென்றபோது அவர்கள் தங்கள் பானையுள் இந்த இன மீன்கள் பல இருக்கக் கண்டதாலேயே இவ்வாறு அவற்றை உண்ணுதலை விலக்கினர்.

வனப்பள்ளி - Vana palli

காட்டுப் பள்ளி எனப் பொருள்படும் இதனைத் தென் ஆர்க்காட்டினைச் சேர்ந்த சில பள்ளிகள் தங்கள் பெயராக வைத்துக் கொண்டுள்ளனர்.

வண்டிக்காரன் - Vandikkaran

விறகு ஏற்றிவரும் வண்டி ஒட்டிகளாகத் தொழில்புரியும் நாயர்களுக்கான தொழில் தொடர்பான பெயர்.

வாண்டுல அல்லது வண்டி ராசா - Vandula or Vandi Raja

சிவனுடைய திருமணத்தின்போது கட்டிடம் கூறுபவனாக இருந்த வண்டி என்பவனின் பெயரின் அடிப்படையில் தோன்றிய பட்ராசுகளின் ஓர் உட்பிரிவு.

வங்கு - Vangu (cave)

இருளரின் ஓர் உட்பிரிவு

வாணி - Vani

வாணி பண்டேகர்கள் *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் எண்ணெய்ச் செக்கார் எனத் தவறாகப் பதியப்பட்டுள்ளனர். உண்மையில் இவர்கள் வணிகர்களே. கோவாவிலிருந்து வந்தவர்கள் எனக் கருதப்படும் இவர்கள் கொங்கணி பேசுகின்றனர். கும்பகோணம் மடாதிபதியே இவர்களுடைய குல குரு ஆவார் எனத் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு எச்.எ ஸ்டுவர்ட் கூறியுள்ளார். *1901* கணக்கெடுப்பு அறிக்கையில் வணிகன்

எனப்பொருள்படும் வாணி என்பது கொங்கணி பேசும் வணிகச் சாதியாருக்கு உரிய பெயரெனவும் பண்டேகார் என்பது இதற்கான மற்றுமொரு பெயரெனவும் பதியப்பட்டுள்ளது. பிராமணர்கள் நடைமுறைகளைப் பார்த்து அப்படியே மேற்கொண்டு நடக்கும் இவர்கள் தங்களை வைசிய பிராமணர் என்ற விசித்திரமான கலப்புப் பெயரால் அழைத்துக் கொள்வர் உறரி செட்டி என்பது இச் சாதிக்கான மற்றொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

வாணியர் - Vanaiyan

"தெலுங்கு காண்டலர், கன்னட காணிகர், மலையாளத்துச் செக்கார், ஒரிய தெள்ளியர் ஆகியோருக்கு நேரான தமிழ்நாட்டு எண்ணெய்ச் செக்காட்டும் சாதியார் வாணியர். மனு எண்ணெய் ஆட்டும் தொழிலைத் தாழ்ந்ததாக வகைப்படுத்தியுள்ளார், இதற்கான காரணம் தெரியவில்லை. எனவே இதனை மேற்கொண்டவர்கள் மதிக்கப்படுதல் இல்லை. திருநெல்வேலியில் இவர்கள் கோயில்களுள் புக அனுமதிக்கப்படுவதில்லை. கோயில்களில் விளக்கேற்றும் பணியினை மேற்கொண்டுள்ள காரணத்தால் மலபாரைச் சேர்ந்த வாணியரான செக்கான்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பூணூல் அணிந்தவர்களாகத் தங்களுக்குச் சமூகத்தில் உயர் தகுதியினைத் தேடிக் கொண்டுள்ளனர். இத்துடன் சிலர் சோதி நகரத்தார், திருவிளக்கு நகரத்தார் எனத் தங்களை உயர்த்திக் காட்டிக் கொள்ளும் பட்டப்பெயர்களையும் தரித்துக் கொள்கின்றனர். பிராமணர்களைப் புரோகிதர்களாக அமர்த்திக் கொள்ளும் இவர்கள் குழந்தை மணத்தை மேற்கொள்வதோடு விதவைகள் மறுமணத்திற்கும் உடன்படுவதில்லை. இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் பிராமணர்களைவிடத் தாழ்ந்த சாதியார் இல்லங்களில் உண்பதில்லை. எனினும் வண்ணார் கூட இவர்கள் இல்லங்களில் உண்ண உடன்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. காண்டலர்களிடையே இருப்பதைப்போல இவர்களிடையேயும் ஒற்றைச் செக்கான், இரட்டைச் செக்கான் என்ற இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. முன்னவர் செக்கில் ஓர் எருதையும் பின்னவர் இரண்டு எருதுகளையும் பூட்டி ஓட்டுவர். இவ்விரு பிரிவினருள் ஒற்றைச் செக்கார் வலங்கைப் பிரிவினையும் இரட்டைச் செக்கார் இடங்கைப் பிரிவினையும் சேர்ந்தவர்களாக இருப்பது வியப்புக்குரிய ஒன்றாகும். வாணுவன் என்ற பெயரை வழக்கமான செட்டி என்ற பட்டப்பெயரோடு வாணியன்கள் சூடிக் கொள்கின்றனர். வாணுவன் என்ற இந்தப் பட்டப்பெயர் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு தானியம் முதலியவற்றின் வாணிபத்தில் ஈடுபட்டவர்களுக்கு உரியதாகும்" எனத் தென்ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு பிரான்சிஸ் கூறியுள்ளார்.

வாணியம் என்ற சொல் வணிகத்தைக் குறிக்கும். இது எண்ணெய் வணிகத்தோடு கூட எண்ணெய் தயாரித்தலையும் குறிக்கும். இவ்விரண்டுமே வாணியர்கள் தொழில். தங்களை வைசியர் எனக் கூறிக் கொள்ளும் இவர்கள் வைசிய புராணத்தைத் தங்கள் புனித நூல் எனக் கூறுவர். சென்ற ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்குள்ளாகத்தான் இவர்கள் பூணூல் அணியத் தொடங்கியிருக்க வேண்டும். வக்குண மகரிசி என்பவர் இயற்றிய யாகத்திற்குப் பின்னரே இவ்வாறு பூணூல் அணியத் தொடங்கினர். காமாட்சியம்மா, விசாலாட்சியம்மா, அச்சுத்தாலி, தொப்பதாலி என்ற நான்கு உட்பிரிவுகள் இச் சாதியில் உள்ளன. முதல் இரண்டு பிரிவினரும் தங்கள் பிரிவுக்குரிய பெயரிலான தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். பின் இரு பிரிவினரின் பெயர்களும் அப் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் அணியும் தாலியின் அமைப்பின் அடிப்படையில் அமைந்ததாகும். பேரி செட்டிகளைப் போன்ற அதே பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள இவர்கள் அவர்களைப் போல இறைச்சி உண்பதனை விலக்குவதில் மிகுந்த நாட்டம் செலுத்துவதில்லை. வாணியருக்கு முறையற்ற உறவின் வழி பிறந்தவர்கள் பிள்ளைக் கூட்டம் எனப்படுகின்றனர். இவர்கள் நெடுங்காலத்திற்கு முன் வாணியன் ஒருவன் வைப்பாட்டிக்குப் பிறந்தவர்களின் வழிவந்தவர்கள். இந்தப் பிரிவினர் வாணியர் இல்லாத பகுதிகளில் காணப்படுவதில்லை. இவர்களுக்கு உணவும் உடையும் தந்து காப்பாற்ற வேண்டியது வாணியர் பொறுப்பாகும். அவ்வாறு வாணியர் கொடுக்க முன் வராதபோது அவர்களுக்குக் கொடிய சாபங்களை இடுவதாகக் கூறி அச்சுறுத்தி அவர்களிடமிருந்து பிச்சை பெற்று வருகின்றனர் என வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு எச்.எஸ்டுவர்ட் கூறியுள்ளார். *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் திரு ஸ்டுவர்ட் மேலும் இவர்களைப் பற்றிக் கூறியுள்ளவை வருமாறு: முன்பு செக்கான் என இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் மட்டும் வணிகர் எனப் பொருள்படியான வாணியன் என்று அழைக்கப்பட்டது ஏன் எனப் புரியவில்லை. இவர்கள் தங்களுக்குள் *126* உட்பிரிவுகள் இருப்பதாகப் பதிந்து உள்ளனர். அவற்றுள் இலை வாணியன் என்ற பிரிவினைச் சேர்ந்தவர்களே எண்ணிக்கையில் மிகுந்தவர்களாகக் குறிப்பிடத்தக்க பிரிவினராக உள்ளனர். இரண்டெருது என்பது மற்றொரு உட்பிரிவுக்கான பெயர். இது இவர்கள் செக்கில் இரண்டு எருதுகள் பூட்டுபவர்கள் என்பதனைக் குறிக்கும். இவ்வாறு செக்கில் இரண்டு எருதுகள் பூட்டுபவர்கள் ஓர் எருது பூட்டுபவர்களிலும் வேறுபட்டவர்களாகக் கருதப்படுவது இந்தியா முழுவதும் இச் சாதியாரிடையே காணப்படுவதொன்றாகும். மலபாரைச் சேர்ந்த வாணியன்கள் பழக்க வழக்கங்கள் நாயர் பழக்க வழக்கங்களைப் போன்றவை. இவ்விரு

பிரிவினரும் பூணூல் அணிவதோ பிராமணர்களைப் புரோகிதர்களாக அமர்த்துவதோ இல்லை. வடமலபாரில் இவர்கள் தொடுவதால் நாயர்கள் தீட்டுப்பட்டவர்களாகின்றனர். தென்மலபாரில் வட்டக்காடன்கள் எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் இவர்கள் தங்களை நாயர் சமூகத்தோடு தகுதியில் சமமானவர்களாக ஆக்கிக் கொண்டுள்ளனர். இவர்களுள் பலர் நாயர் என்பதனையே தங்களுடைய சாதிக்கு உரிய பெயராகப் பதிந்துகொண்டுள்ளனர். இது தொடர்பாக கணக்கெடுப்பு அறிக்கையில் திரு பிரான்சிஸ் கூறியுள்ளதாவது: வட்டக்காடன்கள் எனத் தென் மலபாரில் கூறப்படும் இவர்கள் வட மலபாரில் வாணியர் என அழைக்கப்படுகின்றனர். முன்னவர் பின்னவரைவிடத் தகுதியில் உயர்ந்தவர்கள். நாயர்கள், வாணியன்களும் செக்கான்களும் தொட்டால் தீட்டுக்கு உள்ளாகின்றனர் வட்டக்காடன்கள் தொட்டால் தீட்டுக்கு உள்ளாவதில்லை. செக்கான்களும் வாணியரும் பிராமணர்கள் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் பழக்க வழக்கங்கள் நாயர்கள் பழக்க வழக்கங்களை ஒத்தனவாயினும் நாயர்கள் இவர்கள் சாதிப் பெண்களை மணந்து கொள்வதில்லை.

1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கொச்சியினைச் சேர்ந்த வாணியரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது வருமாறு: இவர்கள் பூணூல் அணிகின்றனர். திருமணம், உடைமை உரிமை பேணுதல், சடங்குகள், உடை, அணிகள் முதலியவற்றில் இவர்களிடையேயும் கொங்கணிகளிடையேயும் எத்தகைய வேறுபாடுகளும் இல்லை. இவர்கள் மது, மாமிசத்தை முழுவதுமாக விலக்காத காரணத்தால் கொங்கணிகள் இவர்களைத் தங்கள் இல்லங்களுள் நுழைய அனுமதிப்பதில்லை. மேலும் கொங்கணிகளுக்கு உரிய குளம், கிணறுகளிலிருந்தும் இவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். சைவர்களாக இவர்களுக்குப் பண்டிதர்கள் எனப்படும் தனிப் புரோகிதர்கள் உள்ளனர். பிராமணர்களைப் போலவே இவர்களும் சாவு, பிறப்பு தொடர்பான தீட்டுக்களைப் பத்து நாள்களுக்கு மேற்கொள்கின்றனர். இவர்களுள் பலரும் சிறு வணிகர்களாகவும் பெட்டிக்கடைக்காரர்களாகவுமே உள்ளனர். ஒரு சிலர் மலையாளம் எழுதப் படிக்கக் கற்றிருந்தாலும் ஆங்கிலக் கல்வியினைப் பொருத்தவரை மிகப் பிற்பட்டவர்களாகவே உள்ளனர்.

"எள், தேங்காய், இலுப்பை, பின்னை, நிலக்கடலை ஆகியவற்றை வாணியன்கள் ஆட்டுகின்றனர். சாத்திரங்கள் எள்ளினை ஆட்டுவதனையும் நல்லெண்ணையினை விற்பதனையும் பாவமான செயல்கள் எனக் கூறுகின்றன

எள் செடியின் பூவினை அணிவதும் இதுபோலவே பாவமான செயலாகும்" என தஞ்சை மாவட்டக் கையேடு கூறுகின்றது.

ஒரு வாணியன் திருமணமாகாதவனாக இறப்பானாகில் காணிகர்கள் அவன் பிணத்துக்கு எருக்கம் (*Calotropis gigantica*) செடியோடு மணம் செய்து வைப்பதோடு அவன் பிணத்தை எருக்கம் பூ மாலைகளாலும் அலங்கரிப்பர்.

வங்காயல - Venkayala (*Solonam Melongena*)

கோல்லர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இதன் காயினை இந்தியர் உண்பர். ஆங்கிலோ இந்தியர் இக் காயினை இறைச்சியுடன் கூட இட்டுச் சமைப்பர்.

வங்கி - Vanki (amrlet)

குர்ணிகளின் ஒரு கோத்திரம்

வண்ணான் - Vannan

தமிழ்நாட்டையும் மலையாள தேசத்தையும் சேர்ந்த துணி துவைப்போர் வண்ணார். இவர்களைப்பற்றி வட ஆர்க்காடு மாவட்ட கையேட்டிலும் *1891* கணக்கெடுப்பு அறிக்கையிலும் திரு எச்.எ.ஸ்டுவர்ட் தந்துள்ள விவரங்கள் வருமாறு: வண்ணான் என்ற சொல் அழகினைக் குறிக்கும் வண்ணம் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். புராண நாயகனாகிய வீரபத்ரன் வழித்தோன்றல்கள் இவர்கள் என்ற வழக்கும் உள்ளது. இவர்களைச் சிவன் அனைவருடைய துணிகளையும் வெளுக்கும்படி பணித்தான். தக்கனுடைய யாகத்தில் வீரபத்ரன் பலரைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்ளும் கழுவாயாகவே இப் பணி வண்ணாருக்குப் பணிக்கப்பட்டது. இதனாலேயே தமிழ்நாட்டு வண்ணார் வீரபத்ரர் என பல சமயங்களில் வழங்கப்படுகின்றனர். ஊரார் அனைவருடைய அழுக்காடைகளையும் துவைத்துத் தூய்மைப்படுத்தும் இவர்கள் தூய்மையற்ற தாழ்ந்த சூத்திரர் சாதியராகக் கருதப்படுவதோடு ஏழைகளாகவும் உள்ளனர். தங்களிடம் வெளுக்கப் போடப்படும் துணியினைச் சாவுச் சடங்குகளுக்கு வாடகைக்கு விட்டு இவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். இத்துணிகளைப் பிணத்தைத் தூக்கிச் செல்பவர்கள் முன் அவர்கள் தரையில் நடக்க வேண்டாதபடி விரிக்கின்றனர். உடைகளை அதற்கு உரியவர்களுக்குத் தெரியாதபடி அதனை விலைக்கு வாங்காது பயன்படுத்திக்

கொள்ள விரும்புகின்றவர்களுக்கு வாடகைக்குத் தருகின்றனர். சமூகப் படிநிலையில் வண்ணார் அம்பட்டன்களுக்கு அடுத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். தென் மாவட்டங்களில் சைவர்களாக உள்ள இவர்கள் வட மாவட்டங்களில் வைணவ நெறியினை மேற்கொண்டவர்களாக உள்ளனர். சிறுமியர் பூப்படைந்தபின் மணம் செய்விப்பதே இவர்களிடையே பெருவழக்காக உள்ளது. சில உட்பிரிவினர் மட்டும் கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கின்றனர். பரிசத் தொகையில் இருமடங்கு தொகையான ரூ.10-8-0 இனைச் செலுத்திக் கணவன் மனைவியருள் விருப்பம் உள்ளவர்கள் மணமுறிவு பெற்றுக் கொள்ளலாம். இறைச்சி உண்ணும் இவர்கள் மதுவகைகளையும் பருகுகின்றனர். இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோ செய்வர். பொத்தர வண்ணார் வண்ணாருள் தாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர். பறையர், பள்ளர் முதலிய தாழ்ந்த சாதியாருக்கு மட்டுமே துணி வெளுப்பதால் இவர்கள் இவ்வாறு கருதப்படுகின்றனர்.

வண்ணான்கள் துவைத்து வெளுக்க வேண்டிய துணிகளுள் காணப்படும் பலவகை அழுக்குகளையும் பார்ப்பவர்கள் இத் தொழிலை மேற்கொண்டவர்களை வெறுப்புடன் அஞ்சி ஒதுக்குவதற்கான காரணத்தைப் புரிந்து கொள்வர் என மதுரை மாவட்டக் கையேடு கூறுகின்றது. கிராமப் புறங்களில் வண்ணார் பிராமணர், வேளாளர் ஆகியோருடைய இல்லங்களில் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் துவைத்துக் கொண்டு வந்த துணிகளை உயர்சாதியினர் வீட்டிலுள்ள துணிகளோடு கலக்காமல் வைத்துக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தும் முன் தங்கள் சாதியினைச் சேர்ந்த ஒருவனைக் கொண்டு அவற்றை மறுபடியும் அலசச் செய்வர் என தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

ஒரு சமயம் வேட்டைக்குச் சென்ற ஐரோப்பியர் குழு ஒன்று புதைகாட்டினை நோக்கப் போய்கொண்டிருந்த பிண ஊர்வலம் ஒன்றைக் கண்டது. பாடையினை வெளுத்த துணியினைக் கொண்டு பல சுற்றுக்கள் சுற்றியிருந்தனர். அவ்வாறு சுற்றப்பட்டிருந்த போர்வை ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்த முதல் எழுத்துக்களை வைத்து அது தன்னுடைய போர்வை என்பதனை அவர்களுள் ஒருவன் தெரிந்து கொண்டான். பிணத்தைக் கிடத்த விரிக்கப்பட்டுள்ள விரிப்பு தன்னுடையது என்பதனைக் கண்ட மற்றவன் அதன் முனையில் இருந்த அடையாள எழுத்துக்களைக் கத்தரித்துக் கொண்டான். சிலநாள்களுக்குப் பின்னர் வண்ணான் அந்த விரிப்பைக் கொண்டு வந்தபோது

அதில் ஒர மூலை சிதைந்துள்ளதைப் பற்றி அந்த வண்ணான் ஏதும் தெரியாதவனைப் போல நடித்தபடி தான் இல்லாதபோது தன் உதவியாளர்களுள் ஒருவன் அவ்வாறு அதனைக் கிழித்திருக்க வேண்டும் எனக் கூறினான். மற்றொரு சமயம் ஐரோப்பியன் ஒருவன் தன் மேலாடைகளை ஒத்த சட்டை, கால்சட்டைகளை அணிந்தவனாக யூரேசியன் ஒருவன் சென்று கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்றவனாக நெருங்கிப் பார்த்து அவை தன்னுடையவை என்பதையும் நன்கு வெளுத்துச் சலவை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் தெரிந்து கொண்டான்.

பாண்டியன், பெரு, தமிழ், வடுகு என்பனவே வண்ணாரின் எண்ணிக்கையில் மிகுதியானவர்களைக் கொண்டதாகப் பதியப்பட்டுள்ள உட்பிரிவுகள். வண்ணான் என்பது தொழில் தொடர்பான பெயர் எனக் கூறக் கூடியதேயன்றிச் சாதிக்குரிய பட்டப்பெயரன்று. மேலும், பாண்டிய வண்ணார் எனப்படும் வண்ணார் பிரிவினுள் தெலுங்கு தேசத்தவரான தசாகலர் எனப்படும் வடுக வண்ணார், பள்ளர், பறையர், முசல்மான்கள் ஆகியோருக்குத் தணமவெளுக்கும் பள்ள, புதர, தலுக்க வண்ணார் ஆகியோரும் அடங்குவர். பாண்டிய வண்ணாருக்குப் பெபிர மனுசன் என்ற சாதித் தலைவன் உள்ளான். வாண்ணார் சாதி இளைஞன் தன் அத்தைமகளை மணக்க உரிமை கொண்டாடலாம். திருமணத்தின்போது மணமகனின் உடன்பிறந்தவளே மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கின்றாள். நம்பிகள் மணச் சடங்கை நடத்தி வைப்பார். பரிசப் பணத்திற்கு இருமடங்கு தொகையினைச் செலுத்தி கணவன் மனைவியருள் விரும்பியவர்கள் மணவிலக்குப் பெற்று மறுமணம் செய்து கொள்ளலாம். குருநாதனே இவர்கள் குலதெய்வம். ஒரு வண்ணானே அத்தெய்வத்தின் கோவிலில் பூசாரியாக உள்ளான். இறந்தவர்களை எரிப்பதே பெரும்பாலும் இவர்களிடையே வழக்கமாக உள்ளது. பதினாறாம் நாள் நம்பி ஒருவன் வீட்டினைப் புனிதப்படுத்திச் சாவுத் தீட்டினைப் போக்குவான் என மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

வண்ணார் சிலர் ஈர்குளி வேளாளர் எனத் தங்களைப் பிரித்து கொண்டுள்ளனர். ராசகன், காத்தவராயன் வம்சம் என்பனவும் வண்ணான் சாதிக்கு உரிய வேறு பெயர்களாய் பதியப்பட்டுள்ளன.

மலபாரைச் சேர்ந்த வண்ணான்கள் மண்ணான் எனவும் வண்ணான் எனவும் அழைக்கப்படுகின்றனர். மலபாரைச் சேர்ந்த தாழ்ந்த சாதியாரான இவ்

வண்ணான்கள் தீட்டு உண்டாக்கும் தாழ்ந்த சாதியாருக்கும், பிறப்பு, சாவு முதலிய தீட்டுக்களுக்கு உயர் சாதியார் உள்ளாகி இருக்கும்போதும் வெளுப்பவர்கள். உயர்சாதியார் பிறப்பு, சாவு முதலியவற்றால் தங்களுக்கு ஏற்படும் தீட்டினை மண்ணான்கள் வெளுததுத் தரும் உடைகளை உடுத்தே போக்கிக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். மற்ற சமயங்களில் மண்ணான்கள் வெளுக்கும் துணி தங்களைத் தீட்டுப்படுத்துவதாக இவர்கள் கருதுகின்றனர். பெண்களே பெரும்பாலும் வெளுக்கும் தொழிலைச் செய்கின்றனர். ஆண்கள் பேய் ஓட்டுதல், பூத ஆட்டம் ஆடுதல், மருத்துவம் பார்த்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். இப்பணிகளை இவர்கள் உயர்ந்த சாதியாருக்குக் கூடச் செய்கின்றனர். இவர்கள் சாதிப்பெண்கள், விளக்கத்தலைவன், வேலன் சாதிப் பெண்களைப் போல மருத்துவச்சிகளாகப் பணிபுரிகின்றனர். இச் சாதியாரைத் திருவாங்கூரைச் சேர்ந்த மலைவாழ் பழங்குடிகளான மண்ணான்களோடு குழப்பிக் கொள்ளுதல் கூடாது எனத் திரு பிரான்சிஸ் கூறுகின்றார்.

“தென் மலபாரைச் சேர்ந்த மக்கள்தாயம் மேற்கொள்ளும் சாதியாரான மண்ணான்கள் வடமலபாரைச் சேர்ந்த மருமக்கள்தாயம் மேற்கொள்ளும் வண்ணான்களுக்கு நிகரானவர்கள். இந்த மண்ணான்களின் பணி உதவி தீட்டு நீக்கும் சடங்கின்போது மாத்துப் பெறுதலில் உயர்சாதியாருக்கு இன்றியமையாது தேவைப்படுகிறது. இவர்கள் பேய் ஆட்டம் நிகழ்த்துபவர்களாகவும் தையல்காகரர்களாகவும் பணிபுரிகின்றனர். தென்பகுதிகளில் உடன்பிறந்த பலர் ஒருத்தியினை பொதுவாக மனைவியாகக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். பெரு மண்ணான், தீண்டா மண்ணான் என மண்ணான்கள் இரு அகமணக்கட்டுப்பாடு உடைய பிரிவினராகப் பிரிவுபட்டுள்ளனர். வள்ளுவநாட்டில் சோப்பன், பெருமண்ணான், புன்னைக்காடன், புடிலயக்கோடம் என்ற நான்கு அகமணக்கட்டுப்பாடுடைய பிரிவினராகப் பிரிவுபட்டுள்ளனர். தீண்டா மண்ணான்களும் புலிகப்கோடம் பிரிவினரும் பிற பிரிவினர் மீது நீர் தெளித்துத் தீட்டுப் போக்குவர் என மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

“ஒரு சிறுமி பூப்படையும்போது நாயர்கள் நடத்தும் திரண்ட கலியாணம் சடங்கின்போது மண்ணான் உதவி தேவைப்படுகிறது. அப்போது அவர்கள் பாடல்கள் பாடுவதோடு பூப்படைந்த சிறுமிக்கான மாத்து என்ற தூய உடையினையும் வழங்குவர். சாவுத் தீட்டின்போதும் இவர்கள் அத்தகைய பணியினை மேற்கொள்கின்றனர். நாயர்களிடையே ஒருத்தி வீட்டுக்கு விலக்கான

நான்காம் நாள் அல்லது சில சமயங்களில் மூன்றாம் நாள் குளிக்கும்போது மண்ணான் சாதிப் பெண்கள் தரும் மாத்தினைப் பயன்படுத்தவேண்டும். பிள்ளையைப் பெற்ற ஒருத்திக்கும் மண்ணான் வீட்டுப் பெண்கள் இது போல மாத்துத் தரக் கடமைப்பட்டவர்கள். அவள் பயன்படுத்திய அழுக்கான துணிகள், விரிப்புகள் ஆகியனவற்றையும் மண்ணாத்தி துவைக்கக் கடமைப்பட்டவள் என டி.கே.கோபால் பணிக்கர் கூறுகின்றார்.* கம்மாளர் பிரிவினருக்கு அம்பட்டவர்களாகப் பணிபுரியும் மண்ணான்களைத் துணிவெளுக்கும் மதிப்பு வாய்ந்த பணிபுரியும் மண்ணான்கள் தங்கள் சாதியில் சேர்ந்துக் கொள்வதில்லை. கால்நடைகளுக்கு வலியினையும் நோயினையும் உண்டாக்கும் தெய்வமான முண்டியன் தொடர்பான சில சடங்குகளை மண்ணான்கள் நிகழ்த்கின்றனர். திருவிழாவின்போது வெங்கிட ஆடை எனப்படும் வளம் சேர்க்கும் குடையினை இவர்கள் தூக்கிச் செல்வர். பச்சை, சிவப்பு, ஆரஞ்சு கறுப்பு ஆகிய வண்ணத் துணிகளின் அடுக்களைக் கொண்ட இக் குடை தேவியின் முன் எடுத்துச் செல்லப்படும் எனத் திரு எஸ். அப்பாதுரை அய்யர் எங்களுக்குத் தெரிவிகின்றார்.

மலபாரில் பல இடங்களில் பகவதிக்குக் கோயில்கள் உள்ளன. இதில் பூசை செய்வோர் வண்ணான் சாதியினரே என மேற்றிராணியார் வைட்உறட் பதிந்துள்ளார்.** மார்ச் மாதத்தின்போது குருசி தர்ப்பணம் (குருவுக்குத் தருவது) என்ற ஆண்டுத் திருவிழா நடைபெறுகிறது. கோடை தொடங்கிவிட்ட அச் சமயத்தில் மக்கள் வேலை வெட்டி இல்லாதவர்களாக ஒப்வாக இருப்பர். தேவியின் சினத்தைத் தணிவிப்பதே இத்திருவிழாவின் நோக்கமாகும். அப்போது பூசாரி கோயிலுக்கு வெளியே வாசலில் அமர்ந்திருப்பான்: சிவப்பு அரளிப் பூ ஆரம் தரித்து நெற்றியில் சிவப்புக் குங்குமம் தரித்தவனாக இருக்கும் அவனிடம் பக்தர்கள் ஆடுகளையும் கோழிகளையும் கொண்டு வந்து சேர்ப்பர். பலிக்கு உரிய வெட்டுவாளால் ஒரே வீச்சில் அவன் அவற்றை வெட்டிப்பலி தருவான். ஒரே வெட்டில் தலைவேறு உடல் வேறாவது நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது. ஆகையால் இவ்வாறு பலியாடு வெட்டுவதில் கைதேர்ந்தவர்கள் பணி இச் சமயத்தில் மிகுதியும் தேவைப்படுவதாகும். தலை வெட்டுப்பட்டு வீழ்ந்தவுடன் பூசாரி உடலைத் தூக்கி அதிலிருந்து வழியும் குருதியினைத் தண்ணீர், மஞ்சள், குங்குமம் கொஞ்சம் அரிசி முதலியன உள்ள பாத்திரத்தில் விழுமாறு பிடிப்பான். எல்லா விலங்குகளையும் பலியிட்டு முடித்தபின் பூசாரி தண்ணீரோடு கூடிய

* மலபாரும் அங்கு வாழ்வோரும் (Malabar and its Folk, 1900)

** சென்னை கிறித்தவ மாவட்ட இதழ், *1906.* (Madras Dioc. Magazine, 1906)

அந்தக் குருதியினை மந்திரங்கள் சொல்லியபடி கவிழ்த்து விடுவான். மக்கள் சற்றே விலகி நிற்பர். பாத்திரம் கிட்டத்தட்டக் காலியானவுடன் பூசாரி சடங்கு முடிந்தது என்பதற்கு அறிகுறியாக அதனைக் குப்புறக் கவிழ்ப்பான். இச் சடங்கின்போது வண்ணான்கள் பலர் விசித்திரமான உடை உடுத்தவர்களாக நடனம் ஆடியபடி மும்முறை கோயிலைச் சுற்றி வருவர். இந்தத் திருவிழாவின்போது பல தெருக்களிலும் வளைந்த முனையினையுடைய பள்ளிவாள் எனப்படும் வாளினை ஊர்வலமாக எடுத்தபடி பக்தர்கள் திரிவர். அக்டோபர் மாதத்தில் தசாரா விழாவின்போது இந்த வாள்களை வழிபடுகின்றனர். சில கோயில்களில் இந்த வாள்கள் மட்டுமே தெய்வ உருவமாக வைக்கப்பட்டுள்ளன. தீயர் தங்கள் தோட்டங்களுள் தங்கள் குடும்பத்துத் தெய்வங்களுக்கெனச் சிறிய கோயில்களைக் கட்டியுள்ளனர். அவற்றுள் பகவதி அல்லது வேறு தீய தேவதைகள் அல்லது மூதாதையர் இடம் பெற்றிருக்கக் காணலாம். ஆண்டுக்கு ஒரு முறை வண்ணான்கள் விசித்திரமான உடையணிந்தவர்களாகத் தலையில் கிரீடம் தரித்து வந்து முழவும் பிற இசைக் கருவிகளும் முழங்க அந்தக் கோயில்களைச் சுற்றி நடனம் ஆடுவர். அப்போது தீயர் சாதியினைச் சேர்ந்த பூசாரி, அரிசி, இளநீர், கர்ப்பூரம், சாம்பிராணி, நெய்யோடு கூட வெல்லப்பாகில் இட்ட அவல் ஆகியனவற்றை அத் தெய்வத்திற்குப் படைப்பான் என அவரே தெரிவிக்கின்றார்.

தீயரைப் பற்றிய ஒரு குறிப்பில் மலபார் மாவட்டக் கையேட்டில் திரு லோகன் கூறியுள்ளதாவது: இச் சாதியினர் பேயோட்டம், பேயோட்டுதல் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் உடையவர்கள்,. இந்த மூடநம்பிக்கைக்குப் பூசாரிகளாக இருந்து பணி செய்பவர்கள் வண்ணான்களே. மணிகளை ஆட்டியும், மந்திரக் கட்டங்களை வரைந்தும் விளக்குகளால் ஆரத்தி எடுத்தும் மந்திரங்கூறித் தீய ஆவிகளை இவர்கள் ஓட்டுகின்றனர். தீயர் சாதியார் குடும்பங்களில் மணவாழ்க்கையின்போது ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் இவ்வாறு பேயோட்டி வைக்கும்படியாக நேரிடுவது வழக்கம். தேவ, ஆட்டம் என்ற இரு சொற்கள் திரிந்து வழங்குவதான தெய்யாட்டம் என்ற சடங்கு குறிப்பிடத்தக்கது. ஒருத்தி கருவுற்ற ஐந்தாம் மாதம் சிலபோது இதனை நடத்துவர். இலைதழைகளால் ஒரு அரங்கம் அமைத்து அதன் முன் அச்சம் தருவதான சாமுண்டியின் உருவினைச் செய்து வைப்பர். பேய்களின் தலைவியான இவள் உருவம் அரிசி மாவு, மஞ்சள் பொடி, கரிப்பொடி ஆகியன கொண்டு அமைக்கப்படும். பேய்கள், பூதங்கள், குட்டிச் சாத்தான்கள் முதலிய தீய ஆவிகளைக் குறிக்கும்படியாக பதினெட்டுக்குக் குறையாத வண்ணார்

குழு திரட்டப்படும். இவர்களை எழுந்தருளும்படி வேண்டினால் இத் தீய ஆவிகளைக் குறிக்கும் வண்ணார் இணை இணையாக மேடையில் ஆடியும் பாடியும் குதித்தும் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தவர்களாக ஒருவர் மீது மற்றவர் மஞ்சள் நீரினை ஊற்றிக் கொள்வர். இதுபோலக் குதித்துக் கும்மாளமிடும் இவர்களின் சோர்வுகாரணமாகப் படிபடியாகத் திகைப்புக்கு உள்ளானவர்களாக மாறி இறுதியில் தீய ஆவிகள் ஏறப்பட்டவர்களாக மாறுவர். இதுபோன்ற சமயங்களில் சிலபோது இவர்கள் வெறியினைத் தனித்துக் கொள்ள கோழி மற்றும் ஆடு முதலிய விலங்குகளை இவர்களை நோக்கி வீசுவர். அவற்றை இவர்கள் ஒரு புலி தன் இரையினைக் கடித்துப் கிழிப்பதைப் போலப் பற்களால் கடித்துக் கிழிப்பர். சுமார் இருபது நிமிடங்களுக்குப் பிறகு இவர்களுக்கு வந்த மெய் நடுக்கம் தணியும். இவர்கள்மேல் ஏறிய தீய ஆவி அல்லது தெய்வம் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தபடி களைத்துப் போய் அடுத்தவர்கள் அரங்கில் தோன்ற இடம் தந்து வெளியேறும். இவ்வாறு இரவு முழுக்கக் கொட்டுமுழுக்கு முதலிய ஆரவாரங்களுடன் அருகில் குடியிருக்கும் ஐரோப்பியர் அமைதியாகத் தூங்க இயலாதபடி இவர்கள் ஆட்டம் நடத்துவர்.

வண்ணத்தான் - Vannattan

வெளுத்தேதன் என்பதற்கான மற்றுமொரு பெயர். இவர்கள் நாயர் முதலிய உயர் சாதியாருக்குத் துணி வெளுக்கும் வண்ணார்.

வன்னிய குல சத்திரியர் - Vanni kulakahatriya

பள்ளியருக்கான மற்றுமொரு பெயர். இவர்கள் அக்னி குல சத்திரியர் எனத் தங்களைக் கூறிக் கொள்கின்றனர்.

வன்னியன் - Vanniyan

பள்ளி சாதிக்கான மற்றுமொரு பெயர். இப்பெயர் அம்பலக்காரன், வலையன் சாதிகளின் உட்பிரிவுக்கு உரியதாகவும் வழங்குகிறது. மறவர் சிலரும் வன்னியன் எனவும் வன்னிக்குட்டி எனவும் வழங்கப்படுகின்றனர். தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இருளர் தங்களைத் தேன் வன்னியர் எனக் கூறிக் கொள்கின்றனர்.

வந்தரி - Vantari

பார்க்க: தெலக (See: Telaga)

வாணுவன் - Vanuvan

எண்ணெய் ஆட்டும் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டவர்களாகத் தானியம் முதலிய பிற பொருள்களின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வாணியன்கள் குடிக்கொள்ளும் பெயர்.

வாரகுருப்பு - Varakurup

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மலையாளம் பரவன்களுக்கான பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது.

வரகு - Varige (millet)

காபுகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

வாரியர் - Vairiyar

அம்பலவாசிகளின் வாரியர் பிரிவினைப் பற்றிய பின்வரும் குறிப்புக்கு நான் திரு என். சுப்ரமணி அய்யர் அவருக்குக் கடப்பாடுடையேன். பரசவன் என்ற சொல்லிலிருந்து இவர்கள் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். யக்ஞுவால்சியர் முதலானவர்கள் வகுத்து வைத்துள்ளபடி பாரசவன் என்ற பெயர் பிராமணன் ஒருவன் சூத்திரசாதிப் பெண் ஒருத்தியோடு கொண்ட உறவின் காரணமாகப் பிறந்தவனுக்கு உரியது. இதன்படி வாரியார் பிராமணக் குருதிக் கலப்பு உடையவராயினும் அச் சாதியார் பிராமணர்கள் அல்லர் என்பது தெளிவாம். முன்னாளில் இத்தகைய உறவுகள் புனிதமானவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டனவாக இருந்துள்ளன. பசுமுத்தாலு தன்னுடைய கேரள விசேச மகாத்மியம் என்ற நூலில் வாரியார் பற்றி இத்தகைய கருத்தைத் தெரிவிப்பதோடு வாரியருடைய முக்கிய பணி கோயில் தரையினைக் கூட்டிப் பெருக்குவது எனவும் கூறியுள்ளார். கேரளத்திற்கு உரிய அசௌசவிதிகளின் (தீட்டுக்குரியனவற்றை விளக்கும் நூல்கள்) விருத்திபுரைகாரர் பாரசவன் என்ற சொல்லுக்கு வாரியன் என விளக்கும் தந்துள்ளார். தங்கள் பெயரை வடமொழியில் எழுதும்போது வாரியர்கள் பரசவ என்பதனைப் பட்டப்பெயராகப் பெயருக்குப் பின் போடும் வழக்கம் உடையவர்களாக உள்ளனர். சிலர் தண்ணீரிலிருந்து பிறந்தவன் எனப் பொருள்படும் வரிஜ என்ற சொல்லிலிருந்து வாரியர் என்ற இச் சொல் வந்ததாகக் கூறுவர். இதற்குக் காரணமாகக் கோயிலினுள் பணிசெய்ய மாமிசம் உண்ணும் சூத்திரர்கள் தகுதியற்றவர்கள் என்ற காரணத்தாலேயே பரசுராமரால் இவ்வாறு பனியே ஒரு வகுப்பார் படைக்கப்பட்டனர் என்பர். காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளை அவர்களும் மற்றும் சிலரும பெருக்குதல் எனப் பொருள்படும் வாருதல் என்ற

சொல்லிலிருந்து வாரியார் என்பது வந்தது எனக் கூறுவர். அண்மையில் இந்தச் சொல்லை இரண்டாகப் பிரித்து இதற்கு போலி ஆரியர் என்பதற்குச் சமமான விளக்கம் தரவும் முற்பட்டு உள்ளனர். ஆசிரியன் எனப் பொருள்படும் ஆசன் என்ற சொல் சில குடும்பத்தவர்களுக்கு உரிய பெயராக உள்ளது. இவர்கள் பெருஞ்செல்வர் இல்லங்களில் பரம்பரையாகக் கல்வி பயிற்றுவிக்கும் பணியினை மேற்கொண்டவர்கள். இடைக்காலத்தில் வாரியர் குடும்பங்கள் பல கல்வி பயிற்றுநர்களாகவும் சோதிடர்களாகவும் இருக்கும் உரிமையினை அரசாணை வழிப்பெற்றுள்ளன. இந்தத் தனி உரிமையினை இன்றும் இவர்கள் அனுபவித்து வருகின்றனர்.

வாரியர்களின் தோற்றம் பற்றிப் பின்வரும் வழக்கு வரலாறு வழங்கிவருகின்றது. ஒரு பிராமண புரோகிதரின் கட்டளையை ஏற்றுச் சூத்திர சாதிப் பெண் ஒருத்தி கோயிலுக்குள் கிடந்த எலும்பு ஒன்றினை அப்புறப்படுத்தினாள். இதனால் அவளை அவள் சாதியினர் சாதிவிலக்கம் செய்தனர். இதனைக் கேள்விப்பட்ட புரோகிதர்கள் அவளுடைய நிலையை உயர்த்த விரும்பியவர்களாக அவளை அம்பலவாசிகளின் எனப்படும் கோயிற்பணியாளர்களின் சந்ததியின் முதல்வியாக ஆக்கினர். அவளது சந்ததியினரே அம்பலவாசிகள். இவர்களே பின்னர் வாரியர் எனப்பட்டனர். மற்றொரு வழக்கு வரலாற்றின்படி நம்பூதிரி ஒருவனின் வீட்டினுள் கிடந்த மாறான் ஒருவன் பிணத்தைச் சில நாயர்கள் உடனடியாக அப்புறப்படுத்தினர். இதன் காரணமாக அவர்கள் சமூகப்படி நிலையில் உயர்த்தப்பட்டனர். இவர்களே பின்னர் வாரியர் என்ற தனிச் சாதியினர் ஆயினர். மற்றும் ஒரு வழக்கு வரலாறு திரேதாயுகத்தில் சூத்திர சாதிப் பெண் ஒருத்தி ஐந்து பிள்ளைகளை உடையவளாயிருந்தாள். இவர்களுள் மூத்தவன் தீயட்டுண்ணிகளின் மூதாதையாகவும் இரண்டாமவன் வாரியார் சாதியின் மூதாதையாகவும் ஆயினான் என்று கூறுகிறது. நான்காவதான ஒரு கதை வழக்குக் கேரள மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. பிராமண சாதியினைச் சேர்ந்த இளங்கன்னி ஒருத்தியினை வயதான ஒருவனுக்கு மணம் செய்வித்தனர். தெய்வத்தின் அருளின்றி மனித முயற்சி மட்டும் பயன்தராது எனப் கருதிய அவள் தன்னுடைய நிலையினைப் புரிந்துகொண்டவளாக நாள்தோறும் மலர்களால் மாலைகட்டி அருகே இருக்கும் கோயிலில் உள்ள தெய்வத்திற்கு அளிப்பதில் சிறிது நேரத்தை செலவிட்டு வந்தாள். அவள் கர்ப்பமுற்று மகப்பெற்றபோது அவளுடைய பிள்ளையை ஏற்றுக்கொண்ட கணவன் அவளைச் சாதிவிலக்கத்திற்கு உள்ளாக்கினான். இதனால் அவள் கட்டும் மாலைகள் ஏற்றுக்

கொள்ளப்படாதனவாயின. இதனால் சிறிதும் மனம் தளர்வடையாத அவள் தான் கட்டும் மாலைகளை மனத்தாலேயே தெய்வத்திற்கு உரியதாக்கினாள். இம் மாலைகள் மாயமாக இறைவன் திருமேனியின் விளங்கும் புதுமை நிகழ்வதாயிற்று. எந்தப் பாவமும் அறியாத அச் சிறுமிக்குச் செய்த கொடுமையினை நினைத்து மக்கள் மனம் கலங்கினர். எனினும் அவளை மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்ள அவர்கள் முன்வரவில்லை. இதனால் புதிதாக வாரியர் என்ற சாதி தோற்றுவிக்கப்பட்டு அவளுடைய குழந்தையை அழச்சேரி தம்பிராக்கள் வளர்த்துப் பதிப்புரத்து வாயிலில் அமைந்திருந்த இல்லத்தில் அவனைக் குடியமர்த்தினார். பாசுபத தந்திரத்தில் வாரியர் கைலாசவாசிகள் எனக் கூறப்பட்டுள்ளனர். சிவனுடைய வழிபாட்டில் இவர்கள் மிகுந்த ஆர்வம் உடையவர்களாதலால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். கைலாசம் சிவன் உறையுமிடமாகும். இறப்பவர்கள் நற்கதி அடைபவர்களாயின் அங்கு சென்ற சேர்வர்.

ஒணாட்டுக்காரர், வேணாட்டுக்காரர், இளையாட்டுநாடு (இளையது) தெக்கும்கூர் எனத் திருவாங்கூரைச் சேர்ந்த வாரியர் நான்கு பிரிவினராக உள்ளனர். வேணாட்டுக் காரர் ஒணாட்டுக்காரரோடு உடன் உண்ணும் உரிமையுடையவர்கள். வேணாட்டுக்காரர் ஒணாட்டக்காரப் புரோகிதரைக் கொண்டு தங்கள் சடங்கை நடத்திக் கொள்கின்றனர். எனினும் ஒணாட்டுக்காரர் தங்கள் சடங்குகளை நடத்தும்போது வேணாட்டுக்காரர் அதில் பங்குபெறவும் அங்கு இருக்கவும் அனுமதிப்பதில்லை. மூன்றாம் நான்காம் பிரிவினர் முதலாம் இரண்டாம் பிரிவினர் இல்லத்தில் உணவு கொள்வர். முதலாம் இரண்டாம் பிரிவினர் மூன்றாம் நான்காம் பிரிவினர் இல்லத்தில் உணவு கொள்வதில்லை. பிரிட்டிசாரின் மலபாரைச் சேர்ந்த வாரியர்கள் இடையே பல பிரிவுகள் உள்ளன.

வாரியர்கள் பொதுவான நல்ல கல்வியறிவு வாய்க்கப் பெற்றவர்கள். வடமொழியில் சிறந்த புலமைபெற்றுள்ள இவர்கள் சிறந்த சோதிடர்களாகவும் மருத்தவர்களாகவும் விளங்குகின்றனர். பிசாரட்டியின் இல்லம் பிசாரம் எனப்படுவதைப்போல வாரியன் ஒருவன் இல்லம் வாரியம் எனப்படுகிறது.

திருமணம் ஆன பெண்கள் தலையின் இடப்பக்கத்தில் நாயர் சாதிப் பெண்களைப் போலக் கொண்டையிட்டுக் கொள்கின்றனர். தங்கள் மார்பகங்களைப் மடிக்கப்பட்ட ஒரு துணி கொண்டு மறைத்துக் கொள்ளும் இவர்கள் இரவிக்கை முதலியனவற்றை அணிவதோ புதிய வகையிலான

உடைகளை மேற்கொள்வதோ இல்லை. திருமணத்தின்போது அணிவிக்கப்படும் அணி மாத்ர எனப்படுகின்றது. அது மத்தள உருவுடையதாக இருக்கும். கழுத்தில் எந்திரம், குழல் எனப்படும் வேறு அணிகளையும் அணிகின்றனர். நாயர் பெண்கள் அணியும் தோடு என்ற காதணியினை இவர்களும் காதுமடலில் அணிகின்றனர். பெண்கள் நம்பூத்ரி சாதிப் பெண்களைப் போல நெற்றியில் சந்தனக் கீற்றுத் தீட்டிக் கொள்கின்றனர்.

வாரியர்கள், புட்பகன்கள், பிச்சாராடியர் ஆகிய மூவரும் முதலில் மலபாரைச் சேர்ந்த மாலைகட்டிகளாகப் பரசுராமனால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இன்றும் தென் திருவாங்கூரைத் தவிர பிற இடங்களில் உள்ள கோயில்களில் இந்த மூன்று பிரிவினருள் ஒரு பிரிவினரே மலை கட்டிகளாக உள்ளனர். தென் திருவாங்கூரில் குருக்கள் சாதியர் அப்பணியினைச் செய்கின்றனர். ஒரு கோயிலைச் சேர்ந்த வாரியாரின் பதவிப் பொறுப்புக் கழகம் என அழைக்கப்படும் இது கழுவ என்ற திராவிட வேர்ச் சொல்லிலிருந்து வந்ததாகும்.. மாலைக் கழகம், தனிக்கழகம் எனக் கழகம் இரண்டு வகைப்படும். இவற்றுள் கூட்டிப் பெருக்குதலான தனிக் கழகத்தைவிட மாலைக்கழகம் மதிப்பு வாய்ந்தது. கழகர் என்ற வகுப்பாருள் கோயிலுக்கு மாலை கட்டுவோர், படையலுக்கான பொருள்களைத் தயாரிப்போர், பலி இடத்தைப் பெருக்குவோர், விளக்குத் தூக்குவோர், தெய்வ ஊர்வலத்தில் குடை பிடிப்போர் கோயிலுக்கு உரிய அணிமணிகளைக் காப்போர் முதலியவர்கள் அடங்குவர். கோயில் புரோகிதர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் கடமைப்பட்டவர் வாரியர். காலை முதல் மாலை வரை இவர் பல சிறு பணிகளைச் செய்து வரவேண்டும். கோயிலில் சமைக்கும் உணவு இறைவனுக்குப் படைக்கப்பட்டபின் சிறிது வாரியருக்குத் தரப்படுகிறது, சிவன் கோவில் வாரியர்கள் திருமால் கோவில்களைச சேர்ந்த பிசடெரிகளுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் வாழ்த்துப் பாடல்கள் சிவனை வேண்டியே பாடப்பெறும் எனினும் இவர்கள் விட்டுணு சுப்பிரமணியர், சாஸ்தா, கணேசர், பத்ரகாளி முதலிய தெய்வங்களையும் வழிபடுகின்றனர். கூட்டப்பாதகம் என்ற ஆட்டத்தையே இவர்கள் பொழுதுபோக்காக ஆடுகின்றனர். வங்காலநிக்கன் என்பவன் இந்த ஆட்டத்தின் கதைத் தலைவன். நைத்யர் ஆட்டத்தின் தலைவி. இளையாடு ஒருவனே மேடையினை மேற்பார்ப்பவன். பிசாடரி பாத்திரம் ஏற்று நடிப்பவன். பரங்கொடன் கோமாளியாவான். மாப்ப அவன் மனைவி. பதினெட்டாம் நூற்றாண்டில் இருபத்தெட்டு நாள்கள் தொடர்ந்து நடக்கும் மாமங்கம் என்ற பெரிய திருவிழா பிரிட்டிசு மலபாரில் நடத்தப்பட்டு வந்தது. மேலே கூறிய பாத்திரங்கள், மாசி

மாதத்தில் மகநாளில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகம் என்னும் இந்தத் திருவிழாவிற்குப் போவதைப் பற்றிக் கூறுவதே இந்த ஆட்டத்தின் கதையின் கருப்பொருளாகும்.

வாரியர் சாதியின் அனைத்து விவகாரங்களையும் நம்பூத்ரி பிராமணர்களே மேற்பார்த்து வருகின்றனர். எனினும் வாரியர்களுக்கு எனத் தனியே புரோகிதர்கள் உள்ளனர். அம்பலவாசிச் சாதியார் அனைவருக்கும் முன்பு தாங்கள் புரோகிதர்களாக இருந்து வந்ததாக இளையாடுகள் கூறுகின்றனர். இப்பொழுது அம்பலவாசிச் சாதியினரே தங்களுக்குப் புரோகிதம் செய்வதால் இளையாடுகளுக்கான அப்பொறுப்புக் கை நழுவிப் போய்விட்டதாகக் கருதுவர். இன்றுங்கூட வாரியர்களுக்கு உரிய கிணற்றில் நீர் எடுத்துப் பருகும்படி கூறினால் இளையாடுகள் அதற்கு உடன்படுவதில்லை. எனினும் நம்பூத்ரிகளால் புனிதப்படுத்தப்பட்ட தண்ணீரை வாரியரிடம் எடுத்துச் சென்று அதனைக் கொண்டு தங்கள் உணவைச் சமைத்துக்கொள்ள இளையாடுகள் உடன்படுகின்றனர். இதற்கென அவுபாசன நெருப்பை அவர்கள் உடன் வைத்திருத்தல் இன்றியமையாதது.

கொச்சி மற்றும் பிரிட்டிசு மலபாரைச் சேர்ந்த வாரியர்கள் மருமக்கள் தாயமுறையினையே மேற்கொண்டு வருகின்றனர். திருவாங்கூரைச் சேர்ந்த வாரியர்களுள் அதிலும் சிறப்பாக ஒணத்துக்காரப் பிரிவினர் மக்கள்தாய முறையினைச் சில மாறுதல்களுடன் பின்பற்றுகின்றனர். இதன்படி குடும்ப உடைமையில் ஒருவனுடைய ஆண், பெண் சந்ததியினர் இருவருமே சமபங்கு பெறுதற்கு உரியர். கூட்டுக் குடும்பங்களில் வயதில் மூத்த ஆண் குடும்ப உடைமைகளை மேற்பார்க்கும் உரிமை உடையவன். எனினும் உடைமையினைப் பாகம் பிரித்துக்கொள்ளுதலே நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒருத்தி பூப்படையும் முன் தாலிகட்டுக் கலியாணத்தை வாரியர்கள் நிகழ்த்தி விடுகின்றனர். ஆண்களுக்குப் பன்னிரண்டு முதல் பதினாறு வயதுக்கு உள்ளாகச் சிவதீட்சை தரப்படுகின்றது. தாலிகட்டுச் சடங்கு குடிவைப்பு முறையில் மேற்கொள்ளப்படுவதாயின் - தாலிகட்டியவனே பின்னர் அச்சிறுமிக்குக் கணவனாகப் போகின்றவனாயின் - பின்னர் சம்பந்தம் சடங்கு தனியே நடத்தப்பட வேண்டியதில்லை. ஒரே பிரிவினைச் சேர்ந்தவர்களிடையேயான தாலி கட்டுக் கலியாணங்கள் குடிவைப்பு மணங்களாக அமைவதே பெருவழக்காக உள்ளது. பூப்படையும் சிறுமி ஒருத்தி மணமாகாதவளாக இருப்பாளாயின்

அவளைச் சமயச் சடங்குகள் எதிலும் பங்குபெற அனுமதிப்பதில்லை. மணமாகும் முன் கோயில்களுள் நுழையவும் அவள் அனுமதிக்கப்படமாட்டாள். வாரியர் திருமணங்களில் அயினி உண்ணு சடங்கே முதன்முதலாக நடத்தப்படுகின்றது. மணமகன் புதிய ஆடை அணிகள் புனைந்தவனாகத் தன் உறவினர்களோடு கூட விருந்து உண்பான். அதன்பின் ஊர்வலமாக மணமகள் இல்லம் சென்ற சேரும் அவன் குளித்தபின் மணமகள் தொட்டுத் தரும் உடைகளை உடுத்துவான். இதன்பின் மந்திரங்கள் சொல்லி வேள்விப் பலி தரப்படும். பின் மணமகள் மணப்பந்தலுக்கு அழைத்து வரப்படுவாள். பிராமணர்களுக்கு உரிய சடங்குகள் அனைத்தும் முறைப்படி நிகழ்த்தப்படும். பொழுது விழுந்தபின் தரையில் தார்ப்பையினைப் பரப்பி அதன்மீது சிறுத்தையின் தோலினை இட்டு மேலே ஒரு வெள்ளைத் துணியினைப் போடுவர். வடக்கு பக்கத்தில் உட்காந்திருக்கும் மணமகன் கணபதியினை வழிபட்டபின் மணமக்கள் இருவரும் தரையில் விரிக்கப்பட்ட சிறுத்தைத் தோலின் மீது அமர்வர். அவர்கள் முன் விளக்கினை ஆரத்தி சுற்றுவர். இது தீட்சா விரிக்குக எனப்படும். குடிவைப்பு முறையிலான திருமணத்தில் மணமகளை மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று அங்கு தீட்சா விரிக்கு சடங்கினை நடத்துவர். அவ்வாறில்லையாயின் அத்திருமணம் வெறும் தாலிகட்டுச் சடங்காகவே கருதப்பட்டு மணமகள் பூப்படைந்தபின் அவள் வேறொருவனோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவாள். ஒருத்தியினை மணந்தவன் இறப்பானாகில் அவள் வேறொரு வாரியர் அல்லது பிராமணனிடமிருந்து சேலை பெற்று உடுத்து அவனுக்கு மனைவியாகலாம்.

மலையாளத்துப் பிராமணர்கள் மேற்கொள்ளும் சடங்குகள் பெரும்பாலானவற்றை வாரியர்களும் நடத்துகின்றனர். விரதம், உபநயனம் ஆகிய இரண்டு மட்டும் நடத்தப்படுவதில்லை. முன்பே கூறியபடி பன்னிரண்டு முதல் பதினாறு வயதுக்குள்ளாகச் சிவ தீட்சை செய்து வைக்கின்றனர். இதன் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகள் முதல்நாளே முடிந்துவிடினும் இச் சடங்கு நான்கு நாள்கள் வரை நீட்டிக்கும். நல்ல சுப வேளையில் புரோகிதரும் தீட்டை பெறும் வாரியர் இளைஞனும் தட்டு முறையில் அல்லது சடங்கின்போது உடையணிய வேண்டிய முறையில் வேட்டிகட்டிச் கொள்வர். வாசனைப் பொருள்களும் மலர்களும் இடப்பட்டுள்ள தண்ணீரோடு கூடிய பாத்திரத்தைப் பின்னர் வழிபடுவர். அதன்பின் அந்த நீரினைப் புரோகிதர் சிறுவன் மீது ஊற்றுவார், பிரோகிதரும் மாரான் ஒருவனும் பின் சிறுவனுக்கு முகம் மழித்தலை நிகழ்த்துவர். அதன்பின் அச் சிறுவன் குளிப்பான். இதன்பின் புனிதப்படுத்தும் சடங்கை நிகழ்த்த நம்பூத்ரிகள் சிலர் அமர்த்தப்படுவர். பின் வாரியர் முறையில் வேட்டி

அணிந்து மேலேயும் ஒரு துண்டினைப் போட்டுக் கொண்டவராகத் தன் நெற்றியில் விபூதி சந்தனக் கீற்றுக்களைத் தீட்டிக் கொண்டு அணிகள், உருத்திராட்சம், மாலைகள் ஆகியன தரித்தவனாகத் தன் அன்னையிடமிருந்து பிச்சை ஏற்றுக்கொண்டபின் காசிக்குப் பயணம் மேற்கொள்வதன் அடையாளமாக வடக்குத் திசையில் ஏழு அடிகள் எடுத்து வைப்பான். இச் சடங்கினை நிகழ்த்திய பின்பே வாரியன் ஒருவன் கிரகஸ்தனாக ஆனதாகக் கருதப்படுவான். இச் சாதியாரின் சாவுச் சடங்குகள் பல இடங்களில் விரிவாக நிகழ்த்தப்படுகின்றன. சாவுத் தீட்டினைப் பன்னிரண்டு நாள்கள் மேற்கொள்ளும் இவர்கள் சஞ்சயன (பால் தெளித்தல்) சடங்கினை ஏழாம் அல்லது ஒன்பதாம் நாள் மேற்கொள்கின்றனர். இறந்துபோன நெருங்கிய உறவினர்கள் நினைவாக ஆண்டுச் சிரார்த்தத்தையும் நடத்துகின்றனர். மற்றவர்களுக்காகச் சிரார்த்தச் சடங்கினை நடத்தி வழிபாடு செய்யும் இவர்கள் அமாவாசையின்போது ஒரு வாரியனை அழைத்து உணவு இடுவர்.

1906 ஆம் ஆண்டு திருவாங்கூரில் நடந்த அரச குடும்பத்தினர் திருமணம் ஒன்று தொடர்பாக நான் படித்த செய்தி வருமாறு: வாரியர் பலர் வழிபாடு நடத்திய அரண்மனைப் பகுதியிலிருந்து புறப்பட்டு பக்கத்திலிருந்த தோப்புக்குச் ஒரு கமுக மரத்தினைக் கொண்டு வர அனுப்பப்பட்டனர். இச் செயலை அவர்கள் தெய்வீக அருள் ஏற்பட்டவர்களாகத் தெய்வம் நடத்திச் செல்லச் சென்று செய்து முடிப்பதாகக் கூறப்படுகிறது. போத்தி எனப்படும் அரண்மனையைச் சேர்ந்த பூசாரி அவர்களுள் ஒருவனிடம் ஒரு இரும்புக் கம்பியினைக் கொடுப்பான். இதனைப் பெற்றுக் கொண்டவன் நடனமாடியபடி செல்ல அவனைச் சேர்ந்த பிற வாரியர்கள் அவன் பின் செல்வர். அனைவரும் சுமார் ஒரு பர்லாங் தூரத்திற்கு அப்பால் உள்ள தோப்புக்குச் சென்று அங்குள்ள பெரிய கமுக மரம் ஒன்றினை இரும்பாலான கருவிகள் எதனையும் பயன்படுத்தாது வேரோடு தோண்டி அது தரையில் படாதபடி தேவராத்துகைகளிடத்துக்கு இன்னிசை முழங்கத் தூக்கி வருவர். பின் அதனை அங்கு முன்கூடத்திற்கு முன்னுள்ளவாசலில் நடுவர், பிராமணர்கள் அதற்கு நெறிப்படி பூசை செய்வர். இச் சடங்கு துவஜாரோகணச் சடங்கினை ஒத்ததாகும். அல்லது கோயில் திருவிழாவிற்காகச் செய்யப்படும் கொடியேற்று விழாவினை ஒத்ததாகும் எனலாம். அப்போது வாரியர்கள் அந்த மரத்தைச் சுற்றிப் பாட்டுப் பாடியபடி நடனம் ஆடிப் பூசை போடுவர். ஒரு வெள்ளைத் துணியினை அந்த மரத்தின் உச்சியில் கொடி போலப் பறக்க விடுவர். விளக்கு ஒன்றினையும் ஏற்றி அதன் அடியில் வைப்பர்.

வாரியர் பரம்பரைத் தொழிலான கோயில் எல்லையினை வாரும் பணியினைச் செய்து வருகின்றனர். இன்று இச்சாதியினைச் சேர்ந்த சிலர் பெரிய பண்ணை உரிமையாளர்களாகவும் வட்டாரத் தலைவர்களாகவும் உயர்தகுதி பெற்றவர்களாக உள்ளனர். இவர்கள் மருமக்கள் தாய வழக்கினையே பெரிதும் மேற்கொண்டு வருகின்றனர். பிராமணர்களின் சர்வஸ்வதானம் என்ற சடங்கினை ஒத்த குடிவைக்கல் என்ற திருமணச் சடங்கும் இவர்களால் நடத்தப்படுகின்றது. இதன்படி ஒருவனுயை மனைவியினை அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவளாக ஏற்றுக் கொள்வதோடு அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அக்குடும்பத்தனவாகக் கருதப்படுகின்றன. வாரியர்களின் பெயர்களும் சடங்குகளும் பிசாடரிகள், வைணவ நெறியின் சார்பாளர்களாக இருப்பதைப் போல இவர்கள் சைவநெறியின் சார்பாளர்களாக உள்ளனர் என்பதனைத் தெளிவுபடுகின்றன. வாரியரின் வீடு வாரியம் எனப்படும். இவர்கள் சாதிப் பெண்கள் வரஸிய எனப்படுகின்றனர். இவ் வகுப்பார் அம்பலசாக்களுள் மிக முன்னேற்றம் பெற்றவர்களாக உள்ளனர். இவ் வகுப்பாருள் சிலர் மேனாட்டுக் கல்வி கற்று மேலான தொழில்களைச் செய்து வருகின்றனர் என வாரியர்கள் பற்றி மலபார் மாவட்ட விவரக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வருகு பட்டர் - Varugu Bhatta

பெரிகெயரிடமிருந்து இரந்து வாழும் இரவலர் பிரிவினர்

வருணன் - Varuna

பட்டவன்களான மீனவர் சிலர் தங்களை வருணகுல வேளாளர், வருணகுல முதலி எனக் கடல் தெய்வமான வருணன் பெயரைத் தங்கள் சாதியோடு இணைத்துக் கூறிக் கொள்கின்றனர்.

வச - Vasa (new)

குருபர்களின் ஓர் உட்பிரிவு. இவர்கள் வெள்ளை நிறத்தில் போர்வைகள் நெய்பவர்கள் எனக் கூறப்படுகிறது.

வசிஷ்ட - Vasista

கத்ரிகள், தொரயெர் சாதிக்குரியவர்கள் மேற்கொண்டுள்ள பிராமணர்களுக்குரிய கோத்திரங்கள். வசிஷ்டர் சிறந்த ஏழு முனிவர்களுள் ஒருவர். இவர் மித்ரா, வருணன் ஆகிய இருவருக்கும் பிறந்தவர். விசாவாமித்திரோடான இவருடைய பூசல் இராமாயணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

வஸ்தர - Vastra

கொரகரின் ஒரு பிரிவு வஸ்தர என அழைக்கப்படுகிறது. இது பிணங்களுக்குப் போர்த்தப்படும் துணியினைக் குறிப்பதாகும், இதனைக் கொரகருக்குத் தானமாக வழங்குவர். கொரகர் புதிய துணியினை வாங்கி அணிய அனுமதிக்கப்படுவதில்லை. கர்ணசாலே தேவாங்க சாதி நெசவாளர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு பிரிவாகவும் வஸ்தர என்பது உள்ளது.

வட்டக்காடன் - Vattakadan

நாயர்களின் ஓர் உட்பிரிவு. கோயில்களில் பயன்படுத்துவதற்கான எண்ணெயினை ஆட்டுவதே இவர்களுடைய தொழில். வடமலபாரில் நாயர்கள் பல முறை தன்னிடம் வட்டக்காடன்களைத் தங்கள் சாதியாராக ஏற்றுக் கொள்வதில்லை எனத் தெரிவித்துள்ளதாக திரு பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறு கூறும் நாயர்கள் கருத்துப்படி வட்டக்காடன்கள் அண்மைக்காலமாகவே நாயர் என்ற சிறப்பு அடையினைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் இப்பெயர் வட்டக்காடு என்ற ஊரைச் சேர்ந்தவனுக்கு உரியதாகவும் இது செக்கானுக்கு உரிய தென்றும் பதியப்பட்டுள்ளது.

வட்டே - Vatte (camel)

குர்ணிகளுக்கான ஒரு கோத்திரம். ஒட்டகம் எனப் பொருள்படும் சொல்.

வாழ்த்தி - Vatti

வாழ்த்தி அல்லது வாத்தி குருப்பு கணக்கெடுப்பின் போது நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. காவுதியன், தோல்கொல்லன் ஆகிய சாதிகளுக்குரிய மற்றொரு பெயராகவும் இது உள்ளது. வாழ்த்தி என்பது மகிழ்ச்சிக்காக வேண்டுதல் செய்வது எனப் பொருள்படும்.

வயணி - Vayani

வயணியர், வயிணியர், வருணியர் அல்லது பவிணியர் எனப்படுவோர் மாதிகரில் ஒரு பிரிவினர். இப் பிரிவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒற்றை நரம்புடைய மாண்டிலினை வாசித்தபடி ஊர் ஊராகக் கிராம தேவதைகளைப் புகழ்ந்து பாடியபடி செல்வர். ஒவ்வொரு வயணிக்கும் எனக்

குறிப்பிட்ட சில கிராமங்கள் இவ்வாறு பாடிச் செல்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ளன. கிராம தேவதைகளுக்கு நடத்தப்படும் ஆண்டுத் திருவிழாக்களில் இவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். விழாத் தொடங்கும் முன் ஒரு கங்கணக் கயிற்றைப் பெறும் இவன் அதனைத் தன் மாண்டலினோடு சேர்த்துக் கட்டிக்கொள்வான், சாதாரண மாதிரிகளிலும் தன்னைச் சமூகப் படிநிலையில் உயர்ந்தவனாகக் கருதும் இவன் அவர்களோடு மணஉறவு கொள்வதில்லை. வயணி என்ற பெயர் வர்ணனை வருணித்தல் - என்ற சொல்லின் திரிந்த வடிவமாகக் கருதப்படுகிறது. செங்கல்பட்டு போன்ற சில இடங்களில் வயணி கிராம நிலங்களின்மீது மிராசு உரிமை உடையனவாக உள்ளான்.

வேடன் - Vedan

வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு எச்.எ.ஸ்டுவர்ட் வேடன்கள் பற்றிப் பின்வமாறு எழுதியுள்ளார்: "முன்பு வேட்டையாடுபவர்களாகவும் படைவீரர்களாகவும் இருந்து வந்த வேடர் சாதியினரே இந்து அரசர்களின் படையில் குறிப்பிடத்தக்க முக்கிய இடம் வகித்து வந்தவர்களாவர். பிற்காலத்தில் ஹைறதர், திப்பு ஆகியோர் படையிலும் இவர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இவர்கள் தென்னிந்தியத் தீபகற்பத்தின் தொன்முது குடிகளாக வேண்டும் எனக் கருதும் சிலர் இவர்கள் ஈழத்தைச் சேர்ந்த வேட்டர் இனத்தவரோடு ஒற்றுமை உடையவர்கள் எனக் கருதுவர். இவர்கள் வால்மீகி எனவும் அழைக்கப்படுவர். வால்மீகம் எனப்படும் கரையான்கள் அமைக்கும் புற்றுத் தரும் பொருள்களைக் கொண்டு வாழ்பவர்கள் என்பது இதன் பொருள். *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் பேடர் *(*போயர்*)* வேடன் ஆகிய இருசாதியினரும் செயல் துறையின் தவறான கட்டளையின் காரணமாக அட்டவணைப் படிவங்களில் ஒரே சாதியினராகக் கருதப்பட்டுவிட்டனர். அடிச்சொல் பொருளாகக் கருதும்போது அடிப்படையில் இவ்விரு சொற்களும் ஒன்று போன்றனவே, இவற்றுள் ஒன்று கன்னடம், மற்றொன்று தமிழ். எனினும் இவ்விரு சாதிகளும் வேறு வேறானவை. வால்மீக, வால்மீகி என்ற பெயரைப் போயர் ஆர்வத்துடன் தங்களோடு தொடர்பு படுத்திக் கொண்டவராகத் தாங்கள் இராமாயணம் இயற்றிய வால்மீகியின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்வர். இவர் ஒரே இடத்தில் அசையாது உட்கார்ந்து தவம் செய்தபோது கரையான் இவரைச் சுற்றிப் புற்று அமைத்துவிட்டது.

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வேடர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "தமிழ் பேசும் கூலி வேலை செய்வோர் வேடர் சாதியார். இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் முன்பு படைவீரராகவும் பின்னர்

கொள்ளைக்காரர்களாகவும் இருந்தனர். இப்பெயர் வேட்டையாடுபவர் எனப் பொருள்படுவது. செங்கல்பட்டு முதலிய சில பகுதிகளில் இருளரைக் கூடத் தவறாக வேடர் எனக் குறிப்பிடுகின்றனர். தமிழ் வேட்டுவன்களுக்கும் வேடர்களுக்கும் சில தொடர்புகள் உள்ளன. எனினும் இவற்றின் அடிப்படை என்ன என்பது விளங்கவில்லை. இன்று வேட்டுவன்கள் தங்களை வேடன்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதுவதோடு தங்களை வேட்டுவ வேளாளர் எனவும் கூறிக் கொள்கின்றனர். குழந்தை மணம் வளர்ந்தபின் மணம் ஆகிய இருவகை மணங்களும் இவர்களிடையே நிகழ்கின்றன கைம்பெண்கள் தங்கள் கணவனோடு உடன்பிறந்தவர்களையோ பங்காளிகளையோ மணந்து கொள்ளலாம். சிலர் பிராமணர்களைத் தங்கள் பூசாரிகளாக அமர்த்திக் கொள்கின்றனர். இறந்தவர்களை புதைக்கவோ எரிக்கவோ செய்கின்றனர். இவர்கள் தங்களை அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கண்ணப்ப நாயனாரின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். அம்பலக்காரன்களும் தங்களைக் கண்ணப்ப நாயனாரின் சந்ததியினர் எனக் கூறிக் கொள்வர். நாயக்கன் என்பதே வேடருக்கான பட்டப்பெயர் மதுரை மாவட்டக் கையேட்டில் வேடன்கள் தாழ்ந்த சாதியாராகக் கூறப்பட்டுள்ளனர். காட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே இவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். தற்சமயம் இவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவே உள்ளனர். அண்மைக் காலம்வரை இவர்கள் ஆடையேதும் அணியாதவர்களாகவே நாகரிகத் தொடர்பு ஏதும் இல்லாமல் தனித்து இருந்துள்ளனர். எல்லா வகுப்பாரும் இவர்களை மிக வெறுத்து ஒதுக்கியே வந்துள்ளனர். கோயமுத்தூர் மாவட்டக் கையேட்டில், மிகத் தாழ்ந்த ஏழையர்களான இவர்கள் கூடை முடைதல், சிறு விலங்குகளை அகப்படுத்தல் முதலியவற்றைச் செய்து வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. கொச்சையான கன்னடம் பேசும் இவர்கள் காட்டுவாசிகளைப் போல நாகரிகம் அற்றவர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஒரு ரூபாயை இனாமாக வழங்கினால் அதனால் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி கொள்வர். சேலம் மாவட்டத்தில் வேடர் சிலர் தங்களைத் திருவளர் சாதியினர் எனக் கூறிக்கொள்வதாகச் சேலம் மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. இவர்கள் தற்காலிகமாக மண உறவு வைத்துக் கொண்டு வாழ்வதால் கட்டிக்கூடுகிற சாதி எனவும் அழைக்கப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

வேடன்களையும் கரடிகளையும் பற்றிய பின்வரும் கதையினை இங்கு கூறலாம் என நினைக்கின்றேன். கரடிகள் நன்கு பழுத்த விளாம் (*Feronic*

elephantam) பழத்தைப் திரட்டித் தின்பதில் ஆவல் கொண்டவை. கரடிகள் பழங்களைத் திரட்டியபின் அவற்றின் மேல் ஓட்டை அகற்றிவிட்டு உள்ளே இருக்கும் சதைப்பற்றை ஒரே குவியலாகக் குவித்து வைக்கும். பின் அவை தேனினையும் இனிக்கும் மலர்களையும் கொண்டு வந்து அந்தக் குவியலின் மேலிடும். அவை அனைத்தையும் கால்களால் மிதித்தும் தடிகள் கொண்டு அடித்தும் நன்கு கலக்கும். அவை அனைத்தும் நன்கு கலந்து திரண்டபின் அதனை அக்கரடிகள் உண்ணும். இவ்வாறு கரடிகள் இனிப்புத் தயாரிக்கும் பருவத்தை அறிந்திருக்கும் வேடன் அந்தக் கரடிகளை அம்பெய்து விரட்டியபின் அந்த இனிப்பைக் கவர்ந்து கொள்வான். இதனை அவன் கரடிப் பஞ்சாமிர்தம் என்ற பெயரில் விற்பான்.

திருவாங்கூரைச் சேர்ந்த வேடர் பற்றி மறைத்திரு எஸ். மட்டீர் தொகுத்துக் கூறுவதாவது:* காட்டினை வெட்டி அப்புறப்படுத்திய பகுதிகளில் வாழும் இவர்கள் வயல்களில் கூலிகளாகப் பணிபுரிவர். முன்பு அடிமைகளைப் போல இவர்கள் வாங்கப்பட்டும் விற்கப்பட்டும் வந்தனர். பஞ்ச காலங்களில் காட்டு வள்ளிக்கிழங்கைத் தேடி அலையும் இவர்கள் அது கிடைக்கும்போது கிடைத்த அத்தனையையும் தின்பர். பின் தொடர்ந்து பல நாள்கள் பட்டினி கிடப்பர். ஆண்கள் தங்கள் மனைவியரைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் இல்லையாகையால் இவர்களிடையே பல மனைவியரை மணந்துகொள்வது பெருவழக்காக உள்ளது. கிறித்தவ சமயத்தை மேற்கொண்டுவிட்ட சிலர் தங்கள் நடத்தை, நாகரிகம், ஒழுங்கு, ஒழுக்கம் ஆகியவற்றில் வியக்கத்தக்க வகையில் விரைந்து முன்னேறியவர்களாக உள்ளனர்.

திருவாங்கூரைச் சேர்ந்த மலை வேடர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திருமதி ஜெ. டபிள்யூ. ஈவான்ஸக்குக் கடப்பாடுடையேன்.** மலை அடிவாரங்களில் அமைந்துள்ள நெல்வயல் திட்டுகளிடையே பெயருக்குக் குடிசை எனச் சொல்லக் கூடிய குடியிருப்புக்களில் இவர்கள் வாழ்கின்றனர். உழவர்கள் தங்கள் வயல்களைக்காட்டு விலங்குகள் வந்து பாழ்படுத்தாது காவல் காக்க இவர்களைப் பணியில் அமர்த்துகின்றனர். ஆண்களும் பெண்களும் மேல் வரிசையில் உள்ள முன்வாய்ப் பற்களை ராவிக் முதலையின் கூரிய பற்களைப் போலச் செய்து கொணடுள்ளனர், திருவாதிரையன் என்ற பெயரை

* திருவாங்கூரில் இந்தியர் வாழ்க்கை. (Native Life in Travancore)

** சென்னை அருங்காட்சியக மடல், III, I, 1900.
(Madras Museum Bull.III, I, 1900.)

உடைய வயதான ஒரு கிழவன் தன் நான்கு பற்களை ஓரளவே ராவி விட்டுக் கொண்டுள்ளான். அவனிடம் நீ ஏன் உன் பற்களை மலைவேடர்களைப் போல ராவிக் கொள்ளவில்லை எனக் கேட்டபோது அதற்கு அழகற்ற தோற்றமுடைய நான், நான் எந்த அழகோடு பிறந்தேனோ அந்த அழகு எனக்குப் போதும் எனக் கூறினான். இவ்வாறு பற்களைக் கூர்மையாக்கிக் கொள்ளச் செய்யப்படும் ராவுதலால் ஏற்படும் வலியினை அவன் தாங்கிக் கொள்ள இயலாதவனாக இருந்திருக்க வேண்டும். அல்லது இவ்வாறு பற்களை ராவி விடுபவனுக்கு கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டிய ஐந்து வெற்றிலையும் பாக்கும் வாங்க அவன் வசதியற்றவனாகவும் இருந்திருக்கலாம். இந்த ராவுதலை யார் வேண்டுமாயினும் செய்யலாம். கருக்கவாளினைப் பயன்படுத்தியே இவ்வாறு பற்களைக் கூர்மையாக்கிக் கொள்கின்றனர். இதுபோலப் பற்களை ராவிக் கொள்ளும் வழக்கத்திற்கான அடிப்படைக் காரணம் ஏதேனும் உள்ளதா எனக் கேட்டபோது இது தாங்கள் மலைவேடர் சாதியினர் என்பதனை அடையாளங் காட்டிக் கொள்வதற்காகச் செய்யப்படுவது எனவும் இவ்வாறு வழக்கப்படி பற்களைக் கூர்மை செய்துகொள்ளவில்லையாயின் தங்கள் குல தெய்வமான சாத்தன் சினம் கொள்ளும் என்வும் கூறினர். இவ்வாறு பற்களைக் கூர்மையாக்கிக் கொள்ளும் பழக்கத்தைக் காட்டில் வாழும் பழங்குடியினரான காடர்களும் மேற்கொண்டுள்ளனர். (*பார்க்க: காடர்*) ஆண்களும் பெண்களும் இடுப்பில் ஒன்றையே தொடர்ந்து உடுத்தி வந்ததாலும் மழை வெயிலின் பாதிப்பாலும் நைந்துபோன இளம்பச்சை வண்ணத் துணி ஒன்றினைக் கட்டியபடி உள்ளனர். இடையிடையே சங்கு கோக்கப்பட்ட சிவப்பு, நீல வண்ணப் பாசிமணி மாலையினைக் கழுத்திலும் மார்பிலும் அணிந்தபடி உள்ளனர். ஒருத்தியின் அணிமணிகள் கருத்தைக் கவரக் கூடியனவாக இருந்தன. அவள் தன் கழுத்தையும் மார்பகங்களையும் கதம்பக் கலவையாக அமைந்த பாசிமணிகள், சங்குகள், சலங்கைகள், இரும்புச் சாவிகள் ஆகியவற்றால் முழுக்க மறைத்தவளாக இருந்தாள். இறுதியாகக் கூறப்பட்ட இரும்புச் சாவிகளை அழகு செய்யும் அணி என்ற வகையிலேயே தான் அணிந்துகொண்டிருப்பதாக அவள் கூறினாள். அவள் இடையினைச் சுற்றிப் பன்றி, சாம்பர் மான் ஆகியவற்றின் சிறிய எலும்புகள் பல வரிசைகளாகத் தொங்கிக் கெண்டிருந்தன. மலை வேடர் இந்த எலும்புகளைக் காடுகளில் கண்டெடுத்தனர். வயதான ஒரு பூசாரி முன்பு தான் பேயாட்டம் நிகழ்த்தி வந்ததாகவும் இப்பொழுது கால் கைகளின் மூட்டுக்கள் ஆட முடியாதபடி ஆகிவிட்டவிட்டதால் சிறுவர்களைப் போலத் தான் அவமதிப்புக்கு உள்ளவதாகவும் கூறினான். மலைவேடருக்கு எனத் தனியே கோயில்களோ தெய்வம் உறையும் இடங்களோ இல்லை எனத் தெரிகின்றது.

இந்துக்கள் தங்களுடைய கோயிலில் தொலைவில் நின்றபடி நோய் முதலான தொல்லைகளின்போது இவர்கள் செய்துகொணடு வேண்டுதலுக்கான காணிக்கையினை செலுத்த அனுமதிக்கின்றனர். இவர்கள் தெய்வமான சாத்தனுக்கு என்று தனியே நிலையான கோயில்கள் இல்லை. மலைவேடர் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அதுவும் இருக்கும். இறந்தவர்களை அவர்களுடைய குடிசைக்கு அருகிலேயே சாய்ந்த நிலையில் படுக்க வைத்துப் புதைக்கின்றனர். காணிக்காரரைப் போல மரத்தைக் கடைந்து நெருப்பு உண்டாக்கும் தொடக்கக் கால வழக்கத்தையே இவர்கள் இன்றும் மேற்கொண்டு வருகின்றனர். காணிக்காரரைப் போல இவர்களும் கருங்குரங்கைத் தின்கின்றனர். கருக்கரிவாள், வில், அம்பு ஆகியனவே இவர்கள் பயன்படுத்தும் கருவிகள். புல்லால் கூடை முடையும் இவர்கள் அத்தகைய சிறு கூடைகளைத் தங்கள் இடுப்புக் கச்சையில் வெற்றிலை முதலியன வைத்துக் கொள்ள தொங்கவிட்டுக் கொள்கின்றனர்.

நான் நேரில் கண்டாய்ந்த இருபத்தைந்து மலை வேடர்களின் முக்கியமான அளவுகள் வருமாறு:

	மேல் அளவு	கீழ் அளவு	சராசரி
உயரம் *(செ.மீ)*	*163.8*	*140.8*	*154.2*
தலையின் நீள அகல விகித எண்	*80.9*	*68.8*	*73.4*
மூக்கின் நீள அகல விகித எண்	*102.6*	*71.1*	*85.0*

மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்த பிற காடுவாழ் பழங்குடிகளைப் போல மலைவேடரும் உயரங்குறைந்தவர்களாகவும் நீண்ட தலையும் அகன்ற மூக்கும் வாய்க்கப் பெற்றவர்களாகவும் உள்ளனர் என்பதனைத் தெளிவு படுத்துகின்றன.

திருவாங்கூரைச் சேர்ந்த வேடரிடையேயான மாதவிலக்குத் தொடர்பான சடங்கு பற்றிப் பின்வருமாறு கிரெள்லெ* விவரித்துள்ளார். மாதவிலக்கு ஏற்படும் ஒருத்தியினை அவள் கணவன் கால்மைல் தொலைவில்

* Crawley. The mystic Rose. Fide Jagor. 2eitsch.Ethrol.IX, 164.

அமைந்திருக்கும் தனித்த குடிசையில் முதல் ஐந்து நாள்கள் தங்கியிருக்கச் செய்வான். மகப்பேற்றின்போது பெண்கள் தங்கியிருக்க இக்குடிசையினையே பயன்படுத்துகின்றனர். அடுத்த ஐந்து நாள்கள் அந்தக்குடிசைக்கும் குடியிருக்கும் இடத்திற்கும் நடுவே உள்ள ஒரு குடிசையில் அவள் தங்கியிருப்பாள். ஒன்பதாம் நாள் அவள் கணவன் ஒரு விருந்து வைப்பான். அப்போது தரையில் மதுவினை தெளிப்பதோடு விருந்தினருக்குச் சோறும் கள்ளும் படைப்பான். அன்று மாலைவரை கிழங்கினைத் தவிர வேறெதனையும் அவன் உண்பதில்லை. பேய் தன்னைக் கொன்றுவிடும் என்ற அச்சமே அவன் அவ்வாறு உண்ணாததற்குக் காரணம் ஆகும். பத்தாம் நாள் அவன் தன் கூடியிருப்பை விட்டு வெளியேறி விடுவான். அவனுடைய மனைவி குடிசைக்குத் திரும்பிய பின்னரே அவன் திரும்ப வருவான். மாதவிலக்கான அவனுடைய மனைவியினை அவன் உடன்பிறந்தவளும் அவள் உடன்பிறந்தவளும் குளிக்கச் செய்து குடியிருப்பில் கொண்டு வந்து சேர்ப்பர். அதன்பின் அனைவரும் ஒன்றாகச் சோறு உண்பர். இவ்வாறு பத்தாம் நாள் தன் மனைவி குடியிருப்புக்கு திரும்பியபின் நான்கு நாள்கள் வரை தன் வீட்டில் அவன் உணவு கொள்வதோ மனைவியோடு உறவு கொள்வதோ இல்லை.

வேடு நொல்லு - Vedonollu

காணிகர்களின் ஒரு கோத்திரம். இக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மஞ்சப்பூ (*Nyctyanthes Atbor-tristis*) செடியினை வெட்டுவதில்லை. இதன் மலர்கள் இந்துக்களால் வழிபாட்டுக்கென மிகுதியும் பயன்படுத்தப்படுகின்றன. இச்செடியினைத் தேவலோகத்திலிருந்து கண்ணன் சத்தியபாமாவிற்காகக் கொண்டு வந்தான் எனக் கூறுவர்.

வேகி நாடு - Veginadu

கோமட்டிகளின் ஓர் உட்பிரிவு. இவர் வேகி எனப்படும் வேங்கி நாட்டைச் சேர்ந்தவர்கள். இன்றைய கிருட்டிணா மாவட்டத்தின் பழைய பெயர் இது. வேகின கோமட்டிகள் தங்கள் குல தெய்வமான கண்யகம்மாவோடு நெருப்புக் குண்டத்தில் இறங்கியவர்கள்.

வெக்காலிப் புலி - Vekkali puli (cruel-legged tiger)

கள்ளர் சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு பிரிவு.

வேல் - Vel

மலையாளம் பறையன்களின் ஓர் உட்பிரிவு. திருவாங்கூரைச் சேர்ந்த

காணிக்காரர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். அல்லது உட்பிரிவு. வேலன்மார் திருவாங்கூரைச் சேர்ந்த மலைவாழ் பழங்குடிகள் எனப் பதியப்பட்டுள்ளது.

விளக்கட்டலைவன் - Velakkatlavan

விளக்குட்டலைவன் அல்லது விலக்கட்டலைவன் என்ற இப்பெயர் *1901* திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் அம்பட்டர்களின் வட்டாரத் தலைவருக்கான பெயர் எனக் கூறப்பட்டுளள்து. அரசர்களுக்கும், அரசவை சார்ந்த பெருமக்களுக்கும் முகம் மழிப்பதற்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது வருமாறு: தென் மலபார் நாயர்கள் மற்றும் பிற உயர்ந்த சாதியாருக்கு முகம் மழிப்பவர்களுக்கான பெயர் இது. இவர்கள் வட மலபாரில் வலிஞ்சியன், நாவிதன், நாசிவன் என அழைக்கப்படுகின்றனர். உடை அணிவதிலும் பிற பழக்க வழக்கங்களிலும் இவர்கள் நாயர்களை ஒத்தவர்களாக் இருப்பதோடு தென் பகுதிகளில் இவர்கள் தங்களை நாயர்கள் எனவும் கூறிக் கொள்கின்றனர். பலர் தங்களுடைய சாதிப் பெயரை நாயர் என்றே பதிந்துள்ளனர். இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் நாயர்களுக்கு மருத்துவச்சிகளாக மகப்பேறு பார்க்கின்றனர். வட மலபாரில் வலிஞ்சியனும் நாசிவனும் நாயர்களைப் போலவே உடைமை உரிமை முறை பேணுகின்றனர். மாறாக நாவிதர்களே மக்கள் தாய உடமை உரிமை முறையினைப் பேணுகின்றனர். நாவிதன்களிடையே கூடத் தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரண்டுக்கும் வேறுவேறானவர்களே மாப்பிள்ளைகளாக இருப்பர். தென் மலபாரில் இச் சாதி மக்கள் தாய உரிமை முறையினை மேற்கொள்ளும் பழக்கமுடையதாயினும் சில இடங்களில் மருமக்கள் தாய உரிமை முறை பேணுவதையும் காணலாம். சூத்திரகாவுதியன் என்ற பெயர் *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் விளக்கட்டலைவனுக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

வெலமா் - Velama

சில சமயங்களில் யெலமர் எனவும்அழைக்கப்படும் வெலமர் தெலுங்கு நாட்டிலும் கஞ்சம் மாவட்டத்திலும் வாழும் பயிரிடுவோராவர். இவர்களைப் பற்றி வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு எச்.எ.ஸ்டுவர்ட் பின்வருமாறு எழுதுகின்றார்: வெலமர் யார் என்பதனைத் திட்டவட்டமாகக் கூறுதல் கடினம். சிலர் இவர்கள் பலிசர்களின் ஓர் உட்பிரிவினர் எனக் கூறுகின்றனர். இதனை

லெவமரே தீவிரமாக மறுப்பர். பலிசர் இவர்களைக் கூனி தசாகல (கூன் விழுந்த வண்ணார்) என இழிவுக்கு உரியவர்களாக அழைப்பர், இந்து சாதியினைச் சேர்ந்தவர்களின் தற்பெருமையும் பொறாமையும் காளத்தியினைச் சேர்ந்த வெலமரின் பின்வரும் செயலால் விளங்கும். அந்த ஊரைச் சேர்ந்த உதவி வட்டாட்சியர் கூனி தசாகலர் என்ற பெயரின் தோற்றத்தைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பினார். அவர் அந்தக் கேள்வியைக் கேட்டவுடன் அச் சாதியினைச் சேர்ந்த ஒருவன் மாவட்டக் குற்றவியல் நடுவரின் முன் தன்னை இழிவுபடுத்தியதாக அவர் மீது வழக்கு தொடர்ந்தான். வட மாவட்டங்களில் துணிக்கு அச்சுப்போடும் சிலர் தங்கள் துணி மூட்டைகளை வண்ணாரைப் போல முதுகில் சுமந்தபடி முன்பக்கமாகக் குனிந்தபடி நடக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததே இந்தக் கேலிப் பெயர் இவர்களுக்கு வரக் காரணமாயிற்று. எனினும் இந்த விளக்கம் பொருத்தனமானதாகத் தோன்றவில்லை. கோதாவரி மாவட்டத்தில் இவர்கள் கூனசாகலவாண்டுலு என அழைக்கப்படுகின்றனர். கூன என்பது சீட்டித் துணிகளுக்கு இவர்கள் சாயம் தோய்க்கப் பயன்படுத்தும் பெரிய பானையினைக் குறிப்பதாகும். வெலமர் சிலர் தாங்கள் கம்மர் சாதியினைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுவர். கோசா போட்டுக் கொள்ளும் வழக்கம் தொடர்பாக அவர்களோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடே தாங்கள் அந்தச் சாதியிலிருந்து பிரியக் காரணமாயிற்று என்பர். வெலமர் சாதியினைச் சேர்ந்த பெண்களுள் பெரும்பாலோர் இன்று கோசாவாகவே தனித்து இருப்பர். (கர்நூல் மாவட்டக் கையேட்டில் வெலமர் சாதிப் பெண்கள் கோசாவாக இருக்க வேண்டியவர்கள் எனவும் ஏழ்மை காரணமாக இந்த விதியினை இவர்கள் கண்டிப்புடன் பின்பற்றுவதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது), கம்மரும் வெலமரும் இரு சாதியாராகப் பிரியுமுன் முகமதியரைப் பார்த்து கோசா முறையினை மேற்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு கோசா அணிவதால் பயிரிடுபவர்களான பிற சாதியாரோடான போட்டியில் தாங்கள் பின் தங்க நேர்ந்ததால் இவர்கள் கோசா முறையினைக் கைவிட்டு மீண்டும் தங்கள் பழக்க வழக்கத்தையே மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது. இதற்கு உடன்பட்டவர்கள் இதற்காக எழுதப்பட்ட உடன்பாட்டில் கையொப்பம் இட்டனர். இந்த உடன்பாடு பனையோலையில் இருந்ததால் அதில் கையொப்பம் இட்டவர்கள் கம்ம எனப் பெயர் பெற்றனர். கையொப்பம் இடாதவர்கள் கோசா முறையினைத் தொடர்ந்து மேற்கொண்டனர். இவர்கள் வெலமர் எனப்பட்டனர்.இது வெளியேறியவர்கள் எனப் பொருள்படுவதாகும். இக்கதையும் வெலமர் முதலில் பெற்றிருந்த பெயர் என்ன என்பதனைத் தெளிவுபடுத்துவதாக இல்லை. எனவே இக்கதையும் நம்பக் கூடியதாக இல்லை. இவ்வாறு இவர்கள் பிரிந்த பின்

லெவமர்களிடையே கோசா முறை மேற்கொள்வது பற்றிய கருத்து வேறுபாடு தோன்றியது. இம்முறையினைக் கைவிட்ட வெலமர் ஆதி வெலமர் எனப்பட்டனர். மற்றவர்கள் பத்ம வெலமர் எனப்பட்டனர். விசய நகர அரசர் காலத்தில் தெற்கே வந்து குடியேறியவர்களாகிய இவர்களை அந்த அரசு மேங்காலவர்களாக அமர்த்தியது. அத் தகுதியிலிருந்தும் இவர்கள் பின்னர் பாளையக்காரர்களாக உயர்ந்தனர். இன்று இவர்கள் பாளையக்காரர்களை அண்டி வாழும் பயிரிடுவோராக இருந்து வருகின்றனர். தென் வட்டங்களில் வேளாளரிலிருந்தும் தங்களை வேறு படுத்திக் கொள்ள இவர்கள் தங்களைத் தெலுகு வேளாளர் என அழைத்துக் கொள்கின்றனர். எனினும் வெலமருக்கும் வேளாளருக்கும் முன்பு என்றாவது தொடர்பு இருந்திருக்கக் கூடும். என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகளைப் அடிப்படையாகக்கொண்ட கூற்றாக இல்லை. வெலமர் தங்களை நாயுடு எனச் சிறப்பித்துக் கொள்வர். (வெலமர் தங்களைத் தெலுகு வேளாளர் என்று கூறிக் கொள்வது வேளாளர்களோடு இவர்களுக்கு உள்ள தொடர்பின் அடிப்படையிலானதன்று. வேளாளர் தமிழ்ச் சாதியாருள் உயர்சாதியாராக மதிக்கப்படுவது வெலமரும் தெலுங்குச் சாதியாருள் உயர் சாதியாராக மதிக்கப்படுதலாலேயேயாம். இதே காரணம் கருதி வேளாளர் சில சமயங்களில் அரவ வெலமலு எனப்படுகின்றனர்).

காபு, கொப்பல, பத்ம, பொன்னேதி, ஏனாதி என்ப வெலமரின் முக்கிய உட்பிரிவுகளாக *1891* கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளன. ஏனாதி உட்பிரிவினர் எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தும் இன்று வெலமருக்கும், ஏனாதியருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் மிகுதியாக உள்ளன எனக் கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் கூறியுள்ளார் (இன்று ஏனாதியர் தெலுங்கு பேசும் காடுவாழ் பழங்குடிகள்) விசாகப்பட்டினம் மாவட்டக் கையேட்டின் ஏனாதியனு எனப்படும் பயிரிடுதலில் ஈடுபட்டுள்ள வகுப்பாரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் யானாடி என்ற தலைப்பின் கீழ் யாநாடி (Yanati) என்பதோடு ஏனாதி (Yandai) என்பதும் இணைத்துப் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. விசாகப்பட்டினம் முகவர் பகுதியினைச் சேர்ந்த பிசாம்கட்டாக் வட்டத்தில் யாநாடி அல்லது யேனாடிதுரை என்ற தனிச்சாதி உள்ளது. இது யாநாடி சாதியிலும் தனித்தது எனப்பதியப்பட்டுள்ளது. தெற்குப் பகுதிகளில் இருப்பதைப் போல வெலமர் தங்களைத் தெலுங்கு வேளாளர் என அழைத்துக் கொள்கின்றனர். எனவே வடக்கே இவர்கள் தங்களை யாநாடியார் என அழைத்துக் கொள்கின்றனர்.

கூன வெலமர் பற்றி மறைத்திரு ஜெ. கெயின் பின்வருமாறு எழுதுகின்றார்.* பல ஆ◌ ◌ாடுகளுக்கு முன் வரை இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுள் திருமணம் செய்துகொள்ள விரும்புபவர்கள் இரண்டு பள்ளியர் (மீனவர்) திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதோடு அதற்கான செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுது திருமணச் சடங்கின் போது வீட்டில் மீன் பிடிக்கும் வலை ஒன்றைத் தொங்கவிட்டால் போதுமானது எனக் கருதப்படுகிறது. பல தலைமுறைகளுக்கு முன் இச் சாதியினைச் சேர்ந்த அனைவரும் அவர்களுடைய பகைவர்களால் பூண்டோடு அழிக்கப்படுவதான ஒரு சூழல் ஏற்பட்டபோது, பள்ளியர் தங்களுடைய படகுகளோடு வந்து கூன வெலமரைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சேர்த்ததற்கு நன்றி பாராட்டுவதற்காகவே இந்த வழக்கத்தை இவர்கள் மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கூன வெலமர் பற்றித் திரு மெகயின் மேலும் தொடர்ந்து கூறியிருப்பதாவது: முன்பு மிகத் தாழ்ந்த சாதியாராகக் கருதப்பட்டு வந்த இவர்களுள் பலர் ஆங்கிலமும் தாய்மொழியும் கற்றுத் தரும் பள்ளிகளில் பயின்று பலதுறைகளிலும் நுழைந்து இன்று சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்களாக உள்ளனர். துணிக்குச் சாயம் போடுவதே இவர்களுடைய சாதிக்கு உரிய தொழில், அவ்வாறு சாயம் தோய்க்க வேண்டிய துணிகளை இவர்கள் பெரிய பானைகளில் தண்ணீரில் நனைக்கின்றனர். கூன தசாகலர் என அழைக்கப்படுவதை இவர்கள் வெறுக்கின்றனர். இவர்கள் தங்களை வெலமலு என அழைக்கப்படுவதையே விரும்பினாலும் அதனை ராச வெலமலு பெரிதும் எதிர்க்கின்றனர். ராச வெலமர் பிரிவினைச் சேர்ந்துள்ளவர்கள் பணம்படைத்த பெரிய பண்ணையார்களும் பொப்பிலி, வெங்கடகிரி, பித்தாப்பூர், நுஸ்வீட் ஆகிய ராசாக்களுமாவார். *1906* ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் நடைபெறும் சமஸ்தனத்தார் கூட்டத்தில் பொப்பிலி மகாராசா, "நான் பொப்பிலிக்கு வந்தபோது வெலவாருகளுள் யாரும் எந்த ஒரு அலுவலகத்திலும் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை. அப்பொழுது மிகக் குறைந்த எண்ணிக்கையினர் எழுத்தர்களாகப் பணிமேற்கொள்ளாது வெறும் மேற்பார்வையாளர்களாக மட்டுமே இருந்தனர். என்னுடைய ஆட்சி தொடங்கிய பின்னரே இவர்கள் படிப்படியாக அலுவலகங்களில் இடம்பெறத் தொடங்கியுள்ளனர். மேலும் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்கவும் இவர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்." எனக் கூறியுள்ளார்.

---

* இந்தியத் தொல்லியல், *1879*.
(Ind.Ant.VIII, 1879.)

விசாகப்பட்டிணம் மாவட்டத்தில் தங்கி வாழும் வெலமர் பற்றிப் பின்வரும் குறிப்புக்கு நான் திரு சி. உறயவதனராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இச்சாதியாரின் பின்வரும் உட்பிரிவுகள் குறிப்பிடத்தக்கவை.

1. பெத்த அல்லது பத்ம*:* பொப்பிலி வட்டத்திலேயே இவர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனர். பொப்பிலி குடும்பத்தைத் தோற்றுவித்த பெத்தராசுடுவினைச் சார்ந்தும் அவர் படையில் பணியாற்றியும் வந்தவர்களின் சந்ததியினரே இவர்கள்.

பெத்தராசடு *1652* இல் சிக்ககோலைச் சேர்ந்த முகமதிய பவுஸ்தாரான சேர் முகமதுகானிடமிருந்து நிலப்பகுதி ஒன்றிற்கு உரிய உரிமையினைப் பட்டயமாகப் பெற்றார், இந்த உட்பிரிவினைப் பற்றி ஓர்மெ* பின்வருமாறு குறித்துள்ளார்*:* "இவர்கள் இந்தியர்களுள் பிராமணர்களுக்கு அடுத்தபடியாக தங்களைச் சாதியில் மிக உயர்ந்தவர்களாக ராசபுத்திரருக்குச் சமமானவர்கள் எனக் கருதுகின்றனர். இத்தகைய தங்கள் மனப்பான்மையை நிலைநிறுத்திக் கொள்ளக் கடினமான விதிமுறைகளை மேற்கொண்டவர்களாக உள்ளனர். வேறு சமயத்தவர், தாழ்ந்த சாதியினரான பிற இந்தியர் தங்களைத் தொட்ட அளவிலே தீட்டு போக்கிக் கொள்கின்றனர். இவர்கள் சாதிப் பெண்கள் கணவன் இறந்தவுடன் வேறொருவனை மணந்துகொள்ளாதவர்களாகக் கணவனோடேயே உடன்கட்டை ஏறுகின்றனர்" கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படாததோடு கூடப் பெண்கள் கோசாவாக *(*தனித்து*)* இருக்கின்றனர். கொப்பல பிரிவினரைப் போலன்றி இவர்கள் இரண்டு கைகளிலும் தங்கம் அல்லது வெள்ளியாலான வளையல்களை அணிகின்றனர். தொர என்பதே இந்த உட்பிரிவினருக்கான பட்டப்பெயர்.

2. கம்ம வெலமர்*:* கிருட்டிணா மாவட்டத்திலேயே மிகுதியான எண்ணிக்கையினராக உள்ள இவர்கள் குடும்பங்கள் சில தொடக்க கால விசாகநகரம் மன்னர்களோடு அங்கிருந்து வேறு பகுதிகளுக்கும் சென்று குடியேறியுள்ளது. இவர்களை விசாகநகரம் நகரத்திலே எதிர்ப்படலாம். கைம்பெண்கள் மறுமணத்தை அனுமதிக்கும் இவர்கள் பெண்களைக் கோசாவாகவே இருக்கச் செய்கின்றனர். நாயுடு என்பது இவர்களுக்கான பட்டப்பெயர்.

* இந்துஸ்தானத்தில் போர்ப்படை தொடர்பான நடவடிக்கைகளின் வரலாறு. (Orme-Histroy of the Military Transactio in Indostan)

3. கொப்பலர் அல்லது தொத்தலர்*:* தங்கள் தலைமுடியினை மழித்துக் கொள்ளாத இவர்கள் அதனை உச்சந் தலையில் குடுமியாக முடிச்சிட்டுக் கொள்கின்றனர். நாகம், சங்கு, துளசி, ஆமை என்பன இவர்களிடையே உள்ள பிரிவுகளுள் சிலவாம். திருமண உறவு கொள்வதில் இப்பிரிவுகளுக்கு எத்தகைய பங்கும் இல்லை. இவை மேலும் நல்ல தொட்டி, ரெட்டி என்பன போன்ற புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகளாகப் பிரிவுபட்டுள்ளன. திருமண உறவு கொள்ளும்போது இப்பிரிவுகளே கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணந்துகொள்ள உரிமை பாராட்டும் மேநரிக வழக்கை இவர்கள் பின்பற்றுகின்றனர். பிராமணன் ஒருவனே இவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கின்றான். கைம்பெண்கள் ஏழுமுறை வரை மணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். மூத்தவன் இறந்துபோன தன் தம்பியின் மனைவியினை மணந்துகொள்கின்ற பிறரிடையே வழக்கில் இல்லாத கைம்பெண்கள் மறுமணத்தையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். வளையல் ஒன்றினை மட்டும் பெண்கள் வலது மணிக்கட்டில் அணிகின்றனர். இடது மணிக்கட்டில் சந்தேலு எனப்படும் இரண்டு வளையல்களுக்கு நடுவே கண்ணாடி வளையல்களை அணிகின்றனர். ஒருத்தி கைம்மை அடையும்போது இக் கண்ணாடி வளையல்கள் உடைக்கப்படுகின்றன. அண்ணா அய்யா என்பன இச் சாதியாருக்கு உரிய பட்டப்பெயர்கள். செல்வ வளம் மிகும்போது நாயுடு எனப் பட்டப் பெயரை மாற்றிக் கொள்கின்றனர்.

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த வெலமர் பற்றிய குறிப்பு ஒன்றில் திரு எப். ஆர். ஹெறமிவ பின்வருமாறு எழுதியுள்ளார்*:* தங்கள் இல்லத்தில் ஒரு திருமணத்தை நடத்துமுன் மாலர் சாதியினைச் சேர்ந்தவர்களின் திருமணம் ஒன்றினை நடத்தி வைக்கும் பழக்கம் உள்ளதாக இவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். அத்தகைய மணத்திற்கு ஆகும் செலவினை இவர்கள் ஏற்கின்றனர். வெலமன் ஒருவன் புதையல் எடுப்பதற்காக ஒருவனைப் பலியிட வேண்டி வந்தபோது அதற்கு மாலன் ஒருவன் தன்னைத் தர முன் வந்தான். இதன் காரணமாக அவன் புதையலைப் பெற முடிந்தது. இதற்கு நன்றி செலுத்து வகையிலேயே இத்தகைய வழக்கத்தை வெலமர் மேற்கொண்டு வருகின்றார். மறைத்திரு ஜெ. கெயின்* கோதாவரி மாவட்டத்தில் உள்ள பத்ராசலத்தச் சேர்ந்த வெலமரிடையேயும் இது போன்று தங்கள் மணத்திற்கு முன் பள்ளி சாதியினைச் சேர்ந்த ஒருவன் மணத்தை நடத்தி வைக்கும் பழக்கம் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

* இந்தியத் தொல்லியல், VIII, 1879. (Ind.Ant.VIII, 1879.)

வெலமர், கம்மர், காபுகள் ஆகியோரிடையே சமூகப் படிநிலையில் உள்ள தகுதி வேறுபாடுகளைப் பின்வரும் சாதிப் பெயர்களின் அமைப்பை வைத்துத் தெளியலாம் என எனக்கு ஒருவர் எழுதித் தெரிவித்துள்ளார்:

வெலம தொரை	-	வெலமர் அவர்கள்
கம்ம வாரு	-	திருவாளர் கம்மர்
காபு	-	அடைமொழி ஏதுமற்ற சாதிப்பெயர்

அரசு அலுவலர்கள் முன்பு ஒருசமயம் இவர்களுக்குப் பட்டா வழங்கும்போது ஒருவனை அதில் கம்மவாரு எனக் குறிப்பிடாமல் கம்ம என்று மட்டும் குறிப்பிட்டதால் அது பற்றிக் குறை கூறப்பட்டதாக ஒரு தகவலும் உள்ளது

தெலுங்கு ராசுக்கள், வெலமர் ஆகிய சாதியாரிடையே தங்கள் திருமணத்தில் நேரே பங்கு பெற இயலாத இக்கட்டான சமயங்களில் மணமகன்கள் ஒரு வாளினை தங்கள் சார்பில் அனுப்பி வைக்கும் வழக்கம் இருப்பதாகத் திரு எச்.ஜி.பெரண்டர்காஸ்ட்* குறித்துள்ளார்.

வேளம்பன் - Velanpan (rope danger)

கயிற்றின்மீது ஆடி வித்தைகாட்டும் மலபாரைச்சேர்ந்த குறவர்களுக்கான பெயராதல் கூடும்.

வேளன் - Velan *(வேளண்)*

வேளாளர் என்பதன் சுருங்கிய வடிவம். குயவர்கள் இதனைப் பட்டப்பெயராகத் தரித்துக் கொள்கின்றனர். திருவாங்கூரைச் சேர்ந்த பறையருக்கும் வேளன் என்பது பட்டப்பெயராகும் எனப் பதியப்பட்டுள்ளது. *(பார்க்க: பாணன்)*

கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த வேளன்கள் பற்றிய பின்வரும் குறிப்புக்கு நான் திரு எல்.கே.அனந்தகிருட்டிண அய்யர் அவர்களுக்குக் கடப்பாடு உடையேன்.**

பாணன்களைப் போலவே வேளன்களும் பேயாட்டம் நிகழ்த்துதல், போயோட்டுதல், நாட்டுப்புறப் போலி மருத்துவம் ஆகியனவற்றைக் கொச்சி

---

* இந்தியத் தொல்லியல், XX. 1891 (Ind.Ant.XX, 1891)

** இன இயல் கணக்கீடு தொடர்பான தனிக்கட்டுரை எண் *12,1907,* (Monbograph Eth.Survey of Cochin No.12, 1907).

மாநிலத்தின் வடபகுதிகளில் மேற்கொண்டவர்ளாக உள்ளனர். இவர்கள் பெருமண்ணான் அல்லது மண்ணான் என அழைக்கப்படுகின்றனர். எனக்குத் தகவல் தந்தவர் திருச்சூரைச் சேர்ந்த ஒரு பெருமண்ணான் ஆவார். திருச்சூருக்குத் தெற்கே பத்தாவது மைலில் உள்ள கருவனூல் பாலத்திற்குத் தெற்கே உள்ளவர்கள் வேளன்கள் எனப்படுவரெனவும் தங்கள் சாதியார் அவர்கள் இல்லத்தில் உண்பதோ அவர்களோடு மணஉறவு கொள்வதோ இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். தச்சர்கள் தீட்டுப் போக்கிக் கொள்ள வேளன்கள் மாத்துத் தரும் பழக்கம் இருப்பதே இதற்குக் காரணம். ஈழவர்களுக்கு மாத்துத் தரும் மண்ணான்கள் கம்மாளருக்கு அதனைத் தருவதில்லை. ஈழவர் கம்மாளரைவிடத் தகுதியில் உயர்ந்தவராகக் கருதப்படுவதே இதற்குக் காரணம். கொச்சி, எர்ணாகுளம் ஆகிய பகுதிகளில் வாழும் வேளன்கள் எட்டு இல்லங்களாகப் பிரிவுபட்டுள்ளனர். திருச்சூர் வட்டத்தைச் சேர்ந்த பெருமண்ணார் இடையேயும் இத்தகைய இல்லப்பாகுபாடு உள்ளது. சித்தூர் வட்டத்தைச் சேர்ந்த பெருமண்ணார் தங்களிடையே இல்லப்பிரிவுகள் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை எனக் கூறுகின்றனர்.

வேளன்கள், மண்ணான்கள் ஆகியோர் தோற்றம் பற்றிப் பின்வருமாறு ஒரு கதை கூறப்படுகிறது. முன்னொரு சமயம் பரமேசுவரனும் பார்வதியும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தபோது பார்வதி மண்ணால் செய்த பானை ஒன்றினைப் பரமசிவன் தெரியாது காலால் மிதித்துவிட அதிலிருந்து எழுந்த ஒரு மனிதன் அவர்கள் முன் பணிந்து நின்றான். அவன் மண்ணிலிருந்து வந்த காரணத்தால் மண்ணான் எனப்பட்டான். அவனுக்கு இன்று மண்ணார் மேற்கொண்டுள்ள தொழில் உரியதாக்கப்பட்டது. இவர்களிடையே சிறுமியர் பூப்படைந்ததற்கான சடங்கு நிகழ்ச்சிகளில் நான்காம் நாள் பாடப்படும் பாட்டில் இந்த வழக்கு வரலாறு கூறப்படுகிறது. அன்று அவள் தன் தீட்டினைப் போக்கிக் கொள்ளக் குளிப்பாள்.

கொச்சி மாநிலத்தின் வடபகுதிகளில் இத்தொழிலைச் செய்யும் மண்ணான்கள் காணப்படுவதைப் போலவே தென்பகுதிகளிலும் மண்ணார் எங்கும் காணப்படுகின்றனர். இவர்கள் தென்னந்தோப்புகளுள் ஓலை வேயப்பட்ட குடிசைகளில் வாழ்கின்றனர். மண்ணான்களும் இதுபோன்ற சுற்றுச் சுவரோடு கூடிய குடியிருப்புக்களிலேயே வாழ்கின்றனர். இவை இவர்களுக்கு உரிமை உடையதாக இருக்கலாம் அல்லது ஒரு பண்ணையாரின் நிலத்தில் குடிகூலிக்குக் குடிசை போட்டுக் கொண்டவர்களாக இவர்கள் இருந்து வரலாம்.

ஒரு சிறுமி பூப்பு அடைந்தவுடன் அவளைக் குளிக்கச் செய்து தனியே ஒரு அறையில் இருக்கச் செய்வர். இவ்வாறு அவள் நான்கு நாள்கள் தனித்திருப்பாள். நான்காம் நாள் காலை அவளைக் குடிசைக்கு முன் போடப்பட்ட ஒரு பந்தலில் அமரச் செய்து அரிசி நிறைந்த சில அணாக்களும் எரியும் திரியும் இடப்பட்ட தொன்னையினைப் பிடித்துக் கொள்ளும்படி செய்து சாதியினைச் சேர்ந்தவர்கள் பூப்படைதல் தொடர்பான பாடல்களைப் பகல் ஒன்று அல்லது இரண்டு மணிவரை பாடியவர்களாக இருந்து பின் அவளைக் குளிக்கச் செய்வர். இதன் பிறகு அழைக்கப்பட்ட சாதியினைச் சேர்ந்த ஆண் பெண்களும் சிறப்பாகத் தன்னை ஆடை அணிகளால் அலங்கரித்துக் கொண்ட பூப்படைந்தவளும் ஒன்றாக விருந்து உண்பர். மீண்டும் அச்சிறுமியினைப் பந்தலில் அமரச் செய்தபின் பாட்டினைத் தொடர்ந்து பாடுவர். இது மறுநாள் காலை ஆறு ஏழு மணிவரை நீட்டிக்கும். பாட்டுப் பாடுபவர்களுக்கு மூன்று பறை நெல், இருபத்தெட்டுத் தேங்காய், பதின்மூன்றணா நான்கு பைசா, இரண்டு வேட்டிகள் ஆகியன ஊதியமாகத் தரப்படும். இவ்வாறு பாட்டுப் பாடுதலைச் சில குடும்பத்தினர் பதினாறாம் நாள் வரை தள்ளி வைப்பர். அச் சிறுமியின் திருமண நாள் வரை தள்ளி வைப்பவர்களும் உள்ளனர். ஏழ்மையில் மூழ்கியுள்ள குடும்பத்தினர் இதனை அடியோடு கைவிட்டுவிடுகின்றனர். இவ்வாறு பாடப்படும் பாடல்களுள் ஒன்றின் கருத்தின் சுருக்கம் வருமாறு:

ஒரு நாள் சிறுமி ஒருத்தியும் அவள் தோழியரும் ஆற்றங்கரையில் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருத்தி தன் உடையில் குருதிக் கறை படியக் கண்டாள். அவளை அவளுடைய தோழியர் அவள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். அச் சிறுமியின் பெற்றோர் அது ஒரு காயத்தினால் ஏற்பட்டிருக்கக் கூடும் எனக் கருதினர். அதுபற்றி அவர்கள் அண்டை அயலில் கேட்டு அச் சிறுமி பூப்டைந்துள்ளாள் என அறிந்து கொண்டனர். அச் சிறுமி தன் அன்னையிடம் அவள் பூப்படைந்தபோது அணிந்த உடையினை என்ன செய்தாள் எனக் கேட்டாள். அவள் அன்னை தான் குளித்துவிட்டு வீட்டுக்கு வரும் போது அதனை ஒரு மாமரக் கிளையில் விட்டுவிட்டு வந்ததாகக் கூறினாள். இதுபற்றி அவள் மீண்டும் கேட்டறிந்த போது அவளுக்குத் தெரியவந்த செய்திகளாவன. கங்கா தேவியும் குளித்து: தன்னைத் தீட்டு நீக்கிக் கொண்ட பின் அவள் ஆடையினை ஓர் ஆற்றில் விட்டுவிட்டாள். பூமாதேவி அதனைப் பூமியில் புதைத்து வைத்தாள், பாஞ்சலி குளித்தபின் அதனை ஒரு ஆலமரத்தின் மீது விட்டுவிட்டு இல்லம் திரும்பினாள், தன் ஆடையினை இழக்க விரும்பாத சிறுமி ஒருத்தி பரமேசுவரனிடம் சென்று

தன்னுடைய இந்த ஆடையினைத் துவைத்துத் தூய்மையாக்க ஒருவனைத் தரும்படி வேண்டினாள். பரமசிவன் அப்போது ஒரு மந்திரத்தைக் கூறியபடி தண்ணீரைத் தெளித்தான். அவற்றுள் சில துளிகள் மேலே சென்று விண்மீன்களாயின. சில ஓர் ஆலமரத்தின் இலைகள் மீது விழ அவற்றிலிருந்து ஒரு மனிதன் தோன்றினான். வீட்டுக்கு விலக்காகும் பெண்களின் ஆடைகளைத் துவைக்கும் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. இவன் துவைத்துத் தரும் ஆடையினைக் குளித்து விட்டு உடுப்பவளே வீட்டுவிலக்குத் தீட்டிலிருந்து விடுபட்டவள் ஆகின்றாள்.

வேளன் சாதியினைச் சேர்ந்த ஒருவன் திருமண வயதினை அடையும்போது அவன் தந்தையும் தாய்மாமனும் அவனுக்கேற்ற ஒரு சிறுமியினை அவ்விருவருடைய சாதகங்களின் பொருத்தம் பார்த்தபின் தேர்ந்தெடுப்பர். மணத்திற்கான பேச்சு வார்த்தைகள் சிறுமியின் குடிசையில் நடைபெறும். பரிசத் தொகையின் ஒரு பகுதியான பதினைந்து ரூபாய் அப்பொழுதே செலுத்தப்படும். மணத்திற்கான நல்ல நாளும் மணத்திற்கு அழைக்கப்பட வேண்டியவர்கள் யார் யார் என்பதும் முடிவு செய்யப்படும். சிறுமியின் குடிசையின் முன் இடப்படும் பந்தலில் திருமணம் நிகழும். திருமணச் சடங்கினை இரவிலேயே நிகழ்த்துவர். அதற்குச் சில மணி நேரம் முன்னதாக மணமகனும் அவனைச் சேர்ந்தவர்களும் சிறுமியின் குடிசைக்கு வந்து சேர்வர். அவர்களை வரவேற்றுப் பந்தலில் பாயில் அமரச் செய்வர். முகூர்த்த நேரம் நெருங்கியதும் இரு வீட்டாரும் கூடியபின் மணமகன் வீட்டைச் சேர்ந்த இணங்கன் மணமகள் முகூர்த்தச் சேலை, பரியத் தொகை, சில கட்டுகள் வெற்றிலை, பாக்கு ஆகியனவற்றை மணமகள் இல்லத்தைச் சேர்ந்த இணங்கனிடம் ஒரு தட்டில் வைத்துக் கொடுப்பான். அவன் மணமகள் சேலையினை மணமகள் அன்னையிடம் சேர்த்துவிட்டு எஞ்சியவற்றைத் தான் எடுத்து வைத்துக் கொண்டு தட்டை மீண்டும் அவனிடமே திரும்பக் கொடுப்பான். மணமகன் உடன்பிறந்தவள் மணமகளைப் புதிய சேலையினை அணியச் செய்து பந்தலுக்கு அழைத்து வந்து மணமகன் அருகே அமரச் செய்வாள். பின் அவர்களுக்குச் சிறிது பாலும் பழமும் தந்து உண்ணச் செய்தபின் அவர்களைக் கணவன் மனைவி என அறிவிப்பர். கூடியிருப்பவர்கள் விருந்து உண்டபின் அவர்களுக்கு வெற்றிலை பாக்குப் புகையிலை ஆகியன வழங்குவர். பின் இரவு முழுதும் ஆடல் பாடல்களில் கழியும். சீதை, சுபத்திரை, பாஞ்சாலி ஆகியவர்களின் திருமணம் தொடர்பான பாடல்களைப் பாடுவர். மறுநாள் காலை எட்டு மணிக்கு மணமகன் இல்லத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரிசிக் கஞ்சி வழங்குவர். பன்னிரண்டு மணிக்கு நல்ல விருந்திடுவர். அதன்பின்

அவர்கள் மணமகளையும் அவள் பெற்றோர், உறவினர்கள் ஆகியோரையும் அழைத்துக் கொண்டு தங்கள் குடிசைக்குச் செல்வர். அவர்களை அங்கு வரவேற்று உபசரித்தபின் மணமகள் இல்லத்தில் நடத்தப்பட்ட சடங்குகள் இங்கும் நடத்தப்படும். மணமகள் வீட்டாருக்கு விருந்து வைப்பர். நான்காம் நாள் காலையில் மணமக்கள் குளித்து நல்ல உடையணிந்தவர்களாக உள்ளூர்க் கோயிலில் சென்று வழிபாடு நிகழ்த்துவர். பகல் விருந்துக்குப் பின் அவர்கள் மணமகள் இல்லம் செல்வர். அங்கு அவர்கள் ஓரிரு வாரங்கள் தங்கியிருப்பர். அதன்பின் மணமகன் தன் மனைவியோடு தன் இல்லம் திரும்புவான். அச் சமயம் மணமகளுக்கு அணிகள், வெண்கல வட்டிகள், விளக்கு, பாத்திரங்கள் ஆகியனவற்றை அவள் பெற்றோர் தங்கள் தகுதிக்குத் தக்கபடி கொடுத்து அனுப்புவர். இதன்பின் மணமக்கள் மணமகனுடைய பெற்றோருடன் தங்கி வாழ்வர்.

கொச்சி மாநிலத்தின் வடபகுதிகளில் மண்ணாரிடையே திருமணம் தொடர்பான பின்வரும் வழக்குகள் நிலவுகின்றன. மணமகன் தந்தை, தாய்மாமன், இணங்கன், மூன்றாவது மனிதன் ஒருவன் ஆகியோர் கூடி ஒரு சிறுமியினை அவளுடைய சாதகத்தை ஆராய்ந்தபின் தேர்ந்தெடுப்பர். முதலில் பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண்ட பின் மணநாளினை முடிவு செய்வர். மணநாளன்று சுபவேளை நெருங்கியவுடன் மணமகள் குடிசையின் முன் அமைந்துள்ள பந்தலில் இருவீட்டையும் சேர்ந்தவர்கள் கூடுவர். மணமகன் தந்தை ஒரு பித்தளைத் தட்டில் முகூர்த்தச் சேலை, பரிசத் தொகையான பன்னிரண்டு பணம், சில கவுளி வெற்றிலை பாக்கு, புகையிலை ஆகியவற்றை வைத்துச் சூத்திரம்போலப் பின்வரும் செய்தியினைக் கூறுவான். பந்தலில் ஏற்றிய விளக்கு வைக்கப்பட்டுள்ளது. அதனைச் சுற்றிக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளிலும் பாய் விரிக்கப்பட்டுள்ளது. ஒரு பித்தளைத் தட்டில் அரிசி, மலர், வெற்றிலை ஆகியன விளக்கின் முன் வைக்கப்பட்டுள்ளன. இருவீட்டையும் சேர்ந்த பெரியவர்களும் சாதியினைச் சேர்ந்தவர்களும் கூடியுள்ளனர். சாதியின் வழக்கப்படி மணமகன் தந்தை, தாய்மாமன், இணங்கன் மூன்றாம் மனிதன் ஆகியோர் கூடி இருவருக்கான சாதகங்களின் பொருத்தத்தைப் பார்த்து அவனுக்கான சிறுமியினைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இரு வீட்டாருக்கான இல்லங்கள், கிரியங்கள் ஆகியவற்றின் பொருத்தத்தையும் ஆராய்ந்துள்ளனர். பெண் கேட்டுச் சம்மந்தம் பெற்றபின் அவர்கள் மணம் நிகழ்வதற்கான நாளையும் முடிவு செய்துள்ளனர். இதற்கு உடன்பாடு தெரிவிக்கும் வகையில் இவர்கள் மணமகள் இல்லத்தில் உணவும் உண்டு முடித்துவிட்டனர். ஓணம் திருவிழாவிற்கு

இரண்டு சேலைகள், மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைக்கு இரண்டு பணம் அல்லது ஒன்பது அணா ஆகியவற்றோடு இவன் திருப்தியுற வேண்டும். கிராமத்தில் நடக்கும் திருவிழாவிற்கு இவளை இவன் அழைத்துச் செல்ல வேண்டும். இப்பொழுது இவர்கள் தங்கள் திருமணத்தினைக் கொண்டாட வந்து சேர்ந்துள்ளனர். மணமகளுக்கான விலை *101* பணம் என அவன் கேள்விப்பட்ட நாள்கள் உண்டு. *51* பணம் அதற்காகத் தர வேண்டும் எனவும் கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது அவளுக்கான பரிசத்தொகை *21* பணம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோல இத் தொகை அவளை மணக்க வருபவர்களுடைய வசதியினைப் போலக் கூடலாம், குறையலாம். மணமகளுக்கான விலையாக நான்கு பணமும் அவளுக்கான நகைகளுக்காக எப்பணமும் வெற்றிலை, பாக்கு, முகூர்த்த சேலை ஆகியவற்றோடு ஒரு பித்தளைத் தட்டில் வைக்கப்பட்டுள்ளது. கூடியுள்ள சாதிப் பெரியவர்களே நான் இவற்றை சிறுமியின் பெற்றோரிடம் தரலாமா?" எனக் கேட்பான். "நான் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாமா?" என சிறுமியின் தந்தைகேட்டாவனாக அதனை வாங்கித் தன் மைத்துனனிடம் தருவான். அவன் அதனை இணங்கனிடம் தருவான். அவன் அத் தட்டிலுள்ள முகூர்த்தச் சேலையினைத் தவிர எஞ்சிய அனைத்தையும் எடுத்துக் கொள்வான். அந்த முகூர்த்தச் சேலை மணமகன் இணங்களிடன் தரப்படும். அவன் அதனை மணமகள் உடன்பிறந்தவளிடம் மணமகளுக்குக் கட்டி விடுவதற்காகத் தருவான். சடங்கின் பிற நிகழ்ச்சிகள் முன்பே விவரிக்கப்பட்டதுபோல நிகழும். பாலக்காட்டிலும் சித்தூரிலும் பின்வருமாறு மணம்பற்றிய உடன்படிக்கை அனைவர் முன்னிலையிலும் கூறப்படுகிறது. "நமது சாதி வழக்கப்படி ஓர் ஊரைச் சேர்ந்த இளைஞன் இன்னொரு ஊரைச் சேர்ந்த சிறுமியினை மணக்க முன்வந்து அவளைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ளும்போது இங்குக் கூடியுள்ள சாதிப் பெரியவர்களான நீங்கள் இந்த நான்கு கவுளி வெற்றிலை, நான்கு படி அரிசி, இரண்டு சேலை, பத்து பணம் ஆகியவற்றை மணமகளுடைய பெற்றோரிடம் தர அனுமதிக்க வேண்டும்" என மணமகன் தந்தை கூறுவான். "இவற்றை நாங்கள் பெற்றுக் கொள்ளலாமா?" என மணமகள் இல்லத்தைச் சேர்ந்த இணங்கன் கேட்பான். மணமகள் மணமகனோடு அவன் இல்லம் புறப்படும்போது அங்குப் பின்வரும் கருத்துடைய வழக்கமான செய்தி அறிவிக்கப்படும். "நீ இவளை அடிக்கலாம். ஆனால் அதற்காகக் குச்சியினைப் பயன்படுத்தாதே. நீ இவளை நடத்தை கெட்டவள் எனப் பழிக்காதே. நீ இவள் காது, முலை, மூக்கு, கொண்டை ஆகியவற்றை அறுத்துப் விடாதே. இவளை குளிக்கக் குளத்திற்கும் சத்தியம் செய்ய கோயிலுக்கும் அழைத்துச் செல்லாதே. உனக்கு அவள் எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலம் வைத்துக்

காப்பாற்று. உனக்கு இவள் வேண்டாம் என்றால் இவளுக்கு போதுமான வாழ்க்கை பணம் தந்துவிட்டு குழந்தைகளை உன்னோடு கூட்டிக் கொள். அவை உன்னுடைய குழந்தைகள். ஆகையால் நீதான் அவர்களை வைத்துக் காப்பாற்றவேண்டும்."

பல மனைவியரை மணத்தல் தடைசெய்யப்படவில்லை எனினும் வேளன்களும் மண்ணான்களும் இவ்வழக்கத்தை அரிதாகவே மேற்கொள்கின்றனர். ஏழைகளான இவர்கள் ஒருத்தியை மணந்து அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றவே மிகவும் தொல்லைப் படுகின்றனர். முதல் மனைவி மகப்பேறு வாய்க்கப் பெறாத போதும். தீராதநோய் அல்லது உடற்குறையாள் அவள் அவதியுறும்போதும் தொழிலில் உதவ உதவியாளர்கள் தேவைப்படும்போதும் மட்டுமே இவர்கள் இரண்டாவதாக ஒருத்தியினை மணக்கின்றனர். வேளன்களிடையே பல மனைவியரை மணக்கும் வழக்கம் இல்லையாயினும் மாநிலத்தின் வடபகுதிகளைச் சேர்ந்த மண்ணான்களிடையே இது பெருவழக்காக உள்ளது. தன் கணவன் இறந்தபின் ஓராண்டு சென்றபின் வேளன் சாதியினைச் சேர்ந்த ஒருத்தி தன் சாதியினைச் சேர்ந்த வேறொருவனை மணந்து கொள்ளலாம். இத்தகைய திருமணச் சடங்கில் அவளை மணப்பவன் தன்னை மணக்க விரும்புவளுக்கு ஒரு இணை சேலைகளைத் தந்து அவளோடான மணத்தை உறுதிசெய்து கொள்ளலாம். இதன்பின் அவள் தன் பழைய கணவனுடைய உடைமைகள் மீதான அனைத்து உரிமைகளையும் இழந்துவிடுகின்றாள். மண்ணான்களிடையே ஒரு கைம்பெண் தன் கணவனோடு உடன்பிறந்தவர்களுள் ஒருவனை மணந்து கொள்ளலாம் என்ற வழக்கம் உள்ளது. சாதியினைச் சேர்ந்த ஒருவனோடு கூடா ஒழுக்கத்தில் ஈடுபடும் ஒருத்திக்கு நல்ல அடிஉதை தருவர். தாழ்ந்த சாதியாரோடு உடல் உறவு கொள்பவள் சாதி விலக்கத்திற்கு உள்ளாவாள். அதன்பின் அவள் கிறித்தவ சமயத்தையோ முகமதிய சமயத்தையோ சென்று சேர்ந்து கொள்ளலாம். திருமணமாகாத ஒருத்தி கருவுறுவாளானால் அச் செய்தி சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு அறிவிக்கப்படும். அவர்கள் சாதிக் கூட்டம்போட்டு அவளுடைய கள்ளக்காதலன் யாரெனக் கண்டறிய முயற்சி மேற்கொள்வர். அவர்கள் அவனிடம் அவளை மணந்துகொள்ளும்படி வற்புறுத்துவர். பெரும்பாலும் அவர்கள் இருவருக்கும் தண்டத்தொகை விதித்து அதனைக் கள்ளுக்காகச் செலவழிப்பர். வேளன்களிடையேயும் மண்ணான்களிடையேயும் மணமுறிவினை எளிதாகப் பெறலாம். மனைவியினை வைத்துக் கொள்ள விரும்பாத ஒருவன் அவளை அவளுடைய பிறந்த வீட்டுக்கு அழைத்துச் சென்று அவளுடைய பெற்றோரிடம்

அவன் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி வந்ததற்கான காரணத்தை விளக்கி அவளை அவர்களிடம் ஒப்படைத்துவிடலாம். தன் கணவனை விரும்பாத ஒருத்தி அவனை விடுவிட்டுத் தன் பெற்றோரில்லம் திரும்பிவிடலாம். மேற்கூறிய இரு நிகழ்ச்சிகளின் பின்னும் ஒருத்தி மீண்டும் மணம் செய்துகொள்ள உரிமையுடையவளாவாள்.

ஒருத்தி கருவுறுவாளாயின் புளிகுடிச் சடங்கு அவள் கருவுற்ற ஒன்பதாம் மாதம் அவளுடைய கணவன் குடிசையில் நிகழ்த்தப்படும். இதற்கான சாறு புளி (*Tamarinda indica*) நெரிஞ்சம்புளி (*Hibiscus surattensis*) அம்பழம் புளி, ஆகிய்வற்றின் இலைகளிலிருந்து எடுக்கப்படும். அம்பாபுளியின் பெரிய கிளையொன்று வீட்டுவாசலில் நடப்பட்டு அதனருகே கருவுற்றவள் அமர்தப்படுவாள். அவளுடைய கணவன் மூன்று சிறுகரண்டியளவு சாற்றினை அவளுக்குக் குடிக்கத் தந்தபின் ஏழு முறை அவளுடைய சிறு தாலியினை அந்தச் சாற்றில் தொட்டு அவளுடைய வாயில் சில துணிகளை விடுவான். வண்ணாரிடையே கருவுற்றவளின் உடன்பிறந்தவனும் மும்முறை இதுபோலப் புளிச்சாறு விடும் வழக்கம் உள்ளது. அவளுடைய கணவனோடு உடன்பிறந்தவளும் ஒரு சிறு கிண்ணத்தில் இதனைத் தந்தால் அவள் இதற்காக இரண்டு சேலைகளைப் பெறும் உரிமையுடையவள் ஆவாள். இதன்பின் கால்படி நல்லெண்ணையினை அவள் தலையில் விட்டு வடியச் செய்து அவள் உடல் முழுதும் பூசி விட்டுச் சீயக்காய் தேய்த்துக் குளிக்கச் செய்வர். அவளுடைய உறவினர்களுக்கும் சாதியாருக்கும் நல்ல விருந்திடுவர். சிலர் கருவுற்றவளிடம் அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையினைத் தங்கள் மருமகனாகவோ மருமகளாகவோ ஆக்குவதாக உறுதியளிக்கும்படி வேடிக்கையாகக் கேட்பர். அனைவரும் அவளை நல்லபடி பெற்றுப் பிழைக்க வேண்டும் என வாழ்த்திச் செல்வர்.

மகப்பேறு நாள் நெருங்கி உள்ள ஒருத்தியினைத் தனியே ஓர் அறையில் இருக்கச் செய்வர். அவள் அன்னையும் வேறு இரு வயதான பெண்களும் அவளுக்கு உதவியாக இருப்பதோடு மருத்துவமும் பார்ப்பர். அவள் பதினைந்து நாள்கள் தீட்டுக்கு உரியவளாக இருப்பாள். முதல் நாளன்று அவளுக்குச் சுக்கும் பனைவெல்லமும் கலந்து தருவர். அடுத்த மூன்று நாள்கள் பூண்டும் வெல்லமும் தருவர். முதல் மூன்று நாள்கள் தேங்காய்த் துருவல் இடப்பட்ட அரிசிக் கஞ்சியினை உணவாகத் தருவர். இது தாய்ப்பால் சுரக்க உதவுவதாக கூறப்படுகிறது. அடுத்து மூன்று நாள்களும் கொடப்புளி (*Garcinia*

cambogia) சீரகம், குடல் உருக்கி (*Achyranthes aspera*) முருங்கைக் கீரை ஆகியன உணவாகத் தரப்படும். இதன்பின் சில நாள்கள் தொடர்ந்து கோழிக்கறி, கடுகு, சீரகம், உழுவ (*Trigonella foenuj groecum*) ஆகியவற்றை நல்லெண்ணை யிட்டுச் சமைத்து தருவர். மூலிகைச் செடிகள் இடப்பட்ட நீரில் அவள் நான்காம், ஏழாம், ஒன்பதாம், பதினொன்றாம், பதினாறாம் நாள்களில் குளிப்பாள். பதினாறாம் நாள் காலையில் அவளுடைய இணங்கத்தி (இணங்கன் மனைவி) அவள் தங்கியிருந்த அறையினைப் பசுஞ்சாண நீரால் மெழுகித் துப்புரவு செய்வாள். வண்ணான் கொண்டுவந்து தந்த மாத்தினை உடுத்தியவளாக குளிக்கும் அவள் தீட்டு நீங்கப் பெற்றவளாவாள். இதன்பின் அவள் வீட்டில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று அனைவரோடும் பழகும் உரிமைபெற்றவளாவாள்.

வேளன்கள், மண்ணான்கள் ஆகிய சாதியாரிடையே தந்தையின் உடைமைகளுக்கு மகனே உரிமையுடையவனாகின்றான். எனினும் மிக ஏழைகளாக உள்ள இவர்கள் இவ்வாறு உரிமை பாராட்ட உடைமைகள் எவையும் இருக்க வாய்ப்பில்லை.

வேளன்களும் மண்ணான்களும் மந்திரம், மாந்திரீகம் ஆகியனவற்றைச் செய்கின்றனர். ஊன் உடம்பைப் பிடிக்கின்றன. அனைத்து நோய்களும் தீங்கிழைக்கும் பேய்களின் தாக்குதலால் வருகின்றன என நம்புகின்ற இவர்கள் அத்தகைய நோய்களால் துன்புறும் மக்களின் துன்பத்தைத் தங்கள் மந்திரத்தாலும் தாயத்துகளாலும் நீக்குவதாகக் கூறுவர். பின்வரும் மந்திரங்களைச் சொல்லி விபூதி பூசுவதால் பெரியம்மையினை உண்டாக்கும் தீய ஆவியினை ஓட்ட முடியும் என நம்புகின்றனர்.

1. ஓம் ஒ பள்ளியம்மா யானைத் தந்தம் போன்ற பற்களையுடைய தாயே பேறுருவாக ஓங்காரம் எனப்படும் சுடுகாட்டில் சுற்றிலும் சிதைகளில் நெருப்பு மூண்டு எரிய உன் ஒரு முலையினை ஒரு தோளில் இட்டபடியும் மற்றொன்றினைப் பந்து போலாட்டியும் விளையாடுபவளே! நாக்கை வெளியே தொங்கவிட்டுத் தலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருப்பவளே! புல், அவரை, மிளகு ஆகியனவற்றை இடக்கையிலும் எள், சாமை ஆகியவற்றை வலக்கையிலும் ஏந்தியவளாக எங்கும் பெரியம்மைக்கான விதையினைத் தூவி விதைப்பவளே! தாயே, நீ விதைத்துவிட்ட விதைகளும் இன்னமும் நீ விதையாது இருக்கும் விதைகளும் உள்ளே உலர்ந்து வெளியே கருகியனவாக ஆகட்டும்! மகிழ்ச்சியில் உன்னை மறந்தவளாக உள்ளவளே காப்பாயாக! காப்பாயாக!

2. **பறவைகளால் குழந்தைகள் தீங்குற்றதைத் தீர்க்கம் மந்திரம்:** ஓ! உருண்டகண்ணையும் குள்ள உருவையும் பெரிய காதுகளையும் கொண்டவளாகச் சிவனுடைய அலைக்கும் நெற்றிக்கண்ணிலிருந்தும் பிறந்த கருங்காளியே ஓடிவா ஓடிவா வந்து இவனைக் காப்பாற்று.

3. **சுரமும் வலிப்பும் நீங்க மந்திரம்:** ஓ! பன்றி முகம் வாய்க்கப் பெற்ற தாயே! நீ என்னைத் தாக்கியபடி வரும் என் பகைவன் கழுத்தை உன் கொம்புகளால் தாக்கி அவனைத் தரையில் வீழ்த்தி அவனை மெல்ல மென்று குதப்பியபடி நில். மீண்டும் அவனை உன் கொம்புகளால் குத்தித் தரையில் வீழ்த்தி மென்று கடித்துக் குதப்பு. *41,448* பேய்களையும் ஆட்டி வைப்பவளாக எல்லா நோய்களுக்கும் அதிபதியாய் இருப்பவளே! எழுபத்திரண்டு பைரவன்கள், பதினெட்டு வகை வலிப்புகள், பன்னிரண்டு வகை முயற்சிகள், எல்லாவகை நோய்களும் கண்டங்கரன்கள் (மணிபோன்ற காதுகளை உடைய பேய்கள்) ஆகிய அனைவரும் உனக்கு நான் சேவை செய்யும்வரை என் கட்டுப்பாட்டில் இருக்கட்டும்.

இந்த மந்திரத்தைப் பதினாறு முறை கூறி நோயுற்றவர் உடம்பின்மீது விபூதியினை வீசவேண்டும்.

4. ஓ! பத்ரகாளி! கிண்ணம் நிறைய இருந்ததைக் குடித்துவிட்டாய். அரசாக்கினை வாளினை வலக் கையில் ஏந்தியபடி உயர்ந்த பீடத்தில் ஒருக்களித்து உட்கார்ந்திருப்பவளே நான் உனக்குச் சேவை செய்ய விரும்பி இந்த மந்திரங்களைக் கூறுகின்றேன். யக்சி, காந்தர்வன், பூ மாலகாந்தர்வன், சுடலை, நீராளி, நீலாங்கரி, குழலி முதலிய மக்களுக்கு நோய் தரும் அனைத்துப் பேய்களையும் என் கட்டுப்பாட்டில் இருக்கச் செய். புனித அன்னை பத்திரகாளியே! என் குருவின் பேரால் உனக்கு ஆணையிடுகின்றேன்.

5. **பேய்களை ஓட்டுவதற்கான மந்திரம்:** ஓ! வெள்ளநாட்டிலிருக்கும் வேதவூரத்தைச் சேர்ந்த கரிங்குட்டியே! எட்டிமரத்தின் வலப்பக்கக் கிளையிலிருந்த பழங்களைப் பறித்து அவற்றின் ஓட்டில் கள்ளினை வைத்திருப்பவளே. வீட்டுக் கருங்கோழியின் குருதியினைக் குடிப்பவளே. எட்டிப் பழத்தின் ஓட்டில் தட்டி ஒலி எழுப்பியபடி காலத்தைக் கணிப்பவளே. உன் எக்காளத்தை மூக்கில் வைத்து முழக்குபவளே. தொன்றுதொட்டு இருந்து வரும் கரிங்குட்டி! நான் உரிய மந்திரங்களைச் சொல்லும்வரை நீ அந்தப் பேய்களை ஆட்டம் ஆடச் செய்யாதே. மற்றவர்களையும் குதித்து ஓடுமாறு செய்! ஓ! கரிங்குட்டி ஓடிவா! ஓடிவா ஓடிவந்து என் காரியத்தைக் கைகூடச் செய்.

6. ஓ! கரடி போன்ற முகத்தைக் கொண்ட வேட்டைக்காரியே! நான் உனக்குரிய மந்திரத்தைக் கூறி என்னைத் தியானிக்கின்றேன். எனவே நீ என் பகைவரை மிதித்து அழி. அவர்கள் உடலைக் கிழித்துக் குருதியினைக்குடி. பின் கொட்டாவி விட்டவளாக ஓய்வு கொள்வாய். உடம்பின் உள்ளும்புறமும் குடியிருந்தபடி வலிப்பையும் நோயினையும் தரும் பேய்களை விரட்டுவாய். அவற்றைத் தூசி போலப் பறக்கச்செய்வாய். என் குருவின் மீது ஆணை. சுவாஹ.

7. **கண்ணேறு பட்டதனைப் போக்க மந்திரம்:** ஓ! தெய்வமே! உன்னை வணங்குகின்றேன். கதிரவன் தோன்றியவுடன் சந்திரன் ஒளி இழப்பது போலவும், சக்கரப் பறவை (கருடன்) சந்திரனைக் கண்டவுடன் மறைந்து ஒடுவது போலவும், கருடனைக் கண்ட அளவில் பாம்புகளின் அரசனான வாசுகி ஒடி மறைவதைப் போலவும் அவன் தலையில் உள்ள நஞ்சும் மறைவதைப் போலவும் எவ்வளவு சக்தி வாய்ந்த கண்ணேறுபட்டிருப்பினும் உன் அருளால் அது மறைந்தொழிவதாகுக.

8. **மாதவிலக்கைத் தாமதப்படுத்துவற்கான மந்திரம்:** பூமி தேவியின் மகனான செவ்வாயே உன்னை வணங்குகின்றேன்.

மஞ்சளில் தோய்க்கப்பட்ட ஒரு நூலினை இரண்டு உள்ளங்கைகளிலும் சேர்த்து அதனிடையே வைத்துக் கொண்டு எத்தனை நாள் தள்ளி மாதவிலக்கு ஆக வேண்டுமோ அதனை மனதில் நினைத்தபடி இந்த மந்திரத்தைச் சொல்லியபடி நூலினைக் குடத்திலோ இடையிலோ கட்டிக் கொண்டால் மாதவிலக்குத் தள்ளிப் போகும் இந்த நூலினை ஒரு மோதிரத்தோடு கோத்தும் கழுத்தில் அணிந்து இதே பலனைப் பெறலாம்.

9. **பசுக்கள் பால் தருவதை நிறுத்துவதற்கான மந்திரம்:** ஓம். கோஸ். பாலை வற்றச் செய். என் மீது உன் அருள் பார்வை படட்டும். கையில் வாளும் திரிசூலமும் ஏந்தியுள்ள நீ பசுவின் மடியினைப் புலியின் மடிபோல வற்றச் செய்வாய். என் குரு மீது ஆணை.

10. **பசுக்கள் பால் தரச் செய்வதற்கான மந்திரம்:** மகாதேவனின் புனிதமான பாதங்களை முதலை கடித்ததாலான வீக்கம் குறைந்து மறைந்ததைப் போலக் கீழே போவதாக குருவின் மேல் ஆணை.

11. **காலில் குத்தியமுள் வெளிவருவதற்கான மந்திரம்:** பரமேசுவரனும் பார்வதியும் வேட்டைக்குப் புறப்பட்டபோது பார்வதியின் காலில் ஒரு முள் குத்தியது. அது

ஒரு மூங்கிலின் முள்ளா எலும்பின் முள்ளா நச்சு மரத்தின் முள்ளா எனத் தெரியவில்லை. அது எதுவாயினும் ஒன்றும் செய்யாததைப் போல இந்த முள்ளும் வருத்துவதினின்றும் நீங்குக. ஓ! தேவா! என் குருவின் மேல் ஆணை.

12. **வேற்றுருவம் கொள்வதற்கான வழி:** ஒரு நாயின் தலையினை எடுத்து, அதனை எரித்து அந்தச் சாம்பலின் மீது வெள்ளங்குட்டிச் செடியினை நட்டுக் கர்ப்பூர ஆரத்தியும் சாம்பிராணிப் புகையும் போடவும். பின் அந்தச் செடியின் வேரைப் பிடுங்கவும். அதனை ஒரு நாயின் பாலோடும் பூனையும் எலும்புத் தூளோடும் இட்டுக் கலக்கு. இந்தக் கலவையால் நெற்றியில் ஒரு பொட்டு இட்டுக் கொள்பவன் தன் விருப்பம்போல் விரும்பிய விலங்கின் உருவத்தை எடுக்கலாம்.

13. மலங்கரச் செடி ஒன்றின் முன் ஊதுபத்தி கொளுத்திச் சாம்பிராணித் தூபம் காட்டி வழிபாடு நிகழ்த்தவும். பின் 101 முறை சக்தி மந்திரத்தை உச்சரிக்கவும். அந்தப் போத்து உயிர்க்கொடுக்கும்படி மந்திரத்தை உருவேற்று. அந்தக்குச்சி எந்தப் பக்கமாகச் சாய்கின்றது என்பதனைக் கருத்துடன் கவனி. அந்தக்குச்சிக்குத் தென்திசையில் சென்று புலியின் மீசை மயிர்களைப் பிடுங்கி அவற்றோடு கூட விராளிபட்டினையும் சேர்த்துப் பந்தாக்கி அதனை ஒரு பட்டுக் கயிற்றால் கட்டிக் காதினுள் வைத்துக் கொண்டு உள்ளங்கைகளைத் தரையில் ஊன்றி நின்றால் புலி உருவினை எடுக்கலாம். அக் குச்சியினை கையில் வைத்துக் கொண்டு பூனை, காளை அல்லது வேறு எந்த விலங்கின் உருவினை நினைத்தாலும் மற்றவர் கண்களில் நீ அந்த விலங்குபோலக் காட்சித் தருவாய்.

14. வேப்ப மரத்திலிருக்கு காக்கைகூடு ஒன்றினை எடுத்து அதனைச் சுடுகாட்டில் கொண்டுபோய் புதை. பின் அதனைக் கொண்டு போய் உன் பகைவன் வீட்டினுள் போடு. அந்த வீடு எரிந்துவிடும்.

15. சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமையன்று சுடுகாட்டில் கழுதை ஒன்று படுத்துப் புரண்ட இடத்தில் உள்ள சாம்பாலை எடுத்துக் கொண்டு போய் உன் எதிரியின் வீட்டில் இடு. அவர்கள் சீக்கிரம் அந்த வீட்டைவிட்டு ஒடுவர். அல்லது கொடிய நோய்களுக்கு ஆளாவர்.

வேளன்களும் மண்ணான்களும் ஆவிகளை வழிபடுகின்றனவர்கள் சண்டன், முண்டியன், கண்டகரணன், கரிங்குட்டி, சாத்தன் ஆகிய

தீங்கிழைக்கும் தேவதைகள் ஆகியோரை இவர்கள் வழிபடுகின்றனர். இத் தேவதைகள் அனைத்தையும் தங்கள் வீட்டின் சுற்றுச் சுவருக்குள் மரங்களின் அடியில் கற்களில் எழுந்தருளச் செய்திருப்பர். ஆடு, கோழி, பழம், தேங்காய், அவல், வறுத்த அரிசி ஆகியனவற்றை மார்கழி மாதத்தின் பத்தாம் நாளிலும் தை மாதம் செவ்வாய்க் கிழமையிலும், மாசி மாதம் பரணி நாளிலும் பலியாகப் படைப்பர். பகவதியினையும் இவர்கள் வழிபடுகின்றனர். இறந்துபோன மூதாதையரின் ஆவிகள் குடும்பத்தின் நலந்தீங்குகளை நிகழ்த்துவிக்கின்றன. என்ற நம்பிக்கையில் அந்த ஆவிகளையும் வழிபடுகின்றனர். சில சமயம் கொடுங்கோளூருக்கு அங்கு எழுந்தருளியுள்ள தேவியினை வழிபடச் செல்லும் இவர்கள் தங்கள் ஊரைச் சேர்ந்த நாயர், கம்மாளர், ஈழவர் இல்லங்களுக்குச் சென்று வீட்டுப் பெரியவர்களிடம் சில அணாக்களைப் பெற்று அதனைக் கொண்டு கோழி வாங்கி அங்குள்ள தேவதைகளுக்குப் பலியிடுவர். மரம் அல்லது உலோகத்தாலான மூதாதையரின் ஆவிகள் எழுந்தருளியிருக்கும் உருவங்களை இவர்கள் தங்கள் குடிசையில் ஓர் அறையில் வைத்து அமாவாசை, சங்காராந்தி ஆகிய நாள்களில் படையலிட்டு வழிபடுவர்.

வேளன், மண்ணான் ஆகியோர் இறந்தவர்களைப் புதைப்பர் அல்லது எரிப்பர். சாவு சடங்கினை இறந்தவருடைய மகனே நிகழ்த்துகின்றான். இறந்தவனோடு உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளும் உடன்பிறந்தவர்களும் அதில் பங்குபெறுகின்றனர். இவர்கள் சடங்குகளை முன்னின்று நடத்தி வைப்பவர்களான புரோகிதர்கள் குருப்புகள் எனப்படுவர். சாவுத் தீட்டினைப் பதினாறு நாள்களுக்கு மேற்கொள்ளும் இவர்கள் பதினாறாம் நாள் காலையில் இறந்தவன் வாழ்ந்த குடிசையினைப் பசுஞ்சாண நீர் தெளித்துத் துப்புரவு செய்தபின் வண்ணான் தரும் மாத்தினை குடும்பத்தவர்கள் உடுத்துக் குளித்துத் தங்கள் தீட்டினைப் போக்கிக் கொள்வர். சாதியினைச் சேர்ந்த உறவினர்களையும் நண்பர்களையும் அன்று விருந்து தரப்படும். ஓராண்டு முடிந்தபின் சிரார்த்தம் நடத்தும்போது இது போன்ற விருந்தினை நடத்துவர்.

வேளன்கள், மண்ணான்கள், ஆகியோரின் முக்கிய தொழில் பிராமணர், சத்திரியர், அந்தல சாதியார், நாயர், கம்மாளர், ஈழவர் ஆகியோருக்கு மாத்துத் தருவதாகும். வீட்டுவிலக்கானவளுக்கு நான்காம் நாள் காலையிலும், மகப்பெற்றவளுக்கு ஐந்து, ஒன்பது, பதினொன்று, பதினாறாம் நாள்களின்போதும் சாவுத்தீட்டுக்கு உள்ளான குடும்ப உறுப்பினர்களுக்கு பதினாறாம் நாளன்றும்

மாத்தினைப் பயன்படுத்தவேண்டும். துவைத்த இந்தத் துணியினை அணிந்து குளிக்கும் இவர்கள் குளித்து முடித்தவுடன் அதனைத் திரும்பத் தந்துவிடுவர். இந்தத் துணி வண்ணானைச் சேர்ந்த தாயிருக்கும் அல்லது இவர்கள் முன்பே இதனை வண்ணானிடம் கொடுத்து வைத்திருப்பர். மாதவிலக்காகும் ஒருத்திக்கு மாத்துத் தருவதற்காக ஓர் அணா அல்லது ஒரு படி நெல்லினை இவன் பெறுவான். பிறப்பு, சாவுத் தீட்டுக்களைப் போக்க மாற்றுத் தருவதற்காக ஒரு பறை நெல் அல்லது ஆறணாவினைப் பெறுவான். வேளன்கள் மேலே கூறிய அனைத்துச் சாதியாருக்கும் மாத்துத் தருகின்றனர். மண்ணான்கள் கம்மாளருக்கு மாத்துத் தர உடன்படுவதில்லை. இதனால் இவர்கள் கம்மாளரைவிடத் தாங்கள் சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்கள் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றனர். உயர் சாதியார் கோயில்களில் உள்ள தெய்வ உருவங்களுக்கு அணிவிக்கப்படும் ஆடைகளையும் இவர்கள் துவைக்கின்றனர். துணியினைத் துவைக்கும் முன் பசுஞ்சாணம் இடப்பட்ட நீரில் முதலில் அதனை நனைப்பர். பின் துணியினை குளம், கால்வாய், ஆறு ஆகியவற்றின் கரையில் கிடக்கும் கல்லில் அடித்துத் துவைத்து மீண்டும் சாம்பல் அல்லது சாரமண் கலக்கப்பட்டுள்ள நீரில் தோய்த்துச் சில மணி நேரம் ஆவியில் வேக வைப்பர். மீண்டும் துணிகளை அவ்வப்போது தண்ணீரில் நனைத்துக் கொண்டு அவை தூய்மை பெறும்வரை அடித்துத் துவைப்பர். பின் அவை வெயிலில் உலர்த்தப்படும். அதன்பின் அவற்றைக் கஞ்சியும் நீலமும் கலந்த நீரிலிட்டு நனைத்து உலர்த்துவர். காய்ந்தபின் அவற்றை மடித்துத் தடிமனான தடியால் மொத்திச் சலவைப் பெட்டியால் தேய்த்துபோலத் தோன்றச் செய்வர். கொங்களூர், கொச்சி, கணையலூர் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த வேளன்கள் தேங்காய் பறிக்கத் தென்னை மரங்களில் ஏறுவர். நூறு மரங்களில் ஏறுவதற்குச் கூலியாக எட்டு முதல் பத்தணா வரை பெறுவர். இவர்கள் குடைகளும் தயாரிக்கின்றனர். இவர்களுள் சிலர் மந்திரம், மாந்தீரிகம் முதலியன செய்கின்றனர்.சிலர் குழந்தைகளுக்குப் போலி வைத்தியம் பார்க்கின்றனர். இன்று சிலர் பயிரிடுதலை மேற்கொண்டிருக்க மற்றும் சிலர் மெத்தை, தலையணை, மேற்சட்டை ஆகியன தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு ஊரிலும் இச் சாதியினைச் சேர்ந்த சிலர் பாட்டுப்பாடுவோராக இருக்கின்றனர். சிறுமியரின் பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, சமயச் சடங்கு, ஊர்க் கோயில் திருவிழா முதலியவற்றில் இவர்கள் பாடுவதற்காக அமர்த்தப்படுகின்றனர். சிலர் முழவு அடிப்பதில் கை தேர்ந்தவர்கள். கிராமப்புறங்களைச் சேர்ந்த தாழ்ந்த சாதியினர் முழவு கொள்வோரைப் பணிக்கு அமர்த்துகின்றனர். வேளன்கள் மேற்கொள்ளும் மேலே கூறிய பணிகளை மண்ணான்களும் செய்து வருகின்றனர்.

தங்களைவிடச் சாதியில் உயர்ந்தவர்களான பிராமணர், சத்திரியர், நாயர், ஈழவர் ஆகியோர் தரும் உணவினை வேளன்களும் மண்ணான்களும் பெற்று உண்பர். வேளன்கள் கம்மாளரிடம் இருந்தும் உணவு பெற்று உண்பர். மண்ணான்கள் அவ்வாறு பெற்று உண்பதில்லை. கணியர், பாணான், வில்குருப்பு முதலிய தங்களுக்குச் சமமான அல்லது தங்களைவிடத் தாழ்ந்த சாதியாரிடமிருந்து இவர்கள் உணவு பெற்று உண்பதில்லை. இவர்கள் பிராமணர்களிடமிருந்து இருபத்திரண்டு அடிதூரம் விலகி நிற்க வேண்டும். இவர்களுக்கென்று தனியே நாசுவர்களும் வண்ணார்களும் உள்ளனர். உயர்சாதியாருடைய கோயில்களில் வெளிப் பிரகாரத்திலிருந்து தூரமாகவே இவர்கள் நிற்றல் வேண்டும். உயர்சாதிச் சூத்திரர்களுடைய கிணற்றிலிருந்து நீரெடுக்க இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் குடியிருப்புகளுக்கு நடுவே சென்று குடியிருக்கவும் இவர்கள் அனும்திக்கப்படுவதில்லை.

திருவாங்கூரைச் சேர்ந்த வேளன்கள் பற்றிய பின்வரும் குறிப்பினைத் திரு என்.சுப்ரமணி அய்யர் தருகின்றார்.

வேளன் என்ற பெயர் வேல் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். வேலை என்ற சொல்லிலிருந்தும் இது வந்ததாகக் கொள்ளலாம். வேளன்களுக்கு உரிய பட்டபெயர் பணிக்கன் என்பதாகும். பரத வேளன், வகை வேலன், பன வேளன், மண்ண வேளன், என நான்கு பிரிவினராக இவர்கள் பிரிவுபட்டுள்ளனர். இறுதி மூன்று பிரிவினரும் தங்கள் பரம்பரைத் தொழிலோடு வண்ணாராகவும் பாக்கு மரம் ஏறுவோராகவும் தொழில் செய்கின்றனர். பன வேளன் பிரிவினர் மரம் அறுத்தலைத் துணைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். முதல் இரு பிரிவினருள்ளும் சிலர் வைத்தியர்கள். இவர்களிடையேயான இந்தப் பாகுபாடுகள் வரவரத் தெளிவான வரையறையற்றனவாகி வருகின்றன. வேளன்கள் சிவணி லிருந்து தோன்றியவர்கள் என்ற ஒரு வழக்கு நிலவுகின்றது.

சிவன் ஓர் சமயம் தீய ஆவிகள் விட்டுணுவின்மேல் ஏறிவிட்ட பேய்களைப் பேயோட்டி அகற்றினார். இத்தகைய தீங்குகள் மக்களிடையே மிகுதியாகவே இதனால் ஏற்படும் தீங்குகளிலிருந்து மக்களைக் காக்கச் சிவன் ஓர் ஆணையும் பெண்ணையும் படைத்தான். கேரளோற்பத்தியில் இச் சாதியின் பெயர் வேளக் குருப்பு எனக் கூறப்பட்டுள்ளது. இன்று இச் சாதியினருக்கு அம்பட்டராகவும் புரோகிதராகவும் இருக்கும் புறணாதியரே இப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். புறணாதி என்பதன் பொருள் வெளியே நிற்பது

என்பதாகும். இவர்கள் வேளன்களோடு சரிசமமாக இருக்கத் தகுதியற்றவர்கள். புறணாதியர் வண்ணார் அல்லர். வேளன் சாதி ஆண்களும் புறணாதிப் பிரிவுப் பெண்களும் மட்டுமே தங்களுக்குள் தொடர்புடையவர்களாகக் கலந்து பழகுகின்றனர்.

மலபாரில் சமூக நடைமுறையில் வேளன்கள் பல்வேறு வகைகளில் கடமையாற்றுகின்றனர். கேரளோற்பத்தியில் மகப்பேறு பெறவுள்ள பெண்களுக்கு ஒத்தாசை புரிவது இவர்கள் கடமை எனக் கூறப்பட்டுள்ளது. கேரள விசேச மகாத்மியத்தில் பேயோட்டுதல், மரம் ஏறுதல், துணி துவைத்தல் ஆகியன இவர்களுக்கு உரிய பணிகளாகக் கூறப்பட்டுள்ளது. போயோட்டுதலில் பலவகை முறைகள் மேற்கொள்ளப்படுகிறது. வேளன் துள்ளல், வேளன் பிரவர்த்தி என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் வேளன் துள்ளல் கண்ணேறு பட்டதையும் தீய ஆவிகள், பேய்கள் ஆகியவற்றின் தீங்குகளையும் நீங்குவதற்காகப் பாடப்படும் ஒருவகை இசைப்பாடலாகும். அடவி என்பது இவர்கள் வழிபடும் தனித்த இயல்புடைய பெண் தெய்வம் ஆகும். இவளுடைய உதவியாலேயே இவர்கள் இத்தகைய பேயோட்டுதல் முதலிய அரிய சாதனைகளைப் புரிகின்றனர். இவளையும் இவளை ஒத்த வேறு பல சிறு தெய்வங்கள் தேவதைகள் ஆகியவற்றின் வேடத்தையும் வேளன்கள் போட்டுக் கொண்டபின் ஆட்டம் தொடங்கும்., ஆட்டம் முடிந்தபின் அதில் பங்குபெற்ற அனைவரும் அன்பளிப்புகள் பெறுவர். வேளன் பிரவர்த்தி அல்லது ஒடுக என்பது பதினொரு நாள்கள்வரை நீடிக்கும். இதனைச் சிறிய அளவில் சுருக்கிச் சில நாளுக்கு உள்ளாகவும் நடத்தி முடிக்கலாம். அவசரமான சூழல்களில் ஒருநாள் அளவினதாகக் கூடச் சுருக்கிக் கொள்வர். பிறணாதி ஒருவன் இதில் கோமாளியாக நடிப்பான், சில சமயங்களில் இவன் வீட்டு வேலைக்காரனாகவும் உதவுவான். இந்த நிகழ்ச்சி கோயில்களில் நடத்தப்படும்போது பள்ளி பணல் எனவும் அரண்மனைகளில் நிகழ்த்தப்படும்போது பள்ளிப்பெரு எனவும் சாதாரண மக்களுக்காக நடத்தப்படும்போது வேளன் பிரவர்த்தி அல்லது சத்துரு எடுப்பு எனவும்படும். கண்ணேறு பட்டதால் வரும் தீங்கினைப் போக்கவும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. முதல்நாள் மயக்கும் மாந்தீரிகம் செய்யும் ஆண் அல்லது பெண் அதற்கென்றே அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகையில் இருத்தப்படுவர். அவன் முன் விளக்கினைச் சுழற்றி ஆரத்தி எடுப்பர். மூன்றாம் நாள் ஒரு குழி வெட்டி அதில் ஒரு சேவலைப் பலியிடுவர். நான்காம் நாள் பட்டட்ட பலி எனப்படும் மனிதப் பலி நிகழும். ஒருவனை ஒரு குழியினுள் போட்டு அதன்மீது ஒரு பலகையினையிட்டு அப் பலகையின் மீது பலிகளை

இடுவர். குழியினுள் போடப்பட்டவன் மீண்டும் புத்துயிர் பெற்றவனாகத் தெய்வம் ஏறப்பட்டவனைப் போலச் சடங்கு நடத்துபவனுக்கு வந்துள்ள நோய் அல்லது துன்பத்திற்கான காரணத்தைக் கூறுவான். எட்டாம் நாள் ஒரு சிறிய செம்புப் பாத்திரத்தில் தங்கம் அல்லது வெள்ளியிலான பார்பின் உருவத்தை வைத்து அதற்குப் பாலும் பழமும் படைப்பர். ஒன்பதாம் நாள் வேளன் எட்டுத் திசைகளுக்கும் உரிய தேவதைகளை வழிபடுவான். அந்தத்திக்குப் பாலகர் நடுவில் பிரமன் இடம்பெற்றிருப்பான். பத்தாம் நாள் நிகழ்ச்சிகள் கலகலப்பும் ஆரவாரமும் மிகுந்ததாக இருக்கும். அன்று மகாபாரதத்தைச் சுருங்கிய வடிவில் பாடுவர். வேளன்களுள் தலைவனாக இருப்பவன் தெய்வம் ஏறப் பெற்றவனாகப் பாண்டவர்கள் கௌரவர்களின் மாந்திரீகத்திலிருந்து எத்தகைய தீங்கிற்கும் உள்ளாகாதபடி தப்ப வேண்டுமென வேண்டிக் கொள்வான். இறுதி நாளன்று வீட்டின் சுற்றுச் சுவரை அடுத்த நான்கு மூலைகளிலும் உயிர்ப்பலி தருவர். முதல் நாளன்று எத்தகைய சிறப்புச் சடங்குகளும் நிகழ்த்தப்படுதல் இல்லை. எனினும் இடுவனபலி, கழிவலி, பட்டட்ட பலி, கிட்டங்குபலி, பட்டலபலி, சரகூடபலி, பித்தபலி, அழிபலி, திக்பலி, கும்புபலி ஆகிய பலிகளை இரண்டாம் நாள் தொடங்கி முறையே நாளொன்றுக்கு ஒவ்வொன்றாக நடத்தி வருவர். பலி சடங்கில் தேங்காய் உடைத்தலே முக்கியமான நிகழ்ச்சி. இதுவே சடங்கினை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதாகும். ஒருகாலத்தில் உயர் சாதி இந்துக்கள் இல்லங்களில் பரத வேளன்கள் பேயோட்டினர்கள் எனவும் இதே பணியினை நடுத்தர வர்க்கத்தினருக்கு வக வேளன்கள் செய்தனர் எனவும் தாழ்ந்த சாதியாருக்கு மன்ன வேளன்கள் செய்தனர் எனவும் கூறப்படுகிறது. இன்று இத்தகைய பாகுபாடுகள் எவையும் கடைப்பிடிக்கப் படுவதில்லை. பயிர்களின் விளைவு பயன்படாத சமயங்களிலும் பயன்படவேண்டி வேளன்களை அமர்த்திக் கொள்வர்.

இந்துக்கோயில்களிலிருந்து முப்பத்திரண்டு அடிதூரம் விலகி நின்று தெய்வங்களை வழிபடும் வேளன்கள் தங்கள் வீட்டு எல்லையின் உள்ளாகவே குரியலா எனப்படும் சிறிய தனி இடங்களில் சிவனை வைத்திருப்பர். இவர்கள் பிற தேவதைகளுக்குப் பதிலாக இந்தச் சிவனை வழிபடுதலையே விரும்புகின்றனர். இளநீர், பொரி, சர்க்கரை, வாழைப்பழம், ஆகியனவற்றை ஆவணிமாதம் உத்திராட நாளில் இத் தெய்வத்திற்குப் படைப்பர்.

வெலநாடி - Velanati (foreign)

காவுகள், பிற தெலுங்கு சாதியார், தெலுங்கு பிராமணர்கள் ஆகிய சாதியாருடைய உட்பிரிவின் பெயர்.

விளாங்காய்- Velanga (wood apple)

மூக தொரையரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

வெளிச்சப்பாடு - Velichapad

வெளிச்சப்பாடு எனப்படும் வருவது உரைப்போர் பற்றித் திரு பாவ்செட் கூறுவதாவது:* மலபாரில் கிராமப்புறங்களில் நான் இந்தச் சடங்கில் வெளிச்சப்பாடு தன் திறமையினை வெளிப்படுத்துவதனை நேரில் கண்டேன். அந்த நிகழ்ச்சி ஒரு நாயரின் இல்லத்தருகில் நடைபெறுவதனை நான் கண்டேன். அங்குச் சிறுவரும் சிறுமியரும் ஆண்களும் பெண்களுமாகப் பலரும் கூடியிருந்தனர். இச் சடங்கு ஒரு மணிரேம் வரை நீட்டிக்கும். அந்த இல்லத்திற்கு உரிய நாயர் ஆண்டுக்கு ஒரு முறை இந்த நிகழ்ச்சியினைத் தன் வீட்டில் நடத்துவதாகக் கூறினான். எனினும் இதன் தோற்றம் பற்றிய விவரம் எதனையும் அவனால் கூற இயலவில்லை. அவனுடைய முன்னோருள் தனக்குக் குறிப்பிட்ட ஒரு நன்மை நிகழ வேண்டுமென வேண்டுதலைச் செய்து கொண்டதன் காரணமாக அந்த நன்மை நிகழ்ந்த பின் தாங்கள் வேண்டிக் கொண்டபடி இதனைத் தங்கள் இல்லத்தில் ஆண்டுதோறும் நிகழ்த்தி வந்தவர்களாதல் வேண்டும். அதன் தொடர்ச்சியாகவே இன்றும் அந் நிகழ்ச்சி நடந்து வருவதாகலாம். வெளிச்சப்பாடுக்குக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதாலும் அன்று அண்டை அயலாருக்கு உணவளிக்க வேண்டியிருப்பதாலும் இதற்காக ஓரளவு பொருள் செலவளிக்க வேண்டியிருக்கும். சாப்பாடு மேசையினைப் போல எப்பொழுதும் துப்புரவாக இருக்கும் தீட்டு வாசலின் நடுவில் வெளிச்சப்படு மலபார் பக்கத்து விளக்கு ஒன்றினைத் திரியிட்டு ஏற்றி வைப்பான். ஒரு பித்தளைக் கலசம், சில பூக்கள், கர்ப்பூரம், மஞ்சள் ஆகிய சடங்குக்கு இன்றியமையாத பொருள்களும் அங்கு வைக்கப்படும். இச் சடங்கில் வழிபடப்படும் தெய்வம் பகவதியே. கலசத்திற்கு மலர்களிடுவது விளக்கினைச் சுழற்றி ஆரத்தி எடுப்பதுமே இச் சடங்கின்போது நிகழ்த்தப்படுவன. பின் வெளிச்சப்பாடு வேகமாக அடியெடுத்து வைக்கத் தொடங்குவான். பின் திடீரெனத் தன் நாந்தகம் எனப்படும் வாளினைக் கையில் எடுத்துக் கொண்டவனாக உரக்கக் கத்தியபடி ஒரு கப்பல் கரையினில் சுழன்று திரும்பியபடி வந்து மோதுவதைப் போல வாளைச் சுற்றி ஓடி வருவான். இப்பொழுது அவன் மீது ஏறிய தெய்வத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவனாக அவன் இருப்பான். அந்தத் தெய்வம் அவனுக்கு

---

* சென்னை அருங்காட்சியக மடல், III, 3, 1901.
(Madras Museum Bull.III, 3, 1901.)

அறிவுறுத்துவதற்கு ஏற்ப அவன் வாயிலிருந்து சொற்கள் வெளிவரும். அவன் என்ன சொன்னான் என்பது எனக்குப் புரியவில்லை. எனினும் அந்தச் சடங்கில் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினர். அவன் ஓடும்போது இடையிடையே அவன் தன் நெற்றியினை வாளால் அழுத்தி மேலும் கீழுமாக இழுத்து வெட்டிக் கொண்டான். அவன் முகம் முழுதும் குருதி வழிந்தது. பின் அவன் மேலும் மேலும் ஆவேசம் உற்றவனானான், விளக்கின்மேல் தலைதாழ்த்திக் கலசத்தை நோக்கிக் குனிந்தபடி உஸ் எனச் சத்தமிட்டபடி அவன் ஆட்டத்தை முடித்தவுடன் அவன் மீண்டும் தன்னுடைய பழைய நிலையினை அடைந்தவனாகச் சாதாரண மனிதனாகி என் ஒளிப்படக் கருவியின் முன் வந்து நின்றான். அவன் இவ்வாறு தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டதற்குக் கட்டணமாக ஒரு ரூபாயினையும் கொஞ்சம் அரிசியினையும் பெறுகின்றான். இவ்வாறு வெளிச்சப்பாடாக ஆடியவனை நான் மூன்று நாள்களுக்குப் பிறகு மீண்டும் காண நேர்ந்தது. அவன் வேறொரு இடத்தில் வெளிச்சப்பாடாக ஆடச் சென்று கொண்டிருந்தான். அவன் நெற்றியில் இருந்த காயங்கள் ஆறிவிட்டிருந்தன. கூர்ந்து நோக்குபவர்கள் வெளிச்சப்பாடு ஒருவனை உடனே அடையாளம் கண்டுகொள்வர். அவன் முன் தலையில் முக்கோண வடிவில் மயிர் வளராது இருக்கும் பகுதியினைப் பார்த்தும் அவ்விடத்தில் தோல்தடித்துப் போயிருப்பது கொண்டும் அவனை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

வெளியேபடின ராசு- **Veliveyabadina Razu**

இப்பெயர் சாதியிலிருந்து விலக்கப்பட்ட ராசுகளின் சந்ததியினர் எனப் பொருள்படும்.*

வெளியம் - **Veliyam**

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இது நாயர்களின் ஒரு பட்டப்பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது. சில அறிக்கைகளில் வெளியிட்டு என்பது புலிக்கப்பணிக்கன் என்ற நாயர்கள் பிரிவுக்கான மற்றுமொரு பெயராகத் தரப்பட்டுள்ளது.

வெள்ளைக்காரன் - **Vellaikkaran (white man)**

ஐரோப்பியர்களுக்கான தமிழ்ப்பெயர்.

---

* மறைத்திரு ஜெ.கெயின் - இந்தியத் தொல்லியல், VIII, 1879.
(Rev.J.CainInd-Ant., VIII, 1879.)

வேளாளர் - Vellala

வேளாளர் தமிழ்நாட்டு உழவர் சாதியினர். தமிழ் மாவட்டங்களில் இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர்களாக உள்ளனர். வேளாளன் என்ற சொல் வெள்ளாண்மை என்ற சொல்லிலிருந்து (வெள்ளம் ஆண்மை?) வந்ததாகப் பயிரிடுதலைக் குறிப்பதாகும் என்பர். முனைவர் ஒப்பர்ட்* வேளாளன் என்ற சொல் சொல்லாக்கவியன்படி பள்ளன், பள்ளி முதலிய சொற்களோடு தொடர்புடையதாக வள்ளர் அல்லது பள்ளரை ஆள்பவர் எனப்பொருள்படும் எனக்கருதுகின்றார். இவர்களுடைய தோற்றம் பற்றிய வரலாறு வருமாறு: பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த உலகில் வாழ்ந்து வந்த மக்கள் காட்டுமிராண்டிகளாய் உழவுத் தொழில் பற்றி ஏதும் அறியாதிருந்தபோது வறட்சி உலகில் மிகுந்தது. மக்கள் பூதேவியின் அருளை வேண்டி வழிபட்டனர். அவர்கள் மீது இரக்கம் கொண்ட அவள் தன் உடம்பிலிருந்தும் கலப்பையோடு கூட ஒருவனைத் தோற்றுவித்தாள். அவன் அவர்களுக்கு நிலத்தை உழுதுபயிரிட்டு எப்படிப் பிழைப்பு நடத்துவது என்பதனைக் கற்றுத்தந்தான். அவனுடைய சந்ததியில் வந்தவர்களே வேளாளர்.இவர்கள் வைசிய சாதியினைச் சேர்ந்தவர்களாக ஆக வேண்டும் என விரும்பினர். அப்போதிருந்து கோவைசியர், பூவைசியர், தனவைசியர் (இடையர், வேளாளர், வணிகர்) ஆக மூவரும் வைசியர் பிரிவில் சேர்க்கப்பட்டனர். எனவே இவர்களுள் சிலர் தொடர்ந்து பூணூல் அணிகின்றனர். பெரும்பாலோர் திருமணம், சாவுச் சடங்கு முதலிய நிகழ்ச்சிகளின் புனிதத் தன்மை நோக்கி அப்போது மட்டுமே அதனை அணிகின்றனர் எனத் திரு எச்.எஸ்டுவர்ட் கூறுகின்றார்.**

பரமகல் ஆவணங்களில்*** வேளாளர் தோற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ள வழக்கு வரலாறு வருமாறு: பன்னெடுங் காலத்திற்கு முன் பரமேசுவரனும் பார்வதி தேவியும் கைலாய மலையின் உச்சியில் வாழ்ந்து வரும் காலத்தில் அவர்கள்

---

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ், *1887.88*, பக் *134*, இதில் வேளாளர் என்ற பெயரின் சொல்லாக்கம் பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (Madras Journal of Literature and Science, 1887-88, P-134 where it etymology of the name Vellala is fully discussed.)

** *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு. (Madras Census Report 1891 and Manual of North Arcot district.)

*** பிரிவு-*3* நிலமக்கள், அரசு அச்சகம், சென்னை-*1907*. (Section III, Inhabitants, Govt. Press, Madras, 1907.)

தனிமையிடத்தில் மகிழ்ந்திருக்க விரும்பினர். எதிர்பாராத வகையில் இவர்கள் தனித்திருக்கும் இடத்திற்குக் தேவதச்சனாகிய விசுவகர்மன் வந்து சேர நேர்ந்தது. இதனால் சினமுற்ற அவர்கள் தாங்கள் தனித்திருக்கும் இடத்திற்கு வரும் துணிவுகொண்டவனான அவனுக்குப் பகைவனாக ஆக ஒருவனைப் பூலோகத்தில் படைக்கப் போவதாகவும் அவன் விசுவகர்மாவின் இந்தக் குற்றத்திற்குத் தண்டனை தருவான் எனவும் கூறினர். அவ்வாறு அவனுக்குப் பகைவனாகப் பிறக்க உள்ளவன் பூலோகத்தின் எந்த பகுதியில் பிறப்பான் என்பதைத் தெரிவித்தால் தான் அவனை ஒரே அடியில் அடித்து ஒழித்துவிடப் போவதாக விசுவகர்மா கேட்டுக் கொண்டான். அதற்குச் சிவனும் பார்வதியும் அவன் பூமியின் வயிற்றிடத்திலிருந்து கங்கைக் கரையில் தோன்றுவான் எனக் கூறினர். இதனைக் கேட்ட விசுவகர்மன் தன் வாளினை ஏந்தியவனாக வானத்தேரில் ஏறிக் கங்கை ஆற்றின் மேற்பரப்பில் பறந்து திரிந்தவனாகத் தனது பகைவனின் வருகையினை எதிர்பார்த்தவனாகக் காத்திருந்தான். ஒருநாள் விசுவகர்மாக தனக்கு அருகே பூமி பிளப்பதைக் கண்டான். அங்கே பூமியிலி ருந்து அரசர் தங்கள் தலையில் தரிக்கும் முடியினை ஒத்த ஒரு முடி வெளிப்படக் கண்டான், அதனைத் தன் பகைவனின் தலையெனத் தவறாகப் புரிந்துகொண்ட விசுவகர்மன் தன் வாளால் அதனை எறிய அக்கிரீடம் உருண்டு விழுந்தது. இதற்குப் பின்னர் அங்கு பூமியிலிருந்து பொன்னாலான கலப்பை ஒன்றினைக் கையில் ஏந்தியவனாகக் கழுத்தில் மாலையுடன் ஒருவன் வெளிப்பட்டான். சினமுற்றவனான விசுவகர்மன் அவனைப் பற்றியபோது பிரமன்,விட்டுணு, சிவன் ஆகியோரும் எட்டுத்திக்குப் பாலகர்களும் அங்கு நேரில் காட்சி தந்தவர்களாக விசுவகர்மனிடம் அவன் தன் பகைவனை ஒரே அடியில் அடித்து வீழ்த்திவிடப் போவதாகச் சூளுரைத்ததை நினைவூட்டி அவன் தன் சூளுரைப்படி நடந்துகொள்ள வேண்டும் எனக் கூறி மற்றும் ஒருமுறை அவ்வாறு தோன்றிய பகைவன் மீது கைவைப்பதேன் எனக் கேட்டதோடு முதல் அடியிலேயே அவனை வீழ்த்தாத காரணத்தால் விசுவகர்மன் அவனை விட்டுவிட வேண்டும் எனவும் கூறினர். தெய்வங்களின் இத் தலையீட்டால் விசுவகர்மன் அவனைப் பற்றியிருந்த பிடியினைத் தளர்த்தினான். அவனுக்கும் அவன் பகைவனுக்கும் இடையே பின்வரும் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துவைத்து அவர்களிடையே அமைதி ஏற்படுத்தினர், அதன்படி ஐந்து சாதியினரான தச்சர், தட்டார், கொல்லர், கல்கொத்துவோர், கன்னார் ஆகிய விசுவகர்மாவின் பிள்ளைகள் பூமியிலி ருந்து பிறந்த அவனுக்குக் கீழே பணிபுரிந்து வரவேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டது, அத் தெய்வங்கள் அவனுக்கு மற்ற பட்டங்களைத் தந்தன. பூமி பாலகுடு (பூமியினைக் காப்பவர்) என்ற பட்டப்பெயர் பூமாதேவியால்

பெற்றெடுக்கப்பட்டவன் என்ற காரணத்திற்காகத் தரப்பட்டது. கங்கைக் கரையில் தோன்றிய காரணத்தால் கங்கைகுலம் என்ற பட்டமும் தரப்பட்டது. கலப்பையினைக் கையில் ஏந்தியவனாகப் பிறந்த காரணத்தால் கலப்பையினைக் காப்பவன் என்ற பொருளில் மூர்தக பாலகுடு என்ற பட்டமும் வழங்கப் பெற்றான். இத்தகைய பட்டங்களுக்குரிய இவன் தன் கிரீடத்தை இழந்த காரணத்தால் என்றும் அரசனாதற்கு உரியவன் அல்லன் எனவும் அவனும் அவன் சந்ததியினரும் மேற்கூறிய மூன்று உரிமைகளுடனும் நிலத்தை உழுது வருவதோடுகூட இவர்களுடைய சந்ததியினரில் ஒருவனே அரசனுடைய முடிசூட்டுவிழாவில் அரசன் தலையில் முடிகவித்தற்குரியவன் எனவும் உடன்பாடு காணப்பட்டது. அதன்பின் அத் தெய்வங்கள் அவனுக்கு யக்னோபவிதம் எனப்படும் பூணூல் அணிவித்ததோடு இந்திரன், குபேரன் ஆகிய தெய்வங்களின் பெண்களையும் அவன் தன் குலத்தைத் தழைக்கச் செய்ய வேண்டி மணம் செய்து கொடுத்தனர். இச் சமயத்தில் சிவன் வெள்ளைக் காளை மீதும், எமன் வெள்ளை எருமை மீதும், ஏறியவர்களாக வந்து அவனுக்கு அந்த வாகனங்களை நிலத்தை உழுவதற்குத் தந்து உதவினர். அப்போதிருந்து இச் சாதி வேளாளவாரு எனப்படுகிறது. வெள்ளை எருதுகொண்டு உழுவோர் என்பது இதன்பொருள். அவனுடைய திருமணத்திறகுப் பின் சாந்தி முகூர்த்தம் முடிந்தபின் தெய்வங்கள் தங்கள் இடத்திற்குத் திரும்பின. இந்திரனுடைய மகள் வழியாக மூர்தக பாலகுலன் ஐம்பத்தி நான்கு மகன்களைப் பெற்றெடுத்தான். குபேரனுடைய மகள் வழியாக ஐம்பத்திரண்டு மகன்களையும் பெற்றான். அவன் இவர்களுக்குக் குபேரன் மகனான நளகுபருடுவின் நூற்றியாறு பெண்களையும் மணம் செய்து வைத்தான். நளகு பருடுவின் மருமகன்கள் அவனோடு பின்வரும் உடன்பாட்டினைச் செய்துகொண்டனர். தங்களுள் முப்பத்தைந்து பேர் பூமிபாலகரு என அழைக்கப்பட்டுப் பொருள்களைக் கொண்டு பாய் விற்பதில் ஈடுபட வேண்டும் எனவும், முப்பந்தைந்து பேர் கூவு செட்டிலு என அழைக்கப்பட்டுக் கால்நடைகளை வளர்ப்பதிலும் மேய்ப்பதிலும் ஈடுபட வேண்டும் எனவும் உடன்பாடு கண்டனர். எஞ்சிய ஒருவனுக்கு மேற்கண்ட மூன்று பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றில் அவன் விருப்பம்போல் சேர்ந்துகொள்ளலாம் என்ற வாய்ப்பு தரப்பட்டது. ஆனால் அவன் அந்த மூன்று பிரிவுகளுள் எதனோடும் சேர்ந்துகொள்ளாது தனித்தே இருந்தான். இதனால் அவன் தனித்து வேறாகச் சென்றவன் என்ற பொருள்பட அகமுர்தி என அழைக்கப்பட்டான். அகமுர்திக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு குழந்தைகள் பிறக்கவே அவர்கள் தனிச் சாதியினர் ஆயினர். இச் சாதியினர் அகமுர்தி வேளாளவாரு என அழைக்கப்பட்டனர். இவனுடைய மற்ற உடன்பிறந்தவர்களுக்குப்

பன்னிரண்டாயிரம் குழந்தைகள் பிறக்க அவர்கள் தங்களுக்குள் மணஉறவு கொண்டவர்களாக வேறு வேறு தொழிலை மேற்கொள்ளும் ஒரே சாதியினர் ஆயினர். விஜயநகரத்திலிருந்து கிருட்ணாராயர் ஆட்சி செய்யும்போது உம்பி அல்லது அமுதான் முதலியார் எனப்படுபவன் முதலமைச்சராக அமர்த்தப்பட்டான். கோல்லவாரு சாதியினை (இடையர்) சேர்ந்த வேயைட்டேர்த்த பள்ளி என்பவன் அவன் சம்பந்தியாக (செயலர்) இருந்தான், அச் சமயத்தில் பாகவத சேவர் எனப்படும் கூத்தாடிகள் அந்த நகரத்திற்கு வந்து அரசரின் முன்னிலையிலும் அரசவையோர் முன்னிலையிலும் கூத்து நடத்தினர். கூத்தினிடையே ஒரு நடிகன் இடைச்சியினைப் போல வேடந்தரித்து மேடையில் தோன்றி இடைச்சாதியினரைப் போலப் பேசி நடித்து அரசனுக்கு அவையோருக்கும் மிக்க நகைப்பினை ஊட்டினான். முதன் மந்திரியார் இதனால் மிக மகிழ்ச்சி அடைந்ததைக் கண்ட அவருடைய செயலர் முதலமைச்சரைப் பழிக்குப் பழி வாங்க அவருடைய சாதியான வேளாளர் சாதியினரைக் கேலி செய்து அடுத்து நடத்தப்படும் ஒரு நாடகத்தில் வேளாளர் சாதிப் பெண்ணைப் போல ஒருவனை வேடந்தாங்கி நடிக்கச் செய்யத் திட்டமிட்டான். இந்தச் சதித் திட்டம் முதலமைச்சரின் செவிக்கு எட்டியது. மிகக் கர்வம் கொண்டவனான அவன் இதனால் மிகக் கவலையுற்று எப்படியேனும் இந்தக் கேலிக் கூத்து நடைபெறாது தடுக்க வேண்டும் என முடிவுசெய்தான். இதற்கு உதவத் தன் சாதியார் யாரும் உடன் இல்லாததாலும் இதனை எப்படி நிறுத்துவது எனப் புரியாததாலும் பல்லக்கில் ஏறி வலங்கைப்பிரிவின் சாதித் தலைவனான சனார்த்த செட்டியிடம் சென்று நிலைமையினை எடுத்துக் கூறித் தனக்கு உதவும்படி வேண்டினான். அதற்கு அந்தச் செட்டி முன்பு இடங்கைப் பிரிவினர் அரசிடம் செல்வாக்கு உடையவர்களாக வலங்கைப் பிரிவினர் உழவுத்தொழில் மற்றும் வணிகத் தொழில் செய்தல் கூடாது என அரசாணை பிறப்பிக்கச் செய்துள்ளனர். எனவே எங்களுக்குள் மீண்டும் சச்சரவு நிகழும்போது நீங்கள் வேளாள சாதியினை நிலத்தை உழுதும் பயிரிடுவதிலிருந்தும் தடுத்து அரசிடம் எங்களுக்கு உழுவதற்கான உரிமையினைப் பெற்றுத் தருவதாக உறுதி கூறினால் நான் உங்களுக்கு உதவ வருவேன். வர உள்ள இந்த இழிவினின்றும் உங்களைப் காப்பாற்றுகின்றேன் எனப் பதிலுரைத்தான். இந்த ஏற்பாட்டிற்கு முதலமைச்சர் உடன்பட்டவராகத் தன் இல்லம் திரும்பினார், அன்றிரவு கூத்தாடிகள் அரசர் முன் கூத்தாடி வருகையில் அவர்களுள் வேளாளச்சாதிப் பெண்ணாக வேடமிட்டு நடிக்க உள்ளவனை சனார்த்த செட்டி தலையினை வெட்டிக் கொன்று முதலமைச்சரை இழிவினின்றும் காத்தான். கூத்தாடிகளுள் ஒருவன் கொலையுண்ட செய்தி அரசருக்குத் தெரிவிக்கப்படவே அரசர் அக் கொலை பற்றி விசாரித்து உண்மையறிந்து முதலமைச்சரையும்

அவருடைய செயலரையும் தங்கள் நடத்தையில் மேலும் கருத்துடையவர்களாக நடந்து கொள்ளும்படி கூறியதோடு தங்களுக்குள்ளான பகைமையினை இவ்வளவு பெரிதுபடுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். அப்போதிருந்த வேளாளர் இடங்கைப் பிரிவினருக்கெதிரான வலங்கைப் பிரிவினர் போராட்டத்தில் வலங்கைப் பிரிவினரையே ஆதரித்து வருகின்றனர். *(பார்க்க: கம்மாளர்)*

1871 கணக்கெடுப்பின்போது சில வேளாளர்கள் சென்னை மாநகர ஆணையர் கணக்கெடுப்பின் வகைப்பாட்டில் இந்துக்களின் நான்கு வருணமான பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவைகளுள் தங்களைச் சூத்திரன் என்ற பிரிவில் வகைப்படுத்தி இழிவுக்கு உள்ளாகும்படி செய்து அநீதி இழைத்துவிட்டதாக முறையிட்டுக் கொண்டனர். அவர்கள் கொடுத்த முறையீட்டில் முதலில் வேளாளர் வைசியருக்குரிய பிரிவின் கீழ் வருவதற்கு உரியவராக எப்படி ஆகின்றனர் என்பதனைத் தெளிவுபடுத்தியபின், அடுத்து வேளாளர் ஏன் சுத்திரர் என்ற பிரிவில் வகைப்படுத்துவற்கு உரியவரல்லர் என்பதனைத் தெளிவுப்படுத்தப் போவதாகக் கூறிச் சாதி தொடர்பான பாகுபாட்டில் மேற்கொள்வதற்கு உரிய நெறிகளை வகுத்து வைத்தவரான மனு தன்னுடைய நூலில் *90*ஆவது சூத்ரித்தில் வைசியரைப் பற்றிய விளக்கத்தைச் சொல்லும்போது கால்நடைகளை வளர்த்தல், வேள்விக்கான கொடைகள் தருதல், புனித நூல்களைப் படித்தல், வணிகம் செய்தல், வட்டிக்குப் பணம் தருதல், நிலத்தில் பயிரிடுதல் ஆகியன வணிகருக்கு உரியன என அனுமதிக்கப்பட்டவை எனக் கூறியுள்ளார் என எடுத்துக்காட்டியுள்ளனர். அந்த முறையீட்டில் வேளாளர் மீண்டும் கூறியுள்ளதாவது. உழுதலையும் வணிகத்தையும் தொழிலாக மேற்கொண்டுள்ள வேளாளரை மற்ற சாதியாருக்கும் குற்றேவல் பணிபுரிவோராகக் கருதுதல் கற்பனைக் கூடச் செய்து பார்க்க இயலாதது. மற்றவருக்குத் தொண்டு செய்தல் என்பது முழு உரிமையினை அனுபவிப்பவர்களான வேளாளருக்கு வெறுப்பு ஊட்டுவதாகும். வேளாளர் தங்கள் உரிமையினைப் பாதுகாத்துக் கொள்ள அரசனையே நம்பியுள்ளனர். எனவே அவர்கள் தொண்டு செய்யும் அடிமைகளான சூத்திரராதல் இயலாது. இத்துடன் வேளாளர் உயர்ந்த மதிப்பிற்குரிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பின்வருவதனால் தெளிவாகும். பழங்காலத்தில் மன்னர்கள் தங்கள் வாழ்நாளில் துலாபாரம் என்ற சடங்கில் தங்களை நிறுத்துத் தங்கள் எடைக்குச் சமமான வெள்ளி அல்லது தங்கத்தை தானமாக வழங்கி வந்தனர். தஞ்சாவூரைச் சேர்ந்த அரசர்கள் இச் சடங்கினை மேற்கொள்ளும்போது அவர்களைத் தராசில் வைத்து நிறுக்கும் உரிமை வேளாளன் செட்டிகளின் உரிமையாகும். இது வேளாளர் நிறுத்தல் அளவு முதலிய அளவுகளின் எடை பற்றிய பொறுப்பினை

ஏற்றிருந்தனர் என்பதற்குச் சான்றாகும். மதுரையைச் சேர்ந்த உறலாசய புராணத்தில் சோமசுந்தரப் பாண்டியன் என்ற மன்னன் சிவனுடைய அவதாரமாகக் கருதப்பட்டவன் எனவும், அவனுக்கு முடிசூட்ட வேண்டிய சமயத்தில் அப்பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத்தகுதி வாய்ந்தவன் யாரென்ற நீண்ட விவாதித்தபிறகு சமூகத்தின் தூணாக விளங்குகின்றாவனான வேளாளன் (மனு பிரகிருதியின் தொடையாக விளங்குபவன் வைசியன் எனக் கூறியிருப்பது நாட்டுக்குப் பலமாக விளங்குபவன் வைசியன் என்பதன் உருவகமாகக் கொள்ளக் கிடக்கின்றது). ஒருவனே இச்சடங்கினை நிகழ்த்த அமர்த்தப்பட்டான் எனவும் கூறப்பட்டுள்ளது. *1000* ஆண்டுகளக்கு முற்பட்ட கம்பருடைய இராமாயணத்தில் வசிட்டர் முடியினை எடுத்துத் தர வேளாளன் ஒருவனே இராமன் தலையில் முடிகவித்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆயிரத்தெண்ணுறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் என்ற நூலில் திரு வி. கனகசபை பின்வருமாறு எழுதுகின்றார். கலப்பினத்தவரல்லாத தமிழரிடையே அறிவர் எனப்படும் வகுப்பாரே மிகவும் மதிக்கப்பட்டனர். அறிவருக்கு அடுத்தபடி தகுதியில் உயர்ந்தோராயிருந்தவர்கள் உழுவர். அறிவர் துறவிகள், சமூகத்தில் வாழ்பவர்களுள் மிக உயர்ந்த தகுதியில் இருந்தவர்கள் உழவர்களே. இவர்களே நாட்டின் பெருமக்களாகத் கருதப்படும் நிலக்கிழார்களாக இருந்து வந்தனர். வெள்ளத்தை ஆள்பவர் என்ற பொருளில் வேளாளர் எனவும், மேகத்தை ஆள்பவர் என்ற பொருளில் காராளர் எனவும் இவர்கள் அழைக்கப்பட்டனர். இப்பட்டங்கள் வெள்ளத்தைத் தடுத்துத் தேக்கிப் பயன்ப படுத்துவதில் இவர்களுக்கு உள்ள திறமையினைத் தெளிவுபடுத்துவதாகும், சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் தமிழகத்தைச் சேர்ந்த பெரும்பாலான குறுநில மன்னர்களும் வேளாளர் வகுப்பினைச் சேர்ந்தவர்களே. ஓரளவே நிலம் படைத்த ஏழை உழவர் குடும்பங்கள் பெருநிலக்கிழார்களினும் செல்வ வளம் குறைந்தவர்கள் என்ற நிலையினைப் புலப்படுத்தும் வகையில் வீழ்குடி உழவர் எனப்பட்டனர். கரிகாலன் அருவாளரைப் போரில் தோல்வியுறச் செய்தபின் அவர்கள் நாட்டைத் தன் அரசுடன் இணைத்துக் கொண்டு தான் வென்ற நிலத்தை வேளாளரான பெருநிலக்கிழார்களிடையே வழங்கினான்.* இவ்வாறு நிலம் பெற்றவர்களின் சந்ததியினர் சிலர் இன்றும் அந்த நிலத்தின் உரிமையாளர்களாக இருந்து வருகின்றனர்.** வடுகம் எனப்படும் தெலுங்கு நாட்டினை வெற்றிகொண்ட வேளாளர் வெலமர் எனப்பட்டனர். இன்று

* தொண்டை - நன்தலப் - பதியம் (Thondai-nandalap-Paddiyam.)

** செங்கல்பட்டைச் சேர்ந்த செய்யூர், சுண்ணாம்பேட்டை முதலிய ஊர்களின் சமீன்தார்கள்.

தெலுங்கு நாட்டினைச் சேர்ந்த பெரிய சமீன்தார்கள் பலரும் வெலமரே. கன்னட நாட்டில் வேளாளர், பெல்லாளர் அரச மரபினைத் தோற்றவித்தனர். இம் மரபினர் பல நூற்றாண்டுகள் அந்த நாட்டை ஆண்டு வந்தனர். வேளாளர் சங்க குலத்தவர் அல்லது கங்கை வம்சத்தவர் எனவும் அழைக்கப்பட்டனர். பிளைனியும் தாலமியும் குறிப்பிடும் கங்கைச் சமவெளியினைச் சேர்ந்த காங்விதர் என்ற வலிமை வாய்ந்த வகுப்பாரின் வழிவந்தவர்கள் என்பதாலேயே இவர்கள் கங்க குலத்தவர் என அழைக்கப்படுகின்றனர். வேளாளர்கள் பெரும் எண்ணிக்கையினராக வாழும் மைசூர் மாநிலத்தின் ஒருபகுதி கிபி பத்து பதினொன்றாம் நூற்றாண்டுகளில் கங்கவாடி என அழைக்கப்பட்டது. இதே குலத்தைச் சேர்ந்தவர்களான வேளாளரே பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் ஒரிசாவை ஆண்டவர்கள். இவர்கள் கங்கவம்சத்தார் எனப்பட்டனர். . . . . . . தொல்காப்பியன் என்ற பிராமணனால் கி.மு. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தொன்மையான தமிழிலக்கண நூலில் அறிவர் எனப்படும் முனிவர் பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. எனினும் சமூகத்தைச் சேர்ந்த பல வகுப்பாரையும் பற்றி விளக்கும் இயலில் இவர் அறிவுரைப் பற்றி சொல்லாது விட்டுவிட்டதோடு பூணூல் அணிந்தவர்களான பிராமணர்களையே சாதிகளுள் முதல் நிலையினராகக் கூறியுள்ளார். அரசர்களைப் பற்றிச் சொல்லும்போது வீரமரபினர் எனக் கூறாது அரச குலத்தவர் எனக் கூறுகின்றார், சேர சோழ பாண்டியரான மூவரும் ஒரே குலத்தவர் என்று கொள்ளும்படியாக உள்ளது இது. வணிகத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்வோர் மூன்றாம் பிரிவினர். அரசரும் வணிகரும் பூணூல் அணிந்தவர்கள் என அவர் கூறவில்லை. அடுத்து வேளாளரைப் பற்றிக் கூறும்போது இவர்களுக்கு நிலத்தை உழுவதைத் தவிர வேறு தொழில் இல்லை எனக் கூறகின்றார். இந்த இடத்தில் அவர் வேளாளரை சூத்திரர் எனக் கூறவில்லை. எனினும் சாதாரண வேளாளர் சூத்திரர் எனவும் அரசர்களான வேளாளர் சத்திரியர் எனவும் கொள்ளப் போதுமான குறிப்புகளைத் தந்துள்ளார். தமிழர்களைத் தங்கள் சாதி அமைப்பின் கீழ்க்கொண்டு வரப் பிராமணர்கள் செய்த முதல் முயற்சி இது எனலாம். தமிழ்நாட்டில் சத்திரியர் வைசியர், சூத்திரர் என்ற சாதிப்பிரிவுகள் இல்லாத காரணத்தால் இவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இன்றுங்கூட வேளாளர் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்ளும் படையாச்சிகள் இல்லத்தில் உணவுகொள்வதில்லை. தங்களை வைசியர் எனக் கூறிக் கொள்ளும் வணிகர் இல்லங்களிலும் இவர்கள் உணவு கொள்வதில்லை. வேளாளர் தோற்றம் பற்றித் திரு ஜெ, எச். நெல்சன்*

* மதுரை மாவட்டக் கையேடு. (Manual of the Madura district.)

பின்வருமாறு ஒருவாறு கணித்துக் கூறுகின்றார்: வழக்கு வரலாறுகள் அனைத்தும் இவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களின் சந்ததியினர் எனவும் பாண்டியரால் அழைத்து வரப்பட்டவரெனவும் ஒரு முகமாகக் கூறுகின்றன. இந்த வழக்கு வரலாறுகளில் கூறப்பட்டிருப்பது உண்மையாகலாம் என்றே கருதவேண்டியுள்ளது. மிக நெடுங்காலத்திற்கு முன் பெருமளவில் வேளாளர் வந்து குடியேறியவர்களாதல் வேண்டும். இது தொண்டை மண்டலத்தை ஆதொண்டச் சக்ரவர்த்தி அடிப்படுத்திய யகாலத்திற்குச் சற்று முன்போ பின்போ நிகழ்ந்ததாதல் வேண்டும். வேளாளர் தனித் தமிழ் மட்டுமே பேசுகின்றனரேயன்றி வேறு மொழிகளைப் பேசுவதில்லை. இவர்களுடைய பழக்க வழக்கங்களுள் குறிப்பிடத்தக்கபடி விசித்திரமான தமிழருக்கு உரியதல்லாதனவான எதனையும் நான் காணவில்லை . . . . . பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்வதான பாண்டியர் வேளாளர் என்ற கோட்பாட்டோடு வழக்கு வரலாற்றின் அடிப்படையிலான அரசமரபினரான பாண்டியர் குடியினர் சத்திரியர் என்பதனோடு முரண்பட்டதாக உள்ளது. இவர்கள் தங்கள் சாதியிலிருந்து மனைவியராகப் பெண்களை மணந்துகொள்வதோடு கூடத் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த பெண்களையும் மணக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்குத் தாழ்ந்த சாதியினைச் சேரந்த மனைவியரிடத்தும் முறையாக மணந்து கொள்ளப்படாத மனைவியரிடத்தும் பிறந்தவர்கள் வேளாளராகவே கருதப்பட்டனர். கூன்பாண்டியன் எனப்படும் சுந்தரபாண்டியன் இறந்தபின் போலியானதொரு பாண்டியர் குலம் தோன்றியது. பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்த சிறந்த படைத்தலைவனான அரியநாயக முதலியினை அவனுடைய குடும்பப் புரோகிதர்கள் வேளாளர் சாதியினைச் சேர்ந்தவர்கள் அரசராகும் வழக்கம் இல்லை எனக் கூறி அரசராகாது தடுத்துவிட்டனர். அக்காலத்திய நிகழ்ச்சிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்க்கையில் அரிசயநாயக முதலி அரசராக முடிபுனையாது போனதற்காகக் கூறப்பட்ட காரணத்தை ஏற்றுக் கொள்ளாமல் விட்டுவிட வேறு தகுந்த காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பண்டைய பழக்க வழக்கங்களில் ஆழ்ந்த பயிற்சியுடையவர்களால் தெளிவுபடுத்தப்பட வேண்டிய இதுபற்றி வருங்காலத்தவர்கள் முடிவு எடுக்க வேண்டும்.

1871 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வேளாளரைப் பற்றிப் பின்வருமாறு விளக்கம் தரப்பட்டுள்ளது: "அமைதியினை விரும்புகின்ற வேளாளர் ஒல்லியான உடல்வாகும் சுறுசுறுப்பான இயல்பும் கொண்டவர்கள். நெல், வெற்றிலை, புகையிலை ஆகியனவற்றைப் பயிரிடுவதில் இவர்களுக்கு இணையானவர்கள் உலகில் வேறெங்கும் இல்லை எனறே கூறலாம். இவர்கள்

ஒருபோதும் தாழ்வினைத் தருவதான தொழில்களை மேற்கொள்வதில்லை. இவர்களுள் சிலர் நல்ல கல்வியறிவு பெற்றவர்களாக அரசு அலுவலகங்களில் எழுத்தராகப் பணியாற்றுகின்றனர். சிலர் வணிகர்களாகவும், கடை வைத்து வணிகம் செய்வோராகவும் உள்ளனர். எனினும் இவர்களுள் பெரும்பாலோர் மண்ணை நம்பி வாழும் பயிரிடுவோராகவே உள்ளனர்." மதுரை மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "வேளாளருள் பெரும்பாலோர் நிலத்தை உழுதலையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். இந்தியருடைய எண்ணப்படி இதுவே ஒருவன் வாழ்க்கை நடத்த மேற்கொள்வதற்குரிய சிறந்த தொழில். எனினும் கூடிய மட்டும் இவர்கள் கலப்பையினைத் தொட்டு உழுவதில்லை. கூலியாட்களை வைத்தும் படியாள்களைக் கொண்டுமே இவர்கள் அனைத்துப் பணிகளையும் முடித்துக் கொள்கின்றனர். நாராயண சதகத்தில் வேளாளர் கடமைகளும் சமூகத்தில் இவர்கள் பெற்றுள்ள தகுதியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில டெய்லரின் கீழ்த்திசைச் சுவடிகளின் மொழிபெயர்ப்பில் பின்வருமாறு மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளன. வேளாளன் தான் உழு தொழில் செய்வதன் வழி பிராமணர்களின் வழிபாட்டிற்கும் அரசர்களின் வலிமைக்கும் வணிகர்களின் ஊதியத்திற்கும் மற்றும் அனைவருடைய நல்வாழ்விற்கும் காரணமானவனாகின்றான். அறச் செயல்கள், கொடை, இல்லற இன்பம், குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, சாத்திரங்கள், வேதங்கள், புராணங்கள் முதலிய நூல்கள் உண்மை, புகழ், பெருமை, கடவுட் கோட்பாடு, நன்முயற்சி, சாதிகளிடையேயான கட்டுப்பாடு, செயல்திறன் ஆகிய இவை அனைத்தும் உழவர் ஏர்முனையின் சிறப்பாலேயே சிறப்புறுகின்றன. பயிரிடுவோராகவும், உழவராகவும், தோட்டம் போடுவோராராகவும் தொழில் புரியாத வேளாளர்கள் மதிப்பு மிக்க பிற தொழில்களில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். இவர்களுள் எவரும் ஒருபோதும் தாழ்ந்த தொழிலை மேற்கொள்வதில்லை. இவர்களுள் சிலர் வணிகர்களாகவும் சிலர் கடைக்காரர்களாகவும் சிலர் அரசு ஊழியர்களாகவும் சிலர் படைவீரர்களாகவும் சிலர் குடும்பங்களில் பணியாளர்களாகவும் சிலர் எழுத்தர்களாகவும் பல்வேறு பணிகளை மேற்கொண்டவர்களாக உள்ளனர். தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: "வேளாளருள் பலர் அரசுப் பணியாளர்களாக உள்ளனர். கிராமக் கணக்கர்களாகப் பலர் பணிபுரிகின்றனர். கணக்கர் பணியில் இவர்களைப் போலத் திறமை மிக்கவர்களைப் பார்த்தல் அரிது. கடந்த காலத்தில் பனையோலையில் இரும்பு எழுத்தாணி கொண்டு கணக்கெழுதி வைக்கும் இவர்கள் கேட்கப்படும் விவரங்களை ஏராளமான பனையோலைச் சுவடிகளிலிருந்து

விளக்கு வெளிச்சத்திலேயே தேடி எடுத்துத் தரும் குறிப்பிடத்தக்க திறன் வாய்ந்தவர்களாக இருந்துள்ளனர். தாசில்தாருடைய பல்லக்கின் பக்கமாக ஓடியபடி அவர் சொல்வதைக் கேட்டு ஓலையில் எழுதிக் கொள்வதோடுகூடக் கணக்குகளையும் எத்தகைய பிழையும் இன்றி மிகத் துல்லியமாகச் செய்யும் திறன் பெற்றிருந்தனர். சமயநெறிகளைக் கடைப்பிடிப்பதில் பொதுவாகப் பிராமணர்களைவிட இவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்கின்றார்கள் எனலாம். போதை தரும் மதுவகைகளைக் குடிக்கும் பழக்கமும் இறைச்சி உண்ணும் பழக்கமும் இவர்களிடையே இல்லை. "கோயமுத்தூர் மாவட்டக் கையேட்டில் வேளாளர்களைப் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது வருமாறு: "உண்மையில் மாவட்டத்தின் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் இவர்களே. செட்டான வாழ்க்கையாலும் விடா முயற்சியாலும் இவர்களே செல்வத்தைப் பெருக்கி ஆட்சியாளர்களுக்கு உதவுவதோடு நாட்டுக்கும் மாவட்டத்திற்கும் போதுமான பொருள் வருவாயினை ஈட்டித் தருகின்றனர். வேளாளர் கைப்பிடிக்கும் மேழியே அரசன் தாங்கும் செங்கோல் என இவர்களிடையே வழங்கும் பழமொழியினை உண்மையில் மெய்ப்பிக்கின்றனர். இவர்களுள் பலரும் தங்களைக் கவுண்டன் என அழைத்துக் கொள்கின்றனர்." சேலம் மாவட்டக் கையேட்டில் வேளாளர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: மிகச் செட்டாக வாழ்க்கை நடத்தும் இவர்களுடைய இல்லத்தரசிகள் எத்தகைய நாகரிகப் பொருள்களிலும் நாட்டம் செலுத்துவதில்லை. வேளாளச்சி ஆண்டு முழுக்க ஒரே நீலச் சேலையினை விருப்பத்தோடு உடுத்தி வருகின்றாள். அவளுடைய குடும்பப் பொருளாதார நிலைமை அவள் அதற்கு மேல் ஆசைபட இடம் அளிப்பதில்லை. மழையில் அவள் நனைய நேரிடின் அவள் சேலை உடம்பிலிருந்தபடியேதான் உலரவேண்டும். அதனைத் துவைக்க நேரிடும்போது ஒரு பாதியினை உடலில் சுற்றியபடி மறுபாதியினை ஊர்ப்பக்கத்தே உள்ள குளம் குட்டைகளின் கரையில் கிடக்கும் கல்லில் அடித்துத் துவைப்பாள். பின்னர் எஞ்சிய மறுபாதி இதுபோலத் துவைத்தலுக்கு உள்ளாகும். அந்த ஆண்டில் எந்தப் புஞ்சை தானியத்தைப் பயிரிடுகின்றார்களோ அதுவே அவர்கள் அன்றாட எளிய உணவாகின்றது. ஊரில் நடக்கும் திருவிழாவின்போது கூட அவன் விருந்துக்கெனப் பெருந்தொகையினைச் செலவிடமாட்டான். வருவாய்த்துறையினர் தன் நிலத்தில் விளைவது அனைத்தையும் பறித்துக் கொள்ளமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படின் தன் கையில் உள்ள காசு முழுவதையும் தன் நிலத்தை வளப்படுத்துவதற்கே அவன் முதலீடு செய்வான். இல்லையேல் சேமிப்பினை எங்கேனும் புதைத்துவைப்பான். அமாவாசை போன்ற நாள்களில் அவன் அரிசிச் சோறு உண்ணக் காணலாம். நோன்பு, திருவிழா முதலியவற்றின்போது சிறிது

ஆட்டிறைச்சியினைச் சமைப்பர். எனினும் இத்தகைய ஆடம்பரச் செலவுகளை மிக அரிதாகவே மேற்கொள்வர். "வேளாளரைப் பற்றி இந்தியர் ஒருவர்* தன் நூலில் தொகுத்துக் கூறியிருப்பது வருமாறு: "பயிர்த்தொழில் கூலி முதல் சிறு சமீன்தார் வரையான எல்லாச் சமூகப் படிநிலைகளிலும் இவர்கள் இருக்கக் காணலாம். சிலர் காபித்தோட்ட உரிமையாளர்களாக இருக்கச் சிலர் அங்குக் காபிக்கொட்டை பறிக்கும் கூலிகளாக உள்ளனர். சிலர் மாவட்ட உதவி ஆட்சியராக இருக்கச் சிலர் அவர்களுடைய அலுவலகத்தில் ஏவலர்களாக உள்ளனர்." *1871* கணக்கெடுப்பு அறிக்கையில் வேளாளர் சாதியினைச் சேர்ந்த ஒருவன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. தேர்வில் வெற்றி பெற்றுள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. சென்னையில் நான் நேரில் பேட்டி கண்ட வேளாளர் மேற்கொண்டுள்ள தொழில்கள் வருமாறு:

வண்டி ஓட்டுதல்	பயிரிடுதல்
செங்கல் சுவர் வைத்தல்	தோட்டம் போடுதல்
கூலி வேலை	அச்சு கோத்தல்
மெருகு பூசுதல்	புகை வண்டியில் உலை எரித்தல்
வண்ணம் பூசுதல்	ஏவல் பணி
காவலர்	மாணவன்

வேளாளர் பற்றிய சிறப்பானதொரு கட்டுரையில் திரு டபிள்யூ. பிரான்சிஸ் பின்வருமாறு எழுதியுள்ளார். பொதுவான உடன்பாட்டின் அடிப்படையில் தமிழ்ச் சூத்திர சாதியாருள் இவர்களுக்கு முதன்மையான இடம் தரப்பட்டுள்ளது. இருபத்திரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடையவராக மாநிலம் முழுவதிலும் பரவியுள்ள ஒரு சாதியாரின் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறுவது தேவையற்ற ஒன்றாகும். எனினும் இச் சாதியின் உள்ளமைப்பு, இதற்கென்றே உரியதான உட்பிரிவுகள், பிற சாதியார் வந்து சேருவதால் இச் சாதியினரின் எண்ணிக்கை மிகுதல் போன்ற சென்னை மாநிலத்தைச் சேர்ந்த சாதிகளுக்கே உரிய தனித்த இயல்புகள் ஆகியன பற்றி ஓரளவு சுருக்கமாக எடுத்துக் கூறுவது பயன்தருவதாகும் எனக் கருதுகின்றேன்.

---

* தென்னிந்தியா பற்றிய சொற்சித்திரங்கள் மற்றும் சித்திரங்கள்.
(A Native's Pen and Ink Sketches of South India.)

இச் சாதியினர் நான்கு பெரும்பிரிவினராக பிரிவுபட்டுள்ளனர் என்பதனை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். இப் பிரிவுகள் இப்பிரிவினரின் மூதாதையர் முதலில் வாழ்ந்த நாட்டுப் பகுதிகளின் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன. அவை வருமாறு:

1. **தொண்டை மண்டலம்:** இன்றைய செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களை உள்ளிட்ட பல்லவ நாட்டில் தங்கி வாழ்ந்தவர்கள். இப் பிரிவினர் முதலி, ரெட்டி, நயினார் என்ற பட்டப் பெயர்களுள் ஒன்றினைத் தரிப்பர்.

2. **சோழியர்:** இன்றைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களை உள்ளிட்ட சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள். இப் பிரிவினர் பிள்ளை என்ற பட்டப் பெயரினைத் தரிப்பர்.

3. **பாண்டியர்:** இன்றைய மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களை உள்ளிட்ட பாண்டிய நாட்டினை வாழ்விடமாகக் கொண்டிருந்தவர்கள். இவர்களும் பிள்ளை என்ற பட்டப் பெயரினையே தரிக்கின்றனர்.

4. **கொங்கர்:** இன்றைய கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களை உள்ளிட்ட கொங்கு நாட்டினை வாழ்விடமாகக் கொண்டவர்கள். இவர்கள் கவுண்டன் என்ற பட்டப்பெயரைத் தரிப்பர்.

தங்களுடைய பொதுவான பழக்க வழக்கங்களுள் இந்த நான்கு பிரிவினரும் ஒற்றுமையுடையவர்களாக உள்ளனர். வயது வந்த பின் மணம் செய்வித்தல் அல்லது குழந்தை பருவத்திலேயே மணம் செய்வித்தல் ஆகிய இருவகை வழக்குகளும் இவர்களிடையேயுள்ளன. கொங்கு வேளாளரைத் தவிர மற்ற மூன்று பிரிவினரும் பிராமணன் புரோகிதனாக இருக்கும் புராண நெறிப்பட்ட மணமுறையினையே மேற்கொள்கின்றனர். இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் பதினைந்து நாட்கள் தீட்டினை மேற்கொள்கின்றனர். பதினாறாம் நாள் தீட்டு நீக்கும் கருமாந்திரச் சடங்கினை நிகழ்த்துகின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் வைணவம், சைவம் ஆகிய இருநெறிகளையும் பின்பற்றுபவர்கள் உள்ளனர். எனினும் பிராமணர்களிடையே இருப்பதைப் போல சமயநெறிச் சார்பால் ஏற்படும் வேறுபாடு மணஉறவு கொள்வதற்குத் தடையாக இருப்பதில்லை. ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் பிரிவுக்குள்ளிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்ட பூசாரிகளான பண்டாரங்களைப் பெற்றுள்ளனர். இப் பண்டாரங்கள் சாவுச்

சடங்கு, பிற சிறு சடங்குகள் ஆகியவற்றின்போது முன்னின்று உதவுவர். இப் பண்டாரங்களுள் சிலர் பூணூல் அணிகின்றனர். வேளாளர்கள் சிரார்த்தத்தின்போது மட்டும் பூணூல் அணிவர். மகாளய அமாவாசையின்போது இறந்துபோன முதாதையர்களின் நினைவாக வழிபாடு நடத்தும் பிராமணர்களும் உயர்சாதிச் சூத்திரர்களும் மட்டுமே மேற்கொள்ளும் வழக்கினை இவர்களும் கைக்கொள்கின்றனர். இப்பிரிவினர் அனைவரும் மதுவகைகளை விலக்குவதோடு பிராமணர் தவிர மற்றவர் இல்லங்களில் உண்ண மறுப்பர். இந்த நான்கு பிரிவினரும் ஒருவரில்லத்தில் மற்றவர் உண்பர். எனினும் இந்த நான்கு பெரும்பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு செய்து கொள்வதில்லை. இப்பிரிவுகள் வட்டார அடிப்படையில் மேலும் பல உட்பிரிவுகளைக் கொண்டனவாக உள்ளன. தொண்டை மண்டலத்தார் துளுவர், பூந்தமல்லி (சென்னைக்கு அருகில் உள்ள நகரம்) கொண்டைகட்டி (தலையை மழிக்காமல் குடுமியாக முடிபவர்கள்) என்ற உட்பிரிவுகளைக் கொண்டுள்ளனர். இந்த உட்பிரிவினர் தங்களுக்குள் மணஉறவு மேற்கொள்வதில்லை. சோழிய வேளாளர் வணிகம் செய்யும் வேளாண் செட்டி (இப்பிரிவினர் மேலும் மூன்று நான்கு உட்பிரிவினராக வட்டார அடிப்படையில் பிரிவுபட்டுள்ளனர்.) கொடிக்கால் (வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவோர்), கானக்கினி நாட்டார் எனப் பிரிவுபட்டுள்ளனர். இவர்களும் தங்களுக்குள் மணஉறவு மேற்கொள்வதில்லை. எனினும் இறுதிப் பிரிவினர் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாக இருப்பதால் அப் பிரிவினர் தங்கள் பிரிவினும் மணப்பெண்கள் அகப்படாது வேறு பிரிவுப் பெண்களை நாடிச் செல்லும் வழக்கம் உள்ளது. பாண்டிய வேளாளர் கார்காத்தார் அல்லது காரைக்காடு (இப்பிரிவினர் பிரிவினர் பற்றிய வழக்கு வரலாறு உண்மையாயினும் அன்றாயினும் இவர்கள் வட்டார அடிப்படையில் காரைக்காடு என்ற பகுதிக்கு உரியவர்களே.) நங்குடியார், பஞ்சையார் (இப் பெயர்களின் தோற்றம் பற்றி ஏதும் புலனாகவில்லை.). அரும்பூர், சிறுகுடி (இவை பாண்டிய நாட்டில் உள்ள ஊர்கள்), அகமுடையார் (இவர்கள் இப் பெயருடைய சாதியிலிருந்து வேளாளர் சாதியில் வந்து சேர்ந்தோர்), நீறுபூசிகள் (விபூதி தரிப்பவர்கள்) கோட்டை வேளாளர் எனப் பிரிவுபட்டுள்ளனர். இவர்களுள் இறுதியில் கூறப்பட்ட பிரிவினர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வைகுண்டத்தில் வாழ்கின்றனர். இப்பிரிவினர்களின் பெண்கள் தனித்துக் கோஷாவாக இருக்கின்றனர். இவர்கள் பாண்டிய வேளாளரின் ஓர் உட்பிரிவினர் எனினும் எக்காரணம் கொண்டும் இவர்கள் வேறு பிரிவினரோடு மணஉறவு கொள்வதில்லை. இவர்கள் சாதிப் பிரிவில் சிறுமிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தும் இவ்வாறு வேறு பிரிவினருள் பெண் கொள்ளாத கண்டிப்பான

நடைமுறையின் காரணமாக இப் பிரிவினரின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. (பார்க்க: கோட்டை வேளாளர்). கொங்கு வேளாளர் செந்தலையர் (சிவப்புத் தலையர்) படைத்தலைவர், வெக்கையர், பவளம்கட்டி, மலையடி, தொள்ளைக்காது, ஆத்தங்கரை முதலிய பிரிவுகளை உடையவர்களாக உள்ளனர். இவைகளுள் எந்த ஒரு பிரிவு பற்றிய தோற்றத்திற்கான காரணமும் தெளிவாகப் புலனாகவில்லை எனினும் இப் பிரிவினர் தங்களுக்குள் மணஉறவு கொள்வதில்லை. வேளாளர் சாதிக்கு உரிய இப் பிரிவுகள் மற்றும் உட்பிரிவுகளோடு கூட வேறு சாதிகளுக்கு உரியவர்களான தனித்த சில வகுப்பாரும் வேளாளர் சாதிக்கும் அவர்கள் தோற்றத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லையெனினும் தங்களை வேளாளர் எனக் கூறிக் கொண்டு அச் சாதிக்கு உரியவர்கள் போலப் பாவனை செய்கின்றனர். இவர்கள் உண்மையில் வேளாளர்களான எந்தப் பிரிவினரோடும் மண உறவு கொள்ளுதல் இயலாது. வேளாளர் சாதி மிகப் பரந்துபட்டதாக இருப்பதால் இத்தகைய ஊடுருவல்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளுதல் என்பது அதற்கு இயலாது. சில தலைமுறைகளுக்குப் பின் இவ்வாறு புதிதாக வந்து நுழைந்தவர்களின் தோற்றம் பற்றிய வரலாறு மறக்கப்பட்டுவிடுவதால் அவர்கள் தங்களை உண்மையில் வேளாளர் சாதியினைச் சேர்ந்தவர்கள் என நிலை நாட்டிக் கொண்டுவிடுகின்றனர். மலபாரைச் சேர்ந்த நாயர்களிடையேயும் இத்தகையத் தொரு நிலை இருக்கின்றது. இத்தகைய பழக்கத்தால் ஏற்படும் குருதிக் கலப்பால் அவ்வப்போது ஆங்காங்கே எடுக்கப்பட்ட வேளாளர்களின் தலையளவுகளிடையேயான வேறுபாடு மிக வியப்பூட்டும் வகையில் மிகுதியானதாக உள்ளது. இவ்வாறு தங்களை வேளாளர்கள் எனக் கூறிக் கொண்டு வேளாளருக்கு உரிய உயர்தகுதியினைப் பெற்றுள்ள பிற சாதியார்களுள் உண்மையில் வேட்டுவரான வேட்டுவ வேளாளர், பூலுவரான பூலுவ வேளாளர், பணிக்கன்களான இல்லம் வேளாளர், கரையான்களான கனாத்துறை வேளாளர், சாணாரான கருகமட்டை வேளாளர் பலிசரான காசுலவேளாளர், செம்படவர்களான குகவேளாளர், வண்ணாரான ஈர்குளி வேளாளர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். நாட்டியக்காரிகளின் குழந்தைகளுங்கூடத் தங்களை முதலி எனக் கூறிக் கொண்டு காலப் போக்கில் வேளாளராகியுள்ளனர். பறையர்களும் பிள்ளை என்ற பட்டம் தரித்தவர்களாகக் காலப்போக்கில் தங்களை இச் சாதிக்கு உரியவர்களாக மாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர். கரையான்கள் சிலர் அச்சு வேளாளர் என்ற பெயரைத் தரித்துக் கொண்டுள்ளனர். கடல் தெய்வமான வருணனை முன்வைத்து பட்டனவன்கள் தங்களை வருணகுல வேளாளர் எனவும் வருணகுல

முதலி எனவும் கூறிக் கொள்கின்றனர். கணக்கெடுப்பின்போது மலைப்பகுதியினைச் சேர்ந்த மலையாளிகள் சிலர் தாங்கள் மலைப்பகுதிக்கு வந்து குடியேறிய வேளாளர் என்ற வழக்கின் அடிப்படையில் தங்களை வேளாளர் எனக் கூறிக் கொள்கின்றனர். திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறவர் சிலர்* தங்களை அகம்படியர் வேளாளர் எனவும் பிள்ளை எனவும் கூறிக் கொள்வதோடு வேளாளர்களுக்குரிய நடையுடை பாவனைகளை மேற்கொண்டவர்களாக உள்ளனர். வேளாளர் சிலர் சென்று குடியேறியுள்ள திருவாங்கூர் மாநிலத்தில் தேவதாசிச் சாதியினைச் சேர்ந்த ஆண்கள், சில சமயங்களில் தங்களை நாஞ்சில்நாட்டு வேளாளர் என அழைத்துக் கொள்வதும் உண்டு. கள்ளன் ஒருவன் மறவன் ஆகிப் பின் சமூகத்தில் பெறும் மதிப்புக் காரணமாக அகமுடையானாக மாறிப் பின் படிப்படியே மெல்ல வேளாளன் ஆவான் என்ற கருத்துப்பட அமைந்த பழமொழி ஒன்றும் உள்ளது. மற்றொரு பழமொழி வேளாளர் கத்திரிக்காயைப் போன்றவர்கள் எனவும் அவர்கள் சாதியினை வேறு எந்தச் சாதியோடு வேண்டுமானாலும் பொருத்தமுறக் கலந்து கொள்ளலாம் என்ற கருத்துப்பட வழங்குகின்றது.

மேலே தரப்பட்டுள்ள வேளாளர்களின் பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் உறதிப்படுத்தப் பல சான்றுகள் உள்ளன. அவை வருமாறு:

1. **அரும்புக்கட்டி அல்லது ஆரம்பூகட்டி:** திரு ஜெ. எ. பாப்லெயின் கருத்துப்படி இப்பெயர் சிவனுக்குரிய அலங்காரத்திற்கானவற்றுள் ஒன்றான மாலையான ஆரத்தைக் கழுத்தில் அணிந்தவர்களைக் குறிப்பதாகும். இவர்களைப் பற்றி அவர் மேலும் கூறுவதாவது. இராமநாதபுரம் மாவட்டத்தினை அடுத்தடுத்துள்ள கிராமங்களில் தங்கி வாழும் பழங்குடி இனத்தவர்கள் இவர்கள். இவர்கள் குடும்பங்களிடையே வழங்கும் வழக்கு வரலாறு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் தொண்டைமண்டலத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் எனவும், அவ்வாறு வரத் தேவேந்திர விமானம் எனப்படும் மூடப்பட்ட விமானத்தைப் பயன்படுத்தியதாகவும் கூறும் இவர்கள் இன்றும் திருமணத்தின்போது மண மக்கள் ஊர்வலமாகச் செல்ல 'இத்தகைய வாகனத்தையே பயன்படுத்துகின்றனர். இச் சாதிப் பெண்கள் இடைக்கு மேல் துணியேதும் அணியாது முழுக்க திறந்த மார்புடையவர்களாகவே உள்ளனர். இந்த

* எம். பாப்பா ராவ் நாயுடு - இரயில் திருட்டில் ஈடுபடுவோர் வரலாறு.
(M. Paupa Rao Naidy - History of Railway Thieves-1900.)

மாவட்டத்தின் வடக்கு, தெற்கு எல்லைகளாக அமைந்துள்ள இரு ஆறுகளையும் கடந்து அவற்றுக்கு அப்பால் இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. தஞ்சாவூரில் உள்ள புகழ்பெற்ற கோயிலில் உள்ள தெய்வத்திற்கு இவர்கள் நேர்ந்து கொள்வார்களாயின் அக் கடனைச் செலுத்த அக் கோயிலுக்கு யாரும் அறியாதபடி இரகசியமாகவே பயணம் மேற்கொள்வர். இதுபற்றிய உண்மை வெளிப்படுமாயின் இவ்வாறு பயணம் மேற்கொண்டவர்கள் தண்டத் தொகை செலுத்த வேண்டிவரும். எல்லையாக அமைந்த ஆற்றுக்கு அப்பால் வாழ்பவர்களோடு மணஉறவு செய்து கொள்ளக் கூடாது என்ற தடை உள்ளது. இச் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் சர்க்கார் (அரசு) உப்பினைத் தின்ன மாட்டார்கள். அதாவது அரசுப் பணி ஏற்பதில்லை.

2. **செட்டி:** "வேளாளர் உட்பிரிவினைச் சேர்ந்த செட்டிகள் செட் என்ற பட்டம் தரித்துக் கொண்ட வேளாளர் சாதியினரே. முன்காலத்தில் அரசர்கள் மேற்கொள்ளும் துலாபாரச் சடங்கில் அரசர்களை நிறுக்கும் தனி உரிமை பெற்றவர்கள் இவர்களே. (பார்க்க: துலாபாரம்) தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களில் வணிக வகுப்பாராக உள்ளவர்கள் இவர்களே. வணிகத்தில் தேர்ந்தவர்களான தெலுங்குக் கோமட்டிகளும் பிற வணிக வகுப்பாரும் தெற்கே வந்து குடியேறிய பின் வேளாண் செட்டிகள் படிப்படியே தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டனர். இதனால் இவர்கள் வேறு பல தொழில்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. புகழ்பெற்ற புலவரான பட்டினத்தார் இந்த வகுப்பை சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது" என *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. **கார்காத்தார்:** இப் பெயர் மேகங்களைக் காப்பாற்றிப் பாதுகாத்த வேளாளர் எனப் பொருள்படும். மழைக்காகக் காத்திருப்போர் எனவும் இது பொருள்படும். இவர்கள் பரம்பரைத் தொழில் மழையினை வரவழைத்தல் எனக் கூறப்படுகின்றது. புராணத்தோடு தொடர்புடைய இவர்களைப்பற்றிய கதை வருமாறு:-

முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டு மன்னனுக்கும் தேவர் உலக மன்னனாகிய தேவேந்திரனுக்கும் இடையே ஒரு சச்சரவு மூண்டது. இதனால் கோபமுற்ற தேவேந்திரன் பாண்டியர் நாட்டில் சென்று மழை பெய்ய வேண்டாம் என மேகங்களுக்குத் தடை விதித்தான். இதனால் பாண்டிய நாட்டு மக்கள் கடும்பஞ்சத்திற்கு ஆட்பட வேண்யதாயிற்று. அவர்கள் தங்கள் மன்னனிடம் வந்து முறையிட்டுக் கொள்ள சினங்கொண்டவனான பாண்டிய மன்னன் தன் படையோடும் சென்று தேவேந்திரனைப் போரில் தோல்வியுறச் செய்து

மேகங்களைக் கைப்பற்றிக் கொண்டு வந்து சிறையில் அடைத்தான். இதன் விளைவாகப் பூவுலகில் எப்பகுதியிலும் மழைபெய்யாது போகவே மக்கள் பெரும் தொல்லைக்கு உள்ளானவர்களாக அனைவரும் ஒன்றாக வந்து தங்களைத் தொல்லையிலிருந்தும் மீட்கும்படி தேவேந்திரனிடம் வேண்டிக் கொண்டனர். தேவேந்திரன் தூதுவன் ஒருவனைப் பாண்டிய மன்னனிடம் அனுப்பி மேகங்களை விடுவிக்கும்படி வேண்டினான். பாண்டியனோ அவை வருங்காலத்தில் தன் நாட்டில் முறையாகப் பருவந் தவறாது மழைப் பெய்வதாக உறுதி கூறினால் அன்றி விடுவிக்க இயலாது எனக் கூறினான். இச் சமயத்தில் பாண்டிய நாட்டைச் சேர்ந்த வேளாளர் மேகங்களின் நன்னடத்தைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு அவற்றை விடுவிக்க உதவினார்கள். ஆகையால் இவர்கள் கார்காத்த வேளாளர்வாரு எனப் பெயர் பெற்றனர்.* பழனிமலைகளைக் (கொடைக்கானல்) சேர்ந்த கார்காத்த வேளாளர் பற்றியதொரு அரியதொரு குறிப்பில் படைத் தலைமையர் வார்டு *1824* இல் பின்வருவனவற்றைப் பதிந்துள்ளார். இவர்களுடைய சடங்குகளைப் பண்டாரங்கள் நடத்தி வைக்கின்றனர். எனினும் இவர்களுக்கு உரிய கோயில்களில் பிராமணர்களே பூசாரிகளாக உள்ளனர். குன்னுவன்களோடு எத்தகைய தடையுமின்றிக் கலந்து பழகும் இவர்கள் அவர்கள் சமைப்பதை உண்கின்றனர். குன்னுவன்களும் கார்காத்த வேளாளர் சமைப்பதை உண்கின்றனர். எனினும் ஒரு குன்னுவன் கார்காத்த வேளாளன் ஒருவன் இல்லத்திற்கு வருவானாயின் அவன் அங்குச் சமையல் செய்வதற்கான பாத்திரங்களைத் தொடவோ சமையல் அறையினுள் நுழையவோ அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களுடைய மனைவியர் கணவன்மார்களின் உறவினர்களோடு உடலுறவு கொண்டவர்களாக அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கலாம் எனினும் கணவன் குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களோடு அவ்வாறு உறவு கொள்பவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளாக்கப்படுவர். இத்தண்டனை அவ்வளவு கண்டிப்புடன் நிறைவேற்றப்படுவதில்லை. இவ்வாறு சாதிவிலக்கத்திற்கு உள்ளாகி மணமுறிவு செய்து கொண்டவளை வைத்துக் காப்பாற்றக் குன்னுவர்களுள் ஒருவன் எப்போதும் முன்வரக் காணலாம்., இவ்வாறு தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த பொண்களோடு உடலுறவு கொண்டு இழிவிற்கு உள்ளாகும் ஆண்களும் சாதிவிலக்கம் செய்யப்படுகின்றனர். முன்பெல்லாம் இத்தகைய குற்றங்கள் புரியும் ஆண்களும் பெண்களும் மரண தண்டனைக்குக் கூட உள்ளாக்கப்பட்டு வந்தனர். *1824* இல் கார்காத்த வேளாளர் நிலத்தோடு பிணைக்கப்பட்ட

* பரமகல் ஆவணங்கள். (Baramahal Records.)

புலையரைவிலைக்கு வாங்கியும் விற்றும் வந்தனர். ஆண்களுக்கு முப்பது பணமும் பெண்களுக்கு ஐம்பது பணமும் விலையாகக் கொடுத்துள்ளனர். பெண்களை அடிமைகளாகப் பெற்றுள்ளவர் அவர்கள் பிள்ளைப் பெறும்போது மேலும் அடிமைகளைப் பெற வாய்ப்பு உள்ளது என்பதாலேயே பெண்களுக்கு அதிகவிலை தருகின்றனர் என மதுரை மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. கரைகாத்த வேளாளர் சிறுமியர் ஏழு அல்லது ஒன்பதாம் வயதடையும்போது விளக்கிடு கல்யாணம் என்ற புதுமையான சடங்கினை நடத்துகின்றனர். இச் சடங்கைத் திருமணத்திற்கு முன்னும் நடத்துவர். இச் சடங்கில் அச் சிறுமி தன் பெற்றோர் இல்லத்தில் கணேசரையும் சூரியனையும் வழிபடுவாள். அப்போது அவளுடைய தாய்மாமன் தங்கமணிகளும் பவளமணிகளும் கோத்துச் செய்யப்பட்ட கழுத்துச் சங்கலியினையும் ஒரு புதிய துணியினையும் அன்பளிப்பாக வழங்குவான். இச் சடங்கிற்கு அழைக்கப்பட்ட பிற உறவினர்களும் அவளுக்கு அன்பளிப்பினை வழங்குவர். இப் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் கொடசிமணி எனப்படும் இம்மணியினைத் திருமணத்திற்குப் பிறகும் தொடர்ந்து அணிகின்றனர்.

4. **கொண்டைகட்டி:** நவாபுகளின் ஆட்சிகாலத்தில் அரசுப் பணியில் அமர்த்தப்பட்டிருந்த காரணத்தால் இவர்கள் தங்களை வேளாளருள் உயர்ந்த பிரிவினராகக் கருதப்படுவதாக வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. கண்டிப்பான நடைமுறைகளைப் பின்பற்றும் இவர்கள் தங்கள் பிரிவுப் பெண்களை அனைவருக்கும் பொதுவான வண்டி வாகனங்களில் கூடச் செல்ல அனுமதிப்பதில்லை. கூடா ஒழுக்கத்தில் ஈடுபடும் பெண்களுக்குக் கடுமையான தண்டனையும் வழங்குகின்றனர்.

கொண்டைகட்டி என்பதன் பொருள் தலைமுடியினை உச்சந்தலையில் கொண்டையாக முடிச்சிடுபவர் என்பதாகும். இப் பழக்கம் தொடர்பாகப் பின்வரும் வழக்கு வரலாறு கூறப்படுகிறது. கோமட்டிகளுக்கும் வேளாளருக்கும் இடையே தங்களுள் யார் வைசியர் என்பது தொடர்பான பூசல் ஏற்பட்டது. அவர்கள் அரசனிடம் சென்று இதுபற்றி முறையிட்டுக் கொள்ள இக் கருத்து வேறுபாட்டுக்கு எப்படி முடிவு காண்பது என்பது புரியாத அந்த அரசன் இவ்விரு குழுவினரிடமும் ஐயாயிரம் ரூபாயினைத் தந்து ஐந்து ஆண்டுகள் வணிகம் செய்த பின் அதனைத் திரும்பத் தரும்படி கூறினான். வேளாளர் இதில் ஐந்தில் ஒரு பங்கினைச் செலவு செய்தனர். கோமட்டிகள் இத் தொகை முழுவதனையும் வணிகத்திற்காகப் பயன்படுத்தினர். குறிப்பிட்ட காலம் முடியும்போது வேளாளர் கரும்பில் நல்ல விளைச்சல் கண்டனர். ஒவ்வொரு கரும்பிலும் ஒரு முத்து

விளைந்திருந்தது. கோமட்டிகள் வணிகத்தில் ஓரளவே ஊதியம் பெற்றனர். வேளாளர் செய்கையில் மகிழ்ந்த மன்னன் அரசர்களுக்கு முடிசூட்டும் உரிமையினை அவர்களுக்கு வழங்கினான்.

5. **கும்பகோணம் வேளாளர்:** தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்திலிருந்து திருவாங்கூருக்கு வந்த குடியேறியோர்.

6. **கும்பிடிசட்டி:** வட ஆற்காடு மாவட்டக் கையேட்டில் வேளாளர் சாதியுள் தாழ்ந்ததொரு உட்பிரிவாக இது பதியப்பட்டுள்ளது. வேளாளர்களின் சாவுச் சடங்கின்போது நெருப்புச் சட்டியினைச் சுடுகாட்டுக்குத் தூக்கிவரும் பொறுப்பு இவர்களுடையது. இன்று இப்பிரிவினர் இப்பணியினைச் செய்ய முன் வராததால் வேளாளர் தாங்களே நெருப்புச் சட்டியினைத் தூக்கிச் செல்கின்றனர்.

7. **நங்குடி அல்லது சவலைப் பிள்ளைமார்:** *(பார்க்க: நங்குடி)*

8. **தென்திசை:** இப் பிரிவினர் கோயமுத்தூர் மாவட்டத்தில் காணப்படுகின்றனர். இவர்கள் கொங்கு வேளாளரின் ஒரு பிரிவினர் எனக் கூறப்படுகிறது.

9. **தென் காஞ்சி:** திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசியிலிருந்து திருவாங்கூருக்கு வந்துகுடியேறியவர்கள், *(பார்க்க: தொடுபுழா வேளாளர்)*

10. **துளுவ:** இன்றைய தென் கன்னட மாவட்டத்தின் ஒரு பகுதியான துளு நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள், தொண்டை மண்டலத்தை ஆதொண்டைச் சக்கரவர்த்தி வென்று அடிமைபடுத்தியபின் அங்கு வந்து குடியேறும்படி அவன் கேட்டுக்கொண்ட வேளாளர்கள் இவர்களே ஆதல் வேண்டும் எனத் திரு நெல்சன் கருதுகின்றார்.* இவர்கள் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் காணப்பட்டாலும் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல் பட்டு ஆகிய மாவட்டங்களிலேயே மிகுந்த எண்ணிக்கையினராக உள்ளனர். ஏழு கடற்கரைக் கோயில்கள் பற்றி விளக்க வரலாற்றுக் குறிப்பில் திரு கார் (Carr), ஆதொண்டை காஞ்சிபுரத்தையும் திருப்பதியினையுமே தன் தலைநகரங்களாகக் கருதியுள்ளான். ஆதொண்டை ஏழாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்ததாகக் கொள்ள இடமில்லை. இவன் ஸ்ரீசைலத்திலிருந்து

* மதுரை மாவட்டக் கையேடு. (Manual of Madurai District.)

பிராமணர்களைக் கொண்டுவந்து குடியேற்றியதோடு துளு நாட்டிலிருந்தும் பயிரிடுவோரான சூத்திரர் சாதியினரையும் பெரும் எண்ணிக்கையில் அழைத்து வந்து அவர்கள் அங்குக்குடியேற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தான் எனக் கூறியுள்ளார், காஞ்சிபுரத்தில் நாட்டார் மற்றும் தேசாயி என்ற பதவிக்கு உரியவர்கள் உள்ளனர். முன்பு இவர்கள் அதிகாரம் மாநிலம் முழுதும் செல்லும்படியாயிற்று. நாட்டார் துளுவ வேளாளர் சாதியினனாகவும் தாசாயி ரல்ல பலிசர் சாதியினனாகவும் இருப்பர். இந்த இரண்டு பதவிகளும் நாடு தேசம் என ஒரே பெயரால் இணைத்து வழங்கப்பட்டது. இன்று இவர்களுடைய செல்வாக்குப் பெரும் அளவில் குன்றிவிட்டாலும் சிலர் இன்றும் இவர்களிடம் சென்று தங்கள் வழக்குகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சாதிகளின் அமைப்பினை முறைப்படுத்தும் தலைமையிடமாகக் காஞ்சிவரம் திகழ்ந்தது. தொண்டை மண்டல வேளாளர் அனைவரும் இருபத்திநான்கு கோட்டங்களாகவும் எழுபத்திரண்டு நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தனர். நாட்டார்கள் கோட்டத்தாரின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள்.

தொண்டை மண்டலம் வேளாளர் பற்றிப் பின்வரும் வழக்கு வரலாறு பரமகல் ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. சோழ தேசத்தை ஆண்ட அரசன் ஒருவனின் ஆட்சிக் காலத்தில் சோழ நாடு காவிரிக்குத் தெற்கேயுள்ள பகுதிகளை மட்டும் கொண்டதாயிருந்தது. கிருட்டிணா, காவேரி ஆகிய இரு ஆறுகளுக்கும் இடையேயுள்ள நிலப்பரப்பு காடாயிருந்தது. அதில் ஆங்காங்கே மண்ணாலான சுற்றுச் சுவரோடு கூடிய கிராமங்களில் குர்பவர் சாதியினைச் சேர்ந்த இடையர் பலர் வாழ்ந்து வந்தனர். சோழ மன்னன் இந்தப் பகுதிக்கு வேட்டையில் விருப்பம் காட்டியவனாக வந்து சேர்ந்தபோது இன்றைய ஆர்க்காடு அரசில் இடம்பெற்றுள்ள காஞ்சிவரம் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு அவன் நாக கன்னி ஒருத்தியினைக் கண்டு அவள் மீது காதல் கொண்டான். அவளிடம் காதல் கொண்ட அவன் அவளைத்தன் விருப்பத்திற்கு இணங்கும்படி கேட்டுக் கொண்டபோது அவள் அவனிடம், நான் உன் விருப்பத்திற்கு உடன்பட்ட பின் எனக்கு உன் வாயிலாக ஒரு மகன் பிறந்தால் அவனை உன் அரசுக்கு உரிய அரசனாக்குவாயா? எனக் கேட்டாள். அதற்கு அவன், இந்த வானமும்பூமியும் சாட்சியாக அப்படியே நடப்பேன் எனக் கூற அவன் அதற்கு இரண்டு சாட்சிகள் போதாது மூன்றாவதாக ஒரு சாட்சியும் வேண்டும் எனக் கூறினாள். அவர்கள் அருகே ஆதொண்டை என்ற ஒரு மரம் இருந்தது. அந்த மன்னன் இந்த ஆதொண்டை மரத்தின்பழம் மூன்றாவது சாட்சியாக இருக்கட்டும் எனக் கூறினான். அந்தச் சாட்சியங்களில் நம்பிக்கை

வைத்த அவள் அந்த மன்னனின் விருப்பத்தை நிறைவேற்ற உடன்பட்டாள். அவளோடு சில காலம் மகிழ்ந்திருந்த அவன் அவளிடம் விடைபெற்றவனாக தலைநகரம் வந்து சேர்ந்தான். அவனுடைய மூத்த மகன் நாட்டை ஆண்டுகொண்டிருந்தான். இதற்கிடையே அந்த நாககன்னிகை கருவுற்றவளாக ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தை அவளோடும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகாலம் உடனிருந்தது. பின் அவன் அக் காட்டில் தவம் செய்த பல முனிவர்களையும் அடுத்து வாள் வித்தை, வில் வித்தை முதலிய பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து பதினாறு வயது வாய்க்கப் பெற்ற இளைஞனாக மாறித் தன் தாயிடம் திரும்ப வந்து அவளிடம் தன் தந்தை யாரெனக் கூறும்படி கேட்டுக் கொண்டான். உன் தந்தை சோழ நாட்டு மன்னன் என அவள் பதிலிறுத்தாள். நான் அவரிடம் செல்வேன். என்றாலும் நீ சொல்லும் இதனை உறுதிப்படுத்த சாட்சியங்கள் உண்டா? எனக் கேட்டான். இந்தப் பூமி, வானம், ஆதொண்டைப்பழம் ஆகிய மூன்றும் நான் உன்னிடம் கூறியதற்குச் சாட்சிகள் என அவள் பதிலுறுத்தாள். அவளுடைய மகன் ஆதொண்டைப் பழம் ஒன்றினைப் பறித்துக் கயிற்றில் கோத்துக் கழுத்தில் மாலையாக அணிந்தவனாகத் தன் வாள், வில் முதலிய படைக்கலங்களுடன் தன் தந்தையின் தலைநகரம் நோக்கிப் புறப்பட்டான். ஒருநாள் அரசவையினை சேர்ந்த பெருமக்களோடும் கூட அவர்கள் உதவியுடன் அரசவையினை அடைந்த அவன் முன்பு சோழ நாட்டை ஆண்ட அரசனைக் கண்டு உன் மகன் வந்திருக்கின்றேன் எனக் கூறினான். அதற்கு அவன், உன்னைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது எனக் கூறினான். அப்போது அந்த இளைஞன் தன் தாய் தன்னிடம் கூறிய கதை அனைத்தையும் அந்த அரசனிடம் கூறியும் அதனால் பயன் ஏதும் விளையாது போயிற்று. தன் தந்தை தன்னை ஏற்றுக் கொள்வதில்லை என முடிந்த முடிபாக இருப்பதைக் கண்ட அவன் அந்த அரசனைத் தன்னுடன் தனிப்போர் புரிய வருமாறு அறைகூவல் விடுத்தான். மிகுந்த ஆத்திரங்கொண்டவனாக இருக்கும் ஓர் இளைஞனோடு போரிடுதல் அறிவுடைமையாகாது என உணர்ந்த அரசன் அந்த இளைஞனிடம் அவன் கூறுவதை மெய்ப்பிக்கச் சான்றுகள் எவையேனும் உள்ளனவா எனக் கேட்டான். அதற்கு அந்த இளைஞன், இந்தப் பூமி, வானம் ஆகியவற்றோடு நான் கழுத்தில் கட்டியிருக்கும் ஆதொண்டைப் பழம் ஆகியனவே என் கூற்றை மெய்ப்பிக்கும் சாட்சிகள் என்றான். இதனைக் கேட்ட மன்னன் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தவனாக அந்த இளைஞனைத் தன் மகனாக ஏற்றுக் கொண்டு அவனிடம், தான் முன்பே தன் அரசினைத் துறந்து மூத்த மகனுக்குப் பட்டம் கட்டி விட்டதாகவும், அவன் அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதியினை

நிறைவேற்றும்படி தன்னை அந்த இளைஞன் வற்புறுத்தக் கூடாதெனவும், மூத்த சகோதரன் ஆட்சிக்கு உட்பட்டவனாக வேறொரு நகரிலிருந்து அவன் நாட்டின் ஒரு பகுதியினை ஆள உடன்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டான். இதனைக் கேட்ட அந்த இளைஞன் மிகுந்த பெருந்தன்மையுடன், நீங்கள் என் அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதியினைக் காப்பாற்ற வேண்டும் என்பதனை நான் விட்டு கொடுத்துவிடுகின்றேன். உங்கள் பகைவன் யார் என்பதனை எனக்குக் காட்டுங்கள். எனக்குச் சிறுபடை ஒன்றினைக் கொடுத்து உதவுங்கள். அதன் உதவியுடன் நானே எனக்கு ஒரு அரசினை ஏற்படுத்திக் கொள்வேன் என்றான். அந்த மன்னனும் அவனுக்கு ஒரு படையினை உதவி அவனிடம் குருபவாருகளை அடக்கிக் காவேரிக்கும் கிருட்டிணாவிற்கும் இடையே அவனுக்கென ஒரு அரசினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கூறினான். இத்திட்டப்படி அந்த இளைஞன் காடுகளிடையே தன் படையைச் செலுத்திச் சென்று எத்தகைய எதிர்ப்புக்கும் உள்ளாகாதவனாகக் குருபவாருக்களை அடக்கினான். அம் மக்கள் பயிரிடுதல், ஆறு, ஏரி ஆகியவைக்கு அணைகட்டி நிலத்துக்கு நீர் பாய்ச்சுதல் ஆகியன பற்றி எதுவும் அறியாதவர்களாக இருந்தனர். தன் நாட்டில் வேளாண்மையினைப் பெருக்க விரும்பிய அவன் தன் தந்தையிடம் சென்று தனக்குள்ள குறையினை எடுத்துரைத்தான். தன் மகனுடைய முயற்சியுடைமையில் மிக மகிழ்ந்த அந்த அரசன் ஆதொண்ட சக்ர என்ற பட்டத்தை அவனுக்கு அளித்து அவனோடு கூட உடன்வர ஒருப்படும் வேளாளர் சாதியினரை அவனுடைய நாட்டிற்கு அழைத்துச் சென்று குடியேற்றிக் கொள்ளவும் அனுமதி வழங்கினான். இளைஞனான அந்த அரசன் வேளாளருக்கு ஆர்வம் ஊட்டும் பல சலுகைகளை நல்கிப் புதிய முயற்சியில் நாட்டமுடைய பலரைத் தன்னுடன் அழைத்துச் சென்று குருபவாருக்களுக்கு உரிய நாட்டுப் பகுதிகள் பலவற்றையும் அவர்கள் விருப்பம் போல் அவர்களுக்கு உரிமையாக்கி அங்கே கோட்டைகள், நாடுகள், கிராமங்கள் ஆகியவற்றை அமைத்துக் கொள்ளும்படி கூறினான். அதில் அவர்கள் இருபத்திநான்கு கோட்டைகள், எண்பத்தொரு மாவட்டங்கள், ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஊர்கள் ஆகியனவற்றை அமைத்தனர். இந்த நாட்டுப் பகுதி முன்பு தண்டகன் என்ற அசுரன் பெயரால் தண்டகாரண்யம் என்ற பெயர் பெற்றிருந்தது. இராமாயணத்தில் புகழ்பெற்ற வனமாக இது சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை நடுவில் உள்ள நாடு என்ற பொருளில் துண்டர நாடு எனவும் வழங்கினர். புதிய அரசன் தன் பிறப்புக்கு உரிமை காட்டிய சான்றான தொண்டை மரத்தின் பெயரால் இதற்குத் தொண்ட மண்டலம் எனப் பெயரிட்டான். இதில் வந்து குடியேறிய வேளாளர் தங்களைத் தொண்ட மண்டல வேளாளவாரு எனக் கூறிக் கொண்டனர். அப்

பெயர் இன்று திரிந்து தொண்டை மண்டல வேளாளவாரு என வழங்குகின்றது.

திருச்சிராப்பள்ளி வேளாளர் தொடர்பான ஒரு குறிப்பில் திரு ஹெமிங்வே வேளாளர் உட்பிரிவுகள் பற்றி மேலும் சில விவரங்களைத் தந்துள்ளார். கொண்டைகட்டிகள் தங்கள் தலைமுடியினைத் தனித்ததொரு வகையில் முடிச்சிட்டுக் கொள்வதால் இப்பெயர் பெற்றனர். அவ் வழக்கத்தை இன்று அவர்கள் மேற்கொள்வதில்லை. இப் பிரிவினர் மேல் நாடு, கீழ் நாடு என இரு பிரிவினராக உள்ளனர். தக்சி நாட்டார் எனப்படுவோர் திருநெல்வேலி யிலிருந்து வந்து குடியேறியவர்கள். உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள கரைகாத்த வேளாள உட்பிரிவினைப் பிற பிரிவினர் கலப்புச் சாதியினர் எனத் தாழ்வாகக் கருதுவதோடு அவர்களை எருத்து மாட்டு வேளாளர் என இழிவாகவும் கூறுவர். தங்கள் தொழில் தொடர்பாக இவர்கள் முன்பு பொதி எருதுகளைப் பயன்படுத்தி வந்ததே இதற்குக் காரணம். சிறுமி ஒருத்திக்கு ஏழு அல்லது எட்டு வயது ஆகும்போது அவளுடைய தாய்மாமன் அவள் கழுத்தில் தாலி அணிவிக்கும் ஒரு தனித்த பழக்கம் இவர்களிடையே உள்ளது. பஞ்சுக்காரச் செட்டிகள் எனப்படுவோரும் உடையார்பாளையம் வட்டத்தில் வாழ்கின்றனர். இப்பெயர் தொழில் தொடர்பானது. எனினும் இன்று இவர்கள் பஞ்சு வணிகர்களாக இல்லை. சோழபுரம் செட்டிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் உள்ள சோழபுரம் என்ற ஊரின் பெயரால் பெயர் பெற்றுள்ளனர். சோழியர் எண்ணிக்கையில் மிகுந்தவர்களாகவும் எங்கும் காணப்படுகின்றவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அனைவரையும் முறையாக மணந்து கொண்ட பெற்றோருக்குப் பிறந்தவர்களாகக் கருதுவதில்லை. தங்களை வேளாளர் என உயர்த்திக் கூறிக் கொள்ள விரும்பும் செல்வ வளம் படைத்த பிற தாழ்ந்த சாதியினர் தங்களை இந்த உட்பிரிவினைச் சேர்ந்தவர்களாகக் கூறிக் கொள்வர். மதிப்புக்கு உரியவர்களான பண்டாரங்களும், கோயில்கள், மடங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களாக உள்ள தம்பிரான்களும் ஓதுவார்கள், ஆதிசைவர் ஆகியோரும் சோழிய வேளாளர் பிரிவினரே. ஊற்றுநாட்டுப் பிரிவு வட்டார அடிப்படையில் ஆனது. இப் பிரிவினரின் தலைநகரம் ஊற்றத்தூர் பகுதியினைச் சுற்றியுள்ள பகுதியாகும். இப் பிரிவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள சிவனிடம் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். அறுநாட்டார் மொட்டை வேளாளர் எனவும் அழைக்கப்படுகின்றனர். தலையில் சிறு குடுமியினை மட்டும் வைத்துக் கொண்டு தலையின் எஞ்சிய பகுதியினையும் மீசை முதலியனவற்றையும் இவர்கள் மழித்துவிடுவதால் இவ்வாறு அழைக்கபபடுகின்றனர். இவர்களுடைய சில பழக்க

வழக்கங்கள் பிற வேளாளரின் பழக்க வழக்கங்களிலிருந்து மாறுபட்டவை. இவர்களிடையே புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் உள்ளன. வெள்ளைச் சேலை அணியும் இப் பிரிவினைச் சேர்ந்த கைம்பெண்கள் அணிகள் ஏதும் அணிவதில்லை. மற்ற பிரிவினர் அனைவரும் இந்த வழக்கத்தை மேற்கொள்வதாகத் தெரியவில்லை. தங்கள் உடன்பிறந்த அக்காள் மகளை மணக்கும் வழக்கமும் இவர்களிடையே இல்லை. இவர்கள் சாதியில் திருமணமான பெண்கள் பண்டரெட்டிப் பெண்களைப் போலத் தங்கச் சரட்டில் தாலியினைக் கோத்து அணிவர். இவர்களுடைய ஆறு நாடுகளும் அய்யார் ஆற்றின் இருகரைகளிலும் பக்கத்திற்கு மூன்றாக அமைந்துள்ளன. இன்று நாமக்கல் வட்டத்தில் உள்ள சேறுகுடி நாடும் முசிரி வட்டத்தில் உள்ள ஒடந்தூர் நாடும் பற்றி மட்டுமே அறிய முடிகின்றது. ஏழூர் வேளாளர் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களாகச் சிதறிக் காணப்படுகின்றனர். இலுப்பூரில் சாயம் தோய்க்கும் தொழில் ஈடுபட்டுள்ள துளுவர் சிறிய குடியிருப்பு ஒன்று உள்ளது. மலைகண்டர் குளித்தலை வட்டத்தில் உள்ள இரத்னகிரி அருகே மட்டுமே காணப்படுகின்றனர். இவர்கள் அம்மலையில் உள்ள தெய்வத்திடம் ஈடுபாடுடையவர்கள். காணியாளர்களும் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகச் சிதறுண்டே கிடக்கின்றனர். கிராம தேவதைகளுக்குப் பலியிடப்படும் விலங்குகளின் குருதியினைப் பானையில் சுமந்து செல்பவர்கள் இச் சாதியினைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது வழக்கமாகும். கொடிக்கால் வேளாளர் வெற்றிலை பயிரிடுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். இன்றும் இவர்கள் இத் தொழிலை மேற்கொண்டவர்களாக உள்ளனர்.

கொங்கு வேளாளர் பிற வேளாளரினும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்ட பல வழக்கங்களை மேற்கொண்டவர்களாக உள்ளதால் இவர்களைப் பற்றித் தனியே விவரம் தரப்பட்டுள்ளது. *(பார்க்க: கொங்கு வேளாளர்)*

பிற வகுப்பாரிடையே காணப்படாத சில விசித்திரமான வழக்கங்களை வேளாளர் பிராமணர்களைப் பார்த்துப் பின்பற்றி வருகின்றனர். ஒருவன் தன் முதல் மனைவியினை இழந்தபின் இரண்டாவது ஒருத்தியினை மணக்கும் முன் ஒரு வாழை மரத்திற்குத் தாலி கட்டி அதனை வெட்டி வீழ்த்துவான். மூன்றாவதாக ஒருத்தியினை மணக்கும்போது எருக்கஞ் (*Calotropis gigantica*) செடிக்குத் தாலி கட்டுகின்றான். இரண்டாவது மனைவியும் மூன்றாவது மனைவியும் ஆகி வராதவர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்

வாழை மரமும் எருக்கம் செடியும் இரண்டாவது நான்காவது மனைவியரின் இடத்தைப் பெறுகின்றன எனத் திரு ஹெமிங்வே தெரிவிக்கின்றார்.

செவ்வாய்ப் பிள்ளையார் என அழைக்கப்படும் ஒரு தனித்த சடங்கினை சில வேளாளர் சாதிப் பெண்கள் மேற்கொள்கின்றனர். இச் சடங்கு அவ்வை நோன்பு எனவும் அழைக்கப்படுகிறது. தமிழ்ப் புலவராட்டியான அவ்வையார் இச் சடங்கினை மேற்கொண்டதால் இது இப்பெயர் பெற்றது. ஆண்டிற்கு இருமுறை ஆடி, தை மாதங்களில் ஒரு செவ்வாய் கிழமையில் இச் சடங்கினை நடத்துவர். நள்ளிரவில் நடத்தப்படும் இச் சடங்கின்போது இடுப்பில் உள்ள கைக்குழந்தைகள் உட்பட ஆண்கள் யாரும் அங்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதற்காகத் தயாரிக்கப்படும் பணியாரங்களும் இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சில பெண்கள் ஒன்று கூடித் தங்கள் உள்ளங் கையின் பின்புறத்தில் அரிசியினையிட்டு அளப்பர். அல்லது சென்னையில் பால் விற்போர் பயன்படுத்துவது போன்ற அளக்கும் படியினைப் பயன்படுத்துவர். இதன் அடிப்பாகம் உருளைப் பகுதியில் மேலே தள்ளிப் பொருத்தப்பட்டிருக்கும். சடங்கு நிகழ்த்தப்படவுள்ள வீட்டில் அரிசியினை மாவாக இடித்துப் புங்கம் (*Pongamia glabra*) இலைகளுடனும் வேப்பம் (*Melia Azadirachta*) இலைகளுடனும் கலப்பர். பின்னர் இக் கலவை பிள்ளையார் உருவினைக் குறிக்கும் வகையில் தட்டையும் உருளையுமான பணியாரங்களாக ஆக்கப்படும். பூ, பழம், வெற்றிலை, மஞ்சள், சீப்பு, குங்குமம் ஆகிய பிள்ளையார் வழிபாட்டுக்குத் தேவையான பொருள்களும் சடங்கு நடத்தப்படும் அறைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தச் சடங்குகளைப் பற்றி அதில் பங்கு பெற்ற பெண்கள் விவரம் தெரிவிக்க மறுத்துவிட்டனர். அவ்வாறு அவை பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்தினால் அவ்வாறு வெளிப்படுத்துகின்றவர்களுடைய குடும்பம் அழிந்துவிடும் என்பதே அவ்வாறு வெளிப்படுத்தாமைக்கான காரணமாகும். பெண்கள் இச் சடங்கின்போது ஒரு சிறிதும் ஆடையின்றி இருப்பர் எனச் சிலர் கூறுகின்றனர்.

தொற்று நோய்களுக்கு எதிராக மக்களைக் காக்கும் குளுமை அம்மனுக்குத் திருச்சிராப்பள்ளியில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாப் பற்றிப் பிஷப் வைட்ஹெட் பின் வருமாறு பதிந்துள்ளார்:* வேளாளர் சாதியினைச் சேர்ந்த உடல் பருத்த ஒரு பூசாரியினைக் கூடியிருக்கும் கூட்டத்தினருக்கு மேல் உயராமாக இருவர் தங்கள் கைகளால் தாங்கி உயரத் தூக்குவர். அப்போது

* சென்னை அருங்காட்சியக மடல், V, 3, 1907.
(Madras Museum Bull., V, 3.1907.)

சுமார் இரண்டாயிரம் ஆட்டுக்குட்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பலியிடப்படும். அவ்வாறு பலியயிடப்படுவனவற்றுள் முதலில் பலியிடப்பெறும் எட்டு அல்லது ஒன்பது ஆட்டுக் குட்டிகளின் குருதியினை ஒரு பெரிய வெள்ளிப் பாத்திரத்தில் பிடித்து அதனை அந்தப் பூசாரியிடம் தருவர். அவன் அதனைக் குடிப்பான். பின் ஒவ்வொரு ஆட்டுக் குட்டியின் கழுத்தும் வெட்டப்படும்போது அந்த விலங்கின் உடலை அவன் கைகளில் கொடுப்பர் அவன் அதன் உடலிலிருந்து குருதியினை உறிஞ்சிக் குடிப்பான் அல்லது குடிப்பது போலப் பாசாங்கு செய்வான்.

வேளாளர் தொடர்பான பழமொழிகளுள் பின்வருபவன குறிப்பிடத்தக்கவை.

1. வேளாளன் செய்யாதது வேளாண்மை ஆகாது
2. பாசம் வைத்துக் கெட்டவள் பரத்தை. பகட்டால் கெட்டவன் வேளாளன்.
3. சூத்திரர்களுள் வேளாளன் மேல், உலகத்தில் நடந்த திருட்டுக்களுள் கள்ளர் திருட்டே பேர் போனது.
4. கெட்ட காலம் வந்தாலும் தப்பிப் பிழைக்கலாம். வேளாளனை எதிர்த்துக் கொண்டு தப்பிப் பிழைக்க முடியாது.
5. வேளாளனால் உன்னைக் கெடுக்க முடியாது என்றாலும் பனையோலையில் அவன் எழுதும் எழுத்து உன்னனைக் கெடுக்கும்.

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வேளாளர் சமணர் எனப் பதியப்பட்டுள்ளனர். இது தொடர்பாகத் திரு ஹெமிங்வே நயினார் அல்லது நாயினார் (பார்க்க: இச் சாதி பற்றிய தனிக் கட்டுரை) பிரிவினரும் உடையார்பாளையத்தைச் சேர்ந்த கரைகாத்த வேளாளரும் இந்து சமயத்திற்கு மதம்மாறிய சமணர்களின் சந்ததியினர் எனக் குறித்துள்ளார்.

வேளாண் செட்டி - Vellan Chetti

வேளாளரான வணிகரைக் குறிக்கும் இப் பெயரை வேளாளர் சிலர் தரித்துக் கொண்டுள்ளனர்.

வெள்ளி - Velli (silver)

பார்க்க: பெள்ளி. (See: Belli)

வெலநாடி - Velnati

காபுகளின் ஓர் உட்பிரிவு. தெலுங்கு நாட்டின் ஒரு பிரிவான வெலநாட்டின் அடிப்படையில் அமைந்த பெயர்.

வெலொமர் - Veloma

அனுலொமா மற்றும் வெலொமா என்ற இரண்டு சூத்திர சாதிப் பிரிவுகளுள் ஒன்று. இப்பெயர் தாழ்ந்த சாதி ஆணுக்கும் உயர் சாதிப் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட உறவின் காரணமாகப் பிறந்தவனைக் குறிப்பது என விளக்கப்பட்டுள்ளது.

வெளுட்டேதன் - Veluttedan

வெளுட்டேதன்கள் மலபாரைச் சேர்ந்த நாயர்கள் மற்றும் உயர் சாதியாருக்கு உரிய வண்ணார். இவர்கள் தங்களை நாயர் எனக் கூறிக் கொண்டு அதுவே தாங்கள் சேர்ந்துள்ள சாதி எனப் பதிந்திருந்தாலும் கணக்கீட்டின் சுருக்கத்தில் இவர்கள் தனிச் சாதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். வடக்கு மலபாரில் இச் சாதியினர் வண்ணட்டான் என அழைக்கப்படுகின்றனர். வெளுட்டேதன்கள் வடபகுதியில் மருமக்கள் தாய உடைமை முறையினையும் தென்பகுதிகளில் மக்கள் தாய உடைமை உரிமை முறையினையும் பின்பற்றுகின்றனர். இவர்கள் தாலிகட்டுச் சடங்கையும் சம்பந்தம் சடங்கையும் வேறுவேறாக நடத்திக் கொள்கின்றனர். இவர்கள் நாயர்கள் நடை உடை, பழக்க வழக்கங்கள் ஆகியனவற்றையே பின்பற்றுகின்றனர் என *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மண்ணாத என்பது இச் சாதிக்கு உரிய கன்னடப் பெயராகத் தரப்பட்டுள்ளது. *1901* திருவாங்கூர் மற்றும் கொச்சி மாநிலங்களின் கணக்கெடுப்பு அறிக்கையில் வெளுட்டேதன் என்பது இவர்களுக்கு உரிய தொழில் தொடர்பான பட்டப் பெயர் எனவும் வெளுத்தேதன் என்பது நாயர்களின் ஒர் உட்பிரிவு எனவும் தெரிவிக்கின்றது.

திருவாங்கூரைச் சேர்ந்த வெளுட்டேதன்கள் பற்றிய பின்வரும் குறிப்புக்கு நான் திரு என்.சுப்ரமணி அய்யருக்குக் கடப்பாடுடையேன். இப் பெயர் துணிகளை வெளுக்கும் இடத்திற்கு உரிய பெயராகத் தெரிகின்றது. பழைய குடியேற்றப் பதிவுகளில் அயவு என்பது இவர்களுக்கு உரிய பெயராகப் பதியப்பட்டுள்ளது. இது துவைத்தலுக்கு உரிய பழைய பெயராகலாம். தென் திருவாங்கூரைச் சேர்ந்த வெளுட்டேதன்கள் இரண்டு அகமணக்கட்டுப்பாடு உடைய குலங்களாகப் பிரிவுபட்டிருப்பதாகத் தெரிகின்றது. பரவூர், அட்டிங்கல் என்ற அப் பிரிவுகள் இரண்டும் நான்கு நான்கு புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகளைக் கொண்டவை. இந்தப் பிரிவுகள் அனைத்தும் இன்று தங்கள் கட்டுப்பாடுகளையும் வேறுபாடுகளையும் இழந்துவிட்டன. முன்னொரு காலத்தில்

பிராமணன் ஒருவன் தன் நண்பனுடைய துணிமணியினைத் துவைத்து வந்ததாகவும் அதனால் அவனைப் பரசுராமர் சாதியிலிருந்தும் விலக்கினார் எனவும் ஒரு வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது. வெளுட்டேதன்களுடைய தொழில் சூத்திர சாதியுட்பட்ட உயர்சாதி இந்துக்களின் துணிகளை வெளுத்தலாகும். இவர்கள் துணிகளை உரிய நேரத்தில் வெளுத்துத் தருவதில்லையாயினும் கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த வண்ணான்களையும் சாயக்காரன்களையும் காட்டிலும் தூய்மையாகவும் நறுவிசாகவும் வெளுக்கின்றனர். வ்ண்ணாரும் சாயக்காரரும் இன்று இத் தொழிலில் இவர்களோடு போட்டியிட்டவர்களாக நகர்ப் புறங்களில் ஓரளவு வெற்றி வாய்ப்புக்களையும் பெற்று வருகின்றனர். இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் சூத்திரர்களுக்கும் தாழ்ந்த சாதியினர் துணிகளை எக்காரணம் கொண்டும் வெளுப்பதில்லை. இதனாலேயே இன்று இவர்கள் தகுதியில் உயர்ந்தவர்களாகக் இருந்துவருகின்றனர். வெளுட்டேதன்கள் தங்கள் பரம்பரைத் தொழிலைத் திறம்படச் செய்துவர வெளுட்டேத்திகளான இவர்கள் வீட்டுப் பெண்கள் பெரும் அளவில் உதவிபுரிகின்றனர் எனலாம். ஒருவரோடு ஒருவர் போட்டியில் ஈடுபட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகாதவர்களாக இவர்கள் நெருக்கமாக ஒரே குடியிருப்புப் பகுதியில் வாழாது தொழிலுக்கு உதவும் பாங்கில் ஆங்காங்கே தனித்து வாழ்ந்து வருகின்றனர். தங்கள் குலத் தொழிலோடு பயிரிடுதலையும் துணைத் தொழிலாகக் கொண்டுள்ள இவர்களிடையே கற்றவர்கள் எவரும் இலர். துவைக்கும் இயந்திரங்கள் அங்கு அறிமுகப்படுத்தப்படும் வரையில் இவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு வேறு புதிய தொழில்களை மேற்கொண்டு செல்லவேண்டி நேராது. நாயர்களைப் போலவே உணவு, உடை, அணிமணிகள் ஆகியனவற்றை இவர்கள் மேற்கொள்கின்றனர். வெளுட்டேதன்கள் கைவசம் மற்றவர்களின் துணிமணிகள் எப்போதும் இருந்து வருவதால் இவர்கள் தங்களுக்கெனத் தனியே துணிமணிகள் விலைக்கு வாங்குவதில்லை. தென்திருவாங்கூரைச் சேர்ந்தவர்களிடையே மட்டும் பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் உள்ளது. பிராமணர்களுடைய கோயில்களுள் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. எனினும் நாளும் தெய்வத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்ல கருவறையைச் சுற்றிப் பாவப்பட்டுள்ள கல்தளத்திற்கு அப்பால் நின்று இறைவனை வணங்க அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு நின்று தெய்வங்களை வழிபடுவதோடு கூடக் கிராம தேவதைகளையும் இவர்கள் வழிபடுகின்றனர். ஒவ்வொரு ஊரிலும் இரண்டு சாதித் தலைவன்கள் உள்ளனர். சாதியாரின் சடங்குகளை முன்னின்று நடத்திக் கொடுப்பதோடு குற்றம் இழைக்கும் சாதியினரைத் தண்டிக்கும் உரிமையினையும் இவர்கள்

பெற்றுள்ளனர். குழந்தை பிறந்த இருபத்தெட்டாம் நாள் குழந்தைக்குப் பெயரிடும் இவர்கள், அன்று அக்குழந்தையின் கழுத்தில் ஒரு நூலினையும் கட்டுகின்றனர். வசதி படைத்தவர்கள் குழந்தைக்குச் சோறூட்டும் சடங்கினையும் நிகழ்த்துகின்றனர். நாயர்களைப் போலவே தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரு சடங்குகளையும் தனித்தனியே நடத்தும் இவர்கள் முன்னதை முகூர்த்தம் எனக் கூறுவர். தாலியினை உண்ட (உருண்ட) மின்னு அல்லது புளியிலை மின்னு என அழைப்பர்.

இவர்கள் மணச் சடங்கு நிகழ்ச்சிகள் நாயர்களின் மணச் சடங்கு நிகழ்ச்சிகளிலும் வேறுபட்டன அல்ல. அயினி உணி, பூதக்கலம், அப்பம் பொலி அவர்திட்டி ஆகிய சடங்குகள் முக்கியமானவை. தென் திருவாங்கூரைப் பொருத்தவரை அவற்றை நிச்சயம் நடத்தியே ஆக வேண்டும். ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார் தங்கள் பெண்கள் பன்னிரண்டு வயதினை அடையும் முன் சடங்குகள் எவையுமின்றியே அதிகாலையில் கதிரவனுக்குப் பொங்கலிட்டுத் தங்கள் பெண்களின் கழுத்தில் தாலியினை அணிவித்துவிடுகின்றனர். இதனைப் பகவான் தாலி என அழைப்பர். இவர்கள் மணவிலக்குப் பெறும் உரிமையும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமையும் பெற்றவர்களாக உள்ளனர். கருவுற்ற ஒருத்திக்குப் புளிக்குடி சடங்கினைச் செய்தே ஆக வேண்டும். மருமக்கள் தாய உடைமை உரிமை முறையினையே இவர்கள் பேணுகின்றனர். வெளுட்டேதன்கள் துவைத்துக் கொண்டு வரும் துணிகளை நம்பூத்ரி பிராமணன்கள் கிழக்குக் கடற்கரையார் சமயச் சடங்குகளின்போது மீண்டும் நீரில் நனைத்து உலர்த்தி உடுத்துவதுபோலச் செய்யாமல் அப்படியே உடுத்திக் கொள்கின்றனர். தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த ஒருவன் தொட்டதால் தீட்டுப்படும் துணி மீது வெளுட்டேதன் விபூதியினையும் தண்ணீரையும் தெளித்து அதனைத் தீட்டு நீக்குகின்றான்.

வேம்பு - Vemu (margosa or nim)

மூக தொரையரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

வேங்கைப் புலி - Vengai Puli (curel- hanled tiger)

கள்ளரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

விரலு ஈச்சே காபுலு - Veralu Iche Kapulu

விரலைக் காணிக்கையாகச் செலுத்தும் காபுகள் எனப் பொருள்படும் இது அவ்வாறு விரலினைத் தரும் பிரிவினருக்கான பெயர். (பார்க்க: மொரசு)

வேசியர் - Veshya

பேசியர் என்ற வடசொல்லின் திரிந்த வடிவம். பரத்தயரைக் குறிக்கும் இதனை நாட்டியக்காரிகளைக் குறிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

வேடகிரி - Vetagiri

செங்கல்பட்டு மாவட்டத்தில் காணப்படும் தமிழ் வகுப்பார். இப் பிரிவினர் வேட்டையாடுதல், பயிரிடுதல், ஈச்சங் கூடைகள் முடைதல் ஆகிய தொழில்களை மேற்கொண்டுள்ளனர். நாய்க்கன் என்பது இவர்களுக்கான பட்டப்பெயர்.

வேட்டைக்காரன் - Vettaikaran (hunter)

போயர், இருளர், குறவர் ஆகியோர் கணக்கெடுப்பின்போது, தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலின் அடிப்படையில் தங்களை இவ்வாறு பதிந்துகொண்டுள்ளார்.

வெற்றிலை - Vettile (bental vine)

கொண்டையங்கோட்டை மறவரின் ஒரு கொது *(குலப் பிரிவு)*

வெட்டியான் - Vettiyan

தமிழ்ப் பறையன்களின் குடியிருப்பினைச் சேர்ந்த தோட்டி என்றும் அழைக்கப்படும் அலுவலனுக்கான பெயர் வெட்டியான். வெட்டியான் என்ற பெயர் தோட்டி என்ற பெயரிலும் மதிப்பு வாய்ந்தது எனக் கருதப்பட்டாலும் இவ்விரண்டிற்கும் இடையே எத்தகைய வேறுபாடும் பாராட்டப்படாமலேயே இவை வழங்கப்படுகின்றன.* வெட்டியான் என்ற பெயர் பிட்டியான் என்பதற்குச் சமமானது எனக் கூறுவர். *(பிட்டி: ஒன்றுமில்லாது)* புல், விறகு முதலியவற்றைச் சேகரித்துக் கொள்ளும் உரிமைக்காகக் கூலியாக எதுவும் பெறாமல் பணி செய்பவன் என்பது இதன்பொருள். தோட்டி என்பது சுற்றி அலைதல் எனப் பொருள்படும் தொட் என்பதிலிருந்து வந்தாதல் வேண்டும். தோண்டு என்ற சொல்லிலிருந்து இது வந்ததாகவும் கொள்கின்றனர். ஊர்ச் சபையினர் முன் மக்களை அழைக்கும் பணியினை மேற்கொண்டவன் இவன்.

வெட்டியான் பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றான். நெல்வயல்களுக்குச் சென்று குடியானவர்களுக்கான தண்ணீர் பாய்ச்சும்

---

* சேலம் மாவட்டக் கையேடு, *1883.* (Manual of the Salem district, 1883.)

முறைப்படி மடைமாற்றுவிடுபவன் இவனே. பொது அறிவிப்புக்களைப் பறை அறைந்து தெரிவிப்பதும் இவனது பணியே. அரசு ஊழியன் என்ற முறையில் வசூலிக்கப்பட்ட வரித் தொகையினைக் கருவூலத்திற்கத் தூக்கிச் செல்லும் பணியும் இவனுடையதே. சில சமயங்களில் இவனிடம் பெருந்தொகையினை ஒப்படைக்கின்றனர். ஒருபோதும் அத்தொகையோடு ஓடிப்போனதில்லை. கிராம முன்சீப் வெட்டியானை நம்புவானேயன்றி தலையாரியினை நம்புவதில்லை. கிராம முனிசீப் தலையாரியினைத் தனியே தொகையோடு அனுப்புவதில்லை. சுடுகாட்டிற்குப் பொறுப்பாக இருப்பவன் வெட்டியானே. அங்குப் பிணத்தை எடுத்துச் செல்பவர்கள் இவனுடைய உதவிப் பணிக்காக ஒரு குறிப்பிட்ட தொகையினைச் செலுத்த வேண்டும். பிணத்தைப் புதைக்கக் குழி தோண்டுபவனும் இவனே. பறையருடைய பிணங்கள் எரிக்கப்படவும் புதைக்கப்படவும் உதவுபவன் வெட்டியானே. மற்றவர் பொறுப்பில் விடப்பட்ட வேண்டிய ஒரு காரியத்தில் குறுகிடுதல் கூடாது என்ற கருத்துப்பட அமைந்த தமிழ்ப் பழமொழி, வெட்டியானும் பிணமும் கட்டிப் புரளட்டும் என்பதாகும். பறையன் ஒருவனின் சாவுச் சடங்கில் சில இடங்களில் வெட்டியானே தீச் சட்டியினைச் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்கின்றான். மழையினை வேண்டித் தாழ்ந்த சாதியினர் சிலர் மேற்கொள்ளும் சடங்கில் மழைக்குரிய தெய்வமான வருணனை நோக்கி முறையிடாமல் கொடும்பாவி என்ற தீய தேவதையிடம் அவளுடைய கள்ளக் காதலனான சுக்கிரனைப் பஞ்சத்தால் பாதிக்கப்படும் இடத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றனர். சுக்கிரன் தன்னுடைய வைப்பாட்டியிடம் இருக்கும்போது பஞ்சம் மேலிடும் என்ற நம்பிக்கையே இச் சடங்கின் அடிப்படையாகும்,. இச் சடங்கில் களி மண்ணால் கொடும்பாவியின் பெரிய உருவத்தைச் செய்து ஒரு வண்டியில் வைத்து ஏழு முதல் பத்து நாள்கள் வரை ஊர்த் தெருக்களில் இழுத்துச் செல்வர். இறுதி நாளன்று அந்த உருவத்திற்குச் சாவுச் சடங்குகளை நிகழ்த்துவர். இதனால் கொடும்பாவி வெட்கம் உற்றவளாகத் தன் காதலனான சுக்ரனை அனுப்பி வைப்பாள் எனவும் அதனை அடுத்து மழை பெய்து பஞ்சம் தீரும் எனவும் நம்புகின்றனர்.

பறையர்களுடைய திருமணத்தின்போது சில பானைகளை வழிபடுகின்றனர். சில இடங்களில் அப்போது வெட்டியானே, சூரியன், சந்திரன், பானைகள், பெண்ணிற்கு உரிமை பாராட்டுபவன் ஆகியோர் மணப் பந்தலுக்கு வந்துள்ளனர் எனவே விரைந்து இந்தப் பானைகளில் தண்ணீரை நிரப்புங்கள் என்று கூறுவான்.

கிராமப் பணியாளனான வெட்டியானின் பதவி பரம்பரை உரிமையுடையது. இப்பதவியில் இருப்பவன் தன் சாதியாரிடையே ஓரளவு

மதிப்பினைப் பெறுவதோடு அறுவடைப் பருவத்தில் பதவிக்கு உரிய ஊதியமாக கொஞ்சம் தானியமும் பெறுகின்றான். "தன்னை ஆள வந்தவன் எப்படிப்பட்ட செல்வ வளம் உடையவனாயினும் அவனுக்கு ஒரு புல்லுக்கட்டுத் தரும் கடமை வெட்டியானுக்கு இருந்தே தீரும்" என்ற பழமொழியும் உள்ளது. இப் பழமொழி நாட்டுபுறங்களில் வெட்டியான் மீது மற்றவர்கள் அதிகாரம் செலுத்தும் உரிமையுடையவர்களாக உள்ளனர் என்பதனை விளக்குவதாகும். சில இடங்களில் வெட்டியான் மானியம் எனப்படும் வரியிலி நிலங்கள் வெட்டியான்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளன.

கிராமத்தில் இறந்துபோன கால்நடைகளை அப்புறப்படுத்தும் உரிமை வெட்டியான்களுடையதே. இதற்கு ஈடாக உழவுத் தொழிலுக்குத் தேவையாக் தோலினைக் கொடுத்து உதவுவது இவர்கள் கடமையாகும். பதப்படுத்தப்படாத தோலைப் பயன்படுத்தி இவர்கள் தப்பட்டை, முரசு ஆகியவற்றினைத் தயாரிக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.*

இடங்கை, வலங்கைப் பிரிவினருக்கு இடையேயான சச்சரவுகள் நிகழ்ந்த காலத்தில் வெட்டியான்கள் வலங்கைப் பிரிவினைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர்.

வேட்டுவன்கள் - Vettuvan

தமிழ் வேட்டுவன்களைப் பற்றி *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தரப்பட்டுள்ள விளக்கம் வருமாறு: சேலம், கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களிலேயே சிறப்பாகக் காணப்படும் வேட்டுவன்கள் பயிரிடுதலையும் வேட்டையினையும் தொழிலாகக் கொண்ட சாதியினர். வேட்டுவன் என்ற சொல் வேட்டையாடுபவன் எனப்பொருள்படும். இவர்களும் வேடன்கள் சாதியினையொத்த சாதியினரே. இவ்விரு சாதியினரும் ஒரு பொதுச் சாதியிலி ருந்து கிளைத்தவர்கள் எனினும் இவர்களுக்கிடையேயான உறவு தெளிவாகப் புலனாகவில்லை. இன்று இவர்கள் தங்களை வேடன்களைவிட உயர்ந்த சாதியினர் எனக் கூறிக் கொள்வதோடு தங்களை வேட்டுவ வேளாளர் எனக் கூறிக்கொள்ளவும் தொடங்கியுள்ளனர். கொங்கு நாட்டு அரசர்கள் சோழ

---

* எ.சாட்டெர்டன் - தோல் பதனிடுதல் மற்றும் தோல் தொழில் தொடர்பான தனிக்கட்டுரை, *1904*. (A.Chatterton-monograph on Trainign and Working a Leather, 1904.)

நாட்டிலிருந்தும் பாண்டிய நாட்டிலிருந்தும் கேரளத்திற்கு எதிராகத் தங்களுக்கு உதவுவதற்கு வேட்டுவன்களை அழைத்து வந்தனர் என வழக்கு வரலாறு கூறுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ மன்னனான ஆதித்யவர்மன் கொங்கு நாட்டை வெற்றி கொள்ள உதவியவர்கள் இவ்வேட்டுவன்களே என மற்றொரு வழக்கு வரலாறு கூறுகின்றது. *1891* ஆம் ஆண்டைய கணக்கெடுப்பு அறிக்கையில் *538*ஆம் பத்தியில் ஈழத்தைச் சேர்ந்த வெட்டர் இனத்தவரும் வேடன்களும் ஒருவரே எனக் கொள்ளத் தக்க குறிப்புக் காணப்படுகிறது. இவ்வாறு கொள்வதற்கு ஆதாரமாக வேட்டுவன்கள் கண்டி அம்மன் என்ற தேவதையினை வழிபடுவதைக் கூறுவர். கண்டி அம்மன் என்பது ஈழத்தில் உள்ள கண்டியினைச் சேர்ந்த தேவதையினைக் குறிப்பதாகலாம். இச் சாதியாரின் அகமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகளுள் வெங்கஞ்சி, கிழங்கு, பசரி, விறகு, பன்னாடை, வில்லி என்ற பிரிவுகள் எண்ணிக்கையில் மிக்கவர்களைக் கொண்டுள்ள பிரிவுகளாம். இச் சாதியாருக்கு எனத் தனியே அம்பட்டர் உள்ளனர். இவர்கள் வேட்டுவ அம்பட்டர் அல்லது நாவிதர் என்ற தனிப் பிரிவினராக உள்ளனர். இரண்டும் அம்பட்டர்களைக் குறிக்கும் சொற்களே. கொங்கு வேளாளரினும் தாழ்ந்த சாதியினருக்குத் தொழில் புரிய இவர்கள் உடன்படுவதில்லை. பெயரளவில் இந்துக்களாக உள்ள வேட்டுவன்கள் இருளர்கள் வழிபடும் ஆதிகாலத் தேவதைகளான ஏழு கன்னிமாரை வழிபட்டு வருகின்றனர். இறைச்சி உண்பதனையும் மதுக்குடித்தலையும் பழக்கமாகக் கொண்டுள்ள இவர்களுள் சிலர் தங்கள் சமூகத் தகுதியினை உயர்த்திக் கொள்ள வேண்டி மரக்கறி உணவுக்காரர்களாக மாறியுள்ளனர். கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்வதனை இவர்கள் அனுமதிப்பதில்லை. இறந்தவர்களை எரிக்கவோ புதைக்கவோ செய்யும் இவர்கள் மூதாதையர்களுக்காக வேறு எந்தச் சடங்கினையும் மேற்கொள்வதில்லை. இவ் வகையில் இவர்களுடைய வழக்கங்கள் உயர்சாதியினரும் தாழ்ந்த சாதியினரும் மேற்கொள்ளும் வழக்கங்களின் கலப்படமாக உள்ளன. கவுண்டன் என்பது இவர்களுக்கான பொதுவான பட்டப்பெயர்.

மலபாரிலும், தென் கன்னட மாவட்டத்தின் தென்பகுதியிலும் வாழும் மலையாளத்து வேட்டுவன்களைப் பற்றி *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: விவசாயத் தொழில் செய்யும் அடிமைகளாகவும் வேட்டைக்காரர்களாகவும் காடுபடு எளிய பொருள்களைச் சேகரிப்பவர்களாகவும் உள்ள இவர்கள் மலபாரில் காடுகளில் வாழ்கின்றனர். கோடி, பெரிங்கல என்ற இரண்டு அகமணக்கட்டுப்பாடு உடைய உட்பிரிவுகள் இவர்களிடையே உள்ளன. கோடி பிரிவினர் தலைமுடியினை நீள

வளர்க்கின்றனர். இவர்கள் பிரிவுப் பெண்கள் துணியினை ஆடையாக அணிகின்றர். பெரிங்கலப் பிரிவினர் தலைமுடியினை உச்சந்தலையில் முடிச்சிட்டுக் கொள்கின்றனர். இப்பிரிவுப் பெண்கள் இடையில் இலைகளையே ஆடையாக அணிகின்றனர். நாள்தோறும் அந்த இலையாடைகளை மாற்றிக் கொள்வர். பெரிங்கல் பிரிவினர் தூய்மை பேணாதவர்கள். மூங்கிலாலும் நாணல்களாலும் பரும்போக்காகக் கட்டப்பட்ட குடிசைகளில் வாழ்கின்ற இவர்கள் செத்த விலங்குகளின் உடல்கள் உட்பட அனைத்தையும் உணவாக உட்கொள்கின்றனர். எனினும் செறுமான்கள், புலையன்கள் ஆகியோரைவிடத் தங்களை உயர்ந்தவர்கள் எனக் கருதும் இவர்கள் அவர்களால் தீட்டுப்படாதபடி பார்த்துக் கொள்கின்றனர். மலபாரில் சமவெளிகளில் வாழும் கொத்தனார்களும் உப்பு எடுப்போரும் இதே பெயரைத் தங்களுக்குரிய பெயராகக் கொண்டுள்ளனர்.

மலபாரைச் சேர்ந்த வேட்டுவன்கள் முன்பு தாங்கள் இன்றுள்ள நிலையினையொத்த மிகத் தாழ்ந்த நிலையினராக இருக்கவில்லை என்பதனை விளக்கக் கற்பனை நயஞ்சார்ந்த வழக்கு வரலாறு ஒன்றினைக் கூறுவதாகச் சொல்லப்படுகிறது. தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவன் உயர்சாதி இந்துவான நாயர் ஒருவனிடம் சென்று அவருடையை மகளைத் தனக்கு மணம் செய்து தரும்படி கேட்டான். அந்த நாயர் அவர்கள் இனத்தைச் சேர்ந்த அனைவரும் தன் வீட்டுக்கு வந்து கொட்டையினை உடைய கனிந்த தீங்கனிகள் மீது நடனமாட வேண்டும் எனவும் அப்போது கீழே விழுவர்கள் அம்பால் எய்யப்படுவர் எனவும் இதற்கு உடன்பட்டால் தன் மகளை மணம் செய்து தருவதாகவும் கூறினான். இதன் பின்விளைவை உணராது அறிவிலிகளான அந்த இனத்தவர்களும் இதற்கு உடன்பட்டு அங்கு வந்த நடனமாடி ஒவ்வொருவராக இடறி விழவே கருணையின்றி அம்பெய்து கொல்லப்பட்டனர். இந்த அவலத்திலிருந்து உயிர்தப்பிய ஒரு சிறுமியினை அருள் உள்ளம் கொண்ட நாயர் ஒருவன் ரகசியமாக அழைத்துச் சென்று தன் குடும்பத்தில் அவளை மணம் செய்து கொடுத்தான். இந்த உறவின் வழிப் பிறந்தவர்களே வேட்டுவன்கள் என இவர்கள் தங்கள் தோற்ற வலாற்றைக் கூறுகின்றனர். இன்றுவரை வேட்டுவன்கள் இவ்வாறு தங்கள் இனத்தைக் காத்த அந்த நாயரின் பரம்பரையில் வந்த குடும்பத்தினரிடம் மிகுந்த ஈடுபாடுடையைவர்களாக நடந்து கொள்கின்றனர்.* இந்த வேட்டுவன்கள் உடைகளைப் பற்றிப் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:**

* சென்னை மெயில் நாளிதழ், *1907*. (Madras Mail, 1907.)

** Ibid.

இவர்கள் இறக்கம் குறைந்த வேட்டி ஒன்றினை இடையில் கட்டி அதனைக் கச்சை ஒன்றால் இறுக்கிக் கொள்கின்றனர். இதே கச்சை வேட்டையின்போது கருவிகளைத் தொங்கவிட்டுக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றது. காதில் பித்தளைக் கடுக்கனை அணியும் இவர்கள் அரும்பு மீசையும் கட்டைத் தாடியும் வைத்துக் கொள்கின்றனர், பெண்கள் நீண்ட இலைக் கொத்துக்களை மூன்று சுற்றாக மலிவான நூலான கச்சையில் கட்டித் தொங்கவிட்டுக் கொள்கின்றார்கள். உலகம் தோன்றிய காலத்தில் உலகில் வாழும் பல இனத்தவர்களுக்கும் தெய்வம் உடுப்பதற்கான உடைகளை வழங்கியது. வேட்டுவர் சாதிப் பெண்களிடம் அன்றாடம் மாற்றிக் கொள்ளும்படியான ஆடை, ஆண்டுக்கு ஒரு முறை மாற்றுக் கொள்ளும்படியான ஆடை ஆகியவற்றுள் ஒன்றினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி கூற, அவர்கள் நாளும் மாற்றிக் கொள்வதற்குரிய ஆடையினைத் தேர்ந்தெடுத்தனர். இதனை ஆணவம் மிகுந்த மன்னிக்க முடியாத குற்றம் எனக் கருதிய தெய்வம் அவர்களிடம் நாளும் காலையில் புதியனவாக இலைகளைச் சேகரித்து அணிந்துகொள்ளும்படி பணித்தது என்ற ஒரு வழக்கு வரலாறு வழங்கி வருகின்றது. வேட்டுவன் சாதிப் பெண்களிடம் இலைகளுக்குப் பதிலாகத் துணியினை அணிய வேண்டும் எனக் கூறினால் இவர்கள் தாங்கள் தெய்வத்தின் கட்டளையினை ஏற்று நடப்பதாகவும் தெய்வமே நேரில் தோன்றி ஆடையினை மாற்றிக் கொள்ள அனுமதி வழங்கினால்தான் தாங்கள் அவ்வாறு மாற்றிக் கொள்ள முடியும் எனவும் கூறுகின்றனர்.

சென்னை மாநில ஆளுநர் தென் கன்னட மாவட்டத்திற்கு வருகை புரிந்தபோது அதிகாரிகள், வேட்டுவன்கள் குழு ஒன்றினை அவர் முன் அணிவகுத்து நடத்திச் சென்றனர். அவர்களுள் ஒருவன் அலுமனியத்தாலான முடிசூட்டுவிழா நிகழ்ச்சியினைக் குறிக்கும் பதக்கம் ஒன்றினை அணிந்திருந்தான். மாவட்ட ஆட்சியர் அதனை அவனுக்கு வழங்கியர் யாரெனக் கேட்டபோது அவன் பணிவுடன் கரம்கூப்பியவனாக என் தம்பிரான் எனப் பதிலிறுத்தான்.

இலையினை ஆடையாக அணியும் வேட்டுவன்கள் பற்றிய அண்மைக் காலக் குறிப்பு ஒன்றில் கூறப்பட்டிருப்பதாவது: இவர்கள், கதிரவன் மாலையில் பூமியில் உள்ள ஒரு குகையின் வழியாக நுழைந்து மறைந்தபின் மீண்டும் மறுநாள் காலையில் கிழக்கே தோன்றுவதாகவும் நம்புகின்றனர். இவர்கள் நேரத்தை விசித்திரமான முறையில் கணக்கிடுகின்றனர். ஒரு வேட்டுவன் தன் பண்ணையார் எந்தெந்த மலைகளில் நெல் விதைத்துக் கொண்டிருந்தபோது

தனக்குக் குழந்தைகள் பிறந்தன என்பதனைத் தெரிவித்தான். நம்பிக்கைக்கும் நல்லொழுக்கத்திறகும் பெயர்போன இவர்களுடைய சாதிப் பெண்கள் கற்பொழுக்கத்தை மிகப் புனிதமானதாகப் போற்றுகின்றனர்.

மலபாரைச் சேர்ந்த வேட்டுவன்களைப் பற்றித் திரு டி.கே.கோபால் பணிக்கர் தொகுத்துக் கூறியிருப்பது* வருமாறு: இவர்கள் முழுக்க முழுக்க அடிமைகளாக உள்ளனர் எனக் கூறமுடியாது. எனினும் இவர்கள் பெற்றுள்ள சமூகப்படிநிலைத் தகுதியினைப் பார்க்கும்போது இவர்களை அடிமை இனத்தவர்களுள் ஒருவராக வகைப்படுத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. நாயர்களுடையவும் பிற வளம்படைத்த சாதியாருடையவுமான தென்னந்தோப்புகளினுள் இவர்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு தங்கி வாழ்கின்றனர். தென்னந் தோப்புகளில் தேங்காய் பறித்தல், மண்வெட்டுதல் முதலான பணிகளோடு வேலிகள் அமைத்து பாதுகாக்கும் பணியினையும் மேற்கொள்ளும் இவர்கள் அதனால் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு போதும்போதாததான வாழ்க்கை நடத்தி வருகின்றர். தங்கள் மனைவி மக்களுடனும் சில சமயங்களில் பிற உறவினர்களுடனும் பிற தாழ்ந்த் சாதியினரின் குடிசைகளைவிடச் சற்றே மேம்பட்ட தோற்றத்தைத் தருகின்ற குடிசைகளில் இவர்கள் தங்கி வாழ்கின்றனர். சாதிக் கட்டுப்பாடு தொடர்பான விதிகளிலும் இவர்கள் மற்றவர்களைப் போல் இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு உள்ளானவர்களாக இல்லை. உயர்சாதியாரோடு அன்றாடம் மேற்கொள்ளும் தொடர்பு காரணமாகப் பிற அடிமைச் சாதியினரைவிட அறிவு விளக்கமும் நாகரிக முன்னேற்றமும் பெற்றவர்களாக இவர்கள் விளங்குகின்றனர். கள் குடிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டும் இவர்களின் முக்கிய உணவு அரிசியே. இவர்கள் நிலை பிற வகுப்பாரின் நிலையினைப் போல மிகக் கேவலமானதாக ஒருபோதும் இருந்ததில்லை. பயிரிடுவோர் சில சமயங்களில் இவர்களைப் பயிர்த்தொழிலுக்குக் கூலிகளாக அமர்த்துகின்றனர். இவர்கள் சாதிப் பெண்களும் அறுவடையின்போது வயலில் சென்று உழைக்கின்றனர். டிசம்பர், சனவரி மாதங்களில் இப்பெண்கள் வீட்டுக் கூரைகள் வேய்வதற்கான தென்னந்தடுக்குகளைப் பின்னுகின்றனர். ஆண்கள் காதுகளில் பித்தளைக் கடுக்கன்கள் அணிகின்றனர். பெண்கள் மூக்கு, விரல், கழுத்து ஆகியவற்றில் பித்தளை கடுக்கன்கள் அணிகின்றனர். ஆண்டுக்கு ஒருமுறை பண்ணையார் தரும் ஒரே துணியினை இவர்கள் ஆண்டுமுழுதும் இடையில் அணிந்து

* மலபாரும் அங்கு வாழ்வோரும், *1900.* (Malabar and its Folk, 1900.)

வருகின்றனர். இறந்த விலங்குகளின் பிணங்களை இவர்கள் உண்பதில்லை. மீன் உணவில் ஆர்வங்காட்டும் இவர்கள் மீன், புனுகு பூனை, எலி முதலிய பிற சாதியார் வழக்கமாக உண்ணாத விலங்குகளின் இறைச்சியினை விரும்பி உண்கின்றனர். உயர்சாதியினரைப் போலவே சாவுத் தீட்டினை இவர்கள் மேற்கொள்கின்றனர். தாங்கள் எந்தப் பண்ணையாரின் கீழ் பணிபுரிய நேர்கின்றதோ அந்தப் பண்ணையார் தீட்டு மேற்கொள்ளும் நாள்களின் அளவே இவர்கள் தீட்டு மேற்கொள்ளும் நாள்களின் அளவாகும். இவர்கள் ஒரு நாயரின் பண்ணையில் அல்லது தோட்டத்தில் பணி புரிந்தால் பதினைந்து நாள்கள் தீட்டினை மேற்கொள்கின்றனர். பிராமணர்கள் பண்ணையில் பணிபுரிவோர் பத்து நாள்கள் மட்டுமே தீட்டு மேற்கொள்கின்றனர். இவை நாயர்களுள் பிராமணர்களும் தீட்டு மேற்கொள்வதற்கான நாள்கள் ஆகும், இவர்களுடைய சடங்குகளை இவர்கள் இனத்தைச் சேர்ந்த புரோகிதர்கள் அல்லது இணங்கன்கள் நடத்தி வைக்கின்றனர். ஒரு சடங்கு முறையானதாகக் கருதப்பட சாதியினைச் சேர்ந்த இப் புரோகிதர்களின் ஒப்புதல் இன்றியமையாதாகும். இவர்கள் திருமணச் சடங்குகள் தீயர்களின் சடங்குகளை ஒத்தவை., எனினும் விருந்துகளும் கோலாகல நிகழ்ச்சிகளும் அவர்கள் மணங்களில் நிகழ்வதைப் போல விரிவானவையாக நடவாது. நாயர்களைப்போல இவர்களும் தலையில் முன்பக்கமாக முடியினை முடிச்சிட்டுக் கொள்கின்றனர். தேங்காய், வாழைக்காய், பாக்கு, கிழங்கு ஆகியவற்றின் சிறு திருட்டுக்களே இவர்கள் ஈடுபடும் குற்றச் செயல்களாகும். நம்மைப் படைத்தவர் எனப் பொருள்படும் படுசத்தம்புரம் எனப்படும் முழுமுதற் பொருளினை வேட்டுவன்கள் நம்புகின்றனர். இதே போன்று இவர்கள் சில தீங்கிழைக்கும் தேவதைகளிடத்தும் நம்பிக்கையுடையவர்களாக உள்ளனர். இத் தேவதைகளுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் பலி தருகின்றனர். இவர்கள் பிற வகுப்பாரைப்போல தங்கள் எசமானர்களிடம் நாளில் பலி தருகின்றனர். இவர்கள் பிற வகுப்பாரைப்போல தங்கள் எசமானர்களிடம் மிகுந்த நன்றிபாராட்டும் வகுப்பார் அல்லர். நம்பு வேட்டுவன் என்ற இவர்களுடைய பெயரே இவர்கள் நம்பிக்கைக்கு உரிய வரல்லர் என்பதனைத் தெளிவுபடுத்துவதாகும்.

மலபார் விவரக் குறிப்பில் வேட்டுவன்களைப் பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: சிரக்கல் வட்டத்தைச்சேர்ந்த வேட்டுவன்கள் காடுகளில் பயிரிட்டும் கூடை முடைந்தும் வாழ்க்கை நடத்தும் தாழ்ந்த சாதியார், இச் சாதிப் பெண்களிடையே இலைகளை ஆடையாக உடுத்தும் வழக்கம் இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இரட்டை விசிறி வடிவிலான இலைக்

கொத்துக்களை மட்டுமே இடையில் திரிக்கப்பட்ட துணிக்கயிற்றில் பிணைத்து ஆடையாக அணிகின்றனர். மூங்கில்களைப் பிளந்து அமைக்கப்பட்டு யானைப் புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் இவர்கள் வாழ்கின்றனர். வேட்டுவன்கள் பதினான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்த ஜன்மி (பண்ணையார்) யின் கீழ் பணியாற்றுகின்றார்களோ அவர்களின் இல்லப் பெயர்களே இவர்களுடைய இல்லப் பிரிவுகளுக்கும் உரிய பெயர்களாக உள்ளன. ஜன்மிகளால் பதவியில் அமர்த்தப்படும் இவர்கள் சாதித் தலைவன் கிரான் எனப்படுவான். சிலபோது அவனைப் பறைக்குட்டி எனவும் அழைப்பர். பெண்களுக்குப் பேற்று வலி வந்தவுடன், ஒரு மலைமேல் உள்ள குடிசையில் தோண்டப்பட்ட குழியில் தனியே கொஞ்சம் தண்ணீரோடு விட்டு வைப்பர். பிறந்த குழந்தையின் அழுகுரல் கேட்கும்வரை அவளை யாரும் நெருங்குவதில்லை.

கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த வேட்டுவன்களைப் பற்றிப் பின்வரும் குறிப்புக்கு நான் திரு எல்.கே.அனந்தகிருட்டிண அய்யருக்குக் கடப்பாடுடையேன்.*

வேட்டுவர் வேட்டுவப் புலையர் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பயிர்த்தொழில் தொடர்பான உழுதல், விதைத்தல், நாற்றுநடுதல், களைபிடுங்குதல், நீர் இறைத்தல், அறுத்தல் முதலிய எல்லாத் தொழில்களையும் செய்யும் கூலிகளாகவே உள்ளனர். பகலில் கூலி வேலை பார்க்கும் ஆண்கள் இரண்டணா மதிப்புக் கூடப் பெறாத இரண்டிடங்கழி நெல்லும் பெண்கள் ஒண்ணரை இடங்கழி நெல்லும் கூலியாகப் பெறுகின்றனர். பஞ்ச காலத்தில் இவர்கள் வயிறு வளர்க்க மிகுந்த தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

"திருமணம் ஆகாத ஒருத்தி கரு உறுவாளாகில் அந்தச் செய்தி வெளிப்பட்டவுடன் அவள் பெற்றோர் அதனை உள்ளூர் சாதித் தலைவனான கணக்கன் எனப்படும் குருப்பனுக்குத் தெரிவிப்பர். அவன் சாதியினைச் சேர்ந்த மூத்தோர் கூட்டத்தைக் கூட்டி அவளுடைய கள்ளக் காதலன் யாரென்பதைக் கேட்டறிய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வான். அவ்வாறு கண்டறியப்பட்டவன் உண்மையினை ஒத்துக் கொள்வானாகில் அவர்கள் அவனை அவளை மணம்புரிந்து கொள்ளும்படி வேண்டுவர். இத்துடன் அந்த வழக்கு முடிந்து விடுவதில்லை. அவர்கள் தங்கள் வட்டாரத்துக்கு உரிய தண்டானிடம் சென்று நடந்தவை அனைத்தையும் கூறுவர். அவன் குற்றம் புரிந்தவனுக்குக் கிண்டி

* கொச்சி மாநில இன இயல் கணக்கீடு பற்றிய தனிக் கட்டுரை, *1905*.
(Monograph, Ethnological Survey of Cochin, 1905)

வெள்ளம்" எனப்படும் தண்ணீர் குடிக்கும் சடங்கை செய்து வைப்பான். குற்றம் இழைத்தவளும் இத் தண்ணீரைக் குடிப்பதோடுகூடப் பசுஞ்சாண நீர் கொஞ்சத்தையும் குடிக்க வேண்டும். பின்னர் அவளுடைய உடலிலிருந்து சில சொட்டுகள் குருதி வெளியேற்றப்படும். இதன் பின் அவள் தோஷம் தீர்ந்தது எனக் கூறுவான், அவளுடைய காதலன் அவளை மணந்துகொள்ள மறுப்பானாகில் அவனை நன்கு உதைத்துச் சாதிவிலக்கம் செய்வர். இவர்கள் இருவரும் உறவுடையவர்களாயின் அவ்விருவருமே சாதிவிலக்கத்திற்கு உள்ளாவர். தோசம் தீர்த்து வைக்கப்பட்டவள் வேறொருவனை மணந்துகொள்ள உரிமையுடையவளாகின்றாள், தண்டான் இதற்குரிய தனக்குச் சேரவேண்டிய தண்டத்தொகையாக நான்கணா, நான்கு கட்டு வெற்றிலை, எட்டுப் பாக்கு, மூன்று புகையிலை ஆகியனவற்றைப் பெறுகின்றான். இதில் உள்ளூர் சாதித் தலைவன் தனக்குரிய பங்கினைப் பெற்றது போக எஞ்சியதை அனைவரும் கள்ளுக்கும் அவலுக்குமாகச் செலவிடுவர்.

வேட்டுவன்கள் இந்து சமயத்தின் பாமரருக்குரிய நெறிமுறைகளையே பின்பற்றுகின்றனர். செவ்வர், சாத்தன், கரிங்குட்டி, பறக்குட்டி, கப்பீரி, கண்டகர்ணன், நம்பூரி தம்புரான் ஆகியனவே இவர்கள் வழிபடும் முக்கிய தெய்வங்கள். குடும்பத்துக்குத் தீங்கு தரும் இவற்றின் சினத்தைத் தணிக்க வேண்டி அவ்வப்போது இவர்கள் இவற்றுக்குப் பலிகள் தருவர். இந்தத் தெய்வங்களின் உருவத்தை வெண்கலத்தால் செய்து குடிசையில் வைத்து வழிபடுவர். இறந்துபோன மூதாதையர்களையும் தெய்வமாகப் பாவித்து வழிபடுவர். மூதாதையருக்குத் தரப்படும் பலி தெய்வங்களுக்குத் தரப்படும் பலியில் வேறுபட்டது. மூதாதையருக்கான பலியில் கள் இன்றியமையாது இடம் பெறவேண்டும். ஓரகத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வேட்டுவன்களைப் பற்றிய குறிப்புகளை நான் சேகரித்தபோது அங்கு தென்னை மரங்களில் கள் இறக்கப்படுவதில்லையென்றும் விற்பனைக்காக அங்குக் கொண்டு வரப்படும் கள் தண்ணீர் கலக்கப்பட்ட அதிகம் விலையுள்ளதான கள் ஆகும் எனக் கூறினர். இத்தகைய மட்டமான கள்ளைப் படைப்பதால் தங்கள் தெய்வங்கள் திருப்தியுறாமல் கோபங்கொண்டுள்ளனவென்று என்னிடம் கூறினர். இத் தெய்வங்களின் சினத்தால் சுரம், காதுகேளாமை, கண்பார்வை இழத்தல் முதலிய குறைபாடுகள் தோன்றுகின்றன என நம்புகின்றனர். காளியினையும் இவர்கள் வழிபடுகின்றனர். கும்பொம்பரணி இவர்களுக்கு முக்கியமான திருவிழாவாக உள்ளது. அன்று அதிகாலையில் காளிக்குரிய பாடல்களைப் பாடுவர். இதற்கெனத் தனியே தோட்டம்பாட்டு என்ற பாடல்கள் உள்ளன. அதிகாலையிலேயே தெய்வத்திற்கான

படையல்களை இட்டு முடித்துவிடுவர். தெய்வத்தின் வாள், சிலம்பு, இடையில் அணிந்துள்ள சலங்கைகள் ஆகியனவற்றுக்கும் பூசை போடுவர். இவையனைத்தையும் அத் தெய்வ உருவின் முன் வைத்து பாட்டுப் பாடுவர். இவர்களுள் ஒருவன் வெளிச்சப்பாடாகத் தெய்வம் ஏறப் பெற்று வருங்காலத்தில் நிகழ உள்ளன பற்றி உரைப்பான். மேலே கூறிய அணிகளை அணிந்தவர்களாக அவர்கள் ஒரு கோயிலுக்குச் சென்று ஒரு பாயினை விரித்து அதன் மேல் நான்கைந்துவரை நெல்லினைப் பரப்பி இன்னிசை முழக்கத்தோடு மீண்டும் பாடுவர்.

"வேட்டுவன்களின் சாவுச் சடங்குகள் மிக விரிவானவை. ஒருவன் உயிர் பிரிந்தவுடன் அவன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கரையினைச்சேர்ந்த சாதியினருக்கும் அத்தகவல் தெரிவிக்கப்படும். சாவுச் சடங்குகளில் அவர்கள் வந்து பங்கு பெறுவர். பிணத்தைக் குளிப்பாட்டிப் புதிய துணி போர்த்திக் கிடத்துவர். ஒரு கல்லில் கொஞ்சம் தங்கத்தைத் தண்ணீர் விட்டு உரைத்து இறந்தவன் வாயில் அவன் மகன்களும் மகள்களும் விடுவர். கருவாங்குக எனப்படும் குருத்துவம் பெறுதல் என்ற சடங்கு இறந்தவனுடைய மகன்களும் மகள்களும் நடத்தும் முக்கியமான சடங்காகும். இச் சடங்கின்போது பதினாறு சிறிய வாழையிலைத் துண்டுகளில் சிறிது அரிசியினை வைத்து அவற்றைப் பிணத்தின் நெற்றி, கழுத்து, மார்பு, வயிறு, தொடைகள், கைகள், கால்கள், பாதங்கள் முதலியவற்றின் மீது வைத்தபின் கால்களையும் பாதங்களையும் அலம்பிய நீரினை இறந்தவருக்கு இளையவரான குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் குடிப்பர். இதன்பின் பிணத்தைப் பாடையில் வைத்து நால்வர் புதைகாட்டுக்குத் தூக்கிச் செல்வர். குடும்பத்தைச் சேர்ந்த பெத்தகர் எனப்படும் நான்கு நெருங்கிய உறவினர்கள் தலையில் முண்டாசு கட்டியவர்களாகப் பிணத்திற்கு முன் செல்வர். புதைகுழியினைத் தோண்டியபின் ஒரு துணியினை விரித்து அதில் பிணத்தைக் கிடத்துவர். பிணத்தை நாய், நரி, முதலியன தோண்டாதிருக்கக் கல்லையும் மண்ணையும் அடுக்கடுக்காக மாறி மாறிப் பிணத்தின் மீது பரப்புவர். கருமாந்திரம் செய்பவரோடு உடன்சென்ற அனைவரும் குளித்து இல்லம் திரும்புவர். குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அன்று இரவு உணவு உண்ணார். குருமாந்திரம் செய்பவனான மூத்தமகன் மறுநாள் காலையில் குளித்த பின் இறந்தவரின் ஆவிக்குப் பிண்டப் பலி தருவான். தொடர்ந்து பதினைந்து நாள்கள் இவ்வாறு பலி தருவான். ஏழாம் நாள் கருமாந்திரம் செய்பவனும் அவன் இணங்கனும் புதைகுழியுள்ள இடத்திற்குச் சென்று சற்றே உயர்ந்துள்ள புதைகுழியின் மேட்டினைச் சமம் செய்து, புதைகுழியின் காலடியில் வைக்கப்பட்ட ஒரு கல்லினை எடுத்து அதனை

ஒரு இலையில் மீது வைப்பர். கொஞ்சம் கள், சாராயம், இளநீர் ஆகியவற்றை அக் கல்லின் மேல் ஊற்றுவர். சில மந்திரங்களின் சக்தியால் இறந்தவரின் ஆவி அந்தக் கல்லில் புகுந்து உறைவதாக இவர்கள் நம்புகின்றனர். அந்தக் கல்லை வீட்டுக்குக் கொண்டு வந்து மஞ்சளிட்டுக் கலக்கப்பட்ட எண்ணெய் உள்ள தேங்காய்ச் சிரட்டையில் வைப்பர். தீட்டுக் காலம் நீங்கும்வரை அது வீட்டுக்குப் புறத்தே வைத்திருக்கப்படும். தீட்டுக் காலம் பதினைந்து நாள்களாகும். பதினைந்தாம் நாள் இரவு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாது விரதம் இருப்பர். பதினாறாம் நாள் காலையில் கரையைச் சேர்ந்த அழைக்கப்பட்ட சாதியினர் அனைவரும் தங்களோடு அரிசி, கறிப் பொடிக்கான பொருள்கள், கள் ஆகியனவற்றைக் கொண்டு வருவர். அனைவரும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு குளிக்கச் செல்வர். அதன்பின் இணங்கன் அவர்கள் தீட்டிலிருந்து விடுபட்டு விட்டனர் என்பதற்கு அறிகுறியாக அவர்கள் மீது பசுஞ்சாண நீர் தெளிப்பான், புதை குழியிலிருந்து எடுத்து வரப்பட்ட கல்லினை அந்த நீரில் முக்கி எடுத்துத் தீட்டு நீக்கப்பட்ட பின் அதனை வீட்டினுள் கொண்டு வருவர். கூடியுள்ள அனைவரும் விருந்துண்டபின் அங்கிருந்து புறப்படுவர். துக்கம் கொண்டாடுபவன் ஓராண்டு வரை முகம் மழித்துக்கொள்ளாமல் தீக்சாவாக இருந்து நாள்தோறும் காலையில் குளித்து வேலைக்குப் புறப்படும் முன் இறந்தவருக்குப் பலி தருவான். ஓராண்டு காலம் இவ்வாறு செய்தபின் அவன் முகம் மழித்துக் கொண்டு இறந்தவரின் நினைவாக மசம் எனப்படும் விருந்தை நிகழ்த்துவான். இறந்தவரின் ஆவி உறைவதாகக் கருதப்படும் கல் குடிசையில் அனைவருக்கும் புலப்படும்படியாக மேடான ஓரிடத்தில் வைக்கப்படும். சில சமயங்களில் இக் கல் உருவத்திற்குப் பதிலாக மரத்தால் அல்லது செம்பாலான உருவினை வைப்பர். அது குடும்பத்திற்கு நலம் சேர்க்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து வழிபட்டு வரப்படும். கற்கடகம், துலாம் சங்கராந்தி ஓணம் விசு, உள்ளூர் கோயில் திருவிழா ஆகியவற்றின்போது அந்த உருவத்திற்குப் படையலிடுவர்.

புலையன், நாயாடி, உள்ளாடன், ஆகிய சாதியினரே வேட்டுவன்களைவிடத் தாழ்ந்த சாதியினர், தங்களைப் புலையரை விட உயர்ந்தவர்களாகக் கருதும் இவர்கள் அவர்களால் தாங்கள் தீட்டுப்பட்(விடாதபடி தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். நாயாடி அல்லது உள்ளாடன் ஒருவனால் தீட்டுக்கு உள்ளாகும் வேட்டுவன் ஏழு நாள்கள் தண்ணீர், கள் இளநீர் ஆகியனவற்றை மட்டும் உட்கொண்டவனாக விரதம் இருப்பான். எட்டா நாள் குளித்த பின் வழக்கமாக உண்ணும் உணவை உண்பான். வேட்டுவன்க

சண்டாளர் ஆகையால் அறுபத்து நான்கு அடிக்கு உள்ளாக இவர்கள் உயர் சாதியினரை நெருங்குவார்களாயின் அவர்கள் தீட்டுக்கு உள்ளாவர். இவர்கள் கம்மாளரிடமிருந்து இருபத்திநான்கு அடிதூரம் விலகி நிற்க வேண்டும். நாயாடிகளும் உள்ளாடன்களும் இவர்களிடமிருந்து தொலைவாக விலகி நிற்பர், குறைந்த கூலி, இயலாமை ஆகியவற்றின் காரணமாக இவர்களுள் பலர் கிறித்தவர்களாகவும் முகமதியர்களாகவும் மதம் மாறியுள்ளனர், இவர்கள் ஒரு நாளைக்கு இரண்டரைஅணா முதல் மூன்றணா வரை கூலி பெற்றுக் கொண்டு வேலை செய்கின்றனர்.

மலபாரில் வெட்டன் அல்லது வெட்டுவன் என்ற வகுப்பார் உள்ளனர், இவர்களைக் காடுவாழ் பழங்குடிகளான வேட்டுவன்களோடு குழப்பிக் கொள்ளுதல் கூடாது. இவர்கள் ஒரு காலத்தில் உப்பு எடுப்போராகவும் இருந்துள்ளனர், இன்று இவர்கள் கொத்தனார்களாகவும் மண்வேலை செய்வோராகவும் கற்குழிகளில் கல்லுடைப்போராகவும் பணிபுரிகின்றனர். இவர்களிடையே மலபாருக்கு உரிய மருமக்கள் தாய நெறியினையும், மக்கள் தாய நெறியினையும் பின்பற்றும் இரண்டு பிரிவினர் உள்ளனர், மக்கள் தாயத்தைப் பின் பற்றுபவர்கள் தெற்கேயிருந்து வந்து குடியேறியவர்களாகக் கருதப்படுகின்றனர் என மலபார் மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

விபாக குண்ட - Vibhaka Gunta

சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் "மாலர்களோடு இணைந்தவர்களாக அலைந்து திரிந்து இரக்கும் தாழ்ந்த சாதியார்" எனப் பதியப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த மாலர் சிலர் குண்ட மான்யம் எனப்படும் சிறுவயல்களைப் பெற்றுள்ளனர். இதிலிருந்து கிடைக்கும் வருவாயும் பிச்சையெடுப்பதால் கிடைக்கும் பொருளும் இவர்கள் வாழ்க்கை நடத்த உதவுகின்றது.

விக்னேசுவர் - Vignesvara

யானை முகத்தவனான விநாயருக்கான மற்றுமொரு பெயர். நகராஜி சாதியார் கோத்திரம் ஒன்றின் பெயராகவும் இது உள்ளது. இதற்குச் சமமான விநாயக் என்பது மேதரரின் ஒரு கோத்திரம்.

வில்குருப்பு - Vilkurup

வில்குருப்பு அல்லது வில்கேலக் குருப்பு எனப்படுவோர் மலையாளம்

கம்மாளருக்குப் புரோகிதர்களாகவும் அம்பட்டர்களாகவும் உள்ளனர், குடைகள், வில்கள் அம்புகள் ஆகியனவற்றையும் இவர்கள் தயாரிக்கின்றனர். முன்காலத்தில் இவர்கள் வில் அம்புகளை மலையாளரைச் சேர்ந்த காலாட்படை வீரருக்குத் தயாரித்து வழங்கி வந்தனர். மலையாளமும் திருவாங்கூரும் அவ் விடங்களில் தயாரிக்கப்படும் ஓலைக்குடைகளுக்குப் பெயர் பெற்றவை, இவை இன்றும் ஐரோப்பியர் தயாரித்து அனுப்பும் குடைகளோடு விற்பனையில் போட்டியில் தாக்குப் பிடித்து வருகின்றன. *1904-1905*இல் ரூ.*18,95,064* மதிப்புக்கு இந்த வெளிநாட்டுக் குடைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. நீண்ட கைப்பிடியோடு ஓலைக்குடையால் தன்னைக் காத்துக் கொண்டவனாகத் திரியும் காவலனை மேற்குக் கடற்கரைப் பகுதியில் நகரங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியற்றில் எங்கும் காணலாம்.

கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த வில்குருப்புகள் பற்றித் திரு எல்.கே.அனந்தகிருட்டிண அய்யர் பின்வருமாறு எழுதுகின்றனர்: முன்னாட்களில் தாழ்ந்த சாதியினருக்குப் படைப் பயிற்சியும் உடல்திறன் பயிற்சியும் அளித்த வந்ததோடு சிலம்பம், வில்வித்தை ஆகியனவற்றையும் பயிற்சி பள்ளி வாயிலாகக் கற்றுத்தந்து வந்தனர், நாகரிகம் வளர்ந்து விட்ட இன்று இவர்கள் பணி உதவியினை யாரும் நாடுவதில்லை. எனவே இன்று இவர்கள் தலைக்கு தைலம் தேய்த்தல், குடை கட்டுதல், கட்டிடத்திற்கான கருங்கல் அகல்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். நாயர் குடும்பங்களில் தாலிகட்டுச் சடங்கு நடத்தும் போது இவர்கள் சில அம்புகளையும் ஒரு வில்லையும் தருதல் வேண்டும். ஓணம் திருவிழாவின்போதும் இதுபோல நாயர் இல்லங்களுக்கு வில்லையும் அம்பையும் இவர்கள் தருகின்றனர். இதற்காக இவர்கள் கொஞ்சம் நெல், கறிக்கான பொருள்கள், ஒரு தேங்காய், சிறிது எண்ணெய் ஆகியவற்றைப் பெறுவர். தலைக்கு எண்ணெய் தேய்க்க இவர்களின் பணியினை நாடுபவர்கள் முதலில் எண்ணெயினை நன்கு காய்ச்சி ஆற வைப்பர். நோயுற்றவன் ஒரு பலகையில் படுத்துக் கொள்வான். அவன் உடம்பின் மீது எண்ணெயினை ஊற்றுவர். அவன் உடம்பின் ஒவ்வொரு பகுதியினையும் நன்கு தேய்த்து விடுவர். அதன்பின் மூலிகைச் செடிகளிட்டுக் கொதிக்க வைக்கப்பட்ட நீரில் இவர்கள் குளிப்பர், வில்குருப்புகள், பிராமணர்கள், நாயர்கள், ஈழவன்கள், கம்மாளர் ஆகியோர் இல்லங்களில் உண்பர். வண்ணார், நாகவர் ஆகியோரில்லங்களில் இவர்கள் உண்பதில்லை. பிராமணர்கள், நாயர்கள் ஆகியோரிடமிருந்து இவர்கள் முப்பத்திரண்டு அடி தூரம் விலகி நிற்றல் வேண்டும். புலையர், பறையர் ஆகியோர் இவர்களிடமிருந்து தொலைதூரத்தில் விலகி நிற்க வேண்டும். ஈழவர்களின் குடியிருப்பினைச் சார்ந்துள்ள இடங்களில் இவர்கள் தங்கி வாழ்கின்றனர்.

பிராமணர்களுடைய கோயிலினை இவர்கள் நெருங்க முடியாது, வெளிப் பிராகத்திலிருந்து விலகி இவர்கள் தொலைவிலேயே நிற்க வேண்டும். இவர்கள் சாதியினைச் சேர்ந்தவர்களே இவர்களுக்கு வண்ணாராகவும் அம்பட்டராகவும் உள்ளனர்.

வில்லாசன் - Villasan (Bowman)

மலையாளம் கம்மாளருக்கான மற்றுமொரு பெயர். முன்பு இவர்கள் திருவாங்கூரைச் சேர்ந்த படைக்கு வில், அம்புகளை வழங்கி வந்தனர்.

வில்லை - Villi

வில்லை, வில்லியன் என்ப செங்கல்பட்டினைச் சேர்ந்த இருளருக்கான வேறு பெயர்களாகப் பதியப்பட்டுள்ளன. வில்லி என்பது வேட்டுவன்களின் உட்பிரிவு ஒன்றின் பெயராகவும் உள்ளது, இவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த வேடன்கள்.

வில்லு வேடன் - Villu Vedan (huntsman using bows)

எரவாளருக்கான மற்றுமொரு பெயர்.

வீலையக்காரன் - Vilyakara

1901 சென்னை மாவட்டக் கையேட்டில் இவர்கள் சேர்வைக்காரர் எனப்படும் கேட்டேகாரரின் உட்பிரிவனராகப் பதியப்பட்டுள்ளனர். வீல்யகாரன், வீலேகாரன், ஒலேகாரன் என்பன அரசின்கீழ் அல்லது தனியார் ஒருவரின் கீழ் பணிபுரிபவனைக் குறிக்கும் சொற்களாம்.

விங்க - Vinka (whiteant)

சாடபு சாதியாரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

விப்ரவினோதி - Vipravinodi

விப்ரவினோதிகளைப் பற்றிய ஒரு குறிப்பில் திரு உறயவதன ராவ் பின்வருமாறு எழுதுகின்றார்: ஒரு லிங்காயதப் பெண்ணுக்குப் பிராமணன் ஒருவன் வழிப் பிறந்தவனின் சந்ததியினர் இவர்கள். லிங்காயதர்களான இவர்கள் விப்ரர் முன்னும் பிராமணர் முன்னும் கழைக் கூத்து முதலியவைகளை நிகழ்த்துவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். ஊர் ஊராகத் திரியும் இவர்கள் தங்கள் குழந்தைகளையும் மனைவியரையும் உடன் அழைத்தபடி

செல்வர். மரத்தாலான மூன்று பந்து அல்லது கற்களை மேலே வீசி மாறி மாறிப் பிடித்தல் இவர்கள் காட்டும் வித்தைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தப் பந்துகளைத் தங்கள் உடலின் பல பாகங்கள் மீது ஒரே சமயத்தில் உருட்டியும் வித்தை காட்டுவர். பல சாதியினரும் கூடியிருக்கும் போதுவித்தை காட்டும் இவர்கள் தங்களை நாவித்தைய வாரு எனக் கூறிக் கொள்வர். இது நருலு மெச்சே வித்தையறுசேசிவாரு என்பதன் சுருக்கமாகும். இது மக்கள் போற்றும்படியாக வித்தை செய்பவர் எனப் பொருள்படும். இவர்கள் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில்வைத்துப் புதைக்கின்றனர்.

வீரபத்ரர் - Virabhadra

இது தமிழ் வண்ணாருக்கு உரிய மற்றுமொரு பெயர். வீரபத்ரரே இவர்கள் குல தெய்வம். அவருடைய சந்ததியினர் என இவர்கள் தங்களைக் கூறிக் கொள்வர்.

விறகு - Viragu (firewood)

வேட்டுவன்களின் ஓர் உட்பிரிவு

வீரக்குடியான் - Virakudiyan

பணிசவனுக்களுக்கான மற்றுமொரு பெயர், சடங்குகளை நடத்தும்போது சங்கினை முழக்குவது இவர்கள் தொழில்.

வீராளு - Virala (heroies)

கோல்லர், காபு சாதிகளின் ஒரு புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

வீரமாகாளி - Vira Magali (a god)

கள்ளர் சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

வீரமுஷ்டி - Viramushti

விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரமுஷ்டிகள் பற்றிய பின்வரும் விவரங்களுக்கு நான் திரு சி.உறயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன்.

லிங்காயதர்களான இவர்கள் லிங்கம் அணிவதைக் கட்டாயமானதாகக் கருதுவதில்லை. ஒருவன் இறக்கும்வரை இவர்கள் லிங்கம் அணிவிக்கும்

சடங்கினை தள்ளி வைப்பர். பின்னர் பிணத்தைப் புதைக்கும்போது அதற்கு ஜங்கம் ஒருவர் லிங்கத்தை அணிவிப்பார். உயிரோடு இருக்கும் காலத்தில் லிங்கம் அணிபவர்கள் அதனைத் தங்கள் கழுத்தில் தொங்கவிட்டுக் கொள்வர். வீரமுஷ்டிகளிடையே பல உட்பிரிவுகள் இருப்பதாகத் தெரிகின்றது. பாம்பு கடியின் நஞ்சினை மாற்றும் நாகமல்லிகை (*Rhinacanthus communis*) புச்ச காய (*Citrullua colocynthis*) திரிபுத (*Impomaea Turpethum*) ரமதோஷ (*Cacumis Melo*) ஆகியன அப் பிரிவுகளுள் சிலவற்றுக்கான பெயர்களாம்.

பூப்படையும் முன்னர் சிறுமியரை மணம் செய்து தருதல், பூப்படைந்த பின்னர் மணம் செய்து தருதல் ஆகிய இருவகை வழக்குகளும் இவர்களிடையே உள்ளன. ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணந்துகொள்ளும் மேநரிகம் வழக்கத்தை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர். அரைப் பவுன் தங்க அணி அல்லது பதினாறு ரூபாய் மணமகளுக்கு உரிய விலையாகச் *(வோளி)* செலுத்தப்படுகின்றது.

வீரமுஷ்டிகள் கழைக் கூத்தாடுதலையும் இரத்தலையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். தேவாங்கர் மற்றும் கோமட்டி சாதியினரோடு இணைக்கப்பட்டவர்களாக இவர்கள் உள்ளனர். இத்தகைய தொடர்புக்குக் காரணமாகப் பின்வரும் வழக்கு வரலாறு கூறப்படுகிறது. முன்னொரு காலத்தில் பெரியதொரு நகரத்தில் பசவண்ண மந்திரம் என்ற பெரியதொரு மடம் இருந்தது. பசவண்ணா என்ற ஜங்கம் குரு ஒருவர் அதன் தலைவராயிருந்தார். இந்த மடத்தில் முன்னூறு கோடி லிங்காயதக் குருமார் இருந்தனர் அங்குப் பெரும் அளவில் செல்வம் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. இதனைக் கள்வர்களிடமிருந்து பாதுகாக்க வீரமுஷ்டிகள் காவலாக இருந்து வந்தனர். திருட்டையே தொழிலாகக் கொண்டிருந்த சிக்கய்ய என்ற திருடன் தன் காதலியின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க அந்த மடத்தைக் கொள்ளையிட முடிவு செய்தான், வீரமுஷ்டிகள் ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபட்டிருந்து ஓர் இரவில் அவன் அந்த மடத்தினுள் நுழைந்தான். அங்கு ஜங்கம்கள் பலர் வழிபாட்டில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட சிக்கய்யன் தன் திட்டத்தைக் கைவிட்டவனாக ஒரு லிங்காயதனாக ஆக முடிவு செய்தான், அம் முடிவின்படி மறுநாள் காலையில் அந்த மடத்தின் தலைவர் வீற்றிருக்கும் இடத்திற்கு அவன் சென்று சேர்ந்தான். அவரிடம் தான் யாரென்பதையும் தான் மேற்கொண்டுள்ள முடிவினையும் அவன் தெரிவித்தான். இத்தகைய ஒருவனைத் தங்கள் சமயப் பிரிவில் சேர்த்துக் கொள்வதில் அந்த

மடத்தைச் சேர்ந்தவர்கள் தங்களிடையே கருத்து வேறுபாடு உடையவர்களாக இருந்தனர். இறுதியில் அவர்கள் ஒருவன் தான் செய்த தவறினை உணர்ந்து அதற்கு வருந்துவானாயின் அவன் லிங்காயதப் பிரிவினுள் சேரத் தகுதியுடையவன் என முடிவு செய்தனர். லிங்காயத நெறி சமய வேறுபாடு எதனையும் பாராட்டுவதில்லை. இம் முடிவுப்படி அவன் கழுத்தில் லிங்கம் அணிவிக்கப்பட்டது. அப்போதிருந்து சிக்கய்யன் புதியதொரு மனிதனாக மாறி ஜங்கமாகப் புண்ணிய தலங்கள் தோறும் பயணம் மேற்கொண்டான். ஒரு நாள், அவன் லிங்கம் கட்டிய ஒருவரோடு உடன் இருந்து உணவு கொள்வதன்றி வேறு எவ்வகையிலும் உணவு கொள்ளும் வழக்கமில்லாத வணிகப் பெருமகன் ஒருவன் வாழ்ந்த ஊருக்குச் சென்று சேர்ந்தான். அவன், தன் மனைவி நீலகுண்டலினிதேவியின் ஆலோசனைப்படி சிக்கய்யனுக்குத் தன்னோடு வந்து உணவு கொள்ளும்படி அழைப்பு அனுப்பினான். இரவு உணவுக்குப் பின் அந்த வணிகன் தொழில் தொடர்பாக வெளியே சென்றபின் சிக்கய்யன் சிறந்த அழகனாக இருப்பதைக் கண்ட நீலகுண்டலனிதேவி அவனிடம் காதலுற்றவளானாள். எனினும் அவன் அவள் மோகத்தில் மயங்காதவனாக ஒட்டம் பிடித்தான். நீலகுண்டலனிதேவி தன் பொன் கழுத்துச் சங்கலியினை அறுத்து அவனுடைய தோள்பையினுள் வைத்து அதனை எடுத்துக் கொண்டு அவன் பின் ஓடியவளாக அதனை அவனிடம் விட்டெறிந்தாள்.அதன்பின் அவள் தானே தன் உடம்பில் பல காயங்களை ஏற்படுத்திக்கொண்டு தன் கணவன் திரும்பியவுடன் லிங்கம் தன் கழுத்துச் சங்கலியினைத் திருடிக் கொண்டதோடு தன்னைக் கற்பழிக்கவும் முற்பட்டான் என முறையிட்டாள். இத் தகவல் மடத்தின் தலைவனரான பசவண்ணாவிற்குத் தெரிவிக்கப்பட்டது. சபை கூட்டப்பட்டுச் சிக்கய்யன் தலை வெட்டப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இந்த ஆணையினை நிறைவேற்றும் பொறுப்பு வீரமுஷ்டிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் சிக்கய்யனைத் தேடிச் சென்றனர். அவர்கள் இறுதியில் அவன் ஓர் ஆற்றங்கரையில் ஒரு மரநிழலில் தன் கையில் லிங்கத்தை வைத்து வழிபாடு செய்து கொண்டிருக்கக் கண்டனர். அவன் தோள்பையினைத் துழாவிய அவர்கள் அதனுள் கழுத்துச் சங்கலி இருக்கக் கண்டு அவன் தலையினை வெட்ட முற்பட்டனர். அது வானில் பல நூறு அடி உயரம் மெலெழுந்து மடத்தை நோக்கிச் செல்ல முற்பட்டது. தலையற்ற முண்டம் நடந்து அதனைத் தொடர்ந்து சென்றது. மடத்துக்குத் திரும்பிய வீரமுஷ்டிகள் முந்நூறு கோடி குருமாரும் அங்குத் தலைவெட்டப்பட்டிருக்கவும் அந்த இடம் குருதிக் குளமாக இருக்கவும் கண்டனர். எனினும் சிக்கய்யன் தலையும் உடலும் அங்கு வந்த சேர்ந்த அளவில் அவை மீண்டும் ஒன்று சேர்ந்தது. சிவபெருமான் அங்குத் தோன்றிச் சிக்கய்யனை

அப்படியே கைலாசத்திற்கு அழைத்துக் கொண்டு அந்தக் குருமார்களுக்கு மீண்டும் உயிர் வழங்கிய பின் வீரமுஷ்டிகளுக்குப் பின்வரும் நான்கு சாபங்களை வழங்கினார்.

1. வீடுகளைக் கட்டவோ வீடுகளில் வாழவோ கூடாது. இதன் காரணமாக இவர்கள் ஊர்களின் புறத்தே மரத்தடியிலேயே தங்கியிருக்கக் காணலாம்.
2. கட்டிலில் படுத்து உறங்குதல் கூடாது
3. இயற்கையான பொருள்களாலான விளக்குமாற்றைப் பயன்படுத்தக் கூடாது.
4. சமைப்பதற்காக நிலையான அடுப்புகளை அமைத்துக் கொள்ளாது அவ்வபொழுது மூன்று கற்களை வைத்து அடுப்புக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

இவர்கள் மீது இரக்கங்கொண்ட தேவாங்கர்கள் இவர்களுக்கு ஆண்டுதோறும் சிறு தொகையினை அளிக்கவும் அவர்கள் திருமணத்திற்கான செலவினை ஏற்றுக் கொள்ளவும் உடன்பட்டனர்.

மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிக்குப் பின் வீரமுஷ்டிகள் கோமட்டிகளோடு இணைக்கப்பட்டவர்களானார்கள் எனக் கூறப்படுகின்றது. கோமட்டிகள் சிலர் விஷ்ணுவர்த்தன ராஜா தங்கள் மேல் படையெடுத்து வருவதை மூன்றரை மணிநேரம் தாமதிக்க வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். இப்பொழுது கன்யகம்மா என்ற தெய்வமாக ஆகிவிட்ட, கோமட்டிகளுள் ஒருவன் மகளான வசவகன்யாவை கட்டாயப்படுத்தி மணந்து கொள்ளும் நோக்குடனேயே அவன் அவர்கள் மீது படையெடுத்து வந்தான். வீரமுஷ்டிகள் தங்கள் கழைகூத்து வித்தைகளைக் காட்டி அந்த அரசனை மகிழச் செய்தவர்களாக அவனைத் தாமதிக்கச் செய்தனர். இதற்கிடையே கோமட்டிகள் பலர் தீக்குண்டங்களை அமைத்து அதில் விழுந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டனர். விஷ்ணுவர்த்தனர் காலக்கடந்தவனாக வந்து தன் தலையறுபட்டு இறந்துபோனான். தங்கள் கழைக்கூத்தில் மகிழ்ந்து தங்களுக்கு நில மானியம் வழங்குவதாக வாக்களித்திருந்த மன்னனும் இறந்து போனான். தங்கள் கோத்திரம் ஒவ்வொன்றுக்கும் பொன் கட்டியினைத் தருவதாக உறுதி கூறியிருந்தவளான வாசவகன்யாவும் இறந்துவிட்டாள். இனித் தங்களுக்கு உதவுவார்யார் என வீரமுஷ்டிகள் வாசவகன்யாவிடம் முறையிட்டுக் கொண்டனர். இதற்குக் கோமட்டிகள் அனைவரும் ஒரு சேரத்தங்கள் குடும்பம் ஒவ்வொன்றும் இனி

வீரமுஷ்டிகளுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கொடுத்து உதவும் எனவும் வீரமுஷ்டிகளின் திருமணச் செலவினைச் சரிகட்டவும் உதவுவதாகவும் உறுதியளித்தனர்.

மேற்கூறிய வழக்கு வரலாறுகளின்படி வீரமுஷ்டிகள் தேவாங்கர்களிடமும் கோமட்டிகளிடமுமே இரப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒரு கிராமத்தை நெருங்கியவுடன் இவர்கள் ஒரு மரத்தின் அடியில் தங்குவர். மறுநாள் அதிகாலையில் கழைக்கூத்தாடிகளைப் போல உடையணிந்து குத்துவாள், தடி முதலியவைகளை ஏந்தியவர்களாக நல்ல காலம் வரப் போகிறது, நல்ல காலம் வரப் போகிறது எனக்கூறியபடி ஊரினுள் நுழைந்து தேவாங்கர், கோமட்டி ஆகியோர் வீடுகளின் முன் வித்தைகள் காட்டியபின் சாதியினைப் பற்றிய புகழுரைகளையும் கூறுவர். அந்த வீட்டார் அவர்களுக்குப் பொருளும் உணவும் வழங்குவர்.

தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த இறந்துபோன ஒருவனை வீரனாக ஆக்க விரும்பும் தேவாங்கர் மற்றும் லிங்காயத கோமட்டிகள் வீரமுஷ்டி ஒருவனை வரவழைத்து அவனைப் புதைத்த இடத்தில் வீரக்கல் ஒன்றினை உரிய சடங்குகளை நிகழ்த்திப் புதைப்பர்.

வீரமுஷ்டிகளைப் பற்றிய மற்றொரு குறிப்பில் எனக்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: வீரமுஷ்டிகள் கன்னட லிங்காயதர்களான வீரபத்ரகாயகம்களை ஒத்தவர்கள். அவர்களைப் போல உடையணிந்துகொள்ளும் வீரமுஷ்டிகள் சிறு லிங்கம், வீரபத்ரர் உருவம், வாள், நட்சத்திர உருவும் அசுரர் தலைகளும் பொறிக்கப்பட்ட பலகை ஆகியனவற்றைத் தங்களுடன் எடுத்துச் செல்லும் வழக்கம் உடையவர்கள். முக்கியமான சிவன் கோயில்கள் ஒவ்வொன்றுடனும் ஒரு வீரமுஷ்டி இணைக்கப்பட்டுள்ளான். இவர்கள் சிவனுடைய ஏவலர்களாகக் கருதப்படுகின்றனர். ஊர்வலத்தின்போது தெய்வத்தின் உருவத்தைப் பாதுகாப்பதும் பிறவும் இவர்களுடைய கடமைகளாகும். தேர்த்திருவிழாவின் போது தேர் நகரா மறுக்குமாயின் வீரமுஷ்டிகள் அது நகரும்வரை தங்களைத் தங்கள் வாளால் வெட்டிக் கொண்டவர்களாக இருப்பர். சிவப் பிராமணன் நன்கு உண்ண வீரமுஷ்டி வாளால் தன்னை வெட்டிக் கொண்டு துன்புறுத்திக் கொள்ள வேண்டியதாகின்றது என்ற தமிழ்ப் பழமொழியும் உள்ளது. இத்தகைய வழக்கங்கள் இப்போது மறைந்துவருகின்றது.

பேரி செட்டிகள், தேவாங்கர், கோமட்டிகள், வண்ணார் ஆகியோரிடமிருந்து இரப்பதே வீரமுஷ்டிகளின் முக்கிய தொழில். முன்பு இவர்கள் பாவடம் என்ற சடங்கை நிகழ்த்தி வந்ததாகக் கூறுவர். சமயநெறியில் வழுவாத லிங்காயதன் ஒருவனை யாரேனும் இழிவுபடுத்துவார்களாயின் அவன் தன் லிங்கத்தை விழுங்கியவனாகத் தன்னை இழிவுபடுத்தியவன் வீட்டு வாயிலின் முன் தரையில் படுகிடையாகப் படுத்துவிடுவான். அந்த வீட்டுக்கு உரியவன் லிங்காயதர் சிலரை அழைப்பான். அவர்கள் வீரமுஷ்டி ஒருவனை வரவழைப்பர். அவன் தன்னோடு கருவுற்ற வீரமுஷ்டி சாதிப் பெண் ஒருத்தி, திரௌபதி கோயில் பச்சையம்மன் கோயில், பொது ராசா கோயில்களின் பூசாரிகள், செம்படவப் பூசாரி ஒருவன், பம்பைக்காரன்கள், உடுக்கைக் காரன்கள் அருகில் உள்ள லிங்காயத மடத்தைச் சேர்ந்த சிலர் ஆகியோரை அழைத்து வருவான். அந்த வீட்டை வந்து அடைந்தவுடன் கருவுற்றவள் தரையில் படுத்துள்ளவன் முன் அமர்வாள், வீரமுக்ஷ்டி தன் வாளால் தலையிலும் உடலிலும் காயங்களை உண்டாக்கிக் கொண்டுஅவற்றிலிருந்து வழியும் குருதியினைப் படுத்துக் கிடப்பவன் மேல் தெளிப்பான், பின் அவன் எழுந்திருப்பான். லிங்கம் அவனுடைய வாயிலிருந்து வெளிவரும் குற்றம் இழைத்தவன் அங்கு வந்து கூடியுள்ளவர்களுக்கு உணவு அளிப்பதோடு கூடப்பாவடம் எனப்படும் தொகையினை வீரமுஷ்டிகளுக்கும் மடங்களுக்கும் செலுத்தவேண்டும்.

வீரமுஷ்டிகள் சிலர் தங்களை வாஸ்தாது எனக் கூறிக் கொள்கின்றனர். இது வீர வித்தைகள் காட்டும் தொழில் தொடர்பாக அவர்களுக்கு வழங்கும் பெயராகும்.

வீராநட்டான் - Viranattan

வீராணம் எனப்படும் முழவினை அடிப்பவன் என்பது இதன் பொருளாகும். *1901* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளவை வருமாறு:

இவர்கள் தொடக்கத்தில் கோயில் பணியாளர்களாக இருந்தவர்கள். இன்று பல திறம்பட்ட கூலி வேலைகளையும் செய்து வருகின்றனர். இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் பரத்தையராக உள்ளனர். மேஸ்திரி, முதலி என்பன இவர்களுக்கு உரிய பட்டப்பெயர்.

வீரனொள்ளு - Viranollu

வீரனொள்ளு, வித்தனொள்ளு என்பன காணிகர்களுக்கு உரிய

கோத்திரங்கள். இக் கோத்திரத்தவன் விளா (*Feronia elephantum*) மரத்தினை வெட்டுவதில்லை.

வீரசைவர் - Virasaiva

லிங்காயதருக்கான மற்றுமொரு பெயர். லிங்காயதர் சிலர் தங்களை வீரசைவர் பிராமணர் எனக் கூறிக்கொள்கின்றனர்.

விசாலாட்சியம்மா - Visalakshiamma

வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் இவர்கள் வாணியரின் ஓர் உட்பிரிவினராகப் பதியப்பட்டுள்ளனர். காசியில் உள்ள தெய்வம் விசாலாட்சியம்மன். இவள் மதுரையில் உள்ள மீனாட்சியோடும் காஞ்சிவரத்தில் உள்ள காமாட்சியோடும் உடன்பிறந்தவள் எனக் கூறுவர். அழகிய கண்களையுடயவள் எனப் பொருள்படும் இது அகன்ற அழகிய விழிகளையுடைய பார்வதிக்கு உரிய பெயராகும்.

விசுவகர்மா - Viswakarma

விசுவகர்மா, விசுவபிராமணன் என்பன கம்மாளருக்குரிய வேறு பெயர்களாகும். தெய்வத் தச்சனான விசுவகர்மாவின் ஐந்து முகங்களிலிருந்து ஐந்து பிரிவினரான கம்மாளரும் தோன்றியதாகக் கூறிக் கொள்கின்றனர்.

விடுகுலவாண்டுலு - Vitugula vandlu

வேட்டைக்காரர், வீரர் எனப் பொருள்படும் இந்தப் பெயரைப் போயர் தங்களுக்கு உரியதாகக் கூறிக் கொள்வர்.

வொதாரி - Vodari

பார்க்க: ஒதாரி (See: Odari)

வொட்டர் - Vodda

பார்க்க: ஒட்டர் (See: Odde)

வோடொ - Vodo

விசாகப்பட்டினம் முகவர் பகுதியினைச் சேர்ந்த எண்ணிக்கையில் குறைந்தவர்களான ஒரியர்களான கூடை முடையும் சாதியார்.

வோசலி - Vojali

பார்க்க: ஒசலி (See: Ojali)

வொக்கிலியன் - Vokkiliyan (cultivator)

காப்பிலியன்கள் சாதியின் ஓர் உட்பிரிவு. வக்கலியர் என்பதன் தமிழ் வடிவம். *(பார்க்க: ஒக்கிலியர்)*

விடுபுலவாலு - Vudupulavallu

பலிசர், வெலமர் ஆகிய சாதியருக்கான தொழில் தொடர்பான பெயர். இவர்கள் சீட்டித் துணிக்குச் சாயம்போடுபவர்கள்.

வியாதர் - Vyadha (forest mese)

மயாச பேடருக்கான மற்றுமொரு பெயர்.

வியாபாரி - Viyapari

நாயர்களுள் வணிகத்தை மேற்கொண்டுள்ள பிரிவினர்

வியாசர் - Vyasa (the name of a sage)

பலிசரின் ஓர் உட்பிரிவு.

W

வஉறாபி - Wahabi

கிபி. *1691* இல் பிறந்தவரான முகமது இபின் அப்துல் வஉறாபினால் தோற்றுவிக்கப்பட்ட முகமதிய சமயப் புத்தெழுச்சி இயக்கப் பிரிவு ஆகும். வஉறாபிசத்தை இசாலாத்தின் கடுஞ்சீர்திருத்த இயக்கம் எனலாம். லூதரன்களை லியோ பிரிவினர் வெறுப்பதைப் போலவும் உடன்படிக்கையாளர்களைக் கிளவெர்உறவுஸ் பிரிவினர் வெறுப்பதுபோலவும் சமயநெறிப்பட்ட முசல்மான்கள், முசல்மான்கள் எனக் கூறிக் கொள்ளும் வஉறாபிகளை வெறுத்தனர்.* வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் *(1895)* வேலூர் கிளர்ச்சி நடைபெற்ற *1806*ஆம் ஆண்டு முதல் முகமதியர்கள் பெரும் எண்ணிக்கையராக உள்ள வேலூரில் இரண்டு அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. *1869* இல் மே மாதத் தொடக்கத்தில் வேலூரைச் சேர்ந்த வஉறாபி முசல்மான்கள் அரசுக்கு எதிரானவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ளதாக இணை குற்றவியல் நடுவருக்கும், காவல்துறை உதவிக் கண்காணிப்பாளருக்கும் மொட்டைக் கடிதங்கள் வந்தன. அதில் வேலூரில் உள்ள அனைத்து ஐரோப்பியர்களையும் கொன்று குவிக்கச் சதித்திட்டம் தீட்டியிருக்கின்றனர் எனவும் அப்போது வேலூரில் முகாமிட்டிருந்த *28*ஆம் இந்தியக் காலால்படைப் பிரிவினர் இந்தச் சதியில் தீவிரமாக பங்கு பெற்றிருப்பதாகவும் கூறப்பட்டிருந்தது. அத்துடன் பொதுத் துறையினைச் சேர்ந்த கிழக்கிந்தியக் கம்பெனிப் பணியாளன் ஒருவன் சிறு வழக்குகளை விசாரிக்கும் வழக்கு மன்றத்தில் முன்ஷியாக உள்ள முகமதியர் ஒருவர் முகமதியரான மற்றொரு கடைக்காரனிடம், காஜி ஒருவர் ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டுப் பேசிக் கொண்டிருப்பதாகக் கூறியதை எதிர்பாராது கேட்க நேர்ந்ததாகவும் கூறினான். அந்த முன்ஷி அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அவர் தான் ஒரு மசூதியில் அப்போதுதான் ஐதராபாத்திலிருந்து வந்திருந்த வஉறாபி சமயப் பிரிவைச் சேர்ந்த காஜி ஒருவர் வெளிப்படையாகவே அரசுக்கு எதிராகப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதாகவும் மற்றவர்களும் இதுபோலப் பேசுகின்றனர் எனவும் கூறினார்

---

* இந்தியத் தொல்லியல், *ல, 1881, பக்.69,* (Ind.Ant, X, 1881.p.69.)

எனப் பதியப்பட்டுள்ளது. இது பற்றிக் காவல்துறை ஆய்வர் தலைவர் கேட்டறிந்ததிலிருந்து இந்த நிகழ்ச்சிகள் சமயநெறிப்பட்ட முகமதியர்களுடைய மசூதிகளில் வஉறாபிப் பிரிவினர் அடிக்கடி வந்து கெட்ட நோக்கத்தோடு செய்யும் பிரசாரத்தை முறியடிக்க மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் என்பது தெரியவந்தது.

வொட்டெர் - Wudder

பார்க்க: ஒட்டர் (See:Odde)

வயநாடு - Wynad

கணக்கெடுப்பின்போது செட்டி சாதியின் வட்டார அடிப்படையிலான பிரிவு என இது பதியப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திற்கும் மலபாருக்கும் இடையேயான எல்லையின் அருகேயுள்ள கூடலூரிலும் வயநாட்டிலும் மண்டலம் செட்டிகள் *(பார்க்க: தனிக்கட்டுரை)* மற்றும் வயநாடன் செட்டிகள் என இரு பிரிவினர் உள்ளனர்.

நீலகிரி மாவட்ட விவரக் குறிப்பில் வயநாடன் செட்டிகள் பற்றித் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: இவர்கள் மலையாள மொழியினைப் பேசுவதோடு மருமக்கள்தாய உடைமை உரிமை முறையினைப் பேணுகின்றனர். இவர்கள் தாங்கள் தொடக்கத்தில் கோயமுத்தூரைச் சேர்ந்த வேளாளர்களாக மக்கள் தாய முறையினைப் பேணியவர்களாகவும் தமிழ் மொழியினைப் பேசுபவர்களாகவும் தமிழர்களைப் போல உச்சந்தலையில் குடுமி வைத்தவர்களாகவும் இருந்து வந்ததாகக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாகத் தங்கள் திருமணத்தில் தமிழர்களுடைய வழக்கங்கள் சிலவற்றை இன்னமும் மேற்கொண்டு வருவதை இவர்கள் காட்டுவர். மணமகன் தலைப்பாகை அணிவதோடு வெள்ளிக் கச்சையோடு கூடிய சிவப்புத் துண்டினை இடையில் அணிவான். இவன் முகம் மழித்துக் கொள்கின்றான். பெண்கள் ரவிக்கை போட்டுக் கொள்வதோடு மூக்குத்தியும் அணிகின்றனர். கொளபள்ளிகள் என்ற சாதித் தலைவர்கள் இவர்களுக்கு உள்ளனர். இவர்களுக்குக் கீழ் மந்திரிகள் என்போர் உள்ளனர். இவ்விருபாலாரும் நாட்டுச் சபையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். சாதித் தலைவன் உடன்பாடு பெறாமல் திருமணம் எதனையும் நடத்த முடியாது. இவர்களிடையே இருவகை மணமுறைகள் வழக்கில் உள்ளன. ஒரு முறைப்படி தமிழர் மணத்தில் போல மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். தந்தையே மணத்தை நடத்தி வைப்பவர். இது மக்கள் தாய நெறியின்பாற்பட்ட இன்னமும் எஞ்சியுள்ள வழக்காகும். தொடர்பான அடிப்படைப் பேச்சு

வார்த்தைகளை மூன்றாம் மனிதர்களே பேசி முடிப்பர். மணம் தொடர்பான பல சடங்குகளுள் பெண்ணின் கையில் கடகம் அணிவிப்பது முக்கியமானதாகும். இதனை ஒரு பந்தலில் கூடியுள்ளவர்கள் புரோகிதர் ஆகியோர் முன்னிலையில் நடத்துவர். மற்றொரு வகை மணமுறை எளிமையான ஒன்று. மணமகன் தன் நண்பர்கள் சிலருடன் மணமகள் இல்லம் செல்வான். அங்கு விருந்து உண்டபின் மூன்றாவது மனிதராகச் செயல் பட்டவர் வளையல் அணிவிப்பார். மணச் சடங்கிற்கு முன் நாயர்களின் தாலிகட்டுச் சடங்கினை ஒத்ததொரு சடங்கையும் இவர்கள் நிகழ்த்துகின்றனர். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மணப் பருவம் அடைந்த பெண்கள் அனைவருக்கும் ஒரே நாளில் அவர்களுடைய தாய்மாமன் கழுத்தில் தாலி அணிவிப்பான், மணமான பெண்கள் தங்கள் கணவர்களின் உடன்பிறந்தவர்களோடு உறவுகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுகின்றது. இறந்தவர்களை எரிப்பதே பொதுவான வழக்கம் எனினும் விபத்து, தொற்று நோய் முதலியவற்றில் இறப்பவர்கள் புதைக்கபடுவர். அரிசி, தங்கக் காசு ஆகியன போடப்பட்டுள்ள பாத்திரத்திலுள்ள தண்ணீரை உயிர் துறக்க உள்ளவன் வாயில் விடுவர். இறந்தவனுடைய ஆவி அவன் உறவினர்கள் கனவில் வந்து அச்சுறுத்துமேல் சோதிடர் ஒருவரின் அறிவுரைப்படி அதற்காக ஒரு குடிசை அமைப்பர். அக் குடிசையினுள் காலையிலும் மாலையிலும் விளக்கேற்றி வைப்பதோடு அவ்வப்போது உணவினையும் அந்த ஆவிக்கு அங்குப் படைப்பர். கணபதி, மகாமாரி, சுல்தான்பேட்டரி அருகேயுள்ள களிமலைத் தம்பிரான், குறும்பரின் அயிறு பில்லி ஆகிய தெய்வங்களை வேறு சில தெய்வங்களோடு இவர்கள் வழிபடுகின்றனர். பெண்கள் நீண்டுதொங்கும்படி செய்து கொண்டுள்ள காதுமடல்களில் நாயர் சாதிப் பெண்கள் அணிவதைப் போன்ற பொன்னாலான தோடுகளையும் பல கழுத்துச் சங்கலிகளையும் அணிகின்றனர். இவர்கள் இரண்டு துணிகளை உடுத்துகின்றனர். ஒன்றை இடையில் கட்டிக் கொண்டு மற்றொன்றை மார்பின் குறுக்கே அணிந்து கொள்வர்.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் வயநாட்டுச் செட்டிகள் பற்றிப் பதியப்பட்டுள்ளதாவது: சூத்திரர் எனத் தங்களைக் கூறிக்கொள்ளும் இவர்கள் தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும் நாயர்களை ஒத்தவர்கள். நாயரினும் தாழ்ந்த சாதியார் இவர்களைத் தொட்டால் இவர்கள் தீட்டுக்கு உள்ளாவர். இவர்கள் திருமண முறைகள் கிழக்கு, மேற்குக் கடற்கரை மணமுறைகளின் கலவையாகத் தோன்றுகின்றது. மருமக்கள் தாய உடைமை உரிமை முறையினைப் பின்பற்றும் இவர்கள் தாலிகட்டுக் கலியாணத்தையும் நிகழ்த்துகின்றனர். ஒருத்தி

பூப்படைந்த பத்தாம் நாள் இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. பூப்படைந்த சிறுமி ஒருத்தியின் கழுத்தில் அவள் தாய்மாமன் ஒரு தாலியும், அவள் குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவள் ஒருத்தி ஒரு தாலியும் என இரண்டு தாலிகளை அணிவிப்பர். முறையான திருமணச் சடங்கையும் இவர்கள் நடத்துகின்றனர். அப்போது மணமகளின் வலக்கரத்தில் ஒரு வளையலையிடுவர். மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். மறுநாள் காலையில் கானம் எனப்படும் மணமகளுக்கான விலையினை மணமகளின் தந்தை அல்லது அக் குடும்பத் தலைவனுக்குச் செலுத்த வேண்டும். இவர்கள் வீரமிக்க வேட்டைக்காரர்கள். புலியினை ஈட்டிக்கொண்டு எறிதல் இவர்களுடைய சமயத்தோடு தொடர்புடைய ஒரு பொழுதுபோக்காகும்.

“ஆறடி உயரமுள்ள வலையின் நடுவே ஒரு புலியினை அகப்படுத்திப் பின் அந்த புலியினை நெருக்கி வளைத்துப் புலியினை ஈட்டியால் எறிவர். இவ்வாறு கொல்லப்படும் புலியின் தோலினை உரிப்பதில்லை. அப்புலியினை ஒரு கழியில் தொங்கவிட்டுத் தெய்வத்திற்குப் பலியாகத் தந்துவிடுவர்.

Y

யாதவர்: Yadava

யாது நாட்டின் மன்னன் வழி வந்தவர் யாதவர். கண்ணனும் யாதவ குலத்தவனே. இதனை இடையருக்குரிய வேறொரு பெயராகவும் இடையருக்கான பட்டப்பெயராகவும் கூறுவர். இது கோல்லர், கொரச்சர் ஆகிய சாதிகளின் உட்பிரிவின் பெயருமாகும். இடையர்கள், கண்ணனை வளர்த்தவர்கள் தங்கள் சாதியாரே எனக் கூறிக் கொள்வதான வழக்கு வரலாறும் உள்ளது.

யாகாரி - Yakari

பார்க்க: ஏகாரி See: Eakari

ஏனாதி - Yanadi

ஏனாதியர் கறுத்த தோலும் அகன்ற மூக்கும் உயரங்குறைந்த உடல்வாகும் கொண்ட தெலுங்கு நாட்டில் வாழும் பழங்குடிகளாவர். ஏனாதி என்ற இப் பெயரின் சொல்லாக்கம் பற்றிப் பல்வேறுகருத்துக்கள் கூறப்படுகின்றன. காப்பவர், தலைவர் எனப் பொருள்படும் நது என்ற சொல் இன்மை சுட்டும் எதிர்மறையினை முன்னே பெற்று காப்பவர் அல்லாதார் அல்லது தலைமைச் சாதியினைச் சேராதார் எனப் பொருள்படும் எனக் கூறுவர். ஏனம் (படகு) என்ற சொல்லும் அதி (பிழைக்கும் வழி) என்ற சொல்லும் இணைந்து பிறந்தது இது எனக் கூறுவாரும் உளர். எனினும் ஏனாதியர் படகு விட்டதாகவோ இன்று இவர்கள் பெரும் எண்ணிக்கையினராக வாழ்கின்ற கடற்கரை சார்ந்த சீகரிக்கோட்டையில் படகு விடுவதாகவோ தெரியவில்லை என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும், அனதி என்ற வடமொழிச் சொல்லிலிருந்து இப்பெயர் வந்ததாகக் கொள்ளலாம் அல்லது மூலச் சொல்லினை இன்று கண்டு கொள்ள முடியாத ஒரு சொல்லிலிருந்தும் இது வந்திருக்கலாம். இச் சொல்லின் உயிர் எழுத்தின் அளவை மக்கள் நீட்டி ஒலிக்கும் வழக்கம் காரணமாக அனதி ஏனாதி ஆகியிருக்கலாம். சென்னைப் பல்கலைக்கழகப்

பட்டம் பெற்ற இந்தியர்கள் தங்கள் பி.எ. எம்.எ. பட்டதாரிகள் எனக் கூறிக் கொள்ளாது பி.ஏ, எம்.ஏ பட்டதாரிகள் என உயிரோசையினை நீட்டி ஒலிக்கும் வழக்கம் உள்ளது. பில்லியார்ட் விளையாட்டில் எண்ணிக்கையினைக் கணக்கிடுபவர் *88* ஐ எயிட்டி எயிட் எனக் கூறாது எணிட்டீ எணிட் எனக் கூறக் கேட்கிறோம்.

ஏனாதியரின் தோற்றம் பற்றிய வழக்கு வரலாறு தெளிவற்றதாகவே உள்ளது. சிலர் தங்களைப் புலிகட் ஏரியினைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதிகளில் தொடக்கத்தில் வாழ்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். ரெட்டிகளால் அடிமைப்படுத்தப்படும்வரை அங்குத் தாங்கள் உரிமையுடன் வேட்டையாடியும் மீன்பிடித்தும் வாழ்ந்த வந்ததாகக் கூறுவர். செட்டி ஏனாதியர் (மஞ்சி ஏனாதியர்?) தொடக்கத்தில் செஞ்சுக்களாக எண்ணிக்கையில் குறைந்த உயர்வகுப்பாராக இருந்து வந்ததாகவும் மேற்குப் பக்கத்து மலைகளில் அடிமைத்தனத்திற்கும் தொல்லைக்கும் உள்ளான அவர்கள் அங்கிருந்து ஓடிவந்து எளிய பிரிவினரான ஏனாதியருடன் இரண்டறக் கலந்துவிட நேர்ந்ததாகவும் மற்றவர்கள் கூறுவர். செஞ்சுக்களுக்கும் மஞ்சு ஏனாதியர்களுக்கும் செஞ்சு தேவுடுவே பொதுவில் தெய்வமாக உள்ளது. எனினும் ஏனாதியரும் செஞ்சுக்களும் இன்று உறவு உடையவர்களாக இல்லை. இவ்விரு சாராரும் அருகருகே வாழ்ந்துவரினும் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதில்லை. நல்லாமலைகளில் இவ்விருவரும் சமூகப் பழக்கவழக்கங்களில் வேறுபட்டவர்களாகவே உள்ளனர். செஞ்சுக்களுக்குப் பிராமணர்கள் தந்த பெயர் ஏனாதி செஞ்சு என்பதாகும் எனக் கர்நூல் மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. ஏனாதியர் பற்றி மெகென்சி விவரித்துள்ள வழக்கு வரலாறு வருமாறு: வயதான இராகவன் என்ற பெயருடை ஒருவன் பாசநாட்டி மாவட்டதிலிருந்து அறுபது குடும்பங்களைத் தன்னோடு அழைத்து வந்து சீகரிக்கோட்டையினைச் சுற்றியுள்ள பகுதிகளில் தங்கியவனாக அந்தப் பகுதிகளில் காடுகளை அழித்து இராகவபுரம் என்ற ஊரினைத் தோற்றுவித்தான். அங்கு இவ்வாறு வந்து குடியேறியவர்கள் மெல்ல மெல்ல அடுத்துள்ள மாவட்டங்களுக்கும் பரவி தங்கி வாழ்பவராயினர். காசியிலிருந்து வந்த அம்பிகேசுவரர் என்ற முனிவர் மத்யாரண்யத்தில் தங்கியவராக நாளும் ஆற்றில் குளித்துச் சிவனுக்கு வழிபாடு நடத்தி வந்தார். அங்கு வாழ்ந்த பழங்குடியினர் தாங்களாகவே அவர்கள் முன் பழங்களையும் உண்ணத் தக்கனவற்றையும் நாள்தோறும் கொண்டு வந்து வைத்துச் சென்றனர். சிறிது காலம் சென்றபின் அவர் அவர்களிடம் அவ்வாறு அவர்கள் செய்து வருவதற்கான காரணம் என்னவென்று கேட்டார். அவர்கள் தாங்கள் வாழும் நாட்டில்

கொடியதொரு பாம்பு குடியிருந்து வருவதாகவும் அதனை அழிப்பதற்கும் மற்ற நலங்களைப் பெறவும் உதவும் மந்திரங்களைக் கற்றுத்தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அவரும் அவ்வாறே கற்றுத் தந்தபின் அங்கிருந்து மறைந்தவரானார்.

ஐரோப்பியன் ஒருவன், ஏனாதி ஒருவனைத் தான் பயணம் மேற்கொண்டு தங்கியுள்ள இடத்தில் ஏவலனாக வைத்துக் கொள்வது பலவகைகளில் உதவியாக இருக்கும். எல்லாச் சாதியாருக்கு உரிய கிணறுகளிலிருந்தும் இவன் தண்ணீர் இறைத்து வருவான். ஏனாதி, பிராமணர்களுக்காகத் துணி துவைப்பதோடு தண்ணீரும் எடுத்து வைக்கின்றான்.

சிறு தேவதைகளை வழிபடுவதே இவர்கள் சமயநெறி. சிக்கிமுக்கிக் கல்லினைத் தட்டி நெருப்பு உண்டாக்கும் வழக்கம், தொடக்கக் கால முறையில் வேட்டையாடுதலையும் மீன் பிடித்தலையும் பலர் மேற்கொண்டுள்ள நிலை, வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியினை வெந்தும் வேகாததுமாக வெயிலில் உலர்த்தியும் நெருப்பில் வாட்டியும் தின்னும் பழக்கம் ஆகியவை அனைத்தும் ஏனாதியர் இன்றும் தொடக்ககால நாகரிக நெறியிலிருந்து விடுபடாதவர்களாகவே உள்ளனர் என்பதனை தெரிவிப்பனவாம். கீழ்க்கண்ட மரங்களின் குச்சிகளைக் கடைந்து இவர்கள் நெருப்பு உண்டாக்குகின்றனர்.*

கிளுவை	- *Protium caudatum*
அத்தி அர்ரீ	- *Bauhinia recemosa*
கல் இச்சி	- *Ficus sp.*
தாட	- *Ptereospermum suberifolium*
பெண்ணுகரி	
(பெட்டட் விரிசி)	- *Cordia monoica*
	A tree belonging toe the Nat. Order Laurineae.

ஒன்று குறுகலாகவும் மற்றொன்று நீளமாகவும் உள்ள இரண்டு கட்டைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். குட்டைக் கட்டையில் சதுரமான

* ரெய்சொனெச் சேர்ந்த கீழ்த்திசை சுவடிகளின் அட்டவணை, III, 1862. (Catalogue Raisonne of Oriental Mauscripts, III, 1862.)

ஒரு குழிவினை உண்டாக்கி அதனைத் தரையில் வைத்து இறுக்கிப் பிடித்தபடி நீளக் கட்டையினை அந்தக் குழிவில் பொருத்தி வேகமாகச் அப்படியும் இப்படியும் சுழற்றுவர். அக் குழிவில் இவர்கள் கரிப்பொடியினை இடும் வழக்கம் இல்லை. கந்தல் துணி அல்லது காய்ந்த சருகுகளை குழிவில் பொருத்தி நெருப்புப் பிடித்துக் கொள்ளும்படி செய்வர்.

நெல்லூர் மாவட்டத்தில் உள்ள சீகரிக்கோட்டத்தீவே ஏனாதியரின் தலைமையிடமாகும். *1835* இல் இத் தீவு அரசின் பொறுப்பில் வந்தபோது இவர்களுடைய தொடக்ககால வாழ்க்கை முறை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இவர்களுக்குத் தானியம், துணி, புகையிலை, தொகை ஆகியனவற்றைத் தாராளமாக வழங்கி காடுகளில் இவர்கள் சேகரிக்கும் பொருள்களை அரசு பெற்று நல்ல வருவாய் பெற்றது, கூலிக்கு வேலை பார்ப்பவர்களின் தேவை அதிகரிக்கவே ஓர் ஆண் குழந்தையினைப் பெற்றெடுக்கும் பெற்றோருக்கு *1* அணா *3* பைசாவும் அரசு ஊக்கத் தொகையாக வழங்கியது.

இது வட்டாரத் தேவையின் அடிப்படையில் மக்களுக்குக் கிடைத்து வந்ததொரு வாய்ப்பாகும். *1858* இல் தெலுங்கு கற்றுத் தர அரசு ஒரு பள்ளியினைத் தொடங்கியது, அங்குக் கற்க வருவோருக்கு அரிசியும் துணியும் வழங்கி மாணவர்கள் அப்பள்ளியில் சேர ஊக்குவிக்கப்பட்டனர். தொழிற்துறையினர் குடைமுடைதலைக் கற்றுத் தந்தனர். பருத்தித் துணிக்கு வண்ணம் தோய்க்க அழகிய சிவப்புச் சாயம் தரும் சாயவேர் (*Oldenhandia umbellata*) பயிரிடுகையும் கற்றுத் தரப்பட்டது. அணிலின், அலிசாரின் சாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் இம் முயற்சி வீண்வேலையாக ஆகிவிட்டது. இவர்களுக்கான கைத்தொழில் முயற்சிகள் வெற்றி பெறாததோடு பள்ளியிலும் காலப்போக்கில் மாணவர் எண்ணிக்கை குறைந்து வந்ததால் *1877*இல் பள்ளி மூடப்பட்டது.

1891 கணக்கெடுப்பு அறிக்கையில் ஏனாதியரிடையே *89* உட்பிரிவுகள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் செஞ்சு, மஞ்சி என்ற இரண்டு உட்பிரிவுகளுள் மட்டுமே எண்ணிக்கையில் மிகுதியானவர்களைப் பெற்றுள்ளன. ஒரு வகுப்பாருள் உண்ணும் உணவு, செய்யும் தொழில், குடியிருக்கும் இடம் முதலியவற்றின் அடிப்படையில் உட்பிரிவுகள் அமைகின்றன. சான்றாக ரெட்டி, ஏனாதிய, சல்ல *(எச்சிலை உண்போர்)*, அடவி, கப்பல *(தவளை தின்போர்)* என்ற பிரிவுகள் எவ்வாறு அமைந்தன எனப் பார்ப்போம். ரெட்டி ஏனாதியர்

பண்ட ரெட்டிகளிடம் சமையல்காரர்களாக இருந்தவர்களாகத் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி வாழ்கின்றனர். இவர்கள் சல்ல பிரிவினருடனும் அடவி பிரிவினருடனும் கலந்து பழகுவதில்லை. இவ்விரு பிரிவினரையும் சாதியில் சேர்ந்தவர்களாகவே ரெட்டி ஏனாதியர் கருதுகின்றனர். ரெட்டி ஏனாதிப் பெண் ஒருத்தியின் கணவன் இறப்பானாகில் அல்லது அவளைக் கைவிடுவானாகில் அல்லது மணமுறிவு செய்வானாகில் அவள், அவள் கணவனுடைய உடன்பிறந்தவளை மணந்து கொள்ளலாம். அதன் பின்னரும் அவ்விரு சகோதரர்களும் தங்களுக்குள் எத்தகைய மனவேற்றுமையும் இல்லாதவர்களாக வாழ்ந்து வருவர். சல்லா பிரிவினர் கரப்ப (புஞ்சை) அல்லது சட்ல (மரம்) என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஊர்களின் எல்லையில் குடிசைகளில் சமூகத்தவர்களுக்குப் பணி செய்தவர்களாக உள்ளனர். காடுகளில் கிடைக்கும் பொருள்களைத் தேடிச் சேகரித்தும் காட்டுவிலங்குகளைக் கண்ணி வைத்துப் பிடித்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர். ரெட்டி பிரிவினரும் சல்லாப் பிரிவினரும் கிருட்டிணா, கோதாவரி மாவட்டங்களில் எப்போதாது காவல்காரர்களாகவும் அமர்த்தப்படுகின்றனர். வேங்கடகிரி சமீன் பகுதியில் ஊராருக்குக் குற்றவேல் செய்கின்றவர்களும் கொல்லர்களுக்குத் தேவையான கரியினைச் சேகரித்து தருபவர்களும் ஏனாதியர்களே. அடவி ஏனாதியர் அவர்ளுடைய பெயருக்கேற்பக் காடு வாழ்வோராவர். மஞ்சி ஏனாதியர் (நல்ல ஏனாதியர்) சற்றே தகுதியில் உயர்ந்த பிரிவினர். இவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனாதியர் செஞ்சுவினை வழிபடுபவர்களாகையால் அப்பெயரால் செஞ்சு ஏனாதியர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தவளையினைத் தின்பதில்லை. தவளைதின்னும் கப்பல ஏனாதியரை இவர்கள் தங்கள் பானைகளைத் தொடக்கூட அனுமதிப்பதில்லை. நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏனாதியர் சிலர் மற்றவர்கள் உண்டு எஞ்சிய எச்சிலை உண்கின்றனர். சோமாரி பிரிவினர் சோம்பேறிகளாவர். இவர்கள் நெல்லூர் மாவட்டத்தில் காவலி வட்டத்தில் வாழ்கின்றனர். துப்புரவுத் தொழிலாளராகப் பணி செய்யும் இவர்கள் மற்றவர்கள் இலையில் வெளியே போடும் எச்சில் சோற்றை உண்கின்றனர்.

நெல்லூர், சீகரிகோட்டா, தாட, காம்பகம் ஆகிய இடங்களில் வாழும் ஏனாதியருக்கான இல்லப் பெயர்கள் வருமாறு:

அ. மஞ்சி ஏனாதியர்

வண்டி	இல்ல (வீடு)
செம்பெட்டி (சம்மட்டி)	கத்துல (வாள்)

சிலகல (கிளி)	கானூர் (ஓர் உர்)
தொட்டி	கொட்டலு (மாட்டுக் கொட்டில்)
ஈகல (முக்கள்)	மேகல (வெள்ளாடு)
என்தொடு (ஓர் ஊர்)	மாணிகலம் (ஓர படி)
பாமுல (பாம்பு)	உதம (நீர்ப்பல்லி)
தெங்கயால் (தேங்காய்)	ஜண்டாயி (கொடி)
தோட்டல (தோட்டம்)	ம்ர்ரிகுண்ட (அத்தி மரத்தருகில் உள்ளகுளம்)
துப்பாக்கல (துப்பாக்கி)	

ஆ. சல்லா ஏனாதியர்

நெரிகி மேகலா (ஒருவகை வெள்ளாடு)

எளுகு (கரடி)

தீர்ல செட்டி (பலிச செட்டி ஒருகூன் பெயர்;

இப்பெயர்கள் அனைத்தும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்களைக்குறிப்பவை. இத்தகைய இல்லப் பெயர்களைக் குடும்பத்தில் மூத்தவர்களாக உள்ள ஆண், பெண்கள் மட்டுமே அறிந்து வைத்துள்ளனர். தங்கள் அண்டை அயலாருடைய இல்லப் பெயர்களுடன் உறவினர் இல்லப் பெயர்களையும் அறிந்துக் கொள்ள இவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. இல்லப் பெயர்கள் பலவும் ஊர்ப் பெயர்கள் அல்லது தாங்கள் தங்கியுள்ள நிலத்திற்கு உரிமையாளர்களான வேறு சாதியினைச் சேர்ந்தவர்களின் பெயர்களின் அடிப்படையில் அமைந்தவை. சில பழைய பெயர்களுக்குப் பதிலாகப் புதிய பெயர்களும் இல்லப் பெயர்களாக அமைவதுண்டு. வன அலுவலர்கள் தங்கள் பதிவேட்டில் ஒரே பெயரையுடைய குடும்பங்களை வேறுபடுத்தி அறியவேண்டி அப்பெயர்களுக்கு முன் கீ செஞ்சுகடு, பெர்மடு, புத்தகடு என்பது போன்ற முன் இணைப்புகளைச் சேர்த்துப் பதிந்துள்ளனர். இதே போன்று மலைத் தோட்டங்காரர்களும் தங்கள் தோட்டங்களில் பணிபுரியும் கூலிகளின் பெயர்களுக்கு முன் தோட்டத்தின் பெயரை முன் இணைப்பாக இணைத்து வழங்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஏனாதியர் மாதிகரோடும் பறையரோடும் உடன் உண்பதில்லை. எச்சில் இலையில் எஞ்சும் சோற்றினை உண்பதில் கூட இவர்கள் சில நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இதன்படி சின்ன ஏனாதி பிரிவினைச் சேர்ந்த ஒருவன்

தொட்ணடி, ஒட்டர், எருக்கலர் ஆகிய சாதியினைச் சேர்ந்தவனுடைய எச்சில் சோற்றை உண்பானாயில் அவன் சாதிவிலக்கத்திற்கு உள்ளாவான். இவ்வாறு சாதிவிலக்கம் செய்யும் அதிகாரம் படைத்தவன், பலிச செட்டியாவான். இவன் வழங்கும் முடிபே இறுதியானதும் கட்டுப்படுத்துவதுமாகும். பலிசச் செட்டியால் தண்டிக்கப்பட்டுச் சாதிவிலக்கமானவர்கள் காய்ச்சிச் சூடாக்கிய தங்கத்தால் நாவில் சூடிடுவது போன்ற தனித்த துன்பங்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டும், சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்து கொடுத்தும், ஒழுங்காக நடந்து கொள்ளப் போவதாக உறுதியளித்தும் பரிகாரம் தேடிக் கொண்டவர்களாக மீண்டும் சாதியில் சேர்ந்து கொள்ளலாம். அண்மையில் வேறு சாதியினைச் சேர்ந்த பலரும் ஏனாதி சாதியில் சேர்ந்து கொள்வதான வியப்பளிப்பதான ஒரு போக்குக் காணப்படுகிறது. நாவிதர், மீனவர், கோமட்டி ஆகியோர் ஏனாதி சாதியில் சேர்ந்து கொண்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

குலம்பெத்த எனவும் பெத்த ஏனாதி எனவும் அழைக்கப்படும் சாதித்தலைவன் கிட்டத்தட்ட இருபது குடிசைகளைக் கொண்ட கூடம் எனப்படும் குழுவினர் மீது அதிகாரம் செலுத்துகின்றான். சமூகத்தவர்களிடையே ஏற்படும் பூசல்களை இவன் தன் பொறுப்பில் கேட்டுத் தீர்ப்பு வழங்குகின்றான். குற்றம் இழைத்தவர்கள் சாதிவிலக்கம் செய்யப்படுவர் அல்லது தண்டத் தொகை செலுத்தும்படி பணிக்கப்படுவர். சில சமயங்களில் சாதியினைச் சேர்ந்த பஞ்சாயத்துச் சபையினரைக் கூட்டியும் இவன் வழக்குகளை விசாரிப்பதுண்டு. அண்மைக் காலம்வரை ஏனாதியர் சீகரிகோட்டையினைச் சேர்ந்த பரம்பரை உரிமையுடைய சாதித் தலைவன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளனர். இவன் மிகுந்த அதிகாரம் படைத்தவனாக இருந்து வந்துள்ளான். பறையர் சாதியினர் ஏனாதியரைவிட வளர்ச்சிபெற்ற சமூக அமைப்பைப் பெற்றவர்களாக உயர்ந்துள்ளனர். பறையர்களுக்கான கைவினைஞர், நெசவாளர், தச்சர், அம்பட்டர், பூசாரிகள் ஆசிரியர்கள் முதலியோர் பறையர் சாதிக்குள்ளாகவே ஏற்பாடு செய்யப்பட்டு விட்டனர். ஏனாதியருடைய சமூக அமைப்பு இப்போது தான் மெல்ல இப் போக்கினை மேற்கொண்டு முன்னேறிக் கொண்டுள்ளது.

ஏனாதியர் தெலுங்கையே பேசுகின்றனர். சில சொற்கள் தெலுங்கும் தமிழும் இணைந்து அமைந்த சொற்களாக உள்ளன. (எ.டு. அர்டிசெடி - வாழைமரம், பண்டிக்குட்டி - பன்றி)

ஏனாதியர் காடுகளில் வளரும் பலவகை மரஞ்செடி கொடிகளைப் பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர், எந்த

மரம் விறகுக்கு ஏற்றது என்பது இவர்களுக்குத் தெரியும். பனங்காடை (*Coracias indica*) யினை இவர்கள் பால் பறவை என அழைக்கின்றனர். ஒரு பசு பால் வற்றிவிடுமானால் அதனுடைய புல்லோடு கூடப் பனங்காடை ஒன்றின் இறகையும் கலந்து வைத்து அதனைத் தின்னச் செய்தால் அது மீண்டும் பால் கறக்கும் என நம்புகின்ற காரணத்தினாலேயே இப்பறவையினை இவ்வாறு அழைக்கின்றனர் வரகுக்கோழியினைத் தரையில் வாழும் மயிலென்பர். விசிறிவால் உள்ளானைகைகுளத்து உள்ளான் என்பர் ஊசிவால் உள்ளானை நெல்வயல் உள்ளான் என்பர்.

1889-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்போது 84339 ஏனாதியர் தங்களை இந்துக்கள் எனப் பதிந்துள்ளனர். இவர்கள் கோயில்களில் சென்று வழிபாடு செய்வதில்லை. தேவர இல்லங்கள் எனப்படும் வீடுகள் ஒவ்வொரு பகுதியிலும் வழிபாட்டுக்கு என உள்ளன. குல தெய்வங்கள், கிராம தேவதைகள், பரவலாகப் பெயர் பெற்ற தெய்வங்கள் ஆகியனவற்றை இவர்கள் வழிபடுகின்றனர். செஞ்சு தேவுடு என்பவரே இல்லங்களில் பெரும்பாலும் வழிபடப்படும் தெய்வமாவார். ஒரு வட்டாரத்தில் எல்லா நலந்தீங்குகளுக்கும் காரணமானவள் பொலெரம்மா எனப்படும் அங்கம்மாவே எனக் கருதப்படுகிறாள். சுப்பராயடு, வெங்கடேசலு, பஞ்சல, நரசிம்மலு ஆகிய தெய்வங்கள் பரந்துபட்ட பகுதிகளில் போற்றி வழிபடப்படுகின்றன. ஏனாதி சாதியினைச் சேர்ந்தவர்களே இவர்களுடைய பூசாரிகளாக உள்ளனர். இவர்கள் பல பொருள்களிலும் தெய்வங்களை ஏற்றி வைத்து வழிபடுகின்றனர். சீகரிக்கோட்டையில் மரத்தாலான உருவங்கள், அவை பதிக்கப்பட்ட களிமண் உருண்டை ஆகியனவற்றை வழிபடுகின்றனர். அருக்கமரத்தின் அடியில் களி மண்ணாலான உருவத்தை வைத்து வழிபடுகின்றனர். மற்ற இந்துக்களைப் போலவே இவர்கள் அருக்கமரத்தினைப் புனிதமானதாகக் கருதுகின்றனர். குங்குமம், மலர், மஞ்சள் முதலியவற்றை இவர்கள் வழிபாட்டுக்குப் பயன்படுத்துவதோடு கர்ப்பூரம், ஊதிவத்தி முதலியவற்றை ஏற்றி வைத்து வழிபட்டபின் பழம் சுண்டல் முதலியனவற்றைப் பூசை முடிவில் வழங்குவர். இவர்கள் மூதாதையர் வழிபாடு, குறும்பர் மூதாதையர் வழிபாட்டினை ஒத்தது. தெய்வங்கள் இருக்கும் இடங்கள் புனிதமானவையாகக் கருதப்படுவதால் அங்குத் தீட்டு ஏதும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்கின்றனர். தெய்வங்களிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் வெள்ளிக்கிழமைதோறும் வழிபாடு நிகழ்த்துவர். சீகரிக்கோட்டையில் பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை வழிபாடு நிகழ்த்துகின்றனர். சாதாரணமாக ஏனாதி ஒருவன் திருமணம், சாவுச் சடங்கு

ஆகியவற்றின்போது தான் வழிபாட்டில் ஈடுபடுகின்றான். தெய்வத்திடம் மிகுந்த பக்தியுடையவர்கள் தெய்வத்தோடு இடையறாத தொடர்பு உடையவர்கள் எனவும் தெய்வங்களோடு உரையாடுவதோடு தெய்வங்களைத் தங்கள் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வரக்கூடியவர்கள் எனவும் இவர்களிடையே ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. தேவதைகளுக்கு இவர்கள் உயிர்ப் பலி தருகின்றனர். எனினும் செஞ்சு தேவுடு உயிர்ப்பலியினை ஏற்றுக் கொள்வதில்லை. இத் தெய்வத்திற்கு வழிபாடு செய்பவர்கள் வழிபாடு இயற்றும் நாள்களில் கிழங்கு, பழம் ஆகியனவற்றை ஒரு வேளை மட்டும் உண்பர். இந்துக்களைப் போலச் சமயச் சின்னங்களைத் தரிக்கும் ஏனாதியரிடையே வைணவர், சைவர் என்ற பாகுபாடுங்கூட உள்ளது. வழிபாட்டின்போது இவர்கள் உயிர் இல்லாத பொருள்களும் வட்டாரங்களைச் சேர்ந்த ஆவிகளும் உயிரும் உணர்வும் பெறுவதாக நம்புகின்றனர். ஏனாதியர் சிலர் கிறித்தவர்களாகச் சமய மாற்றம் பெற்றுள்ளனர்.

மூங்கில், பனையோலை, புல், சோளத்தட்டு ஆகியனவற்றைக் கொண்டு பரும்போக்காக அமைக்கப்பட்ட தாழ்வான குடிசைகளில் ஏனாதியர் வாழ்கின்றனர். குறுகலான வாசலையுடைய இக் குடிசைகளுள் பெரியவர்கள் தவழ்ந்தே நுழைந்து செல்ல வேண்டும். வெயில், மழை ஆகிய இரண்டிலி ருந்தும் இக் குடிசை பாதுகாப்புத் தருகின்றது. ஏனாதியர் சமைப்பது, உண்பது, உறங்குவது ஆகிய அனைத்துக்கும் இக்குடிசையையே பயன்படுத்துகின்றனர். கடைவீதியில் வாங்கும் உணவுப் பண்டங்களோடுகூட ஏனாதியர் பின்வருவனவற்றையும் உணவாகக் கொள்கின்றனர்.

விலங்குகள்: சாம்பர் மான், வரை ஆடு, சரடி, முள்ளம்பன்றி, ஆண்பன்றி, தரை ஆமை, முயல், பெருச்சாளி, காட்டு எலி, கீரி, மீன்

தாவரங்கள்: காட்டுவள்ளி, நெட்டி, பேரிச்சை, மதனக்காய் (*Cycas circinalis*) இதன் கொட்டைகளை தண்ணீரில் நன்கு ஊற வைத்துத் தின்பர்.

மஞ்சி மொயடி	- *Eugenia alternifolia*
நாபல்	- *Eugenia Jambolana*
களாக்காய்	- *Carissa Carandas*
சிறுகளாக்காய்	- *Carissa Spinarum*

சாரப்பருப்பு - *Bucha nania acuminata*
பல்லா (பாலை) - *Mimuspps herandra*

செங்கல்பட்டு இருளரைப் போலவே ஏனாதியரும் புளிப்புடைய அரிசி களைந்த கழுநீரில் மிகுந்த விருப்பம் உடையவர்கள். உயர்ந்த சாதியார் இதனைக் கால்நடைகளின் தொட்டியில் ஊற்றுவர்.. இவர்கள் தலைச்சுமையாகக் கொண்டுவரும் விறகினைக் கொடுத்து, அதற்கு ஈடாகக் கழுநீரை (புளித்த காடி) வாங்கிக் குடித்துச் செல்வர். இதனைக் குடிப்பதால் இவர்கள் சோம்பல் மிகுந்தவர்களாகவும் பணியில் நாட்டம் குறைந்தவர்களாகவும் ஆகிவிடுவதால் வனத்துறை அலுவலர்கள் சிறிது காலம் இவர்களை இதனைக் குடிக்க வேண்டாம் எனத் தடுத்து வைத்திருந்தனர்.

திருமணச் சடங்கினை நடத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் இவர்களிடையேயில்லை, அடசி ஏனாதியர் இதனைப் பெரும்பாலும் தவிர்த்து விடுகின்றனர். ரெட்டி ஏனாதியர் இதனைக் கைவிடாது நடத்துகின்றனர். பெற்றோர் மணம் பேசி முடிக்கும் வழக்கம் அரிதாகவே உள்ளது. ஆணும் பெண்ணும் தாங்களாகவே தக்க துணையினைத் தேடிக் கொள்கின்றனர், வயதுவந்தபின் குடும்ப வாழ்க்கையினை மேற்கொள்வதே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது. கள்ளத் தொடர்பு, காதலர் உடன்போக்கு ஆகியன அன்றாட நிகழ்ச்சிகள். மணமுறிவினை இவர்கள் எளிதில் பெறுகின்றனர். இவர்கள் பிறர் மனைவியோடான தொடர்பை பெருங்குற்றமாகக் கருதுவதில்லை. கைம்பெண்களை வைப்பாட்டிகளாக வாழ அனுமதிக்கும் இவர்கள் மணமாகும் முன் ஒருத்தி கருவுறுதலையும் பெருங்குற்றமாகக் கருதுவதில்லை. இயல்பாகவே தங்கள் மனைவியர் மேல் உள்ள தனித்த உரிமையில் மிகுந்த நாட்டம் உடையவர்களாக உள்ளமையால் ஏனாதியர் பொதுவாக தங்கள் மனைவியரிடம் மிகுந்த அன்புடையவர்களாகவே உள்ளனர். கைம்பெண்களுக்கு எனத் தனித்த நெறிமுறைகள் எவையும் இல்லை. கைம்பெண்களுக்கு மணவாழ்க்கையின் சுகங்கள் எவையும் மறுக்கப்படுதலும் இல்லை.

விதவை ஒருத்தி அடுத்தடுத்து ஏழு கணவர்களை மணந்துள்ளதாகத் தெரிகிறது. ஒருத்தி இவ்வாறு எவ்வளவுக்கு ஏவ்வளவு அதிகமான கணவன்மாரைப் பெற்றவளாக இருக்கின்றாளோ அவ்வளவுக்கு அவ்வளவு சமூகத்தில் அவள் மதிப்பு வாய்ந்தவளாக இருப்பாள். கன்னக்காதல், கூடா ஒழுக்கம் போன்ற வழக்குகளைக் கேட்டுத் தீர்த்து வைக்கும் உரிமை இத்தகைய

பெண்களுக்கென்று உரியதாகின்றது. பலதார மணம் இவர்களிடையே பெருவழக்காக உள்ளது. ஒருவன் ஏழு மனைவியரை தனித்தனியே குடிவைத்து அவர்களோடு முறைவைத்து வாழ்ந்தவனாக உள்ளான். இவர்கள் திருமணச் சடங்குகள் மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றன. எளிய மணமுறைகள் செலவு மிகுந்த சடங்குகளாக மாறி வருகின்றன. உயர்சாதித் தெலுங்கர்களைப் பார்த்துத் திரைச்சீலை தொங்கவிடுதல் போன்ற பழக்கங்கள் இப்போது புகுத்தப்படுகின்றன. அண்மைக் காலம் வரை இவர்கள் தாலிக்குப் பதிலாகத் தங்கேடு (*Cassia curiculata* - ஆவாரம் பூ) மலரினையே அணிவிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இப்பொழுது மஞ்சள் கயிற்றில் தங்கத்தட்டினை பொட்டாகக் கோத்துத் தாலியாக அணிவிக்கின்றனர். மணச் சடங்குகளையும் முகூர்த்த வேளையினையும் எளிய முறையில் முடிவு செய்கின்றனர். நடுப்பகல் நேரமே இவர்கள் தாலிகட்டும் முகூர்த்த நேரமாகும், இரண்டடி உயரமுள்ள ஒரு கழியினைச் செங்குத்தாக மணமேடை மீது நட்டிருப்பர், அதன் நிழல் கீழே விழாதபடி உச்சிக்குச் சூரியன் வரும்போது தாலி அணிவிப்பர். முன்பு அம்பினை இதுபோல நட்டுவந்த இவர்கள் இப்போது அதற்குப் பதிலாகக் கழியினைப் பயன்படுத்துகின்றர். சில சமயங்களில் புரோகிதரை அணுகிப் பஞ்சாங்கம் பார்க்கச் செய்து முகூர்த்தம் வைத்தலும் உண்டு.

சீகரிக்கோட்டையில் வாழும் ஏனாதியர் அயலானோடு கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுபவளுடைய இரண்டு கால்களையும் சேர்த்துக் கட்டித் தலையில் மணல் நிறைந்த கூடையினைச் சுமக்கச் செய்தபடி நாள் முழுதும் வெயிலில் நிற்கும்படி செய்கின்றனர்.

தன்னுடன் பிறந்தவளுடைய மகனுக்கு மொட்டையடிக்கும் சடங்கில் அச் சிறுவனின் தாய்மாமன் ஒரு படி அரிசி, ஒரு வேட்டி, எட்டணா ஆகியனவற்றைப் பெறுகின்றான். ஏனாதியாரால் மற்றவர்களைப் பார்த்து மேற்கொள்ளப்பட்ட இச் சடங்கில் தாய்மாமன் அச் சிறுவனின் தலையிலிருந்து ஒரு கொத்து முடியினைப் பிடுங்கிச் சென்று அருக்க மரத்தின் கிளையொன்றில் கட்டித் தொங்கவிடும் வழக்கம் உள்ளது. தலை மழித்தபின் அச் சிறுவன் கிராமதேவதையின் கோயிலுக்குச் சென்று ஒரு கோழியினைப் பலியிட்டவனாக வழிபடுவான், விருந்தும் தீப்பந்தம் பிடித்தபடி நடனம் ஆடுதலும் அன்று மாலை நடைபெறும்.

முதன்முதலாகப் பூப்படையும் ஏனாதி சாதிச் சிறுமி ஒருத்தி அதற்காக எனக் கட்டப்பட்ட தனிக் குடிசையில் சென்று தங்குவாள். அதனைக் கட்டும்போது

எட்டி மரக்கிளை ஒன்றேனும் பயன்படுத்தப்படுதல் கட்டாயமானதாகும், தீய ஆவிகள் நெருங்காதிருக்கவே இதனைப் பயன்படுத்துகின்றனர். ஒன்பதாம் நாள் இந்த குடிசையினை நெருப்பிட்டு எரித்தபின் அச் சிறுமி குளித்துத் தீட்டு நீங்கியவளாகத் தன் குடிசைக்குத் திரும்புவாள். மகப்பெற்ற ஒருத்தி மூனறு நாள்கள் வரை இளந்தளிர்கள் அல்லது ஈச்சமரத்தின் (*Phoenix sylvestris*) இளங்குருத்தை மட்டுமே உணவாக உட்கொண்டு வருவாள். குழந்தையின் கொப்பூம் கொடியினை அறுத்த கத்தியோடு வேப்பிலை மற்றும் பிற மரங்களின் இலைகளைச் சேர்த்துக்கட்டிப் பிறந்த குழந்தையின் தலைக்கு அடியில் ஆறு நாள்கள் வரை வைத்திருப்பர். குழந்தையிருக்கும் அறையின் வாசலில் தீய ஆவிகள் நெருங்காதிருக்க ஒரு வலையினைத் தொங்கவிடுவர். வருவது உரைக்கும் நிமித்திகன் தெய்வங்களிடமிருந்து ஆணை பெற்றவனைப் போலப் பாவனை செய்வதனாகக் குழந்தைக்கு என்ன பெயரிட வேண்டும் எனக் கூறுவான்.

ஏனாதியர் மனிதர்களின் விதியினை அறிந்து வருவதனைக் கண்டு கூறுவோராகப் பாவனை செய்கின்றனர். நீலகிரி மலையில் வாழும் குறும்பரைப் போல இவர்களும் தெய்வங்களோடும் தேவதைகளோடும் தொடர்பு கொண்டிருப்பதாகப் பாவனை செய்வர். ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது வட்டாரத்திலும் ஒரு நிமித்திகன் இருப்பான். இவன் முறைப்படி வல்லவர்களிடம் தன் தொழிலுக்கானவற்றைக் கற்றுக் கொண்டிருப்பான். அப்போது பதினைந்து நாள்கள் பாலும் பழமும் மட்டும் உட்கொண்டவனாக இறைச்சியினை விலக்கிவிட்டுத் தனித்ததொரு அறையில் தியானத்தில் ஈடுபட்டவனாக இருப்பான், அங்கம்மா பொலெரம்மா, வெங்கடடேசுவர்லு, சுப்பராயுடு அல்லது மலகெபண்டொரொயுடு ஆகிய தெய்வங்களும் தேவதைகளும் நிழல்போல இவ்வாறு தியானத்தில் ஈடுபட்டிருப்பவன் முன் தோன்றி அவனை ஆட்கொள்வர். பதினைந்து நாள்கள் காலக்கெடு முடிந்தபின் சம்பிராணி தூபமும் கர்ப்பூர ஆரத்தியும்காட்டி அவன் அத் தெய்வத்தை வழிபடுவான். அதன்பின் அவன் அத் தெய்வத்தின் புகழைப் பாடியவனாகத் தன் குருவோடு சென்று கடலில் குளித்து அவருக்கு விருந்து அளித்தபின் தனித்து இயங்கும் நிமித்திகனாகச் செயல்படத் தொடங்குவான். முன்பு மிகத் தகுதி வாய்ந்தவர்களாக நிமித்திகர் கொதிக்கும் சோற்றைக் கையே உள்ளே விட்டு ஆற்றும் செயற்கரிய செயல்களைச் செய்யும் ஆற்றல் பெற்றவராக இருந்துள்ளனர். அவர்களின் தெய்வீக சக்தி காரணமாக இத்தகைய செயலால் அவர்கள் கைகளில் கொப்புளங்கள் முதலியன தோன்றுதலில்லை. இன்றைய நிமித்தகர்கள் எரியும்

அனல் துண்டினைத் தன் மடக்கிய கையில் எந்தியவர்களாகத் தெய்வங்களை எழுந்தருளும்படி வேண்டுகின்றனர். வருங்காலத்தில் நடக்க இருப்பவை பற்றிய உண்மைகளை இவர்களிடமிருந்து அறிந்து கொள்ள மக்கள் பெருந்திரளாக இவர்களை நாடி வந்து கூடுகின்றனர். நிமித்தம் கேட்டலை வட ஆற்காடு மாவட்டத்தில் ரங்கம்பெட்டெதி என்றும் செல்லூரில் சோடி என்றும் கூறுகின்றனர். நிமித்திகன் தேவராஇல்லு எனப்படும் தெய்வங்களுக்கான இல்லத்தில் செஞ்சு தேவுடுவினை எழுந்தருளிவிப்பான். அவ்வாறு வழிபாட்டுக்காகத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ள இல்லங்கள் மிகத் தூய்மையுடையவனவாக வைக்கப்படும். வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களே நிமித்திகன் வருவது உரைத்தற்குரிய நாள்களாகும். நிமித்தம் கேட்க வருபவன் வெற்றிலை பாக்கு, பழம், பூ, காணிக்கை ஆகியனவற்றை நிமித்தகனிடம் தருவான். நிமித்திகன் கருப்பு, வெள்ளை, சிவப்பு முதலிய வண்ணங்களால் தரையில் கோலமிடப்பட்டுள்ள தன் வீட்டு வாசலில் குளித்துவிட்டு வந்து அமர்வான். அவன் மனைவி அல்லது வேறொருத்தி கனல் உண்டாக்கிச் சாம்பிராணி புகைப்பாள், உடுக்கையை அடித்தபடி அவன் பாடத் தொடங்கியவுடன் வீட்டினுள் உள்ள ஒருத்தி அதே பாட்டைக் கீச்சுக்குரலில் பின்பாட்டாகப் பாடுவாள். இப்பாடல்கள் தெய்வத்தை வாழ்த்தும் பாடல்களாக அமையும், நிமித்தம் கேட்க வந்தவன் அத் தெய்வத்தின் முன்னும் நிமித்திகன் முன்னும் விழுந்து வணங்கியவனாக அவர்களின் அருளை வேண்டுவான். தெய்வம் ஏறப்பெற்றவனான நிமித்திகன் நிமித்தம் கேட்க வந்தவனிடம் பின்வருமாறு கூறுவான். நீ என்னை மறந்துவிட்டாய், நீ என்னை வணங்குவதில்லை. என்னை நீ ஒழுங்காக வழிபடவில்லையாயின் நீ நாசமாவாய். வருங்காலத்தில் நிகழவுள்ள நிகழ்ச்சிகள் பாட்டாகக் கூறப்படும். இத்தகைய வருங்காலம் பற்றிய நிமித்திகத்தில் கிராமப்புற மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஏனாதியர் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். குடிசையின் முன் இலைகளின்மேல் பிணத்தைக் கிடத்திக் குளிப்பாட்டிப் புதிய துணியால் போர்த்துவர். பேலலு (வறுத்த அரிசி) வினை இறந்தவரின் மகனும் பங்காளிகளும் பிணத்தின் மீதிடுவர். அதனைப் பின் பாடையில் கிடத்தித் புதிய துணியால் போர்த்தி இறந்தவனுடைய மகன்கள் புதைகாட்டுக்குத் தூக்கிச் செல்வர், எல்லாப் பிணங்களையும் இறக்கிவைக்கும் புதைகுழியருகே ஒரு குறிப்பிட்ட இடத்தில் தரையில் ஒரு கூட்டல் குறியிடுவர். அதன் நான்கு முனைகளும் நான்கு திசைகளையும் குறிக்கும். பிணத்தருகே வெற்றிலை பாக்கும், ஒரு செப்புக் காசும் வைக்கப்படும், பின் அனைவரும் புதைகுழி

தோண்டப்படவுள்ள இடத்திற்குச் செல்வர். அப்போது பிணத்தை பத்யசாதடு எனப்படும் ஒரு ஏனாதியின் பாதுகாவலில் விட்டுச் செல்வர். இவன் இறந்துபோனவனுடைய குலத்தைச் சேராதவனாக இருப்பான். புதைகுழியில் ஒரு துணியின்மேல் பிணத்தைக் குப்புறக் கிடத்துவர். மூத்த மகன் புதைகுழியில் மூன்றுபிடி மண் இட்ட பின் மற்றவர்களும் இதே போன்று மண்ணினை இடுவர். அங்கிருந்து திரும்பும் பங்காளிகள் குளித்தபின் குடிசையில் நுழைவர். இறந்துபோனவனுடைய வீட்டின் முன் உடைந்த சட்டிகள் இரண்டு வைக்கப்படும். அவற்றுள் ஒன்றில் சாம்பல் கலந்த நீரும் மற்றதில் மஞ்சள் கலந்த நீரும் வைத்திருப்பர். ஒவ்வொரு சட்டியினுள்ளும் ஒரு இலைக் கொத்துப் போடப்பட்டிருக்கும். சாவுச் சடங்கில் பங்கு பெற்றவர்கள் அச் சட்டிகளின் அருகே நின்று முதலில் சாம்பல் நீர் கலந்த சட்டியிலிருந்தும் பின் மஞ்சள் நீர் கலந்த கயலிருந்தும் நீரினைத் தொட்டுத் தங்கள் மேல் தெளித்துக் கொள்வர். குடிசையினுள் நல்லெண்ணெய் ஊற்றி ஏற்றப்பட்ட விளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். குடிசையின் உள்ளே நுழைபவர்கள் உணவு கொள்ளுமுன் அதன்முன் வணக்கம் செலுத்திச் செல்வர்.

சின்னத் தினம் சடங்கு என்று நடக்க உள்ளது என்ற அறிவிப்பைப் பத்யஸ்துடு அறிவிப்பான், இது பெரும்பாலும் மூன்றாம் நாள் நாடைபெறும். ஒவ்வொரு கூடம் அல்லது கிராமத்திற்கும் எனத் தனியே ஒரு பத்யஸ்துடு இருப்பான். இப் பதவிக்கு உரியவனாக அமர்த்தப்படும் இவன் சாவு, சிறுமியர் பூப்பு ஆகியனவற்றை உறவினர்களுக்குச் சென்று அறிவிக்கும் பொறுப்புக்கு உரியவன். துபாகியர் குலத்தலைவர் துபாகி ஒருவனையே தங்கள் பதஸ்தாவாக அமர்த்துவதில்லை. வேறு குலத்தைச் சேர்ந்த ஒருவனே ஒரு குலத்தவர்களின் பதயஸ்தாவாக இருக்கத் தகுதி வாய்ந்தவன். எனினும் மேகல குலத்தவர்கள் அனைத்துக் குலத்தவர்களாலும் அமர்த்திக் கொள்ளும் உரிமைக்கு உரியவர்கள்.

சின்னத் தினம் சடங்கு நடைபெறவுள்ள நாளன்று காலையில் இறந்தவனுடைய மூத்த மகன் புதுச் சட்டி ஒன்றில் சோறு சமைப்பான், தன் வசதிக்கேற்பக் கறிவகைகளையும் பணியாரங்களையும் தயாரிப்பான். இவை ஆறு உருண்டைகளாகப் பிடிக்கப்பட்டு ஒரு புதிய கூடையில் வைத்துச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும்., சுடுகாட்டை அடைந்தவுடன் கூட்டல் குறி அடையாளம் இட்ட இடத்தில் அந்த உருண்டைகளுள் ஒன்று, வெற்றிலை பாக்கு, செப்புக்காசு ஆகியவற்றுடன் வைக்கப்படும். பதயஸ்துடு அந்த இடத்தில் அவற்றுக்குக் காவலாக இருப்பான். மற்றவர்கள் புதைகுழி உள்ள இடத்திற்குச் சென்று அதன்

மீது ஒரு குடம் நீரினைத் தெளிப்பர். தலையுள்ள இடத்திற்கு நேர் மேலே ஒரு கல்லினை நடுவர். அக் கல்லுக்குச் சீவக்காயும் மஞ்சளும் பூசிக் குளிப்பாட்டிய பின் அதன்மீது இறந்தவரின் கணவன் அல்லது மனைவி முதலில் பாலைவிட்டபின் மற்ற உறவினர்களும் பால்விடுவர். இச் சடங்கு முடிந்தபின் இறந்தவரின் மகன் புதைகுழியின் நான்கு மூலைகளிலும் நான்கு சோற்றுருண்டைகளை வைப்பான், அவற்றோடு வெற்றிலை பாக்கும் செப்புக் காசும் உடன் வைக்கப்படும். எஞ்சியுள்ள ஒரு சோற்றுருண்டையின் மீது பாலினை ஊற்றி அதனை ஓர் ஓலையில் சுருட்டிக் கட்டிப் புதைகுழியினுள் இறந்தவனுடைய வயிறுள்ள இடத்தில் புதைப்பர். புதைகுழியின் அருகே தெற்குப் பக்கமாக அல்லது தலைமாட்டில் முக்கோண அமைப்புடையனவாக மூன்று கற்களை வைத்து அதன் மீது நீர் நிறைந்த ஒரு புதுச் சட்டியினை வைப்பர். அப்பானையின் அடியில் ஒரு துளையிடுவர். அதிலுள்ள நீர் பிணத்தின் தலைமாட்டை நோக்கி வடிந்து செல்லும். இத்துடன் சின்னத் தினம் சடங்குகள் முடிவுறும். சாவுச் சடங்கின் நாளன்று போல அனைவரும் குளித்து வந்து சாம்பல் நீரையும் மஞ்சள் நீரையும் தங்களின்மேல் தெளித்துத் தீட்டுப் போக்கிக் கொள்வர்.

பெத்ததினம் சடங்கு பதினாறாம் நாள் அன்றோ சாவுக்குப் பின் சில நாள்கள் சென்ற பின்போ நிகழ்த்தப்படும். அப்போது சின்னத் தினம் சடங்கு அன்றுபோலவே இறந்துபோனவன் மகன் புதிய சட்டியில் சோறு சமைப்பான். குடிசையின் வாசலின் முன் களிமண்ணைப் பிசைந்து கூம்பு உருவம் ஒன்றினை அமைத்து அதனை இறந்தவரின் ஆவியினைக் குறிப்பதாக மேடை ஒன்றின் மேல் வைப்பர். இறந்தவரின் மூத்த மகன் சமைத்த சோற்றின் ஒரு பகுதியினை எடுத்து அந்தக் களிமண் உருவத்தின்முன் இலையில் படைப்பான். அதற்குப் சாம்பிராணி தூபம் காட்டுவதோடு அதனருகே விளக்கு ஒன்றினையும் ஏற்றி வைப்பான். அந்த உருவத்தையும் எஞ்சியுள்ள சோற்றையும் நான்கு உருண்டைகளாக்கி அவற்றை அவன் ஒரு குளத்திற்கு எடுத்துச் செல்வான். அங்கு உறவினர்கள் வந்து கூடியவுடன் குளக்கரையில் கால் பக்கம் வடக்கு நோக்கி இருக்கும்படியாக இறந்தவனுடைய உருவம் ஒன்றினை அமைப்பர். அதன் தலைமாட்டில் உடன்கொண்டு செல்லப்பட்ட களிமண் உருவம் வைக்கப்படும். அதன்மீது உறவினர்கள் சின்ன தினத்தன்று போலவே சீயக்காய் தூள், குங்குமம் முதலியன இட்டுக் குளிப்பாட்டுவர். எனினும் அன்று போலப் பால் ஊற்றும் வழக்கம் இல்லை. நான்கு சோற்று உருண்டைகளையும் குளக்கரையில் அமைக்கப்பட்ட உருவினைக் கால்களின் அருகே வெற்றிலை பாக்கு, காணிக்கை ஆகியவற்றோடு வைத்து வணங்குவர். பின் பங்காளிகள்

அந்த உருவத்திற்கும் குளத்து நீருக்கும் இடையே கைகளைப் பின்னால் கட்டியபடி வரிசையாக அமர்வர். குளக்கரையில் உள்ள அந்த உருவத்தைக் கைகளால் பெயர்த்து மெல்லத் தண்ணீருள் தள்ளுவர். அது நீருள் சிதைந்து உருக்குலைந்ததாக ஆகும். கூடியுள்ளவர்களுக்கு வேட்டிகளும் சுருட்டுகளும் வழங்கிய பின் முன்புபோலத் தீட்டு நீக்கும் செயலோடு இச்சடங்கு முடிவுறும். வசதிபடைத்த ஏனாதியர் ஒரு பிராமணனை அமர்த்தித் தங்கள் மீது நீர் தெளிக்கச் செய்து தீட்டினைப் போக்கிக் கொள்வர். பெத்த தினத்தன்று இரவு நெடுநேரம் வரை இடைவிடாது இசைபாடுவதும் முழவினை முழக்குவதும் நிகழ்த்தப்படும். சில சமயங்களில் இச் சடங்கு இரண்டு நாள்கள்வரை நீட்டிக்கும். அப்போது ஏனாதியர் குடித்துக் களித்தவர்களாக ஆடல் பாடல்களில் ஈடுபடுவர்.

முக்கோண வடிவிலான வலை, பிரம்புக்கூடை ஆகியனவற்றைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதில் ஏனாதியர் திறமை மிக்கவர்கள். சேற்றில்புதைந்துள்ள மீன்களையும் பாறையிடுக்குகளுள் மறைந்துள்ள மீன்களையும் நீரில் மூழ்கிப் பிடிப்பதிலும் இவர்கள் திறமை வாய்ந்தவர்கள், ஐரோப்பிய வேட்டைக்காரர்களுக்கு வரகுக் கோழி திரியும் இடங்களைக் கண்டுகொள்ள வேட்டையின்போது இவர்கள் உதவுகின்றனர். எண்களைக் கணக்கிடத் தெரியாதவர்கள் அவ்வாறு பறவைகள் இருக்கும் இடத்தைக் கண்டபின் அங்குள்ள பறவைகளின் எண்ணிக்கையினை ஒரு கயிற்றில் முடிச்சுக்களிட்டுக் கொண்டுவந்து காட்டித் தெரிவிப்பர். வோடர பெட்டுட என்ற முறையில் இவர்கள் பெரிச்சாளிகளைப் பிடிப்பர், பெருச்சாளி குடைந்துள்ள வங்கின் நுழைவாயிலில் ஒரு பானையின் வாய் இருக்கும்படியாக வைத்து அந்தப் பானையில் உள்ள சிறு துளை வழியே புகையினை உட்செலுத்துவர். உள்ளே மூச்சுத் திணறும் பெருச்சாளி ஏனாதியர் விட்டு வைத்துள்ள சிறு பொந்தின் வழியே வெளிப்பட்டு ஓடப்பார்க்கும்போது, அதனை அடித்துக் கொல்வர். நாகப் பாம்புகளையும் இவர்கள் அஞ்சாது பிடிப்பர். அவற்றை அவை தங்கியுள்ள புற்றுக்களிலிருந்து அவற்றின் நச்சுப் பல்லைப் பற்றிக் கவலைப் படாதவர்களாக வெளியே இழுத்துப் பிடிப்பர். இவ்வாறு பாம்புகளைப் பிடிக்கும்போது ஒரு மந்திரம் தங்களைக் காப்பதாகப் பாவனை செய்வர். தன்வீட்டு எல்லையில் ஒரு நாகம் இருந்ததாகவும் அதனைப் பிடிக்கத் தன் வேலைக்காரன் தன் பங்களாவிற்கு அடுத்த தோட்டத்திற்குக் காவல்காரனாக இருந்த ஏனாதியினை அழைத்து வந்ததாகவும் அவ்வாறு அழைத்து வரப்பட்ட ஏனாதி அந்த நாகத்தை உயிரோடு பிடித்து அதனைக் கொல்லும் முன் அதன் நச்சுப் பையினை ஒரு கத்தியால்

அப்புறப்படுத்திப் பாம்புக்கடிக்குப் பாதுகாப்பாக இருக்க அந்த நச்சுப்பையினை அப்படியே விழுங்கிவிட்டதாகவும் ஒருவர் எனக்கு எழுதி தெரிவித்துள்ளார்.

ஏனாதியர் காட்டில் அஞ்சாது சென்று வேட்டையாடும் திறமைமிக்க வேட்டைக்காரர்கள். படைக்கலச் சட்டவிதிகளின்படி உரிமம் பெற்றுத் துப்பாக்கி வைத்திருக்கும் இவர்கள் புலி, சிறுத்தை, முள்ளம்பன்றி முதலிய சிறிய பெரிய விலங்குகளைச் சுட்டு வீழ்த்துவதில் வல்லவர்கள். புள்ளிமான் வேட்டையின்போது ஒன்றும் கண்ணில்படாது போன சமயத்தில் ஏனாதியர் கற்களையும் இலைக் கொத்துக்களையும் கொண்டு பல அடி உயரமுள்ள கல்வட்டம் ஒன்றினை அமைத்து ஏதும் அகப்பட்டதில்லைது என்ற பல்லவியைத் தெலுங்கில் திரும்பத் திரும்பப் பாடியபடி படிப்படியே வேகமாக அடியிட்டு அந்த கல்வட்டத்தைச் சுற்றி வந்து ஆடினர். பின் அதே பல்லவியினைப் பாடியபடி எதிர்திசையில் திரும்பச் சுற்றி வந்தபடி ஆடிமுடித்தபின் மீண்டும் மான்களை வெளிப்படுத்த கொட்டுமுழக்கு இட்டுச் சென்றனர். அப்போது ஓர் ஆண்மான் அங்கு வெளிப்பட்டது. எனினும் குறி தவறியதால் அது தன்னிடமிருந்து தப்பியது என என் நண்பர் ஒருவர் எனக்கு எழுதித் தெரிவித்துள்ளார்.

செங்குத்தானவைகளாகவும் அடைவதற்கு அரியதானவையாகவும் உள்ள மலையுச்சிகளிலும் பாறைகளிலும் உள்ள தேனடைகளிலிருந்து ஏனாதியர் தேன் எடுக்கின்றனர். வளைந்து நெளிகின்ற மூங்கில் குச்சிகளைக் கொண்டு பின்னப்பட்ட கயிற்றினை ஒரு மரத்திலோ உறுதியான பாறையிலோ முளை அடித்துப் பொருத்திக் கட்டியபின் கையில் கூடையும் ஒரு குச்சியும் ஏந்தியவனாகத் தேன் எடுப்பவன் அதன் வழியே கீழே இறங்குவான், அந்த கயிற்றை உதைத்து ஆட்டித் தேன் கூட்டின் கீழ்பந்தத்தைக் கொளுத்திப் புகையிட்டு முதலில் தேனீக்களை விரட்டுவான். மீண்டும் இரண்டாவதாகக் கயிற்றினை உதைத்துத் தேன் கூட்டினுள் தன் குச்சியைத் நுழைத்துத் தேனடையினைக் கூடையுள் எடுத்து இடுவான். அவ்வாறு இடப்படும் தேன் கூடுகளிலிருந்து வழியும் தேன் சென்று நிரம்பும்படியாகக் கூடையின் அடியில் ஒரு பாத்திரம் பொருத்தப்பட்டிருக்கும். கூடையும் அப்பாத்திரமும் நிரம்பிய பின் அவன் தான் கீழே இறங்கி வந்த கயிற்றினை அசைப்பான், மேலே அக் கயிற்றுக்குப் பொறுப்பாக இருப்பவன் அதனை மேலே இழுத்துக் கொள்வான். இவ்வாறு தேனெடுக்கும்போது ஏதும் சூதுவாது நிகழக்கூடாது என்பதற்காக இக் கயிற்றின் பொறுப்பினைக் கயிற்றில் இறங்குபவனுடைய மைத்துனனே ஏற்றுக் கொண்டிருப்பான். இவ்வாறு பெருந்தொல்லைப்பட்டவனாக ஏனாதி

ஒருவன் தான் சேகரிக்கும் தேனுக்கும் தேன் மெழுகுக்கும், அதனால் பெரும் லாபம் ஈட்டும் ஒப்பந்தக்காரனிடமிருந்து, தன் வயிற்றுக்கு உண்ணப் போதும் போதாததுமான சிறதொகையினையே கூலியாகப் பெறுகின்றான்.

நெல்லூர் மாவட்டக் கையேட்டில் அரசுப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள ஏனாதியர் காடுகளில் தேனோடு கூடப் பின்வரும் எளிய காடுபடு பொருள்களையும் திருடுவதாகப் பதியப்பட்டுளளது.

காயவேர்	-	*Oldenlandia umhellata*
கணுக	-	*Pongamia glabra*
சரசபாலா	-	*Hemidesmur ijdicus*
எட்டிக்காய்	-	*Strychnos Nux-vomica*
தங்கேடு	-	*Cassia auriculata*
கற்பாசி	-	*Cichens*
ஈஸ்வரக்	-	*Aristolochai indica*
விகூடிபுட்டி	-	*Sida carpinifolia*
குக்கபல	-	*Tylophora asthmatica*
பிரம்பு	-	*Calamus Rotang*
புளி	-	*Tamarindus indicus*
நெரெடு	-	*Eugenia Jambolana*
சுரடிப்பட்டை	-	*Ventilago Madraspartana*

ஏனாதியர் குடியிருப்புக்களைக் காடுகளின் உள்ளேயே அமைத்துக் கொள்ள ஊக்கம் தரவேண்டும். இவர்கள் காடுகளில் சேகரிக்கும் பொருள்களுக்கு வாரத்திற்கு ஒரு முறையேனும் விலை தரவேண்டும். இதனைப் பொருள்கள் சேகரிக்கும் பருவத்தில் மேஸ்திரி காட்டுப் பாதைகளில் தொடக்கம் முதல் கடைசிவரை நடந்து சென்று சேகரிக்கப்பட்டுள்ள பொருள்களை நேரில் மதிப்பிட்டு உரிய தொகையினை அங்கேயே வழங்க ஏற்பாடு செய்வதன்மூலம் நிறைவேற்றலாம். பொருள்களை சேகரிக்கும் ஏனாதியர் காடுகளுக்கு வெளியே தங்கியிருப்பார்களாயின் சீக்ரிக்கோட்டையில் இதுவரை செய்ததுபோல போக்குவரத்திலேயே வாரத்தில் பாதி நாள்களான மூன்று நாள்கள்வரை செலவழித்துவிடுவர். இத்தோடு கூடப் பழைய வழக்கப்படி வந்துபோகும் இவர்கள் காட்டின் சில பகுதிகளை நெருங்காது ஒதுக்கிவிட்டு விடவும் கூடும் என மாவட்ட விவரக் குறிப்பில் பதிந்துரைக்கப்பட்டுள்ளது.

திருவிழாக்களின்போதும் சாவு, திருமணம் முதலியவற்றுக்கான சடங்குகளின்போதும் சில சமயங்களில் பிச்சை எடுக்கும் போதும் உடலில் மஞ்சளைப் பூசிக் கொண்டு பூமாலை புனைந்து பொருளற்றவனான பாடல்களைப் பாடியபடி தம்புக்கு, தம்புக்கு என பரும்போக்காகத் தப்பட்டை கொட்டியபடி நடனம் ஆடுவர். பைக்குழல் (Bag pipe_) ஒன்றுதான் இவர்கள் பயன்படுத்தும் ஊது இன்னிசைக் கருவி. பாம்பாட்டியின் மகுடியினை சிலபோது அத்துடன் ஊதுவர். இவர்கள் நடனம் ஆபாசமான குறிப்புப் பொருள்களைத் தருவது. அண்மைக் காலமாக மேடையில் ஏறி நடிக்கவும் பழகிவிட்ட இவர்களிடையே பாகவத குழுக்கள் சில உள்ளன.

ஏனாதியர் நடன நிகழ்ச்சி பற்றிய பின்வரும் குறிப்புகளுக்குப் பட்னாவில் உள்ள கிறித்தவ சமயத் தொண்டரான மறைத்திரு ஏ.ஜி. தாம்சன் அவர்களுக்கு நான் கடப்பாடுடையேன். பெரும்பாலும் இரவில் இவர்கள் காட்டில் குடிசைகள் இருக்கும் எங்கேனும் ஓரிடத்தில் கூடிப் பனையோலைகளைத் திரட்டிக் குவித்து அவற்றை ஒவ்வொன்றாக எரித்து நடனமாடுவர். இந்த நடனங்கள் வேட்டைக்காரர்கள் காட்டில் தாங்கள் அனுபவித்த தொல்லைகளை வெளிப்படுத்துவதாக இருக்கும். நடனத்தில் முக்கிய பங்கு பெறுபவர்கள் விசித்திரமாக உடைகள் அணிந்திருப்பர். கிட்டத்தட்ட நிர்வாணமாக இருக்கும் இவர்களுடைய இடையில் பனைநார் கூடைகள் தொங்கியபடி இருக்கும், இந்த கூடைகளிலேயே இவர்கள் தங்கள் உணவுக்கான கிழங்கு, வேர், எலி, பாம்பு முதலியனவற்றைச் சேகரிக்கின்றனர். நடனம் ஆடுபவர்கள் திடீரெனத் தரையில் விழுவர். அவர்களுள் ஒருவன் தேளு எனக் கூக்குரலிட்டனாகக் தன்னைத் தேள் கடித்ததாகப் பாவித்து ஓரிடத்தை அவர்களுக்கு காட்டுவான். அப்போது நடனக் குழுவினர் பின்வருமாறு பாடுவர்:

அடடா! தேள் கொட்டிவிட்டதே.
ஐயையோ! தேள் கொட்டிவிட்டதே.
எந்த விரலில்? ஆ! நடுவிரலில்.
என்னைத் தேள் கொட்டியவுடன்.
நஞ்சு தலைக்கு ஏறிவிட்டது.
ஐயோ! ஐயோ! நான் என்ன செய்வேன்?
யெல்லேடு கொண்டு விஷத்தை இறக்குங்கள்.

இப்பாட்டைத் தொடர்ந்து நெடுநேரம் பாடியபடி இருப்பர், அடுத்து நடனமாடும் மற்றொருவன் திடீரெனத் தரையில் விழுவான், அவன் பாம்புபோலச்

சீறுவான். நடனத்தின்போது ஏனாதியர் உடல் உறுப்புக்களை விருப்பம் போல நன்கு வளைத்து ஆடக் கூடியவர்கள், அவர்களின் உடல்தசையின் செயல்திறனைக் காணும் போது மனிதனும் பாம்புபோல தன் உடம்பை எப்படி வேண்டுமாயினும் விருப்பம்போல வளைக்கும் திறன் வாய்ந்தவன் என்பதனைப் புரிந்து கொள்ளலாம். நடனமாடுபவர்களுள் ஒருவன் தன்னைப் பாம்பு கடித்துவிட்டதாகப் பாவித்தவனாக நடிக்கும்போது விசித்திரமாக ஓலமிட்டுப் புலம்புவான். அப்போது அவன் தலைமயிர், காதுகள், மூக்கு, இடையில் உள்ள ஆடை, கூடை ஆகியவற்றுள் அந்தப் பாம்பினைத் தேடுவர். அப்போது நடனக் குழுவினர் பின்வரும் பாடலைப் பாடுவர்.,

பாம்பைப் பிடிக்க ஓடி வருவாய்
பாம்பாட்டியே எழுந்து படமெடுக்கும் பாம்பைப் பிடி
மகுடியை ஒழுங்காக ஊது
கூடையில் பெரிய பாம்புகளுடன்
தலைமயிருள் பாம்புக் குட்டிகளுடன்
பாம்பாட்டியே நீ விரைந்து வா
நான் எர்ரச் செலுவிற்கு அறுவடையை
மேற்பார்வையிடச் சென்றேன்
நாகம் நெல் அறுப்பவன் காலடியில் ஊர்ந்து புகுந்தது
ஐயோ! ஐயோ! ஐயோ!

ஆடலோடு கூடிய மந்தப் பாட்டைக் கேட்பதும் நடனத்தைப் பார்ப்பதும் இந்தியப் பழங்குடிகளின் வாழ்வின் விசித்திரமான ஒரு கூறினை அறிந்து கொள்ள உதவுவதாகும். நடனம் ஆடுவோரும் கூட்டப் பாடல் பாடுவோரும் பரபரப்பு அடைந்தவர்களாக இருப்பர். அந்தப் பரபரப்பு இந்த ஆட்டத்தை வேடிக்கை பார்க்கும் ஐரோப்பியர்களை கூடத் தொற்றிக் கொள்ளும். நடனமாடுபவர்கள் வியர்வையில் தெப்பமாக நனைந்திருப்பர். எனினும் நடனம் தொடர்ந்து நடக்கும். அவர்கள் குவித்து வைத்திருக்கும் பனையோலைப் போர் முழுவதுமாக எரிக்கப்பட்டுத் தீர்ந்த பிறகே அவர்கள் ஓய்வு கொள்வர்.

நாடோடி வாழ்க்கையினை மேற்கொண்டவர்களான ஏனாதியர் தங்கள் அனுபவத்தின் பயனாக மூலிகைகள், வேர்கள் ஆகியவற்றின் பயன்பாட்டை அறிந்தவர்களாகக் காய்ச்சல், முடக்குவாதம் முதலிய நோய்களுக்கு அவற்றைப் பயன்படுத்துகின்றனர். பாம்பு கடிக்கும் தேள்கொட்டுக்கும் என இவர்கள் முறிவு

மருந்து வைத்துள்ளனர். சீகரிகோட்டாவில் பொதுமக்களைப் பாதிக்கும் யானைக்கால் நோய் ஏனாதியரைப் பாதிப்பதில்லை.

வெட்கப்படும் இயல்பும் உரிமையான காட்டு வாழ்க்கையும் உடையவர்களாக இவர்கள் இருப்பதால் இவர்களைப் பள்ளிகளில் கொண்டுவந்து சேர்த்துக் கல்வி கற்றுத்தர அவை தடையாக உள்ளன. கிறித்துவ சமயத் தொண்டர்கள் - குறிப்பாக அமெரிக்க வேதாகம சபையார் - இழிந்த வாழ்வினை மேற்கொண்டுள்ள இந்த அப்பாவிகளின் நம்பிக்கைக்கு உள்ளானவர்களாகத் தங்களைத் தொண்டில் ஈடுபடுத்திக் கொண்டு பலரையும் கிறித்த சமயத்திற்கு மதம் மாற்றியுள்ளனர். சிலர் எழுதப்படிக்கக் கற்றுள்ளனர். மிகச் சிலர் ஆங்கிலமும் கற்றுள்ளனர். பாட்னாவில் கிறித்தவ ஏனாதியரின் பெருகிவரும் குடியிருப்பு ஒன்றினை நாங்கள் நிறுவியுள்ளோம் என மறைத்திரு ஜி.என்.தாம்ஸ்சென் குறித்துள்ளார்.

ஏனாதியரைப் பற்றிப் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம். பஞ்ச காலத்தில் பஞ்ச நிவாரணத் திட்டத்தின் கீழ் தரப்படும் வேலையினைச் செய்ய இவர்கள் ஒருபோதும் உடன்படுவதில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அத்தகைய பணியினை மேற்கொண்டால் அது அவர்கள் சுதந்திர உணர்விற்கு இடையூறாக இருக்கும் என்பதே இவர்கள் இவ்வாறு மறுப்பதற்குக் காரணம். எனினும் இவர்களுள் சிலர் காவல் துறையில் காவலர்களாகப் பணியில் சேர்ந்துள்ளனர். சிலர் இராக் காவல்காரர்களாகவும் பணிபுரிகின்றனர். மற்றும் சிலர் நெல்குற்றுவோராகவும் குடும்பங்களில் குற்றேவல்களாகவும் பணிபுரிகின்றனர். பொதுவாக இவர்களை நம்பிக்கைக்கு உரியவர்கள் எனலாம். வேட்டையாடுதல், மீன்பிடித்தல், பாம்பாட்டுதல், தேன், விறகு ஆகியன சேகரித்தல், பன்றி வளர்த்தல், திருட்டு உட்படப் போலி மருத்துவம் ஆகிய வேறு பல துணைத் தொழில்களையும் மேற்கொண்டு இவர்கள் மேலும் வருவாய் தேடிக் கொள்கின்றனர். சிக்கலோ கோல் ஒன்றினைக் கிழங்கு தோண்டுவதற்காக என்று சொல்லிக் கொண்டு அனைவரும் காணக் கையோடு எடுத்துச் செல்வர். இது உண்மையில் வீடுபுகுந்து களவில் ஈடுபடும்போது பயன்படுத்துவதற்கரிய கருவியாகும், இது இருபக்கமும் கூராக முனை வடிக்கப்பட்ட சாதாரண இரும்புக் கம்பியாகும், இதன் ஒரு பக்கத்தில் மரத்தாலான கைப்பிடி பொருத்தியிருப்பர். இதன் உதவியால் இவர்கள் ஒரு வீட்டின் சுவரில் சத்தமின்றிக் விரைந்து கன்னம் வைத்து உட்புகுவர். நல்ல வேட்டை கிடைக்கும்வரை இவ்வாறு பலவீடுகளின் சுவர்களில் துளையிட்டுக்

கொள்ளையடித்தபடியிருப்பர். இவ்வாறு வீடுகளில் கன்னம் வைப்பது வளர்பிறை அஷ்டமிக்குப் பிறகே நிகழ்ந்துள்ளது. திருட்டில் அகப்பட்ட ஏனாதியர் உடனே தங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வர். எனினும் தங்கள் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். திருடப்பட்டவற்றை விற்பதில் பெண்கள் இவர்களுக்கு உதவுகின்றனர். பொழுது சாயும் நேரத்தில் பாய் விற்றபடி பிச்சையெடுத்துச் செல்லும் பெண்கள் தங்களிடம் பாய்களை வாங்கும் பெண்களின் காதில் குறைந்த விலைக்குப் பொருள்கள் கிடைக்கும் என்ற ரகசியச் செய்தியினைப் போட்டு வைப்பர். இவ்வாறு ஆசை காட்டுபவர்களிடமிருந்து தப்புவது கடினம். திருட்டு பொருள்களை இப் பெண்கள் சந்தைக்கு எடுத்துச் செல்லும் கூடைகளில் வைத்து மறைத்துக் கிராமத்து மளிகைக் கடைக்காரனான கோமுட்டியிடமும் கொண்டு சென்று கொடுப்பர். அடவி ஏனாதியர் தங்கள் பிரிவினைச் சேர்ந்த பெண்களிடம் பிச்சையெடுக்கும் போதே திருடுவதற்கு வாய்ப்பான இடங்களைப் பற்றித் தகவல் திரட்டி வரும்படி கூறி அனுப்புவர். இவ்வாறு பெறும் தகவல் இவர்களுக்கு நல்ல பயன்தருவதாக அமையும்* எனத் திரு எப்.எஸ் முல்லலெ எழுதுகின்றார்.**

ஏனாடி - Yanati

ஏனாடியர், ஏனேடியர், ஈனேடியர் என்றெல்லாம் அழைக்கப்படுவோர் கஞ்சம் விசாகப்பட்டினம் மாவட்டங்களில் காணப்படும் பயிர்த்தொழிலாளர் ஆவர். இவர்களுக்கான பெயருக்கும் ஏனாதியருக்கான பெயருக்கும் உள்ள ஒற்றுமை காரணமாகச் சில குழப்பங்கள் நிகழ்ந்துள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாகப் பின்வருவதைக் கூறலாம். *1891* சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வெலமர் சாதியில் ஏனாதி உட்பிரிவினர் மிகப் பெரும்பான்மையராகப் பதியப்பட்டுள்ளதைக் கூறலாம். இன்று வெலமருக்கும் ஏனாதியருக்கும் இடையே பழக்க வழக்கங்களில் மிகப் பெரிய வேறுபாடு இருப்பதைக் காண்கின்றோம். மறுபடியும் *1901* கணக்கெடுப்பு அறிக்கையில் ஏனாடி என்ற தலைப்பின் கீழ் ஏனாதி என்ற பின்னிணைப்பைப் பெயரில் கொண்ட பல பெயர்கள் இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம். இப்பொழுது விசாகப்பட்டினம் முகவர் பகுதியில் உள்ள பிஸிம்கட்டாக் வட்டத்தில் ஏனாடி அல்லது ஏனாடிதொரெ என்ற தனிச்

---

* இக் குறிப்பு திரு ரங்கராவ் எழுதிய ஒரு காட்டுரையின் அடிப்படையில் வேறு சில செய்திகளையும் சேர்த்து எழுதப்பட்டதாகும்.

** சென்னை மாநிலக் குற்றம்புரி வகுப்பார் பற்றியதான குறிப்புகள், *1892*. (Notes on Criminal Classes of the Madras Presidency, 1892.)

சாதி இருப்பதாகவும் இது ஏனாதி மற்றும் கொண்ட தொரெ சாதியிலும் முற்றிலும் வேறுபட்டது எனவும் தெரியவந்துள்ளது.

கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏனாடியர் எண்டமாரர் மற்றம் கயண்ட அல்லது கயிண்ட என்றும் அழைக்கப்படுவர் எனக் கூறப்படுகிறது.

யாடர் - Yata

யாடர், கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த கள் இறக்குவோர். இது கள் இறக்கப்படும் ஈச்ச மரம் எனப் பொருள்படும். ஈட என்பதின் திரிந்த வடிவே இவர்கள் சாதிப் பெயராகும். கள்ளினைப் பனை மற்றம் ஈச்சமரங்களிலிருந்து இறக்குகின்றவர்கள் யாடரும் செகிடியருமாவர். பனை மரத்தில் பாளையின் முனையினை அறுத்துக் கள்ளினை வடியச் செய்கின்றனர். ஈச்ச மரத்தில் குருத்தின் அடிப்பாகத்தில் வட்ட வடிவில் ஒரு துளையிட்டு அதன்வழியே கள்ளினை வடியச் செய்கின்றனர், சமீன்தாரி பகுதிகளில் இவ்வாறு கள் கட்டப்பட்டிருக்கும் ஈச்சமரங்கள் அளவுக்கு அதிகமாகத் துளையிடாதபடி பார்த்துக் கொள்ளும் வழக்கம் இல்லை. இதனால் நூற்றுக்கணக்கான ஈச்சமரங்கள் அப் பகுதியில் காய்ந்துபோய் அல்லது பட்டுப்போய் நிற்கக் காணலாம் என விசாகப்பட்டினம் மாவட்ட விவரக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இச் சாதியினைச் சேர்ந்த பலர் பனை இன மரங்களின் ஓலைகளைக் கொண்டு கூடைகளும் பெட்டிகளும் தயாரிக்கின்றனர். விசாகப்பட்டினம் மாவட்டத்தின் பகுதிகள் சிலவற்றில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு யாடரே காரணமாவர் எனக் கூறப்படுகிறது.

விசாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த யாடர் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. உறயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இவர்கள் தெலுங்கு பேசும் சாதியார். இச் சாதியின் சமூக அமைப்புப் பிற தெலுங்குச் சாதிகளின் சமூக அமைப்பினை ஒத்ததாக உள்ளது. இவர்கள் வாழும் பகுதிகளில் குலம்பெத்த என்ற சாதித் தலைவன் உள்ளான். சாதியினைச் சேர்ந்த பெரியவர்கள் உதவியுடன் இவன் சாதி தொடர்பான வழக்குகள், நடவடிக்கைகள் ஆகியனவற்றைக் கேட்டுத் தீர்த்து வைப்பான், பிற தெலுங்குச் சாதிகளில் உள்ளதைப் போலவே இச் சாதியிலும் இண்டிப்பேரு எனப்படும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் பல உள்ளன. ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணக்க உரிமை கொண்டாடும் மேநரிகம் வழக்கத்தை

இவர்கள் கண்டிப்புடன் கடைப்பிடிக்கின்றனர். இவ்வழக்கப்படி ஒருவன் மணக்க உரிமை கொண்டாடும் சிறுமியினை அவனுக்கு அவளுடைய தாய் தந்தையர் மணமுடித்துத் தரவில்லையாயின் அந்தச் சிறுவனின் தாய் பெரும் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தி ஊரைக் கூட்டிவிடுவாள், அவளோடு உடன்பிறந்தவனைச் சாதியினைச் சேர்ந்தவர்கள் அவன் மகளை அவனுடைய தமக்கையின் மகனுக்கு மணமுடித்துவைக்கும்படி வற்புறுத்துவர். அப்படியும் அவன் அதற்கு உடன்பட மறுத்து வேறொருவனுக்கு அவளை மணம் முடித்துத் தருவானாயின் அவன் தமக்கையின் சாபம் அத்தம்பதியினரின் மகிழ்ச்சியினைக் குலைத்துவிடும் எனக் கூறுவர். சிறுமியர் பூப்படையும் முன்னோ பூப்படைந்த பின்னோ மணம் செய்விக்கப்படுகின்றனர். மூன்று நாள்கள் அளவில்தான் மணச் சடங்குகள் மணமகன் இல்லத்தில் நடைபெறும். மணமகள் பெற்றோர் சமூகத்தில் செல்வாக்கு செல்வ வளமும் பெற்றவர்களாயின் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறுவதும் உண்டு. இச் சடங்கினை நடத்தி வைக்கும் பிராமணன் மணமகள் கழுத்தில் சத்தமானத்தை அணிவிப்பான், மூன்றாம் நாள் மாலையில் மணமகள் இல்லத்தில் மோதிரங்கள், இடைக்கச்சைகள், பொன் கடகங்கள் ஆகியன அடங்கிய கட்டணம் எனப்படும் அன்பளிப்புக்களை மணமகனுக்கு வழங்குவர். இந்த அன்பளிப்புகளின் மதிப்பு மணமகளுக்கு விலையாகத் தரப்படும் வொலி எனப்படும் பரிசத் தொகையின் விகிதத்திற்கு ஏற்றபடி அமைந்திருக்கும். மணமக்கள் மூன்று நாள்கள் வரை மணமகள் இல்லத்தில் தங்கியிருப்பர். அதன் பின் மணமகன் இல்லம் சென்று மூன்று நாள்கள் வரை தங்கும் மணமக்கள் பின் மீண்டும் மணமகள் இல்லம் திரும்பி அங்கு மூன்று நாள்கள் வரை தங்கியிருப்பர், அதன்பின் அவர்கள் மணமகன் இல்லம் திரும்புவர். மணமக்கள் உடல் உறவு கொள்வதற்கான சாந்தி முகூர்த்தம் மணமகள் பூப்படைந்திருப்பின் தனிச் சடங்காகச் சில நாள்களுக்குப் பின் நடத்தப்படும். கைம்பெண்களின் மறுமணத்தில் மணமகள் கழுத்தில் குலம்பெத்தவனே தாலியினை அணிவிக்கின்றான். மணமுறிவு செய்து சொள்வதனையும் இவர்கள் அனுமதிக்கின்றனர். மணமுறிவு செய்துகொண்ட ஒருத்தியினை மணந்துகொள்பவன் மொக நாள் தப்பு எனப்படும் பன்னிரண்டு ரூபாயினைச் செலுத்த வேண்டும். மணமுறிவு செய்யப்பட்டவள் தன் முதல் கணவன் தனக்குத் தந்த நகைகள் அனைத்தையும் அவனுக்கே திருப்பி அளிக்கக் கடமைப்பட்டவள்.

இறந்தவர்கள் உடலை இவர்கள் எரிக்கின்றனர். சிதைக்கு தீ மூட்டுவதில் வண்ணார் சாதியினைச் சேர்ந்த ஒருவன் உதவுகின்றான்.

இறந்தவர்களுக்காக ஆண்டுதோறும் நடத்தப்படும் சடங்கின்போது வீட்டினைப் பசுஞ்சாண நீரினைத் தெளித்துப் புனிதப்படுத்துவர். பலவகைக் காய்கறிகளையும் சோற்றையும் அன்று சமைத்து முடித்து, வீட்டுவாசலில் சாம்பிராணி புகைத்துக் கர்ப்பூர ஆரத்தி காட்டுவர். அதன்பின் சமைத்தவற்றை இறந்தவருக்குப் படைத்து அவர்களைப் பெயர் கூறி அழைத்தபின் சடங்கு நடத்துபவர்கள் வயிறார உண்பர்.

நாயுடு, செட்டி என்ப இச் சாதியாருக்கு உரிய பட்டப்பெயர்கள்.

யெத்துல - Yeddula (bulls)

போயர், காபு சாதியாரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர்

யேடு மாதலா - Yedu Madala (seven madalas)

உப்பரர் பிரிவு ஒன்றுக்கான பெயர்., இப்பிரிவினர் மணமகளுக்கு உரிய பரிசத்தொகையாக ஏழு மாதலங்களைப் பெறுவர். ஒரு மாதலம் இரண்டு ரூபாய்களுக்(கு)ச் சமம்.

யெல்க மேடி - Yelka Meti (good rat)

போயர் சாதியன் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்

எம்மெ - Yemme

யெம்மெ, எம்மெ, எம்மலவாரு என்பன எருமைக் குலத்தினைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும். இது பேடர், போயர், குர்னி, குருபர், மாதிகர், வக்கலிகர் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர்.

எண்ணெய் - Yenne (oil)

காணீகரின் ஒர் உட்பிரிவு

யேனுக - Yenuga

யேனுக, யேனிகல என்பன யானை எனப்பொருள்படுவன. இது காபு சாதியின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். இக் குலத்தவர் யானைத் தந்தத்தைத் தொடுவதில்லை.

யேனுமலா - Yenumala

யேனுமல அல்லது யேனுமலொரு எருமை மக்கள் எனப் பொருள்படுவது. போயர் மாதிகர், ஒட்டர் ஆகிய சாதிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

யெரவாளர் - Yeravallar

பார்க்க: எரவாளர் (See: Eravallar)

யெர்ளம் - Yerlam

காபுகளின் ஓர் உட்பிரிவு. யெர்லம்மா என்ற பிராமணச் சிறுமியின் பெயரால் அமைந்த உட்பிரிவு இது. உரிய காலத்தில் மணம் செய்விக்கப்படாததால் சாதிவிலக்கம் செய்யப்பட்ட இச் சிறுமி காவு ஒருவனை மணந்துகொண்டு அவன் வாயிலாகக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

யெர்ர - Yerra (red)

சிவப்பு எனப்பொருள்படும் இது கோல்லர் காபு சாதிகளின் உட்பிரிவுக்கான பெயர். தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றின் பெயராகவும் உள்ளது.

யெருதாண்டி - Yerudandi

பார்க்க: எருதாண்டி (See: Erudandi)

யோகிக் குருக்கள் - Yogi Gurukkal

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் யோகிக் குருக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: யோகிக் குருக்கள் மலையாளம் பேசும் இரவலர் சாதியினர். காளி கோயில் பூசாரிகளாகவும் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்களாகவும் கூட இவர்கள் பணியாற்றுகின்றனர். இறந்தவர்களை இவர்கள் சந்நியாசிகள் செய்வதைப் போல உட்கார்ந்த நிலையில் புதைக்கின்றனர். திண்ணை, வீட்டின் முன் வாசலின் இருபுறமும் தெருவை நோக்கி அமைந்துள்ள உயர்வான மேடைகளாகும். கிராமப் பள்ளிக்கூடங்கள் இந்தத் திண்ணைகளிலேயே நடத்தப்படுகின்றன.

யோகிக் குருக்கள் மலபாரில் பரவலாகக் காணப்படுகின்றனர். காளி மற்றும் துர்க்கை கோயில்களில் பூசாரிகளாகத் தொழில் செய்வதே இவர்களுடைய முக்கிய தொழில். முக்குவன், தீயர் ஆகிய சாதியினருக்கு இவர்கள் புரோகிதமும் செய்துவருகின்றனர். முக்குவன்கள் காளி கோயிலில் நிகழ்த்தும் ஆண்டுத் திருவிழாவில் யோகிக் குருக்களே பூசாரியாக இருந்து வழிபாடு நிகழ்த்த வேண்டும். சாதாரண நாள்களில் யோகிக் குருக்களிடம் தீக்கை பெற்றுக் கொண்ட முக்குவன்களே வழிபாடு நடத்துகின்றனர். யோகிக்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

அண்மைவெளியீடுகள்

காஞ்சிக் கோயில்கள்	90.00
பார்புகழும் பால்சங்கு	40.00
தன்வந்திரி வைத்தியக்கும்மி	50.00
தஞ்சைக் கூத்து மரபுகள்	50.00
தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி – 3	100.00
வீட்டு மருத்துவம்	44.00
தொண்டைமான் செப்பேடுகள்	70.00
தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு	120.00
சாந்தாதி அசுவமகம்	240.00
அறிவியல் களஞ்சியம் தொகுதி – 14	700.00
தமிழில் சொல்லாக்கம்	130.00
பழவேற்காடு 1816 இல் (மெக்கன்சியின் சுவடி – பதிப்பாய்வு)	125.00
தமிழ்நாவல்களில் உளச் சித்திரிப்பு	130.00
தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் தொகுதி – 2	160.00
தமிழக அறிவியல் வரலாறு	60.00
இசைத்தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1	60.00
உலக நாடுகளில் தமிழர் பண்பாடு	50.00
108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடுகளும் அமைவுகளும்	50.00
பாவேந்தரின் மொழியுணர்வும் மொழிநடையும்	35.00
தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை	140.00

தொடர்பு முகவரி :

இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)

தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221